# கிறிஸ்தவ நாகரிகம்

## தரம் 13

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

**(2010ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும்.)**

**சமயக் கல்வித்துறை**
**கலைத்திட்ட அபிவிருத்திப் பீடம்**
**தேசிய கல்வி நிறுவகம்**
**2010**

**கிறிஸ்தவ நாகரிகம்**

**தரம் - 13**

**ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி**

**முதற் பதிப்பு - 2010**

**சமயக் கல்வித்துறை**
**கலைத்திட்ட அபிவிருத்திப் பீடம்**
**தேசிய கல்வி நிறுவகம்**

**பதிப்பு:**

# முகவுரை

தேர்ச்சிகளை அடித்தளமாகக் கொண்ட கலைத்திட்டத்தைப் பாடசாலை முறைமையில் அறிமுகம் செய்யும் பணி 13ஆந் தரத்துக்குரிய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை அறிமுகங் செய்வதுடன் பூர்த்தியடைகின்றது. 12ஆம் 13ஆந் தர மாணவ மாணவியர்கள் பல்கலைக்கழகப் பிரவேசத்துக்காக நிலவும் கடுமையான போட்டிக்கு உள்ளாவதால் நிதமும் கணிசமான அழுத்தத்துக்கு ஆளாகின்றனர். க.பொ.த. உயர் தரத்துக்காக புதிய கலைத்திட்டத்தை முதல் தடவையாகப் பயன்படுத்தும் நிலையில் அவ்வழுத்தம் மேலும் அதிகரிக்கும். அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் உங்களது கைகளை அடையும் இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது பாடத்திட்டத்தைப் போன்றே முக்கியமானதாகும். இங்கு ஆசிரியர் முதன்மை யாகக் கவனத்திலெடுக்க வேண்டிய மூன்று அம்சங்கள் உள்ளன. ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் பாடத்திட்டத்துடன் முழுமையாகப் பொருந்தியமைந்திருத்தல், கலைத்திட்டத்தினால் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை அடிப்படையாகக்கொண்டு கலைத்திட்டத் தத்துவத்தையும் தூரநோக்கையும் முதன்மையாகக்கொண்டு தயாரிக்கப்பட்டிருத்தல், 12ஆம் 13ஆந் தர மாணவர்களிடத்தே எதிர்பார்க்கப்படும் அடைவு மட்டத்தை மனதிற்கொண்டு தயாரிக்கப்பட்டிருத்தல் ஆகியனவே அவையாகும். எனவே இதனை நன்கு உசாவுதல் ஆசிரியரின் இன்றியமையாத பணியும் பொறுப்புமாகும்.

மேற்குறிப்பிட்ட மூன்று விடயங்களையும் உங்களது கவனத்துக்குக் கொண்டு வருதவற்காகத் தேசிய கல்வி நிறுவகம் 13ஆந் தரத்தில் கற்பிக்கும் சகல ஆசிரிய ஆசிரியைகளுக்கும் உரிய பயிற்சியை வழங்கும் பணிகளையும் செய்து வருகின்றது. தொடர்ச்சியாக நடத்தப்படும் இப்பயிற்சி அமர்வுகளில் ஆசிரியர்கள் பங்குபற்றுவது இன்றியமையாததாகும். இங்கு தரப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் கோட்பாடுகள், செயன்முறைகளை விளங்கிக்கொள்வதற்கு அப்பயிற்சி பெரிதும் துணையாக அமையுமென்பதே அதற்கான காரணமாகும். குறிப்பாக பாடசாலை மட்ட மதிப்பீட்டுச் செயற்பாடுகளை தேர்ச்சி விருத்திக்குத் துணையாகக்கொள்ள எதிர்பார்க்கப் படுகின்றது. கற்பித்தலை பாட விடங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்திவிடாது மாணவ மாணவியரது திறன்களுக்கு மெருகூட்டுதல் எனும் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்கு இவ்வெல்லாத் தலையீடுகளும் இன்றியமையாதவையாகும் என்பதை கல்வி மற்றும் மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபடும் நாம் அனைவரும் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் தயாரிக்கும் சிரமமிக்க பணியை நிறைவு செய்வதில் பங்களிப்புச் செய்ய தேசிய கல்வி நிறுவக கல்விசார் பணியணியினர் உட்பட ஏனைய சகல பணியணியினருக்கும் வெளிவாரியாகப் பங்களிப்புச் செய்த கல்விமான்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி உரித்தாகும்.

**கலாநிதி உபாலி எம். சேதர**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

## முன்னுரை

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி 2009ஆம் ஆண்டு தொடக்கம் 13ஆம் தரத்திற்குரிய கற்றல்-கற்பித்தல் செயன்முறையை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கு உங்களுக்குத் துணையாக அமையும். இந்த வழிகாட்டி நூலைத் தயாரிப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட பாடத்திட்டம் இதுவரையில் நடைமுறையிலிருந்த பாடத்திட்டங்களிலிருந்து வேறுபட்டது. இது தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட பாடத்திட்டமாக அமைந்திருப்பதே அவ்வேறுபாடாகும். இங்கு தரப்பட்டுள்ள தேர்ச்சிகளை இத்தரத்திலேயே அடைய முடியாமற் போக இடமுண்டு. சிலவேளை, அதற்காக நீண்டகாலம் எடுக்கலாம். எனினும், தேர்ச்சி மட்டங்களையும் அந்தத் தேர்ச்சி மட்டத்தின் கீழ் தரப்பட்டுப்பட்டுள்ள கற்றற் பேறுகளையும் இத்தரம் முடிவடைவதற்குள் அடைதல் அவசியமாகும். எனவே, இத்தரத்திற்குரிய பாடங்களைத் திட்டமிட்டுக் கொள்வதற்கு அத்தேர்ச்சி மட்டங்களும் கற்றற்பேறுகளும் துணையாகும்.

இக்கற்றற்பேறுகளை கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் குறிக்கோள்களை வகுத்துக் கொள்வதற்கும் வகுப்பறை மதிப்பீட்டுக் கருவிகளை தயாரித்துக் கொள்வதற்குமான நியதிகளாகப் பயன்படுத்துவது குறித்து கவனம் செலுத்துவீர்கள் என எதிர்பார்க்கிறோம். மேலும் இப்பாடத்தைப் பயிலும்போது உசாவுவதற்குரிய மேலதிக நூல்கள், இணைய வலை கடப்பிடங்கள் (Web Site) முதலானவை குறித்து மாணவர்களுக்கு அறிவூட்டம் செய்வதற்கு இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி துணையாக அமையும்.

நீங்கள் ஆக்கபூர்வமான ஆசிரியராகச் செயற்படுவீர்கள் எனும் எதிர்பார்ப்புடனேயே உத்தேச செயற்பாடுகள் இங்கு மாதிரிச் செயற்பாடுகளாகத் தரப்பட்டுள்ளன என்பதை கருத்தில் கொள்ளுங்கள். குறிப்பாக ஆசிரியர் - மைய வகுப்பறைச் செயன்முறையை மாற்றி மாணவர் - மையச் செயன்முறையாக அமைத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, மாணவரை நூல் உசாவுகை, இணையப் பயன்பாடு முதலான தேடல்களில் கவனம் செல்லத்தக்கவாறு கற்றல் வாய்ப்புக்களை உருவாக்குவது குறித்து மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

கற்பித்தலின்போது மரபு ரீதியான முறையில் குறிப்பு வழங்குவதற்குப் பதிலான கவர்ச்சிகரமான வகையில் புத்தறிவு, கோட்பாடுகள் முதலானவற்றை முன்வைத்தல் வேண்டும். அதற்காக இப்புதிய வகுப்பறையில் தொழில்நுட்பத்தை உச்சளவில் உபயோகப்படுத்தும் தொடர்பாடல் முறைகளைப் பயன்படுத்துவது குறித்து கவனம் செலுத்த வேண்டும். எனவே, புதிய தொழில்நுட்பச் சாதனங்களை இன்றளவுக்கு ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவது அவசியமாகும்.

13ஆம் தரத்தில் இப்பாடத்தைக் கற்கத் தொடங்கும் உங்கள் மாணவர்களுக்கு இப்பாடத்திட்டம் குறித்து தெளிவுபடுத்துவது பயனுடையதாகும். வருடத்துள் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கும் உங்களது கற்றல்-கற்பித்தல் திட்டத்தை அறிமுகஞ் செய்வதால் கற்றலின்பால் அம்மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டலாம். மேலும் முழுப் பாடத்தையும் கற்பதற்காக மாணவர்களை பாடசாலையின்பால் ஈர்ப்பதற்கும் அது துணையாகும். புதிய கலைத்திட்ட மறுசீரமைப்பினூடாக வகுப்பறை கற்றல் கற்பித்தல் செயன்முறையில் தெள்ளத் தெளிவாக மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக இப்பாடத்திட்டத்தையும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியையும் பயன்படுத்தி உங்களது ஆக்கத் திறனை விருத்தி செய்துகொள்ளுமாறு வேண்டுகிறேன்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் தயாரிப்பதில் பங்களிப்புச் செய்த கல்விமான்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தேசிய கல்வி நிறுவக அதிகாரிகளுக்கும் எனது விஷேட நன்றியைத் தெரிவிக்கின்றேன். இப்பணியில் வழிகாட்டல் வழங்கிய பணிப்பாளர் நாயகம் கலாநிதி உபாலி எம். சேதர அவர்களுக்கும் அச்சிட்டு பாடசாலைகளுக்கு விநியோகிக்கும் பொறுப்பை ஏற்றுள்ள கல்வி வெளியீட்டு ஆணையாளர் உட்பட ஏனைய பணியாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன். இதில் அடங்கியுள்ள விடயங்கள் தொடர்பாக உங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களை எனக்கு அனுப்பி வைப்பீர்களாயின் நன்றியுடையவனாவேன்.

**விமல் சியம்பலாகொட**
உதவிப் பணிப்பாளர் நாயகம்
கலைத்திட்ட அபிவிருத்திப் பீடம்.
தேசிய கல்வி நிறுவகம்

# ஆலோசனைக் குழுவும் ஆக்கியோர் குழுவும்

**ஆலோசனை** : **கலாநிதி உபாலி எம். சேதர**
பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்.

**திரு விமல் சியம்பலாகொட**
உதவிப் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்,
மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்.

**மேற்பார்வை** : **கலாநிதி மாவுல்கொட சுமணரத்தன தேரர்**
பணிப்பாளர், சமயக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்.

**ஆலோசனைக் குழு**: **மேதகு கலாநிதி வலன்ஸ் மென்டிஸ் ஆண்டகை**
தலைவர், திருவிவிலியம், மறைக்கல்வி,
கல்வி பற்றிய ஆயர்களின் ஆணைக்குழு.

**மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை**
உப தலைவர், திருவிவிலியம், மறைக்கல்வி,
கல்வி பற்றிய ஆயர்களின் ஆணைக்குழு.

**கலைமாணி அருட்பணி. ஐவன் பெரேரா**
பணிப்பாளர், தேசிய கத்தோலிக்க கல்வி ஆணைக்குழு.

**கலாநிதி அருட்பணி. ஜயசிறி பீரிஸ்**
செயலாளர் நாயகம், தேசிய கிறிஸ்தவ சபை.

**கலாநிதி அருட்பணி. ஞானமுத்து பிலேந்திரன்**
திணைக்களத் தலைவர், கிறிஸ்தவ, இஸ்லாம் நாகரிகம்,
யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

**கலாநிதி திரு. ஷேலி விஜேசிங்க**
திணைக்களத் தலைவர், கிறிஸ்தவ நாகரிகம்,
களணிப் பல்கலைக்கழகம், களனி.

**முதுமாணி அருட்பணி. கிரகோரி பர்னாந்து**
உதவிக் கல்விப் பணிப்பாளர்
சமய, விழுமியப் பிரிவு, கல்வி அமைச்சு, இசுருபாய.

**இணைப்பாளர்** : **முதுமாணி அருட்பணி. அ.றெ. லொயிட் சாந்திகுமார்**
செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்.

**கலைமாணி அருட்பணி. கமுனு டயஸ் ஜயவர்தன**
உதவிச் செயற்றிட்ட அதிகாரி,
தேசிய கல்வி நிறுவகம்.

**ஆக்கியோர் குழு :** **முதுமாணி அருட்பணி. அ.றெ. லொயிட் சாந்திகுமார்**
செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்.
**முதுமாணி அருட்பணி. ஜெறாட் றொசய்றோ, அ.ம.தி.,**
விரிவுரையாளர், இறையியல் கல்லூரி, கொழும்பு - 08.
**முதுமாணி அருட்பணி. றெஜினோல்ட் லூசன், அ.ம.தி.,**
விரிவுரையாளர், இறையியல் கல்லூரி, அம்பிட்டிய.
**முதுமாணி அருட்பணி. ஆனந்த வீரக்கூன்**
விரிவுரையாளர், ஆயர் இல்லம், குருநாகல்.
**முதுமாணி அருட்பணி. கிறிஸ்தோபர் பால்ராஜ்**
விரிவுரையாளர், இறையியல் கல்லூரி, பிலிமத்தலாவ.
**முதுமாணி திருமதி. பயஸ் ரதி யுடொக்சியா பீரிஸ்**
ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்விப் பணிமனை, மன்னார்.
**கலைமாணி அருட்செல்வி. மரிய சாந்தனா**
புனித லூசியாள் மகா வித்தியாலயம், கொழும்பு - 13.
**கலைமாணி திருமதி. I.N.J.S. குரூஸ்**
புனித சேவியர் ஆண்கள் தேசிய கல்லூரி, மன்னார்.
**கலைமாணி திரு. T. I. ரங்கநாயகம்**
புனித அந்தோனியார் மகளிர் மகா வித்தியாலயம்,
கொழும்பு - 03
**கலைமாணி திரு. S.G.K.D.L.C. பிரசாத்**
ஆசிரிய ஆலோசகர், ஹோமாகம.
**கலைமாணி செல்வி. N.F. ராஜயோகினி**
சகல புனித மகளிர் மகா வித்தியாலயம், கொழும்பு - 08.
**கலைமாணி திருமதி. நிமாலி பெரேரா**
புனித லோரன்ஸ் மகா வித்தியாலயம், கொழும்பு - 06.

**அலுவலக உதவி:**

**அருட்பணி றஞ்சித் ஜெயவீர**
**முதுமாணி அருட்பணி. முத்தையா செல்வராஜா**
**அருட்பணி சுறங்க டி மெல்**
**கலைமாணி அருட்செல்வி. ஜெசிந்தா பர்னாந்து**
**செல்வி A.K.S ஏஞ்சல் மேரி**
**செல்வி A. மரில்டா புஷ்பராணி**
**செல்வி என். இவோன் பெலீசியா பர்னாந்து**
**திருமதி P.D.F. ஐறீன்**

**கணினிப் பதிப்பும் வடிவமைப்பும் :**
**திரு. ஜோர்ஜ் ஒலிவர்**

**எப்.ஏ.எப். நிஸ்மியா**
தொழினுட்ப உதவியாளர்
தேசிய கல்வி நிறுவகம்

**அட்டைப் படம் :** **எப்.ஏ.எப். நிஸ்மியா**
தொழினுட்ப உதவியாளர்
தேசிய கல்வி நிறுவகம்

# பொருளடக்கம்


**பக்கம்**

முகவுரை ........................................................................ iii

முன்னுரை ........................................................................ iv

ஆலோசனைக் குழுவும் ஆக்கியோர் குழுவும் .......................................... v

விடய உள்ளடக்கம் ........................................................................ 1

பாடசாலை மட்டக் கணிப்பீடு - அறிமுகம் .......................................... 186

**தேர்ச்சி** **6.0 :** கிறிஸ்தவ நாகரிகம் ஒன்றினைக் கட்டி எழுப்ப அடிப்படையாக அமையும் நாகரிகங்களை உய்த்துணர்ந்து நல்ல வாழ்வு வாழப் பின்னணியை அமைத்துக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம்** **6.1 :** நாகரிகத்தினதும் பண்பாட்டினதும் தன்மையை உய்த்துணர்வர்.

**பாடவேளைகள்** **:** 04

**கற்றல் பேறுகள்** **:**
- நாகரிகம் பண்பாடு என்பவற்றின் பொருள் விளக்கங்களை அறிந்து கொள்வர்.
- நாகரிகத்தினதும் பண்பாட்டினதும் தொடர்புகள் பண்புகளை வேறுபடுத்தி இனங்காண்பர்.
- நாகரிகத்தின் பண்புகளையும், அதன் வழியாக உலகுக்குக் கிடைத்த நன்மைகளையும் இனங்காண்பர்.

## விடய உள்ளடக்க வழிகாட்டி :

### நாகரிகம் என்பதன் வரையறை
- Civitas இலிருந்து Citizen என்பதும் இதில் இருந்து Civilization எனும் ஆங்கிலச் சொல்லும் உருவானது. இது இலத்தீன் சொல்லில் இருந்தே உருவாகியது. நகர மக்களின் வாழ்வியலைப் பிரதிபலிப்பது நாகரிகமாகும். இதனை நகர் + அகம் எனப் பிரித்து நோக்கலாம்.
- நகர் எனும் சொல்லுக்கு நகரம், மண்டபம், அரண்மனை, கோயில் எனப் பல பொருள்கள் உண்டு என தேவநேயப்பாவாணர் எனும் ஆசிரியர் கூறுகிறார். நகராக்கம் உருவாவதற்கு இதுவே காரணம். இதிலிருந்தே நாகரிகம் எனும் சொல் வளர்ந்தது. நதிக்கரையை அடியொற்றியே நாகரிகங்கள் தோற்றம் பெற்றன.
- நாகரிகம் என்பது நகரத்தோடு இணைந்தது. பண்பாடு என்பது உணவு, உடை, வீடு என்பவற்றை வசதியோடும் ஆழகுணர்வோடும் ஆக்கிப் பயன்படுத்தல்.
- நகர அமைப்பைத் தேவைக்கும் கலையுணர்வுக்கும் பொருந்த அமைத்தல், பிறரோடு நன்முறையில் பழகுதல், உள்ளத்தோடு உடலையும் தூய்மையாக வைத்திருத்தல், சுகாதாரப் பழக்க வழக்கங்களைக் கையாளுதல். போக்குவரவுக்கான ஊர்திகள், பொது வாழ்வுக்கான நிறுவனங்களை உருவாக்கிச் செம்மையுறக் கையாளுதல், பொருளாதார சீரமைப்பு, அரசியற் கட்டமைப்பு, நீதி நிர்வாகச் சீர்மை எனப் பல்வேறு அம்சங்களையும் தன்னுள் கொண்டதே நாகரிகம் என்று ஓரளவு வரையறை செய்யலாம்.

### பண்பாடு
- பண்பாடு என்பது Culture எனும் ஆங்கிலச் சொல். இது இலத்தீன் சொல்லை அடிப்படையாகக் கொண்டு தோன்றியது.
- பண்பாடு எனும் பெயர்ச் சொல் பண்ணுதல் எனும் வினைச் சொல்லில் இருந்து பிறந்ததாகும்.
- பண்பாடு என்பது ''பண்'' என்ற வினையடியையும் ''பாடு'' என்ற தொழிற்பெயர் விகுதியையும் கொண்டு உருவானதாகும். பண் = செய் + பாடு = செய்தல் என்று பொருள்படும்.
- குறித்ததோர் இனமோ சமுதாயமோ தனது அறிவாலும் அனுபவத்தாலும் சிந்தனைத் திறத்தாலும் தனக்கென வகுத்துப் பேணி வரும் செயற்பாடே பண்பாடெனலாம். இதன் பரிணாமமாகச் சமய நெறி, தத்துவநோக்கு, அழகியலுணர்வு, குறிக்கோள்கள் என்ற

பலவும் வெளித்தோன்றுகின்றன. இவற்றை அவதானிப்போர் குறித்த இனமோ சமுதாயமோ உயர்ந்த பண்பாடு உடையது என்ற முடிவிற்கு வருகின்றனர்.

- விவசாயத்திற்கு நிலத்தைப் பண்படுத்தல் போல மனித வாழ்வியலுக்கு உள்ளம் பண்படுத்தப்படுதல் அவசியமானதாகும். உள்ளம் பண்படுத்தப்படுதல் கல்வியினாலும் விழுமியப் பயிற்சியினாலுமே இடம் பெறுகின்றது.
- ஒவ்வொரு குழுவினர்க்கும் அவர்களுக்கே உரித்தான பண்பாடுகள் உண்டு. இது அவர்களது ஒழுக்கம், மதிப்பீடு எனும் நிலையில் நோக்கப்படுகின்றது.
- ஒரு சமூகத்தின் அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம் ஆகியவை மென்மேலும் திருந்திய ஒரு நடை பண்பாடு ஆகும்.
- சுருங்கச் சொல்லின் பண்பாடு பெரும்பாலும் அகவயமானதாயும், நாகரிகம் அகவயமும் புறவயமும் ஆனதாயும் கொள்வது பொருத்தம் போலத் தெரிகிறது. இது எவ்வாறெனினும் நாகரிகமும் பண்பாடும் வையாபுரிப்பிள்ளை குறித்தது போலப் பொதுப்படையில் ஒரே பொருளிற் பெரும்பாலும் வழங்கி வருகின்றன.

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

1. குடும்பம், சமூகம், பாடசாலை ஆகிய இடங்களில் கிறிஸ்தவ பண்பாடுகளில் ஒழுக்க விழுமியங்கள் தொடர்பான பிரச்சினைகளை இனங்கண்டு இதற்கான பண்புத்தரம் மிக்க தீர்வுகளை முன்வைப்பர்.
2. நாகரிகமும் பண்பாடும் எனும் தலைப்பில் கட்டுரை வரைவர்.
3. பண்பாட்டின் கூறுகளை எண்ணக்கரு விளக்கப்படம் மூலம் காட்சிப்படுத்துவர்.

## உசாத்துணை நூல்கள்


- ஞானமுத்து விக்ரர் பிலேந்திரன் - கிறிஸ்தவமும் நாகரிகங்களும், கத்தோலிக்க மாணவர் ஒன்றியம், நல்லாயன் நிலையம், திருநெல்வேலி - 2008
- க. சொர்க்கலிங்கம் - இந்து நாகரிகம் - குமரன் புத்தக இல்லம் - 2009
- கௌசிகன், உலக மகா நாகரிகங்கள், கங்கை புத்தக நிலையம், சென்னை, 2004

**தேர்ச்சி 6.0 :** கிறிஸ்தவ நாகரிகம் ஒன்றினைக் கட்டி எழுப்ப அடிப்படையாக அமையும் நாகரிகங்களை உய்த்துணர்ந்து நல்ல வாழ்வு வாழப் பின்னணியை அமைத்துக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 6.2 :** கிறிஸ்தவ நாகரிகத்திற்கு அடிப்படையாக அமையும் நாகரிகங்கள் தொடர்பாக முறையாக ஆராய்வர்.

**பாடவேளைகள் :** 45

**கற்றல் பேறுகள் :**
- மேலைத்தேய ஆசிய யூத நாகரிகங்களின் தோற்றம் பற்றி அறிந்து கொள்வர்.
- கிறிஸ்தவ நாகரிகத்தின் வரலாற்றுப் பின்னணி, புவியியல் பின்னணி தொடர்பான விளக்கங்
  களைப் பெறுவர்.
- நாகரிகத்தின் பண்புகளையும், அதன் வழியாக உலகுக்குக் கிடைத்த நன்மைகளையும் இனங்காண்பர்.

## விடய உள்ளடக்க வழிகாட்டி:ஷ

### 6.2.1 மேலைத்தேய, ஆசிய, யூத நாகரிகங்கள்

**யூத நாகரிகம்**
- மீட்பு வரலாறு ஆபிரகாமின் அழைப்புடன் ஆரம்பமாகின்றது என கருதப்பட்டாலும் எபிரேய மக்களின் வாழ்வு அண்ணளவாக கி.மு. 2000 காலப் பகுதியிலேயே ஆரம்பமாகியது எனலாம்.
- அண்மைக் கால அகழ்வாய்வுகளின் மூலமும் வரலாற்று அறிவியல் ஆய்வுகளின்படியும் எழுபது இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பே மனிதர்கள் வாழ்ந்துள்ளனர் என்று கருதப்படுகின்றது.
- பல ஆண்டுகளுக்கு முன்பே மனித இனம் தோன்றினாலும். கி.மு. 800 ஆம் ஆண்டுகளுக்குப் பின்பே நாகரிகம் குறித்துப் பேச முடிகின்றது.
- ஆற்றங்கரைகளை அண்டிய பகுதிகளிலேயே மக்கள் குழுக்களாகக் குடிசையமைத்து கிராமச் சூழலை ஆரம்பித்து வாழ்ந்தனர்.
- மத்திய கிழக்கு நாடுகளிலும், மத்திய தரைக்கடலைச் சூழ உள்ள நாடுகளிலும் மக்கள் வாழ்ந்தனர். யூப்பிரட்டிஸ், தைகிறீஸ் நதிகளுக்கிடைப்பட்ட பகுதிகளில் முதன் முறையாக உணவுக்காக விவசாயத்தை மேற் கொண்டனர்.
- ஆபிரகாம் யூப்பிரதீஸ் தைகிறிஸ் நாகரிகங்களுக்குட்பட்ட பகுதியாகிய மெசப்பொத்தாமியா ‘‘ஊர்’’ என்னும் இடத்தில் இருந்தே அழைக்கப்படுகின்றார். (கி.மு.1800)
- மெசப்பொத்தாமியக் கலாசாரத்தின் பின்புலத்தில் பிறந்து, வளர்ந்து, மந்தை மேய்த்தல் தொழிலைச் செய்து வந்தார்.
- ஆபிரகாமின் சந்ததிகள் தொடர்ந்து பெருகி யோசேப்பின் காலத்தில் இஸ்ரயேல் மக்களாகக எகிப்துக்கு செல்கின்றனர். (கி.மு. 1720 - 1550)
- எகிப்து நன்கு வளர்ச்சி பெற்ற நாகரிகத்தைக் கொண்டது. இதனால் எகிப்திய நாகரிகம் இஸ்ராயேலிடத்தில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியது.
- எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்று பலஸ்தீன இராச்சியத்தை அமைத்துக் கொண்டனர்.
- இக்காலத்தில் பண்பாடுகள் தோற்றுவிக்கப்படுகின்றன. (நீதிபதிகள் - சாமுவேல், சவுல்,

தாவீது, சாலமோன்). பாலஸ்தீன சாம்ராச்சியத்தோடு யூத கலாச்சாரம் தோற்றுவிக்கப்பட்டது.

## ஆசிய நாகரிகம்

- ஆசீரிய, பபிலோனிய அடிமைத்தனங்களுடன் ஏறத்தாள 200 ஆண்டுகளுக்கு மேலாக இந்நாகரிகங்கள் செல்வாக்கு செலுத்தின. (கி.மு. 1100)
- கலாச்சாரத்தின் தொட்டில் என பபிலோனியா அழைக்கப்பட்டது. இவர்களது சமய நம்பிக்கைகள், ஆப்புவடிவ எழுத்துக்கள், புரான இலக்கியங்கள், சட்டங்கள் ஆகியன பழைய ஏற்பாட்டு இலக்கியங்களில் அதிகம் செல்வாக்கு செலுத்தியுள்ளன.
- மேற்காசியாவில் பேரரசாக விளங்கிய பாரசீகம் (கி.மு. 550 - 529) சைருஸ் மன்னனின் ஆட்சிக்காலத்தில் அதிகம் பலம் பொருந்திய அரசாக விளங்கியது. கிழக்கு எல்லையாக இந்தியாவையும் மேற்கு எல்லையாக அயோனியாவையும் கொண்டிருந்தது.
- யூத கலாசாரத்திற்குள் பபிலோனிய, சுமேரிய, அசீரிய, மெசப்பொத்தாமிய கலாசாரத் தாக்கம் செல்வாக்கு செலுத்தியது.
- தாம் கைப்பற்றிய நாடுகளில் வழிபாட்டு முறைகளையும் சமூக வழக்கங்களையும் மதித்தனர்.
- கி.மு. 539ல் பபிலோனியாவை சைருஸ் மன்னன் கைப்பற்றி கி.மு. 538ல் நாடு கடத்தப்பட்ட இஸ்ராயேல் மக்களை தம் சொந்த நாட்டுக்குச் செல்லவும், ஜெருசலேம் ஆலயப் பொருட்களை பபிலோனியாவிலிருந்து எடுத்துச் செல்லவும், ஜெருசலேம் ஆலயத்தை மீண்டும் கட்டி எழுப்பவும் பாரசீகர் அனுமதித்தனர்.
- இவ்வாறு ஆசிய நாகரிகத்தின் தாக்கம் யூத நாகரிகத்தில் செல்வாக்கு செலுத்துவதற்கு பாரசீக மன்னரின் ஆட்சி கூற்று சக்தியாக அமைந்தது.

## மேலைத்தேய நாகரிகம்

- பாரசீகருடைய ஆட்சியைத் தொடர்ந்து பலஸ்தீனா கிரேக்கருடைய ஆட்சிக்கு உட்படுகின்றது.
- ஐரோப்பிய நாகரிகத்தின் அடிப்படை அம்சங்கள் பலவற்றுள் ஐரோப்பிய நாகரிகத்தின் வளர்ச்சிக்கு அத்திவாரமிட்டது கிரேக்க நாகரிகமாகும்.
- பலஸ்தீனா கிரேக்கர்களின் ஆட்சிக்குட்பட்டு கி.மு. 336ல் பேரரசன் அலெக்சாண்டர் மேற்காசிய நாடுகளைக் கைப்பற்றி கிரேக்க பேரரசுகளை நிறுவியதுடன் கி.மு. 33இல் பாலஸ்தீனம் கிரேக்கர்களின் ஆட்சியின் கீழ் வந்தது.
- கிரேக்க கலாசாரம், மெய்யியல், கணிதவியல், வானியல், புவியியல், இலக்கியம், கலை போன்றவை யுத நாகரிகத்தின் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தன.
- பாலஸ்தீனா கி.மு. 175 - 164 காலப் பகுதியில் அந்தியோக்கு, எபிபானுஸ் என்பவரால் (செலுக்கியர்) ஆட்சி செய்யப்பட்டது. கிரேக்க மயமாக்குதலை அந்தியோக்கு எபிபானுஸ் திணித்தார். இது மக்கபேயர் புரட்சிக்கு வழிவகுத்தது.
- கி.மு. 98முதல் 63வரையும் செலுக்கிய ஆட்சியே இடம் பெற்றது.
- கி.மு. 63இல் பொம்பே எனும் உரோமைய தளபதி பாலஸ்தீனா முழுவதையும் உரோமையின் ஆட்சிக்கு உட்படுத்தினான். அத்துடன் கிரேக்க இராச்சியம் முற்றுப்பெற்றது. ஆயினும் கிரேக்க மொழி, கலை, இலக்கியத்துறைகள், மெய்யியல், சிந்தனைகள் யூத கலாச்சாரத்தில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தின.
- உரோமைப் பேரரசின் ஆட்சிக் காலத்திலேயே மேற்காசிய நாடுகளில் கிறிஸ்தவம் தோன்றிப் பரவியது. இந்தப் பின்புலத்திலேயே கிறிஸ்தவ நாகரிகமும் வளர்ச்சியடைந்தது. பல கலாச்சாரங்களின் செல்வாக்கைப் பெற்ற யூத கலாச்சாரத்தின் தாக்கமும் கிறிஸ்தவ கலாச்சாரத்தில் பேரளவில் காணப்பட்டது.

**நைல் நதிக்கரை நாகரிகம்**

- மிகப் பழமை வாய்ந்த நாகரிகம் நைல் நதிக்கரை நாகரிகமாகும். கி.மு. 3300 முதல் கி.மு. 1070 வரை இந் நதிக்கரை நாகரிகமானது நிர்வாக, பொருளாதார, சமூக கலாசார விடயங்களில் மிகச் சிறப்புற்று விழங்கியமைக்கு ஆதாரங்கள் பல உள்ளன.

- இந் நைல் நதி நாகரிகமானது ஆபிரிக்க கண்டத்தின் மிஸிர் (எகிப்து) பிரதேசத்தில் நைல் நதியை அண்டி வளர்ச்சியடைந்தது. இந்நைல் நதியானது ஆபிரிக்காவின் விக்டோரியா ஏரியில் ஆரம்பித்து எகிப்திற்கூடாகப் பாய்ந்தது. மத்திய தரைக் கடலில் சங்கமமாகின்றது.
- எகிப்தின் கிழக்கு எல்லையிலே செங்கடல் அமைந்துள்ளது. முற்கால வர்த்தகர்கள் இந்தியா, இலங்கை, சீனா நாடுகளுக்கூடாகவும் எகிப்தின் நைல்நதி கழிமுகத்தை அண்மித்த பிரதேசம் (சுயஸ்கால்வாய்) ஊடாக மேற்கு நாடுகளுக்கும் வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்தியதால் இது வாணிப மத்திய நிலையமாகக் காணப்பட்டது.
- சிறப்பான செழிப்புமிக்க வளமான மண், வாற் கோதுமை, கோதுமை, மிலற் முதலிய தானியங்கள் வளர்வதற்கும் ஏற்றதாக அமைந்தது.
- கி.மு. 3000ஆம் ஆண்டில் வட எகிப்து, தென் எகிப்து என்று காணப்பட்ட இரண்டு பகுதிகளும் ஒன்றாக இணைக்கப்பட்டன. கி.மு. 2600ஆம் ஆண்டளவில் நைல்நதிக்கரை முழுமையான ஆட்சிப் பரிபாலனத்தையுடைய அரசாக காணப்பட்டது.
- 3ஆம் தூர்க்மோஸ் அரசனாக இருந்து ஆண்டான். இராம்சேஸ் என்ற மன்னன் 20ஆம் அரச வாரிசுக்குரியவனாகக் காணப்பட்டான. அரசர்கள் பார்வோன் என்ற பொதுப் பெயரால் அழைக்கப்பட்டனர்.
- ஆட்சி அதிகாரம் தெய்வத்திடமிருந்தே அரசனுக்கு கிடைத்திருப்பதாக நம்பினர். லௌகீகத் தலைவனாகவும், ஆன்மீகத் தலைவனாகவும் அரசனே விளங்கினார்.
- சமய அரசனின் கீழ் அமைச்சர்களும், சமயக்குருமார் அரசனுக்கு அடுத்த கட்டத்திலும் முக்கியமானவர்களாகக் கருதப்பட்டனர்.
- நிருவாகம், சமயம், பொருளாதாரம், பரிபாலனம் என்ற வகையில் ஆட்சிக் கடமைகள் ஒன்றிணைக்கப்பட்டிருந்தன. பெரும்பாலும் ஆட்சி உரிமை, தந்தையிடமிருந்து மகனுக்குரியதாக கருதப்பட்டு கைமாறப்பட்டது. ஆண்பிள்ளைகள் இல்லாத சந்தர்ப்பத்தில் பெண்களும் ஆட்சிப்பீடம் ஏற அனுமதிக்கப்பட்டது.
- பப்பிரஸ் என்ற புல் கடதாசியாக எழுதப் பயன்படுத்தப்பட்டது.
- தெய்வங்கள், பேய்கள் பற்றியும் அவற்றின் ஆற்றல்கள், அவற்றோடு தொடர்பு கொள்ளன்கூடிய முறைகள் ஈமச்சடங்கு முறைகள், மரணச் சடங்கில் ஓத வேண்டிய மந்திரங்கள் போன்றன எழுதப்பட்ட சுவடிகள் கண்டெடுக்கப்பட்டன. (மரணித்தவர்களின் புத்தகம்)
- மரணத்தின் பின் வாழ்வு உண்டு என்ற நம்பிக்கை முதன்முதல் நைல்நதிக்கரை வாசிகளிடமே ஆரம்பமாயிற்று, இதற்கென ஆரம்பிக்கப்பட்டதே பிரமிட் கல்லறையாகும்.
- கட்டிட நிர்மாணமும் எகிப்திய நாகரிகத்தின் சிறப்பம்சமாகும். செதுக்கல் வேலைப்பாடுகள், சிற்பங்கள், சித்திரங்கள் போன்றனவும், உருவ எழுத்துக்கள் என்பனவும் இந்நாகரிகத்தூடே வளர்ச்சி பெற்றது.
- கணிதத்துறை, வைத்தியதுறை, சோதிடக்கலை வளர்ச்சி பெற்றது. தானியங்களை அளப்பதற்கும் களஞ்சியங்களின் பரப்பளவைக் கணிப்பதற்கும் கட்டிடங்களுக்குத் தேவையான கற்களின் எண்ணிக்கைகளைத் தீர்மானிப்பதற்கும் கணித எண்ணக் கருக்கள் பயன்படுத்தப்பட்டன.
- ஆண்டுகள், மாதங்கள், தினங்களை கணிப்பதற்கும் இவை பயன்படுத்தப்பட்டன.
- விளக்கெண்ணெய், பேரிச்சம்பழம், அத்திப்பழம் முதலிய மருந்துகளாகப் பயன்படுத்தப்பட்டன.

**யூப்பிரட்டிஸ் தைகிரிஸ் ஆற்றங்கரை நாகரிகம் (மெசபொத்தாமியா)**

- இன்றைய மத்திய கிழக்கு நாட்டில் ஈராக் எனக் குறிப்பிடப்படும் பகுதியே மொசப்பத்தேமியா என்ற பகுதியாகும்.
- கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முன்னர் கலாசாரத்தின் தொட்டில் என வர்ணிக்கப்பட்ட பகுதி இதுவாகும்.
- பாரசீக குடாவில் கடலுடன் கலக்கும் யூப்பிரட்டிஸ் தைக்கிரிஸ் என்ற நதிகளுக்கிடையே இந்நாகரிகம் வளர்ச்சியடைந்தது.
- ஊர், நிப்பூர், உருக், சிஷ், லாகாஸ், இரிடு போன்ற நகரங்கள் இந்நாகரிகத்தில் வளர்ச்சிபெற்ற மாநகரங்களாகவும், இராச்சியங்களாகவும் வளர்சியடைந்தன.
- மொசபத்தேமிய அரசனே நாட்டின் தலைவனாவானான். தலைவனுக்கு ஆட்சி செய்யும் உரிமையை கடவுளே வழங்கியிருப்பதாக நம்பப்பட்டது.
- சுமேரியாவின் செதுக்கல் வேலைப்பாடு ஒன்றில் கம்முராபி மன்னனுக்கு சமாஸ் எனும் சூரியக் கடவுள் மோதிரம் ஒன்றையும் கோல் ஒன்றையும் அன்பளிப்புச் செய்ததாகச் சித்தரிக்கப்பட்டது.
- ஆட்சி நிருவாகத்தைக் கொண்டு நடத்துவதற்கான வருமானம், வரி அறவிடுவதன் மூலம் கொண்டு நடத்தப்பட்டது.
- கம்முராபியினர் சிறந்த நிருவாகிகளாகவும், போர் வீரர்களாகவும், நீதித்துறையில் பண்டிதர்களாகவும் செயல்பட்டனர். இவர்களால் பல்வேறுதுறைகளுக்குமான சட்டங்கள் இயற்றப்பட்டன. இவை கம்முராபி சட்டங்கள் என அழைக்கப்பட்டன.
- விவசாயமும் விலங்கு வளர்ப்பும் பொருளாதார நடவடிக்கைகளாக அமைந்தன.
- முதன்முதலாக நாணயங்களை பயன்படுத்திய நாகரிகம் மொசபத்தேமிய நாகரிகம்.
- பண்டமாற்று முறையை விட பணம் மூலமான கொடுக்கல்வாங்கல்களே அதிகம் மேற்கொள்ளப்பட்டன.
- மெசப்பொத்தாமிய மக்களிடம் கடவுள் நம்பிக்கை அதிகமாகக் காணப்பட்டது. மர்டுக், இஆ, சின், சமாஸ் முதலிய தெய்வங்கள் அவர்களின் பிரபல்யமான தெய்வங்கள். சூரியன், சந்திரனும், நீளமான தாடிகளையுடைய அறிவாளிகளைப் போன்ற உருவத்தில் சித்தரிக்கப்பட்டனர்.
- ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட தெய்வங்களும் காணப்பட்டன. மனிதனை மீட்கக் கூடிய சக்தி தெய்வங்களுக்கே உரியது என நம்பப்பட்டது.
- பேய்கள் மனிதனுக்கு தொல்லை கொடுப்பனவாகவும், அப்பேய்களைக் கட்டுப்படுத்த பூசகர்கள் காணப்பட்டனர்.
- ஊர் எனும் நகரில் பிரமாண்டமான கட்டிடம் சிகுராத் எனும் தேவாலயமாகும்.
- ஈராக் களிமண்தட்டுக்கள் எழுதப் பயன்படுத்தப்பட்டன.
- ஆப்புவடிவ எழுத்துக்கள் எழுதப்பட்டன. இவ் எழுத்துக்களில் சித்திரங்கள் காணப்பட்டதுடன் ஒவ்வொரு உருவமும் பொருள் உடையனவாகவும் அமைந்தன. நட்சத்திரம் கடவுளையும் பாதங்கள் பயணத்தையும் குறித்து நின்றன.
- கலண்டர் முறையும் இங்கு காணப்பட்டது. உலகின் முதல் வரைப்படம் மெசப்பொத்தாமியாவிலேயே வரையப்பட்டது. சில்லின் உபயோகமும் இங்குதான் ஆரம்பமாகியது.
- கனவுகளுக்கு பலன்கூறும் பழக்கமும் இவர்களிடம் காணப்பட்டது.
- வைத்தியத்துறையானது தெய்வம், பேய், ஆவி என்பவற்றின் நம்பிக்கையுடன் இணைந்ததாக காணப்பட்டது. அத்துடன் நோய்களை மாய சக்திகள் மூலம் குணப்படுத்தலாம் என நம்பப்பட்டது.
- 600 வகைக்கும் மேலான மூலிகைச் செடிகள் மருந்துகளாகப் பயன்படுத்தப்பட்டன.
- உலக அதிசயங்களில் ஒன்றான தொங்குதோட்டம் கட்டிடக் கலைக்கும், கருங்கல்லில் வடிக்கப்பட்ட கௌடியா அரசனின் சிற்பக் கலைக்கும், உயிரோட்டமும் யாதார்த்தமுமாக அமைக்கப்பட்ட ஆண் பெண் உடலமைப்பு செதுக்கல் கலைக்கும் ஆதாரமாக

அமைந்ததுடன் அக்கால கலைஞர்களின் திறமையையும் வெளிக்காட்ட உதவுகிறது.

### 6.2.2 - விவிலியப் புவியியல் பின்னணி

### 6.2.2.1 பழைய ஏற்பாட்டுக் காலம்

- விவிலியப் புவியியல் பற்றி நோக்கும் போது கீழ்வரும் விடயத்தை தெளிவாக விளங்க வேண்டும். பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் மையமாகக் கொண்டிருப்பது வாக்குத்தத்தம் செய்யப்பட்ட பூமி (பாலஸ்தீனா) என்பதாகும்.

- இது மிகப்பரந்த உலக புவியியலிலும் வரலாற்றிலும் ஒரு சின்னஞ் சிறிய நாடு அல்லது நிலப்பரப்பு ஆகும். இந்த நிலப்பரப்பு வரலாற்றில் ஏறத்தாழ சூழவிருந்த வல்லரசுகளின் ஆதிக்கத்தின் கீழேயே இருந்து வந்துள்ளது.
- செழும்பிறை நாடுகளான மெசப்பொத்தாமியா ஏதோம், மோவாப், எகிப்து, கானான், பெலிஸ்தியா, அசீரியா, பபிலோனியா, பாரசீகம் ஆகிய நாடுகள் விவிலியப் புவியியல் பின்னணியை அறிவதற்கு ஆதாரங்களாக உள்ளன.
- **மெசப்பொத்தாமியா -** (தற்போதைய ஈராக்) - யூப்பிரட்டிஸ் தைக்கிறிஸ் நதிகளின் நடுவே அமையப்பட்ட ஒரு நகரம். இப்பகுதியில் செமித்திய இனமான அக்காடியர் வாழ்ந்து வந்தனர். இவ்விரு நதிகளும் பாரசீக வளை குடாவில் சங்கமிக்கின்றது. இரு நதிகளுக்கிடையில் இது அமைந்தபடியினாலேயே மொசப்தேமியா என அழைக்கப்படுகிறது. மொசபத்தேமியாவின் நகர்கள் பல சுதந்திர ஆட்சி முறையை மேற்கொண்டபோது செமித்திய இன மக்களான இவர்கள் அமோரியர்கள் என்றும் அழைக்கப்பட்டனர்.
- **ஏதோம், மோவப் -** யோர்தானுக்கு அப்பால் தென்கிழக்கு செரெட் நீரோடை முதல் அக்காபா வளைகுடாவில் உள்ள எச்சியோன் - கேபர், வரையில் உள்ள பகுதிகளை உள்ளடக்கியது.
- இனம், கலாச்சாரம், மொழி ஆகியவற்றில் எபிரேயர்களுடன் ஏதோமியர், மோவாபியர், அமோனியர் ஆகியோர் தொடர்பு கொண்டு இப்பகுதியில் வாழ்ந்து வந்தனர்.
- கி.மு. 604இல் ஏதோம் பபிலோனின் கீழ் சிற்றரசாக மாறியது. அவர்களே பிற்காலத்தில் இதுமேயர் என அழைக்கப்பட்டனர்.
- **எகிப்து -** மத்திய தரைக்கடலுக்கு கீழே நைல் நதியை அண்மித்த பகுதிகளில் இப்பிரதேசம் அமைந்துள்ளது. (தற்போதைய சூடான் எகிப்து பிரதேசங்களில் பரவியிருந்தது)
- ஆரம்ப காலத்தில் மேல் எகிப்து, கீழ் எகிப்து என இரு இராச்சியங்கள் இருந்தது.
- மெம்பீஸ் நகரத்தைத் தலை நகராக்கிக் கொண்டு மேகஸ் என்னும் அரசன் இவ்விரு இராச்சியங்களையும் ஒன்றிணைத்தார்.
- **கானான் -** யோர்தானின் மேற்குப் பகுதியில் அமைந்திருந்தது. காலப் போக்கில் யோர்தானின் மேற்குப் பகுதியான பாலஸ்தீனத்தையும் சீரியாவின் சில பகுதிகளையும் பெனிக்கியா என்ற கடலோரப் பகுதியையும் இணைத்த பெரிய நாடாக இருந்தது.
- இக் கானான் நாட்டைப் பற்றிக் கூறுகையில் பாலும் தேனும் பொழியும் நாடு என்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட்டது. இச் சொற்றொடர் நிலத்தில் என்றும் குன்றாத வளமையை எடுத்துரைக்கக் கையாளப்பட்டது.
- **பெலிஸ்தியா -** பெலிஸ்தியா காசா, ஸ்தோத்து, அஸ்கெலோன், எக்ரோன், மேற்கு ஷெப்லாவில் உள்ள காத் ஆகிய ஐந்து நகரங்களை உள்ளடக்கியுள்ள ஒருநாடு.
- கி.மு. 1240இல் மத்திய தரைக்கடல் வழியாக இந்திய ஐரோப்பிய மக்களினத்தவர் பாலஸ்தீனத்தின் தெற்கே கடற்கரைக் கரையோரப் பகுதியில் குடியேறினர். பின்னர் எஸ்திரோன் சம வெளியையும், யோர்தான் பள்ளத்தாக்கின் சில பகுதிகளையும் ஆக்கிரமித்துக்கொண்டனர்.
- கி.மு. 3ஆம் நூற்றாண்டில் கானான் நாட்டைக் கைப்பற்றிய கிரேக்கர் இந்நாடு முழுவதையும் பாலஸ்தீன் என்று பெயரிட்டனர்.

- **அசீரியா -** தைக்கிறிஸ் ஆற்றின் ஒரு பக்கத்திலும் சாக்ரோஸ் மலையடிவாரத்திலும் அமைந்துள்ள இன்றைய ஈராக் நாட்டின் மேற்குப் பகுதி அன்றைய அசீரியா. பெரும் பகுதி பாலை நிலம். அசீர் என்ற கடவுளின் பெயரிலேயே இந்நகரம் அமைந்துள்ளது. தலைநகர் நினிவே.
- **பபிலோனியா -** பபிலோனியா என்றால் விண்ணகத்தின் வாயில். கிரேக்கத்தில் இறைவனின் கதவு. யூப்பிரட்டிஸ், தைக்கிறிஸ் ஆறுகளுக்கிடையே அமைந்திருந்த மொசப்பத்தேமியா பிற்காலத்தில் பாபிலோன் எனப் பெயர்பெற்றது. பபிலோனியாவை விவிலியம் கல்தேயரின் நாடு என்றும் தலைநகர் சீனார் என்றும் குறிக்கப்படுகின்றது. இஸ்ராயேலுக்கு இறைவனுடைய சவுக்காகப் பயன்படுத்தப்பட்டது பபிலோன்.

### 6.2.2.2 புதிய ஏற்பாட்டுக் காலம்

- பாலஸ்தீனப் பகுதியில் உள்ள மலைகளின் அமைப்பு அடிப்படையில் புனித பூமியை பிரித்துப் பார்க்கலாம் நில நடுக்கத்தினால் 480 கிலோ மீட்டர் நீளமுடைய யோர்தான் பள்ளத்தாக்கு உருவாகியது. இப்பள்ளத்தாக்கு கடல் மட்டத்திலிருந்து 3000 அடி ஆழமும் 46கி. மீற்றர் அகலமும் கொண்டது. இப்பள்ளத்தாக்கை மையமாக வைத்தே யோர்தான் ஆற்றுக்கு மேற்கே உள்ளபகுதி, கிழக்கே உள்ள பகுதி என்று இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரித்து நோக்கலாம்.

- **யோர்தான் ஆற்றுக்கு மேற்கே உள்ள பகுதி**
- **கடற்கரைப்பகுதி -** பாலஸ்தீனாவின் இப்பகுதி அலெக்சாந்திரியா வளைகுடாவிலிருந்து வாடி-எல்-அரிஸ் வரைக்கும் பரவியுள்ளது. இது 32கி.மீ. அகலமுள்ளது. இதனை சமவெளிப்பகுதி என்றும் அழைப்பர்.
- இப்பகுதியில் பின்வரும் சமவெளிப் பகுதிகள் காணப்படுகின்றன.
- **சாரோன் சமவெளி** தெற்கே யோப்பாமுதல் வடக்கே முதலை ஆறு என அழைக்கப்படும் சகோர்லிப்நாத் என்ற பகுதிவரை 64கி.மீ. நீளமுடையது. இது ஒரு சதுப்பு நிலப் பகுதி.
- **பெலிஸ்திய சமவெளி** யோப்பாவிற்கு தெற்கே எகிப்தின் எல்லையை நோக்கி விரிந்துள்ளது. இச் சமவெளி இது புல்வெளிப்பகுதிகளைக் கொண்டது. ஒலிவமரங்களும் தானிய வகைகளும் அதிகம் வளர்கின்றது.
- **எஸ்திரலோன் -** பாலஸ்தீனாவின் நடுவில் இருக்கும் மலைத்தொடரை எஸ்திரலோன் புல்வெளி இரண்டாகப் பிரிக்கின்றது. இது தெற்கு வடக்காக 22.4 கி.மீ. கிழக்கு மேற்காக 32கி.மீ. பரவியுள்ளது.
- **பாலஸ்தீனா மலைத்தொடர்**

  கடற்கரைப் பகுதியை அடுத்து வடக்கிலிருந்து தெற்காக பலமலைத் தொடர்கள் உள்ளன. இதனை கலிலேயா, சமாரியா, யூதேயா என மூன்றாகப் பிரிக்கலாம். கலிலேயாவில் 400 அடி உயரமுள்ள ஜெயல் யார்முக் என்பதே இப்பகுதியில் மிக உயரமான சிகரமாகும். இயேசுவின் காலத்தில் இப்பகுதி நாசரேத்தூர், கானான், தபோர்மலை, நயீம், கலிலேயாக் கடல், கப்பர்நகூம் திபேரியா, மகதலா, பெத்சாயிதா என்பவற்றை உள்ளடக்கியது.

- **கலிலேயாப் பகுதி**

  கார்மேல் மலைத்தொடரும் எஸ்திரலோன் பள்ளத்தாக்கும் தெற்கு எல்லையாகவும் லெபனான் மலைத்தொடர் வடக்கு எல்லையாகவும் கொண்டுள்ள கலிலேயாவானது முழு பலஸ்தீனத்திலும் மிகவும் செழிமை வாய்ந்த பிரதேசமாக இருந்தது. கிறிஸ்துவின் பகிரங்க வாழ்வின் ஆரம்பப் பகுதியில் அவர் போதித்த இடம் கலிலேயாக் கடலோரமாகிய கெனசரேத்தின் தென் கிழக்கில் அமைந்துள்ளது. கடல் மட்டத்திலிருந்து

700 அடி உயரத்தில் உள்ளது. கலிலேயாக் கடலும் அதனை அண்டிய பிரதேசங்களும் கிறிஸ்துவின் வாழ்க்கையோடு பிணைந்துள்ளது. கலிலேயாக் கடலுக்கு கெனசரேத் கடல் என்ற பெயரும் வழக்கிலிருந்தது.

**இப்பகுதியில் குறிப்பிடத்தக்க சில இடங்கள்:-**
நாசரேத்து, கானா, தாபோர் மலை, நயீன், கலிலேயக்கடல், கப்பர்நகும், திபேரியா, பெத்சாய்தா.

- **சமாரியா**

  கலிலேயாவிற்கும் யூதேயாவிற்குமிடையே உள்ள மலைப்பகுதி சமாரியா. கிழக்கு மேற்கே 32கி.மீ. தெற்கு வடக்கே 32கி.மீ. உள்ளது. செங்குத்தான மலைத் தொடரைக் கொண்டுள்ளது. கிழக்கே யோர்தான் ஆறு, மேற்கே மத்தியதரைக்கடலைக் அரணாகக் கொண்டுள்ளது. கலியோவையும் சமாரியாவையும் பிரித்துப்பார்க்க கில்யோவா மலை உதவுகிறது. பெத்தேவா போன்ற இடங்கள் எல்லைப் பகுதியாக காணப்படுகிறது. இரட்டை மலை என அழைக்கப்படும் ஏபால் மலையும் கெரிசிம் மலையும் இங்கு உள்ளன. இருமலைகளும் கடல் மட்டத்திலிருந்து 3000அடி உயரத்திலுள்ளன.

- **யூதேயாப் பகுதி**

  வடக்கே சமாரியாவிற்கும் தெற்கே இதுமேயாவிற்கும் இடையில் உள்ளது யூதேயா. யூதேயாவின் கோத்திரத்திற்கு இந்நாடு அளிக்கப்பட்டது. வளம்மிக்க நாடு அல்ல. கிழக்கே சாக்கடலும் தெற்கே பெயர்செபாவும் எல்லையாக உள்ளது. எபிரோன், ஜெருசலேம், பெத்லகேம், ஜெரிக்கோ, பெத்தானியா, ஒலிவமலை (ஜெத்சமணி) இங்குள்ள முக்கிய இடங்களாகும்.

- **நேகேப்**

  பெயர்செபா பள்ளத்தாக்குக்கு தெற்கே அமைந்துள்ள பாலைநிலமாகும். ''தெற்கு'' என்பதே நெகெப் இன் பொருள். வளமற்ற இப் பிரதேசத்தின் சில இடங்களில் மந்தை வளர்ப்பும் விவசாயமும் மேற்கொள்ளப்பட்டது. காடேஷ் பர்னேயா, பெயர்செபா ஆகிய இரு வரலாற்றுப் பிரதேசங்களும் இப்பகுதியில் அமைந்துள்ளன.

## 6.2.3 வரலாற்றுப் பின்னணி

- பலஸ்தினாவுக்குத் தெற்கே நைல் நதிப்பள்ளத்தாக்கில் கி.மு. 3000 ஆண்டளவில் எகிப்து நாடு நாகரிகத்தில் சிறப்புற்றது. கி.மு. 1786 தொடக்கம் 1552 கைக்கோசர் (கிக்கோசர்) என்ற இனத்தவர்கள் எகிப்தை ஊடுருவி நாட்டைக் கைப்பற்றி புதிய ஆட்சியை நிறுவினர். கைகோசர் என்பது (சூரியர், செமித்தியர், இந்திய ஆரியர் ஆகிய மூன்று இனக்கலப்பில் உருவானவர்கள்). இக் கைக்கோசர் காலத்தில்தான் இஸ்ராயேல் மக்கள் எகிப்தில் குடியேறுகின்றனர்.
- இவர்கள் அடிப்படையில் செமித்திய இனத்தவர் என்பதால் கைக்கோசருடன் ஒற்றுமையுடன் வாழ்ந்தனர். இக்கைக்கோசர் காலம் கி.மு. 1580வரை இருந்தது. ஆனால் 3ஆம் தோத்மாசு (கி.மு. 1490-1430) என்ற பார்வோன் கைக்கோஸ் ஆட்சியை முறியடித்து புதிய எகிப்திய பேரரசை நிறுவினான். தோத்மாசு என்பது சந்திர கடவுளின் மகன் (தோத் - சந்திரன், மசு - மகன்). எகிப்திய அரசுக்கு கைக்கோசரும், இஸ்ராயேலரும் அன்னியராகிவிட்டனர். இவர்களின் மக்கள் தொகை பெருக்கமும் எகிப்திய அரசுக்கு ஆபத்து ஆகிவிடும் என்று கருதினர்.

- கி.மு. 1375 - 1366 வரை ஆண்ட எகிப்திய பார்வோன் 4ஆம் ஆமன் கோட்டபு சூரியக் கடவுளான தன்னைத் தவிர வேறு யாரையும் வணங்கக் கூடாது என்பதில் கண்டிப்பாக இருந்தபோது இஸ்ரயேலின் யாவே வழிபாட்டுக்கு ஆபத்து ஏற்பட்டது. இந்நிலையில் 2ஆம் ராம்சேஸ் காலத்தில் (கி.மு. 1290 - 1224) இஸ்ராயேலர் அடிமைகளாகக் கட்டிட வேலைக்கு அமர்த்தப்பட்டனர். (வி.ப.1:11) இக்காலத்தில்தான் மேசேயும் ஆரோனும் விடுதலைப்புரட்சி செய்து இஸ்ரயேலரை எகிப்திலிருந்து வெளியேறினர்.

### 6.2.3.1விடுதலைப் பயணம்

- ''தலைமுறை தலைமுறையாக உன்னுடனும், உனக்குப் பின்வரும் வழிமரபினருடனும் நான் கடவுளாய் இருப்பேன். நீ தங்கியிருக்கும் நாட்டையும் கானான் நாடு முழுவதையும் உனக்கு உரிமைச் சொத்தாகத் தருவேன்.'' என்று ஆபிரகாமுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை ஈசாக்கு யாக்கோபுடன் புதுப்பித்த ஆண்டவராகிய கடவுள் (தொ.நூ.26:25; 28:13-16) அதனை உயிருடன் நிலை பெறச் செய்யும் கருவியாக மேசேயைத் தெரிந்தெடுத்தார். இதன்படி மோசேயை அழைத்து அவர்மூலம் தன் உடன்படிக்கையை நிறைவேற்ற எண்ணம் கொண்டார்.
- மேசேயை இஸ்ரயேல் மக்களுடன் புறப்பட்டு வரச்செய்து கடலைக்கடந்து சென்று சீனாய் பாலைநிலப் பகுதியில் தங்கவைத்து இஸ்ரயேல் மக்களை இறைமக்களாக்குகின்றார் (வி.ப. 19:25; 20:21). இது ஒரு வரலாற்று உண்மையை வெளிப்படுத்துகின்றது. சமுதாய நல்வாழ்வுக்காக பலநூற்றாண்டுகளாக எழுந்த சட்டங்களை பத்துக் கட்டளைகளாகத் தொகுத்து உடன்படிக்கையாக்கி இஸ்ரயேல் மக்கள் ஒரு தனிப்பட்ட இனமாகவும் கடவுளின் மக்கள் என்ற உணர்வோடும் வாழச் செய்தார்.
- கி.மு. 18ஆம் நூற்றாண்டு முதல் இச்சமுதாயத்தில் பல நெறி முறைகளும் ஒழுக்க முறைகளும் தோன்றின. தங்களுக்கு கடவுள் ஒருவரே என்ற ஆழ்ந்த விசுவாசம் ஊட்டப்பட்டது. சமுதாய அமைப்பின் சமாதான நிலையை உறுதிப்படுத்தவும், சட்டங்கள் எழுந்தன. கடவுள் அன்பையும் சகோதர அன்பையும் மையமாக வைத்துப் பல துணைச் சட்டங்களும் உருவாகின.
- தங்களது அண்டை நாடுகளில் இருந்த சிந்தனைகளை மையமாக வைத்தே இவ்வுடன்படிக்கை செயற்படுத்தப்பட்டது.
- இவ்வுடன்படிக்கையின் வரலாற்றுப் பின்னணியை நோக்கின் ஒரு அரசர் தனக்குக் கீழ் உள்ள சிற்றரசரோடு உடன்படிக்கையை ஏற்படுத்துவது அக்கால வழக்கம். இதில் சில பொதுப் பண்புகள் காணப்பட்டன.
    1. அரசருடைய பெயரும் அவருக்குரிய பட்டங்களும் குறிப்பிடப்பட்டு ஒரு சிறிய முன்னுரை முதலில் அளிக்கப்படும். உ+ம் ''உன் கடவுளாகிய ஆண்டவர் நானே'' (வி.ப. 20:20).
    2. அரசர்களுடைய மேலான இரக்கச் செயல்கள் வர்ணிக்கப்படும். அதனால் சிற்றரசர்கள் நன்றியுணர்வுடன் அரசர்களுடைய கட்டளைகளுக்குப் பணிவர். இதில் நான் நீங்கள் என்ற அமைப்பை அரசரும் சிற்றரசரும் பயன்படுத்தினர். (வி.ப.2:26)
    3. சிற்றரசருக்குரிய கடமைகள் விபரிக்கப்படும். கட்டளைகள், இதைச் செய், இதைச் செய்யாதே என அமையும் (வி.ப. 20:3-17)
    4. உடன்படிக்கைப் பத்திரத்தை ஆலயத்தில் வைக்கவும் அவ்வப்போது உடன்படிக்கைப் பத்திரத்தை படிக்கவும் வேண்டிய கட்டளை உண்டு (இச. 10:5, 31:9-13)
    5. தெய்வங்களின் பெயர்ப்பட்டியல் கொடுக்கப்படும். ஏற்படுத்தும் உடன்படிக்கைக்கு தெய்வங்கள் சாட்சிகளாகக் கருதப்படும். (இச. 32:1, எசா. 1:2)

6. உடன்படிக்கையை கடைப்பிடித்தால் ஏற்படும் ஆசிரும் அதனை மீறும்போது உண்டாகும் சாபங்களும் பட்டியல் போடப்படும். (வி.ப. 23:20-33)

- இறைவன் தனது மக்களுடன் ஏற்படுத்திய உடன்படிக்கையின் சிறப்புத்தன்மை என்னவெனில், வலிமை குன்றிய சிற்றரசர்களால் ஆரம்பிக்கப்பட்ட உடன்படிக்கையைப் போலல்லாமல் எல்லாம் வல்ல கடவுளாலேயே ஆரம்பிக்கப்பட்டது என்பது குறிப்படத்தக்கது.

### 6.2.3.2 நீதித் தலைவர்கள்

- விவிலியத்தில் வரும் நீதித் தலைவர்கள் வலிமை மிகு வீரர்களாக இருந்து கி.மு. 1200 இலிருந்து 1040 வரை தமது வீரம், நீதி, கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுவதில் தீரம், போன்ற பண்புகளுடன் இஸ்ரயேலின் விசுவாச வாழ்வு, நெறிமுறை, பிறரோடு கொண்ட உறவுமுறைகள் அரசனின்றி நெறியோடு வாழ்ந்த வாழ்வு என்பதை நீதித் தலைவர்கள் வரலாற்றில் காணமுடிகின்றது.
- இஸ்ரயேலரின் துன்பத்திற்கும் தொல்லைக்கும் காரணம் அவர்கள் உடன்படிக்கையை மறந்து கடவுளுக்குத் துரோகம் செய்தனர். எனவே கடவுளின் கோபம் சொந்த மக்களுக்கு எதிராக மூண்டது. இதனால் ஆண்டவர் அவர்களை அந்நிய அரசர்களால் வதைபட அனுமதித்தார். (நீத. 2:6-3:6; 10:6-16)
- கனானேயரின் பழக்க வழக்கங்கள் வழிபாட்டு முறைகள் வழிபாட்டுத் தலங்கள் என்பவற்றையும் இஸ்ராயேலர் பின்பற்ற ஆரம்பித்தனர். தங்களை மீட்டுக்காத்து பராமரித்து வரும் ஒரே தெய்வம் யாவே என்பதை மறக்கும் அபாயம் ஏற்பட்டது.
- இஸ்ரயேலரின் நெறி வாழ்வு மிகச் சீரழிந்த நிலையில் இருந்தது. தங்களுக்குள்ளேயே சண்டையிட்டு மடியும் இழிநிலைக்கு வந்தனர்.
- இந்நிலையிலேயே நீதித் தலைவர்கள் யோசுவா, தெபோரா, கெதயோன், சம்சோன் ஆகியோர் இஸ்ரயேல் மக்களை நெறிப்படுத்தி அந்நிய ஆட்சியிலிருந்தும் அடிமைத்தனத்திலிருந்தும் மீட்டு யாவே தெய்வத்தின் மீது பற்றுக்கொண்டு பணிசெய்து வாழ வழிகாட்டி நிற்கின்றனர்.
- இவ்வாறு இறைவனுக்குப் பிரமாணிக்கமாக வாழுகின்ற நெறியுள்ள சமூகத்தை இவர்கள் தோற்றுவிக்கின்றனர்.

### 6.2.3.3 அரசர்கள்

- இஸ்ரயேல் சமூகம் யாவேயின் அரவணைப்பில் நீதிபதிகளின் வழிகாட்டலில் வளர்ந்து வந்தது. ஏனைய மக்களோடு ஒப்பிடும் போது அரசியல், பொருளாதாரம், பண்பாடு என்பவற்றில் முக்கியம் வாய்ந்தவர்களாக இவர்கள் இருக்கவில்லை. இறுதி நீதிபதியாக இருந்து வழிகாட்டிய சாமுவேல் வயது முதிர்ந்தவராக இருக்கவும் அவரின் மக்களில் எவரும் இப்பணிக்குத் தகுதியற்றவர்களாக இருந்ததால் இஸ்ராயேல் மக்கள் தங்கள் தனித்துவத்தை உறுதிப்படுத்தி வெளிப்படுத்த தமக்கு ஓர் அரசர் வேண்டும் எனக் கேட்டனர்.
- மக்களின் விருப்பப்படி இறைவன் அரசனை தேர்வு செய்ய இசைந்தார்.

**அரசர்கள் உருவாவதற்கான காரணம்:**

1. இஸ்ரயேலர் மத்தியில் நீதிபதிகள் ஒழுங்காக நீதி செலுத்தவில்லை (1சாமு. 8:1-9)
2. அருகில் உள்ள மற்றைய நாடுகளில் அரசர் ஆட்சி ஏற்பட்டது.
3. அரசனைக் கொண்ட ஒரு அரசும், அதன் வாயிலாக மற்றவர்களுக்கு தனிநாடு என்று தன்னடையாளப்படுத்தவேண்டிய ஆவல்/தேவை ஏற்பட்டது.

4. பகைவர்களை வெல்லுவதற்கு அரசனும் படைகளும் உருவாக்கப்பட வேண்டும் எனும் எண்ணம்.
5. எனவே இஸ்ரயேலை ஆட்சி செய்ய (ஒன்றிணைந்த அரசு) ஒன்றன்பின் ஒன்றாக மூவரை இறைவன் அபிஷேகம் செய்தார்.

- இவர்கள் வரிசையில் முதல் அரசன் சவுல் அடுத்து தாவீது, சாலமோன் என்பவர்கள் ஒன்றிணைந்த ஆட்சியை உருவாக்கினார்கள்.

## சவுல் (கி.மு. 1030 - 1010)

பென்ஜமின் கோத்திரத்தில் பிறந்த சவுல் குரு சாமுவேலினால் அபிஷேகம் செய்யப்பட்டு இஸ்ரயேல் மக்களுக்கு அரசனாக்கப்பட்டார். (1சாமு. 10:1-24)

- மக்கள் என்ன நோக்கத்திற்காக சவுலை அரசனாக்கினார்களோ அந்த நம்பிக்கை வீண்போகாதபடி பிலிஸ்தியரை வெற்றி கொண்டு இஸ்ரயேலருக்கு புதிய தெம்பையும் நம்பிக்கையையும் கொடுத்தார்.
- ஆனால் சவுல் அமலேக்கியருடனான போரில் யாவேயின் ஆணையை மீறுகின்றார். யாவேயின் கோபத்திற்கு உள்ளானார்.
- எனவே இறைவனைப் புறக்கணித்த சவுலை இறைவன் புறக்கணித்து விட்டார்.

## தாவீது

- யாவே சவுலைப் புறக்கணித்ததன் பயனாக யூதாவை அண்டிய பகுதியில் பாளையம் இட்டு இஸ்ரயேலரை அச்சுறுத்தி வந்த பிலிஸ்தியப் படைகளின் மாவீரனான கோலியாத் இஸ்ரயேலுக்கு பெரும் சவாலாக இருந்தான்.
- இஸ்ரயேலின் மிகச் சிறந்த வீரன் தனித்து வந்து தன்னுடன் போரிட்டு நான் வென்றால் இஸ்ரயேல் பிலிஸ்தியருக்கு அடிமை இஸ்ராயேல் வென்றால் பிலிஸ்தியர் இஸ்ரயேலுக்கு அடிமை என சவால் விடுத்தான்.
- இச்சந்தர்ப்பத்தில் ஜெஸ்சேயின் மகன் தாவீது சாமுவேலினால் அபிஷேகம் செய்யப்படுகின்றான்.
- இவர் ஆடு மேய்க்கும் தொழிலைச் செய்து வந்த சிறுவன்.
- பாளையம் இறக்கியிருந்த இடத்திற்கு தாவீது தன் சகோதரர்களுக்கு உணவு கொண்டு சென்ற போது பிலிஸ்தியத் தளபதி கோலியாத்தின் அறைகூவலை ஏற்று யாவேயில் நம்பிக்கை வைத்து சவுலிடம் சென்று தன்னை கோலியாத்தோடு போரிட அனுமதிக்குமாறு வேண்டினான்.
- தாவீது இவனைக் கொன்றால் தன் மகளை மணம் முடிக்கவும் நாட்டின் ஒரு பகுதியை வழங்குவதாகவும் உறுதியளிக்கப்பட்டது. தாவீது கோலியாத்தைக் கொன்றான். மக்கள் மகிழ்ந்து பாடினார்கள். (1சாமு. 18:1- )

## தாவீதின் ஆட்சியும் நாட்டின் வளர்ச்சியும்

- தாவீதின் வெற்றிகள் பலஸ்தீனாவையும் சீரியாவையும் இணைத்து இஸ்ரயேல் ஒரு வல்லரசாக மாற உதவியது.
- தாவீதின் பேரரசு எகிப்திய பேரரசை ஒத்திருந்தது.
- கிழக்கிலிருந்து மேற்குவரை உள்ள எல்லாப் பாலஸ்தீன நாடுகளும் பாலை நிலம் முதல் கடற்கரை வரை பரந்திருந்தது. கோத்திர மரபுகள் விலக்கப்பட்டு ஜெருசலேம் தலைநகராக்கப்பட்டது.
- அதிகாரக் குவியல் அரசனிடம் இருப்பது தவிர்க்க முடியவில்லை.
- பல படைத்தளபதிகள் நியமிக்கப்பட்டனர்.
- குருக்கள் நியமிக்கப்பட்டனர்.

- இன்னும் பல அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர்.
- அரண்மனைப் பணியாட்கள் ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர்.
- திருமறைக் காரியங்களில் மக்களின் மனநிலையைப் புரிந்து கொண்டு செயல்படும் தன்மையும் காணப்பட்டது.
- திரு இசைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.
- பேரரசின் எல்லாப் பகுதிகளிலும் லேவியர்களைக் குடியமர்த்தி மக்களிடையே ஒற்றுமை மனப்பான்மையும் நாட்டுப் பற்றுணர்வையும் வளர்த்தான்.
- உடன்படிக்கைப் பேழை எருசலேமுக்கு கொண்டு வரப்பட்டது.
- இவ்வாறாக புதியதொரு கலாசாரத்தை தாவீது தோற்றுவித்தார்.

**சாலமோன்**

- தாவீதிற்குப் பிறகு சாலமோன் ஆட்சிப் பொறுப்பை ஏற்கிறார். சாலமோன் தாவீதிற்கும் ஊரியாவின் மனைவி பெத்சபாவிற்கும் பிறந்த மகன்.
- தாவீதின் இறுதிக் காலத்தில் சாலமோன் மதக்கொள்கைகளுக்கு பிரமாணிக்கமாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார். தொடக்கத்தில் சாலமோன் யாவேக்கு பிரமாணிக்கமாக இருந்தாலும் பலநாட்டுப் பெண்களை மணம் முடித்ததால் பிரமாணிக்கத்திலிருந்து தவறினார்.
- சாலமோனின் ஆட்சியில் முழுமையான சமாதானம் நிலவாவிட்டாலும் பெரிய படை எடுப்பு முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. நாட்டை விரிவு படுத்துவதை நோக்கமாகக் கொள்ளாமல் நாடுகளுக்கிடையே நல்லுறவை நிலைநாட்டுவதை பிரதான பணியாகக் கொண்டார்.
- பலநாடுகளோடு திருமண உறவை ஏற்படுத்தியதன் மூலம் தன் நாட்டை விரிவுபடுத்தினான். சிறந்த ராஜ தந்திரியாகத் திகழ்ந்தான்.
- இஸ்ரயேலரின் பொற்காலமாக இவரது ஆட்சிக் காலம் காட்டப்படுகிறது.

**சாலமோன் காலத்து ஆட்சிச் சிறப்பு**

- உள்நாட்டுக் கொள்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து நீதி, நிர்வாகம் சிறப்பாக செயற்படவும், புதிய பதவிகளை ஏற்படுத்தி நாட்டை 12 மாவட்டங்களாக பிரித்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு ஆளுநரை ஏற்படுத்தினான். (1அர.4:7-19)
- படைப்பலத்தை அதிகரிப்பதிலும் புதிய ஆயுதங்களை பயன்படுத்துவதற்கும் பல புதிய படை இரதங்களைப் பயன்படுத்தி படைப்பலத்தின் மூலம் எதிரிகளின் ஊடுருவலையும் தவிர்த்தான்.
- சீரியா, அரேபியா போன்ற நாடுகளுடன் வாணிபத் தொடர்புகளை ஏற்படுத்தி தனது பொருளாதாரத்தை மேம்படுத்தி கட்டிடப் பணிகள் மூலம் பல புதிய நகரங்கள் உருவாக்கப்பட்டு மக்கள் குடியேற வசதிகள் செய்யப்பட்டன.
- இவ்வாறாக சிறந்த நிருவாகத்திறன் கொண்ட சாலமோன் தன் ஆட்சிக்கு குந்தகம் விளைவிக்க எண்ணியவர்களை முறியடித்து அமைதியை நிலை நாட்டியதுடன் சமூக, பொருளாதார, கலை, கலாச்சாரத்தில் முன்னேற்றமடைந்த ஒரு நாட்டை உருவாக்குவதில் முழுமுச்சுடன் உழைத்து வெற்றியும் கண்டார்.

### 6.2.3.4 அரசு பிரிதல்

- சாலமோன் அரசனின் மகன் ரெகபெயாமின் தவறான அரசியல் முறைகளினால் ஒருங்கிணைந்த பேரரசானா பாலஸ்தீன அரசு கி.மு. 922ல் வட அரசு தென்னரசாக பிரிவுற்றது. வட அரசு இஸ்ராயேல் என்றும் (10 கோத்திரங்களைக் கொண்டது) தென்னரசு (இரண்டு கோத்திரங்களைக் கொண்டது) யூதா என்றும் அழைக்கப்பட்டது.

வட அரசை ரெகபெயாமின் படைத்தளபதியான எரொபவாம், ஆட்சி செய்தான். வட நாட்டு மக்களை ரெகபெயாம் புறக்கணித்தான். அடுத்து வந்த 50 ஆண்டுகளில் முதலாம் தொடக்கம் முதலாம் எரொபவாம் ஒம்ரிவரைக்கும் வட அரசு, தென்னரசுக்கும் ஏற்பட்ட போரின் காரணமாக அரசியல் நிலையற்ற நிலை காணப்பட்டது.

**வட அரசு**

- சாலமோனின் மகன் ரெகபெயாமின் விவேகமற்ற தன்மையால் அதிருப்தி அடைந்த அவன் படைத்தளபதி எரோபவாம் வட அரசைத் தனியாகப் பிரித்து சமாரியாவை தலைநகராகக் கொண்டு கி.மு. 922முதல் 901வரை தனியாக ஆட்சி செய்தான்.
- அடுத்த 50 ஆண்டுகளில் நாதாப் பாஷா, ஏலா, சிம்ரி, ஒம்ரி, ஆகாப் ஆகிய அரசர்கள் வடநாட்டை ஆட்சி செய்தனர்.
- ஆகாப் இன் ஆட்சிக் காலத்திலேயே (கி.மு. 869 - 850) இறைவாக்கினர் எலியா பாகால் வழிபாட்டைக் கண்டித்து இஸ்ரயேல் மக்களுக்கு சரியான வழிபாட்டை மீண்டும் புகுத்தினார்.
- கி.மு. 830 - 807 வரை அகசியா அரசு ஆட்சியில் தொடர்ந்தும் எலியாவின் பணி இடம் பெற்றது. இறைவாக்கினர் எலியா, எலிசேயு, மீக்கா, ஆமோஸ், ஓசே போன்றவர்கள் வட அரசை சிறந்த நெறி வாழ்வுக்கு இட்டுச் சென்றனர்.
- கி.மு. 722ல் சமாரியா வீழ்ச்சியுற்றது வட அரசு அசீரியாவின் ஆட்சிக்குட்பட்டது.

**தென்னரசு**

- தென்னரசான யூதாவில் யூதா, பென்யமின் எனும் இரு குலங்கள் இருந்தன. தலைநகராக எருசலேம் விளங்கியது.
- ரெகபெயாம் கி.மு. 931 இதன் முதல் அரசனானான். 17ஆண்டு கால ஆட்சியின் பின் (922 - 915) ரெகபெயாமின் மகன் அபியா மூன்று ஆண்டு காலம் ஆட்சி செய்தான்.
- இத்தோ, அனானே, அசாரியாசு போன்ற இறைவாக்கினர்கள் இக்காலத்தில் ஆண்டவருக்குள் நேர்மையாய் நடந்து ஆண்டவரின் பார்வையில் தீயதெனப்பட்டதை விட்டு விட அறிவுறுத்தினார்.
- கி.மு. 873தொடக்கம் 849வரை யோசபாத் 25 ஆண்டுகள் சிறப்பாக மக்களை ஆட்சி செய்தான்.
- கி.மு. 796 அமட்சியா 15 ஆண்டுகள் ஆண்டவர் முன் நேர்மையாக ஆட்சி செய்தார்.
- அமாட்சியாவின் ஆட்சிக்குப் பின் அசாரியா (கி.மு. 781 - 715) ஊசியா, யோத்தாம், ஆக்காசு, எசேக்கியா ஆகியோர் யூதா நாட்டை ஆட்சிசெய்தனர்.
- இக்காலத்தில் மீக்கா, எசாயா போன்ற இறைவாக்கினர்களின் பணி யூதாவிற்கு தேவைப்பட்டது.
- கி.மு. 609ல் ஆண்ட யோவாகீமின் காலத்தில் பலிலோனிய மன்னன் யூதாமீது நெபுக்கத்னேசர் படை எடுத்து எருசலேமை முற்றுகையிட்டான்.
- யூதர்கள் பபிலோனுக்கு நாடுகடத்தப்பட்டனர்.
- இக்காலத்தில் 2ஆம் எசாயா, எரேமியா, எசேக்கியேல் பணியாற்றினர்.
- தாம் கூறிய இறைவாக்கு தம் காலத்திலேயே நிறைவேறியதை எரேமியா மூலம் காண்கின்றோம்.

### 6.2.3.5 நாடு கடத்தப்படல்

- பபிலோனியாவில் யூதர்கள் 70 ஆண்டுகளுக்குமேல் அடிமைகளாக இருந்தனர்.
- பாரசீக மன்னன் சைரசின் ஆட்சிக் காலம் வரை (கி.மு. 539 - 533) யூதர்கள் அடிமைகளாயிருந்தனர்.

- எருசலேம் கைப்பற்றப்பட்டு மதத்தலைவர்கள், குருக்கள் பல்வேறு துணைப் பணியாளர்கள் நாடு கடத்தப்பட்டனர்.
- தேவாலயத்தின் சொத்து சூறையாடப்பட்டது.
- யூதமக்களுக்கு பலிசெலுத்துவதற்கு ஆலயமின்றி தமது தனித்துவத்தை இழந்தவர்களாய் அடிமைகளாக்கப்பட்டனர்.
- இதனால் பபிலோனியருடைய வளமை, செழுமை பபிலோனியத் தெய்வங்களின் மாட்சி என்ற தவறான எண்ணத்தைக் கொண்டு அத் தெய்வங்களை வழிபட்டனர்.
- இச்சந்தர்ப்பத்தில் எரேமியா, எசேக்கியேல் போன்றோர் அவர்களது எண்ணத்தை மாற்றி நம்பிக்கையூட்டி புதிய மக்கள் குலமாக்கினர்.

### 6.2.3.6 நாடுகடத்தப்பட்ட பின்

- நாடுகடத்தப்பட்டபின் பபிலோனின் 70 ஆண்டுகளின் அடிமைக் காலத்தின் பின் (நாடுகடத்தப்பட்ட காலம்) பாரசீக மன்னன் சைரூஸ் தன் ஆட்சிகுட்பட்ட பபிலோனின் அசீரியாவிலிருந்த யூதர்களை எருசலேம் செல்ல அனுமதித்தான்.
- இதன்படி இளவரசன் சொராபாபே தலைமைக்குரு யோசியா தலைமையில் 40.000 பேர் திரும்பவும் யூதேயாதவுக்கு திரும்பினர்.
- விடுதலையடைந்த முதல் ஆண்டு முடிவுற்றபோது எருசலேமில் கோயிலுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. எருசலேம் நகர் கோயில் கட்டப்பட்டது.
- கலப்புத் திருமணம் செய்து கொண்ட யூதர்களை நாடு திரும்பிய யூதர்கள் சமாரியர் என அழைத்தனர்.
- பாரசீகரின் ஆட்சியின் போது யூதர்கள் ஏனைய அடிமைத்தனத்திலிருந்த நிலையிலிருந்து ஒரு மாறுபட்ட சுதந்திரத்தை அனுபவித்தனர். வழிபாடுகள், சமூகப் பழக்கவழக்கங்கள், மொழி என்பன பாரசீக அரசினால் மதிக்கப்பட்டன.
- ஐந்நூல்கள் அடங்கிய தோரா சமய வழிபாட்டிற்கு உதவியது.
- சமூக உரிமைகளையும் அரசின் பாதுகாப்போடு நியதிகளையும் பின்பற்ற முடிந்தது.
- யூதர்கள் பெற்றிருந்த இத்தகைய சலுகைகளால் சமாரியர் பொறாமைப்பட்டனர். எனவே இவர்களுக்கிடையில் பகைமை ஏற்பட்டு சமாரியர் தமக்கென ஒரு வழிபாட்டுத்தலத்தை கெரிசிம் மலையில் அமைத்தனர்.

### கி.மு. 333 - 363 வரை பாலஸ்தீன நாட்டில் கிரேக்க ஆட்சி

- பாலஸ்தீன நாட்டில் இசுஸ் என்ற இடத்தில் பாரசீக மன்னன் 3ஆம் தாரியுவை பேரரசர் மகா அலெக்சாண்டர் தோற்கடித்தார். எகிப்து முதலிலும், பின் ஏனைய யூதேயா சமாரியா போன்ற பகுதிகளும் கிரேக்கர்களுக்கு அடிபணிந்தனர்.
- ஆயினும் கிரேக்கர் யூதர்களின் நடைமுறை வழக்கத்தையும், சமய நம்பிக்கைகளையும் தொடர்ந்தும் பின்பற்ற அனுமதித்தனர். ஆனாலும் கிரேக்க கலாசாரமும் வாழ்க்கை முறையும் யூதர்களைப் பாதித்தது.
- பல நகரங்கள் கிரேக்க பெயருக்கு மாற்றப்பட்டன. கிரேக்க மொழி தெரியாதவர் காட்டு மிராண்டிகள் எனக் கருதி கிரேக்கக மொழியும் கிரேக்க மொழியுடன் கூடிய கலாசாரமும் பாலஸ்தீன யூதர்களின் சொந்த கலாசாரத் தனித்துவத்தைப் பாதித்தது.
- கட்டிடங்கள், கலைக்கூடங்கள், விளையாட்டுத் தலங்கள், குளியலறைகள் போன்றவை கிரேக்க முறையில் பாலஸ்தீனாவில் எழுந்தன.
- மேசை மீது சாய்ந்து உண்பது போன்ற கிரேக்க வழக்கத்தையும் யூதர்கள் கடைப்பிடித்தனர்.
- கிரேக்க மருத்துவத்தையும் யூதர்கள் விரும்பி ஏற்றனர்.
- கிரேக்கப் பண்பாட்டினால் யூதர்கள் எந்தளவுக்கு பாதிக்கப்பட்டனர் என்றால் கி.மு. 2ம் நூற்றாண்டில் சில யூதர்கள் தம்மை ஸ்பாட்டர்களின் உறவினர் என்றும் கூறிக்

கொண்டனர்.

- மகா அலெக்சாண்டரின் மரணத்தின் பின் ஏற்பட்ட பல அரசியல் போராட்டங்களும் குழப்பங்களும் எகிப்திய தளபதி தாலமி, கி.மு. 315இல் எருசலேமைக் கைப்பற்ற வழிவகுத்தது.
- தாலமியின் வழி வந்தவர்களே பேரரசை ஆண்டனர். பாரசீக மன்னனும் கிரேக்க மன்னனும் பின்பற்றிய கொள்கைகளையே தாலமியும் பின்பற்றினர்.
- பாலஸ்தீனாவின் அரசியல் மற்றும் சமய அதிகாரம் முழுவதும் அங்கிருந்த தலைமைக் குருக்களிடமும் பெரியோரிடம் ஒப்படைக்கப்பட்டது. இவர்கள் ஒன்றுசேர்ந்து தலைமைச் சங்கம் என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தி யூதமக்களின் அரசியல், சமய, சமுதாய வாழ்க்கை முறைக்கு சில ஒழுங்கு விதிகளை (மிஸ்னா) அமைத்துக் கொடுத்தனர்.
- கி.மு. 200இல் தாலமியிடமிருந்து சீரிய மன்னன் 3ஆம் அந்தியோக்கு பாலஸ்தீனாவைக் கைப்பற்றினான்.
- பாலஸ்தீனாவில் கிரேக்கப் பண்பாடு தலைதூக்கியது.
- இவன் யூதர்களுக்கு பல சலுகைகள் செய்தான். ஆயினும் யூதரிடையே இருபிரிவினர் தோன்றி (கிரேக்க யூதர் - யூதர்) என்ற தன்மை ஏற்பட்டனர். நாளடைவில் எபிரேய பிரிவினரின் வெறுப்பு அதிகமாகி கிரேக்கர்களுக்கு எதிரான போராட்டம் எழுந்தது.

**மக்கபேயர் ஆட்சி - யூதப் புரட்சி (கி.மு. 175 - 135)**

- மக்கபேயர் என்பது ‘‘அவரது கையினால் இஸ்ராயேலுக்கு மீட்பு உண்டாகப் போகிறது’’ என்பது பொருளாகும்.
- மக்கபேயருடைய புரட்சியின் போது யூதா மக்கபேயு இதுமேயாவை வென்று அங்கிருச்தவர்களை யூத சட்டங்களை அனுசரிக்கக் கட்டாயப்படுத்தினான்.
- இதிலிருந்து பிறமதத்தவரான ஏரோதின் குடும்பம் உருவானது. இவருடைய காலத்தில்தான் பரிசேயர், சதுசேயர் என்ற சமய குழுவினர் பாலஸ்தீனாவில் உருவாகினர்.
- ஆலய வழிபாட்டை மீண்டும் முறையாகக் கொண்டு வருவதையே மக்கபேயர் முதன்மை நோக்கமாகக் கொண்டிருந்தனர். இந்நோக்கத்தை யோனாத்தான், அவருடைய சகோதரர் சீமோன் என்பவர் பெரிய குருவாகவும், போர்த் தலைவராகவும், யூதர்களின் இளவரசனாகவும் இருந்து நிறைவேற்றினான்.
- கி.மு. 103 - 76 வரை ஆஸ்மோனியர் வம்சத்தில் அலெக்சான்டர் ஜோன்னெயு பல உள்நாட்டு வெளிநாட்டுப் போர்களை மேற்கொண்டு. அரசன் என்ற பட்டத்தை தமக்குரியதாகப் பிரகடனப்படுத்திக் கொண்டான்.
- அலெக்சாண்டரைத் தொடர்ந்து ஆஸ்மோனியரின் ஆட்சி இடம் பெறுகிறது.
- இக்காலத்தில் யோவான், கிர்சான், அரசி அலெக்சாந்திரா ஆகியோர் யூதர்களை ஆட்சி செய்தனர். அரசி அலெக்சாந்திரா பரிசேயர்களை ஆதரித்து சமாதானம் செய்து கொண்டார். இவர்களின் ஆட்சியை பரிசேயர்களின் பொற்காலம் என அழைப்போம்.
- அலெச்சாந்திராவைத் தொடர்ந்து 2ஆம் அரிஸ்தோபுல் கி.மு. 67-63வரை பலஸ்தீனாவை ஆட்சி செய்தான். ஆனால் கி.மு. 63இல் உரோமைத் தளபதி பொம்பே பாலஸ்தீனாவில் நுழைந்து எருசலேமை முற்றுகையிட்டான். எருசலேம் நகரம் உரோமையரின் ஆட்சிக் குட்படுத்தப்பட்டது.
- யூத எல்லை சிறிதாக்கப்பட்டது. தன்னை ஆதரித்த கிர்கானை தலைமைக்குருவாக நியமித்தான். பாலஸ்தீனாவின் ஒரு சில பகுதிகளை கிர்கானுக்கு அளித்தான். ஆனால் அரசபதவியை அளிக்கவில்லை. அரசியல் விடுதலையை எதிர்பார்த்திருந்த யூதர்கள் உரோமையரின் ஆதிக்கத்தின் கீழ் வாழ்ந்தனர். பொம்பே முதல் இயேசுவின் காலம் முழுவதும் உரோமையரின் ஆட்சியின் கீழேயே மக்கள் வாழ்ந்தனர்.

**பலஸ்தீனாவில் உரோமையின் ஆட்சி : (கி.மு. 63 - கி.பி. 70)**

- கி.மு. 63 முதல் பாலஸ்தீனத்தை பொம்பே (உரோமைப் பேரரசு) முதலில் கைப்பற்றினார். அன்று தொடக்கம் உரோமையின் ஆட்சி உறுதியாக நிலைபெற்றுவிட்டது. ஆஸ்மோனியரின் ஆட்சி அழிக்கப்பட்டது. பொம்பே பாலஸ்தீனாவைக் கைப்பற்றியது முதல் கி.பி. 70வரைக்கும் மூன்றாகப் பிரித்துப்பார்க்கலாம்.
  1. இயேசுவின் காலத்திற்கு முன் (கி.மு. 63-04)
  2. இயேசுவின் காலத்தில் (கி.மு. 4 - கி.பி. 30)
  3. இயேசுவின் காலத்திற்குப் பின் (கி.பி. 30 - கி.பி. 70)

**உத்தேச கற்பித்தல் செயற்பாடு**

1. கிறிஸ்தவ நாகரிகத்தின் வளர்ச்சி பற்றியும் அதற்கு அடிப்படையாக அமைந்த ஏனைய நாகரிகங்கள் பற்றியும் ஆராய்வர்.
2. கிறிஸ்தவ நாகரிகத்தின் புவியியல் சார் பின்னணியை படம் மூலம் குறித்துக் காட்டுவர்.
3. செழும்பிறை நாடு பற்றியும் கிறிஸ்தவ நாகரிகத்தில் அதன் முக்கியத்துவம் பற்றியும் விபரிப்பர்.
4. நாடுகடத்தப்பட்ட காலத்தின் பின் மக்கள் கொண்டிருந்த வாழ்க்கை முறை பற்றியும் அவர்களது நாகரிக பண்பாடுகள் பற்றியும் கலந்துரையாடுவர்.

**உசாத்துணை நூல்கள்**


- அ. பீட்டர் அபீர், ஆ. அலோசியஸ் சேவியர், விவிலியம் ஓர் அறிமுகம் அருள்வாக்கு மன்றம், திருச்சி - 2005
- தியாகு - விவிலியக் களஞ்சியம் III - விவிலிய அறிமுகம், தியான ஆச்சிரமம், சென்னை - 1993

**தேர்ச்சி 6.0 :** கிறிஸ்தவ நாகரிகம் ஒன்றினைக் கட்டி எழுப்ப அடிப்படையாக அமையும் நாகரிகங்களை உய்த்துணர்ந்து நல்ல வாழ்வு வாழப் பின்னணியை அமைத்துக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 6.3 :** கிறிஸ்தவ மறை உருவாகிய சமூகத்தின் பின்னணியை ஆராய்வர்.

**பாடவேளைகள் :** 16

**கற்றல் பேறுகள் :**
- பாலஸ்தீன நாட்டின் அரசியல் பின்னணியையும் சமயப் பின்னணியையும் கிறிஸ்தவ மறை உருவாகுவதற்கு ஆதாரமாக இருந்த நிர்வாக முறையையும் தேடி அறிவர்.
- கிறிஸ்துவின் கால யூத சமுதாயத்தின் சமூக, அரசியல், கலாசார மரபு முறைகளையும், சமுதாயப் பிரிவுகளையும், யூத மதப் பழக்கவழக்கங்களையும் தெரிந்து கொள்வர்.

## விடய உள்ளடக்க வழிகாட்டி :

### 6.3.1 பாலஸ்தீன அரசியல் சமூகப் பின்னணி

#### 6.3.1.1 உரோமய நிர்வாக முறை
- கி.மு 63இல் பொம்பேயின் வருகையுடன் பாலஸ்தீனாவில் உரோமயரின் ஆட்சி தொடங்கியது. கி. மு. 63 தொடக்கம் கி.மு. 37க்குள் பாலஸ்தீனாவின் முழுப்பகுதியும் உரேமையரின் ஆட்சியில் உறுதிப் பெற்று ஆஸ்மோனியர்களின் ஆட்சி அழிக்கப்பட்டது.
- உரோமயர்களின் நிர்வாக முறைமை பற்றி ஆராயும்போது அதனை மூன்று காலங்களாகப் பிரித்து பார்ப்பது நன்று.
  1. இயேசுவின் காலத்திற்கு முன் கி.மு. 63 - கி.மு 4 வரை
  2. இயேசுவின் காலம் கி.மு 4 - கி.பி 30 வரை
  3. இயேசுவின் காலத்தின் பின் கி.பி 30 - கி.பி 70 வரை
- கி.மு 63இல் பொம்பே பாலஸ்தீனாவைக் கைப்பற்றுவதற்கு முன்னர் மிகச் சிறிய நாடாகவே உரோமை நகர் இருந்தது. ஆனால் வாணிக வளர்ச்சியால் பெனுக்கியர், எத்ரூஸ்கர் மற்றும் கிரேக்கர்களால் உருவாக்கப்பட்ட கிழக்கத்திய கலாசாரம் முதன்மையான கலாசாரமாக உருவாகி வளர்ச்சி அடைந்தது.
- கி.மு 509இல் எத்ரூஸ்கர் மன்னர் முதன் முதல் முறியடிக்கப்பட்டு படிப்படியாக உரோமை நகரம் தோற்றம் பெற்று தைபர் நதி தொடக்கம் மேற்கு சின்ன ஆசியா, மத்திய தரைக்கடல் சமவெளி முழுவதையும் வென்று கி.மு 60ஐ ஒட்டி சிரியா மற்றும் பாலஸ்தீன் பகுதிகளையும் உள்ளடக்கி பெரும் பேரரசாக மாறியது.
- உரோமைப் பேரரசு ‘‘ ரோமூலஸ்’’ என்பவராலேயே அடித்தளம் இடப்பட்டது. உரோமைப் பேரரசின் ஆட்சிப்பேரவை (SENATE) என்று அழைக்கப்பட்டது
- இலத்தின் இவர்களது ஆட்சி மொழியாகும். பெரும்பாலான மக்கள் விவசாயத்தையே தொழிலாகக் கொள்கின்றனர். இவர்கள் இத்தாலிய மக்கள் குழுவினராகவும், இந்தோ ஐரோப்பிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவும் கருதப்படுகின்றனர்.
- உரோமயர்கள் தாம் கைப்பற்றிய பகுதிகளை 72 நாடுகளாகவும் 40 மாநிலங்களாகவும் பிரித்து ஒவ்வொரு மாநிலங்களையும் கண்காணிக்க அரச பிரதிநிதிகளாக ‘‘ஆளுனர்களை’’ நியமித்தனர்.
- மாநிலங்களுக்குரிய ஆளுனர்கள் அந்தந்த நாட்டில் ஏற்கனவே இருந்த அரசர்களை தமக்கு கீழ் அடிமைப்படுத்தி சிற்றரசர்களாக்கி அந்நாட்டின் மீது வரி வசூலித்து

தமது அரசுக்குரிய பண வருவாயைப் பெற்றுக் கொண்டனர்.

- மதக் கடமைகளைப் பொறுத்த வரைக்கும் உரோமை மன்னரே கடவுளாகப் போற்றப்படல் வேண்டும் என சட்டம் இருந்தாலும் பழைமை வாய்ந்த மதங்களான யூத மதத்தைக் கடைப்பிடிக்க அனுமதிக்கப்படடிருந்தது.
- ஏனைய நாடுகளுடன் நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டு வாணிகத் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு கிரேக்க மொழி கலைகள் பண்பாடுகள் நாகரீகத்தையும் ஏற்று அங்கிகாரம் கொடுத்து வைத்திருந்தமையும் சிறப்பாகும்.
- உரோமை சமுக அமைப்பில் இரு பெரும் பிரிவுகளைக் கொண்டிருந்தனர். அவை :
  1. ‘‘பற்றீசியன்’’ இவர்கள் பணக்காரவர்க்கத்தினராகவும் நிலச் சுவாந்தர்களாகவும் ஆட்சியில் கூடிய பங்கு வகிப்பவர்களாகவும் இருத்தனர் இவர்கள் பத்து வீதத்தினராகவே காணப்பட்டனர்.
  2. ‘‘ ப்ளெபியன்ஸ்’’ (Phlebians) என்னும் குழுவினர் ஆவார். இவர்கள் சிறு விவசாயிகள், வர்த்தகர்கள் சிறுகைத்தொழிலாளர், சிறு நிலத்தை உரிமையாகக் கொண்டவர்களாவர். மொத்த சனத்தொகையில் 90வீதத்தினர் இவர்களே.
- உரோமையர்கள் சட்டங்கள் மட்டில் மதிப்பு வைத்திருந்தனர். நீதித் துறையிலும், படை நடவடிக்கைகளிலும் கூடிய அக்கறை எடுத்துக் கொள்வர்.

### 6.3.1.2 ஏரோதின் ஆட்சி முறை

- கி.மு 49இல் ஜூலியஸ் சீசர் என்பவன் ரூபிபோன் என்ற இடத்தை கடந்து சென்றபோது அவனை முறியடிக்க பொம்பே கீழ்த்திசை நோக்கி செல்ல வேண்டி இருந்தது.
- இந்தச் சூழ் நிலையைப் பயன்படுத்தி தலைமைக்குரு 2ஆம் ஹிர்கானுசீம் இதுமேயாவைச் சேர்ந்த 2ஆம் அந்திப்பர் என்பவரும் பொம்பேயின் நல்லெண்ணத்தைப் பெற பொம்பேயை ஆதரித்தனர்.
- ஆனால் கி.மு. 48இல் ஜூலியஸ்சீசர் பொம்பேயை தோற்கடித்ததால் ஹிர்கானூஸ் அந்திபரின் தலைமையில் ஒரு படையை சீசருக்கு ஆதாரவாக பார்சால் என்னும் இடத்திற்கு அனுப்பினான்.
- இதனால் கி.மு. 47இல் ஜூலியசீசர் சிரியாவுக்கு வந்தபோது ஹிர்கானுவை ‘‘ஆளுனன்’’ ஆகவும், யூதேயாவின் உரோமைப் பிரதியாக அந்திபரையும் நியமித்தான்.
- அந்திப்பரின் இரு மகன்களில் ஒருவனை ஜெருசலேமுக்கும், ஏரோதை கலிலேயாவிற்கும் ஆளுநர்களாக சீசர் நியமித்தான்.
- கி.மு. 44இல் சீசர் கொலை செய்யப்பட்டு இறந்த பின்னர் ஹர்கானின் உதவியாட்கள் அந்திபரையும் நஞ்சூட்டிக்கொலை செய்தனர். பின்னர் அந்திப்பரின் மகன் ஏரோதனுக்கு ஹிர்கானுஸ் தனது பேத்தி மரியாம் என்பவளைத் திருமணம் செய்து வைத்து உறவைப் பலப்படுத்தினான்.
- இவ்வேளையில் ‘‘மார்க் அந்தோனி’’ ‘‘அக்டேவியன்’’ என்பவர்களால் காசியுஸ்’’ தோற்கடிக்கப்பட உரோமையர் ஆட்சி சிரியாவில் பலவீனமுற்று ஏரோதனது செல்வாக்கு உயர்ந்தது.
- ஏரோதன் இதுமேயனாய் இருந்தமையால் கிரேக்கத் தாக்கம் அவனில் அதிகம் காணப்பட்டது. அவனது கலாசாரமும், சமய நம்பிக்கையும் யூதர்களைவிட கிரேக்க காலசாரத்தையே பிரதிபலித்தது.
- ஏரோதனைப் பெரிய ஏரோது என்றும் அழைப்பார்கள். தனது சூழ்ச்சியாலும், வஞ்சகத்தாலும் உரோமைப் பேரரசிடமிருந்து சிறிது சிறிதாக பாலஸ்தீனாவைக் கைப்பற்றி தனது ஆட்சிக்குகீழ் கொண்டு வந்தான். பெயருக்கு உரோமையின் கீழ் இருப்பதாகக் காட்டிக் கொண்டாலும் தானே ஒரு சர்வாதிகாரியாகவே நடந்து கொண்டான்.

- யூதர்களின் நல்லெண்ணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ஜெருசலேம் கோவிலை மீண்டும் புதுப்பித்துக் கட்டினான்.
- பெரிய ஏரோதன் பல மனைவியர்களைக் கொண்டிருந்தான். இவனது இறப்பு கி.மு. 4ஆம் ஆண்டில் எரிக்கோவில் நடந்ததாகக் கருதப்படுகின்றது.
- இவனது இறப்பிற்கு பின்னர் இவனது ஆட்சி இவனது மூன்று மக்களுக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டது.
- ஏரோதின் கி.மு 37 முதல் 25 வரைக்குமான கால கட்டத்திலேயே பாலஸ்தீனாவின் ஆட்சியை நிலை நாட்டினான். இவனது ஆட்சியில் இவனுக்கு எதிராக இருந்தவர்களைத் திட்டமிட்டு அழித்தான். சிலவேலைகளில் அவன் தனது மனைவியரையும் கொலை செய்தான்
- கி.மு 25 - 13 வரைக்குமான காலப்பகுதியில் பாலஸ்தீனாவை வளப்படுத்தினான். நாட்டின் எல்லையை விஸ்தீரப்படுத்தினான். வரிகளைக் குறைத்தான். உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் நன்கொடைகள் மூலம் பல கட்டடங்கள் கட்டப் பணம் கொடுத்தான். ஜெருசலேம் ஆலயம், சமாரியாவின் தலை நகரான செசாரியாவில் உரோமைத் தேவதைக்கும் ஆலயம் எழுப்பினான்.
- பல்கலைக்கழகங்கள், உடற்பயிற்சிக் கூடங்கள், நீச்சல்குளம், புதிய நகரங்கள், அரச மாளிகைகள், தோட்டங்கள், பழமரங்கள், ‘‘அந்தோனியா’’ எனும் படையரண் போன்ற கட்டடங்களைக் கட்டி நகர எழுச்சியையும் உருவாக்கினான்.
- பேரரசர் வழிப்பாட்டை யூதரிடையே திணித்து யூதர்களின் வெறுப்பையும் எதிர்ப்பையும் பெற்றுக்கொண்டனர்.
- இவனது ஆட்சியில் யூத கலாசாரத்தை விட கிரேக்க கலாசாரத்திற்கே அதிகம் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.
- தலைமைக் குழுக்களையும் தமது விருப்பம் போலவே நியமித்தான். விரும்பாதவர்களை நீக்கவும் செய்தான்.
- இவனது காலத்தில் கிரேக்க அறிவியல், தத்துவ, வரலாற்று அறிஞர்களுக்கு சிறப்பிடம் கொடுத்தான்.
- மொத்தத்தில் யூத அரசானாக அன்றி யூதர்களுக்கு அரசனாக இருந்தான்.

## 6.3.1.3 தலமைக்குருக்களும் பொதுச்சங்கமும்

### தலமைக்குருக்கள்

- இஸ்ரயேலின் பன்னிரு கோத்திரங்களில் ‘லேவியர்’ கோத்திரத்தார் மட்டுமே குருத்துவப்பணிக்குத் தெரியப்பட்டனர். ஆனால் எல்லா லேவியர்களும் குருக்கள் ஆக முடியாது.
- லேவியர் குடும்பத்தில் ‘‘ஆரோன்’’ குடும்பத்தவர் மட்டுமே குருக்களாகி கோயிலில் பணிபுரியும் உரிமையைப் பெற்றனர். நாளடைவில் ஆரோன் குடும்பத்தில் ‘‘சாதோக்’’ வம்சத்தவர் மட்டுமே குருத்துவப் பணியில் முக்கியத்துவம் பெற்றனர்.
- இஸ்ரயேலின் முடியரசு காலத்தில், சிறப்பாக தாவீது அரசனின் காலத்தில் தான், ‘‘சாதோக்’’ என்பவர் குருத்துவப் பணிக்குத் தெரிவு செய்யப்பட்டு ஜெருசலேமில் பலி நிறைவேற்றப்பட்டது.
- மன்னன் சாலமோனின் காலத்தில் சாதோக் தலைமைக் குருவாக நியமிக்கப்படுகின்றார். அதுமுதல் சாதோக்கின் குடும்பத்தினர் குருத்துவப்பணியில் மிக முக்கியமான இடத்தைப் பெற்றனர். இவர்களே ‘‘சதுசேயர்’’ என்று அழைக்கப்பட்டனர்.
- பபிலோனிய அடிமைத்தனம் வரை சாதோக்கின் வழி மரபினர் வழி வழியாக குருத்துவப்பணி செய்து வந்த போதிலும் பபிலோனிய அடிமைத்தனத்திற்குப் பின்னர் சாதோக்கின் வழிமரபினர் என்று எண்பித்தவர்கள் மட்டுமே குருக்களாக நியமிக்கப்பட்டனர்.

- இஸ்ரயலருக்கு சமயத்தில் குருக்களுக்கு முதல்வரையே தலைமைக் குரு என்று அழைத்தனர். இஸ்ரயேல் அரசரும், தலைமைக்குருக்களும் சமுதாய நிர்வாகத்தில் இணைந்து செயற்படுவதால் இரு நிலையில் உள்ளவர்களும் சம அந்தஸ்தில் வைத்துப் போற்றப்பட்டனர். ஏனெனில் அரசரும் குருக்களும் அபிசேகம் செய்யப்பட்டிருந்தனர்.
- நாளடைவில் அரசியல் தலைவர்களின் செல்வாக்கு மறைந்து போனதும் தலைமைக் குருக்களின் செல்வாக்கு அரசியலிலும், சமயத்திலும் மேலோங்கி நிற்கத் தொடங்கியது.
- கி.மு. 2ஆம் நூற்றாண்டில் குருக்கள், மறைவல்லுனர்கள், குடும்பத் தலைவர்கள் ஆகியோர் அடங்கிய கூட்டத்திற்கு தலைமைக்குருவே தலைமை தாங்கினார்.
- தலைமைக் குரு என்ற பதவி வாழையடி வாழையாக தொடர்ந்து வருகின்றது. தலைமைக் குருவாக அர்ப்பணம் செய்யப்பட்ட ஒருவர் தமது வாழ்நாள் முழுவதும் அப்பணியில் நிலைத்து நிற்க வேண்டும்.
- இயேசுவின் காலத்தில் ஒரு தலைமைக்குருவே நியமிக்கப்பட்டிருந்தாலும் ஓய்வு பெற்ற வலைமைக் குருவுக்கும் அதிகாரம் இருந்து வந்தது. (அன்னா குடும்பம் தலைமைக்குருக்கள்).
- உரோமையரின் ஆட்சி யூதர்களிடையே பரவிய காலத்தில் யூத மக்களின் வாழ்வில் தலைமைக் குருக்கள் பெற்றிருந்த செல்வாக்கைக் கண்டு கொண்டதனால் தமக்கு வேண்டப்பட்டவர்களையே தலைமைக் குருக்களாக நியமித்தனர்.
- சமுதாயத்தில் மேல் மட்டத்தில் இருந்தவர்கள் சதுசேயர்களான தலைமைக்குருக்களே. பணக்கார வியாபாரிகளாகவும், நிலச்சுவாந்தர்களாகவும், நாட்டின் முக்கிய பொறுப்புக்களில் இருந்து வந்த காரணத்தால் இவர்கள் செல்வந்தர்களாக இருந்தனர். பணத்தால் எதையும் சாதிக்கத் துணிந்தனர்.

## பொதுச் சங்கம்

- யூதர்களின் மதச் சடங்குத் தூய்மையையும், சட்ட ஒழுங்குகள், நியமங்களையும், முறையாக கடைப்பிடித்து ஒழுக வேண்டும் என வலியுறுத்தி நிற்பது பொதுச் சங்கம் ஆகும்.
- இப் பொதுச்சங்கம் ‘தலைமைச் சங்கம்’ என்றும் ‘செனத்திரின் சங்கம்’ என்றும் அழைக்கப்பட்டது.
- இதில் 71பேர் அங்கத்தவம் வகித்தனர். தலைமைக்குருவே இச்சங்கத்தின் தலைவராக இருப்பார்.
- தலைமைக் குருக்களாய் இருப்பவர்களும், அதாவது சதுசேயரும் பரிசேயரும், மக்கள் தலைவர்களும் மூப்பர்களும், மறைநூல் அறிஞர்களும், சட்ட வல்லுனர்களும், தலைமைக் குருவின் குடும்பத்தினராகவும் மொத்தம் 71 பேர் இதில் அடங்குவர்.
- புதிய ஏற்பாட்டு காலத்தில் இச் சங்கத்தில் மூன்று வகை உறுப்பினர்கள் இருந்தனர். முதல் வகையினர் பெரிய குருக்களாவர், அதாவது முன்னாள் பெரிய குருக்களும், குருக்களுடைய குடும்பத் தலைவர்களுமாவர். இரண்டாம் வகையினர், மூப்பர்கள் அல்லது பெரியோர்கள்; இவர்கள் யூதகோத்திரங்களின் தலைவரும், குருக்கள் அல்லாத பிரபுக்களின் குடும்பத் தலைவர்களும், மறைநூல் அறிஞர்களுமாவர்.
- இவ் இரு பிரிவினரும் சதுசேயர்கள் ஆவர்.
- மூன்றாம் வகையினர் பரிசேயரைச் சேர்ந்தவர்கள். மக்களோடு நெருங்கிய தொடர்புடையவர்கள். இப் பரிசேயக் குழுவினர் கி.மு 76 - 67 இல் அரசி அலெக்சாந்திரா காலத்திலேயே சனத்திரின் சங்கத்தில் இடம் பெற்றனர்
- இச்சங்கம் தனக்கென ஒரு காவலர் படையையும் கொண்டிருந்தது. இக் காவல் படையினருக்கு பிறரைக் கைது செய்து சங்கத்திடம் ஒப்படைக்க அனுமதி இருந்தது.
- மரண தண்டனைத் தீர்ப்பு அளிக்க அதிகாரம் இருந்தாலும் அதனை நிறைவேற்ற ஆளுநரின் உத்தரவு பெற்றிருத்தல் வேண்டும்.
- யூதேயா நாட்டிற்குள் மட்டுமே இச்சங்கம் அதிகாரம் செலுத்தலாம். யூதேயாவுக்கு

வெளியில் இச் சங்கத்தின் ஆதிக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக ஆதாரம் இல்லை.

- சிதறிக் கிடந்த யூத சமூகங்களிலும் இத்தன்மையான சிறிய சங்கங்கள் காணப்பட்டன. இவர்களும் ஜெருசலேம் சங்க நடைமுறைகளையே பின்பற்றினர்.
- இச்சங்கம் இயேசுக் கிறிஸ்துவையும் விசாரனை செய்து தீர்ப்பு வழங்கியது. மற்றும் பேதுருவையும் யோவானையும் விசாரித்து இயேசுவைப் பற்றிய நற்செய்தியை அறிவிக்க கூடாது என்று தடை விதித்தது. பவுலடிகளாரையும் கைது செய்து சங்கத்தில் நிறுத்தினர்.
- உரோமையரால் எருசலேம் அழிக்கப்பட்டு யூதர்கள் சிதறுண்டு போனதோடு இச்சங்கமும் அழிந்து போனது
- இச் சங்கத்தின் விதிமுறைகள் யூதர்களின் சடங்கு, சட்டம், விதி முறைகள் அடங்கிய 'மிஸ்னா' என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**'மிஸ்னா' என்னும் நூலில் உள்ளபடி இத்தலைமைச் சங்கமானது**

1. எருசலேமில் அதற்கென அமைக்கப்பட்ட மண்டபத்திலேயே கூட்டப்படவேண்டும்.
2. திருவிழாக் காலங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் பகல் வேளையிலே கூட்டப்பட வேண்டும்.
3. ஒரு யூதன் தன் மதத்திற்கு எதிராக குற்றம் இழைத்தால் அவனுக்கு நீதித் தீர்ப்பு வழங்குவதற்காக இச்சங்கம் கூட்டப்படலாம்.
4. குற்றவாளியாக கருதப்பட்ட நபருக்கு எதிராக இரண்டு சாட்சியங்கள் தனித்தனியே விசாரணை செய்யப்படல் வேண்டும்.
5. அவ்வாறு விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் இரண்டும் ஒரே மாதிரி இருத்தல் வேண்டும்.
6. குற்றம் சாட்டப்பட்டவரின் வாய்மூலத்தை வைத்துக் கொண்டு அவருக்கு தீர்ப்பு வழங்கமுடியாது.
7. குற்றவாளிகள் முறையாக விசாரிக்கப்பட்டு விடுதலைத் தீர்ப்பாயின் அன்றைய நாளிலும் மரண தண்டனையாயின் இரு நாட்களுக்கு பின்னருமே நிறைவேற்றப்படல் வேண்டும்.
8. அத்துடன் தலைமைச் சங்கத்தினரின் தீர்ப்பு மதம் சார்ந்த குற்றங்களுக்கு மட்டுமே இருத்தல் வேண்டும்.
9. பொதுவாக தண்டம் விதித்தல், கசையடி கொடுத்தல் ஆலயத்திற்கும் யூதசமூகத்திற்கும் புறம்பாக ஆக்குதல் போன்ற தண்டனைகளே வழங்கப்படவேண்டும்.

- இத்தகைய பின்னணியிலேயே இயேசுக் கிறிஸ்துவின் தீர்ப்பும் இடம் பெற்றது.

## 6.3.2 கிறிஸ்துவின் கால யூத சமுதாயத்தின் சமூக, அரசியல், கலாசாரமும், மத மரபு முறைகளும்

### 6.3.2.1 யூத சமுதாய முறைகளும் சமுதாயப் பிரிவுகளும்

#### 6.3.2.1.1 சமுதாய முறைகள் :

- கிறிஸ்து இயேசுவின் காலத்தில் பல்வேறுபட்ட கலாச்சாரத் தாக்கங்களுக்குட்பட்ட நாடாகவே பாலஸ்தீனா கருதப்பட்டது.
- இத்தகைய நிலையில் குடும்பத்தில் பிள்ளைகள் அனைவரும் தந்தைக்கு அனைத்து விடயங்களிலும் மரியாதை கொடுக்கவேண்டும்.
- தனது நிலத்தில் மிக நல்ல விதைகள் விதைக்கப்பட வேண்டும் என்பதில் உரிமை, திருடர்களிடமிருந்து தன் உடைமைகளைக் காக்கும் உரிமை, ஊழியர்களுக்கு அவர்களுக்குரிய பணிகளைப் பகிர்ந்தளித்து, அதற்குரிய ஊதியத்தை அளிக்கும்

உரிமை அனைத்தையும் தந்தையே செய்து வந்தார்.

- குடும்பத்தில் ஆண் குழந்தை பிறப்பதை அனைவரும் விரும்புவர். குழந்தை பிறந்தவுடன் அதனைக் குளிப்பாட்டி உப்புக் கொண்டு துடைத்து விடுவர்.
- இரட்டைக் குழந்தை பிறந்தால் எந்தக் குழந்தை முதலில் வெளி வந்தது என உன்னிப்பாகக் கவனிப்பார்.
- பொதுவாக குழந்தைகளுக்குத் தாய்ப்பாலூட்டுவது தாய்க்குரிய கடமையாகக் கருதப்பட்டது.
- விருத்தசேதனம் செய்யப்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. பிறந்த எட்டாம் நாள் அல்லது பிறந்து நாற்பது நாட்களுக்குள் இது நிறைவேற்றப்பட வேண்டும்.

**மண ஒப்பந்தம்**

- திருமணத்திற்கு முன் மண ஒப்பந்தம் நடைபெறும். இதனை ''ஆரால்'' என்று அழைப்பர். இயேசுவின் காலத்தில் ஓர் அடிமையை உரிமையக்கிக்கொள்வது போன்றே ஒரு பெண்ணை மனைவியாக்கிக் கொள்ளுதலையும் கருதினர்.
- திருமணச்சடங்கு பெண்வீட்டிலிந்து ஊர்வலமாக மணமகன் வீட்டிற்கு அழைத்து வந்து அங்கு நடைபெறும் திருமணச் சடங்கில் ஒப்பந்தச் சொற்களாக ''இன்று முதல் என்றும் இவள் மனைவி; நான் இவளது கணவன்'' என்று கணவன் அறிக்கையிடுவான். மனைவி எதுவும் கூறுவதில்லை.
- வரும் விருந்தினர்களுக்கு திருமண உடை அளிக்கப்படும்.
- திருமணம் முடித்ததும் தனிக்குடித்தனம் அமர்த்தப்படுவார்.
- ஒரு ஆண் தன் மனைவியை மணவிலக்கின் மூலம் பிரித்து விட உரிமை இருந்தது. ஆனால் பெண் தனது கணவனிடம் இருந்து தாமாக விலகி வாழ முடியாது.
- திருமணமான பெண்ணுடன் அல்லது மண ஒப்பந்தமான பெண்ணுடன் ஒருவன் விபசாரம் செய்தால் இருவருக்கும் மரண தண்டன வழங்கப்படவேண்டும்.
- சமூக உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டினர். இதற்காக அடிக்கடி விருந்தாடி மகிழ்ந்தனர்.
- தலைமுடியை வளர்த்துக்கொள்வது சமுதாய உயர் நிலையாகக் கருதப்பட்டது. இயேசுவும் நீண்ட தலைமுடியை வளர்ந்திருந்தார்.

**வீடு**

- இயேசுவின் காலத்தில் நகர்கள் என்று குறிப்பிடப்பட்டவை யாவும் இன்று கிராமக் குடியிருப்புத் தன்மையையே கொண்டிருக்கின்றன.
- இக்கிராமங்களில் வீடுகள் திட்டமிட்டுக் கட்டப்பட்டிருக்கவில்லை. தெருக்கள், வீதிகள் கூச்சலும் குழப்பமும் நிறைந்ததாகவே இருக்கும்.
- வீடுகளில் மற்றவர்களைக் கவரக்கூடிய கட்டடக்கலை நுணுக்கங்கள் எதுவும் இருக்காது. மண்ணால் எழுப்பப்பட்ட சுவரின்மேல் லேசான கூரையினை வேய்ந்து சிறு மரக் கொப்புக்களை பரப்பி அதன் மீது சேற்றினைப் பூசுவார்கள்.
- செல்வந்தரின் வீடுகள் சுடப்பட்ட கற்களால் கட்டப்படும்.
- வீட்டிற்கு ஒளி கொடுக்க விளக்குகள் இருக்கும். சில வீடுக்களில் ''விளக்குத் தண்டு'' இருக்கும். ஏழைகளின் வீடுகளில் மரக்காலின் மேல் விளக்குகளை ஏற்றி வைத்திருப்பர்.
- உரொட்டியும், ஒலிவ எண்ணெயும், உணவாக உட்கொள்ளப்பட்டது. செல்வந்தர்கள் இறைச்சி, வெண்ணெய், தயிர் போன்றவைகளுடன் திராட்சை இரசமும் உட்கொள்வர்.
- உண்ணும்போது யாவரும் அமர்ந்து உண்ணவேண்டும்.
- தரையில் நேராக அமர்ந்து கொண்டு கால்களை மடக்கிக்கொண்டு உண்ணவேண்டும். (லூக். 7:36, யோவான் 13:23-25)
- உணவிற்கு முன்னர் இறைபுகழ் கூறிச் செபித்த பின்னரே உணவு உட்கொள்வர்.

- விருந்தினரை உணவுக்கு அழைக்கும்போது வீட்டுத்தலைவர் தலைவணங்கி அவரை வரவேற்று, வாழத்துக்கூறி; முத்தமிட்டு வரவேற்பார்.
- விருந்தினர் பாதணிகளைக் கழற்றிவிட்டு பாதங்களைக் கழுவிவிட்டு உள்ளே நுழைவர். விருந்தினரின் தலையில் எண்ணெய் தடவி வீட்டின் தலைவர் தம் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவார். (லூக். 7:46)

### அளவுகள்

- யூதர்கள் நிறுத்தல் அளவைகளையும், நீட்டல் அளவைகளையும் பயன்படுத்தினர்.
- ''செக்கேல்'' என்பது நிறுத்தல் அளவையாகும். ஒரு செக்கேலின் எடை அளவு 218 (இருநூற்றுப்பதினெட்டு) தானிய எடைக்கு ஒப்பாகும். அரை செக்கேலை ''பெக்கா'' என்றும்; ''செக்கேல்'' அளவில் இருபதில் ஒரு பங்கை ''கெரா'' என்றும் அழைப்பர்.
- நீட்டல் அளவைக்கு ''நுகத்தடி'' பயன்படுத்தப்பட்டது. ஒரு நாள் பயணத்தூரம், ஓய்வு நாள் தூரம்; அம்பெறி தொலைவு என்ற அளவுகளில் அளவைகள் கணிக்கப்பட்டன.
- ஒரு ''ஓய்வு நாள் பயணத் தொலைவு'' என்பது 202 அடிகள் ஆகும். (இருநூற்றி இரண்டு)

### மொழி

- யூத மக்களின் மூல மொழி எபிரெயம் ஆகும். இயேசுவின் காலத்தில் தொழுகைக் கூடங்களிலும், கோயில் வழிபாடு வாசகங்களிலும் வாசகங்கள் எபிரேய மொழியிலேயே வாசிக்கப்பட்டன.
- ஆனால் அன்றாட வாழ்வில் அரமேய மொழியையும் பேசினர். யூத சமுதாயத்தில் உயர்மட்டத்தில் இருந்த பெரியோர்கள் மட்டுமே அரமேய மொழியைப் பேசினர். ஆனால் சாதாரணப் பொதுமக்கள் அரமேய மொழியைப் பேசியது இயேசுவின் காலத்திலேயேதான்.
- எனவே இயேசுவின் காலத்தில் பேச்சு மொழியாக அரமேயமும் எழுத்து மொழியாக எபிரேயமும் காணப்பட்டது. அத்துடன் கிரேக்க, உரோமைத் தாக்கமும் காணப்பட்டபடியால் அரசியல் மொழியாக கிரேக்கம், இலத்தீன் ஆகிய மொழிகளும் அதிகார மொழியாக இடம் பிடித்துக் கொண்டது.
- இயேசுவின் மரண விசாரணையின் போது போந்தியு பிலாத்துவிடம் இயேசு இலத்தின் மொழியில் உரையாடி இருக்கலாம் எனவும் நம்பப்படுகின்றது.

### 6.3.2.1.2 யூத சமுதாயப் பிரிவுகள்

- இயேசுவின் காலத்தில் யூத சமூகத்தில் உயர் பிரிவினராக குருக்கள், மறைநூல் அறிஞர்கள், சட்ட வல்லுனர்கள் போன்றோர் இருந்தனர். இவர்கள் பெரும்பாலும் சதுசேயர்களாகக் கருதப்பட்டனர்.
- பரிசேயர் என்னும் மக்கள் பிரிவினரும் உயர்பிரிவினராகக் கருதப்பட்டனர்.
- அடுத்து மணத்துறவு கொண்ட எசேனியர் என்ற பிரிவினரும் இருந்தனர்.
- இவர்களைத் தவிர்த்து கீழ்நிலைப் பிரிவினராக ஆயக்காரர், மீனவர், வாணிகம் செய்வோர், சமாரியர், விவசாயிகள் சிதறுண்ட யூதர்கள் போன்றோருடன் ஏனைய பிற இனத்தவர்களும், பெண்கள், அடிமைகளும் கருதப்பட்டனர்.
- இவர்கள் மதக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டும், பணம், பதவி, செல்வநிலை என்பவற்றைக் கொண்டும் உயர்குலத்தோர், நடுத்தரவர்க்கத்தினர், தாழ்த்தப்பட்டோர், எனப் பிரிக்கப்பட்டிருந்தனர்.

## உயர்குலத்தோர்

- **உயர் குலத்தோராகக் கருதப்படுவோர்:** அரச குடும்பத்தினரும், அரச குடும்பத்தாருடன் நெருங்கிய உறவினர்கள், தூரத்து உறவினர், நண்பர்கள்.
- இயேசுவின் காலத்தில் ஏரோதிய குடும்பமே உயர்குலத்தோர் என்பதில் முன்னிடம் வகித்திருந்தனர். மேலும் பெரும் வியாபாரிகள், நிலப்பிரபுக்கள், வங்கி உரிமையாளர்கள், மற்றும் சொந்தத் தொழில் மேற்கொண்ட பல தலைமைச் சங்க உறுப்பினர், பணக்கார வர்க்த்தினராய் இருந்தபடியால் உயர் குலத்தோராய் கருதப்பட்டனர்.
- நாட்டின் பொதுச் சொத்து முழுவதற்கும் அரச குடும்பமே உரிமை பாராட்டியது. அதனால் இவர்களது உணவு, உடை உறைவிடம் போன்றன ஆடம்பரமாக அமைந்து காணப்பட்டது. பல நிலைகளில் தமது உல்லாச வாழ்வை வெளிப்படுத்தினர்.
- பணம் படைத்தவர்கள் பல மனைவியர்களை வைத்திருக்கலாம் என்றும் சட்ட அங்கீகாரம் இருந்தது. ஓர் அரசன் 18 மனைவியரை மணந்து கொள்ளலாம் என்ற 'மிஷ்னா' வரையறுத்தது. ஆனால் 'தால்மூட்' என்னும் சட்டநூலின் படி அது 24-28 ஆகவும் இருக்கலாம் என்று கூறுகின்றது. (தால்மூட் என்பது கிரேக்கரின் ஆட்சிக் காலத்தில் எழுதப்பட்ட யூதர்களுக்கான சட்ட ஒழுங்கு நூல் ஆகும்).
- பணக்காரர் தமது செல்வ நிலையைக் காட்டிக் கொள்வதற்காக அடிக்கடி விருந்து ஏற்பாடு செய்வார்கள். இவ்விருந்திற்கு ஏராளமானோர் அழைக்கப்படுவார்கள்.
- இதற்காக தனியாக சமையற்காரர்களும் நியமிக்கப்படுவார்கள்.
- தண்ணீர் கலக்காத உயர்தர திராட்சை இரசம் கண்ணாடிக் குவளைகளில் பரிமாறப்படும். இதனைத் தொடர்ந்து விருந்தினர் யாவரும் நடனம் ஆடி மகிழ்வர்.
- பணம்படைத்தவர்கள் தமது மனைவியருக்கு வாசனைப் பொருட்கள், உயர் ரக ஆடைகள், நகைகள், பொற்கற்கள், தங்கச் சங்கிலிகள் மற்றும் வெள்ளி போன்ற பொருட்களுக்காக பெருந்தொகைப் பணத்தை செலவு செய்தனர்.
- சில பணக்கார தலைமைக்குருக்களின் மனைவியர் தமது வீட்டிலிருந்து கோயில் வரை நடந்து செல்வதற்காக 'தரைவிரிப்பு' விரிக்கச் செய்தார்.

## நடுத்தரவர்க்கத்தினர்

- அடுத்த நிலையில் இருந்தவர்கள் நடுத்தர வர்க்கத்தினராவர். இவர்கள் குரு குலத்தவர்களாகவும், சிறு வியாபாரிகளாகவும், கலைஞர்களாகவும் இருந்தனர்.
- எருசலேமில் திருவிழாக் காலங்களில் சிறு வியாபாரிகளுக்கும் கலைஞர்களுக்கும் நல்ல வருமானம் கிடைக்கும்.
- எருசலேம் குருக்களில் 24 பிரிவினர் இருந்தனர். இவர்களின் எருசலேம் குருக்களைத் தவிர்ந்த ஏனையோர் இந்நடுத்தர வர்க்கத்தினராகவே இருந்தனர். ஏனெனில் இவர்களது வாரப்பணியின் காலத்தில் கிடைக்கும் பலிப் பொருட்களும் பாரப்பரிகார பலிப் பொருளும், ஆலயக் காணிக்கையின் முதற் கனியும் இன்னும் நிலத்தின் விளைச்சலில் பத்திலொரு பகுதியுமே இவர்களுக்கு கிடைத்தது.
- எனவே இவர்களது வருமானம் உல்லாச வாழ்க்கை வாழ முடியாவிட்டாலும் இல்லை என்ற பல்லவிபாடும் அளவுக்கும் தாழ்ந்து விட இல்லை.
- இத்தகையவர்களை நடுத்தர நிலையினராகக் கருதினர்.

## தாழ்த்தப்பட்டோர்

- இயேசுவின் காலத்தில் பொருளாதார நிலையில் பின் தங்கியவர்கள் தாழ்த்தப்பட்டோராக கருதப்பட்டனர்.
- மேலும் அடிமைகள், வரிதண்டுவோர், சமாரியர், பாவிகள், பெண்கள் அனைவரும் தாழ்த்தப்பட்டோராகவேக் கருதப்பட்டனர்.

**01** இவர்களில் **'ஏழைகள்'** என்று ஒதுக்கப்பட்டவர்கள், தமது பொருளாதார நிலையில் மிகவும் வறிய நிலையில் இருந்தவர்களாவர்.

- இவர்களை ' அம் - ஹா - அரஸ் (AM - HA - AREZ) என்று அழைத்தனர். அதாவது ' நாட்டுப்புற மக்கள் (பட்டிக்காட்டான்) என்பது பொருளாகும்.
- இவர்கள் மனிதர்களானாலும் ஆன்மா அற்ற சடப்பொருளாகவே கணிக்கப்பட்டனர்.

**02** **அடிமைகள்** அல்லது **சிதறி வாழ்ந்த யூதர்களும்** தாழ்த்தப்பட்டவர்களாளவே கருதப்பட்டனர்.

- யூதர்கள் தமது வரலாற்றில் பல்வேறுப்பட்ட அடிமைத்தனங்களையும், நாடுக்கடத்தலையும் சந்தித்துள்ளனர்.
- இவர்கள் எருசலேமில் குடியேறிய பின்னர் தாங்கள் அடிமைகளாகக் கொண்டு செல்லப்பட்ட எகிப்து, பபிலோன், அசீரியா, போன்ற அண்டை நாடுகளில் காணப்பட்ட அடிமைகள் அமைப்பைப் பின்பற்றத் தொடங்கினர்.
- இயேசுவின் காலத்தில் தமது போதனைகளின் மூலம் இத்தகைய அடிமை நிலைகளில் இருந்து மக்கள் மீட்கப்படல் வேண்டும் என்பதற்காக பல போதனைகளையும், கருத்துக்களையும் விளக்கியுள்ளார். (மத். 10:24)

**03 வரிதண்டுவோர்**

- இயேசுவின் காலத்தில் தாழ்த்தப்பட்டவராகக் கருதப்படுபவர்களில் வரி தண்டுவோரும் உள்ளடங்கவர். யூதவழக்கப்படி வரிதண்டுவோா திருடர்களாகவம் கொள்ளையர்களாகவும் கருதப்படுவர்.
- இயேசுவின் காலத்தில் வரிதண்டுவோருக்குக்கெல்லாம் அதிகாரியாகச் செயற்பட்டவன் சக்கேயு.
- ''மிஷ்னா'' என்ற யூத சட்டத் தொகுப்பில் பாவத் தொழில்களாகக் குறிப்பிடும் சிலவற்றில் வரிதண்டுதலும் பாவமாகக் கருதப்பட்டது.
- வரிதண்டுவோர் குலத்தார் யூதர்களாக இருந்தாலும், உரோமைப் பேரரசுக்காக பலஸ்தீனா மக்களிடம் வரி வசுலிப்பவர்கள் என்ற காரணத்தாலும், பணக்காரர்களையும், குறிப்பாக அதிகார வர்க்கத்தினரையும் தவிர்த்து, அல்லது குறைந்த வரியை அறவிட்டு சாதாரண பொது மக்களிடமும், ஏழைகளிடமும் அநியாயமான முறையிலும் வரி வசூலிப்பதால் இவர்கள் யூதர்களால் வெறுக்கப்பட்டனர்.
- குறித்த தொகைக்கு அதிகமாகவும் வரிவசூலித்தனர். அத்துடன் 5 வருடங்கள் ஒப்பந்தம் முடிந்த பின்னரும் பொய்யான அதிகாரத்தை மக்களிடையே காட்டி வரி வசூலித்தனர். எனவே இவர்கள் உரோமையரசின் கைக் கூலியாகச் செயற்படுவதனாலும் இவர்கள் வெறுத்து ஒதுக்கப்பட்டனர்.
- சில வேளைகளில் இவர்கள் பிற இனத்தார், அல்லது பாவிகள் என்றும் கருதப்பட்டனர்.
- இயேசுவின் வாழ்வில் இரண்டு ஆயக்காரர்கள் தொடர்புபடுகின்றனர். சுங்கவரி வசூலித்த லேவி என்ற 'மத்தேயு''; அடுத்தது சக்கேயு.
- இழந்து போனதை தேடி மீட்கவே வந்தேன் என்றும், நீதிமான்களையல்ல பாவிகளைத் தேடியே வந்தேன் என்றும் கூறிய இயேசு தமது வாழ்வில் வரிதண்டுவோரையும் இழி தொழில் செய்வோரையும் மனிதராக மதித்து அவர்களை தமது நண்பர்களாக்கிக் கொண்டு சிறந்த வாழ்க்கைப் பாடத்தைக் கற்பித்தார்.

**04 சமாரியர்**

- இயேசுக்கிறிஸ்துவின் காலத்தில் தாழ்த்தப்பட்டவர் பட்டியலில் இடம்பெறும் மற்றொரு வகுப்பினர் சமாரியர்கள் ஆவார். இவர்கள் யூதர்களாய் இருந்தாலும் அரசியல், சமயக் காரணங்களால் கொள்கைகள் மாறுபட யூதர்களிடமிருந்து பிரிந்து தனித்து வாழத் தொடங்கினர்.

- கி.மு. 922இல் சாலமோன் மன்னரின் இறப்பிற்குப் பின்னர் பலஸ்தீனா நாடு சமாரியா, யூதேயா என இரண்டாக துண்டிக்கப்பட்டது.
- சமாரியாவின் அரசன் ‘எரோபவாம்’ தென்னாட்டில் இருக்கும் எருசலேமுக்கு தமது மக்கள் செல்வதையும், வழிப்படுவதையும் விரும்பாமல் சமாரியாவில் ‘கெரிசிம்’ மலையில் திருத்தலங்களை உருவாக்கி அங்கு வழிபடச் செய்தான்.
- அத்துடன் கி.மு. 722இல் அசீரியர் வட அரசில் படையெடுத்து அங்கிருந்த அரசகுலத்தவர்கள், படித்தவர்கள், கலைஞர்கள், பணக்காரர்களை நாடுகடத்திய பின் தமது அடிமைகளான குத்தியர்களை சமாரியாவில் குடியேற்றினான்.
- இவர்கள் சமாரியாவில் இருந்த யூதர்களுடன் கலப்புத் திருமணம் செய்தனர். தமது இனத் தூய்மையை இழந்த காரணத்தால் இச்சந்ததியினரை யூதர்கள் இழிவாகக் கருதி ஒதுக்கினர். எனவே இவர்களும் தாழ்ந்த வகுப்பினர் ஆயினர்.
- இயேசுவின் காலத்தில் சமாரியா வழியாக பயணம் செய்வது கூட தவிர்க்கப்பட்டிருந்ததுடன் அவர்களுடன் உரையாடுவது கூட விலத்தப்பட்டிருந்தது. (லூக். 9:53; யோவா 4:9)
- ஆனால் இயேசு யூதர்களின் பொருளற்ற சட்டத்தை உடைத்தெறிவதுடன் மனித மாண்பே தலையானது என்ற அடிப்படை நற்செய்தியைத் தருகின்றார்.

## 05 பெண்கள்

- கீழ் நாடுகளில் பெண்கள் பொது வாழ்வில் அதிகம் ஈடுபடுவதில்லை. இயேசுவின் காலத்தில் பலஸ்தீனாவில் வாழ்ந்த யூதப் பெண்களின் நிலையும் இத்தகையதாகவே இருந்தது.
- பாலஸ்தீனப் பெண் ஒருத்தி வீட்டைவிட்டு வெளியே புறப்படும் போது தலையை மூடி முகத்திரை அணிந்து கொண்டே செல்லவேண்டும்.
- தலையை மூடி முகத்திரை அணியாமல் ஒரு பெண் வெளியில் சென்றால் அவளை அவளது கணவன் மண விலக்கு அளிக்கலாம் என்றும் அப்படி மணவிலக்கு அளிக்கும் போது அவளுக்கு கொடுக்க வேண்டிய தாபரிப்பு எதையும் கொடுக்க வேண்டிய கடமையில் இருந்தும் கணவன் விலக்கப்பட்டிருந்தான்.
- எந்த ஒரு யூதனும் ஒரு பெண்ணோடு அதிகம் பேசக்கூடாது. தன் மனைவியுடன் கூட அதிகம் பேசக்கூடாது. என்று சட்டமும் உண்டு.
- எந்தப் பெண்ணும் ஒரு ஆணுடன் தனியாக இருக்கவோ அல்லது ஒரு ஆண் திருமணமான வேறொரு பெண்ணைப் பார்ப்பதோ அல்லது அவளுக்க வாழ்த்துக் கூறுவதோ கூடாது.
- எந்த மனைவிக்கும் கணவனில் சட்டப்படியான அதிகாரமில்லை. ஆனால் கணவனுக்கு அவனுடைய மனைவி தனிப்பட்ட உடைமையாகக் கருதப்பட்டாள்.
- எனவே கணவன் தன் மனைவியை இலகுவில் விலக்கிவிட சட்டம் அனுமதித்திருந்தது.
- பெண்கள் ஆண்களுடன் சரிநிகராக அமர்ந்து உணவு உட்கொள்ளக்கூடாது. ஆண்கள் உண்ணும்போது பெண்கள் அவர்களுக்குப் பரிமாறிக்கொண்டு நிற்கவேண்டும்.
- தெருக்களிலும், ஆலயத்திலும் பெண்கள் தனித்தே நிற்க வேண்டும். பொதுவாக இவர்களுக்கு வீடே உலகம். வீட்டு ஜன்னல்களிலும் திரை போட்டு மறைக்கப்பட்டிருக்கும்.
- சமயக் கண்ணோட்டத்தில் காணும் போது பெண்கள் ஆண்களுக்குரிய கடமைகளில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் ‘ஷேமா’ என்ற யூதர்களின் அன்றாட செபத்தை சொல்லத் தேவையிருக்கவில்லை.
- துணிகள் நெய்வது; உரொட்டி சுடுவது, வீட்டுப்பொருட்கள் செய்வது, நீரூற்றில் இருந்து நீர் கொண்டு வருதல், எண்ணெய் தயாரித்தல் போன்ற வேலைகள் பெண்களுக்கு உரித்தான வேலைகளாகக் குறிக்கப்பட்டிருந்தன.

### 6.3.2.2 யூத மத பழக்கவழக்கங்கள்

#### மத மரபு முறைகள்

- கிறிஸ்து இயேசுவின் காலத்தில் பாலஸ்தீனாவில் சமய நம்பிக்கைகள் மற்றும் வாழ்க்கை முறைகள் யாவும், கடவுளுக்கும், மனிதருக்கும் இடையில் உறவை ஏற்படுத்தும் மையமாக உள்ளன என்பதில் இஸ்ரயேலர் முழு நம்பிக்கை கொண்டிருந்தனர்.
- ‘‘ஆண்டவரின் திருச்சட்டத்தில் மகிழ்ச்சியுறுபவர்; அவரது சட்டத்தை இரவும் பகலும் சிந்திப்பவர்’’ (திருப்பாடல் 1:1-2) நற்பேறுபெற்றவர் எனக் கருதப்பட்டனர். எனவே அவர்கள் அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்கும் பல சமயச் சடங்குகள், கொண்டாடும் விழாக்கள், நடத்தும் செப வழிபாடுகள் யாவும் இஸ்ராயல் மக்களின் சமயப்பற்றுக்கு எடுத்துக்காட்டுக்களாகும்.
- இஸ்ரயேலரின் வரலாற்றில் ஆராய்ச்சியாளரின் கருத்துப்படி ஒரே பின்னணியைக் கொண்ட இனமாக யூத சமுதாயம் உருவாகவில்லை. மாறாக பலதரப்பட்ட குடும்பங்கள், குழுக்கள் இனங்கள் ஒன்று சேர்ந்தே இஸ்ரயேல் இனம் உருவாகியது என்பது முடிவாகும்.
- இஸ்ரயேலரின் வரலாற்றில் அவர்களது வாழ்க்கையுடன் நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகளில் இருந்தும் அவர்கள் பெற்ற இறையனுபவத்திலிருந்தும் இறைவன் ஒரு படைப்பாளர் என்ற எண்ணத்தைவிட அவர் ஒரு மீட்பர், பாதுகாவலர் என்னும் மனப்பதிவே உருவாக்கம் பெற்றது.
- பல்வேறு நாட்டினருடைய மதக் கலாசாரங்களின் தாக்கத்திற்கு உட்பட்டிருந்தாலும் இஸ்ரயேல் மக்களின் மத நம்பிக்கை ஒரே கடவுள் என்பதில் இருந்து மாறுபடவில்லை.
- இறைவழிபாடு இஸ்ரயேலின் மையமாக அமைந்திருந்தாலும் பலி செலுத்துதலையே மையமான சமய வழிபாடாக இவர்கள் கருதி வந்தனர். மண்ணும் மக்களும் இறைவனுக்குச் சொந்தம் என்று கருதும் பக்தியுள்ள எந்த யூதனும் இறைவனுக்குப் பலி செலுத்த தயங்குவதில்லை.

#### பலி

- யூதர்களிடையே பல விதமான பலி செலுத்தும் முறைகள் இருந்து வந்தன. அவை எரிபலி, நல்லுறவுப்பலி, பழிநீக்கும் பலி, பிற பலிகள் என்ற வகையில் இப்பலிகளை நிறைவேற்றி வந்தனர்.
- இத்தகைய பலி செலுத்தும் வழக்கங்களை இஸ்ரயேல் அண்டிய நாடுகளான மெசப்பொத்தாமியா, அரேபியா, கானான், எகிப்து போன்ற நாடுகளில் நிலவி வந்த வழக்கத்தில் இருந்து பின்பற்றிக் கொண்டனர்.
- அத்துடன் பலியிடுதல் மூலம் மானிடர் புனிதமடைகின்றனர் என்ற நம்பிக்கையும் எபிரேயரிடையே இருந்து வந்தது. மேலும் பலியானது கடவுளுக்கு மானிடர் அளிக்கும் உடன்பாடு, இறைவனுடன் மானிடர் கொண்டிருக்கும் உள்ளன்புக்கும், உறவுக்கும் வெளியடையாளமாக விளங்கியது.
- இயேசுவும் தமது போதனையில் ‘‘தன்னிடம் அன்பு கொள்வது போல் அடுத்திருப்பவனிடம் அன்பு செலுத்துவது எரிபலிகளையும் வேறு பலிகளையும் விட மேலானது’’ (மாற்கு 12:34) என்கிறார்.
- இத்தகைய பலி நிறைவேற்றும் சடங்குகள் இயேசுவின் காலத்திலும் இருந்தது என்பதை (மாற்கு 10:45, மத்தேயு 5:23, மாற்கு 12:33-34, எபேசியர் 5:2 1 கொரி 5:7) போன்ற பகுதிகளில் இருந்து அறியக் கூடியதாக உள்ளது.

#### செபம்

- இஸ்ரயேலரின் சமய வழிப்பாட்டில் இரண்டாம் இடம் பெறுவது செபம் ஆகும். பலியிடுவதையே அவர்கள் செபமாகக் கருதினர்.

- ஆண்டவருடன் உரையாட வேண்டிய நேரத்தில் உன் நகரிலுள்ள செபக்கூடம் சென்று செபம் செய், முடியவில்லை என்றால் படுக்கையில் இருந்தாவது உன் இதயத்தை திறந்து இறைவனுக்கு காட்டு என்று ''ராபிகள்'' போதித்தனர்.
- யூதர்களின் அன்றாட செபம் ''ஷேமா'' என்று அழைக்கப்பட்டது. இது இரு பகுதிகளைக் கொண்டது. நாள்தோறும் மூன்று முறை செபித்து வந்தனர்.
- இவை தவிர 'ஹெமோயே எஸ்ரே' என்ற பதினெட்டு புகழுரைச் செபங்களையும் யூதர்கள் செபித்து வந்தனர்.
- கிறிஸ்து இயேசுவின் காலத்தில் காலை, நண்பகல், மாலை வேளைகளில் செபம் செய்தனர்.
- செபம் செய்யும் போது ''தெபிலின்'' என்னும் மறைவாசகங்கள் அடங்கிய தோல் பேழையை அணிந்து ''தாலித்'' எனப்படும் சால்வையால் தம்மைப் போர்த்திக் கொண்டு கடவுளின் நகராம் எருசலேம் நகரை நோக்கி மண்டியிட்டு கைகளை உயர்த்தி உரத்த குரலில் செபிப்பர்.
- பொதுவாக யூதர்கள் கோயிலிலும், தொழுகைக் கூடங்களிலும் செபித்து வந்தனர்.

### சடங்கு சுத்திகரிப்பும் பொருத்தனைகளும்

- ஒரு யூதன் பிறந்த எட்டாம் நாள் அல்லது 40ம் நாள் **விருத்தசேதன சடங்கை** நிறைவேற்றுவதற்குரிய சட்டம் அமுலாக்கத்தில் இருந்தது.
- இதற்கென ஒரு பெற்றோர் பிறந்த குழந்தையை கோயிலுக்கு கொண்டு சென்று இரண்டு காட்டுப்புறாக்கள், அல்லது இருமாடப்புறாக்களை கோயிலுக்கு காணிக்கை செலுத்தி விருத்தசேதனம் செய்து கொள்ளவேண்டும்.
- இவ்விதம் **ஒருவர் மரணித்தால்** இறந்தோரின் உடலைக் குளிப்பாட்டி பரிமள தைலத்தால் பூசி, தூய பரிவட்டத்தால் சுற்றி புதைப்பார்கள். (மாற்.16:1, மத். 27:59)
- ஈமச் சடங்கில் பங்குகொண்ட அனைவரும் தீட்டுப்படாமல் இருக்க மூன்றாம் நாளில், அல்லது ஏழாம் நாளில் குளிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.
- இறந்தவரை இழந்து வாடுவோருக்கு உற்றார், உறவினர் நண்பர்கள் உணவு சமைத்துக் கொடுத்து தேற்றுவதுண்டு.
- **நோயினால்** பீடிக்கப்பட்டிருப்பவனை ஊருக்கு வெளியே இருக்குமாறு அப்புறப்படுத்தினது. சாதாரண நோய்கள் மருத்துவரால் பராமரிக்கப்பட்டு குணப்படுத்தப்பட்டது. ஆனால் தொழுநோய் போன்றவற்றிற்கு அவர்கள் வெளியேற்றப்பட்டு புறம்பாக்கப்பட்டனர்.
- வேற்று மனிதர், அவர்களைக் காண நேர்ந்தால் நோயாளி ''அமே, அமே'' அதாவது ''அசுத்தம், அசுத்தம்'' என்று கத்த வேண்டும். இவர்கள் ஒரு வேளை குணமடைந்தால் அவன் தன்னைத் தலைமைக் குருக்களிடம் காட்டி நலம் பெற்றதற்கான அத்தாட்சிப்பத்திரம் பெற்றபின்னரே ஊருக்குள் வர முடியும்.
- யூதர்கள் **பொருத்தனையாக** தமது தலைமுடியை மழித்துக்கொள்வார்கள். இது ''நசீர்'' பொருத்தனை என்று கூறப்படுகின்றது. அதாவது ''நசரேய அர்ப்பணம்'' ஆகும்.
- அதாவது யூதர்கள் தமது தலைமுடியை நீளமாக வளர்ப்பார்கள். ஆனால் தமது வேண்டுதல்கள் நிறைவேறும்போது அத்தலைமுடியை முழுவதும் மழித்து நேர்ச்சை செலுத்துவார்கள்.

### ஓய்வு நாள் அனுசரிப்பும், விழாக்களும்

- யூதர்களின் மத மரபு முறைகளில் ஓய்வு நாள் அனுசரிப்பும், விழாக்களும் முக்கியமானவையாகும்.
- ஓய்வு நாளை ''சபாத்'' என்று கூறுவர். ''சபாத்'' என்ற எபிரேயச் சொல்லுக்கு ஓய்வு, நிறுத்துவது, தவிர்ப்பது, முடிப்பது என்ற பொருள் உண்டு.

- கடவுளுக்காக ஒரு நாளை ஒதுக்கி ''சபாத்'' என்று அனுசரித்து, ஓய்வு நாள் உடன்படிக்கையின் சின்னம் என யூதர்கள் ஆழமாக நம்பியதால் அதனை மிகவும் கவனமாகக் கடைப்பிடித்தனர்.
- ஓய்வு நாள் ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை மாலை தொடங்கும். மூன்று விண்மீன்கள் வானத்தில் உதித்ததும் இரவு ஆரம்பம் என்ற போதனையின் படி முதல் விண்மீன் உதித்ததும் தொழுகைக் கூடத்தில் வைக்கப்பட்டிருக்கும் ஓய்வு நாள் எக்காளம் ஊதப்படும்.
- இவ் ஒலியைக் கேட்டதும் எல்லோரும் விளக்கேற்றி அமைதியைக் கைக் கொள்வர். ஓய்வுநாளுக்கு முதல் நாளே ஓய்வு நாளுக்குரிய உணவுகளையும் தயாரிக்க வேண்டியிருப்பதால் அன்றைய நாளில் சமையல் வேலை எதுவும் செய்யமாட்டார்கள்.
- இந்த ஓய்வு நாளில் (39) முப்பத்தொன்பது வகையான அலுவல்கள் தடை செய்யப்பட்டிருந்தன.
- ஆனால் இயேசுக்கிறிஸ்து மனிதன் ஓய்வு நாளுக்கன்று ஓய்வு நாள் மனிதனுக்காகவே என்று கூறி மனிதாபிமானப் பணிகளை செய்து ''சாபத்தை'' விட பிறரன்பு உயர்ந்தது எனக் காட்டினார்.

## விழாக்கள்

- யூதர்கள் தமது சமய வழிபாட்டில் பல விழாக்களையும் கொண்டாடி மகிழ்ந்தனர். அவ்விழாக்களைக் கொண்டாடுவதன் மூலம் இறைவனுக்கும் தங்களுக்கும் உள்ள உறவை நிலை நாட்டினர்.
- திருவிழாக்களை ஒட்டியே திருப்பயணங்களையும் மேற்கொண்டனர். குறித்த நாளில் கூட்டங் கூட்டமாக எருசலேம் நகர் நோக்கி திருப்பயணம் மேற்கொள்வர்.
- விழாக் காலங்களில் எருசலேம் நகரைத் தூய்மைப்படுத்தி அழகுற அலங்கரிப்பர். பயணத்தின் போது பயணக்களைப்புத் தெரியாமல் இருப்பதற்காக பல பாடல்களைப் பாடியும், இசைக் கருவிகளை மீட்டியும் இறைவனைப் புகழ்ந்து கொண்டு செல்வது வழக்கம்.

## யூதர்களின் முக்கிய விழாக்கள்

i) பாஸ்கா திருவிழா
ii) பெந்தக்கோஸ்து விழா
iii) புளியாத அப்ப விழா
iv) கூடார விழா
v) பாவக்கழுவாய் நிறைவேற்றும் நாள்
vi) கோயில் அர்ப்பண விழா போன்றவை கருதப்படுகின்றன.

## i) பாஸ்கா திருவிழா

- கடந்து செல்லல் என்று பொருள்படும். இது எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்து விடுதலையான நாளையும், எகிப்தியரின் தலைச்சன் பிள்ளைகளை ஆண்டவரின் தூதர் கொன்றதையும் நினைவு கூர்ந்து கொண்டாடப்படுகின்றது.
- இவ் விழா நிசான் மாதத்தில் (மார்ச் - ஏப்ரல்) கொண்டாடப்படும்.

## ii) பெந்தக்கோஸ்து விழா

- பெந்தக்கோஸ்து என்னும் கிரேக்கச் சொல்லுக்கு (50) ஐம்பது என்பது பொருள். இதனை வாரங்களின் விழா என்றும் அழைத்தனர். ஏழு வாரங்களின் பின் வரும் இறுதி ஐம்பதாவது நாளில் இவ்விழா கொண்டாடப்பட்டது.
- அறுவடையின் முதற்பலனை காணிக்கையாக்கி இவ்விழாவைக் கொண்டாடுவர்.

### iii) புளியாத அப்ப விழா

- பெந்தக்கோஸ்து விழாவில் முதற்கனி காணிக்கையாக்குவது போல் புளியாத அப்பத் திருவிழாவானது முதற்கனியை அதாவது முதல் ஏழு நாட்களிலும் அறுவடை செய்த வாற்கோதுமை மணிகளை அரைத்து மாவாக்கி அதனை சமைத்து உண்ணும் விழாவாகக் கொண்டாடி மகிழ்வர். இதுவும் நீசான் மாதத்திலேயேக் கொண்டாடப்படும். பாஸ்கா விழாவும் இதுவும் ஒரே மாதத்தில் வருவதால் இரு விழாக்களும் பின்னர் ஒருமித்து கொண்டாடப்பட்டது.

### iv) கூடார விழா

- இஸ்ரயேல் மக்கள் தொன்று தொட்டு கொண்டாடி வந்த விழா இதுவாகும். யாவேயின் விழா என்றும் இதனை அழைப்பர். எபிரேயருடைய விழாக்களிலே புகழும் புனிதமும் வாய்ந்தது இவ்விழாவாகும்.
- ''சுக்கோத்'' என்றும் இது அழைக்கப்படுகின்றது. சுக்கோத் என்பது குடிசை, அல்லது கூடாரம், கொட்டில் என்று பொருள்படும்.
- அறுவடைக்காக வயல் நிலங்களில் கூடாரம் அமைக்கும் போது கொண்டாடப்பட்டது. பிற்காலத்தில் திருப்பயணத்திற்கு ஆயத்தமாகும் நாளில் தொடர்ந்து ஏழு நாட்களாக இது கொண்டாடப்படும்.

### v) பாவக்கழுவாய் நிறைவேற்றும் நாள்

- இவ்விழா திஸ்ரி மாதத்தில் (செப்டம்பர் - அக்டோபர்) கொண்டாடப்பட்டது. இது ''யோம் கிப்பூர்'' என்று எபிரேயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- பாவங்களுக்குப் பரிகாரமாக ஒறுத்தலையும், நோன்பையும் மேற்கொள்ள வேண்டும்.

### vi) கோயில் அர்ப்பண விழா

- ''ஹனுக்கா'' "Hanukkah" புதுப்பித்தல் என்பது பொருள்.
- அந்தியோக்கு எப்பிபானுஸ் என்னும் மன்னன் ஜெருசலேம் கோயிலைத் தீட்டுப்படுத்தியதை தூய்மைப்படுத்தி கி.மு. 167இல் கிஸ்லு மாதத்தில் (டிசம்பர்) 25ம் நாளில் பலிப்பீடம் கட்டி மூன்று ஆண்டுகளின் பின் கி.மு. 164இல் மார்கழி 25இல் அர்ப்பணம் செய்யப்பட்டது.
- இதனை நினைவு கூரும் விழா தொடர்ந்து எட்டு நாட்கள் நடைபெற்றது.

## உத்தேச கற்பித்தல் செயற்பாடுகள்

1. பலஸ்தீன அரசியல், சமூகப் பின்னணியில் கிறிஸ்தவ மறை உருவாகியது என்பதை ஆதாரங்களுடன் நிறுவுவர்.
2. கிறிஸ்துவின் கால யூத சமுதாயத்தின் சமூக, அரசியல், கலாசார, மத மரபு முறைகளை ஒப்படையாக சமர்ப்பிப்பர்.

## உசாத்துணை நூல்கள்


- பீட்டர் அபீர், ஆ. அலோசியஸ் சேவியர், விவிலியம் ஓர் அறிமுகம், அருள்வாக்கு மன்றம் திருச்சி - 2005
- அ. பீற்றர் அபீர், நற்செய்தி அறிமுகம், நற்செய்தி வெளியீடு சென்னை - 1983
- அ. பீற்றர் அபீர், புதிய ஏற்பாடு பொது முன்னுரை - புனித பவுல் விவிலிய நிலையம் பூந்தமல்லி சென்னை.

**தேர்ச்சி 7.0 :** கிறிஸ்தவ நாகரிகம் உருவாகியதனால் சமுதாய கலாச்சாரத் துறையில் ஏற்பட்ட மாற்றங்களின்படி பயணிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 7.1 :** கிறிஸ்தவ மத அறக்கோட்பாட்டின் ஆரம்பத்தை கற்றுணர்ந்து இன்றைய திருச்சபையின் வளர்ச்சிக்கு அவற்றைப் பயன்படுத்திக் கொள்வர்.

**பாடவேளைகள் :** 66

**கற்றல் பேறுகள் :**

- கிறிஸ்துவே கிறிஸ்தவ நாகரீகத்தின் அடிப்படையாவார் என்பதை விளக்கிக் கூறுவர்.
- மத்தேயு நற்செய்தி நூலில் அதிகாரங்கள் 5-7 வரையிலான பகுதியை வாசிப்பதன் மூலம் ஆண்டவர் இயேசு மிகச் சிறந்த போதகர் என்பதை உணர்ந்து கொள்வர்.
- ஆண்டவர் இயேசுவின் வாழ்க்கையை விளக்கும் பொழுது அவர் வாழ்ந்த காலத்தின் சமகால யூத சமூகத்திலிருந்து வேறுப்பட்ட ஒருவராய்த் திகழ்ந்தார் என்பதை ஏற்பர்.
- தொடக்க கால கிறிஸ்தவர்களும் அவர்களது வாழ்க்கை முறையும் பற்றி நன்கு அறிந்து கொள்வர்.
- தூய பவுலின் வாழ்க்கை, திருச்சபை நிறுவப்படல், அவரது முக்கிய படிப்பினைகள் ஒழுக்க விழுமிய கோட்பாடுகள் பற்றி அறிந்து வாழக் கற்றுக் கொள்வர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

## 7.1.1 கிறிஸ்தவ நாகரிகத்தின் அடிப்படை கிறிஸ்துவே

- ''காலம் நிறைவேறி விட்டது கடவுளின் அரசு அண்மித்து விட்டது. எனவே மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்'' (மாற்கு 1 : 15) என்ற அறைகூவலுடன் இயேசுக் கிறிஸ்து தமது பணியை தொடங்கி வைத்தார்.
- இயேசு தனக்கென தனியாக எந்த ஒரு அரசையும் ஏற்படுத்த நினைக்கவில்லை. மாறாக அவர் இவ்வுலகில் நிலைநாட்ட முனைந்த அரசு கடவுளின் அரசு ஆகும்.
- அந்த இறையரசை இவ்வுலகில் நிலை நாட்ட வேண்டுமெனின் அந்த அரசுக்குரிய விதிமுறைகள் அமைக்கப்பட வேண்டியது அவசியமாகும்.
- எனவே அந்த விதிமுறைகளை சொல் வடிவில் மட்டுமன்றி செயல் வடிவிலும் செயற்படுத்திய தன்மையை நாம் கிறிஸ்து இயேசுவிலே காண முடிகின்றது.
- யூத மதத்தின் சட்டங்களையும் சடங்குகள் சம்பிரதாயங்களையும் கடைப்பிடித்து யூத குலத்திலேயே ஒரு மனிதராகப் பிறந்த இறைமகன் கிறிஸ்து இயேசு அன்றைய சமூக சமய கலாசாரத் தாக்கங்களில் நின்று வேறுப்பட்டவராக வாழ நினைக்கவில்லை.
- மாறாக அம்மக்களை உண்மை நெறியில் வாழ வைத்து விண்ணக அரசின் பண்புகளையும் விழுமியங்களையும் கடைப்பிடித்து வாழப் பணிப்பதே அவர் தம் பணியாக அமைந்து காணப்பட்டது.
- சொல் வடிவில் இருந்த யூத சட்டங்களை உயர் அந்தஸ்தில் இருந்தவர்கள் உதாசீனம் செய்தமையும் அச்சட்டங்களை தாழ்நிலையில் நின்ற மக்கள் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டியிருந்த நிலையும் சமுதாயத்தில் காணப்பட்ட மாபெரும் தவறாக இருந்தது.
- இத்தகைய பின்னணியில் இயேசுக்கிறிஸ்து புதியதோர் நாகரிகத்தை தோற்றுவித்து புதிய நெறியின் நிறுவுனராகவும் புதிய மதத்தின் தோற்றுவாயாகவும் திகழ்வதைக் காண முடிகின்றது.
- நீதி, சமத்துவம், அன்பு, பரிவு, இரக்கம், தாழ்ச்சி, பகிர்வு, ஒற்றுமை, மன்னிப்பு, ஏழ்மை போன்ற பண்புகளை உயரிய விழுமியங்களாக்கிக் கொள்ளும் போது சிறந்த

நாகரிகத்தை ஏற்படுத்த முடியும் என்பதை தாம் வாழ்ந்த யூத சமூகத்தில் செயற்படுத்தி புதிய நாகரிகத்தை தோற்று வித்தார்.

- அவர்தம் பிறப்பும் வாழ்வும் பணியும் பாடுகள் மரணம் உயிர்ப்பு யாவும் இத்தகைய பண்புகளையே கொண்டு அமைந்தமையால் இன்று கிறிஸ்தவம் சிறப்பான நாகரிகத்தின் தோற்றுவாயாக அமைந்துள்ளமை கண்கூடாகும்.
- எனவே இத்தகைய சிறப்பான நாகரீகத்தின் தோற்றுவாய்க்கு அடிப்படையாக அமைந்தவர் கிறிஸ்துவே என்றால் அது சாலப்பொருத்தமாகும்.

### 7.1.1.1 கிறிஸ்து என்பவர் யார்?

- எபிரேயம், அரமெயிக் ஆகிய மொழிகளின் சொல்லான ''மெசியாவும்'' கிரேக்கச் சொல்லான '' கிறிஸ்துவும்'' திருப்பொழிவு செய்யப்பட்டவர் என்ற பொருளைத் தருகின்றன.

### பழைய ஏற்பாடு

- பழைய ஏற்பாட்டில் '' திருப்பொழிவு செய்யப்பட்டவர்'' என்ற சொல் முதலில் அரசனுக்கே வழங்கப்பட்டது. (1 சாமு 9:16; 10:1,10; 16:13).
- பின்னர் சிறப்பாக குருக்களைக் குறிக்கவும் இச் சொல் பயன்படுத்தப்பட்டது ( யாத் . 29:7, 30: 22-33) பிற்காலத்தில் தலைமைக் குரு மட்டுமன்றி குருக்கள் யாவரும் திருப்பொழிவு செய்யப்படுவர் (யாத். 28:41, 30:30; 40:15).
- இறுதிக்கால இயலில் குருத்துவமும் அரசும் இணைந்து செயல்புரியும் காட்சிகளைப் படம்பிடித்துக்காட்டுகின்றன. சில இறைவாக்கு வாசகங்களை நீடித்து (எரே. 33:14-18; எசெ. 45:1-8 , செக் 4: 1-14; 6:13) சில குழுக்கள் எல்லாவற்றிற்கும் முதன்மை வகிக்க குருத்துவ மெசியாவும், இவ்வுலக காரியங்களுக்குப் பொறுப்பேற்க அரச மெசியாவும் ஆக இரண்டு மெசியாக்கள் வருவார்கள் என்று எதிர்பார்த்தார்கள். குறிப்பாக எசேனியர் குழுவினர் இரு மெசியாக்களை எதிர்பார்த்ததாக தெரிகிறது. இதில் குருக்களின் செல்வாக்கு சிறப்புப் பெற்றுள்ளது.
- யூதர்களின் இறுதிக்கால இயல் மெசியாவின் எதிர்பார்ப்புக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கிறது அரச மெசியாவைப் பெரும்பாலானோரும் குருத்துவ மெசியாவை ஒரு சிலரும் எதிர்பார்த்தனர்.
- யூதர்கள் கனவு கண்ட மெசியா அவர்களின் அன்றாட அல்லல்களிலிருந்து விடுதலை வழங்கும் வீரர் ஆவார். ஆனால் மறைநூல்கள் கூறும் மெசியா அதற்கு அப்பாற்பட்டவராக திகழ்கின்றார்.
- மறைநூல்கள் மெசியாவின் கீழ் இறையரசு நிலைநாட்டப்படுவதையும், அவர் ஆண்டவரின் ஊழியனாகவும், மனுமகனாகவும், மீட்பராகவும் தோன்றுவதை அறிவிக்கின்றன.
- தாவீதின் வழியிலே ஓர் இலட்சிய அரசர் வரவேண்டுமென்றும் அப்பொழுது கடவுள் என்றும் அழியாத ஓர் அரசை மண்ணில் நிறுவுவார் என்றும், அதனால் இந்த அரசு அமைதி, நீதி, நேர்மை, கடவுளை உண்மையாக வழிபடும் அறிவு அனைத்தையும் கொண்டு விளங்கும் என்றும் எதிர்பார்த்தனர்.

### புதிய ஏற்பாடு

- ''கிறிஸ்து'' என்பது 'புதிய ஏற்பாடு இயேசுவுக்கு அளிக்கும் பட்டமாகும். பழைய ஏற்பாட்டு இறைவாக்குகள் முன்னுரைத்த உண்மையான திருப்பொழிவு செய்யப்பட்டவர் இவரே என்பதை (1 சாமு 2:10: திபா 2: 2) நற்செய்திகள் மீண்டும் மீண்டும் ''கிறிஸ்து இவரே'' எனக் கூறி வலியுறுத்துகின்றன (யோவா 20:31).
- திருத்தூதர்கள் (அப்போஸ்தலர்) காலத்தில் இது இயேசுவுக்கே உரிய பெயராக மாறியது. தாவீதின் மகனாகிய மெசியாவின் வருகையை எதிர்பார்த்திருந்த யூத

மக்களில் ஆயிரங்கால நம்பிக்கைக்கும் இயேசுவுக்குமுள்ள நிலையான பிணைப்பை வெளிக்காட்டுவதும் இப்பெயரே.

- நற்செய்திகள் கிறிஸ்து எனும் சொல் பெயருரிப் பொருளில் வழக்கமாகப் பயன்படுத்தப்படுகிறது: சான்றாக ''நீர் மெசியா'' (மாற்கு 8:29): ஆண்டவருடைய மெசியா(லூக் 2:26) இயேசுக்கிறிஸ்துவை (திப 5:42).
- இது ஏறத்தாழ இயேசுவின் மற்றொரு பெயராக அல்லது பட்டமாக மாறிவிட்டது எனலாம். சான்றாக '' கடவுளின் மகனாகிய இயேசுக்கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி'' (மாற்கு 1:1); '' நாம் பாவிகளாக இருந்த போதே, கிறிஸ்து நமக்காக தம் உயிரைக் கொடுத்தார்'' (உரோ. 5:8); ''திருமுழுக்கினால் கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருக்கும் நாம் அனைவரும்'' (உரோ.6:3).
- ஆனால் இந்த இரு பெயர்களும் உண்மையில் ஒன்றுக்கு மற்றொன்று மாற்றுப் பெயர்கள் அன்று. இயேசு என்பது அவர் விருத்தசேதனம் பெற்றபோது கொடுக்கப்பட்ட பெயர் (லூக் 2:21). மெசியா அல்லது கிறிஸ்து என்பது இறைவனுக்கும் மனுக்குலத்திற்கும் இடையில் ஒப்புரவு ஆக்குபவராக இடை நிலையாளராக உள்ள அவரது மீட்புப் பணியைச் சிறப்பாகக் குறித்துக்காட்டும் பெயராக உள்ளது. சில நேரங்களில் வழக்கமாகப் பயன்படுத்தும் முறையை மாற்றி ''கிறிஸ்து இயேசு'' என்று பவுள் குறிப்பிடுகிறார். (உரோ 3:24: 8:2,39).

### ''கிறிஸ்து'' இயேசு பெற்ற பட்டம்

- இயேசுவின் புனிதத்தையும், அதிகாரத்தையும், வல்லமையையும் கண்டு வியப்புற்ற மக்கள் ''அவர் மெசியாவாக இருப்பாரோ?'' (யோவா 7:31,40-42), '' தாவீதின் மகன் இவரோ?'' (மத்.12:23) என்று தங்களிடையே கேட்டுக்கொண்டனர்.
- யூதத் தலைவர்களோ அவரை மெசியாவாக எவனாவது ஏற்றுக்கொண்டால் அவனைத் தொழுகை கூடத்திற்குப் புறம்பாக்க முடிவுசெய்தனர் ( யோவா 9:22).
- அவரது அதிசய வல்லமையின் பயனை அடைந்தவர்கள் ''தாவீதின் மகனே'' என்று உரக்கக் கூவினர் (மத்.9:27: 15:22; 20:30 தொ).
- ''நீரே மெசியா'' என்று பலர் வெளிப்படையாக விசுவாச அறிக்கையிடலாயினர். இயேசுவின் திருமுழுக்கு நிகழ்ச்சிக்குப்பின் முதற் சீடர்கள் '' மெசியாவைக் கண்டோம்'' என்று கூறினர் (யோவா 1:41,45,49). ''நீங்கள் நான் யார் என்று சொல்கிறீர்கள்?'' என்ற கேள்விக்கு ''நீர் மெசியா'' (மாற்.8:29) என்ற பேதுருவின் விசுவாச அறிக்கையை ஒத்தமை நற்செய்தியாளர்கள் சிறப்பாகக் குறிப்பிடுகின்றனர்.
- ஆனால் இவர்களது விசுவாசம் உண்மையாயினும் அவ்விசுவாசம் பக்குவம் பெறவேண்டியிருந்தது. ஏனெனில் அவரைப்பிடித்துக் கொண்டுப் போய் அரசனாக்கும் எண்ணங்கள் இன்னும் நீங்கவில்லை (யோவா.6:15).

### இயேசுவின் மனநிலை

- இது பற்றி இயேசுவோ தன்டைக்கமான போக்குடையவராக உள்ளார்.
தமக்குத் தாமே அவர் மெசியா எனும் பட்டத்தை சூட்டிக் கொண்டவர் அல்லர்.
- ''தாவீதின் மகனே'' என்று தம்மைக் கூவி அழைக்க அனுமதி அளித்தாலும் மெசியா என்று தம்மைப் பேய்பிடித்தோர் அறிவிப்பதைத் தடை செய்கின்றார் (லூக்.4:41).
- பேதுருவின் விசுவாச அறிக்கைக்குப் பின் தான் மெசியா என்பதை ஒருவருக்கும் சொல்ல வேண்டாமென தம் சீடர்களைக் கேட்டுக் கொள்கிறார் (மத் 16:26).
- மெசியாவைப் பற்றி தம் சீடர்கள் கொண்டிருந்த கருத்துக்களைத் தூய்மையாக்கும் முயற்சியில் ஈடுபட்டார். பாடுபடும் ஊழியனைப் போல் தமது மெசியாப் பணியை ஆரம்பித்து மனுமகனைப் போல் தம் உயிரைக் கையளித்து மகிமையில் புகுவார் (மாற்கு 8:31, 9:31, 10:33-34).

- இறுதியில் சமயத் தலைவர்கள் அவரை விசாரனை செய்த போது ‘‘நீ கடவுளின் மகனாகிய மெசியாவா?’’ என்பதற்கு இயேசு பதில் சொல்லும்படி கட்டளையிடுகிறார். இயேசுவோ அப்பட்டத்தை மறுக்காது ‘தாம் இறைவனின் வலப்பக்கத்தில் அமர்வதற்கென்றே பிறந்த மனுமகன் என்று எல்லாத்திற்கும் அப்பாற்பட்ட கண்ணோட்டத்தில் விளக்கமளிக்கின்றார். பாடுகளின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட இவ்வறிக்கையை இறுதியில் அவரை மரணத் தீர்ப்புக்குள்ளாக்குவதற்கும் காரணமாக அமைந்தது (மத். 26:63 தொ).
- இவ்வாறு அவரது மெசியா பட்டத்தோடு (மத். 26:68; மாற் 15:32; லூக். 23:35,39) அரசர் பட்டமும் ஒரே சமயத்தில் இகழ்ச்சிக்குள்ளாயின.
- சீடர்கள் அவரது உயிர்ப்புக்கும் பின்னரேத்தான் அவர் எதை மறைத்துக் கொண்டிருந்தார் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. ‘‘மெசியா தாம் மாட்சி அடைவதற்கு முன் இத்துன்பங்களைப் பட வேண்டுமல்லவா?’’ (லூக் 24:26). மெசியா துன்பங்கள் வழியாகப் பெற்ற மகிமை உலக மகிமையிலிருந்து உயர்ந்தது என்பதை உணர்ந்தனர். மெசியா பாடுபட்டு இருந்தோரிடமிருந்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுவார் எனும் மறைநூல் வாக்கை நம்பினர்.

## உயிர்த்த இயேசுவே கிறிஸ்து ஆவார்

- பாஸ்கு அனுபவம் மெசியாவைப் பற்றிய தவறான கருத்துக்களைத் தகர்த்தெறிந்தது.
- இளந்திருச்சபை இயேசுவே மெசியா - கிறிஸ்து - என்று பறைசாற்றத் தொடங்கியது. இவ்விதம் பறைசாற்றுவதற்குக் காரணங்கள் இருந்தன. ‘ இயேசு உருவில் வந்தவரே அவர்கள் எதிர்பார்த்த கிறிஸ்து என்று யூதர்களுக்கு காண்பிக்க வேண்டியிருந்தது. இவ்விதம் காட்டுவதற்குப் பழைய உடன்படிக்கையும் புதிய உடன்படிக்கையும் தொடர்ச்சியானவை; அத்துடன் பழைய உடன்படிக்கையின் நிறைவே புதிய உடன்படிக்கை ஆகும் என்று ஆணித்தரமாக எடுத்துரைத்தனர்.
- இச் சிந்தனைகளின் படி
  - தாவீதின் உண்மையான மகன் இயேசு ஆவார் (மத் 1:1; லூக் 1:27; 2:4; உரோ 1:3; தி.ப.2:29; தொ.13:23).
  - அவர் தூய ஆவியானவரின் வல்லமையால் தாயின் வயிற்றில் உருவான தருணத்திலிருந்தே (லூக் 1: 35) தமது தந்தையான தாவீதின் அரியனையில் அமர நிச்சயிக்கப்படுவார் (லூக் 1 : 32).
  - அவரே இஸ்ரயேலரின் அரசுக்கு நிறைவு அளிக்கும் வகையில் வையகத்தில் இறையரசை நிலைநாட்டப் பிறந்தவர் அவரே. வாக்களிக்கப்பட்ட தூய ஆவியைத் தம் தந்தையிடமிருந்து பெற்றுப் பொழிந்தவர்’’ (திப. 2 : 33).
  - பிறகு ‘‘ நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவைக் கடவுள் ஆண்டவரும் மெசியாவுமாக்கினார்’’ (திப. 2:36).
  - இவ்வாறு தமது உயிர்ப்பின் மூலம் இன்று இயேசு மன்னருக்குரிய மகிமையில் விளங்குகின்றார். இம் மகிமை இறைவனின் புதிய படைப்பைச் சார்ந்ததாகும். மானிட மகிமையைக் காட்டிலும் உயர்ந்த மகிமையை இயேசு பெற்றுள்ளார் என்பதற்கு அவருடைய உயிர்ப்பே மிகத் தெளிவாகச் சான்று பகர்ந்தது.

## நாசரேத்தூர் இயேசு

- நாசரேத்தூர் இயேசுவையே அவரது உயிர்ப்பின் பின்னர் அவரது சீடரும் அவரில் நம்பிக்கை வைத்தவர்களும் (விசுவசித்தவர்களும்) மெசியாவாக - கிறிஸ்துவாக ஏற்றுக்கொண்டனர்.
- கிறிஸ்துவாகிய நாசரேத்தூர் இயேசுவின் வாழ்வு பணி போதனைக் கண்ணோட்டம் ஆகியவை கிறிஸ்தவத்திற்கும் கிறிஸ்தவம் ஏற்படுத்திய நாகரிகத் தாக்கங்களுக்கும் அடிப்படையாக உள்ளன.

- இந்த இயேசுவின் போதனைக் கண்ணோட்டம் எத்தன்மையனவாக இருந்தன என அறிவது முக்கியமானதாகும்.

### 7.1.1.2 கிறிஸ்துவின் மலைப்பொழிவுப் பட்டிப்பினை (மத். 5: 1 - 7 அதி)

- இயேசு வழங்கிய ''மலைப்பொழிவு'' மத்தேயு நற்செய்தியில் 5 - 7 அதிகாரங்களில் அடங்கியுள்ளது. இயேசு உயர்ந்த இடத்தில் அமர்ந்திருந்து தமது போதனைகள அதிகாரத்தோடு முன்வைத்தார். இம் மலைப்பொழிவினூடாக உயர்ந்த மதிப்பீடுகளை இயேசு தமது சீடரின் வாழ்க்கைச் சட்டமாகப் போதித்தார்.
- புதிய மோசேயாக இயேசுவைச் சுட்டிக்காட்டி யூத சட்டங்களுக்கு நிகரான புதிய சட்டமாகவே மலைப் பொழிவுகளில் இயேசு மெசியாவாகக் காட்சியளிக்கிறார். பழைய ஏற்பாட்டு வாக்குறுதிகளை நிறைவேற்றி ஒரு புதிய யுகத்தைத் தோற்றுவிப்பவராக வருகிறார்.
- இயேசு நிறைவு காலத்தில் வரும் கடவுளின் தூதுவராக இங்கு தோன்றுகிறார். அவருடைய பணிக்கு மலைப் பொழிவில் வருகின்ற ''பேறுபெற்றோர்'' எனும் பகுதி ஓர் அடித்தளம் போல அமைகின்றது. இந்த போதனைகளை இயேசு ஒரு புதிய சட்டநூல் போலத் தரவில்லை; மாறாக பழைய ஏற்பாட்டு மரபில் ஊன்றி, அம்மரபை உண்மையின் ஒளியில் விளக்குகிறார்.
- இயேசுவின் மக்கள் நன்னடத்தை உள்ளவர்களாக விளங்கவேண்டும் என்று மட்டும் போதிக்கவில்லை. அவர் மக்களிடம் எதிர்பார்த்தது அவர் போதித்த இறையாட்சியை மக்கள் விருப்புடன் ஏற்க வேண்டும் என்பதுதான். அந்த இறையாட்சியில் இடம்பெற வேண்டும் என்றால் மனிதர் என்ன செய்ய வேண்டும் என்பதையும் எத்தகைய பண்புடையவர்களாக மாறவேண்டும் என்பதையும் இயேசு எடுத்துரைத்தார்.
- மலைப் பொழிவு நற்செய்தி அடிப்படையில் அமையும் வாழ்க்கை நெறி யாது என்று எடுத்துரைக்கின்றது.

**பேறுபெற்றோர் (5 : 3 - 12)**

- மத்தேயுவில் காணப்படும் மலைப்பொழிவின் முதல் பகுதி ''பேறுபெற்றோர்'' (Beatitudes) எனும் பாடமாக உள்ளது.
- கடவுளின் ஆட்சி முழுமையாக வரும்போது எந்தெந்த பண்புகளும் செயல்களும் கடவுளிடமிருந்து நாம் பரிசுபெறத்தகுந்தவையாக இருக்கும் என்பதையும், ஆகவே தற்போது நம் வாழ்க்கையில் நாம் வளர்க்க வேண்டிய நற்பண்புகளும் செயல்களும் யாவை என்பதையும் இந்தப் ''பேறுபெற்றோர்'' பகுதி காட்டுகிறது.
- இது மக்காறியோஸ் (Makarios) என்னும் கிரேக்கச் சொல்லின் மொழி பெயர்ப்பாகும்.
- பழைய ஏற்பாட்டில் ''பேறுபெற்றோர்'' எனும் சொல் வாழ்வின் நிறைவை அனுபவிக்கும் நிலையைக் குறிக்கிறது. அந்த அனுபவம் கடவுள்மேல் கொள்ளும் நம்பிக்கையிலிருந்தும் நீதி வேட்கையிலிருந்தும் பிறக்கிறது. (திபா 2:12; 40:4; 145:5 - 7). திருப்பாடல் 1:1-6 ஒருவரது நடத்தையில் போற்றுதற்குரிய அம்சங்களை அடையாளம் காட்டுகிறது. நற்பேறுபெற்றவர் தீய நடத்தையை விலக்கி, கடவுளுக்கு ஏற்புடைய விதத்தில் நடப்பர்.
- புதிய ஏற்பாட்டில் ''பேறுபெற்றோர்'' கடவுளின் ஆட்சியில் பங்குகொள்வதால் பிறக்கின்ற மகிழ்ச்சியையும், மீட்பைக் கொடையாகப் பெறுவதால் எழுகின்ற மனநிறைவையும் குறிக்கின்றது. (லூக். 1:48; மத். 13:16; யோவா 20:29; உரோ. 4: 6 - 7).
- உண்மையான மதிப்பீடுகளின் அடிப்படையில் அமையாத மனித கணிப்புகளைக் கடவுள் புரட்டிப்போடுவார் எனும் கருத்தை ''பேறுபெற்றோர்'' எனும் வாழ்த்துச் சொல்லோடு இணைத்துச் சொல்லப்படுகிறது.
- நாம் ஏழையரின் உள்ளத்தோராய் இருந்தால், துயரத்துக்கு ஆளாகியிருந்தால், கனிவுடையோராய் இருந்தால், நீதி நிலைநாட்டும் வேட்கையுடையோராய் இருந்தால்,

இரக்கமுடையோராய் இருந்தால், தூய்மையான உள்ளத்தோராய் இருந்தால், அமைதி ஏற்படுத்துவோராய் இருந்தால், நீதியின் பொருட்டு துன்பங்களைத் தாங்குவோராய் இருந்தால் இறையாட்சி நமக்கு உரித்தாகும் என்பது இயேசுவின் போதனை.

- எட்டு ''பேறுபெற்றோர்'' என்னும் வாழ்த்துரைகளையும் ஒப்பிட்டுப்பார்க்கும் போது ஏழைகள், துயருறுவோர், பசிதாகம் கொண்டோர் ஆகியோரை இயேசு சந்தித்திருந்தார். இவர்கள் நடுவேதான் இயேசுவின் பணியும் நடந்தது. கனிவுடையோராய், இரக்கமுடையோராய், தூய்மையுடையோராய், அமைதி ஏற்படுத்துவோராய் வாழ்வது பெரியதொரு வாழ்க்கைச் சவால்தான். ''நீதி'' பற்றி வருகின்ற வசனங்கள் கடவுளுக்கு உகந்த நேர்மையான நடத்தையைக் குறிக்கும்.
- பேறுகள் முன்னோக்கும் ஆட்கள் கிறிஸ்துவின் சீடர்களைக் கொண்ட புதிய சமூகமாகும். இவர்கள் ''மண்ணுலகிற்கு உப்பாயும்'' ''உலகிற்கு ஒளியாயும்'' இருப்பர் (மத்.15: 13 - 16). இவர்கள் தங்கள் வாழ்க்கை முறை வழியாக இறைவனைத் போற்ற பிறரை அழைக்கின்றனர்.

## சட்டங்களும் நெறிவாழ்வும்

- சட்டத்திற்கு நிலையான மதிப்பீடு உண்டு என இயேசு போதிக்கிறார். சீடர்களின் வாழ்வை வேறுபடுத்திக் காட்டுவது அவர்களது நெறியைவிட சிறந்திருப்பதேயாகும் (மத். 5:17-20). இந்த நெறி சிறந்திருத்தல் இருபடிக் குவிமையம் கொண்டுள்ளது. ஒன்று அயலவர் பாலும் (5: 41-48); மற்றது இறைவன் பாலும் (6:1-7:12) காட்டும் செயல் முறையான நடத்தையாகும். இந்நடத்தையின் சிறப்பு அடையாளம் அன்பாகும் (5: 44 - 45; 7:12). உண்மையில் இறைவன் அன்பு செய்வதுபோல் அன்பு செய்வது சீடர்களுக்கு நிறைவுள்ளவர்களாக இருப்பதாகும் (5:48).

## ஆறு எதிர்கூற்றுக்கள் (5 : 21 - 48)

- முற்காலத்தில் கூறப்பட்டது இது இது.... நானோ வேறுவிதமாகச் சொல்கிறேன் என்ற பாணியில் அந்த எதிர்கூற்றுக்கள் அமைந்துள்ளன.
- சினங்கொள்ளுதல், விபசாரம், மணவிலக்கு, ஆணையிடுதல், பழிவாங்குதல், பகைவரிடம் அன்பாயிருத்தல் போன்ற பொருள்கள் பற்றி இயேசு பழைய ஒழுங்குமுறையைப் புதிய விதத்தில் விளக்கிப் பொருள் உரைக்கிறார்.
- விவிலியப் போதனையின் உண்மையான பொருள் என்ன என்பதை மேலெழுந்தவாரியாக அல்லாமல் வேரோட்டமான விதத்தில் விளக்கிக் கொள்கிறார்.
- இயேசு திருச்சட்டத்தையோ இறைவாக்குகளையோ அழிக்க வரவில்லை, மாறாக அவற்றை நிறைவேற்றி வைத்தார் (5:17).

## யூத சமய வழக்கங்கள் (6 : 1 - 18)

- யூத சமய வழக்கங்களாகிய தர்மம் கொடுத்தல் போன்ற அறச்செயல்கள் புரிதல், இறைவேண்டல் செய்தல், நோன்பிருத்தல் ஆகியவற்றிற்கும் இயேசு வேரோட்டமான புது விளக்கம் தருகிறார்.
- பிறர் பார்த்து நம்மைப் பாராட்ட வேண்டுமென்பதற்காக இச்செயல்களைச் செய்யாமல் கடவுளின் முன்னிலையில் அவற்றைச் செய்து அவரிடமிருந்தே கைம்மாறு எதிர்ப்பார்த்தல் வேண்டும் என்பது அப்போதனை.

## ஞான அறிவுப் போதனை (6 : 19 - 7 : 12)

- உண்மைச் செல்லம் எங்குள்ளது என இயேசு விளக்குகிறார்; மனஅமைதி பெறுவதற்கான வழியைக் காட்டுகிறார்; இறைவேண்டலின் தன்மையைக் குறிப்பிடுகிறார்.
- இறுதியில் பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புபவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள் என்னும் பொன் விதியை வழங்குகிறார்.

**இயேசுவின் போதனைகள் விடுக்கும் சவால் (7 : 13 - 27)**

- அது ''இடுக்கமான வாயில்'' வழியே நுழைவது போன்றது. ஏனென்றால் வெறும் வார்த்தைகளால் மட்டுமே நாம் அவருடைய சீடர்களாகிட முடியாது. சொல்லும் செயலும் இணையும் போதுதான், நற்சொல்லும் நற்செயலும் நம் வாழ்வின் முத்திரைகளாக மாறும்போதுதான் நாம் உண்மையிலேயே இயேசுவின் சீடராக உருவெடுப்போம்.
- கிறிஸ்துவின் படிப்பினைகளாகிய அடித்தளத்தில் அமைக்கப்படும் வாழ்வு சவால்களைச் சந்தித்தாலும் இறையாட்சியின் செயல்களை நிறைவேற்றுவதில் உறுதியாக இருக்கும் (7 : 24 - 27). இவனே ஞானமிகக் சீடனாவான்.
- கடவுளின் ஆட்சிதான் அனைத்திற்கும் மேலான மதிப்பீடு என இயேசு போதித்ததின் அடிப்படையில் தான் அவர் கடவுளின் ஆட்சியில் புகுவதற்கான நிபந்தனைகளாகத் தம் அறநெறிப் படிப்பினையைத் தருகிறார்.
- கடவுளின் ஆட்சி முழுமையாக மலரும் வேளையில் கடவுள் நல்லவர்களுக்குப் பரிசும் தீயோருக்குத் தண்டனையும் வழங்குவார் என்பதை உணர்ந்து, பரிசு பெறும் நோக்குடன் நாம் நன்னடத்தையை மேற்கொள்ளலாம். திருநூலில் கடவுள் தம் விருப்பத்தை வெளிப்படுத்தும்போது அந்த விருப்பத்தின்படி நடக்கும் நோக்குடன் நாம் நன்னடத்தை கொண்டோராய் இருக்கலாம்.
- நம் வானகத் தந்தை நம் மட்டில் எவ்வாறு நடந்து கொள்கிறாரோ அதே விதத்தில் நாமும் பிறர் மட்டில் நடந்துகொள்ள முன்வந்து, கடவுளின் நடத்தையே நம் நடத்தைக்கு முன்மாதிரியாகக் கொள்ளவேண்டும் (5 : 43 - 48).
- இயேசுவின் மலைப்பொழிவை ஒரு சட்டநூலாக நாம் பார்ப்பது தவறு. இயேசுவின் மலைப் பொழிவு நம் அனைவருக்கும் அறநெறி ஒழுங்குகளை வழங்குகிறது என்பதில் ஐயமில்லை. கிறிஸ்தவர்கள் எத்தகைய மனநிலையோடு செயல்படவேண்டும் என்பதையும் எவ்வாறு நடக்கவேண்டும் என்பதையும் அந்த ஒழுங்குகள் எடுத்துரைக்கின்றன. கிறிஸ்தவப் பண்பை நம்மில் உருவாக்கவும், கிறிஸ்தவ நடத்தைக்கு எடுத்துக்காட்டாகவும் அவை உள்ளன. கிறிஸ்துவை நாம் பின்செல்லவும் அவருடைய சீடராக நாம் மாறவும் இவை உறுதுணையாக உள்ளன.
- இறையாட்சித் திட்டத்தை செயல்படுத்தும் கருவிகளாக எமது சிந்தனை, சொல், செயல் அனைத்தும் மாற்றம் பெற்று ஒளிரும் புரட்சிகரமான மாற்றுக் கலாச்சாரம் ஒன்றிற்கு வழி வகுக்க வேண்டும். இறையாட்சிப் படிப்பினைகளுக்கேற்ப அமையும் வாழ்வு அடுத்தவர்களுக்கேற்ப அமையும் வாழ்வு அடுத்தவர்களுக்கு சாரமுள்ள உப்பாகவும் ஒளிர்விக்கும் வெளிச்சமாகவும் உள்ள பணி வாழ்வாக அமையும் (5:13-16).

## 7.1.2 திருத்தூதர் மரபும், படிப்பினைகளும்

### 7.1.2.1 தூய ஆவியின் வருகை : (தி.ப. 2 :2 - 3)

- யூதர்களின் முக்கிய விழாக்களின் ஒன்றான பெந்தக்கோஸ்து விழாவிற்கென உலகெங்கும் சிதறுண்டு வாழ்ந்த யூதர்களும் எருசலேமில் உள்ளவர்களும் எருசலேம் ஆலயத்தில் ஒன்று கூடியிருந்த வேளையிலே தூய ஆவியானவரின் வருகை நிகழ்கிறது.
- தூய ஆவியின் வருகை திருச்சபையின் நற்செய்திப் பணியின் தொடக்கமாகவும்; உலகத் திருச்சபையின் தோற்றமாகவும்; சிதறுண்டுபோன இறைமக்கள் ஒன்றிணைக்கப் படும் தன்மையாகவும் விளங்குகின்றது.
- கிறிஸ்து இயேசுவின் சிலுவை மரணத்தின் பின்னர் இயேசுவின் திருத்தூதர்கள் அச்சத்தினால் ''செனாக் கொலுட்'' என்னும் மண்டபத்தில் ஒழிந்திருந்தனர்.
- இயேசுவின் உயிர்ப்பும் தரிசனமும் அவர்களுக்கு ஓரளவு மனத் திடத்தைக் கொடுத்தாலும்

இயேசுவின் விண்ணேற்றத்தின் பின்னர் மீண்டும் அவர்கள் அச்சத்தினால் நலிவுற்று ஒழிந்திருந்தனர்.

- இந்தப் பின்னணியிலேயே பூட்டியிருந்த அறைக்குள் தூய ஆவியானவரின் வருகை நிகழ்கின்றது. கொடுங்காற்று வீசுவது போன்ற இரைச்சலுடன் நெருப்புப் போன்ற பிளவுபட்ட நாவுகள் வடிவத்தில் அங்கிருந்த ஒவ்வொருவர் மேலும் இறங்கினார்.
- தூய ஆவியானவரைப் பெற்றுக்கொண்ட பின்னர் திருத்தூதர்களின் செயற்பாட்டில் புதிய மாற்றங்கள் ஏற்பட்டன. படிப்பறிவற்ற பாமரர்களான திருத்துதர்கள் ஒவ்வொருவரும் ஞானத்துடனும் அறிவுத் தெளிவுடனும், துணிவு பெற்று எல்லா இடங்களிலும் இருந்து வந்திருந்த அனைத்துலக யூதர்களுக்கும் விளங்கக் கூடிய மொழியில் கிறிஸ்து இயேசுவின் நற்செய்தியை துணிவுடன் பறைசாற்றினர்.
- இவ்விதம் நற்செய்தி அறிவிப்புப் பணிக்கு ஆரம்பமாக அமைந்தது தூய ஆவியாரின் வருகையே ஆகும்.
- அடுத்து திருச்சபையின் தோற்றப்பாட்டிற்கு காரணமாக அமைகின்ற தன்மையை நோக்கின் முதலில் திருத்தூதர் பல மொழிகளில் பேசி இறைவனின் மாண்பைப் போற்றினார்கள்.
- இரண்டாவதாக திருத்தூதர் பேசுவதை பல நாட்டவரும் தத்தமது மொழிகளில் புரிந்து கொண்டனர்.
- அடுத்து அன்றைய நாளில் அகில உலகெங்கும் கூடியிருந்த ஒரு கூட்டமாக உலக நாடுகளின் பிரதி நிதிகளாக அவர்கள் கணிக்கப்பட்டிருந்தனர்.
- எனவே பரிசுத்த ஆவியின் தினத்தில் அகில உலகத் திருச்சபை உருவாகின்றது.
- திருக்கூட்டம் ஒன்றிணைந்த தன்மையை நோக்கும்போது பெந்தக்கோஸ்து விழாவுக்கென யூதரும், யூதரல்லாத புற மதத்தினரும் ஜெருசலேமில் ஒன்று கூடி இருந்ததையும் அவர்கள் அனைவரும் திருத்தூதர்கள் போதித்தைப் பணிவோடு கேட்டு, உள்ளத்தில் ஏற்று, திருப்பந்தியிலும், பங்கு கொண்டு இறைமக்கள் குடும்பமாயினர் என்று குறிப்பிடுவதின் மூலம் தூய ஆவியாரின் வருகையானது புதிய சமுதாய தோற்றப்பாடாகும். புதிய ஒரு நாகரிக உருவாக்கத்திற்கும் காரணமாக நின்றதை அனுமானிக்கக் கூடியதாய் உள்ளது.

### 7.1.2.2 டிடாக்கே

- ‘‘பன்னிரு திருத்தூதர்களின் போதனை’’ என்பதே இந்நூலின் தலைப்பு ஆகும். திருச்சபையின் மிகத் தொன்மையான எழுத்து வடிவில் உள்ள சான்று இந்நூல். இது நற்செய்தி அறிவிப்பு, வழிபாடு, பணி ஆகியவை பற்றிய வழிகாட்டுதல்களைத் தருகின்றது.
- அதில் ‘‘நற்செய்தி அறியாதோருக்கெனப் பன்னிரு திருத்தூதர்கள் அளித்த ஆண்டவரின் போதனை’’ எனும் தலைப்பு காணப்பட்டது.
- அப்போதிருந்த ஒரே கையெழுத்துப் பிரதி 1056 இல் மறுப்பதிப்புச் செய்யப்பட்டது.
- இப்பிரதி 1873இல் கண்டுபிடிக்கப்பட்டு, பத்து ஆண்டுகளுக்குப் பின் புதிப்பிக்கப்பட்டன.
- அலெக்சாந்திரியா நகரத்து கிளமந்து என்பவரே முதன் முதலில் இந்நூலிலிருந்து மேற்கோள் காட்டுகிறார்.
- புதிய ஏற்பாட்டுத் திருமறை சேராத நூல்களில் ஒன்றாக இது ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- மற்றத் திருச்சபை ஒழுங்குகளைப் போல ‘‘டிடாக்கே’’ யில் உள்ளவையும் பல மூலங்களிலிருந்து எடுத்துச் சேர்க்கப்பட்டவயாகவே தோன்றுகின்றன. நூலின் உட்பகுதியில் உள்ள முக்கிய பொருள்களும், அதை எழுதியவர்களின் காலமும், நூலைத் தொகுத்தவர்களின் காலமும் வெவ்வேறாக இருக்கலாம். இந்நூல் எழுதப்பட்ட காலம் பற்றி அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய எந்தவொரு முடிவுக்கும் இதுவரை யாரும் வரவில்லை. ஆனால் நூலின் பல பகுதிகள் அப்போஸ்தலர் காலத்திலிருந்தே

வருகின்றன என்று ஆய்வாளர்கள் பலர் ஏற்றுக்கொள்வர்.

- தொடக்க காலத் திருச்சபையில் பயன்படுத்தப்பட்ட சிறிய மறைக்கல்வி நூல் போன்ற இந்நூல் திருச்பையின் அமைப்பை விபரிக்கின்றது.
- திருமுழுக்கு, நோன்பு, நற்கருணை, ஆண்டவரின் நாள் அனுசரிப்பு, கடைப்பிடிக்கப்பட்ட பழக்க வழக்கங்கள், ஆட்சி முறை பற்றிய விபரங்களையும் கொண்டுள்ளது.

**போதனைகள்**

- முதல் ஆறு அதிகாரங்களில் ஒழுக்கம் பற்றிய ஒழுங்குகள் காணப்படுகின்றன. ''வாழ்வுக்கும்'' ''சாவுக்கும்'' இட்டுச்செல்லும் வழிகள் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. இவ்விரு வழிகள் பற்றிய போதனை திருமுழுக்குப் பெறுவதற்கு முன் அவர்களுக்கு அளிக்கப்படும் போதனையாக இருந்தது.
- 7-8 ஆம் அதிகாரங்களில் திருமுழுக்கு பற்றிய போதனைகள் வழங்கப்பட்டுள்ளன.
- 9-10 ஆம் அதிகாரங்கள் திருச்சபையின் பொது உணவுக்கு முன்னும், பின்னும் சொல்லப்படும் நன்றிச் செபங்களாகும். திருமுழுக்குப் பெறாதவர்கள் இந்த நன்றி வழிபாட்டில் கலந்து கொள்ளக்கூடாது என்றும் கூறப்பட்டுள்ளது. இது ''அன்புணவாகத்தான்'' இருக்க வேண்டுமேயொழிய ஆண்டவரின் உணவாக இருக்கமுடியாது எனக் கருதுகின்றனர். ஏனெனில் இந்நன்றிச் செபங்களில் இறுதி உணவைக் குறிப்பிடும் ஒரு சொல்லோ, அப்பம், கிண்ணம் பற்றியோ எதுவும் கூறப்படவில்லை. ஆண்டவரின் உடல், இரத்தம் பற்றியும் குறிப்பு இல்லை.
- 11-13 ஆம் அதிகாரங்கள் உண்மை இறைவாக்கினர் யார், போலி இறைவாக்கினர் யார் என்பதைக் கண்டறியும் முறைபற்றிக் குறிப்பிடுகின்றது. ஏனெனில் அன்று பலர் ஆன்மீகக் கொடைகளைத் தங்கள் சொந்த நலனுக்காகப் பயன்படுத்தியிருக்க வேண்டும்.
- 14-15 ஆம் அதிகாரங்கள் ஆண்டவரின் நாளில் நற்கருணைக் கொண்டாட்டத்தைப் பற்றியும், ஆயர்கள், திருத்தொண்டர்கள் ஆகியோரை நியமிப்பது பற்றியும் கூறுகின்றன. நற்கருணை ஒரு பலியாகப் பார்க்கப்படுகின்றது. மலா. 1:11-14 நற்கருணையில் நிறைவுறுவதாகக் கூறப்படுகிறது. பாவங்களை அறிக்கையிடுதலின் அவசியத்தையும் அதற்குப் பின்னேதான் நற்கருணையில் கலந்துகொள்ள வேண்டும் என்றும் குறிப்பிடப்படுகிறது.
- 16 ஆம் அதிகாரத்தில் வெளிப்பாட்டு நடையில் ஆண்டவர் வரும் நாளைக் குறித்துச் சில அறிவுரைகள் கூறப்படுகின்றன.
- இவ்வாறு திருச்சபையின் மிகப் பழமையான நூலாக இருக்கும் டிடாகே திருச்சபை வரலாற்றில் பல உண்மைகளை நிரூபிக்கும் சான்றாக இன்றும் திகழ்கின்றது.

### 7.1.2.3 தொடக்க கால கிறிஸ்தவர்கள்

- திருச்சபையின் தொடக்க நிலைபற்றியும் அதன் வாழ்க்கை வளர்ச்சி பற்றியும் டிடாக்கே, கும்ரான் ஏடுகள், ஹேர்மஸ் ஆயன், புனித கிளமேந்தின் கடிதங்கள், புனித இக்னேசியஸின் திருமுகங்கள் போன்றவற்றில் இருந்து அறியக்கூடியதாக உள்ளது.
- தூய ஆவியைப் பெறும் வரையில் எருசலேமை விட்டு நீங்கவேண்டாம் என்றும், தூய ஆவியைப் பெற்றுக் கொண்டபின்னர் உலகின் இறுதி எல்லை வரைக்கும் நற்செய்திப்பணி தொடரப்பட வேண்டும் என்றும் கிறிஸ்து இயேசு கேட்டுக் கொண்டதற்கு இணங்க திருத்தூதர்கள் தூய ஆவியின் துணைகொண்டு செயற்படுகின்றனர்.
- துணிவுடன் எருசலேமிலும் யூதேயா, சமாரியா, கலிலேயாவிலும் திருத்தூதர்கள் இயேசுக்கிறிஸ்துவின் நற்செய்தியைப் பறைசாற்றுகின்றனர்.
- திருத்தூதர்களின் நற்செய்திப் போதனையை ஏற்று மனந்திரும்பிய யூதர்களோடு எருசலேமில் திருச்சபை உருவாகி வளர்ந்தது. இறைவார்த்தையை, நற்செய்தியை ஏற்றுக் கொண்டோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் வளர்ச்சி பெற்றது. (தி.ப. 2:2, தி.ப. 5:12, 6:7)

- எருசலேமில் திருச்சபை தொடங்கியதும் நற்செய்தியை ஏற்றுக்கொண்ட மக்களின் வாழ்க்கையின் புதிய மாற்றமும், ஏற்றமும் உருவாயிற்று.
- மக்கள் யாவரும் திருத்தூதர்களின் போதனைக்கு செவிகொடுத்தனர். தங்கள் உடைமைகளை விற்று திருத்தூதர்களிடம் கொடுத்தனர். தங்கள் சமூக வாழ்வின் பிரச்சனைகளை அவர்களிடம் வெளியிட்டு தெளிவு கண்டனர். (தி.ப. 4:34-35) அடிக்கடி ஒரே குடும்பமாய் ஒன்று கூடினர்.
- அப்பம் பிட்குதலிலும், செபத்திலும் ஒரு மனத்தோடும் முழு மனத்தோடும் ஈடுபட்டனர். துடிப்போடும், தூய்மையோடும், சகோதர நட்புணர்வோடும் ஒன்றித்து வாழ்ந்தனர்.
- இவ்வாறு ஆவியானவரின் அன்புக் கொடைகளால் ஊட்டம் பெற்று நற்செய்திக்கும், பகிர்ந்து வாழ்வதற்கும் துணை நின்றனர்.
- குறிப்பாக நட்புறவு, அன்புப் பொதுவுடமை ஆகிய இரு முக்கிய சமூகப் பண்புகளை கொண்ட குழுமமாகச் செயற்பட்டனர்.
- **நட்புறவு** என்பது ''கோயினோனியா'' என்ற கிரேக்கச் சொல்லில் இருந்து வருகின்றது. இதற்கு கிறிஸ்தவர்களுள் இருந்த ஒன்றிப்பு, பொருட்களைப் பகிர்தல் ஒன்றிப்பு (தி.ப. 4:32) நற்கருணை விருந்தினால் ஒன்றிப்பு (2:42) நிவாரணப்பணிகளில் ஒன்றிப்பு போன்ற பொருள்கள் உண்டு.
- இத்தகைய ஒன்றிப்புக்கு காரணமாய் அமைந்தவை நான்கு பண்புகளாகும். அவை திருத்தூதர் கற்பித்தவைகள கேட்டல், நட்புறவுடன் உறவாடுதல், அப்பம் பிட்குதல், கூடிச் செபித்தல். இதனால் மக்களின் நன்மதிப்பைப் பெற்றனர்.
- **அன்புப் பொதுவுடமை** என்பது ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் வாழ்ந்தனர். எதன்மீதும் உரிமை பாராட்டவில்லை; எல்லாம் பொது எனக் கொண்டனர், பகிர்ந்து வாழ்ந்தனர். தமக்குள் உயர்வு தாழ்வு பாராமல் அனைவரையும் மதித்தனர்.
- யாரும், யாருக்கும் தலைவனாகவோ, பணியாளனாகவோ இன்றி சமத்துவத் தன்மை மலர்ந்து காணப்பட்ட புதிய சமுதாயத்தை உருவாக்க முயன்றனர்.
- விசுவாசிகள், சகோதரர்கள், சீடர்கள், புதிய நெறியினர், என்ற பெரும் பெயரையும் புகழையும் பெற்றனர்.
- எனினும் தொடக்க கால கிறிஸ்தவர்களின் வாழ்வில் சுயநலம், தீமை என்பவையும், நிர்வாகச் சீர்கேடுகளும் காணப்பட்டன.
- பொதுவுடமை சமூகத்தில் பர்ணபா எந்தளவுக்குப் போற்றப்பட்டாரோ அதேபோன்று அனனியா, சபிராள் தம்பதியினரின் சுயநலம் ஒரு தீமையைக் கொண்டு வந்தது.
- அனனியா, சபிராள் தம்பதியினர் தமது நிலத்தை விற்று திருத் தூதர்களின் காலடியில் வைத்து தமது தாராள குணத்தை ஏனைய மக்கள் பாராட்ட வேண்டுமென்று ஆசைப்பட்டனர். ஆனால் தூய ஆவியானவருக்கு எதிரான செயற்பாடாக இவை அமைந்ததால் திருத்தூதரின் சாபத்துக்கும் தண்டனைக்கும் ஆளாகி மரணித்தனர்.
- மேலும் அறப்பணியில் ஏற்பட்ட குறைபாடு, கிரேக்கக் கைம்பெண்கள் கவனிக்கப்படாமை என்னும் முறைப்பாடும் இத்தகைய சீர்கேடுகளாக அமைந்திருந்தன.

## தொடக்க கால கிறிஸ்தவர்களின் ஆன்மீக வாழ்வு

### திருமுழுக்கு

- ஒரு கிறிஸ்தவனாவதற்கு ஒருவன் நீரினாலும் தூய ஆவியாலும் மீண்டும் பிறக்கவேண்டும். அதாவது, ஒருவன் திருமுழுக்குப் பெறவேண்டும்.
- தொடக்கத்தில் ஒருவர் கிறிஸ்துவை விசுவசித்தால் உடனடியாக திருமுழுக்கு வழங்கப்பட்டது. பின்னர் திருமுழுக்குப் பெறுவதற்கு ஒருவர் இரண்டு அல்லது மூன்று வருடங்கள் ஆயத்தம் செய்ய வேண்டும். இவ்வழக்கம் திருத்தூதர்கள் காலத்திலேயே ஆரம்பமாகியது.

- இக்காலத்தில் அவர்கள் கிறிஸ்தவ மறையுண்மைகளைக் கற்பதிலும் செபிப்பதிலும் ஈடுபட்டனர்.
- திருத்தூதர்களது விசுவாச அறிக்கையினதும், கர்த்தர் கற்பித்த செபத்தினதும் வார்த்தை வடிவங்கள் திருமுழுக்குத் தொட்டியில் இறங்கும் போதுதான் அவர்களுக்கு வழங்கப்பட்டது.
- திருமுழுக்குப் பெறுவதற்கு முந்திய சில வாரங்களில் அவர்கள் அடிக்கடி ஆயரை அல்லது குருவைச் சந்திக்கவேண்டும். ஒவ்வொருதடவையும் ஆயர் அல்லது குரு அவர்களின் தலைமீது கைகளை வைத்து தீய ஆவியை விரட்டும் செபத்தைச் சொல்வார்.
- தகுந்த ஆயத்தத்தின் பின்னர் திருமுழுக்கு வழங்கப்பட்டது. தெர்த்துல்லியனின் கூற்றுப்படி, திருமுழுக்குப் பெறுபவர் பசாசையும் அதன் ஆடம்பரங்களையும், தீய ஆவிகளையும் விட்டுவிடுவதாக வாக்களித்து, திருத்தூதர்களின் விசுவாச அறிக்கையையும், கர்த்தர் கற்பித்த செபத்தையும் உச்சரித்துக்கொண்டு ‘‘பிஸ்சினா’’ என அழைக்கப்படும் திருமுழுக்குத் தொட்டியில் இறங்கவேண்டும்.
- மூன்று தடவை மூழ்குவதாலோ, தேவைக்கேற்ப நீரைத் தெளிப்பதாலோ, அல்லது ஊற்றுவதாலோ, திருமுழுக்கு வழங்கப்படும்.
- குருக்கள் அல்லது திருத்தொண்டர்களின் உதவியுடன் ஆயர் திருமுழுக்கு வழங்குவார். பெண்களுக்கு பெண் திருத்தொண்டர்கள் உதவினர்.
- திருமுழுக்கு வழங்கியவுடன் உறுதிப்பூசுதல் வழங்கப்பட்டது.
- திருத்தூதர் காலத்தில் வசதிக்கேற்ப திருமுழுக்கு வழங்கப்பட்டது. பின்னர், புனித சனிக்கிழமை மட்டுமே (பாஸ்கா ஞாயிறுக்கு முந்திய சனிக்கிழமை) திருமுழுக்கு வழங்கப்பட்டது.
- புதிதாகத் திருமுழுக்குப் பெற்றவர்கள், திருமுழுக்கின் போது தாம் அணிந்துகொண்ட வெண்ணிற ஆடையை பாஸ்கா ஞாயிறுக்கு அடுத்து வரும் ஞாயிறன்று களைவார்கள்.
- 5ஆம் நூற்றாண்டு வரை குழந்தைகள் மரணத்தருவாயில் இருந்தாலன்றி அவர்களுக்கு திருமுழுக்கு வழங்கப்படவில்லை.

**நற்கருணை**

- முதலாம் நூற்றாண்டில் நற்கருணை வழிபாடு மாலையில் அகாபே உணவுடன் கொண்டாடப்பட்டது.
- இரண்டாம் நூற்றாண்டில் நற்கருணை வழிபாடு காலையில் கொண்டாடப்பட்டது. இக்காலத்தில் நற்கருணை உபவாச முறை ஆரம்பமானது. அகாபே தனிச் செயற்பாடாகக் கொண்டாடப்பட்டாலும் சில சீர்கேடுகளினால் இது முற்றாக இல்லாமல் போயிற்று.
- முதல் மூன்று நூற்றாண்டுகளில் ஞாயிறு தினங்களில் மட்டும் நற்கருணைக் கொண்டாட்டம் நடைபெற்றது. நான்காம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து நற்கருணைக் கொண்டாட்டம் தினமும் கொண்டாடப்பட்டது.
- தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் யூதராக இருந்தார்கள். அவர்கள் யூதச் செபக் கூடங்களுக்குச் செல்வதைத் தவிர்த்தார்கள். எனினும் யூத செபக்கூட வழிபாட்டு முறையைத் தழுவியதாக கிறிஸ்தவ வழிபாட்டு முறை இருந்தது. கிறிஸ்தவ வழிபாட்டில் பின்வரும் அம்சங்களைக் காணலாம். திருவிவிலிய வாசகங்கள், மறையுரை, திருப்பாடல்களையும் பாடல்களையும் பாடுதல், பொதுச் செபங்கள், ஏழைகளுக்கான காணிக்கை சேகரித்தல், இவற்றைத் தொடர்ந்து இயேசு நற்கருணையை நிறுவிய வார்த்தைகளை உச்சரித்து, அவரது பாடுகள் மரணம் உயிர்ப்பின் நினைவாக நன்றி கூறி நற்கணைக் கொண்டாட்டத் தலைவர் செபிப்பார். அப்பொழுது மக்கள் எல்லோரும் ‘‘ஆமென்’’ என ஆர்ப்பரிப்பர். அதைத் தொடர்ந்து நற்கருணை வழங்கப்படும். திருத் தொண்டர்கள் நற்கருணையை எடுத்துச் சென்று சமூகமளிக்க முடியாதவர்களுக்கு வழங்குவர். நற்கருணையை விசுவாசிகள் எடுத்துச் சென்று தமது வீடுகளில் பாதுகாப்பர். (வேதகலாபனைக் காலங்களில்). பயணத்தின் போதும் நற்கருணையை எடுத்துச் செல்வர்.

**தபம்**

- திருச்சபை புனிதர்களின் சமூகம் எனக் கருதப்பட்டது. கனமான பாவம் செய்பவர் இச் சமூகத்திலிருந்து விலக்கி வைக்கப்படுவார். மீண்டும் இச்சமூகத்தில் இணைந்து கொள்வதற்கு ஆயரால் வழங்கப்படும் நீண்டகாலப் பகிரங்க தப முயற்சியில் ஈடுபடவேண்டும்.
- தபத்திற்குரிய உடை அணிந்து, திருமுழுக்குப் பெற ஆயத்தம் செய்பவர்களுக்குரிய பகுதியில் இருந்து காணிக்கைப் பகுதி வரை நற்கருணையில் பங்கு பற்றுவர்.
- புனித வியாழனன்று ஆயரால் பகிரங்க பாவ மன்னிப்பு வழங்கப்படும்.
- ஒரே பாவத்தை மூன்று தடவை செய்பவர்கள் மீண்டும் கிறிஸ்தவ சமூகத்தில் இணைத்துக் கொள்ளப்படமாட்டார்கள்.
- கிறிஸ்தவ சமூகத்திலிருந்து முற்றாக விலக்கப்படக் காரணமான பாவங்கள்: சிலை வழிபாடு, கொலை, விபச்சாரம்.
- நான்காம் நூற்றாண்டில் மரணத்தருவாயில் இருக்கும் பாவிக்கு நற்கருணை வழங்க அனுமதிக்கப்பட்டது.
- இவ்விடயத்தில் திருச்சபை மிகக் கடுமையாக இருந்தமையால் ஒப்பரவு அருட்சாதானத்தை ‘‘இரண்டாவது திருமுழுக்கு’’ என அழைத்தார்கள்.
- அறிவுரைகளுக்காகவும் செபிப்பதற்காகவும் தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் புதன், வெள்ளிக் கிழமைகளில் பிற்பகல் மூன்று மணிக்கு ஒன்றாகக் கூடுவார்கள். இந்நாட்களில் பிற்பகல் மூன்று மணிவரை கிறிஸ்தவர்கள் உபவாசம் இருந்து செபிப்பார்கள்.
- இயலுமானவர்கள் உயிர்ப்பு விழாவிற்கு முந்திய இருநாட்களிலும் முழுமையான உபவாசத்தைக் கடைப்படிப்பர்.
- மூன்றாம் நூற்றாண்டில் உயிர்ப்பு விழாவிற்கு முந்திய 40 நாட்கள் உபவாசம் அறிமுகம் செய்யப்பட்டது.

**விழாக்கள்**

- ஆண்டவரின் உயிர்ப்பு திருத்தூதர்களின் காலம் தொடக்கம் வாரத்தின் முதல் நாளில் ஞாயிறன்று கொண்டாடப்பட்டது. இந்நாள் ‘‘ ஆண்டவரின் நாள்’’ என அழைக்கப்பட்டது.
- திருச்சபையின் பழமைவாய்ந்த இரு முக்கிய விழாக்கள்

  பாஸ்கா விழா (உயிர்ப்பு விழா)

  பெந்தகோஸ்தே விழா
- யூதர்களும் உரோமையர்களும் பிற்பகல் ஆறு மணிக்கு புதிய நாள் தொடங்குவதாகக் கணிப்பார்கள் இம்மரபைத் தழுவி கிறிஸ்தவர்களும் உயிர்ப்பு விழாவை மாலை திருவிழிப்புடன் ‘‘முழு இரவு வழிபாடு’’ ஆரம்பிப்பார்கள். இம் மாலைத் திருவிழிப்பில் திருமுழுக்குப் பெற இருப்பவர்களுக்கான இறுதி அறிவுரைகள் வழங்கப்பட்டு திருமுழுக்கு வழங்கப்பட்டது. பின்னர் அறிமுகம் செய்யப்பட்ட ஒவ்வொரு விழாவும் மாலை திருவிழிப்புடன் கொண்டாடப்பட்டது.
- **உயிர்ப்பு விழா** திருச்சபை முழுவதிலும் ஒரே நாளில் கொண்டாடப்படவில்லை. சின்ன ஆசியா முழுவதிலும், யூதர்கள் பாஸ்கா விழா கொண்டாடிய அதே நாளில் அதாவது நிசான் மாதத்தின் (பங்குனி - சித்திரை) 14ம் திகதி, கிறிஸ்தவர்கள் ஆண்டவரின் பாடுகள் மரணம் உயிர்ப்புப் பெருவிழாவைக் கொண்டாடினர். ஏனைய இடங்களில் வசந்த கால பௌர்ணமி திகத்தின் (full moon) பின் வரும் முதல் ஞாயிறன்று இவ்வழா கொண்டாடப்பட்டது. இத்தினம் யூதர்களது பாஸ்கா தினத்திலிருந்து வேறுப்பட்டதாயிருந்தது.
- நிசேயா பொதுசங்கத்தில் (325) ஆண்டவரின் பாடுகள், மரணம், உயிர்ப்புப் பெருவிழா வசந்த கால பௌர்ணமியின் பின்வரும் முதலாம் ஞாயிறன்று கொண்டாடப்படவேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

- மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் **ஆண்டவரின் திருக்காட்சி விழா** (Feast of the Epiphany -- Jan 6) எகிப்தில் கொண்டாடப்பட்டது ஞானிகளின் வருகை, யோர்தானில் திருமுழுக்கு, கானா திருமணம் ஆகிய நிகழ்வுகளில் வெளிப்படுத்தப்பட்ட கிறிஸ்துவின் மகிமையை நினைவு கூர்ந்து கொண்டாடுவதே இதன் நோக்கமாகும்.
- நான்காம் நூற்றாண்டில் இருந்து மேற்கத்தேய திருச்சபைகளிலும் இவ்விழா கொண்டாடப்பட்டது.
- **கிறிஸ்து பிறப்பு விழா** மூன்றாம் நூற்றாண்டில் பல மறைமாவட்டங்களில் கொண்டாடப்பட்டு நான்காம் நூற்றாண்டு முதல் மேற்கத்தேய திருச்சபை முழுவதிலும் கொண்டாடப்பட்டது. புனித ஜோன் கிறிசோஸ்தம் என்பவரால் இவ்விழா கீழைத்தேய திருச்சபையில் அறிமுகம் செய்யப்பட்டது.

### வழிபாட்டு இடங்கள்

- தொடக்க காலத்தில் கிறிஸ்தவர்களின் நற்கருணைக் கொண்டாட்டமும் வழிபாடுகளும் வீடுகளில் நடைபெற்றன. முதலாவது ஆலயம் சிரியாவின் எதேசா நகரில் 201 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. நற்கருணைக் கொண்டாட்டங்கள் மறைசாட்சிகளின் கல்லறைகளின் மேலே அல்லது அருகில் கட்டப்பட்ட நினைவுச் சிற்றாலயங்களிலும் சுரங்கக் கல்லறைகளிலும் (Catacombs) கொண்டாடப்பட்டது. கிறிஸ்தவ மறையைப் பிரதிபலிக்கும் வகையில் படங்கள், அடையாளங்கள், சித்திரங்கள் பயன்படுத்தப்பட்டன: திருச்சிலுவை, திருப்பலிப் பாத்திரம் (Chalice) விளக்கு, நங்கூரம் (Anchor), கப்பல், மீன், அப்பங்கள் அடங்கிய கூடை, அன்னை மரியினதும் மீட்பரினதும் படங்கள். எனினும் கல்லால் அல்லது உலோகத்தால் செய்யப்பட்ட உருவங்கள் பயன்படுத்தப்படலில்லை. இது சிலை வழிபாட்டுக்கு வழிவகுக்கும் என்பதே காரணமாகும்.

### சமூக வாழ்வு

- தமது வழிபாடுகளையும் மறைசார்ந்த வாழ்கையையும் தவிர கிறிஸ்தவர்களது வாழ்க்கை முறையானது ஏனையவரைச் சார்ந்திருந்தது.
- எனினும் அவர்களது கிறிஸ்தவத் தன்மையானது மேன்மையானதாகவும் அடுத்தவருக்கு முன்மாதிரியாகவும் அமைந்திருந்தது. குடும்ப வாழ்வு முன்மாதிரியானதாக இருந்தது. பாலவாழ்க்கை வெறுக்கப்பட்டது; விவாகரத்தை எதிர்த்தனர்; கிறிஸ்தவ கன்னியரின் அடக்கமான வாழ்க்கை பாராட்டப்பட்டது; இளையோரின் கற்பு வாழ்வு பிற மதத்தினர் மத்தியில் விளங்கிக்கொள்ள முடியாத புதிராக இருந்தது; அடிமைகள் மிருகங்களை விட கேவலமாக நடாத்தப்பட்ட பிற சமூகத்தினர் மத்தியில் அவர்களது மனித மாண்பை மதித்து அவர்களுக்கு மனித உரிமை அளித்து விடுதலை வாழ்வைப் பெற்றுக்கொடுப்பது இறைவனுக்குப் பிரியமான செயலாகும் என கிறிஸ்தவர்கள் வெளிப்படுத்தினர்; நீதியையும் அன்பையும் கிறிஸ்தவர்கள் தமது வாழ்வின் வழிபாட்டிகளாகக் கொண்டிருந்தனர்; உண்மையும், நீதியும் அவர்களது வாழ்க்கைச் சட்டமாக இருந்ததனால் உரோமைப் பேரரசில் கிறிஸ்தவர்கள் பாராட்டப்பட்டதுடன் உரோமை இராணுவத்திலும் பணியாற்றி, சக இராணுவ வீரர்கள் மத்தியிலும் நன்மதிப்பைப் பெற்றார்கள்.

### 7.1.2.4 புதிய சமுதாய முறையின் ஆரம்பம்

- எந்த ஒரு குழுவிற்கும்; சமூகத்திற்கும் ஒரு அதிகாரமும், தலைமைத்துவமும் தேவையாகும். இறைமக்கள் சமூகமான திருச்சபையும் இதற்கு விதிவிலக்கல்ல.
- கிறிஸ்து இயேசு இவ்வுலகில் வாழும் வரை திருச்சபையின் தலைவராகச் செயற்பட்டார். ஆனால் அவரது விண்ணேற்பைத் தொடர்ந்து தன்னிடமாக நின்று செயற்பட துணையாளரான பரிசுத்த ஆவியை அனுப்பினாலும், கண்ணால் காணக்கூடிய திருச்சபைக்கு காணக்கூடிய அதிகாரத்துக்கு உரியவரான புனித பேதுருவைத் தலைவராக நியமித்தார்.

- பரிசுத்த ஆவியினால் திருச்சபை செயலூக்கம் பெற்றாலும் பேதுருவின் தலமைத்துவமும் நியமனமும் தொடர்ந்து செயற்படப் காரணமாய் அமைந்தது.
- புனித பேதுருவின் தமைமைத்துவத்தின் கீழ் தொடக்க கால திருச்சபை வீரநடை போட்டு எங்கும் படர்ந்து வளரத் தொடங்கியது. தொடக்க காலக் கிறிஸ்தவர்களின் எடுத்துக்காட்டான வாழ்க்கையும் பலரைக் கவர்ந்தது. அதன் விளைவாக நாளுக்கு நாள் சபையினரின் தொகையும் அதிகரித்தது.
- குறிப்பாக எருசலேமில் சீடர்களின் தொகை மிக அதிகரித்தது. இதனால் சபையினருக்கு ஆற்ற வேண்டிய பணிகளும் அதிகரித்தன.
- எனவே நற்செய்திப் போதனைக்கு திருத்தூதர்களும், அறப்பணிக்குத் திருத்தொண்டர்கள் எழுவரும் நியமிக்கப்பட்டனர்.
- இத் திருத்தொண்டர்கள் அறப்பணிக்கென நியமிக்கப்பட்டாலும் அவர்கள் போதிப்பதிலும், திருமுழுக்கு அளிப்பதிலும்; புதுமைகள் செய்தும் நற்செய்திப் பணிகளில் ஈடுபட்டனர்.
- இவர்களில் ஸ்தேவானும், பிலிப்பும் முக்கியமானவர்கள். இவர்களது பணியினால் கிறிஸ்தவர்களின் தொகைப் பெருகுவதைக் கண்ட தலைமைக் குருக்களும், சதுசேயர், பரிசேயர்களும், மறைநூல் அறிஞர்களும் சினம் கொண்டு யூத கலாபனையை ஏற்படுத்தி ஸ்தேவானைக் கொலை செய்தனர்.
- ஸ்தேவானின் மரணத்தை அடுத்து எருசலேமில் இருந்த கிறிஸ்தவர்கள் சிதறுண்டு பெனிசியா, சமாரியா, அந்தியோக்கியா, கலிலேயா, தமஸ்கு, சீப்ரூஸ்தீவு போன்ற நாடுகளுக்கு சென்று அங்கு தஞ்சம் அடைந்து அங்கெல்லாம் நற்செய்தியைப் போதித்தனர்.
- இதனால் பல கிறிஸ்தவ சமுதாயங்கள், குடியேற்றங்கள், நகரங்கள் உருவாகின. பல புற இனத்தவர்களும் பெருந்திரளாக திருச்சபையில் சேர்ந்தனர். இதன் விளைவாக சீரியா அந்தியோக்கியாவில் யூத புறவின கலப்புத் திருச்சபை ஒன்று உருவானது. இக்கலப்புத் திருச்சபையை ஸ்தாபித்தவர் புனித பேதுரு. புனித பேதுருவினால் மனமாற்றம் பெற்ற செசாரியாவின் நூற்றுவத் தலைவனான கொர்னேலியுவின் மனமாற்றமும் புறவினத்தவர் பெருமளவில் கிறிஸ்தவத்தை தழுவ காரணமாய் இருந்தது.
- இதனால் யூத கலாபனைக்கு காரணமாய் இருந்த சவுல் புதிய கிறிஸ்தவர்களை வதைத்துத் தொலைக்க வரும் போது உயிர்த்த கிறிஸ்து இயேசுவால் தடுத்தாட் கொள்ளப்பட்டு, மனந்திரும்பி, திருமுழுக்கு பெற்று கிறிஸ்தவத்தைத் தழுவி பல மறைபரப்புப் பயணங்களை மேற்கொண்டு பல புதிய கிறிஸ்தவ சபைகளை ஸ்தாபித்தார்.
- புனித பவுல் தாம் நிறுவிய சபைகளுக்கு மூப்பர்களை நியமித்து அவர்களுக்குத் துணையாக திருத்தொண்டர்களையும் நியமித்தார்.
- எனவே தொடக்ககாலத் திருச்சபையில் முதலில் திருச்சபையின் தலைவரான பேதுரு, அவரை அடுத்து திருத்தூதர்கள் குழு, அதனை அடுத்து முதல்வர்கள், அல்லது கண்காணிப்பாளர்கள்; அடுத்து மூப்பர்கள், திருத்தொண்டர்கள், சீடர்கள், அல்லது விசுவாசிகள் என தரவாரியாக அதிகாரம் அமைக்கப்பட்டு ஸ்தாபனமாக உருப்பெறுகின்றது.
- திருச்சபையின் தலைமைத்துவமும் அதிகாரமும் அமைப்பு பெற்றாலும் அவை அதிகாரம் செலுத்துவதற்கு அல்ல மாறாக பணிவிடை செய்வதற்கென்றே நிறுவப்பட்டதாகும்.
- முதலில் திருத்தூதர் குழு ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவினால் நேரடியாக தெரிவு செய்யப்பட்டு பயிற்றப்பட்டு விசேட பொறுப்புடன் அனுப்பப்பட்டவர்கள். இவர்கள் திருச்சபையின் தூண்களாகக் கருதப்பட்டனர்.
- கிறிஸ்துவின் வாழ்வு, மரணம், உயிர்ப்புக்கு சான்று பகர்வதுடன் கிறிஸ்தவ சமூகங்களின் வழிபாடுகளுக்குத் தலைமை தாங்குவதும், திரு அருளடையாளங்களை வழங்கி புதிய உறுப்பினர்களைத் திருச்சபையில் சேர்த்துக் கொள்வதும், உறுதிப்படுத்துவதும்; திருச்சபையின் வெவ்வேறு பணிகளுக்கென அவர்களை நியமிப்பதும் இவர்களது பணியாகும்.

- **திருத்தூதர்கள்** குழுவின் தலைமை ஆயராக புனித பேதுரு இருந்தார். தலைமைப் பொறுப்பை ஏற்பவர்கள் அனைவரும் கிறிஸ்தவ விசுவாச உண்மைகளைத் தூய்மையாகப் பாதுகாத்து அப்போஸ்தல மரபு முறைகளக் கட்டிக் காத்து அனைத்துலக திருச்சபையின் விசுவாச வளர்ச்சியையும், ஒழுக்க வாழ்வையும் பேணிக் காக்க வேண்டியது அவர்களது கடமையும் பொறுப்புமாகும்.
- **ஆயர்கள்** தளத் திருச்சபையின் வழிபாடுகளுக்குத் தலைமை தாங்கி நடத்துவதும், நற்செய்தியைப் போதிப்பதும், விசுவாச சத்தியங்களை தூய்மையாகப் பாதுகாப்பதும், திருவழிபாடுகளை குறிப்பாக அருளடையாளங்களை வழங்குவதிலும் ஈடுபட்டனர்.
- **கண்காணிப்பாளர்கள்** தமது மந்தையின் எடுத்துக்காட்டான கிறிஸ்தவ வாழ்வுக்கு பொறுப்பாக இருந்து, ஆன்மீக லௌகீக பொருட்களை நிர்வகிப்பதுடன் தளத்திருச்சபையின் பிரதி நிதிகளாகவும் செயற்பட்டனர்.
- **மூப்பர்கள், குருக்கள்** தளத்திருச்சபையில் அங்கம் வகிக்கும் கிளைச் சபைகளுக்குத் தலைமை தாங்கி நடாத்துதல், இறைவார்த்தையை அறிவித்தல், வழிபாடுகளை தலைமை தாங்கி நடத்துதல், ஏழைகளைப் பராமரித்தல், போன்ற கடமைகளை செயற்படுத்தினர்.
- **அடுத்த நிலையில் திருத்தொண்டர்கள்:-** நியமிக்கப்பட்ட இவர்கள் மூப்பர்கள், குருக்களுக்கு உதவியாளர்களாக இருத்தல், ஏழைகளுக்கு உதவுதல், நற்செய்தி போதித்தல், திருமுழுக்கு அளித்தல் போன்றவற்றுடன் அறப்பணிகளிலும் ஈடுபடுதல்.
- இவ்விதமாக தொடக்க காலத் திருச்சபையில் புதிய சமுதாயமாக கிறிஸ்தவ சபைகள் உருவாக்கம் பெற்ற கிறிஸ்தவ விழுமியங்களையும், சிறந்த பண்பாடு, நாகரிகங்களையும் கைக் கொண்டு வாழ்வதற்கு திருச்சபையின் அமைப்பு முறையும் அதிகார அமைப்பும் வழி வகுத்தது.

### 7.1.3 பவுலின் வாழ்க்கைப் பின்னணி

- பவுல் என்னும் சவுல் ஒரு கிரேக்க மொழி பேசும் யூதன். யௌவன பண்பாட்டினர். அந்நிய படையெடுப்புகளின் நிமித்தம் பாலஸ்தீனாவிலிருந்து சிதறுண்டு ஓடி, சின்ன ஆசியாவின் செசிலியாவின் தலைநகராகிய தார்சு என்ற கிரேக்க நகரத்தில் குடியேறிய பென்ஜமின் குலத்தைச் சேர்ந்த யூத குடும்பத்தில் கி.பி. 10ம் ஆண்டளவில் பிறந்தவர். தார்சுவில் ஒரு பெரிய யூத சமூகம் இருந்தது.
- அவர் ஒரு யூதர் மட்டுமல்ல, ஒரு உரோமைக் குடிமகனும் கூட. அது அவரின் தந்தை வழியாகப் பெற்ற உரிமை. அவரின் யூத பெயர் சவுல். அவருடைய உரோமைய கிரேக்க பெயர் பவுல். அவர் புறவினத்தவரின் அப்போஸ்தலராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் பணியைத் தொடங்கியது முதல் பவுல் என்றே தன்னை அழைத்துக்கொண்டார்.
- சவுல் சிறுவனாக இருந்த பொழுது தார்சுவில் கிரேக்கத்தால் பாதிக்கப்பட்ட யூதத்துவத்தில் வீட்டிலிருந்து தம் பெற்றோர் வழியாகப் பயிற்சி பெற்றார். ஆறு வயது தொடக்கம் தார்சுவில் இருந்த செபக் கூடத்தில் வேத நூல், எபிரேய மொழி போன்றவற்றைக் கற்றார்.
- தர்சு ஒரு வர்த்தக நகரம் மட்டுமல்ல, அது ஒரு பல்கலைக்கழக நகரம். கிரேக்க கலை கலாச்சாரத்தின் மையமாக விளங்கி, பல சிந்தனையாளர்களையும், தத்துவ வல்லுநர்களையும் உருவாக்கியது. இத்தகைய கிரேக்க சிந்தனைச் சூழலிலேயே சவுல் தன் சிறு பராயத்தைக் கழித்தவர். இவ்வாறு புறவினக் கிறிஸ்தவர்கள் மத்தியில், குறிப்பாக கிரேக்கர்கள் மத்தியில் நற்செய்தியை எடுத்துச் செல்ல மிகத் தகுதியுள்ளவர் அவரே.
- அவர் இளைஞனாக இருந்த பொழுது, இயேசுவின் மரணத்திற்குப் பின், எருசலேம் சென்று, மிகப் புகழ் பெற்ற சட்ட வல்லுநரான கமாலியேலின் கீழ் வேத நூலை நன்கு பயின்றார். பாலஸ்தீன யூதத்துவத்தின் பாரம்பரியங்களை நன்கு கற்றார். அவர் சட்டங்களைக் கற்றது மட்டுமல்ல, அவற்றை மிக நுணுக்கமாகக் கடைப்பிடித்த ஒரு பரிசேயனாகவும் மாறி, ஓர் சிறந்த ராபியாகவும் செயற்பட்டார்.

- யூத மறையில் அவருக்கு இருந்த பற்றும், யூத சட்டத்தில் அவருக்கு இருந்த அறிவும், அவரது மத ஆர்வமும் அவரைக் கிறிஸ்தவர்களுக்கு எதிராக எழச் செய்தன. ஸ்தேவானின் மறை சாட்சி மரணத்தை அடுத்து எருசலேமில் தொடங்கிய யூத கலாபனையிலே சவுல் மிக மும்முரமாக ஈடுபட்டார்.
- யூத மறையின் மேல் உள்ள பற்றினாலும், யூத சட்டத்தின் மேல் கொண்டிருந்த ஆர்வத்தினாலும் கிறிஸ்தவத்தையும், கிறிஸ்தவர்களையும் அழிக்கத் தீவிரமாக உழைத்தார். வீடுவீடாகச் சென்று, ஆண்களையும் பெண்களையும் இழுத்துச் சென்று, சிறையில் அடைத்தார். அவரின் பெயரைக் கேட்கவே கிறிஸ்தவர்கள் அஞ்சினார்கள்.
- தமஸ்கு நகரில் கிறிஸ்தவர்கள் இருந்ததைக் கேள்விப்பட்ட சவுல், அவர்களைக் கைது செய்து எருசலேமுக்கு இழுத்து வர, தலைமைக் குருக்களின் உத்தரவுப் பத்திரத்துடன், வேறு சிலரோடு தமாஸ்கு நகரத்தை நோக்கிப் பயணம் சென்றார்.
- தமஸ்குப் பாதையில் அவருக்கு ஒரு முக்கிய சம்பவம் நிகழ்ந்தது. அது அவரது வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. அவர் உயிர்த்த இயேசுவை நேருக்கு நேர் எதிர் கொண்டார். திடீரென்று வானத்திலிருந்து தோன்றிய ஒரு ஒளி அவரைச் சூழ்ந்து கொண்டது. ஒளியின் பிரகாசத்தினால் பார்வை தெரியாது, சவுல் கீழே விழுந்தார். அப்போது ஒரு குரலொலியைக் கேட்டார். ‘சவுலே, சவுலே, ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்?’ என அக்குரலொலி கேட்டது. சவுல் ஒன்றும் விளங்காதவராய், ‘ஆண்டவரே நீர் யார்?’ என்று கேட்க, அக்குரல் ‘நீ துன்புறுத்தும் இயேசு நானே. நீ எழுந்து நகருக்குள் செல். நீ என்ன செய்ய வேண்டும் என்பது அங்கே உனக்குச் சொல்லப்படும்.’ என்றது.
- பார்வையற்றிருந்த சவுலை அவரோடு கூடப் பயணம் செய்தவர்கள், கைகளைப் பிடித்துக் கூட்டிக்கொண்டு போய் தமாஸ்குவில் சேர்த்தனர். அங்கு அவர் அனனியாவிடம் திருமுழக்குப் பெற்று, திருச்சபையில் இணைந்து கொண்டார்.
- தமஸ்குப் பாதையில் சவுலுக்கும் உயிர்த்த இயேசுவுக்குமிடையே நடைபெற்ற இச்சந்திப்பு, சவுலின் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது. இவ் அனுபவம் கிறிஸ்துவின் பகைவனாகிய சவுலை அவரின் அப்போஸ்தலராக மாற்றியது. கிறிஸ்தவர்களின் விரோதியாகிய சவுலை கிறிஸ்தவர்களின் நண்பராக மாற்றியது. கிறிஸ்தவத்தை அழிக்கப் புறப்பட்ட சவுலை, கிறிஸ்தவத்தை எங்கும் போதித்துப் பரப்பும் அப்போஸ்தலராக மாற்றியது. தன் புதிய பணியை உணர்ந்த பவுல், அதே மத ஆர்வத்துடனும், பற்றுறுதியுடனும் தம் புதுப் பணியை நிறைவேற்றப் புறப்பட்டார்.

### 7.1.3.1 கிறிஸ்தவ சபை நிறுவப்படல்

- தூய பவுல் மூன்று மறைபோதகப் பயணங்களை மேற்கொண்டார்.
- இப்பயணங்களின் போது அவர் பணிபுரிந்த இடங்களில் திருச்சபையை நிறுவினார். அவற்றில் முக்கியமான இடங்களையும், அவற்றின் பின்னணி சூழல் என்பவற்றை அறிய வேண்டும்.

### கலாத்தியா

- இது மத்திய சின்ன ஆசியாவிலுள்ள உரோமை ஆட்சிப் பகுதியாகும். பிற்காலத்தில் அது விரிந்து காலாத்தியா போந்து பகுதிகளையும், பித்தினியா, லைக்கோனியாவிற்கு இடைப்பட்ட பகுதிகளையும் மற்றும் பிசிதியா, அந்தியோக்கு, பம்பிலியா, போர்கா, அத்தலியா, டேர்பே, லிஸ்திரா, இக்கோனியா போன்ற பகுதிகளையும் உள்ளடக்கியது.
- பவுல் தமது முதல் மறைபோதகப் பயணத்தின் போது இவ்விடங்களுக்குச் சென்று நற்செய்தியைப் போதித்தார்.
- யூதர்களில் அநேகரை மனந்திருப்ப முடியாவிட்டாலும் பல புறவினத்தவர்கள் விசுவாசம் கொண்டார்கள். பாப்போவின் ஆளுநர் செர்கியு பவுலு விசுவாசம் கொண்டது குறிப்பிடத்தக்கது. பிசிதியா, அந்தியோக்கியாவில் நல்ல வரவேற்பும் பலனும் கிடைத்தன.

இக்கோனியாவில் யூதர்கள், கிரேக்கர் பலரும் விசுவாசம் கொண்டனர். லிஸ்திராவிலும் அவருக்கு வெற்றி கிடைத்தது.
- யூதர்களிடமிருந்து எதிர்ப்புகள் கிழம்பினாலும் அவர் பல சபைகளை தாபித்து அவற்றிற்கு மூப்பர்களை ஏற்படுத்தினார்.

**பிலிப்பி**
- இது மசதோனிய நாட்டிலுள்ள ஓர் உரோமை மாவட்டத்தின் முக்கிய நகரம். நான்கு பக்கமும் மலைகளால் சூழப்பட்டிருந்தது. இங்கு உரோமையர் அதிகமாக வாழ்ந்தனர். இது ஒரு உரோமைக் குடியிருப்பாக, உரோமைச் சட்டங்களுக்கு கீழ்பட்டிருந்த நகரமாகவிருந்தது. கி.மு. 42இல் அந்தோனியோவும் ஒட்டோவியனும் புரூட்டசையும் காசியுசையும் இந்நகரில் தோற்கடித்த பின் இவ்விடம் பிரபல்யமானது.
- இங்கு சொற்ப யூதர்களே வாழ்ந்தனர். எனவே அவர்களுக்கென இங்கு ஒரு செபக்கூடம் இருக்கவில்லை. அவர்கள் ஆற்றங்கரையோரங்களில் தான் ஒன்று கூடுவார்கள்.
- ஐரோப்பாவில் இங்குதான் முதன்முதலில் நற்செய்தி போதிக்கப்பட்டது. பவுலின் போதனையைக் கேட்ட பெண்களுள் ஒருவரான லீதியா எனும் யூத மறையைத் தழுவிய, தியாத்திரா நாட்டைச் சேர்ந்த பணக்காரப் புறவினப் பெண்தான் முதன் முதல் ஐரோப்பாவில் மனந்திரும்பி கிறிஸ்தவத்தைத் தழுவியவள்.
- பிலிப்பிய கிறிஸ்தவ சபைதான் பவுலுக்கு எப்போதும் பிரமாணிக்கமுள்ளதாகவும், மிகவும் பிரியமானதாகவும் இருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

**தெசலோனிக்கா**
- இது மசதோனியா நாட்டின் தலைநகரம். ஒரு முக்கிய துறைமுகப்பட்டினம். அதுவே உரோமை நிர்வாகத்திற்கு இருப்பிடமாகவிருந்தது. உரோமைய ஆட்சியின் கீழ் இது ஒரு சுதந்திர நாடாக ஆக்கப்பட்டது.
- இங்கு ஏராளமான யூதர்களும் குடியிருந்தார்கள். அவர்களுக்கென ஒரு செபக்கூடமும் இருந்தது.
- பவுலும் சீலாவும் தொடர்ச்சியாக மூன்று ஓய்வு நாட்களில் அங்கிருந்த செபக்கூடத்துக்குச் சென்று போதித்தனர். வேத நூலை அடிப்படையாகக் கொண்டு, இறந்து உயிர்த்தெழுந்த இயேசுவே மெசியா என்று எண்பித்தார்கள்.
- யூதரில் சிலரும், யூத மறையைத் தழுவிய புறவினத்தவர்களும், குறிப்பாகப் பணக்காரக் கிரேக்கப் பெண்கள் பலரும் திருச்சபையில் சேர்ந்தனர்.
- இங்கிருந்த மக்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை உடனடியாக வருமெனக் காத்திருந்தார்கள்.

**ஏதென்சு நகரம்**
- இது கிறிஸ் குடாநாட்டின் தென்கிழக்கு முனையில் இருந்த ஒரு முக்கிய நகரமாகும். இந்நகரம் அறிவுக்கும், ஞானத்திற்கும், ஞானிகளுக்கும், கட்டிடக் கலைக்கும் பிரசித்தி பெற்றதாக விளங்கியது.
- இந்நகர மக்களுக்கு மேலும் மேலும் அறிய வேண்டும் என்ற அறிவுத்தாகம் இருந்தது. ஊருக்கு வரும் புதியவர்களை சந்தைக்குமுன் சந்தித்து, வரவேற்று, அவர்கள் கருத்துக்களைக் கேட்டு உரையாடும் ஒரு பண்பு இருந்தது.
- மக்கள் ஆற்றும் சொற்பொழிவுகளைக் கேட்பதற்கென அரயோப்பாகு என்று அழைக்கப்படும் மன்றம் இருந்தது.
- இங்கு எப்பிக்கூரர். ஸ்தொயிக்கர் என்ற இரு வேறுபட்ட மெய்யியலாளர்களின் தத்துவங்கள் இருந்தன.
- ஏதென்சு பல தெய்வங்களைக் கொண்டிருந்த ஒரு நகரம். கிரேக்க நாடு முழுவதிலும் காணப்பட்ட தெய்வங்களின் சிலைகளிலும் பார்க்க அதிகமான தெய்வச்சிலைகள் ஏதென்சுவில் இருந்ததெனக் கூறுவர்.

- பவுல் யூதர்களின் செபக்கூடத்தில் யூதர்களோடும் யூதமறையைத் தழுவிய புறவினத்தவர்களோடும் உரையாடினார். வெளிச்சந்திகளில் வேறு மக்களோடும், எப்பிக்கூரர், ஸ்தொயிக்கர் போன்ற மெய்யியல் அறிஞர்களோடும் உரையாடி, இயேசுவையும் அவரது உயிர்ப்பைப் பற்றிய நற்செய்தியையும் அறிவித்து வந்தார்.
- பவுலின் உரையைக் கேட்பதற்காக இவரை அரயோப்பாகு மன்றத்துக்கு அழைத்துச் சென்றனர். இங்கு இவர் ஆற்றிய உரையில் புதிய பாங்கு ஒன்று காணப்பட்டது.
- கிரேக்க கவிஞர்களையும், ஞானிகளையும் மேற்கோள்காட்டிப் போதித்தார். கிரேக்க மெய்யியல் சிந்தனைகள் காணப்படுகின்றன. கிரேக்க மக்களின் பின்னணிக்கேற்ப, அவர்கள் பழக்க வழக்கங்களைப் பயன்படுத்தி உயிர்த்த கிறிஸ்துவைப் போதித்தார்.
- இங்கு பலர் விசுவாசம் கொள்ளவில்லை. இங்கிருந்து பவுல் கொரிந்துக்குச் சென்றார். எனினும் பவுல் ஏதென்சுவில் ஆற்றிய உரை தனித்தன்மையுடையாத இருப்பதால் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

## கொரிந்து

- இது ஒரு உரோமைய மாநிலமான அக்காயாவின் தலைநகரம். இங்கேதான் மாநில ஆளுநர் குடியிருந்தார். இது ஐரோப்பாவிலிருந்து ஆசியாவிற்குப் போகும் குறுகிய வழியிலிருந்த ஓர் துறை முகப்பட்டணம்.
- இது ஒரு உரோமைக் காணியாக இருந்தாலும் இங்கு யூதர்கள் உட்பட பல நாட்டவர்கள் வாழ்ந்தார்கள். இது ஒரு யூதக் குடியேற்ற நகரம். இங்கு ஒரு செபக்கூடம் இருந்தது.
- இங்கு பல தேவாலயங்களும் விளையாட்டு மைதானங்களும் காணப்பட்டன.
- பல இன மக்களும் வந்துபோகும் வாணிப மையமாகவிருந்ததால், காமக்களியாட்டங்களும் ஒழுக்கக் கேடுகளும் நிறைந்து காணப்பட்டது. அக்காலத்தில் உரோமைப் பேரரசிலேயே மிக கேடுகெட்ட நகரமாக கொரிந்து காணப்பட்டது.
- ஏதென்சுவிலிருந்து கொரிந்து வந்தடைந்த பவுல் எவரின் தயவிலும் தங்கியிராது தன் கைகளால உழைக்க விரும்பினார். தம்மைப் போல் கூடாரம் செய்யும் அக்கிலாவையும் அவரது மனைவியாக பிரிஸ்சில்லாவையும் சந்தித்தார்.
- ஒவ்வொரு ஓய்வு நாளும் செபக்கூடம் சென்று யூதருக்கும் கிரேக்கருக்கும் போதித்தார். பலர் விசுவாசம் கொண்டனர்.
- பல எதிர்ப்புக்கள் மத்தியிலும் பவுல் நற்செய்தி அறிவிப்புப் பணியில் ஆர்வத்துடன் ஈடுபட்டு கொரிந்தியர் பலரைக் கிறிஸ்தவர்களாக்கினார்.
- பவுல் தமது இரண்டாவது மறை போதகப் பயணங்களின் போது கிறிஸ்தவ சபைகளை நிறுவிய முக்கிய இடங்களில் பிலிப்பி, தெசலோனிக்கா, கொரிந்து ஆகிய இடங்கள் குறிப்பிடத்தக்கவை.

## எபேசு

- இது ஒரு உரோமைப் பேரரசின் ஆசிய மாநிலத்தின் தலை நகரம். செல்வம் நிறைந்த அழகிய நகரமாகவிருந்தது.
- இங்கு தியானாவின் ஆலயங்களும், வழிபாடுகளும் நிறைந்திருந்தன. அவள் பிள்ளைப்பேற்றின் கடவுளாக வழிபடப்பட்டாள். ஏழு உலக அதிசயங்களில் ஒன்றான தயானா தேவதையின் ஆலயம் அங்கே இருந்தது.
- இது சுற்றுலாப் பயணிகளைக் கவரும் நகரமாகவிருந்தது. இதைப் பயன்படுத்தி பொற்கொல்லர்கள் தயானா தேவதையின் ஆலயப் படிவங்களைச் செய்து உல்லாசப் பயணிகளுக்கு விற்று ஏராளமான பணம் சம்பாதித்தார்கள்.
- எபேசு நகரம் அதன் ஆலயம், வழிபாடுகள், பேய்காரியங்கள், மாயவித்தைகள், போன்றவற்றில் பெயர் பெற்று விளங்கியது.
- பவுல் எபேசுக்குச் சென்றபோது அங்கு தூய ஆவியினாலன்றி, யோவானின் திருமுழுக்குப் பெற்ற சில சீடர்களைச் சந்தித்தார். அது அவர் அங்கு தம் பணியை ஆரம்பிப்பதற்கு உதவியாக இருந்தது.

- அலெக்சாந்தியாவிலிருந்து எபேசுக்கு வந்த யூதரும், போதகரும் கிரேக்க தத்துவ சாஸ்திரியுமான அப்பொல்லோ என்பவர் அங்கு ஒரு சபையை தாபித்து ஊக்குவித்து வந்தார். அவர் யோவானின் திருமுழுக்கை மட்டுமே அறிந்திருந்தார். இயேசுக்கிறிஸ்துவை மனுக்குல மீட்பராகவும், தூய ஆவியாரின் வருகையையும் அறிந்திருக்கவில்லை.
- பவுல் அப்பொல்லோவிடமிருந்து யோவானின் திருமுழுக்கைப் பெற்றிருந்த அரைகுறையான பன்னிரண்டு சீடர்களுக்கு தூய ஆவியினால் திருமுழுக்கு அளித்தார். அவர் அவர்கள் மேல் கைகளை வைத்து தூய ஆவியை அளித்தபோது அவர்கள் பரவசப் பேச்சுப் பேசி இறைவாக்கு உரைத்தனர்.
- பவுல் அங்கிருந்து செபக்கூடத்துக்குச் சென்று மூன்று மாதங்களாக இறையாட்சியைப் பற்றி மக்களோடு உரையாடி அவர்களை நம்பச் செய்தார். நாள்தோறும் ''திரன்னு'' எனும் மன்றத்தில் விவாதித்தார்.
- இரண்டு ஆண்டுகளாகப் போதித்ததன் விளைவாக ஆசியாவில் வாழ்ந்த பலரும், யூதரும், கிரேக்கரும் ஆண்டவர் வார்த்தையைக் கேட்டனர். ஆண்டவரும் பவுல் வழியாக பல அற்புதங்களைச் செய்தார்.
- பவுல் எபேசில் சிலை வழிபாட்டிற்கும், மாய வித்தைகள், பேய்க்காரியங்களுக்கும் எதிராகப் போதித்து மக்களை உண்மை மறைக்கு மனந்திருப்பினார். மக்கள் தங்கள் தவறை ஏற்று, ஆண்டவரைப் போற்றி, அவரில் நம்பிக்கை கொண்டனர். மாய வித்தைகள் செய்வோர் தங்கள் நூல்களை சுட்டெரித்தனர்.
- பவுல் தமது மூன்றாவது மறைபோதகப் பயணத்தின் போது எபேசில் திருச்சபையை நிறுவினார்.

### 7.1.3.2 புனித பவுலின் முக்கிய படிப்பினைகள்

- பவுல் முதல் புறவினத்தவர்களின் அப்போஸ்தலர் மட்டுமல்ல, அவரே முதல் கிறிஸ்தவ இறையியலாளரும் ஆவார்.
- ஒரு சிறப்புத் தேர்ச்சி பெற்ற யூத பரிசேயனான அவர் யூத சட்டங்களையும், பாரம்பரியங்களையும், இறையியலையும் நன்கு அறிந்திருந்தார். கிரேக்க தத்துவ சிந்தனைகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார்.
- ஆனால் தம் தமாஸ்கு அனுபவத்தின் அடிப்படையில் அவற்றை மீளாய்வு செய்து, புதிய கண்ணோட்டத்தில் நோக்கி, புதிய கருத்தில் விளங்கிக்கொண்டார். அதன் விளைவாக உருவாகியதே அவருடைய கிறிஸ்தவ இறையியல் சிந்தனைகள்.
- பவுல் ஒரு சிறந்த பேச்சாளர் அல்ல. அதை அவரே ஏற்றுக்கொள்கிறார். ஆனால் அவர் ஒரு சிறந்த இறையியற் சிந்தனையாளர். அது மட்டுமல்ல, அவர் ஒரு சிறந்த எழுத்தாளரும் ஆவார்.
- அவர் எழுதிய திருமுகங்களிலே அவருடைய சிறந்த இறையியற் சிந்தனைகளும், கருத்துக்களும் காணக்கிடக்கின்றன. அதன் வழியாக பவுல் கிறிஸ்தவ இறையியலின் வளர்ச்சிக்கு பெரிதும் பங்களித்திருக்கிறார். அவற்றுள் முக்கியமான படிப்பினைகள் சில பின்வருவனவாகும்:

#### 7.1.3.2.1 இறையருள்

(உரோ. 2:12-19, 7:7-20, கலா. 3:15-29)

- 'இறையருள்' ஐ உணர்த்துவதற்கு புனித பவுல் பயன்படுத்தும் கிரேக்க பதம் 'காரிஸ்'. அது 'இரக்கம்' அல்லது 'நிலையான அன்பு' எனப் பொருள்படும்.
- பாவத்தின் விளைவாக கடவுளிடமிருந்து பிரிந்து, அவருடன் கொண்டிருந்த உறவை முறித்து, தீயவனுக்கு அடிமையாக வாழும் மனிதன் மோசேயின் சட்டத்தை பிரமாணிக்கமாக அனுசரிக்கும் தனது நற் செயல்களினால், தன்னைத் தானே மீட்டுக் கொள்கிறான். அதாவது, தன்னை கடவுளுக்கு ஏற்புடையவன் ஆக்கிக் கொள்கிறான் என்பது யூத மதத்தின் அடிப்படைக் கருத்து.

- இறைவனுக்கு ஏற்புடையவராகுதல் என்பது இறைவன் திருமுன் நீதிமானாகக் காணப்படுதல், இறைவன் ஒருவருக்கு நீதியாகக் கருதுதல், இறைவனோடு முன்னைய நேரிய உறவு நிலையை ஏற்படுத்தல் அல்லது இரட்சணியம் அடைதல், விடுதலை, மீட்பு அடைதல் எனப் பொருள்படும்.
- யூத மதத்தின மீதும், யூத சட்டங்களின் மீதும் மிதமிஞ்சிய பற்றுக் கொண்டிருந்த யூத பரிசேயனான பவுல், அதே இறையியல் கோட்பாட்டுடன்தான் வாழ்ந்து வந்தார். மனிதன் சட்டத்தை அனுசரிக்கும் தனது நற்செயல்களினால் தன்னைத் தானே இறைவனுக்கு ஏற்புடையவன் ஆக்குகிறான். அதன் நிமித்தமே பவுல் சட்டத்தை மதியாத கிறிஸ்தவர்களின் விரோதியாக மாறி, அவர்களைத் மிகவும் துன்புறுத்தினார்.
- அவரின் தமஸ்கு அனுபவம் அவருடைய சட்டம் பற்றிய கோட்பாட்டை மீளாய்வு செய்யச் செய்தது. உயிர்த்த கிறிஸ்து தம்மோடு ஐக்கியப்படுத்திய கிறிஸ்தவர்களை துன்புறுத்திய பாவியாகத் தான் இருந்த வேளையில் ('நீ துன்புறுத்தும் இயேசு நானே'), அவர் தன் மேல் இரக்கம் கொண்டு, தன்னை எதிர்கொண்டு, தன் பாவங்களை மன்னித்து, பரிசுத்த ஆவியை அளித்து, தன்னை மீட்டு, ஆட்கொண்டார். எனவே தன்னை ஆண்டவருக்கு ஏற்புடையவராக்கியது, சட்டம் அல்ல, மாறாக இயேசுவின் அன்பு, அவரது இரக்கமே. தனக்கு மீட்பளித்தது சட்டங்களை கடைப்பிடிக்கும் நற்செயல்கள் அல்ல, கடவுளின் இறை அருளே என முடிவு செய்தார். 'இப்பொழுது கடவுள் மனிதரைத் தமக்கு ஏற்புடையவராக்கும் செயலுக்கும் திருச்சட்டத்திற்கும் தொடர்பில்லை' (உரோ. 3: 21).
- மனிதன் சட்டத்தை அனுசரிப்பதால் அல்ல, மாறாக இயேசுக் கிறிஸ்துவில் கொள்ளும் விசுவாசத்தினால் மட்டுமே அவன் கடவுளுக்கு ஏற்புடையவன் ஆகிறான். ஏற்புடைமை இறைவனின் ஒரு இரக்கச் செயல். இறைவனின் அன்புக் கொடை. அது ஒரு இறையருள் என்பதே பவுலின் இப்போதைய போதனை, நற்செய்தியாகும்.
- சட்டம் கடவுளிடமிருந்து வருவது. அது புனிதமானது, நல்லது, அது இஸ்ராயேலுக்கு இறைவன் அளித்த தனிச் சலுகை. சட்டம் பாவம் என்ன என்பதை கூறுகிறது. ஆனால் அதனுடைய ஆற்றலிலிருந்து தப்புவது எப்படியெனக் கூறுவதில்லை. சட்டம்தான் மனிதனை பாவத்துக்கு இட்டுச் செல்கிறது, பாவத்தின் அடிமையாக்குகிறது. ஒழுக்க நெறியிலும்கூட அது நல்லது கெட்டது பற்றி அறிவிக்கிறதேயன்றி, நல்லதைச் செய்ய ஆற்றல் தருவதில்லை (உரோ. 7: 16) என்பது பவுலின் முடிவு.
- நாம் பாவம் செய்யும்போது சட்டத்துக்கு எதிராகவல்ல, அளவில்லாத கடவுளுக்கு எதிராகவே பாவம் செய்கிறோம். ஆகவே பாவம் அளவில்லா கனாகனம் உடையது. அதிலிருந்து விடுதலைபெற நாம் அளவில்லாத பரிகாரம் செய்யவேண்டும். அற்ப, அளவுள்ள பாவிகளாகிய நாம் ஒரு போதும் அளவில்லாத பரிகாரம் செய்ய முடியாது. ஆகவே நாம் நாமாக நம்மை பாவத்திலிருந்து விடுவிக்க முடியாது. நாம் நாமாக எம்மை இறைவன் திருமுன் நீதிமான்களாக்க முடியாது. நமக்கு இறையருள் தேவை.
- தொடக்க காலத்தில் சட்டம் இறைமக்களுக்கு ஒரு வழிமுறையாகவும், துணை ஆசானாகவும் இருந்தது. ஒரு மீட்பரின் அவசியத்தை உணர்த்தியது. ஆனால் இப்போது மீட்பர் வந்துவிட்டதால், சட்டம் அர்த்தமற்றதாகிவிட்டது. இயேசுவே சட்டத்தின் முழுமை.
- இயேசுக் கிறிஸ்துவின் அருள் அவருடைய சிலுவை வழியாக வருகிறது. இயேசுக் கிறிஸ்துவில் நாம் கொள்ளும் விசுவாசம், அருள் வழியாக விசுவசிக்கும் எல்லோரையும் இறைவன் இலவசமாக தமக்கு ஏற்புடையவர்கள் ஆக்குகிறார். ஆகவே ஏற்புடைமை அல்லது மீட்பு இறைவன் நமக்கு அளிக்கும் இலவசக் கொடை, இறையருள். எனவே நாம் சட்டம் சார்ந்த செயல்களால் அல்ல, நம்பிக்கையினால், குறிப்பாக இயேசுக் கிறிஸ்துவில் கொள்ளும் நம்பிக்கையினாலேயே இறைவனுக்கு ஏற்புடையவராகுகிறோம்.
- எவரும் சட்டம் சார்ந்த செயல்களால் இறைவனுக்கு ஏற்புடையவர் ஆவதில்லை. எமக்குச் சட்டம் கிடைப்பதற்கு நானூற்று முப்பது ஆண்டுகளுக்கு முன்னதாகவே ஆபிரகாம் தம் விசுவாசத்தினால் இறைவனுக்கு ஏற்புடையவரானார். 'அவர் கடவுள்மீது

நம்பிக்கை கொண்டார். அதைக் கடவுள் அவருக்கு நீதியாகக் கருதினார்' (தொ.நூ.15:6). ஆபிரகாம் தம் விசுவாசத்தினால் இறைவனுக்கு ஏற்புடையவரானதுபோல, நாமும் இறைவன் ஆபிரகாமுக்கு வாக்களித்து, இப்போது அனுப்பியுள்ள இயேசுக் கிறிஸ்துவில் விசுவாசம் கொள்வதாலேயே இறைவனுக்கு ஏற்புடையவராகுறோம்.

- கலாத்தியர் சட்டத்தைபற்றியே கேள்விப்படாமல் இருந்தவேளையிலேயே தூய ஆவியைப் பெற்றுக் கொண்டார்கள். அதற்குக் காரணம் அவர்கள் இறையன்பு பற்றிய நற்செய்தியைக் கேட்டு இறைவனில் விசுவாசம் கொண்டார்கள் (கலா.3:1-14).
- யூதர்கள் சரி, புறவினத்தவர் சரி, நாம் அனைவரும் மீட்புப் பெறுவது, இறைவன் முன் ஏற்புடையவர்களாவது சட்டத்தினானல்ல, சட்டம்சார்ந்த செயல்களினாலுமல்ல, மாறாக இயேசுக் கிறிஸ்துவில் நாம் கொள்ளும் விசுவாசத்தினாலேதான், இறை அருளால்தான்.
- மீட்பு 'விலைகொடுத்து வாங்கப் பெற்றது' எனப் பவுல் குறிப்பிடப்படுகிறார் (1கொரி.6:20, கலா.3:13). 'கடவுள் தனது இரத்தத்தினால் சொந்தமாக்கிக் கொண்ட இறைவனுடைய திருச்சபை' பற்றிப் பேசுகிறார் (தீத்து 2: 14). கிறிஸ்துவின் கல்வாரிப் பலியே நமது விடுதலையின், மீட்பின், கடவுளுக்கு ஏற்புடையவராக்கப்படுதலின், கடவுளால் நீதிமானாகக் கணிக்கப்படுவதின் கருவியாகும். அதற்காக கொடுக்கப்பட்ட விலையாகும்.
- மீட்பு இறைவனின் இலவசக் கொடை, இறையருள். யூதரும், புறவினத்தவரும், அனைவருமே பாவம் செய்து கடவுள் கொடுத்த மேன்மையை இழந்துபோயினர். ஆயினும் அனைவரும் கிறிஸ்து இயேசு நிறைவேற்றிய மீட்புச் செயலின் மூலம் கடவுளுடைய அருளால் இலவசமாய் அவருக்கு ஏற்புடையவர்கள் ஆக்கப்படுகின்றனர். அதாவது கடவுள் பாவிகளை அவர்கள் நல்லவர்கள்போல் நடத்துகிறார்.

### 7.1.3.2.2 கிறிஸ்துவின் தலைமைத்துவமும் தாழ்ச்சியும்

(எபே.1:3-10 கொலோ.1:15-20 பிலி.2:5-11)

### 7.1.3.2.2.1 கிறிஸ்துவின் தலைமைத்துவம் (எபே.1:3-10 கொலோ.1:15-20)

- கிறிஸ்துவின் தலைமைத்துவத்தைப் பற்றி பவுலின் படிப்பினையை நோஸ்டிக்கரின் போதனையின் பின்னணியிலேயே விளங்கிக்கொள்ள வேண்டும். நோஸ்டிக்கரின் கருத்துப்படி, கடவுளிடமிருந்து புறப்பட்ட பல சக்திகளில் ஒன்றே இயேசுக் கிறிஸ்து. எனவே அவர் இணையற்ற, ஒப்பற்ற, தனிப்பட்ட ஒருவரல்ல. மேலும் இயேசுக் கிறிஸ்து கடவுளின் முழுமையான வெளிப்பாடு என்பதையும் அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை.
- இதற்கு எதிராகவே பவுல் இயேசுக் கிறிஸ்துவின் தனித்துவத்தை, இணையற்ற தன்மையை, தலைமைத்துவத்தைப் பற்றிப் பேசுகிறார். 'இயேசு கட்புலனாகாத கடவுளது சாயல், படைப்பனைத்திலும் தலைப் பேறு' (கொலோ.1:15) என்பதே அவரின் நிலைப்பாடு.
- 'சாயல்' என்பதற்கு பவுல் பயன்படுத்தும் கிரேக்க பதம், 'பிரதிநிதித்துவம்', 'வெளிப்பாடு' எனப் பொருள்படும். எனவே பவுல் இயேசு கடவுளின் முழுமையான வெளிப்பாடு என்கிறார். கடவுளை மனிதர் கண்டு, அறிந்து, விளங்குமளவிற்கு இயேசு அவரை நிறைவாக பிரதிநிதித்துவம் செய்கிறார். அவர் இறைவனின் அசலான, பிரமாணிக்கமான படம், ஓவியமாயிருக்கிறார்.
- தொடர்ந்து பவுல் இயேசுவுக்கும் படைப்புகளுக்கும் இடையே உள்ள தொடர்பு, உறவு பற்றிப் பேசுகிறார். இயேசு 'படைப்பனைத்திலும் தலைப் பேறு' என்கிறார். எபிரேய, கிரேக்க சிந்தனையில் இச் சொற்றொடர் இயேசு படைப்புகளில் முதலானவர் எனப் பொருள்படுவதில்லை. மாறாக அது மகிமையை, மாட்சிமையைக் குறிக்கின்றது.
- அது மட்டுமல்ல, அனைத்தும் அவருக்காகவே படைக்கப்பட்டன. இயேசு ஆரம்பத்தில் படைப்புகள் அனைத்தையும் படைத்தவர் மட்டுமல்ல, அவரே இறுதியில் படைப்பின் நோக்கமாக, குறிக்கோளாக, முடிவாக இருக்கிறார். அவரே படைப்பனைத்தையும், அவற்றின் ஆரம்பத்திற்கும், முடிவிற்கும் இடைப்பட்ட காலத்தில், கட்டிக் காப்பவர். அதாவது இந்த உலகைக் கட்டிக் காக்கும் இயற்கைச் சட்டங்கள், விதிகள் எல்லாம் அவரின் உள்ளத்தின் வெளிப்பாடேயாகும்.

- தொடர்ந்து பவுல், இயேசுவுக்கும் திருச்சபைக்குமிடையே உள்ள உறவு, தொடர்பு பற்றிப் பேசுகிறார் (1: 18-19). இயேசு உடலாகிய திருச்சபையின் தலை, தொடக்கம். திருச்சபை தலையாகிய அவரால் இயங்கும் உடல். ஆகவே இயேசுவே திருச்பைக்கு உயிர்கொடுக்கும் அதன் ஆவி.
- பாவத்தின் விளைவாக இறைவனுக்கும் மனிதருக்கும் இடையே இருந்த நல்லுறவு முறிபட்டு, மனிதன் கடவுளிடமிருந்து பிரிந்து வாழ்ந்தான். இருந்தும் கடவுள் தொடர்ந்தும் மனிதனை அன்பு செய்துகொண்டே வந்தார். எனவேதான் ஒப்புரவுப் பணிக்காக இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்பியவர் இறைத் தந்தையே. இயேசு இவ் ஒப்புரவுப் பணியை நிறைவேற்றவே இவ்வுலகிற்கு வந்தார்.
- விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை அனைத்தையும் தம்மோடு ஒப்புரவாக்கவும் கடவுள் திருவுளம் கொண்டாரெனப் பவுல் கூறுகிறார். கடவுளின் மனதரோடு மட்டுமல்ல, உயிருள்ள, உயிரற்ற அனைத்துப படைப்புகளோடும் ஒப்புரவை விரும்பினார். இயேசுவின் சிலுவை வழியாக அனைத்து படைப்புகளும் கடவுளுடன் ஒப்புரவாக்கப்பட்டன.
- இவ்வாறு பவுல் படைப்புகள் எல்லாம் இயேசுக் கிறிஸ்துவுக்கு சமனற்றவை. அவர் படைப்புகள் எல்லாவற்றிற்கும் மேலானவர், அதி சிறந்தவர், உன்னதரெனக் காட்டுகிறார். இயேசுவின் தலைமைத்துவத்தை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ளவேண்டும். எங்கள் வாழ்விலும், எங்கள் குடும்பங்களின் வாழ்விலும் இயேசுவே தலைவராக இருக்கவேண்டும்.

### 7.1.3.2.2.2 கிறிஸ்துவின் தாழ்ச்சி (பிலி.2:5-11)

- 'வாழ்வது நானல்ல, என்னில் கிறிஸ்துவே வாழ்கின்றார்'. என் வாழ்வு கிறிஸ்துவின் வாழ்வாக மாற வேண்டுமென்றால், முதலில் என் மனம் கிறிஸ்துவின் மனமாக மாறவேண்டும். எனவேதான் 'கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும்' (பிலி. 2:5) எனக் கூறிய பவுல், கிறிஸ்துவின் வாழ்விலும், செயலிலும் வெளிப்பட்ட அவரது மனநிலையை படம்பிடித்துக்காட்டி, அதே மனநிலையை ஒவ்வொரு கிறிஸ்தவனும் கொண்டிருக்க வேண்டுமென்கிறார். குறிப்பாக அவருடைய தாழ்ச்சியை எமக்குப் படிப்பிக்கின்றார்.
- 'கடவுள் வடிவில் விளங்கிய அவர, தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் வடிவை ஏற்று, மனிதருக்கு ஒப்பானார்' 'வடிவு' என்பதற்கு பவுல் பயன்படுத்தும் கிரேக்க சொல் எச் சூழ்நிலையிலும் மாறாத தன்மையைக் குறிக்கிறது. அதாவது ஒருவரின் இயல்பான நிலையைக் குறிக்கிறது. இயேசு அடிப்படையில் மாற்றமுடியாத தெய்வீக இயல்பை உடையவர். எந்நிலையிலும் என்றும் அவர் இறைவனே.
- இருந்தும் அவர் இறைவனுக்கே உரிய மகிமை, வல்லமை, ஆற்றல், அறிவு போன்ற புற உரிமைகள் ஒன்றையும் பற்றிக் கொண்டிருக்கவில்லை. அவற்றை தனக்கென்று மூடிமறைத்து வைத்திருக்கவில்லை. தன் சொந்த நலனுக்காக, மகிமைக்காக அவற்றைப் பயன்படுத்தவில்லை.
- 'தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் வடிவை ஏற்று, மனிதருக்கு ஒப்பானார்'. வெறுமையாக்குவதற்கு பவுல் பயன்படுத்தும் கிரேக்க சொல், ஒன்றுமில்லாமல் அனைத்தையும் முற்றுமுழுவதும் துறப்பதை, இல்லாமல் செய்வதைக் குறிக்கிறது.
- இங்கு இயேசுவின் மண்ணக வாழ்வின் நிலை வர்ணிக்கப்படுகிது. இயேசு மனுவுருவான மறைபொருளை பவுல் மிகவும் உயிருள்ள முறையில் விபரிக்கிறார். அவர் மனுஷீகத்தை, மனிதத்தை எடுப்பதற்காக, தானாகவே விரும்பி, தன்னுடைய தெய்வீகத்தை முற்றுமுழுவதும் வெறுமையாக்கினார். தனது உரிமை, மகிமை, ஆற்றல் அனைத்தையும் துறந்தார்.
- 'அடிமையின் வடிவை ஏற்று': இங்கு திரும்பவும் 'வடிவம்' மாற்ற இயலா இயல்பைக் குறிக்கிறது. இயேசு மனிதன் போல், அடிமைபோல் நடிக்கவில்லை. தோன்றவில்லை. ஆனால் உண்மையில் மனிதனானார், மனிதனுடைய இன்ப துன்பம், கவலை, வேதனை, ஏழ்மை அனைத்திலும் பங்கு கொண்டார். பாவத்தைத் தவிர, மற்றனைத்திலும் மனிதனுக்கு ஒப்பானார்.

- மனிதனாகியது மட்டுமல்ல, அவர் ஒரு அடிமையானார். அடிமையென்பவன் தனக்கென்று வாழாதவன், தனக்கென்று எவ்வித உரிமையும் இல்லாதவன். மற்றவனுக்கென்றே வாழ்பவன். அவனின் காலம், நேரம், ஆற்றல், அறிவு அனைத்தும் மற்றவனுக்கே சொந்தம். அனைவருக்கும் ஆண்டவனாயிருந்தவர் அனைவருக்கும் அடிமையானார்.
- 'தம்மைத் தாழ்த்தி, மரணமட்டும், சிலுவை மரணமட்டும் கீழ்ப்படிந்தார்'. அடிமையானது மட்டுமல்ல, கேடுகெட்ட அடிமையானார். சிலுவை மரணம் ஒரு அடிமைக்கு, தன் உரிமைகள் அனைத்தையும் இழந்த ஒருவனுக்கே உரிய தண்டனை முறை. இதுவே இழிவின் கடைசி எல்லை. அவமானத்தின் உச்ச கட்டம்.
- கிறிஸ்துவின் இவ்வுலக வாழ்வில் மிளிர்ந்த பண்புகளான தாழ்மை, கீழ்படிவு, சுய பரித்தியாகம் போன்றவற்றை பவுல் அழகாகக் கூறுகிறார். அவர் மக்கள்மேல் ஆதிக்கம் செலுத்த விரும்பவில்லை, மாறாக அவர்களுக்குப் பணிபுரியவே விரும்பினார். அவர் தன் விருப்பம்போல் வாழ விரும்பவில்லை, மாறாக இறைத் தந்தையின் விருப்பப்படியே வாழ விரும்பினார். அவர் தம்மை உயர்த்திக்கொள்ள விரும்பவில்லை, மாறாக மக்களுக்காக தம்மைத் தாழ்த்தி, தம் மகிமை அனைத்தையும் துறக்கவே விரும்பினார்.
- 'ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் அருள் செயலை அறிந்திருக்கிறீர்களே! அவர் செல்வராயிருந்தும் உங்களுக்காக ஏழையானார். இவருடைய ஏழ்மையினால் நீங்கள் செல்வராகுமாறு இவ்வாறு செய்தார்'. (2 கொரி. 8:9).
- 'தன்னைத் தானே தாழ்த்திக் கொள்ளுகிறவன் உயர்த்தப் படுவான்' என புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் படிக்கிறோம். கிறிஸ்துவின் சுய பரித்தியாகம், அவரின் சுய வெறுமையாக்கல், தாழ்ச்சி அவருக்கு எந்தவொரு மனிதருக்கும் கிடைக்காத மாட்சிமையைக் கொணர்ந்தது. சாவைவென்று, புத்துயிருடன், புதுப் பொலிவுடன், வெற்றி வீரனாக உயிர்த்தெழுப்பப்பட்டார். இறைவனே அவரை உயிர்த்தெழச் செய்தார். அவரை மகிமைப் படுத்தினார்.
- இறைவன் அவரை மாட்சிமைப் படுத்தி, அவருக்கு எல்லாப் பெயருக்கும் மேலான பெயரை அளித்தார். புதிய பெயர் கொடுப்பது, ஒரு மனிதனின் வாழ்வில் ஒரு புதிய நிலை, கட்டம் ஆரம்பமாகுவதைக் குறிக்கிறது. இறைவன் கொடுத்த புதுப் பெயர் 'ஆண்டவர்'. இப் பெயரினாலேயே ஆதித் திருச்சபையில் இயேசு அழைக்கப்பட்டார். அது இயேசு அனைத்து உயிர்களுக்கும் உரிமையாளர். அரசர்க்கெல்லாம் அரசர், அவர் இறைவன் எனப் பொருள்படும்.

**7.1.3.2.3 உயிர்ப்பும் மறுவருகையும்** (1 தெச. 5:1-11)

- தலைமைக் குருக்களும், பரிசேயரும், யூதர்களும் இயேசு உயிர்த்தெழுந்ததை நம்பவில்லை. கிறிஸ்துவின் அடக்கம் செய்யப்பட்ட உடலை அப்போஸ்தலர்கள் கல்லறையினின்று திருடிவிட்டு, அதை மறைக்க கட்டிய கதையே அதுவென்பது அவர்கள் கருத்து.
- யூத பரிசேயனான சவுலும் அதே கருத்தையே கொண்டிருந்தார். ஆனால் தமஸ்குப் பாதையில் அவர் உயிர்த்த இயேசுவை நேருக்குநேர் எதிர்கொண்டது, அவர் கருத்தை மாற்றிவிட்டது.
- மேலும் பவுல் கிறிஸ்துவின் உயிர்ப்புக்கு மறை நூலையும், அப்போஸ்தொலிக்க பாரம்பரியத்தையும், உயிர்த்த கிறிஸ்துவை தங்கள் கண்ணால் கண்டவர்களின் சாட்சியத்தையும் ஆதாரமாகக் கொள்கிறார்: 'நான் பெற்றுக் கொண்டதும், முதன்மையானது எனக் கருதி உங்களிடம் ஒப்படைத்ததும் இதுவே: மறை நூலில் எழுதியுள்ளவாறு கிறிஸ்து நம் பாவங்களுக்காக இறந்து, அடக்கம் செய்யப்பட்டார். மறை நூலில் எழுதியுள்ளவாறே மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்பட்டார். பின்னர் அவர் கேபாவுக்கும், அதன்பின் பன்னிருவருக்கும் தோன்றினார். எல்லாருக்கும் கடைசியில் காலம் தப்பிப் பிறந்த குழந்தை எனக்கும் தோன்றினார்' (1 கொரி.15:3-8).

- பவுலின் இறையியல் சிந்தனை, படிப்பினைகள் அனைத்தும் கிறிஸ்துவின் உயிர்ப்பையே அத்திவாரமாகக் கொண்டுள்ளன. 'கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட வில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும், நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும். நாங்களும் கடவுளின் சார்பில் பொய்ச்சான்று பகர்வோர் ஆவோம்' (1 கொரி.15:14). 'கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை பயனற்றதே. நீங்கள் இன்னமும் உங்கள் பாவங்களில் வாழ்பவர்களாவீர்கள்' (1 கொரி.15:17).

**7.1.3.2.3.1 இறந்தவர்களின் உயிர்ப்பு**

- திருச்சபையின் ஆரம்பத்தில் இறந்தவர்களின் உயிர்ப்பைப்பற்றி தெளிவான கருத்துகள் இருக்கவில்லை. எல்லோரும் உடனடியாக நடைபெறும் என நம்பியிருந்த கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காக ஆவலோடு காத்திருந்தனர். ஆனால் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை தாமதிக்கவே, அதற்கிடையில் சில கிறிஸ்தவர்கள் இறந்த பொழுது, அவர்களுக்கு என்ன நடக்கும் என்ற கேள்வி எழுந்தது (1 தெச. 4:14). மேலும் சில கொரிந்தியர்கள் உடலின் உயிர்ப்பை ஏற்றுக்கொள்ளவில்லை (1 கொரி. 15:12).
- பவுலின் இறந்தவர்களின் உயிர்ப்பைப்பற்றிய படிப்பினை தெசலோனிக்கரின், கொரிந்தியரின் சந்தேகங்களைத் தெளிவாக்கவே எழுதப்பட்டது.
- இறந்தவர்களின் உயிர்ப்பு, அப்போஸ்தலர்களின் படிப்பினையிலிருந்து நாம் பெற்றுக் கொண்ட கிறிஸ்துவின் உயிர்ப்பின் தவிர்க்க முடியாத, இயல்பான விளைவாகும். கிறிஸ்து மனிதத்தை ஏற்றுக்கொள்வோமேயானால், கிறிஸ்துவின் உயிர்ப்பு ஒரு மனிதனின் உயிர்ப்பு. எனவே கிறிஸ்தவர்கள் அத்தகைய அனுபவத்தை எதிர்பார்க்கலாம். (1 கொரி. 15:20; 1தெச. 4:14; 1கொரி. 15:13)).
- ஆண்டவர் வானின்று மகிமையுடன் இரண்டாம் முறை வரும்பொழுது, கிறிஸ்து மீது நம்பிக்கைகொண்ட நிலையில் இறந்தவர்கள் முதலில் உயிர்த்தெழுவர். கிறிஸ்து தம் இரண்டாம் வருகையின்போது செய்யப் போகும் முதல் வேலை தம்மீது நம்பிக்கை கொண்டு இறந்தவர்களை உயிர்ப்பித்தல் என்பது பவுலின் கருத்து.
- கிறிஸ்து இயேசுவில் நாம் கொள்ளும் விசுவாசத்தின் வெளிப்பாடே திருமுழுக்காகும். கிறிஸ்துவின் பெயரால் அளிக்கப்படும் திருமுழுக்கு (1கொரி.1:13) திருமுழுக்குப் பெறுகிறவரை நம் ஆண்டவரின் இறப்போடும், புதைக்கப்படுதலோடும், உயிர்த்தெழுதலோடும் இணைக்கிறது (உரோ. 8:3, கொலோ. 2:12). தண்ணீரில் மூழ்குவித்தல் கிறிஸ்துவின் இறப்பையும், புதைக்கப்படுதலையும் குறித்துக் காட்டுகிறது. தண்ணீரினின்று வெளிவருதல், கிறிஸ்துவோடு இணைந்து உயிர்த்தெழுவதற்கு அடையாளமாய் இருக்கிறது. பாவத்துக்கு சாவதும், வாழ்வைக் கொடையாய்ப் பெறுவதும் இணைபிரியாதவை.
- நம் விசுவாசம், திருமுழுக்கு வழியாக நாம் கிறிஸ்துவோடு, அவர் வாழ்வோடு, அவர் இறப்பு, உயிர்ப்போடு ஒன்றிக்கின்றோம். 'வாழ்வது நானல்ல, என்னிலே கிறிஸ்துவே வாழ்கிறார்'. கிறிஸ்தவன், கிறிஸ்துவில் வாழ்பவன் அனுதினமும் பாவத்துக்கு இறந்து, கிறிஸ்துவின் புதுவாழ்விற்கு எழுந்து கொண்டிருக்கிறான். அவனுடைய வாழ்வு தொடர்ச்சியான இறத்தலும் உயிர்தெழுதலுமாகும்.
- திருமுழுக்கு வழியாக பரிசுத்த ஆவியைப் பெற்ற மனிதன் கடவுளின் சுவீகார மகனாக ஏற்கனவே தான் சுவைக்கும் கடவுளின் மாட்சியின் முழு நிறைவுக்காக எதிர்நோக்குடன் காத்திருக்கிறான். அந்நாளில் அவனுடைய ஆன்மா மட்டுமின்றி, அவனது உடலும். அழிவினின்று, சாவினின்று, பாவக் கருவியாக இருப்பதினின்று மீட்புப் பெறுவதற்காக நம்பிக்கையுடன் ஏங்கி நிற்கின்றது.
- புனித பவுல் இறந்தோர் உயிர்த்தெழுவதில்லை எனக் கூறும் கொரிந்தியர்கள் சிலரை மிகக் கடுமைாகச் சாடுகிறார். (1 கொரி. 15: 12-20).

- இந்த நம்பிக்கைதான் தன் வாழ்வில் பல ஆபத்துக்களை எதிர்கொள்ளுவதற்கு தனக்கு உற்சாகம் அளிப்பதாகப் பவுல் கூறுகிறார். அதேபோல் வரப்போகும் மாட்சியிலுள்ள நம்பிக்கை அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் நம்பிக்கை ஊட்ட வேணுமெனச் சொல்கிறார் (உரோ. 8: 18-25).
- மனிதன் மட்டுமல்ல அனைத்துப் படைப்புகளுமே வரவிருக்கும் மாட்சிக்காக ஏங்கி, எதிர்நோக்கோடு காத்திருப்பதாகக் கூறுகிறார். மனிதன் செய்த பாவத்திற்குத் தண்டனையாகச் சபிக்கப்பட்ட இயற்கையும், தன் விடுதலைக்காக, துன்பமற்ற, அழிவற்ற, சாவற்ற காலத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கிறது. பவுல், யூதர் இறுதி நாட்கள் பற்றிக் கொண்டிருந்த கருத்தை அடிப்படையாக வைத்து, இவ்வுலகத்தின் இன்றைய நிலைபற்றியும், வரப் போகும் நிலைபற்றியும் பேசுகிறார். (உரோ. 8: 18). அந் நாளில் ஆண்டவர் சாத்தானையும், சகல தீய சக்திகளையும் தோற்கடித்து., அனைத்து மனிதரையும், படைப்பையும், இயற்கையையும் விடுவிப்பார். அனைத்துலகும் ஆண்டவரின் ஆட்சியின் கீழ் கொணரப்படும். எங்கும் அமைதியும், மகிழ்ச்சியும், சமாதானமும் இருக்கும்.

**உடலின் உயிர்ப்பு**

- கிறிஸ்துவின் உயிர்ப்பையும், தொடர்ந்து கிறிஸ்துவில் நம்பிக்கைகொண்டு இறந்தவர்களின் உயிர்ப்பையும் வலியுறுத்திய பவுல், இறுதியாக இறந்தவர்கள் எப்படி, எத்தகைய உடலோடு உயிர்த்தெழவார்களெனப் படிப்பிக்கின்றார். ஏனெனில் சில கொரிந்தியர் உடலின் உயிர்ப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. அடக்கம் செய்யப்பட்டு, அழிந்துபோன உடல் எப்படி உயிர்த்தெழுப்பப்படும் என்பது அவர்களின் கேள்வி. எனவே கிரேக்கரின் அழியாத ஆன்மாவையே அவர்கள் ஏற்றனர். உடலின் உயிர்ப்பை ஏற்றுக்கொள்ளவில்லை.
- பவுல் இறந்தவர்களின் உடலின் உயிர்ப்பை வலியுறுத்துகிறார். இறந்தவர்கள் அடக்கம் செய்யப்பட்ட அதே உடலோடு, ஆனால் உருமாற்றம், மாற்றுரு பெற்ற உடலோடு, உயிர்த்தெழுவர். அதாவது அங்கு உடலில் தொடர்ச்சியும், உருமாற்றமும் இடம்பெறும். உயிர்த்த இயேசுவின் உடலிலே ஆணிகளின் தழும்புகள் இருந்தன.
- உயிர்த்தெழுப்பப்படும் உடலின் இயல்பை விளக்குவதற்கு பவுல் விதைக்கப்படும் விதையை ஒரு ஒப்புவமையாகப் பயன்படுத்துகிறார். கோதுமை மணியை விதைக்கிறோம். அது நிலத்தில் விழுந்து, உக்கி, மடிந்து ஒரு பயிராக, மாற்றுருவுடன் முளைக்கின்றது. கடவுள் தம் விருப்பப்படி அப்பயிருக்கு ஒரு புதிய உருவைக் கொடுக்கிறார். அதே விதை, ஆனால் மாற்றுரு (1 கொரி.15:3538). அடக்கம் செய்யப்பட்ட உடலும், உயிர்த்தெழும் உடலும், விதைக்கப்படும் விதையும், முளைக்கும் பயிரும் போல, உருவில் வேறுபடுகின்றன. அங்கு தொடர்ச்சியும், உருமாற்றமும் காணப்படுகின்றன.
- மேலும் பவுல் இறக்கும்போதுள்ள உடலின் இயல்பை உயிர்த்தெழும்போதுள்ள உடலின் இயல்புடன் ஒப்பிட்டுக் காட்டுகின்றார்.:

| இறக்கும்போது | உயிர்த்தெழும்போது |
|---|---|
| அழிவுக்குரிய உடல் | அழியாத உடல் |
| மதிப்பற்ற உடல் | மாண்புக்குரிய உடல் |
| வலுவற்ற உடல் | வல்லமையுள்ள உடல் |
| மனித இயல்புகொண்ட உடல் | ஆவிக்குரிய உடல் |
| களி மண்ணால் ஆன உடல் | விண்ணிலிருந்து வந்தவரின் உடல் |

### 7.1.3.2.3.2 கிறிஸ்துவின் (இரண்டாம்) மறுவருகை (1தெச. 5:1-11)

- புனித பவுல் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப்பற்றி படிப்பிப்பதை நாம் பழைய ஏற்பாட்டில் இறுதிக்காலம் பற்றிக் கூறப்படும் கருத்துக்களின் பின்னணியில், அதாவது அங்கு காணப்படும் ‘ஆண்டவரின் நாள்’ இன் பின்னணியில்தான் விளங்கவேண்டும்.

- யூதர்களின் இறுதிக்காலம் பற்றிய கருத்தின்படி, உலக வரலாற்றை. நிகழும் யுகம், வரவிருக்கும் யுகமென இரு வகைப்படுத்துவர். நாம் இப்போழுது நிகழும் யுகத்தில் இருக்கிறோம். அது சாத்தானின், சாவின் ஆதிக்கத்தில் இருக்கிறது. விரைவில் இவ் யுகம் முடிவுக்கு வரும். மெசியா வந்து, சாத்தானைத் தோற்கடித்து, மக்களை விடுதலையாக்கி, வரவிருக்கும் யுகத்தை ஆரம்பிப்பார்.
- இந்த இரண்டு காலங்களுக்கும் இடையில்தான் 'ஆண்டவரின் நாள்' உள்ளது. அது இக்காலத்தின் இறுதிக் கட்டத்தில், அதாவது வரப்போகும் காலத்தின் விடிவின்போது இடம்பெறும். அது பொல்லாத நாள், பயங்கரமான நாள். அந்த நாளில்தான் இக்காலம் முற்றுப் பெற்று, வரப்போகும் காலம் உதயமாகும். அந்த நாளில்தான் இறைவன் மெசியாவை அனுப்பி, சாத்தானுடன் இறுதிப் போர் செய்து, அவனைத் தோற்கடித்து, உலகத்தை விடுவிக்கும் நாள். அந்த நாளில் பூமியதிர்ச்சிகளும், பூகம்பங்களும் ஏற்பட்டு, பிரபஞ்சமே அசைக்கப்படும்.
- வரவிருக்கும் யுகத்திலே நாம் இறைவனின் ஆதிக்கத்தின் கீழ், இறை அரசில் அமைதியாக வாழ்வோம். வரவிருக்கும் யுகத்தில்தான் இறந்தவர் உயிர் பெறுவர்.
- தமஸ்கு பாதையில் அவர் உயிர்த்த இயேசுவை எதிர்கொண்டது, அவர் வாழ்வில் ஒரு பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது. ஏனெனில் இயேசு உயிர்த்துவிட்டாரென்றால், வருவிருக்கும் யுகம் ஏற்கனவே உதயமாகிவிட்டது. ஆகவே சாவு தோற்கடிக்கப்பட்டு விட்டது, சாத்தான் தோற்கடிக்கப்பட்டு விட்டான். எனவே இறுதித் தீர்க்கமான சமர், போர் நடைபெற்று முடிந்துவிட்டது.
- அது எங்கு, எப்போது நடைபெற்றது? அது கல்வாரியில் நடைபெற்றிருக்க வேண்டும். எனவே இயேசுவே இறைவனால் வாக்களிக்கப்பட்டு, இறைவாக்கினரால் முன்னறிவிக்கப்பட்டு, இஸ்ராயேலரால் எதிர்பார்க்கப்பட்ட மெசியாவென முடிவுசெய்தார் அதை உறுதியாக விசுவசித்தார்.
- இயேசுவின் முதல் வருகைக்கும் இரண்டாம் வருகைக்கும் இடைப்பட்ட காலத்தை மெசியாவின் காலம் என்றழைக்கின்றோம். எனவே இப்பொழுது நாம் மெசியாவின் காலத்தில் இருக்கிறோம். இது நிகழும் காலத்திற்கும், வரப்போகும் காலத்திற்கும் இடைப்பட்ட காலம். இக் காலத்தில் மெசியாவாகிய இயேசு, தம் மறை உடலாகிய திருச்சபை வழியாக உலகெங்கும் சிதறி, மறைந்து, ஒழிந்து இருக்கும் தீய சக்திகளைத் தேடிக் கண்டுபிடித்து, அழித்து, முழு உலகையும் படிப்படியாக இறைவனின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருகிறார்.
- திருச்சபையின் பணி வழியாக அனைத்துப் படைப்புகளும் இயேசுவின் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்ட பின், இயேசு விரைவில் மறு (இரண்டாம்) முறை மாட்சியுடன் வந்து, மக்களுக்குத் தீர்ப்பு வழங்கி, தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட முழு உலகையும் ஆட்சிசெய்ய இறைவனிடம் ஒப்படைப்பார். பழைய ஏற்பாட்டில் 'ஆண்டவரின் நாள்' என அழைக்கப்படும் அந்நாளே புதிய ஏற்பாட்டில் 'பரூசியா', ஆண்டவரின் இரண்டாம் வருகையின் நாள் என அழைக்கப்படுகிறது.
- அந்த நாள் பயங்கரமான நாள். இயேசு நீதி வழங்க மறுமுறை வரும்போது சாதகமான தீர்ப்பு பெறுவதற்கு வழி, நாம் இப்பொழுது அவரில் விசுவாசம் கொள்ளவேண்டும். பவுல் இயேசுவின் இரண்டாம் வருகையை மக்களின் ஒழுக்க வாழ்வை ஊக்குவிக்கும் சந்தர்ப்பமாகப் பயன்படுத்துகிறார். இதுவே புனித பவுலின் இறையியலின், இறைபணியின் அடித்தளமாகவிருந்தது.
- பவுல் தம் பணியின் ஆரம்ப காலத்தில் தெசலோனிக்காவில் பணியாற்றியபொழுது, இதையே தெசலோனிக்கர்களுக்கு எடுத்து விளக்கியிருந்தார். அக் கருத்துக்களையே அவர் தெசலோனிக்கருக்கு எழுதிய முதல் திருமுகத்தில் காண்கிறோம். 'கட்டளை பிறக்க. தலைமை வானதூதரின் குரல் ஒலிக்க, கடவுளுடைய எக்காளம் முழங்க, ஆண்டவர் வானினின்று இறங்கி வருவார்' (1 தெச. 4: 16).

- தெசலோனிக்காவில் பணியாற்றியவேளை இயேசுவின் இரண்டாம் வருகை உடனடியாக இடம் பெறுமென்றும், அதன்போது உயிருடன் இருக்கப் போகிறவர்களுடன் பவுல் தன்னையும் சேர்த்துக் கொள்கிறார் (1 தெச. 4:15). இயேசுவின் இரண்டாம் வருகை தாமதிக்கவே, நான்கு வருடங்களுக்குப் பின் கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் திருமுகத்தில் அந்நாளில் இறந்தவர்களிடமிருந்து உயிர்த்தெழுபவர்களில் தானும் ஒருவராயிருப்பாரெனக் கூறுகிறார் (1 கொரி. 6:14).
- இயேசு இரண்டாம் முறை மகிமையுடன் வரும்பொழுது அவர் செய்யப்போகின்ற முதல் வேலை தம்மில் நம்பிக்கை கொண்டு இறந்தவர்களை உயிர்ப்பிப்பதே என்கிறார் பவுல். பின்னர் உயிரோடு எஞ்சியிருப்பவர்களும் அவர்களோடு மேகங்களில் எடுத்துக்கொண்டு போகப்பட்டு, ஆண்டவரை எதிர்கொண்டு, அவரோடு இருப்பர்.
- உத்தானத்தின்போது இறந்தவர் மாற்றுரு, அதாவது ஆவிக்குரிய உடல் பெறுவர். இங்கு நாம் அக்காலத்தைய யூதர் கொண்டிருந்த கருத்திலிருந்து வளர்ச்சியைக் காண்கிறோம்.
- தொடர்ந்து கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்தில் இன்னும் வளர்ச்சியைக் காண்கிறோம். இங்கு இறை ஊழியர்களில் ஏற்கனவே உத்தானம் செயல்படுவதாகவும், மனிதனின் உள்ளார்ந்த இயல்பு புதுப்பிக்கப்படும்போது இப்பொழுதே ஆவிக்குரிய உடல் உருவாகுவதாகவும் கூறுகிறார். மேலும் உடல் இறந்தவுடன், உடனடியாக விண்ணக வீடு எமக்குக் கிடைக்குமென்கிறார் (2 கொரி. 5: 2-10).
- உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் பவுல் திருமுழுக்கு வழியாக கிறிஸ்துவின் மரணத்தில் பங்கெடுத்த நாம் இப்பொழுதே கிறிஸ்துவின் உத்தான வாழ்விலும் பங்கெடுப்பதாகக் கூறுகிறார் (உரோ. 6: 3, 8 : 17, 19).
- இயேசு நிச்சயமாக இரண்டாம் முறை வருவார். ஆனால் அந் நாள் திடீரென, திருடனைப் போல், கருவுற்றிருப்பவர்களுக்குப் பிரசவ வேதனை வருவதுபோல், எவரும் எதிர்பாராத வேளையில் வரும். இயேசுவே அந்த நாள் எப்பொழுது வருமென எந்தவொரு மனிதனும் அறியான், தனக்கும் தெரியாது. இறைத் தந்தை மட்டுமே அறிவாரெனக் கூறியிருக்கிறார் (மாற்கு 13: 32).
- அந்த நாள் ஆண்டவர் முழு மனுக்குலத்துக்கும் தீர்ப்பு வழங்க வரும் நாள். எனினும் கிறிஸ்தவர்கள் அதற்குப் பயப்படுவதற்கு, எதிர்பாராமல் அந்த நாளில் சிக்கிக் கொள்வதற்கு காரணமே இல்லை. இருளில் வாழ்பவன், தீய செயல்களைச் செய்பவனே, ஆயத்தமில்லாத வேளையில் ஆண்டவர் வந்தால் சிக்கி மாட்டிக்கொள்வான். ஆனால் ஒளியில் வாழும் கிறிஸ்தவனுக்கு, அந் நாள் எப்போது வந்தாலும் ஒன்றுமில்லை. 'கிறிஸ்துவோடு இணைந்திருப்போருக்கு இனித் தண்டனைத் தீர்ப்பே கிடையாது' (உரோ. 8 1).
- இறுதியாக பவுல் இயேசுவின் இரண்டாம் வருகைக்கு முன் உலகில் சில அடையாளங்கள் இடம்பெறுமெனக் கூறுகிறார். (2 தெச..2:3-12).
- ஆகவே சாத்தானின் தீய சக்திகள் இனனமும் முழுமையாக அழிக்கப்படாமல் இருப்பதனால், தீய சக்திகள் மத்தியில் கிறிஸ்தவன் விழிப்போடும், அறிவுத் தெளிவோடும் வாழவேண்டும். அப்படி வாழ்ந்தால், அவன் எந் நேரமும் அந்நாளைச் சந்திக்க ஆயத்தமாயிருப்பான்.

### 7.1.3.3 ஒழுக்க விழுமியக் கோட்பாடுகள்

#### 7.1.3.3.1 குடும்ப வாழ்வு (1 கொரி. 7:1-16: எபே. 5:22-30: கலா. 3:28)

- கிறிஸ்தவ குடும்பமே திருச்சபையின் உயிர்நாடி. பல கிறிஸ்தவ குடும்பங்களால் கட்டியெழுப்பப்பட்ட கடவுளின் பெரிய குடும்பமே திருச்சபை. கிறிஸ்தவ குடும்பம் ஒரு குட்டித் திருச்சபை. எனவே கிறிஸ்தவ குடும்ப வாழ்வுக்கும், திருச்சபையின் வாழ்வுக்குமிடையே நெருங்கிய உறவு, தொடர்பு உண்டு.

- புனித பவுல் கிறிஸ்தவ குடும்ப வாழ்வுபற்றிக் கொண்டிருந்த கருத்தில் நாம் ஒருவித வளர்ச்சியைக் காண்கிறோம். முதல் எழுதிய திருமுகங்களில் (1 கொரி) திருமணம்பற்றி ஒரு எதிர்மறையான, குறைவான மனப்பான்மை காணப்படுகிறது. தன்னைப் போல் எல்லோரும் திருமணம் செய்யாமலிருப்பதே நல்லதெனக் கூறுகிறார்.
- கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்தில் புனித பவுல் திருமணம், குடும்ப வாழ்வுபற்றிக் கூறுவதை நாம் சரியாக விளங்குவதற்கு கொரிந்திய மக்கள் வாழ்ந்த சூழலையும், அவர் எதிர்நோக்கிய பிரச்சினைகளையும் நன்கு அறிந்திருக்கவேண்டும். அக்காலத்தில் வாணிப நகரமான கொரிந்து பரத்தைமை, விபச்சாரம், சிற்றின்ப கேளிக்கைகளுக்கு பெயர்போன இடமாக இருந்தது. பாவத்துக்கு ஏதுவான இடங்களும், பாவச் சோதனைகளும் மலிந்திருந்தன. மேலும் பவுல் மெசியாவின் காலம் கெதியில் முடிவுக்கு வருமெனவும், கிறிஸ்துவின் இரண்டாம் வருகை விரைவில் வருமென்றும் காத்திருந்ததையும் நாம் மனதில் கொள்ள வேண்டும்.
- மேலும் சில கொரிந்தியரின் கருத்துப்படி, உடல் தீயது. ஆகவே அதை நாம் அடக்கி ஆளவேண்டும், அழிக்க வேண்டும். முடியாவிடின் அதற்கு இயல்பாகவுள்ள சகல ஆசைகளையும். நாட்டங்களையும், உணர்வுகளையும் நாம் அடக்க வேண்டும், ஆகவே ஒருவன் முழுமையான கிறிஸ்தனாக வாழ விரும்பினால், அவன் உடல் சம்பந்தமான விடயங்களை முழுமையாக விலக்கி, திருமணம் செய்யாமலிருக்க வேண்டும்.
- பவுலின் பதில் செயல்முறையானதொன்றாகத் தெரிகிறது. திருமணம் கணவன்-மனைவி இறைவன்மேல் கொண்டிருக்க வேண்டிய அக்கறையைக் குறைக்கிறது. எனவே எல்லோரும் திருமணம் செய்யாமலிருப்பதே நல்லதெனக் கூறுகிறார். ஆனால் அதற்கு கடவுளின் விசேட அருட்கொடை வேண்டும். எல்லோருக்கும் அக்கொடை கிடைப்பது இல்லை. எனினும் கொரிந்திய சூழலின் நிமித்தமும், மனிதப் பெலவீனத்தின் நிமித்தமும் திருமணம் செய்வது தன்னடக்கமில்லாத சிலருக்கு நல்லது எனக் கூறுகிறார் (எபே. 7:1, 6-7).
- ஒவ்வொருவரும் தத்தம் நிலையை, நாட்டத்தை, பெலவீனத்தை அறிந்து செயல்பட வேண்டுமென்கிறார். பவுலின் இக் கூற்று காமப் பாவத்திலிருந்து தப்புவதற்காகவே அவர் திருமணத்தை அனுமதிப்பது போலத் தெரிகிறது. பின்பு அவர் மணமாகாதவர்களுக்கும், கைம்பெண்களுக்கும் வழங்கும் ஆலோசனையிலும் இக் கருத்தே காணக்கிடக்கிறது (எபே. 7: 8-9). ஆகவே இங்கு பவுல் திருமணத்தைப் பற்றி ஒரு எதிர்மறையான, குறைந்த மனப்பான்மை உடையவராகக் காணப்படுகிறார்.
- தொடர்ந்து பவுல் திருமணத்தின் இயல்பு, கடமைகள், உரிமைகள் பற்றிப் பேசுகிறார். கணவன் மனைவியை தன் உடல் இச்சைகளைத் திருப்தியாக்கும் கருவியாகவோ, மனைவி கணவனை தன் உடல் இச்சைகளைத் திருப்தி செய்யும் கருவியாகவோ கணிக்கவோ, பயன்படுத்தவோ கூடாது. கணவனின் உடல் மனைவிக்கே சொந்தம். மனைவியின் உடல் கணவனுக்கே சொந்தம்.
- திருமண உறவில் ஒருவர் மற்றவருடைய உரிமைகளை மதித்து நடக்க வேண்டும். ஒருவர் மற்றவருடைய திருமண உரிமையை மறுக்க முடியாது. திருமண உறவிலே, கணவனும் மனைவியும், உடல் ரீதியிலும் சரி, ஆன்மீக ரீதியிலும் சரி, தம் ஆசைகளின் முழு நிறைவை, திருப்தியைக் காணவேண்டும்.
- இறைவேண்டுதலுக்காக, கூட்டுச் சம்மதத்துடன், இருவரும் சில காலத்துக்கு பிரிந்து இருக்கலாம். ஆனால் உணர்ச்சிகளை அடக்க முடியாத போது, சாத்தானின் சோதனைக்கு ஆளாகாமல், இருவரும் விரைவில் மீண்டும் கூடிவாழவேண்டும்.
- திருமணமானவர்களுக்கு புனித பவுல் கொடுக்கும் அறிவுரையில் கணவனும் மனைவியும் பிரிந்து வாழக் கூடாதெனக் கூறி, அது ஆண்டவரின் கட்டளையென்கிறார். அப்படிப் பிரிந்து வாழவேண்டி ஏற்பட்டாலும், மறு திருமணம் செய்யக்கூடாது. ஆனால் விரைவில் இருவரும் ஒன்று சேரவேண்டும், ஒப்புரவாகவேண்டும்.

- அடுத்து, விசுவாசிகளுக்கும், விசுவாசிகளல்லாதவருக்கும் இடையே செய்துகொண்ட திருமணத்தைப் பற்றி அக்காலத்தில் கொரிந்தில் தவறான கருத்து இருந்தது. திருமணம் செய்த விசுவாசிகளும், அவிசுவாசிகளும் கூடிவாழக் கூடாது, மாறாக அவிசுவாசியை திருப்பி அனுப்பிவிட வேண்டும். அதுமட்டுமல்ல, திருமணமான அவிசுவாச தம்பதிகளில், ஒருவர் விசுவாசம் கொண்டால், விசுவசியாதவரை அனுப்பிவிடவேண்டுமென்ற கருத்தும் இருந்தது.
- அதற்கு எதிராக, பவுல் விசுவாசிகளுக்கும், விசுவாசிகளல்லாதவருக்கும் இடையே செய்துகொண்ட திருமணத்தைப் பற்றிய தன்னுடைய சொந்தக் கருத்துக்களைக் கூறுகிறார். விசுவாசியாயில்லாத கணவனோ, மனைவியோ விசுவாசியான மனைவியோடோ, கணவனோடோ வாழ உடன்பட்டால், ஒருவரையொருவர் விலக்கி விடாமல் இருவரும் கூடி வாழவேண்டும். ஏனெனில் விசுவாசமுள்ளவரின் விசுவாசத்தால் விசுவாசமில்லாதவர் தூயவராகிறாரெனக் கூறுகிறார்.
- ஆனால் விசுவசியாதவர் பிரிந்த வாழ விரும்பினால் அவ்வாறு செய்ய முடியும். அவ்வேளையில், விசுவாசியான கணவனோ மனைவியோ எவ்வித கட்டுப்பாடுமின்றி, வேறு திருமணம் செய்து கொள்ளலாம். இதைப் பவுல் அளிக்கும் விதிவிலக்கு என்பர்.
- எனினும் அவர்கள் கூடி வாழ்வதையே பவுல் விரும்புகிறார். ஏனெனில் விசுவாசியான தம்பதி விசுவசியாத தம்பதியை மீட்படையச் செய்யலாம் என்பது அவர் கருத்து.
- புனித பவுல் எபேசியருக்கு எழுதிய திருமுகத்தில் திருமணம்பற்றிய இன்னும் சில கருத்துக்களைத் தருகிறார் (எபே. 5:22-30). இங்கு திருமணம்பற்றிய பவுலின் உண்மையான முதிர்ச்சியான கருத்துக்களைக் காண்கிறோம்.
- தம்பதிகளிடையிலான உறவு அதி உன்னதமானது, புனிதமானது. பவுல் கணவனுக்கும் மனைவிக்கும் இடையே உள்ள உறவை கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையே உள்ள உறவுக்கு ஒப்பிடுகிறார். இவ் உறவுக்கு அடிப்படையாக அன்பு உள்ளது.
- பவுல் கணவன் மனைவிமேல் கொண்டிருக்க வேண்டிய அன்பைபற்றிய தம் கருத்தைத் தருகிறார். அது ஓர் தியாக அன்பு. கிறிஸ்து திருச்சபையை அன்பு செய்ததுபோல், கணவனும் தன் மனைவியை அன்பு செய்ய வேண்டும். அது ஒருபோதும் சுயநலந் தேடும் அன்பாக இருக்கக் கூடாது.
- கிறிஸ்து திருச்சபைக்குத் தலையாய் இருப்பதுபோல், கணவனும் மனைவிக்கு தலையாயிருக்கிறார். இது அதிகாரம் செலுத்தும் தலைமைத்துவம் அல்ல, ஆனால் அன்பு செய்யும் தலைமைத்துவம்.
- மேலும் திருச்சபை ஆண்டவருக்குப் பணிந்திருப்பது போல் மனைவியரும் தங்கள் கணவருக்குப் பணிந்திருத்தல் வேண்டுமென்கிறார் பவுல். இப் பணிவும் பயத்தினால் அல்ல, மாறாக அது அன்பிலிருந்து உருவாகும் பணிவாக இருக்கவேண்டும். கிறிஸ்து திருச்சபைமேல் கொண்டிருந்த அன்பு, திருச்சபையைத் தூய்மையாக்கி, இறைவனுக்கு சொந்தமாக்கியது. கணவனின் அன்பும் மனைவியைத் தூய்மையாக்கும், அவரை இன்னும் நல்லவராக்கும் அன்பாக இருக்க வேண்டும்.
- கணவன் மனைவிமேல் கொள்ளும் அன்பு ஒருபோதும் முறிக்க முடியாத அன்பு. இவ் அன்புக்காக கணவன் தன் தாய் தந்தையை விட்டு, தன் மனைவியோடு கூடியிருப்பான். இருவரும் ஒரே உடலாயிருப்பார்கள். ஒரு உடலின் உறுப்புக்கள்போல இருவரும் இணைந்து இருப்பார்கள்.
- கிறிஸ்துவில் வாழும் அவர்களுக்குள் ஆண்-பெண் என்ற வித்தியாசம், வேறுபாடு இருக்கக் கூடாது, அவர்கள் இருவரும் கிறிஸ்துவில் ஒன்றாயிருக்கிறார்கள் (கலா. 3: 28). இருவரும் இறைவன் சாயலில் படைக்கப்பட்டவர்கள் எனவே இருவரும் இறைவன் முன்னிலையில் சமமாக இருக்கிறார்கள்.
- கிறிஸ்தவ குடும்பத்தில் கணவன்-மனைவிக்கிடையே இருக்க வேண்டிய உறவு பற்றிப் பேசிய பவுல், இறுதியில் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையே இருக்கவேண்டிய

உறவுபற்றியும் பேசுகிறார். 'பிள்ளைகளே பெற்றோருக்குக் கீழ்படியுங்கள். பெற்றோரே உங்கள் பிள்ளைகளை ஆண்டவருக்கேற்ற முறையில் கண்டித்துத் திருத்தி, அறிவு புகட்டி, வளர்த்து வாருங்கள்' (எபே.6:1-4)

**7.1.3.3.2 சகோதரத்துவமும் ஒற்றுமையும்** (1 கொரி. 8:9-13 13:3-8 2 கொரி. 8:9)

- பவுல் குட்டித் திருச்சபையாகிய கிறிஸ்தவ குடும்பத்தில், கணவன்-மனைவி, பெற்றோர் பிள்ளைகளிடையே இருக்க வேண்டிய அன்பு, உறவு, ஒற்றுமைபற்றிப் பேசிய பின், கடவுளின் பெரிய குடும்பமாகிய திருச்சபையில் இருக்க வேண்டிய அன்புறவு, சகோதரத்துவம், ஒற்றுமைபற்றிப் படிப்பிக்கின்றார்.
- பவுல் தம் தமஸ்கு பயணத்தின்போது கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையிலான மறை பொருளை, ஒப்புமையின் வெளிபாட்டினைக் கண்டு உணர்ந்தார். 'சவுலே, சவுலே, ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்?.....நீ துன்புறுத்தும் இயேசு நானே'. அந்த அனுபவத்தினால் கிளர்ந்தெழுந்த சிந்தனை வளர்ந்து, பின்பு அவர் எழுதிய திருமுகங்கள் எங்கும் பரவலாகக் காணக்கிடக்கிறது.
- அக்காலத்தில் வெவ்வேறு கிறிஸ்தவ சபைகளில், குறிப்பாக கொரிந்திய சபையில் காணப்பட்ட பிளவுகள், பிரிவுகளைச் சந்தர்ப்பங்களாகப் பயன்படுத்தி, பவுல் திருச்சபை பற்றிய தம் ஆழ்ந்த கருத்துக்களை நமக்குத் தெளிவாகத் தருகிறார்.
- பரிசுத்த ஆவியின் அருளினால் இயேசுக் கிறிஸ்துவின் மேல் விசுவாசம் கொண்டு வாழ்பவர்கள் கிறிஸ்துவுடனும், ஒருவரொருவருடனும் ஒன்றிக்கின்றனர். திருமுழுக்கு வழியாக கிறிஸ்துவின் மீட்புச் செயலில் பங்குகொண்டு, அவரில் வாழ்கின்றனர்.
- புனித பவுல் திருச்சபையின் உறுப்பினர்களுக்கிடையில் காணப்படும் ஒற்றுமையை ஒரு மனித உடலின் உறுப்புகளுக்குள்ளே காணப்படும் ஒற்றுமையை ஒத்ததாகக் காண்கிறார். 'நீங்கள் கிறிஸ்துவின் உடலாக இருக்கிறீர்கள்'.
- கிறிஸ்தவர்கள் எல்லோருக்கும் ஒரே ஆவியானவரே உயிரளிக்கிறார். அவர்கள் எல்லோரும் ஒரே எதிர்நோக்கைக் கொண்டவர்கள், அவர்கள் எல்லோரும் ஒரே நம்பிக்கையுடன்தான் வாழ்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் ஒரே ஆண்டவர். எல்லோரும் ஒரே விசவாசத்திலும், ஒரே திருமுழுக்கிலும் பங்கு கொண்டு, ஒரே கடவுளை தம் ஒரே தந்தையாகக் கொண்டிருக்கிறார்கள். அக் கடவுளே எல்லோருக்குள்ளும் இருந்து, எல்லோர் மூலமாகவும் செயலாற்றுகிறார். எனவே கிறிஸ்தவர்கள் எல்லோரும் ஒன்றாக ஒரு மனத்துடன் வாழ்ந்து, அந்த ஒற்றுமையைக் கட்டிக்காக்க வேண்டும்.
- பவுல் கிறிஸ்தவர்களை தன் சகோதரர் சகோதரிகளென அழைத்து, தானும், அவர்கள் அனைவரும் ஒரே தந்தையின், கடவுளின் பிள்ளைகளென்பதை உணர்த்துகிறார். எனவே கிறிஸ்த சமூகத்தில் பிளவுகள், பிரிவுகள் ஏற்படுவது தவறென்பதை உணர்த்தி, அவர்கள் சகோதர அன்பில் ஒற்றுமையாக வாழவேண்டுமெனக் கூறுகிறார்.
- ஒருவன் கிறிஸ்தவ சமூகத்தினுள் நுழையும்போது அச் சமூகத்துக்குரிய வாழ்வை அவன் வாழவேண்டும் (எபே. 4:2-3). இந்த ஒற்றுமைக்கு, ஒருமைப்பாட்டிற்கு அத்திவாரம், அடிப்படைக் காரணம் அவர்கள் எல்லோருக்கும் ஒரே எதிர்நோக்கு, ஒரே உடல், ஒரே ஆவி, ஒரே ஆண்டவர், ஒரே நம்பிக்கை, ஒரே திருமுழுக்கு, ஒரே கடவுள், ஒரே தந்தை.
- கிறிஸ்தவம் மனிதனுக்கும் மனிதனுக்குமிடையே ஒரு புதிய உறவை அறிமுகம் செய்திருக்கிறது. இப் புதிய உறவில் சாதி, இனம், குலம், ஆண், பெண் போன்ற சகல புற வேற்றுமைகளும் அழிக்கப்படுகின்றன (1 கொரி. 12:13). கிறிஸ்துவில் வாழ்பவருக்குள் இவ் வேற்றுமைகள் கிடையாது. இப் புதிய உறவு சகல சரீர, இரத்த, குடும்ப, சமூக உறவுகளையும் தாண்டிச் செல்கிறது. (கலா. 3:28 - 29).

- இக் கருத்தை நாம் புனித பவுல் பிலமோனுக்கு எழுதிய திருமுகத்தில் காண்கிறோம். பவுல் ஒரு அடிமையான ஒனேசிமை, ‘எனக்குச் சிறையிலிருந்தபோது பிள்ளையான ஒனேசிம்’ என அன்புடன் அழைக்கிறார். மேலும் பவுல் ஒனோசிமின் எசமானாகிய பிலமோனை அவர் அடிமையை அவருடைய அன்புச் சகோதரனாக ஏற்றுக்கொள்ளும்படி கூறுகிறார் (பில. 1:16). பிலமோன் பவுலை ஏற்றுக் கொள்வதுபோல், ஒனொசிமையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்கிறார் (பில. 1: 17).
- இறுதியாக புனித பவுல், எல்லா உறுப்புகளும் தசை நார்களால் இறுக்கிப் இணைக்கப் பட்டிருந்தால்தான், ஒரு உடல் தேக சுகத்துடன் இருக்க முடியும், அதுபோல் திருச்சபையில், கிறிஸ்து அதன் தலையாகவும், ஒவ்வொரு உறுப்பினரும் அவரின் கட்டுப்பாட்டிற்குள் இயங்குபவராகவும் இருக்கின்ற போதுதான் திருச்சபையும் ஆரோக்கியத்துடன் இருக்கும். இவ்வாறு ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனக்கே குறிக்கப்பட்ட பணியைப் பிரமாணிக்கத்துடன் செய்வதால், திருச்சபை உறுதியுடன் வளர்ச்சியடையும். இவ்வாறு புனித பவுல் திருச்சபையில் இருக்கவேண்டிய கூட்டுறவையும், ஒருமைப்பாட்டையும் வலியுறுத்தி, அதைக் கட்டிக் காத்து வளர்க்க வேண்டிய எம் பொறுப்பையும் எடுத்துக் கூறுகிறார்.

**7.1.3.3.3 தூய ஆவியின் கனிகளும் கொடைகளும்** (1 கொரி. 12, 14:1-18)

- ‘ஆவி’ யைக் குறிக்க பவுல் பயன்படுத்தும் கிரேக்க சொல் ‘நெயூமா’. பழைய ஏற்பாட்டில் இதற்கான எபிரேயச் சொல் ‘ரூஆக்’. இது ஆவியை மட்டுமல்ல, காற்றையும் குறிக்கும். பழைய ஏற்பாட்டில் இச் சொல், மனித சக்திக்கு, ஆற்றலுக்கு அப்பாற்பட்ட, ஒரு தெய்வீக சக்தியை, வலிமையை, ஆற்றலையும் குறித்து நிற்கிறது.
- இது புது வாழ்வின் ஆற்றல் மிகுந்த அடிப்படைச் சக்தி. இறைவனின் வாழ்வளிக்கும் வல்லமை. கிறிஸ்துவின் மீட்புச் செயலினால் இப்பொழுது மனிதர், பாவ நாட்டமுள்ள மனித இயல்பினால் அல்ல, பரிசுத்த ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு அப்பாற்பட்ட சக்தியை, ஆற்றலைக் கொண்டிருக்கிறார்கள்.
- பரிசுத்த ஆவி நமக்கு அளிக்கும் விசேட வரங்கள் ‘அருட்கொடைகள்’ அல்லது ‘அருங்கொடைகள்’ அழைக்கப்படுகின்றன. அது ‘காரிஸ்மா’ என்ற கிரேக்க சொல்லின் தமிழாக்கம். இதற்கு இறைவன் கருணையோடு வழங்கும் ‘இலவசக் கொடைகள்’ என்பது பொருள். இதனை ‘அருள்’ என்ற சொல்லாலும் குறிக்கலாம்.
- இறைவன் நமக்களிக்கும் கொடைகளுள் தலைசிறந்தது பரிசுத்த ஆவியே. அத் தூய ஆவியானவர் நமது உள்ளங்களில் உறைகிறார். தாம் எமக்கு விரும்பி அளிக்கும் அருட்கொடைகளின் வழியாக தம்மையே எமக்கு வெளிப்படுத்துகின்றார்.
- தொடக்க காலத் திருச்சபையில் இக் கொடைகள் நிறைந்து காணப்பட்டன. புனித பவுல் தம் திருமுகங்களில் பரிசுத்த ஆவியின் அருட்கொடைகளின் தன்மை, பண்பு, பயன் பற்றித் தெளிவாகப் பேசுகிறார (1 கொரி.12).
- பரிசுத்த ஆவியே நாம் ‘இயேசுவே ஆண்டவர்’ என அறிக்கையிடுவதற்கு எமக்கு ஆற்றல் அளிப்பவர் (1 கொரி.12). அதாவது எமக்கு இயேசுவில் விசுவாசத்தை அளிப்பவர் அவரே. இதுவே பரிசுத்த ஆவி நமக்கு அளிக்கும் முதற் கொடை.
- இயேசுவை ஆண்டவராக ஏற்றுக் கொள்பவர்களுக்கு, அந்த ஒரே ஆவியானவர் தொடர்ந்து அளிக்கும் ஏனைய பல கொடைகள் உள்ளன. இக் கொடைகளை அவர் அளிப்பதன் நோக்கத்தை பவுல் வலியுறுத்துகிறார். ‘பொது நன்மைக்காகவே தூய ஆவியானவரின் செயற்பாடுகள் ஒவ்வொருவரிலும் வெளிப்படுகிறது’ (1 கொரி. 12: 7). இக் கொடைகளெல்லாம் எங்கள் சொந்த, தனிப்பட்ட நன்மைகளுக்காக அல்ல, மாறாக பொது நன்மைக்காக, கிறிஸ்தவ சமுதாயத்தின், திருச்சபையின் நன்மைக்காகவே அளிக்கப்படுகின்றன.

- எல்லாருக்கும் எல்லா கொடைகளும் அருளப்படுவதில்லை. கிறிஸ்தவ சமுதாயத்தில் வெவ்வேறு பணியாற்றும் வெவ்வேறு நபருக்கு, வெவ்வேறு கொடைகள் பகிர்ந்து அருளப்படுகின்றன. இவையெல்லாம் கடவுளிடமிருந்து வருவதால் அவையெல்லாம் கடவுளின் பணிக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
- புனித பவுல் முதலில் ஞானம் நிறைந்த சொல் வளத்தையும், அறிவுசெறிந்த சொல் வளத்தையும் குறிப்பிடுகிறார். இவை இரண்டும் ஒன்றுபோல் தோன்றினாலும், **'ஞானம்'** இறைவனுடன் தொடர்புகொள்வதால் பெறப்படும் அவர்பற்றிய ஆழ்ந்த உண்மைகளை அறியும் ஆற்றலையும், **'அறிவு'** அந்த ஞானத்தை நம் அன்றாட வாழ்க்கையில் செயல்முறையில் பயன்படுத்தும் ஆற்றலையும் குறிக்கிறது.
- அடுத்து பவுல் இந்த ஞானத்தையும், அறிவையும் ஏற்றுக்கொள்ளும் **விசுவாசத்தைக்** குறிப்பிடுகிறார். முதலில் நாம் இயேசுவைக் கடவுளாக ஏற்றுக் கொள்ளும் விசுவாசம் பற்றிப் பார்த்தோம்.. அதை நாம் 'தேவ புண்ணியம்' என அழைக்கிறோம். இங்கு நாம் ஞானத்தையும், அறிவையும் ஏற்றுக்கொள்ளும் விசுவாசத்தைப்பற்றிப் பேசுகிறோம். இங்கு பவுல் உள்ளத்தால் அவற்றை ஏற்றுக் கொள்வதைப் பற்றி மட்டுமல்ல, அவற்றைச் செயற்படுத்தும் ஆற்றலையும், அவற்றின்படி வாழ்வதையும் (பிரமாணிக்கம்) குறிப்பிடுகிறார்.
- அடுத்து பவுல் பரிசுத்த ஆவியின் இன்னொரு கொடையாகிய **பிணி தீர்க்கும்,** நோயாளிகளைக் குணப்படுத்தும் ஆற்றலைக் குறிப்பிடுகிறார். இது ஆதித் திருச்சபையில் பரவலாகக் காணப்பட்ட அருட்கொடைகளில் ஒன்றாகும்.
- பின்பு பவுல் வல்ல செயல் செய்யும் ஆற்றலைக் குறிப்பிடுகிறார். இது **பேயோட்டும் ஆற்றலைக்** குறிக்கிறது. அக்காலத்தில் எல்லா நோய்களும் அசுத்த அரூபியின் வேலையாகக் கருதப்பட்டன. எனவே அசுத்த அரூபிகளை ஓட்டுவது திருச்சபையின் பணிகளில் ஒன்றாகக் கருதப்பட்டது. இன்றும் இப்பணியைக் காண்கிறோம்.
- **தொடர்ந்து, பவுல் இறைவாக்கு உரைக்கும் ஆற்றலையும், ஆவிக்குரியவற்றைப் பகுத்தறியும் ஆற்றலையும், பரவசப் பேச்சுப் பேசும் ஆற்றலையும், அதனை விளக்கும் ஆற்றலையும் குறிப்பிடுகிறார்.**
- இன்று நாம் பரிசுத்த ஆவியின் கொடைகள்: **ஞானம், புத்தி, அறிவு, விமரிசை, திடம், பக்தி, தேவபயமெனக்** கூறுகிறோம். தனிக் கிறிஸ்தவனின் வாழ்வும், திருச்சபையின் பொதுப் பணிகள் அனைத்தும் இந்த ஆவியின் அருட்கொடைகளையே சார்ந்து இருக்கின்றன.
- சில அருட்கொடைகள் **திருப்பணிகளுடன் தொடர்பு** உடையவை. இப் பணிகளில் நாம் அப்போஸ்தலத்துவப் பணி, இறைவாக்குரைக்கும் பணி, போதிக்கும் பணி, நற்செய்தி விளக்கப் பணி, மேய்ப்புப் பணி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.
- **மற்றும் சில அருட்கொடைகள் ஊழியம் புரிதல், போதித்தல், ஊக்க மூட்டுதல், இரக்கச் செயல்கள் போன்ற திருச்சபையின் நலனுக்குத் துணை நிற்கின்றன. ஞானம் செறிந்த பேச்சு, அறிவு செறிந்த பேச்சு, விசுவாசம், நோய்களைக் குணமாக்கும் ஆற்றல், புதுமை செய்யும் ஆற்றல், பல்வகைப் பரவசப் பேச்சு, ஆவிகளைத் தேர்ந்து தெளியும் திறன் போன்ற அருட்கொடைகள் இவ் வகையைச் சாரும்.**
- இறுதியாகப் புனித பவுல், பரிசுத்த ஆவியானவரின் கொடைகளுள் **அதிசிறந்த கொடையாகிய அன்பு** பற்றிப் பேசுகிறார். எல்லாக் கொடைகளுக்கும் அடிப்படையாக இருப்பது அன்பு. அன்பு என்ற கொடையில்லாமல், மற்றக் கொடைகளெல்லாம் வீணிலும் வீண் என்கிறார். 'ஒலிக்கும் வெண்கலமும், ஓசையிடும் தாளமும்'.
- இந்த அன்பு என்ற ஆவியின் கொடையின் பதினைந்து குணாதிசயங்களைப் பவுல் குறிப்பிடுகிறார்: பொறுமை, நன்மை செய்தல், பொறாமையின்மை, தற்புகழ்ச்சியின்மை, இறுமாப்பின்மை, இழிவானது செய்யாமை, தன்னலமின்மை, எரிச்சலின்மை, தீங்கு நினையாமை, தீவினையில் மகிழாமை, பொறுமை, விசுவாசம், நம்பிக்கை, மன உறுதி. இவற்றில் சில அன்பின் எதிர்நிலைப் பண்புகளாகவும், சில அன்பின் நேர்நிலைப் பண்புகளாகவும் உள்ளன.

- **புனித பவுல், ஊனியல்பின் செயல்களுக்கு எதிராக, பரிசுத்த ஆவியின் கனிகளென: அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் போன்றவற்றை குறிப்பிடுகிறார் (கலா. 5: 22).**
- **அன்புக்கு** பவுல் பயன்படுத்தும் கிரேக்க சொல் 'அகப்பே'. இது எப் பிரதிபலனையும் எதிர்பாராமல், மற்றவர்கள் என்ன தீங்குதான் எமக்குச் செய்தாலும், மற்றவரின் நன்மையையே விரும்பும் பண்பைக் குறிக்கிறது. இது ஒரு உள்ளத்தின் உணர்வு மட்டுமல்ல, இதயத்தின் உணர்வுமாகும்.
- **மகிழ்ச்சியெனக்** குறிப்பிடப்படுவது இவ்வுலக பொருட்களால், அல்லது வெற்றியால் ஏற்படும் மகிழ்ச்சியல்ல, மாறாக மத சம்பந்தமான, கடவுளிடமிருந்து வரும் ஒரு மகிழ்ச்சியாகும்.
- **அமைதியென்பது** பிரச்சினைகள் இல்லாததால் கிடைக்கும் அமைதி அல்ல, நாம் கடவுள் பராமரிப்பில் வாழ்கிறோம் என்ற சிந்தனையிலிருந்து கிடைக்கும் அமைதியைக் குறிக்கிறது.
- **பொறுமை** என்பது எவர் எத் தீமை செய்திடினும், பழிவாங்கும் எண்ணமின்றி, கடவுள் நம்மை மன்னிப்பதுபோல் அவர்களை மன்னித்து, பொறுமையுடன் இருப்பதைக் குறிக்கிறது.
- **பரிவு, நன்னயம்** என்பன கிறிஸ்து பாவிகள் மட்டில் காட்டிய இரக்கம், நன்மைத் தனத்தைக் குறிக்கின்றன.
- **நம்பிக்கையென்பது** மற்றவர்கள் எம்மீது நம்பிக்கைகொள்ளக் கூடிய முறையில் வாழ்வது அல்லது பிரமாணிக்கமாயிருப்பது.
- **கனிவு** என்பது சுய மறுதலிப்பை, மற்றவர்கள்மேல் கர்சனை கொண்டு நடப்பதைக் குறிக்கிறது.
- இறுதியாக **தன்னடக்கம்** என்பது தன் உணர்வுகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும், மற்றவர்களுக்கு பணியாளர்போல் இருக்கும் ஆற்றலைக் குறிக்கிறது.

## உத்தேச கற்பித்தல் செயற்பாடுகள்

1. கிறிஸ்து இயேசு கிரேக்க, உரோமை மற்றும் யூத பண்பாடுகளை மதித்து நடந்த சூழலை தேடிக் கண்டுபிடிக்க மாணவருக்கு அறிவுரை வழங்குங்கள்.
2. மலைப்பொழிவின் ஊடாக ஆண்டவர் இயேசு நீதிச்சட்டத்தை முழுமைப்படுத்தினார் என்பதை விளக்குவதற்கு மாணவருக்கு வாய்ப்பு அளியுங்கள்.
3. சமகால யூதர்களிடமிருந்து ஆண்டவர் இயேசு வேறுபட்டவராய் திகழ்ந்தார் என்பதை ஆதாரங்கள் மூலம் விபரிப்பதற்கு மாணவரை ஆய்வுக்குட்படுத்துங்கள்.
4. தொடக்ககாலக் கிறிஸ்தவர்களின் சிறப்பம்சங்களைத் தொகுத்துப் பட்டியற்படுத்துங்கள்.
5. தூய பவுலின் வாழ்க்கை, திருச்சபை நிறுவப்படல், பவுலின் முக்கிய படிப்பினைகள், ஒழுக்க விழுமியக் கோட்பாடுகள் பற்றிய விபரங்களைச் சேகரித்து அதன்மூலம் வாழ்வைக் கட்டியெழுப்ப உதவுங்கள்.

## உசாத்துணை நூல்கள்


- அருள்திரு பவுல் லியோன் வறுவேல், யார் இந்த இயேசு, வைகறை வெளியீடு.
- அருள்திரு பவுல் லியோன் வறுவேல், யாரைத் தேடுகிறீர்கள்: இயேசுவும் நற்செய்தி ஆய்வும், வைகறை பதிப்பகம், 2007.
- பீற்றர் அபீர், திருவிவிலியம் பொது அறிமுகம், அருள்வாக்கு மன்றம், திருச்சி.
- தியாகு, விவிலியக் களஞ்சியம் பாகம் V. விவிலிய அறிமுகம், தியான ஆசிரமம், சென்னை - 2000
- தியான்சந்த் கார், திருவிவிலிய விளக்கம் - மத்தேயு நற்செய்தி அருள்வாக்கு மன்றம்.
- பிலிப்ஸ் இ. இயேசுதாசன், பரிசுத்த ஏடுகளைக் கற்றல், அமல வெளியீடு, தொடர்பகம், யாழ்ப்பாணம். 2002.

**தேர்ச்சி 7.0 :** கிறிஸ்தவ நாகரிகம் உருவாகியதனால் சமுதாய கலாசாரத்துறையில் ஏற்பட்ட மாற்றங்களின் அடிப்படையில் பயணிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 7.2 :** ஆரம்பகால கீழைத்தேய மேலைதேய திருச்சபையில் விளங்கிய கலாச்சாரப் பண்புகள விமர்சனம் செய்வர்.

**பாடவேளைகள் :** 22

**கற்றல் பேறுகள் :**

- கிறிஸ்தவ விசுவாசத்திற்கு எதிராக திருச்சபைக்கு உள்ளேயும் வெளியேயும் ஏற்பட்ட குற்றச்சாட்டுகளுக்கும் பேதங்களுக்கும் திருச்சபை துலங்கலைக் காட்டிய விதத்தினை விளங்கிக் கொள்வர்.
- திருச்சபையின் ஆரம்ப காலத்தில் இறையியல் கல்லூரிகள் பற்றி உருவாகிய விடயங்களைக் கற்பர்.
- கிரேக்க, உரோம நாகரிகத்தின் தாக்கங்கள் பற்றித் தேடிப்பார்ப்பர்.
- ஆரம்ப காலத்தில் கிறிஸ்தவ சிந்தனையாளர் மற்றும் இறையியலாளர் பற்றி ஆழமாக ஆராய்வர்.
- மேற்கு ஐரோப்பிய கோத்திரங்களின் தாக்கங்களை இனங்காண்பர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

### 7.2.1 புதிய சிந்தனையின் ஆரம்பம்

- திருச்சபை ஆரம்பித்த காலத்தில் பாலஸ்தீன நாடு உரோமைப் பேரரசனின் ஆட்சியின் கீழ் இருந்தது. எனவே எருசலேமில் ஆரம்பமாகிய கிறிஸ்தவ மறை (திருச்சபை) படிப்படியாக உரோமைப் பேரரசெங்கும் இலகுவாகப் பரவியது. (உரோமைப் பேரரசினுள் கிறிஸ்தவம் பரவுவதற்கு ஏதுவாக இருந்த காரணிகளை தேர்ச்சி மட்டம் 1.1இல் காணலாம்).

**உரோமையரின் எதிர்ப்புப் பின்னணி :**

- உரோமைப் பேரரசில் கிறிஸ்தவர்கள் விசுவாசத்திற்காக துன்புறுத்தப்பட்டனர். கிறிஸ்தவர்களது வாழ்வைப் பற்றியும், அவர்களது வழிபாடு, விசுவாச உண்மைகளைப் பற்றியும், முறைப்பாடுகளும் குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டன. உரோமை ஆளுநர்கள் முன் கிறிஸ்தவர்கள் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.
- திருச்சபை வரலாற்றில், இரண்டாம், மூன்றாம் நூற்றாண்டுகளில் எழுந்த கொடூர வேத கலாபனைகளின் போது பலவித கிறிஸ்தவ சிந்தனையாளர்கள் உருவாகினர். அவர்கள் பேரரசர்களையும் ஆளுநர்களையும் திருச்சபை மட்டிலும், கிறிஸ்தவர்கள் மட்டிலும் பொறுமையும் சகிப்புத் தன்மையும் உடையவர்கள் ஆக்கலாம் என்ற நம்பிக்கையுடன் கிறிஸ்தவ வேத சுயாதீனத்தை அவர்கள் முன் தெளிவாக எடுத்துக் காட்டினர்.
- கிறிஸ்தவர்களின் வாழ்க்கைமுறை சரியென்பதையும், அவர்கள் மேல் சுமத்தப்பட்ட குற்றங்கள் பொய்யானவை என்பதையும் நியாயம் காட்டி, விளக்கி எண்பித்தனர்.
- அக்கால அஞ்ஞான அறிஞர்கள், கல்விமான்கள் கிறிஸ்தவர்களுக்கு எதிராக, அவர்கள் விசுவசிக்கும் விசுவாச உண்மைகளுக்கு எதிராக துண்டுப் பிரசுரங்களையும், சிறு நூல்களையும் எழுதி பிரச்சாரம் செய்தனர். இவர்களுள் சிறப்பாக நாம் செல்சஸ், சமோசற்ற லூசியன் என்பவர்களைக் குறிப்பிடலாம்.

- எனவே, பொய்ப் பிரச்சாரங்களுக்கு தக்க பதிலளிக்கும் முறையில், கிறிஸ்தவ எழுத்தாளர்கள் கிறிஸ்தவ விசுவாச உண்மைகளைக் காரணங்கள் காட்டி நியாயப்படுத்தி, நிலை நிறுத்தி பல நூல்களை எழுதினர். பேதகருக்கு விரோதமாக கிறிஸ்தவ விசுவாசத்தின் பாரம்பரியப் படிப்பினைகளை சரியாக விளக்கி நிலை நிறுத்தினர். இவர்கள் விசுவாச உண்மைகளை நியாயம் கூறி ஆதரித்துப் பாதுகாத்தபடியால் அவர்கள் ''சத்தியத்தின் பாதுகாலவர்'' (Apologists) என அழைக்கப்படுகின்றனர்.
- இவர்களுள் நாம் யுஸ்தின், ரற்சியன், இரனேயுஸ், அலெக்சாந்திரிய சாந்தப்பர், தேத்தூலியன், ஒரிஜேன் என்பவர்களைக் குறிப்பிடலாம்.

**உரோமைப் பேரரசில் திருச்சபையின் சுதந்திர காலப் பின்னணி:**

- திருச்சபையின் கலாபனைக்காலம் 313ஆம் ஆண்டு பேரரசன் கொன்ஸ்தாந்தின் பிரகடனம் செய்த மிலான் அரச சாசனத்துடன் முடிவுக்கு வந்தது.
- கலாபனைக் காலத்தில் (முதல் மூன்று நூற்றாண்டுகள்) திருச்சபைக்கு அதற்கு வெளியே வாழ்ந்த யூதர்கள், உரோமையர், அஞ்ஞானிகளிடமிருந்தே துன்புறுத்தல்கள், குற்றச்சாட்டுகள் வந்தன. ஆனால் சுதந்திரக் காலத்தில் (நான்காம், ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டுகளில்) தப்பறைகளைப் போதித்த பேதகரும், அவர்கள் போதித்த பேதங்களும், திருச்சபைக்குள்ளே இருந்தே எழுந்தன.
- இறை அறிவிலும் புண்ணியத்திலும், பரிசுத்ததனத்திலும் சிறந்து விளங்கிய போதகர்களும் எழுத்தாளர்களும் இக்காலத்தில் திருச்சபையில் உருவாகினர். இவர்கள் கிறிஸ்தவ மறை உண்மைகளை தெளிவாகத் துணிவுடன் போதித்து, பேதங்களுக்கு எதிராகப் பல நூல்களை கிரேக்க, இலத்தீன் மொழிகளில் எழுதி, பேதகர்களை மனந்திருப்பி திருச்சபையில் சேர்த்தனர்.
- எனவே இவர்கள் ''வேதபாரகர்'' அல்லது ''திருச்சபைத் தந்தையர்'' என அழைக்கப்பட்டனர்.
- திருச்சபைத் தந்தையர்களை கீழ்நாட்டுத் தந்தையர், மேல்நாட்டுத் தந்தையர் என வகைப்படுத்துவர். கீழ்நாட்டு கிரேக்க தந்தையர்களிலே புனித அத்தானாசியுஸ், புனித கிறிதோஸ்தம் அருளப்பர், புனித பசில், புனித கிரகோரி நாசியென்ஸ், புனித நிஸ்ஸா கிரகோரியார் என்பவர்கள் அடங்குவர். மேல் நாட்டுத் (இலத்தீன்) தந்தையர்களிலே புனித இலாரியார், புனித அம்புரோசியார், புனித எரோம், புனித அகுஸ்தின், புனித பெரிய கிரகோரியார் என்பவர்கள் அடங்குவர்.

**கிறிஸ்தவ மறையின் அனைத்துலகத் தன்மை**

- திருத்தூதர்கள், தூய பவுல் ஆகியோரின் மறைதூதுப் பணியின் பயனாக கிறிஸ்தவ மறை பலஸ்தீனாவுக்கு வெளியே பரவியது.
- எருசலேம் சங்கத்தில் கிறிஸ்தவம் அனைத்துலக மறை என்ற கொள்கை வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதனால் புற இனத்தவர்கள் மத்தியில் திருச்சபை அவர்களின் பண்பாட்டுக் கலாசாரப் பின்னணிகளுக்கூடாக வளர்ச்சி அடைந்தது.
- கிறிஸ்தவ மறையுண்மைகளை இம் மக்களுக்கு விளக்குவதற்காக கிரேக்க மெய்யியல் சிந்தனை முறைகளையும், இலக்கிய வாதிகளின் சிந்தனைகளையும், பண்பாட்டு அம்சங்களையும், கிரேக்க சொற்பதங்களையும் உள்வாங்கி கிறிஸ்தவ சிந்தனைகளின் உருவாக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் வழிவகுத்தனர்.
- கிறிஸ்தவ சிந்தனைகளில் கிரேக்க மெய்யியல் தாக்கங்களைக் காணக்கூடியதாக உள்ளது.

### 7.2.2 கிறிஸ்தவ இறையியல் கல்லூரி

**பின்னணி**

- பேதங்களும், தப்பறையான போதங்களும் கிறிஸ்தவத்தைப் பெலவீனப்படுத்துவதற்குப் பதிலாக, அது உள்ளார்ந்த உறுதிபெறவும், அதன் இறையியல் வளர்ச்சிக்கும் சாதகமான சந்தர்ப்பங்களாக அமைந்தன.
- இரண்டாம் நூற்றண்டில் கிறிஸ்தவத்தைத் தழுவிய யுஸ்தின், ரற்சியன் போன்ற அறிவாளிகள் சிலர் உரோமையில் கல்லூரிகளை அமைத்து, சிறு சிறு குழுக்களுக்கு கிறிஸ்தவ விசுவாசத்தை விளங்கிக் கொள்வதற்கு வேண்டிய அடிப்படை அறிமுகங்களைச் செய்தனர். ஆனால் அவையெல்லாம் தங்கள் தனிப்பட்ட முயற்சியினால் அமைத்துக்கொண்ட தனியார் கல்லூரிகளாகவே இருந்தன.
- மூன்றாம் நூற்றாண்டில் கிறிஸ்தவ மறையைத் தழுவிய அதிகார வர்க்கத்தினர் பலர் தங்கள் பண்பாட்டின் தரத்திற்கேற்ப, தங்கள் வார்த்தையாலும். எழுத்தாக்கங்களினாலும் திருச்சபைக்குப் பணிபுரிய, அதன் வளர்ச்சிக்குப் பங்களிக்க விரும்பினர். இது திருச்சபைக்கு ஆழ்ந்த, அறிவு நிறைந்த இறையியல் வளர்ச்சிக்குரிய சூழலை அமைத்துக்கொடுத்தது.
- நொஸ்டிக்கரும் ஏனைய பேதகரும், சிறிய அளவில், அதே போன்ற கல்லூரிகளை அமைத்து, தங்கள் தப்பறைகளை, பேதங்களைக் கற்பித்து வந்தனர்.
- இப்பேதகர்களை திருச்சபையிலிருந்து விலக்கிய உரோமைய ஆயர்கள், இப்பிரச்சினைக்குத் தீர்வாக கிறிஸ்தவ தனியார் கல்லூரிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து தங்கள் நிர்வாகத்தினுள் கொண்டுவந்து, அவற்றைத் திருமறையைத் தழுவ விரும்புவோர்க்கு மறைக்கல்வி அளிக்கும் திருச்சபையின் தாபனங்களாக மாற்றி அமைக்க விரும்பினர்.
- அதற்குத் தேவையான சூழலும், ஆள் பெலமும் உரோமையிலோ, வேறு மேலைத்தேய இலத்தீன் நாடுகளிலோ கிடைக்கவில்லை. மாறாக, அவை கிரேக்க கீழைத்தேய நாடுகளிலேயே கிடைத்தன. விஞ்ஞான மரபும், சமய தத்துவ விடயங்களில் ஆர்வமும் கொண்ட கல்வியறிவுள்ள மேல் தர வகுப்பினரைக் கொண்டிருந்த எகிப்தின் தலைநகராகிய அலெக்சாந்திரியா கிறிஸ்தவ இறையியல் கல்லூரிக்கு ஏற்ற இடமாக இருந்தது.
- திருச்சபையின் இரண்டாவது கிறிஸ்தவ இறையியல் கல்லூரி கிரேக்க உலகின் முக்கிய நடுநிலையமாகிய சீரியா அந்தியோக்கியாவில் தோன்றியது.
- இக்கல்லூரிகளின் மூவொரு இறைவன் (ஒரு கடவுள் - மூன்று ஆட்கள்), மூவொரு இறைவனின் இரண்டாம் ஆளாகிய சுதனின் மனித அவதாரம், கிறிஸ்து மெய்யான கடவுளும் மெய்யான மனிதனாகவும் இருக்கிறார் எனும் மறையுண்மைகள் முக்கியமாகக் கருதப்பட்டன.

#### 7.2.2.1 அலெக்சாந்திரியா இறையியல் கல்லூரி :

- அலெக்சாந்திரியாவில் ஏற்கனவே இரண்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஓர் மறைக் கல்விக்கல்லூரி அமைந்திருந்தது.
- அஞ்ஞான தத்துவ சாஸ்திரத்துக்கும் கிறிஸ்தவ மறைக்கும் இடையே ஒருவித சமரசத்தை ஏற்படுத்தும் காப்பு நோக்காகவே அதன் குறிக்கோள் இருந்தது. அக்கல்லூரி ஆசிரியர்கள் ‘‘இறையியலின் பணியில் தத்துவ சாஸ்திரம்’’ என்ற கோட்பாட்டுடன் செயற்பட்டனர். அதுவே இறை வெளிப்பாட்டு உண்மைகள் அனைத்தையும் உள்ளடக்கிய இறையியல் தொகுப்பொன்றை உருவாக்க முயன்ற முதல் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியாகும்.
- இக் கல்லூரியின் முதல் ஆசிரியர்களாக பன்ரைனஸ், அலெக்சாந்திரிய சாந்தப்பர், ஒரிஜென் ஆகியோர் ஆசிரியர்களாக மறைக் கல்வி கற்பித்தனர். இவர்கள் திருச்சபையின் நியமனம் பெறாமல் தனியார் பாடசாலையில் கற்பித்த ஆசிரியர்களே.

- 215ஆம் ஆண்டளவில் ஒரிஜென், அலெக்சாந்திரிய ஆயர் டெமெற்றியசின் வேண்டுகோளுக்கு இணங்க, திருமறையில் சேரவிருப்பவர்களுக்கு மறைக் கல்வி அளிக்கும் பொறுப்பை ஏற்ற, அலெக்சாந்திரியா இறையியல் கல்லூரியின் திருச்சபையால் நியமிக்கப்பட்ட முதல் ஆசிரியரும், அதிபருமானார்.
- அறிவுள்ளவர்கள் மத்தியில் கிறிஸ்தவ அறிவை ஊக்குவித்து வளர்ப்பதையே நோக்காகக் கொண்டிருந்த இக் கல்லூரி திருச்சபையின் இறையியல் வளர்ச்சிக்கு அதிசிறந்த பங்களித்தது.

**இக்கல்லூரியின் சிறப்பு அம்சங்கள்**
- இறையியலை விளக்கும் பணியில் மெய்யியலை குறிப்பாக பிளேட்டோவின் மெய்யியலைக் கருவியாகப் பயன்படுத்துதல்.
- திருவிவிலியத்துக்கு விளக்கமளிக்க உருவக விளக்க முறையை (Allegorical) பயன்படுத்துதல்.
- இறை வெளிப்பாட்டு உண்மைகளை உத்தேச கொள்கைகளைப் பயன்படுத்தி ஆராய்தல், இறையியலை மூவொரு இறைவனின் ஒருமைப்பாட்டிலிருந்து ஆராய்தல்.
- கிறிஸ்துவியலில், இயேசுக் கிறிஸ்துவின் இறையியல்பை வலியுறுத்தி, அவரை ‘‘மனித அவதாரதம் எடுத்த கடவுள்’’ என அழைத்தது. இதனால் இவர்கள் கிறிஸ்துவின் மனித இயல்பைக் குறைத்துப் போதித்தனர்.
- ஆரிய பேதகத்திற்கு எதிராக தமது போதனைகளை முன்வைத்தல்.
- நான்காவது நற்செய்தியாகிய யோவானின் நற்செய்தியை தமது இறையியலில் கூடுதலாகப் பயன்படுத்துதல்.
- இக்கல்லூரியைச் சார்ந்தவர்களுள் ஒரிஜென், அலெக்சாந்திரிய சாந்தப்பர் சிறில், டியோனிசியுஸ், அற்புதரான கிரகோரி (தௌமாற்றுகுஸ்) என்பர்களைச் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

### 7.2.2.2 அந்தியோக்கியா இறையியல் கல்லூரி :
- கிறிஸ்தவ இறையியல் கல்லூரியை அமைப்பதற்கு அலெக்சாந்திரியாவில் அமைந்திருந்த சூழலையொத்த சூழ்நிலை அந்தியோகியாவிலும் அமைந்திருந்தது.
- இக்கல்லூரியின் நிறுவுனர் அந்தியோகிய குருவாகிய லூசியன் எனப் பாரம்பரியம் கூறுகிறது. அந்தியோக்கிய ஆயரின் அனுமதியுடனேயே அவர் அக்கல்லூரியை ஆரம்பித்தார். அவருடைய இறையில் அறிவு வரலாற்று ஆசிரியர் எயுசேபியுசினால் பாராட்டப்பட்டுள்ளது.

**இக்கல்லூரியின் சிறப்பு அம்சங்கள்**
- தமது இறையியலில் அறிஸ்டோட்டிலின் மெய்யியலைப் பயன்படுத்துதல்.
- மூல எபிரேய விவிலியத்தின் உதவியுடன் கிரேக்க விவிலியமாக செப்துவாஜின்வத மறுபதிப்புச் செய்து, விவிலிய ஆராய்ச்சியில் கவனம் செலுத்துதல்.
- திருவிவிலியத்தை விளக்குவதற்கு நேர்பொருள் உட்கருத்து (சொல்லுக்குச் சொல் விளக்கம் - Literal) முறையைப் பயன்படுத்துதல்.
- இறையியலை கிறிஸ்துவின் தெய்வீகத்திலிருந்தும் திருவிவிலிய அடிப்படையிலும் ஆரம்பித்தல்.
- இறையியலில் மூவொரு இறைவனின் மூன்று ஆட்கள், கிறிஸ்துவின் மனித தெய்வீக இயல்புகள் என்பவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்தல்.
- ‘‘வார்த்தை இறைவனிலும் கீழானவர்’’ எனும் போதனையை முன்வைத்து ஆரிய பேதத்திற்கு வழிவகுத்தமை.

- இக்கல்லூரியும் பல இறையியலாளர்களையும், அவர்களின் பல கிரேக்க கிறிஸ்தவ இலக்கியங்களையும் திருச்சபைக்கு அளித்திருக்கின்றது. அவர்களுள் தார்சுஸைச் சேர்ந்த ரியூடோர், மொப்சுவெஸ்ரியா எயுசேபியஸ், எருசலேம் சிறில் ஆகியோரைக் குறிப்பிடலாம்.
- இறையியலின் அணுகுமுறையில் அவர்களுக்குள் இருந்த தவறந்த கருத்து வேறுபாடுகள் காலப்போக்கில் தீவிரமடைந்து போட்டி பூசலுக்கும், இறுதியில் பேதகங்கள், தப்பறைகளுக்கும் இட்டுச் சென்றன.

### 7.2.3 கிரேக்க, உரோம நாகரிகத்தின் புதிய ஆற்றல்

- கிரேக்க மெய்யியல் சிந்தனைகள், உரோமைய நிர்வாகக் கட்டமைப்பு, மொழிகள் என்பன கிறிஸ்தவ நாகரிகத்தினுள் உள்வாங்கப்பட்டன.

### 7.2.3.1 கிரேக்க நாகரிகத்தின் ஆற்றல்

- மனித சமூகத்தின் மேம்பாட்டிற்குப் பெரும் பங்களிப்பச் செய்த பல நாகரிகங்களில், கிரேக்க நாகரிகம் முதன்மையானதும், அத்துடன் அறிவியல் வளர்ச்சிக்கும், பல விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களுக்கும் வித்திட்டதும் கிரேக்க நாகரிகமாகும்.
- கிரேக்கர்கள் விவசாயத்தையும் கடல்வழி வர்த்தகத்தையுமே முக்கிய தொழிலாகக் கொண்டிருந்தனர்.
- பல்துறைசார் பங்களிப்புச் செய்த நாகரிகமாக கிரேக்க நாகரிகம் சிறந்து விளங்குகின்றது: அரசியல், மெய்யியல், தர்க்கம், பௌதிகம், புவியியல், வானியியல், கணிதம், கேத்திரகணிதம், இலக்கியம், கலை, மருத்துவம், விளையாட்டு.
- தனித மனித ஆற்றலை வளர்ப்பதிலும். உடற்பயிற்சி, விளையாட்டுப் போட்டிகள், திறமையாக செயற்பட்டோரை கௌரவிக்கும் முறைமை, இராணுவப் பயிற்சி செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.
- பகுத்தறிவின் அடிப்படையில் விடயங்களைப் புரிந்து முடிவுகளை எடுக்கும் முறைமை இவர்களின் பெரும் பங்காகும். பகுத்தறிவிற்கு முதலிடம் வழங்கி சிந்தித்து சிக்கல்களை அலசி ஆராய்ந்து முடிவுகளை எடுக்கும் முறைமையை உலகிற்கு வழங்கி பலவழிகளிலும் புதிய கண்டுபிடிப்புக்களிலும் முன்னேற்றத்திறகும் பங்களிப்புச் நெய்தவர்கள் கிரேக்கர்கள்.
- சோக்கிரட்டிஸ், பிளேற்றோ, அரிஸ்டோட்டில் ஆகியோர் சிறந்த கிரேக்க சிந்தனையாளர்களாவர்.
- கிரேக்கர்கள் மசடோனியரிடம் அரசியல் சுதந்திரத்தை இழந்தாலும் தங்கள் நாகரீகத்தின் சிறப்பை இழந்துவிடவில்லை. இரண்டாம் பிலிப்புவின் மகன் அலெக்சான்டரின் ஆட்சி விரைவில் சீரியா, பபிலோனியா, பாரசீகம், எகிப்து போன்ற நாடுகள் முதல் இந்தியா வரையும் வேகமாகப் பரவியது.
- கிரேக்க நாகரீகமும் கிழக்காசிய நாகரீகமும் இணைந்து ‘‘ ஹெல்லனிசம்’’ எனும் கிரேக்க கூட்டு நாகரீகத்தை தோற்றுவித்தன.

### 7.2.3.1.1 கிரேக்க மொழி

- கிரேக்க மொழியும் கிரேக்க நாகரிகம் போன்றே சிறப்பாக வளர்ச்சி பெற்றிருந்தது. கிரேக்க விஞ்ஞானிகளினாலும், ஆய்வாளர்களாலும், சிந்தனையாளர்களாலும், கலைஞர்களாலும் ஏனைய துறைசார் கண்டுபிடிப்புகளாலும் தங்கள் முடிவகளையும் கண்டுபிடிப்புகளையும் ஆய்வுகளையும் அவைசார் கருத்துக்களையும் ஏனையோருக்கும் வெளிப்படுத்தும் போதும், விளக்கமளிக்கும் போதும் தம் தாய்மொழியாகிய கிரேக்க மொழியையே பயன்படுத்தினர். மொழியின் சொல்வளம் பெருகிச் செல்வதற்கும் பல புதிய சொற்களின் தோற்றத்திற்கும் வழியேற்படுகின்றது. விஞ்ஞான அல்லது மெய்யியல் சிந்தனையின் வரைவிலக்கன முறையில் சிந்திக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும்

போது மிகச் சரியான அல்லது பொருத்தமான சொற்பதம் பாவிக்கப்படவேண்டிய நிலை ஏற்பட்டது. பல விடயங்களை விளக்கும் போது மொழிவளமும் வசன நடையும் மொழியின் ஏனைய இயல்புகளும் வளர்ச்சி பெறுகின்றன.

- மகா அலெக்சாண்டரின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளிலும், அவனது ஆட்சியிலும், அதனைச் தொடர்ந்தும் கிரேக்க மொழி செல்வாக்குப் பெற்ற மொழியாகத் திகழ்ந்தது. இம் மொழியானது இந்தோ - ஐரோப்பிய மொழிக் குழுவைச் சார்ந்ததாகக் காணப்படுகிறது.
- உரோமைய, பைசாந்தியப் பேரரசுகளில் இம் மொழி சிறப்புற்று விளங்கியது, உரோமைப் பேரரசும் மேலவையும் தங்களுக்கு வேண்டிய சட்டங்களை ஆக்குவதற்கு கிரேக்க மொழியையே பயன்படுத்தினர்.

### 7.2.3.1.2 கிரேக்க மெய்யியல்

**நொஸ்திக்கம்**

- இதனை முன் வைத்தவர்கள் ஞான மார்க்கத்தினர் என அழைக்கப்படுகின்றனர். இது ஞான உணர்வுக்கொள்கை, அறிவு சார்ந்த மீட்புக் கொள்கையாகும்.
- இக் கொள்கையானது மனித வாழ்வின் முக்கிய விடயங்களாகிய மனிதர் எங்கிருந்து வந்தவர்கள், எங்கே செல்லவேண்டும், எவ்வாறு செல்ல வேண்டிய இடத்திற்குச் செல்ல வேண்டும் ஆகிய அடிப்படைப் பிரச்சனைகளுக்கு விடையளிக்க முற்பட்டுள்ளது.
- இவ்வுலகம் இரண்டு விதமானதாகக் காணப்படுகின்றது: ஆவி உலகு, சடப்பொருள் உலகு. ஆவி உலகு நல்லது எனவும் அதுவே நன்மைக்குக் காரணம் எனவும், சடப்பொருள் உலகு தீயது எனவும் அதுவே தீமைக்குக் காரணம் எனவும் கூறுகின்றனர்.
- இறைவன் சடப்பொருள் உலகைப் படைக்கவில்லை. இறைவனிடமிருந்து பிரிந்து சென்ற ஒரு சக்தியே தீயதாக மாறி சடப்பொருள் உலகைப் படைத்தது.
- மனித ஆன்மா இவ்வுலகைச் சார்ந்ததல்ல எனக்கூறும் ஞான உணர்வுக் கொள்கையினர் வானினின்று வெளிப்படுத்தப்படும் உண்மை வழியாகவே மீட்பைக் கண்டடைய முடியும் எனும் கொள்கையையும் கொண்டுள்ளனர்.
- இக்கொள்கையின் தொடக்க காலத்தை இறுதியிட்டுக் கூறமுடியாதுள்ளது.

**பிளேற்றோனிசம்**

- இது கிரேக்க தத்துவஞானி பிளேற்றோ (கி.மு. 428-348) என்பவரால் முன் வைக்கப்பட்டது.
- உண்மை உலகு, சாயல் உலகு என இரண்டு உலகுகள் உள்ளன.
- இவ்வுலகில் நாம் காண்பதெல்லாம் உண்மை உலகின் சாயல்களே. இதைப் பிளேற்றோ சடப்பொருள் உலகு என அழைக்கின்றார்.
- இதற்கு எதிர்மாறானதை ஆவி உலகு (Spirit) என அழைக்கிறார்.

**ஸ்ரொயிசிசம்**

- ஸ்ரொயிக் சிந்தனை மரபைத் தோற்றவித்தவர் சீனோ (Zeno - BC 300) என்பவராவர். இவரது கருத்துப்படி எச் சூழ்நிலையிலும் உள்ள சமநிலையுடன் இன்பத்தையும் துன்பத்தையும் ஏற்கும் தன்மையே ஸ்ரொயிக் மனப்போக்காகும்.
- எல்லா நிகழ்வுகளும் ''விதி'' என்னும் நியதியினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.
- மனித ஆன்மா என்பது இறைவனிடமிருந்து பறந்த சிறிய பொறியே. இப்பொறி மீண்டும் இறைவனுடன் இணையும். இதற்குத் தன்னை முழுமையாகக் கையளிப்பதே விதி. இச்சட்டத்திற்கு கையளிப்பதே விடுதலை. கையளிக்க மறுக்கும் எதிர்ப்புச் செயற்பாடு மடமையாகும்.
- ஸ்ரொயிக் மனிதன் கடும் துறவு பூண்டவராகவும், தன் இயல்புணர்ச்சியைக் கட்டுப்படுத்துபவராகவும், கற்பு நெறியுடன் வாழ்பவராகவும், பிறருக்கென உழைக்கும் மனப்போக்குடையவராகவும் கருணை கொண்டவராகவும் விளங்குவார்.

**அரிஸ்ரோட்டில் (கி.மு. 384 - 322)**

- அறிஸ்ரோட்டிஸ் முன்வைத்த காரண - காரிய தொடர்புக் கொள்கை மிக முக்கியமானதொன்றாகும்.
- இவரின் கருத்துப்படி, நான்கு காரண - காரிய தொடர்புகள் உண்டு. உலகில் நிகழும் எல்லா செயற்பாடுகளையும் இந்த நான்கு வகையான காரண - காரிய தொடர்புக்குள் அடக்கலாம்.
    1. உபாதன காரணி (Material Cause): உ+ம் சிலை - மாபில் காரணம் (மாபில் உபாதன காரணம்)
    2. உந்தியல்பு காரணி (Formal Cause): உ+ம் சிற்பியின் சிந்தனையில் இருக்கும் வடிவம் உந்தியல்புக் காரணி.
    3. நிமித்தக் காரணி (Efficient Cause): உ+ம் சிலையை தோற்றுவிக்கக் காரணமான சிற்பி. இவரே நிமித்தக் காரணி.
    4. முடிவுக் காரணி (Final Cause): உ+ம் ஒரு செயற்பாடு என்ன காரணத்திற்காக செய்யப்படுகின்றதோ அதுவே முடிவுக் காரணி.
- கிரேக்க மெய்யியல் வழி தோன்றிய தத்துவச் சிந்தனைகள் பவுல், யோவான் ஆகிய இரண்டு எழுத்தாளர்களின் சிந்தனையிலும் எழுத்துக்களிலும் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

### 7.2.3.1.3 கிரேக்க மொழியில் திருவிவிலியம்

- பலஸ்தீனர் பல அன்னிய படையெடுப்புகளுக்கும் ஆட்சி அதிகாரங்களுக்கும் அடிமைகளாக இருக்க வேண்டிய நிலை உருவாகியது. எகிப்தியர், ஆசீரியர், பபிலோனியர், பாரசீகர்கள், கிரேக்கர்கள், உரோமர்கள் ஆகியோரின் ஆளுகைக்குட்பட்டனர்.
- இவ்வாறான வரலாற்றுப் பின்னணியும், அரசியல் ஆட்சி மாற்றங்களும் இஸ்ரயேல் மக்களின் கலாசாரத்தில் அபரும் மாற்றத்தை ஏற்படுத்தியது.
- இக்கலாசார மாற்றம் அவர்கள் பேசிய மொழியிலும் ஏற்பட்டது. தம் தாய் மொழியாகிய எபிரேய மொழியை படிப்படியாக மறந்தனர். பபிலோனியாவில் பேசப்பட்ட அரமேய மொழி யூதர்களுக்கு பேச்சுமொழியானது. இந்நிலையில் எபிரேய மொழியில் எழுதப்பட்ட வேதாகமத்தை படித்துப் பயன்பெறமுடியாத நிலை தோன்றியது.
- எனவே அரமேய மொழியில் திருவிவிலியத்தை மொழிபெயர்க்க வேண்டிய நிலை எற்பட்டது. இவ்வாறு அரமேய மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட திருவிவிலியத்தை ‘‘தார்கும்’’ (Targum) என்று அழைத்தனர்.
- மன்னன் பெரிய அலெக்சாண்டரின் ஆட்சியின் கீழ் பாலஸ்தீன் கி.மு. 333முதல் 63 வரையும் கிரேக்கரின் ஆட்சியின் ஆளுகைக்குட்பட்டிருந்தது. கிரேக்க கலாசாரம் எகிப்து முதல் அப்கானிஸ்தான் வரை பரவியது.
- இப்பகுதிகளில் சாதாரண மக்களால் ‘‘கொய்னே’’ என்னும் கிரேக்க மொழி பேசப்பட்டது. கிரேக்க மொழி தெரியாதோர் நாகரிகமற்றோர் எனக் கருதப்பட்டனர்.
- புதிய ஏற்பாட்டுக் காலத்தில் கிரேக்க ஆட்சியின் கீழ் பல இடங்களிலும் பரவி வாழ்ந்த யூதர்கள் கிரேக்க கலாசாரத்தினால் பாதிக்கப்பட்டவர்களாகவும் கிரேக்க மொழியை நன்கு அறிந்தவர்களாகவும் இருந்தார்கள்.
- பழைய ஏற்பாட்டில் அங்கீகாரம் பெற்றவையாக 46 நூல்கள் உண்டு. இவற்றுள் பெரும்பாலான நூல்கள் எபிரேய மொழியில் எழுதப்பட்டுள்ளன.
- சில நூல்கள் அரமேய மொழியிலும் மேலும் சில நூல்கள் கிரேக்க மொழியிலும் எழுதப்பட்டுள்ளன.
- மக்கபேயர் இரண்டு நூல்களும், சாலமோனின் ஞான நூலும், புதிய ஏற்பாட்டின் எல்லா நூல்களும் கிரேக்க மொழியில் எழுதப்பட்டது. கிரேக்க மொழி திருவிவிலியத்தில் தாக்கம் செலுத்தியுள்ளதென்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

- பழைய ஏற்பாடு முழுவதும் கிரேக்கத்தில் மொழி பெயர்க்க வேண்டிய வரலாற்றுத் தேவையும் வழிபாட்டுத் தேவையும் ஏற்பட்டது. கிரேக்கத்திற்கு மொழிபெயர்க்கப்பட்ட பழைய ஏற்பாட்டு நூல் ''செப்துவாஜிந்து'' அல்லது ''எழுபதின்மர் நூல்'' என அழைக்கப்படுகின்றது.
- எழுபதின்மர் நூல்கள் என்னும் பழைய ஏற்பாட்டு கிரேக்க மொழிபெயர்ப்பு பல இடங்களிலும் சிதறி வாழ்ந்த யூதர்களுக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது.
- இம் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்ட இடம், காலம் பற்றி நோக்கும் போது இது அண்ணளவாக கி.மு. 275இல் இரண்டாம் தாலமி பிலடெல்புஸ் (Ptolemy Philadelphus II) ஆட்சியின் போது எகிப்து நாட்டின் அலெக்சான்திரியா நகரில் மேற்கொள்ளப்பட்டது.
- இக் கிரேக்க மொழி பெயர்ப்பு (செப்துவாஜிந்து) திருச்சபையின் வரலாற்றில், குறிப்பாக தொடக்கத் திருச்சபையில் மிக முக்கிய நூலாகக் கருதப்படுகின்றது. திருத்தூதர்களும், ஆரம்பகாலக் கிறிஸ்தவர்களும் இம் மொழிபெயர்ப்பை அதிகம் பயன்படுத்தியுள்ளனர்.
- இம் மொழி பெயர்ப்பின் அதிகாரப்பூர்வத்தன்மை திருச்சபையின் கிரேக்க, இலத்தீன் தந்தையர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### 7.2.3.2 உரோமை நாகரிகத்தின் ஆற்றல்

- தைபர் (Tiber) ஆற்றின் கரையோரத்தில் அமைந்துள்ள உரோம நகர் இலத்தீன் மக்கள் குழுவினரின் வதிவிடமாகவும் வாணிப மையமாகவும் விளங்கியது.
- இந்த நகரின் பெயரே மக்களின் நாகரிகத்தின் பெயராகவும் கொள்ளப்பட்டது. உரோமைக்கு அடித்தளமிட்டவர்களாக ரோமுலஸ் என்பவரும் அவர்தம் முன்னோரும் கிரேக்க நாட்டிலிருந்து போர் காரணமாக இங்கு வந்து குடியேறியவர்கள்.
- இலத்தீன் மக்கள் குழுவினரைத் தவிர இத்தாலிய குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் மேலும் பல இத்தாலிய மக்கள் குழுவினரும் காணப்பட்டனர். இவர்கள் அனைவரும் இந்தோ - ஐரோப்பிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.
- இவர்கள் முன்னேற்றமடையும் பொருட்டு விவசாயத்திலும் போர்ப்பயிற்சியிலும் சிறந்து விளங்கினர்.
- உரோமை பரந்த பேரரசாக மாறியமைக்கு இம்மக்களிடம் இயல்பிலேயே காணப்பட்ட ஆதிக்க விஸ்தரிப்புத் தன்மையும் அண்டிய பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் மேல் மேற்கொள்ளப்பட்ட படையெடுப்புக்களும் அதில் கண்ட வெற்றிகளும் காரணங்களாக அமைந்தன.
- உரோமை நகர் ஏனைய நாடுகளுடன் நெடுங்சாலைகளினால் இணைக்கப்பட்டிருந்த மையினால். பல கலாசாரங்களும் பண்பாடுகளும் சந்திக்கும் இடமாக மாறக் காணமாக இருந்தது.
- கி.மு. 5ஆம் நூற்றாண்டு தோன்றிய உரோமைப் பேரரசு கி.பி. 4ஆம் நூற்றாண்டு வரை நீடித்து பல சாதனைகளைப் படைத்தது.
- இதன் ஆட்சிக்குட்பட்ட பிரதேசமாக அத்திலாந்திக் சமுத்திரம் முதல் யூப்பிரட்டீஸ் நதி வரையும், வடக்கில் றைன், டன்யூப் நதி முதல் தெற்கில் சகாராப் பாலைவனம் வரையும் இருந்தது.
- உரோமைப் பேரரசின் காலத்தில் ஐரோப்பா முழுவதும் மத அடிப்படையிலும், அரசியலடிப்படையிலும், நாகரிக அடிப்படையிலும் ஒற்றுமை நிலவியது.
- கி.பி. 4ஆம் நூற்றாண்டில் நாகரிகமடையாத மக்கள் படையெடுப்பினாலேயே உரோமைப் பேரரசு வீழ்ச்சி கண்டது.

### 7.2.3.2.1 இலத்தீன் மொழி

- உரோமையருடைய ஆட்சிக்காலத்தில் பேரரசின் ஆட்சி மொழியாகவும் நிர்வாக மொழியாகவும் இலத்தீன் விளங்கியது.
- பல ஐரோப்பிய மொழிகளுக்கு இலத்தீன் தாய் மொழியாக விளங்கியது. (இத்தாலிய, ஸ்பானிய, போர்த்துகேய, பிரான்சிய, ருமோனிய மொழிகள்)
- ஆங்கில மொழியின் பெரும் எண்ணிக்கையினாலான சொற்களுக்கு இலத்தீன் மொழியே மூல மொழியாகும்.
- சட்டத்துறை, விஞ்ஞானம், மருத்துவம், கல்வித்துறைகளிலும் இம்மொழி முக்கிய மொழியாகத் திகழ்ந்தது.
- ஏறக்குறைய 1000 ஆண்டுகளுக்கு மேல் (18ஆம் நூற்றாண்டு வரை) அறிஞர்களால் இலக்கிய மொழியாகவும் பயன்படுத்தப்பட்டது.
- இன்றும் கத்தோலிக்க மறையின் தலைமைப் பீடத்தின் நிர்வாக மொழியாக இருப்பதுடன் தலைமைப் பீடத்தினால் அதிகாரபூர்வமாக வெளியிடப்படும் அறிக்கைகள் எல்லாம் இலத்தீன் மொழியிலேயே வெளியிடப்படுகின்றன.
- இரண்டாம் வத்திக்கான் சங்கம் இடம் பெறும் வரையும், அதாவது 1963ஆம் ஆண்டு வரையும், இலத்தீன் மரபின் வழிபாட்டு மொழியாக இலத்தீன் மொழியே விளங்கியது. மேலும் இதே காலம் வரையும் கத்தோலிக்க மறையின் பெரிய குருமடங்களில் எல்லாம் குருமாணவர்களுக்கு போதனை மொழியாக இம் மொழியே பயன்படுத்தப்பட்டது.

### 7.2.3.2.2 திருவிவிலிய மொழி பெயர்ப்பு

- உரோமைப் பேரரசில் இலத்தீன் மொழியின் செல்வாக்கு அதிகரித்தமையால் திருவிவிலியத்தையும் இலத்தீன் மொழியில் மொழிபெயர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.
- இத் தேவையைப் பூர்த்தி செய்யப் பலர் திருவிவிலியத்தை கிரேக்க மொழியிலிருந்து இலத்தீன் மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்தனர். இது பழைய இலத்தீன் மொழிபெயர்ப்பு என அழைக்கப்பட்டது.
- 390இல் தமாஸ்கஸ் (Damascus) என்னும் திருத்தந்தை இலத்தீன் திருவிவிலியத்தை மாற்றியமைக்க விரும்பி கிரேக்கம், எபிரேயம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்த புனித எரோனிமுஸ் என்பவரிடம் இப்பணியை ஒப்புவித்தார்.
- கி.பி. 4ஆம் நூற்றாண்டின் இறுதியில் புனித எரோனிமுஸ் என்பவரால் மேற்கொள்ளப்பட்ட திருவிவிலியத்தின் இலத்தீன் மொழி பெயர்ப்பே ‘‘வுல்கத்தா’’ என அழைக்கப்பெற்றது. இங்கு பயன்படுத்தப்படும் ‘‘வுல்கத்துஸ்’’ என்பது பொதுமை, எளிமை எனப் பொருள்படுவதோடு எளியவர்களும் விளங்கும் வண்ணம் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டது எனப் பொருள்படும்.
- புனித எரோனிமுஸ் கிறிஸ்து பிறந்த பெத்லகேம் நகரில் 25 ஆண்டுகள் தங்கி கடினமாக உழைத்து இலத்தீன் மொழியில் மொழி பெயர்ப்புச் செய்தார்.
- கி.பி. 1546ஆம் ஆண்டில் இடம்பெற்ற திரிதெந்து சங்கத்தில் ‘‘வுல்கத்தா’ எனும் இலத்தீன் மொழி பெயர்ப்பு சிறந்தது என பிரகடனப்படுத்தப்பட்டது.
- இலத்தீன் மொழியின் பின்பே மற்றய மொழிகளிலும் திருவிவிலியம் மொழி பெயர்க்கப்பட்டது.

### 7.2.3.2.3 கட்டடக் கலை

- உரோமர்கள் கட்டிடக் கலையில் சிறந்து விளங்கினர் என்பதற்கு இவர்களால் நிர்மாணிக்கப்பட்ட பொதுப் பாதைகள், பாலங்கள், அணைக்கட்டுக்கள், துறைமுகங்கள், களியாட்ட அரங்குகள், நீர்த்தேக்கங்கள் என பலவற்றைக் குறிப்பிடலாம்.

- ஆரம்பத்தில் கிரேக்க கட்டிடக்கலை அம்சங்களைப் பின்பற்றினாலும் பின்பு தங்களது புதிய ஆக்கங்களையும் சேர்த்துக் கொண்டார்கள்.
- இவர்களது பசிலிக்கா கட்டிட அமைப்பு முறையை அடியொற்றியதாக கிறிஸ்தவ பசிலிக்கா ஆலயங்கள் அமைக்கப்பட்டன.
- ஆரம்ப கால பசிலிக்கா அமைப்பான ஆலயங்கள் உரோம நகரில் கட்டப்பட அதற்கு கொன்ஸ்ரன்ராயின் மன்னன் தாராளமாக நிதியுதவி வழங்கினான்.
- கொன்ஸ்தாந்திநோபிள் என்னும் இடத்தில் தூய ஆவியின் பெயரால் ஆலயம் எழுப்பப்பட்டது. கல்வாரி மலையில் கல்லறை ஆலயமும், ஒலிவ மலையில் ஆரோபண ஆலயமும், பெத்லகேமில் கிறிஸ்து பிறப்பு ஆலயமும் நிறுவப்பட்டன.
- இந்த ஆலயங்கள் எல்லாம் பசிலிக்கா வடிவமைப்பைக் கொண்ட ஆலயங்களாகவே அமைக்கப்பட்டன. பசிலிக்காவின் அமைப்பு நீள் சதுர வடிவமைப்பைக் கொண்டதாகவும் அதன் நீள் பகுதி மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டதாகவும் அவற்றுள் ஒன்று நடுப்பகுதியாகவும் மற்றையவை நடுப்பகுதியுடன் இணைந்த இருமருங்கிலும் அமைந்த பகுதியாகவும் காணப்பட்டன.

### 7.2.3.2.4 உரோமர் படிமுறை அதிகார அமைப்பு (Hierarchical Structure)

- உரோமர் சமூக அடிப்படையிலே இருபெரும் பிரிவுகளைக் கொண்டனர்: பற்றீசியன்ஸ், ப்ளேபியன்ஸ்.
- பற்றீசியன்ஸ் பத்து வீதத்தினராகவே காணப்பட்ட போதும் இவர்கள் பெரும் நிலவுடமையாளர்களாகவும் ஆட்சியில் கூடிய பங்கு வகிக்கின்றவர்களாகவும் காணப்பட்டனர். இதனால் உரோம சமூக அமைப்பில் பற்றீசியன்ஸ் அதிக செல்வாக்குப் பெற்றவர்களாகக் காணப்பட்டார்கள்.
- உரோமைய சமூகத்தில் ஏறத்தாழ 90 வீதமான மக்கள் பிளிப்பியன்ஸ் எனும் வகுப்பைச் சார்ந்தவர்களாகக் காணப்பட்டனர். இவர்களில் சிறு வர்த்தகர்கள், சிறு விவசாயிகள், சிறு கைத்தொழிலாளர்கள், சிறு பகுதி நிலத்தை உரிமையாக்கிக் கொண்டவர்களும் காணப்பட்டனர்.
- 4ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் முதல் உரோமையில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க கிறிஸ்தவர்களை அங்கீகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதோடு அவர்களது சமூக அந்தஸ்தும் உயர்ந்தது.
- திருச்சபையிலும் குருக்கள் (Clergy), பொதுநிலையினர் (Laity) என்னும் தெளிவான வேறுபாடு வளரலாயிற்று.
- இந்நிலையில் திருச்சபையின் அமைப்பில் உரோம அரச நிறுவனங்களின், தன்மைகளின் தாக்கங்களைக் காணலாம். முக்கோண வடிவமைப்பைக் கொண்ட படிமுறை அதிகார அமைப்பு நிலை உரோமை அரசியல் சமூக மட்டத்தில் காணப்பட்டது.
- இந்த அமைப்பு முறையில் முக்கியமான நகரத் திருச்சபையை நிர்வகிக்கும் அதிகாரம் கொண்டவராகப் பேராயரும், ஏனைய நகரங்களுக்கு ஆயர்களும், பங்குகளுக்கு குருக்கள், திருத்தொண்டர்கள், துறவியர் என்றும், இதன் உச்ச நிலையாக திருத்தந்தையும் காணப்படுகின்றார். இவ்வாறு அதிகாரிகளின் படிமுறை அதிகார அமைப்பு அடிமட்டத்தில் உள்ளவர்களாகப் பொது நிலையினர் காணப்படுகின்றனர்.
- திருச்சபையின் செயற்பாடு பற்றிய முக்கிய தீர்மானங்களை எடுக்கும் பொறுப்பும், செயற்படுத்தும் அதிகாரமும் குருக்கள் குளாத்தினரிடையே காணப்பட்டது.
- இவ்விடயத்தில் பொது மக்களின் பங்கும் செயற்பாடும் அரிதாக அல்லது முற்றாக அற்ற நிலையே நிலவியது. எனினும் உரோமர்கள் மத்தியில் பிளிப்பியன்ஸ் ஓரளவேனும் தங்கள் பிரதி நிதிகளைத் தெரிவு செய்யும் அதிகாரத்தைக் கொண்டிருந்தனர்.
- இவ்வாறான அமைப்பு நிலை வேறுபாடு இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூட்டப்படும் வரையும் நிலவியது. இவ்வமைப்பு முறையை மாற்றியமைக்க இரண்டாம் வத்திக்கான் சங்கம் பரிந்துரைக்கின்றது.

### 7.2.3.2.5 வழிபாட்டில் உரோமைய மரபுகள்

- உரோமைப் பேரரசில் நிலை கொண்டிருந்த கிறிஸ்தவம் உரோமைய மக்களின் வழிபாட்டு மரபில் வழக்கிலிருந்த பல பழக்கங்களை உள்வாங்கி மாற்றியமைத்தது.
- உரோமர்கள் தம் தெய்வங்களுக்கும், வீரர்களுக்கும், அரசர்களுக்கும் விழா எடுத்தமை போன்று கிறிஸ்தவர்களும் விசுவாசத்திற்கு சான்று பகர்ந்த மறைசாட்சிகளுக்கு விழா எடுத்தனர்.
- உரோமர்கள் டிசம்பர் மாதம் 25ஆம் திகதியை சூரியன் பிறந்த தின விழாவாக பெரும் ஆடம்பரமாகக் கொண்டாடினர். இத்தினத்தையே உரோமைப் பேரரசில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் கி.பி. 366 முதல் நீதியின் ஆதவனான இயேசு பெருமான் பிறந்த தினமாக இத்தினத்தை ஆடம்பரமாகக் கொண்டாடினர். கி.பி. 366 இலிருந்து மேற்கு நாடுகளில் உரோமைய இலத்தீன் வழிபாட்டு முறையைப் பின்பற்றி கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாடப்பட்டது.
- கிறிஸ்தவர்களிடையே வழக்கிலுள்ள மன்றாட்டு, நோன்பு நாட்கள் (யூதர் மத்தியிலும் உள்ளது), பவனிகள் முதலியன உரோமையர்களின் மரபிலிருந்து தோன்றியவை.
- உரோமர்கள் மத்தியில் அரசர்களுக்கும், தளபதிகளுக்குமான மரியாதை, இவர்கள் மத்தியில் வழக்கிலிருந்த உடை மரபும் கிறிஸ்தவத்தினுள் நுழைந்தது. வழிபாட்டின் போது முழந்தாளிடும் மரபும் இங்கு கவனத்தில் கொள்ளப்படவேண்டும். உரோமர்கள் மத்தியில் அரசனுக்கும் தளபதிக்கும் படைவீரர் ஒற்றைக் காலில் முழந்தாளிடுவது அவர்களுக்கு அளிக்கும் உயர் மரியாதையாகக் கருதப்பட்டது.

### 7.2.4 ஆரம்ப கால கிறிஸ்தவ சிந்தனையாளர்களும் மறைப்பரப்பாளர்களும் நூல்களின் தேவைகள்

- இரண்டாம் நூற்றாண்டின் மத்திய கால கட்டத்தில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக பற்பல குற்றச்சாட்டுகள் வரத் தொடங்கின. அக் குற்றச்சாட்டுகளை முறையடிக்கும் முகமாக அவற்றிக்கு பதிலளிப்பவையாக நூல்கள் உருவாகின. இந் நூல்களை எழுதிய எழுத்தாளர்கள் யேசுவினதும் திருத்தூதர்களினதும் காலத்தை நெருங்கிய யுகத்தில் வாழ்ந்ததால் அவர்களின் நூல்கள் மிக முக்கிய இடத்தைப் பெற்றன. இக்காலத்தில் கிறிஸ்தவ சபை புதிய சபையாக இருந்தமையால் திருச்சபையை ஊட்டமளித்து வளர்க்கவும் இந்நூல்கள் மிக உதவியாக இருந்தன. இதனால் தொடக்க கால எழுத்தாளர்கள் ‘‘திருச்சபையின் தந்தையர்’’ என்று அழைக்கப்பட்டார்கள். கிறிஸ்தவம் தடை செய்யப்பட்ட யுகத்தில் நூல்கள் எழுத சுதந்திரம் இல்லாத போதிலும் கிறிஸ்தவ மறை தொடர்பான நூல்களை அநேகமானோர் எழுதினர்.

**புனித ஜஸ்டின் (கி.பி. 100 - 165)**

- கிறிஸ்தவ வரலாற்றில் முதன்மையான பெரிய எழுத்தாளர் என்ற மதிப்பைப் பெற்றவர்
- பலஸ்தீனாவில் பிறந்த இவர் சிறந்த தத்துவ சாஸ்தியாவார்.
- இவர் எழுதிய நூல்களுள் மிக முக்கியமானது அன்ரோனினஸ் பியுஸ் என்ற பேரரசருக்காக எழுதப்பட்ட ‘‘அப்போலொஜியா’’ என்ற நூலாகும். அப்போலொஜியா என்ற கிரேக்கச் சொல்லின் கருத்து ‘‘எதிர்ப்பக்களுக்கு பதில் கொடுப்பது’’ ஆகும்.
- அப்போலொஜியாவின் முக்கிய பகுதியானது யுகரிஸ்த் (Eucharist) என்ற நன்றி நவிலும் வழிபாடு பற்றி எழுதப்பட்ட பகுதியாகும். கி.பி. 150க்கு முற்பட்ட காலத்தில் ஞாயிறு தினங்களில் உரோமையில் நடைபெற்ற யுகரிஸ்த் என்ற நன்றி நவிலும் வழிபாடு நீண்ட விபரங்களோடு இவர்களின் நூல்களில் விபரிக்கப்பட்டுள்ளது.
- கி.பி. 165 அளவில் உரோமையில் சிறைப்படுத்தப்பட்டு அங்கே இவர் சிரச்சேதம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார்.
- இன்றுவரை பாதுகாக்கப்பட்டுள்ள இந்நூல்கள் பிற மதத்தினரை நோக்கமாகக் கொண்டு எழுதப்பட்டவையாகும்.

**புனித இரனேயுஸ் (கி.பி. 130 - 202)**

- துருக்கியில் ஸ்மிர்னா பிரதேசத்தில் பிறந்த புனித இரனேயுஸ் கிறிஸ்தவர்களின் முதன்மை இறையியலாளராக விளங்குகிறார்.
- கி.பி. 177ல் பிரான்சு லியோன்ஸ் நகரின் ஆயரான இவர் ''பேதக மறுப்பு' (Against the Heresies) என்ற நூலை எழுதினார்.
- கிறிஸ்தவத்தின் முக்கிய மறை உண்மைகள் ஒழுங்கு முறையாக இந்நூலில் காணப்படுகின்றன. எல்லா கிறிஸ்தவ சபைகளும் உரோமை சபையுடன் ஒன்றிணைய வேண்டும் என்ற கருத்து இங்கே கூறப்பட்டுள்ளது. கி.பி. 203 அளவில் இவர் இறந்திருக்கிறார்.

**ஒரிஜென் (கி.பி. 185 - 254)**

- மூன்றாம் நூற்றாண்டில் கிறிஸ்தவ மறையின் பிரதான பாதுகாவலராக ஒரிஜென் அவர்களை அறிமுகப்படுத்தலாம்.
- இவர் புனித கிளமென்டின் சீடனாவார். இவர் கிளமென்ட் அவர்களின் கொள்கையை முன் எடுத்துச் சென்றார்.
- திருவிவிலியத்தின் அர்த்தத்தை தெளிவுபடுத்தியும் கிறிஸ்தவ மறை பற்றிய படிப்பினைகளாலும் ஒரிஜென் திருச்சபைக்கு சேவையாற்றியுள்ளார்.
- Periarchon என்ற கிரேக்க மொழியில் கருதப்படும் ''அடிப்படைகள்'' என்ற நூல் அவர் எழுதிய முதல் நூலாகும். மறுவாழ்வு தொடர்பாக இவர் முன்வைத்த சில கருத்துக்களை பொதுச்சங்கம் நிராகித்துவிட்டது.

**புனித அத்தனாசியுஸ் (கி.பி. 296 - 373)**

- அலெக்சாந்தியாவில் ஆயராக பதவியேற்றிருந்த இவர் நான்காம் நூற்றாண்டின் முதற் காலப்பகுதியில் இருந்த முக்கிய கத்தோலிக்க எழுத்தாளர் ஆவார்.
- ஆரிய பேதகத்திற்கு எதிராக முழுமுச்சாகப் போராடிய முக்கிய மறைத்தூதுவர் புனித அத்தனாசியுஸ் ஆவார்.
- நிசேயா சங்கத்தில் முக்கியமானவராக இருந்த இவர், கிரேக்க தத்துவங்களின் தர்க்க ரீதியான செயல்முறைகளை கிறிஸ்தவ மறையின் ஆழமான பகுதிகளை ஆராய்வதற்கு பயன்படுத்தினார்.
- இவர் எழுதிய நூல்களுள் இறைவார்த்தை மனுவுருவாகுதல், வேத விளக்கம், புனித வனத்து அந்தோனியார் வரலாறு, ஆரிய பேதகத்திற்கு எதிரான மூன்று நூல்கள் மிக முக்கியமானவை.

**புனித பசில் (கி.பி. 330 - 379)**

- துறவற வாழ்வின் ஒழுக்க முறைகளை அமைப்பதில் பிரதானமானவர்.
- இவர் எழுதிய நூல்களில் துறவற வாழ்வின் ஒழுக்கம் என்ற இரண்டு நூல்களும், மொறாலீசா என்ற பெயரில் பொது நிலையினரின் வாழ்க்கை தொடர்பான நூலொன்றும் திருவிவிலியத்திற்கு துணையாக எழுதிய 24 மறையுரைகளும் மிக முக்கியமானவை.

**புனித நிஸ்ஸா கிரகோரியார் (கி.பி. 330 - 395)**

- புனித பசிலின் இளைய சகோதரரான இவர் சிறந்த சிந்தனையாளராவார்.
- கொன்ஸ்தான்திநோப்பிள் நகரில் கூடிய இரண்டாவது பொதுச் சங்கத்தில் முக்கிய மறைவல்லுநரான இவரே ''திருச்சபைக்கு ஊன்று கோல்'' என்ற பெயரால் அழைக்கப்பெற்றார்.
- கிறிஸ்தவ வாழ்க்கை முறை பற்றியும் சிறப்பாக கன்னிமை பற்றியும் எழுதிய அவர் மறை விவாத நூல்களையும், மனித பிறப்பு என்ற நூலையும் எழுதினார்.

**புனித கிரகோரி நாசியான்சன் (கி.பி. 329 - 389)**

- இவர் சிறந்த பேச்சாளர், கவிஞர், எழுத்தாளராவார். இவர் எழுதிய நூல்கள் கிரேக்க இலக்கிய உரைகளை ஒத்திருந்தது.
- தான் வாழ்க்கையில் அனுபவித்த அனுபவங்களை நூல்களாக எழுதினார்.
- மறை தொடர்பான விடயங்களை ஆழமாகவும் சரளமான மொழி நடையிலும் முன்வைப்பதில் மிகவும் சிறந்தவர்.
- புனித பசில், புனித நிஸ்ஸா கிரகோரியார் புனித கிரகோரி நாசியான்சன் ஆகிய மூவரும் அலெக்சாந்திரியாப் பாரம்பரியத்திற்குரியவர்கள். வளர்ந்த பின் கிறிஸ்தவ மறைறையத் தழுவிக் கொண்ட இவர்கள் இளைஞராக இருக்கும்போது எதென்ஸ் கிரேக்க பல்கலைக்கழகத்தில் தத்துவ ஞானத்திலும் இறையியல் படிப்பிலும் பெரிதும் முன்னேற்றம் அடைந்தார்கள். திருச்சபையில் ஆயராகவும் பணியாற்றியுள்ளனர். இவர்கள் அப்பொலோஜியா நூலின் எழுத்தாளரான ஒரிஜெனின் சீடர்கள். இம்மூவரும் மூவொரு இறைவன் தொடர்பாக முழுமையான விளக்கத்துடன் கற்பிப்பதில் சிறந்தவர்கள். இவர்கள் மூவரும் கப்பதோசியா தந்தையர் எனவும் அழைக்கப்பட்டனர்.

**புனித அம்புரோசியார்**

- கி.பி. 340இல் பிறந்த புனித அம்புரோசியார் உயர் குலத்தைச் சாந்தவராவார்.
- உரோமையில் கல்வி பயின்ற அம்புரோசியார் அங்கே சட்டப்படிப்பையும் கற்றுள்ளார். மிலான் நகரில் வழக்கறிஞராக மாகாண ஆளுநராகப் பதவி ஏற்றுள்ளார்.
- ஆரிய பேதத்தை தழுவிய இவர் பிற்காலத்தில் கத்தோலிக்க மதத்தை தழுவிக் கொண்டார். இவர் சில வருடங்களில் மிலான் நகர ஆயராகப் பதவியேற்றார். தனக்கு சொந்தமான எல்லா உடமைகளையும் ஏழைகளுக்குப் பகிர்ந்தளித்தார்.
- உரோமைச் சக்கரவர்த்தியான ‘‘தெயோதோசியுஸ்’’ மக்களை துன்புறுத்திய போது தைரியத்துடன் அவரை எதிர்த்துள்ளார்.
- மேலத்தேய துறவற வாழ்க்கையை மேற்கொள்ள புனித அம்புரோசியார் முயற்சி எடுத்துள்ளார்.
- ஆயராக பணியாற்றிய வேளையில் பல திருவிவிலிய விளக்கங்கள், மறைக்கோட்பாடுகள், அறநெறி, ஆன்மீக வாழ்வு பற்றி பல ஆக்கங்களை எழுதியுள்ளார்.
- தமது திருவிவிலிய விளக்கங்களை யூத வரலாற்றாசிரியராக ∴பிலோவையும், ஒரிஜெனையும், அலெக்சாந்திரிய கிறிஸ்தவ சிந்தனையாளர்களையும் அடிப்படையாகக் கொண்டு எழுதினார்.
- ‘‘மகனின் இறைத்தன்மை’’ (On The Divinity of The Son) ‘‘தூய ஆவியானவர்’’ (THe Holy Spirit) ஆகியவை மறைக்கோட்பாடு பற்றிய நூல்களாகும்.
- அருட்சாதனங்களைப் பற்றியும், நம்பிக்கையைப் பற்றியும் (விசுவாசம்) மறைக்கல்வி வடிவில் ஆறு நூல்களை எழுதியுள்ளார்.
- ‘‘டேயுஸ் க்றெயாத்தோர் ஓம்னியும்’’ (Deus Creator Omnium), ‘‘எதேர்னே றேறும் கொண்டிதோர்’’ (Aeterne Rerum Conditor), ‘‘இயாம் சூர்ஜித் ஹோறா தேர்சியா’’ (Iam Surgit Hora Tertia) எனும் திருவழிபாட்டுப் பாடல்களையும் ஆக்கியுள்ளார்.
- புனித அகுஸ்தினாரின் மனமாற்றத்திற்குக் காரணமாக இருந்தவர். அகுஸ்தினாரின் மனமாற்றத்திற்கு நன்றியாக ‘‘தே டேயும் லவுடாமுஸ்’’ எனும் பாடலை இயற்றினார் எனவும் கருதப்படுகின்றது.
- ‘‘மேற்கத்தேய திருச்சபை வழிபாட்டுத் திருஇசையின் தந்தை’’ என அழைக்கப்படுகிறார்.
- இவரது திருஇசை ‘‘அம்புரோசியன் திருஇசை’’ என அழைக்கப்படுகிறது.
- இவரது கிறிஸ்தவ இலக்கிய, பாடல் படைப்புக்கள் எல்லாம், ஆயர் என்ற வகையில், மக்களின் மேய்புப்பணியை இலக்காகக் கொண்டு எழுதப்பட்டவை.

### 7.2.5 மேற்கு ஐரோப்பிய கோத்திரங்களின் தாக்கம்

- கிறிஸ்துவின் பிறப்பிற்கு 50 வருடங்களுக்கு முன் சீனப் பேரரசின் எல்லையிலிருந்து ''ஹன்ஸ்'' எனும் மக்கள் வெளியேற்றப்பட்டனர். அவர்கள் மேற்குத் திசையில் பரவி பல இடங்களைக் கைப்பற்றினர்.
- பேரரசன் அகுஸ்துஸ் காலத்திலிருந்தே உரோமைப் படைகள் மிலேச்சர் என அழைக்கப்பட்ட, நாகரிகமடையாத மக்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக உரோமைப் பேரரசின் எல்லைகளைக் காவல் காத்தனர்.
- **''கோத்ஸ்''** (Goths) எனும் குழுவினர் முதன் முதல் டன்யூப் நதியைக் கடந்து உரோமை அரசுக்குள் நுழைந்து வாழ உரோமையர் அனுமதி வழங்கினர். இவர்கள் இரு குழுக்களாகப் பிரிந்து மேற்கில் **''விசிகோத்ஸ்''** (Visigoths) எனவும், கிழக்கில் **''ஒஸ்றொகோத்''** (Ostrogoth) எனவும் அழைக்கப்பட்டனர்.
- தொடக்கத்தில் உரோமைப் பேரரசனுடனும் உரோமையருடனும் நட்பையும் நல்லுறவையும் கொண்டிருந்தனர். அவர்களது தலைவர்கள் உரோமை இராணுவத்தில் பயிற்சி பெற்றனர்.
- நாளடைவில் ''கோத்ஸ்'' உரோமையருடன் நிலவிய உறவில் அதிருப்தியடைந்தவர்களாக கிளர்ச்சி செய்யத் தொடங்கினர். அலறிக் (Alaric) என்பவரின் தலைமையில் விசிகோத் மக்கள் பேரரசின் கிழக்குப் பகுதியைக் கைப்பற்றி உரோமையைத் தாக்கி ஸ்பெயினில் தமது அரசை அமைத்தார்.
- **''வன்டல்ஸ்''** (Vandals) எனும் வேறொரு குழுவினர் உரோமையருடன் நல்லுறவைப் பேணவில்லை. இவர்கள் ஸ்பெயின் ஊடாக தெற்கை நோக்கி நகர்ந்து வட ஆபிரிக்காவில் நுழைந்தனர். அங்கிருந்த உரோமை மாகாணங்களை அழித்தனர். பின்னர் உரோமை இராணுவம் இவர்களை வட ஆபிரிக்காவிலிருந்தும் இத்தாலியிலிருந்தும் முற்றாக விரட்டினர்.
- **''பிராங்ஸ்''** (Franks) எனும் ஒரு குழுவினர் வட கோல் (Northern Gaul) எனும் பகுதியைத் தமதாக்கினர். இப்பகுதி பிற்காலத்தில் மிக முக்கியமான பிரதேசமாக உருவாகியது.
- **அங்கிள்ஸ், ஜூட்ஸ், சாக்சன்ஸ்** (Angles, Jutes, Saxons) எனும் கோத்திரங்கள் பிரித்தானியாவை மிக இலகுவாகக் கைப்பற்றி தமது ஆட்சிக்குள் கொண்டு வந்தனர். ஏனைய கோத்திரங்களின் படையெடுப்புக்களை முறியடிப்பதற்காக உரோமை இராணுவத்தினரை பேரரசன் பிரித்தானியாத் தீவிலிருந்து வெளியேற்றியமையே இதற்கான காரணமாகும்.
- இக்கோத்திரங்களின் படையெடுப்பினால் கொன்ஸ்தாந்திநோபிளைச் சுற்றியுள்ள சில பகுதிகள் மட்டுமே உரோமைப் பேரரசிடம் இருந்தது. மேற்குலகு முழுவதும் படையெடுப்புக்களை மேற்கொண்ட கோத்தரங்களுக்குச் சொந்தமாயின.
- இத்தாலியை லொம்பாட் அரசும், ஸ்பெயினை கோத்திக் அரசும், கோலை பிராங்கியர் அரசும், பிரித்தானியாவை ஏழு அங்ளோ சாக்சனினின் அரசும் கைப்பற்றி ஆட்சி செய்தன.
- இக்கோத்திரங்களை மிலேச்சர்கள் அல்லது நாகரிகமடையாதவர்கள் என அழைத்தாலும் இவர்கள் மத்தியில் தங்களுக்கே உரிய பண்பாடு இருந்தது. கிரேக்க, உரோம நாகரிகங்களோடு ஒப்பிடும் போது இக் கோத்திரங்களின் வாழ்க்கை மிக உயரிய நிலையில் இருக்கவில்லை. இவர்களுக்கென இராணுவப்படைகள் இருந்தன. எனினும் பெரும்பாலான மக்கள் விவசாயிகளாகவும் மந்தை மேய்ப்பவர்களாகவும் வாழ்ந்தார்கள். சுய மதிப்பு, மனித சுதந்திரம், தமது கோத்திர மக்களுடன் பிரமாணிக்கமான உறவு, தமது உறவினர்கள் மட்டில் அர்ப்பணம், பெண்கள் மட்டில் மிகுந்த மதிப்பு, மரியாதை ஆகியவை இவர்களது சிறப்பு இயல்புகளாகக் காணப்படுகின்றன.

- உரோமைப் பேரரசின் இறுதி ஆட்சிக் காலங்களில் திருத்தந்தையரும் ஆயர்களும் மேற்குலகின் மக்கள் தலைவர்களாக செயற்பட்டனர். தமது நகரங்களைப் பாது காத்ததோடு படையெடுத்த கோத்திரங்களுடன் சமாதான ஒப்பந்தம் செய்தனர். இப்புதிய மக்கள் மத்தியில் பணியாற்றுவதற்காக குருக்களையும் மறை பரப்பாளர்களையும் அனுப்பினர். இவர்களது பணியால் பலர் கிறிஸ்தவ மறையைத் தழுவினர்.
- **குறிப்பு** : மறைப்பரப்பாளர்களைப் பற்றியும் கோத்திரங்கள் கிறிஸ்தவ மறையைத் தழுவுதல் பற்றியும் தேர்ச்சி மட்டம் 1.2இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

## உத்தேச கற்பித்தல் செயற்பாடு

1. கிறிஸ்தவ விசுவாசத்திற்கு எதிராக திருச்சபைக்கு உள்ளேயும் வெளியேயும் ஏற்பட்ட பேதங்களுக்கு திருச்சபை துலங்கலைக் காட்டிய விதத்தினைப் பற்றி மாணவர்களின் மனப்பாங்குகளை ஆராய்க.
2. திருச்சபையின் ஆரம்பகாலத்தில் உருவாகிய இறையியல் கல்லூரிகள் பற்றி மாணவர்களோடு கலந்துரையாடுங்கள்.
3. கிரேக்க, உரோம நாகரிகத்தின் தாக்கங்கள் பற்றிய விடங்களை ஆராய்வதற்கு மாணவர்களை ஈடுபடுத்துங்கள்.
4. ஆரம்ப காலத்தில் கிறிஸ்தவ சிந்தனையாளர் மற்றும் இறையியலாளர் பற்றி மாணவரோடு கலந்துரையாடுங்கள்.
5. மேற்கு ஐரோப்பிய கோத்திரங்களின் தாக்கங்கள் பற்றிய கலந்துரையாடலை நடத்துங்கள்.
   இக்கலந்துரையாடலில் மேலெழுந்த விடயங்களின் வழியாக அறிக்கை ரீதியான வெளியீடொன்றினை ஆக்குவதற்கு மாணவர்களை ஈடுபடுத்துங்கள்.

## உசாத்துணை நூல்கள்


- பிலிப்ஸ் இ. யேசுதாசன் அ.ம.தி. பரிசுத்த ஏடுகளைக் கற்றல், கொழும்புத்துறை
- பிலிப்ஸ் இ. யேசுதாசன் அ.ம.தி. கிறிஸ்தவ வாழ்வு, கொழும்புத்துறை
- ஞா. பிலேந்திரன், கிறிஸ்தவமும் நாகரிகங்களும், நல்லாயன் நிலையம், திருநெல்வேலி, 2008.
- John Laux M.A. Church History, Tan Book and Publishers, Illinois, 1989.
- Rev. George Johnson, The Story of the Church, Tan Book And Publishers, Illinois, 1980.
- Alfred Lapple, The Catholic Church : A Brief History, Munchen, 1982

**தேர்ச்சி** **7.0 :** கிறிஸ்தவ நாகரிகம் உருவாகியதனால் சமுதாய கலாசாரத்துறையில் ஏற்பட்ட மாற்றங்களின் அடிப்படையில் பயணிப்பர்.

**தேர்ச்சி மட்டம்** **7.3 :** புதிய ஐரோப்பிய நாகரிகம் உருவாக துறவற சபைகளின் பங்களிப்பை ஆராய்வர்.

**பாடவேளைகள்** **:** 07

**கற்றல் பேறுகள்** **:**

- புதிய நாகரீகம் உருவாக துறவற சபைகள் ஆற்றிய பங்களிப்பை ஆராய்வர்.
- ஆசீர்வாதப்பர் சபையின் செயற்பாடுகளை அறிந்து கொள்வர்.
- செபவாழ்வும் சுறுசுறுப்பான உடலுழைப்பும் துறவற வாழ்வுக்கு இன்றியமையாதது என்பதை ஏற்றுக்கொள்வர்.
- ''ஏழ்மையின் முன்மாதிரிகை'' தொடர்பாக இரவலர் சபைகள் பின்பற்றிய நடைமுறைகளை விளக்குவர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

## 7.3.1 ஆசீர்வாதப்பர் சபையின் முன்மாதிரிகையான செபமும் உடல் உழைப்பும்

- திருச்சபை வரலாற்றில் துறவற வாழ்வின் ஆரம்பம், உருவாகிய துறவற சபைகள், அவைகளின் வளர்ச்சி பற்றி தேர்ச்சி மட்டம் 2.1இல் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ஆசீர்வாதப்பர் துறவற சபையின் முன்மாதிரியான உடல் உழைப்பு ஐரோப்பிய நாகரிகம் உருவாருவதற்கு அளப்பெரிய பங்களிப்பு வழங்கியுள்ளது.
- துறவற வாழ்வின் வரலாற்றில் துறவிகள் சமூகத்தில் இருந்து ஒதுங்கி வாழாது, சமுகத்துடன் இணைந்து சமூகத்தின் மேம்பாட்டிற்காகவும் மக்களின் ஆன்மீகத்திற்காகவும் தொண்டாற்றும் வகையில் துறவற முறையில் மாற்றங்கள் ஏற்பட்டன. இம் மாற்றங்கள் உரோமைப் பேரரசின் கிழக்கு நாடுகளில் ஆரம்பமாகின. இதன் முன்னோடியாக புனித பசில் விளங்கினார். இவ்வித துறவற வாழ்வின் அமைப்பு முறைக்கு மேலைத்தேசத்தில் புனித ஆசீர்வாதப்பர் விளங்கினார்.

### 7.3.1.1 உடல் உழைப்பின் மாண்பும் செபமும்

- புனித ஆசீர்வாதப்பர் துறவற சபையினர் செபமும் வேலையும் (Ora et Labora) எனும் கருத்தை தமது விருதுவாக்காகக் கொண்டிருந்தனர்.
- உரோமானியர்கள் உடல் உழைப்பை இழிவான செயல் எனவும் அடிமைகளே இவற்றைச் செய்யவேண்டுமெனவும் கருதினார்கள்.
- இந்நிலையில் வேலை பற்றிய சரியான உளப்பாங்கை மக்கள் மத்தியில் உருவாக்குவதும் உழைப்பின் மேன்மையைப் பற்றி உணர்த்துவதும் துறவிகளின் முக்கிய பணியாகக் கொள்ளப்பட்டது.
- புனித ஆசீர்வாதப்பர் தாம் தயார் செய்த துறவிகளுக்கான ஒழுங்குகளில் துறவிகள் எப்பொழுதும் சுறுசுறுப்பாக இயங்கும் முறையில் சட்டங்களை எழுதியிருந்தார். இதனால் துறவிகள் கடும் உழைப்பை மேற்கொண்டனர். இவ்வாறாக துறவிகள் செயற்பட்டமை உடல் உழைப்பின் மேன்மையை எடுத்துக்காட்டுவதாக அமைந்தது. இக் கருத்தியல் மேலைத்தேசமெங்கும் உடல் உழைப்பு பற்றி உயர்ந்த மதிப்பையும், பண்பையும் உருவாக்கியுள்ளது. இன்னும் மேலைத்தேச மக்களின் வாழ்வில் இப்பண்பு மேலோங்கியிருப்பதை அவதானிக்க முடியும்.

- அதேவேளையில், திருப்பாடல்களைச் செபிப்பதும், குறிப்பிட்ட நேரங்களில் திருப்புகழ்மாலை செபிப்பதும் துறவிகளின் முக்கிய கடமையாயிருந்தன. செபமும் வேலையும் என்பது துறவிகளுக்கு அவர்கள் தம் வாழ்வில் ஒரு சமநிலையை ஏற்படுத்தியுள்ளது. அவர்களின் செயற்பாடுகள் உடல் உழைப்பையும், அறிவுசார் பணியையும், மறைபரப்புதலை ஏறப்படுத்தும் பணியையும் கொண்டிருந்தன.
- துறவிகள் பெருமளவில் காடுகளை அழித்து அவற்றை சிறந்த விவசாய நிலங்களாக மாற்றியுள்ளனர். இவர்கள் ஐரோப்பாவில் விவசாயத்தை வளர்த்தவர்கள் என்பது பல வரலாற்று ஆசிரியர்களின் கருத்தாகும்.
- துறவிகள் எல்லாத் தொழில்களையும் சமமாகக் கருதினர். இவர்கள் கால்நடை வளர்த்தல், பால் கறத்தல், தேனீ வளர்த்தல், அறுவடை செய்தல், உழுதல், சூடடித்தல், பட்டறைகளில் வேலைசெய்தல், நெசவு செய்தல், திராட்சை இரசம் தயாரித்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டனர். விவசாயத்திலும் ஈடுபட்ட இவர்கள் தம்மைச் சூழ்ந்து வாழ்ந்த மக்களுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தனர். மக்களால் உயர்ந்தவாகளாக, கற்றவர்களாகக் கருதப்பட்ட துறவிகள் இவ்வாறு உடல் உழைப்பில் ஈடுபட்டமை பெரும் எடுத்துக்காட்டாகக் கொள்ளப்பட்டது.
- புனித ஆசீர்வாதப்பர் துறவற சபையினர் ஐரோப்பாவில் விவசாய நடவடிக்கைகளில் வெற்றிகரமாக ஈடுபட்டதுடன், மாற்றுப் பயிர்ச்செய்கை போன்ற புதிய தொழில் நுட்பங்களையும் அறிமுகப்படுத்தினர்.

**கல்வித்துறை**

- துறவற மடங்களின் பாடசாலைகளில் விவிலியம், பண்டைய இலத்தீன் சிறப்பு இலக்கியங்கள், திருச்சபைத் தந்தையரின் ஆக்கங்கள் பாட நூல்களாகக் கற்பிக்கப்பட்டன.
- புனித ஆசீர்வாதப்பர் தமது துறவிகள் நன்கு கற்றவர்களாக இருக்க வேண்டும் என விரும்பினார்.
- இளம் வயதில் துறவற மடங்களில் சேர்ந்து துறவற வாழ்வு மேற்கொள்பவர்கள் சிறிதளவாவது துறவற மடப் பாடசாலைகளில் கற்க வேண்டியது அவசியமானதாக விருந்தது.
- இப்பாடசாலைகளில் பயன்படுத்தப்பட்ட பாடநூல்களைப் பிரதியெடுப்பதில் துறவிகள் பெரும் தியாகத்துடன் பங்களிப்புச் செய்தனர். அச்சியந்திரங்கள் இல்லாத அக்காலத்தில் துறவிகளே கை எழுத்தினால் பிரதி எடுத்தார்கள். மேலும் இவற்றை எழுதும் தோலையையும் அவர்களே பதனிட வேண்டியிருந்தது.
- பிரதியெடுக்கும் வேலையை மிகவும் கவனமாகச் செய்யவேண்டும். தவறுகள் இல்லாமல், உள்ள விடயங்களை விட்டுவிடாமல், புதிதாக ஒன்றையும் இணைத்துக்கொள்ளாமல் மிக நுட்பமாக மேற்கொள்ளப்படவேண்டிய தொன்றாக இருந்தது.
- கஸியோடோரஸ் எனும் மடாலய சிந்தனையாளர் துறவிகள் கடுமையான வேலைகளை வயல்களில் செய்வதிலும் பார்க்க, பண்டைய இலக்கியங்கள், பழைய ஏட்டுச் சுவடிகளைப் பிரதியெடுத்தல் பொருத்தமான உடல் உழைப்பாக துறவிகளுக்கு அமையும் என்று தெரிவித்தார்.
- இக்கருத்தை ஏற்றுக்கொண்ட புனித ஆசீர்வாதப்பர் துறவற மடப்பாடசாலைகள் பல நூற்றாண்டுகளாக போட்டியாளர்களே இல்லாத அறிவுத்துறை மையங்களாக, பிரதியெடுக்கும் நிலையங்களாகத் திகழ்ந்தன. பிற்காலத்தில் ஐரோப்பிய பல்கலைக்கழகங்களின் தோற்றத்திற்கும், நூல் நிலையங்களின் செயற்பாட்டிற்கும் புனித ஆசீர்வாதப்பர் துறவிகள் வழிவகுத்தனர்.

### 7.3.1.2 ஜெர்மனிய இனக் கோத்திரங்கள் நாகரிகமடைதல் :

- உரோமைப் பேரரசு வீழ்ச்சியடைவதற்கு ஜேர்மனிய இனக் குழுவினர் அல்லது கோத்திரங்களின் படையெடுப்பு ஒரு காரணமாகவிருந்தது. இக் கோத்திரங்களின் மக்கள் நாடோடிகளாகவும் நாகரிகமடையாதவர்களாகவும் வாழ்ந்தனர்.
- உரோமைப் பேரரசின் வீழ்ச்சியுடன் தலைமைத்துவப் பொறுப்பை ஏற்று உரோமை நகரைக் காப்பாற்றிய ஆயர்களும் துறவிகளும் இந்த நாகரிகமடையாத மக்களை சீர்படுத்துவதிலும் நெறிப்படுத்துவதிலும் பெரும் பங்களிப்புச் செய்துள்ளனர்.
- நாகரிகமடையாத மக்கள் குழுவினரின் மன்னர்கள், ஆயர்களின் அறிவுக்கூர்மை, தூய்மை என்பன காரணமாக கத்தோலிக்க ஆயர்களை தங்கள் சமாதான தூதுவர்களாகவும் ஆலோசகர்களாகவும் ஏற்றுக்கொண்டனர். இவ் ஆயர்கள் முன்பு சிறந்த துறவிகளாக இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.
- இம்மக்களுக்கு நாகரிக வாழ்வைக் கற்றுக்கொடுப்பது, கிரேக்க - உரோம நாகரிகத்தின் நற்கூறுகளை அளிப்பது, அவர்களை கிறிஸ்தவர்களாக்குவது ஆயர்களின் முக்கிய பணியாக விளங்கியது.
- ஆயர்களின் இப்பணியில் துறவிகளும் பெரும் பங்களிப்புச் செய்தனர். இதில் புனித ஆசீர்வாதப்பர் துறவிகளின் பணிகள் வரலாற்று ஆசிரியர்களால் பெரிதும் பாராட்டப்படுகின்றன.

### உடல் உழைப்பு

- ஐரோப்பாவின் விவசாயத்துறைக்கு புனித ஆசீர்வாதப்பர் துறவிகள் வழங்கிய மற்றுமோர் பங்களிப்பு நாகரிமடையாத மக்களை விவசாயிகளாக மாற்றியமையாகும். நாடோடிகளாக வாழ்ந்த மக்களை நாகரிகப்படுத்தி, துறவற மடங்களுக்கு அண்மித்த பகுதிகளில் குடியமர்த்தி தங்கள் விவசாய நடவடிக்கைகளுக்கு உதவியாளர்களாக அமர்த்தினர். நாடோடி வாழ்விலும் மேலாக நிரந்தர குடிசைகள் அமைத்து விவசாயம் செய்வது உயர்ந்த வாழ்வு என்பதை நாகரிகமடையாத மக்களுக்கு உணரவைத்தனர்.
- விவசாயத்துடன் தொடர்புடைய எல்லா வேலைகளையும் கற்றுக்கொடுத்தனர். மேசன் வேலை, தச்சுவேலை என்பவற்றுடன் ஏனைய சிறு கைத்தொழிலையும், உலோக வேலைகளையும் கற்றுக்கொடுத்தனர். துறவிகளின் மடங்கள் சீர்திருத்தம் அடையாத மக்களுக்கு தொழில்நுட்ப பாடசாலகளாக மாறின.
- நாகரிகமடையாத மக்களுக்கு உழைப்பின் மேன்மையை உணர்த்தியது துறவிகளின் பெரும் சாதனையாகும்.

### கல்வி

- நாகரிகமடையாத மக்களை சீர்திருத்தவும் கிறிஸ்தவ முறையில் உருவாக்கவும் கல்வி இன்றியமையாத ஊடகமாகவிருந்தது.
- இம்மக்களுக்கு கல்வி அளித்து நாகரிகப்படுத்தும் பணியைத் துறவற சபையினர் மேற்கொண்டனர். துறவிகள் மடங்களால் நடத்தப்பெற்ற பாடசாலைகள் மூலமாக கல்வி வழங்கினர்.
- நாகரிகமடையாத மக்களின் இளம்வயதினருக்கு துறவிகள் இலத்தீன் வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் கற்றுக்கொடுத்தனர்.
- துறவிகள் தங்கள் முயற்சியில் பொறுமையுடனும் அர்ப்பணிப்புடனும் சோர்வின்றி உழைத்திராவிடின் இம்மக்கள் நாகரிகமடைதல் கேள்விக்குரிய விடயமாயமைந்திருக்கும். மேலும், கிரேக்க - உரோம நாகரிகங்களின் பல சிறப்பம்சங்கள் அழிந்து போயிருக்கும் நிலை ஏற்பட்டிருக்கலாம்.
- அடிப்படையில் துறவிகள் இவ்வாறு வாழ்ந்தமை கிறிஸ்துவின் மேல் தாங்கள் கொண்டுள்ள அன்பையும், அவர்தம் அயலவர் மேல் காட்டுவதாக உணர்த்துவதற்கே.

- புனித ஆசீர்வாதப்பர் துறவிகள் ஐரோப்பிய நாகரிகத்திற்கு ஆற்றிய பாரிய பணியினைய மூன்று சின்னங்கள் வழியாக வரலாற்றாசிரியர்கள் குறிக்கின்றனர்.
  - சிலுவை - இத்துறவிகள் கிறிஸ்தவ விசுவாசத்தையும், நற்செய்தியின் விழுமியங்களையும் இம்மக்களுக்கு வழங்கி ஆன்மீக நிலையில் இவர்களை வளப்படுத்தியவர்கள்.
  - நூல் - இம்மக்களுக்கு எண்ணையும் எழுத்தையும் கற்றுக்கொடுத்ததுடன், கல்வி வழங்கி இவர்கள் வாழ்க்கையை மேம்படுத்தியவர்கள்.
  - ஏர் - நாடோடிகளாக அலைந்து திரிந்த மக்களை ஓரிடத்தில் தங்கி வாழ்வதற்கும், நிலத்தைப் பயிரிட்டு நாகரிகத்தைக் கற்றுக்கொள்ளவும் ஆவன செய்தவர்கள். (Alfred Lapple)

### 7.3.2 துறவற கிராமங்கள், ஏழ்மையின் முன்மாதிரிகை

- துறவற வாழ்வு என்பது உலகத்தாரிடமிருந்து பிரிந்து, இலௌகீக காரியங்களில் ஈடுபடுவதை மட்டுப்படுத்தி, மாறாகச் செபத்திலும், தியானத்திலும், பிற நல சமூகப்பணியிலும் ஈடுபட்டு கிறிஸ்துவின் போதனைகளை நிறைவாகக் கடைப்பிடித்து வாழும் நோக்குடன் தனித்தனியேயும், சிறு சிறு குழுவாகவும் வாழ்வதாகும்.

#### ஆரம்ப காலம்

- திருச்சபையின் ஆரம்பமுதல், கிறிஸ்துவின் படிப்பினைக்கு ஏற்ப, அநேக கிறிஸ்தவர்கள், ஆண், பெண் இருபாலாரும், கிறிஸ்துவை நெருக்கமாகப் பின்பற்றப் போவதாகவும், பரிசுத்த தனத்தை நிறைவாக வாழப்போவதாகவும் வாக்களித்து, தத்தம் குடும்பங்களில் இருந்து கொண்டே, திருமண வாழ்வைத் துறந்து, விரத்தத்துவத்தை அனுசரித்து, பலவிதமான ஒறுத்தல் முயற்சிகளை மேற்கொண்டு வாழ்ந்து வந்தார்கள்.
- ஏழ்மையிலும், செபத்திலும், தபத்திலும் தம் வாழ் நாட்களைச் செலவழித்து பிறநலப் பணிகளில் தம்மை அர்ப்பணித்தனர்.
- மூன்றாம் நூற்றாண்டிலே கிறிஸ்தவ துறவற வாழ்வில் முன்னேற்றங்கள் பல ஏற்பட்டன. வேதகலாபனைகள், பேதகங்கள், துர்மார்க்கம், சிலைவழிபாடு, கோத்திரங்களின் அச்சுறுத்தல்கள் நிலவிய சூழலில் தங்கள் குடும்பங்களில் இருந்து கொண்டே கிறிஸ்தவ உத்தம தனத்தைப் பிரமாணிக்கமாய் வாழுதல் கடினமென உணர்ந்த பலர் தங்கள் குடும்பங்களையும், வீடுகளையும், நகரங்களையும், கிராமங்களையும் விட்டுவிட்டு, எகிப்து, சீரியா போன்ற நாடுகளில் இருந்த வனாந்தரங்களுக்குச் சென்றனர்.
- அங்கு அவர்கள் சிறிய கொட்டில்கள், குடிசைகள், குகைகள் அமைத்து, தனித்தனியே ஏகாந்திகளாக ஏழ்மை, கற்பு எனும் புண்ணியங்களைக் கடைப்பிடித்து வாழ்ந்தனர். இவர்கள் செபத்திலும், தியானத்திலும், திருவிவிலிய வாசிப்பிலும், ஒறுத்தலிலும் தமது வாழ்வைக் கழித்தனர்.
- இவர்கள் ''வனத்துப் பிதாக்கள்'' என அழைக்கப்பட்டனர். இவர்களுள் தேப்ஸ் சின்னப்பர், எகிப்திய அந்தோனியார் என்பவர்கள் முக்கியமாணவர்கள். இவர்களது ஏழ்மை வாழ்வானது இறைபராமரிப்பில் இவர்கள் கொண்டிருந்த அளவிடமுடியாத எதிர்நோக்கை (நம்பிக்கை) வெளிப்படுத்துகிறது.
- இவர்களைத் தொடர்ந்து வந்த துறவிகளாகிய பக்கோமியுஸ், பசில் என்பவர்களின் முயற்சியினால் துறவற வாழ்வுச் சட்டங்கள் இயற்றப்பட்டு கிரமமான முறையில் வாழ்வதற்கு வழிகாட்டப்பட்டது.
- தேப்ஸ் சின்னப்பர் முதல் துறவியாகவும், பக்கோமியுஸ் முதல் துறவற சபையின் நிறுவனருமாகக் கருதப்படுகின்றனர்.
- கீழைத் தேயத்தில் உருவாகிய துறவற வாழ்வு புனித அத்தனாசியார் வழியாக மேலைத்தேய நாடுகளிலும் அறிமுகமானது.

- மேலைத்தேய நாடுகளில் துறவற வாழ்வை வளர்த்தவர்களில் அகுஸ்தினார், ஆசீர்வாதப்பர் ஆகியோர் முக்கியமாணவர்கள். இவர்களும் நிலபுலச் சொத்துக்களுக்கு அடிமையாகாமல் ஏழ்மை வாழ்வின் முக்கியத்துவத்தை துறவற வாழ்வின் மூலம் வலியுறுத்தினார்கள். ஏழ்மையில் வாழ்வதையும், உடல் உழைப்பையும், சொத்துக்களைப் பொதுவாகக் கொண்டு பகிர்வதையும் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தனர்.

**9ஆம், 10ஆம் நூற்றாண்டுகள் :**

- 9ஆம், 10ஆம் நூற்றாண்டுகளில் திருச்சபை முகம் கொடுத்த அச்சுறுத்தல்கள் துறவற மடங்களிலும் நிலவின.
- மடாதிபதிகள் அரசர்களுக்குப் பணிசெய்பவர்களாக மாறி பிரபுக்களாகும் நிலை உருவாகியது. இதனால் துறவற மடங்களில் நிலவிய ஒழுங்கமைப்பான வாழ்வில் தளர்ச்சி ஏற்பட்டது. துறவிகள் உலகியல் போக்கில் வாழத்தொடங்கினர். துறவற மடங்கள் அரசர்களின் கரங்களுக்கு கைமாறின.
- எனினும், துறவற வாழ்வின் உள்ளுயிர் மடிந்து விடவில்லை, ஒரு சிலர் தமது துறவற வாழ்வின் உள்ளுயிரைக் காத்து துறவற மடங்களில் புத்துணர்ச்சியும் புதுப்பித்தலும் உருவாகுவதற்கு அர்ப்பணிப்புடன் செயல்பட்டனர்.
- புனித ஆசீர்வாதப்பரின் ஒழுங்குகள் பிரமாணிக்கமாகக் கடைப்பிடிக்கப்படவேண்டுமெனும் நோக்கில் குளுனி, சிஸ்ரேஷியன் துறவற மடங்கள் முன்னோடிகளாகத் திகழ்ந்தன. ஆரம்ப கால ஏழ்மை, வேலை, செபம், திருவிவிலிய வாசிப்பு, பிறநலப் பணிகளில் பிரமாணிக்கமாக இருந்து துறவற வாழ்வின் விழுமியங்களுக்கும் புனிதத் தன்மைக்கும் புத்துயிர் வழங்கினர்.

**12ஆம், 13ஆம் நூற்றாண்டுகள் :**

- 12ஆம், 13ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் ஏற்பட்ட பொருளாதார சமூக மாற்றங்களுக்கு முகம்கொடுப்பதற்காக திருச்சபை தமது மேய்ப்புப்பணியை முறைப்படுத்த வேண்டியிருந்தது.
- சிலுவை யுத்தங்களின் பிரதிபலனாக சிறிய கிராமங்கள் வளர்ச்சியடைந்தன. இந் நகர மக்கள் தமது உரிமைகளுக்காக குரல் கொடுக்கத் தொடங்கினர். அதிக நிலபுலன்களுக்கும் சொத்துக்களுக்கும் உரிமையாளராக இருந்த ஆயர்களுக்கு எதிராகவும் எழுந்தனர்.
- ஆயர்களுக்கு உதவிய குருக்களையும் மக்கள் ஏற்றுக்கொள்ளாதபடியால் ஆன்மீகப் பணியாற்றுவதில் சிரமங்கள் ஏற்பட்டன. துறவற மடங்கள் நகருக்கு வெளியே இருந்தமையால் ஆன்மீக பணியாற்றுவதற்குரிய வசதிகள் இருக்கவில்லை.
- நற்செய்தி அறிவுப்புப்பணி மக்களை நேரிய வழியில் இட்டுச் செல்வது, மக்களுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்துவது ஆகியவற்றின் தேவையைத் திருச்சபை உணர்ந்தது. குருக்கள் உண்மையாகவே நற்செய்திக்கு சான்று பகர்பவர்களாக வாழவேண்டுமென்பதே மக்களின் எதிர்பார்ப்பாக இருந்தது. மக்களை அக்காலத்தில் நிலவிய பேதகங்களிலிருந்து பாதுகாத்து கத்தோலிக்க மறையைப் போதிப்பது திருச்சபையின் முக்கிய பணியாகவிருந்தது. (அல்பிஜென்சியன் பேதகம்).
- இக்காரணங்களால் டொமினிக்கன், பிரான்சிஸ்கன் இரவலர் சபைகள் உருவாகி திருச்சபையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தின.
- மேற்கூறப்பட்ட காரணங்களை விட, நிலபுலன்களை உரிமையாக்கிக் கொண்ட குருக்கள், துறவியர் இறைவனின் மீட்பைப் பெறமாட்டார்கள் என ஆர்னோல்ட் எனும் துறவியும் போதிக்கத் தொடங்கியமையும் இரவலர் சபைகள் ஆரம்பமாவதற்கு ஒரு காரணமாக இருந்தது எனும் கருத்தும் நிலவியது.
- இதற்குப் பதில் நடவடிக்கையாக ஜோன் வல்தேஸ் என்பவரால் ‘‘லியோன்ஸின் ஏழைகள்’’ எனும் கலை ஆரம்பிக்கப்பட்டது. 13ஆம் நூற்றாண்டின் முதல் பகுதியில்

இத்தாலி, பிரான்சு எனும் நாடுகளில் இச்சபை வேகமாகப் பரவியது. இப்புதிய கண்ணோட்டம் திருச்சபைக்குப் பெரிய சவாலாக இருந்தது. தத்தமது ஆன்மாவை மீட்பதை விட அடுத்தவரின் ஆன்மாவை மீட்பதே மேலானது என அவர்கள் போதித்தனர். அதாவது, தமக்காக வாழாமல் அடுத்தவருக்காக வாழ வேண்டுமென்பதே நோக்காக விருந்தது (Not to Live for Themselves Only, But to Serve others). இவர்கள் தியானத்திலும் பணியிலும் ஈடுபட்டனர். சாதாரண கிறிஸ்தவ மக்கள் மத்தியில் மறைபரப்புப் பணியே முக்கியாமானதாக இவர்கள் கருதினர். நகருக்குள் வாழ்ந்த ஆசீர்வாதப்பர், சிஸ்ரேசியன் துறவிகளை விட இவ் இரவலர் சபையினர் சாதாரண மக்களின் வரவேற்பை அதிகமாகப் பெற்றனர்.

## இரவலர் சபைகளின் ஏழ்மை வாழ்வு

- இச் சபையினர் அடிப்படையில் உண்மையாகவே அடுத்தவரின் உதவியில் தங்கி வாழ்ந்தவர்கள். தமது உணவு, உடை, தங்குமிடங்கள் ஆகியவற்றிற்கு அடுத்தவரின் உதவியை நாடினர். இவர்கள் நில புலன்களை உரிமையாக்கிக் கொள்ளவில்லை. தமக்கென பணம் வைத்திருக்கவில்லை.
- ஆன்மீகப் பணியில் முழுமையாக ஈடுபடுவதற்கு சுதந்திரமாக வாழவேண்டுமெனும் நோக்குடன் ஏழ்மை எனும் துறவற வார்த்தைப்பாட்டு அர்ப்பணத்தை மேற்கொண்டனர். இவர்கள் நற்செய்தி அறிவிப்பதற்கும் ஏழைகளுக்குப் பணி செய்வதற்கும் தமது வாழ்வை அர்ப்பணித்தனர். இவர்கள் மறையுரைகள் ஆற்றினர்; ஒப்புரவு அருளடையாளம் வழங்கினர்; நோயாளருக்குப் பணி செய்தனர்; கைவிடப்பட்டவர்களுக்கு உதவினர்; பிற நாடுகளுக்குச் சென்று பணியாற்றினர்.
- இவர்கள் ஒரு துறவற மடத்தில் மட்டும் தங்கியிருக்கும் வார்த்தைப்பாடு அளிப்பதில்லை (Stability).
- ‘‘உம் உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடும்’’ (மத்.19:21), ‘‘என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்’’ (மத்.16:24), ‘‘எதையும் எடுத்துக்கொண்டு போக வேண்டாம்’’ (லூக்.9:1-6) எனும் கிறிஸ்துவின் அறிவுரையை ஏற்று அதன்படி வாழ தம்மைத் அர்ப்பணித்தனர். அடுத்தவரில் தங்கிநின்று அடுத்தவருக்காக வாழ்வதையே தமது நோக்காகக் கொண்டனர்.

**குறிப்பு :** துறவற வாழ்வு, துறவற மடங்கள், இரவலர் சபைகள் பற்றிய விபரங்களை தேர்ச்சி 2.0 இல் காணலாம்.

## உத்தேச கற்பித்தல் செயற்பாடு

1. நாகரிகமயமாக்கலுக்கு துறவற சபைகள் ஆற்றிய பங்களிப்பை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பியுங்கள்.
2. ஆசீர்வாதப்பர் சபையால் பின்பற்றப்பட்டு வந்த ‘‘செபவாழ்வு’’ ‘உடலுழைப்பு’ என்பன பற்றி தேடியறிந்து ஆக்கம் ஒன்று வெளியிடுங்கள்.
3. ‘‘ஏழ்மையின் முன்மாதிரிகை’’ தொடர்பாக இரவலர் சபைகள் பின்பற்றி வந்த நடைமுறைகளை விளக்கி முன்வைப்புச் செய்யுங்கள்.

**உசாத்துணை நூல்கள்**


- ஞா. பிலேந்திரன், கிறிஸ்தவமும் நாகரிகங்களும், நல்லாயன் இல்லம், திருநெல்வேலி, 2008
- அருட்பணி சேவியர் இருதயராஜ், துறவற வாழ்வின் வரலாறு, அருட்கடல், சென்னை, 2008.
- Rev. George Johnson, The Story of the Church, Tan Book and Publishers, Illinois, 1980.
- John Laux, Church History, Tan Book and Publishers, Illinois, 1989

**தேர்ச்சி 8.0 :** உலக சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக திருச்சபையின் சமுதாய கலாச்சாரப் பங்கினை அறிந்து கிறிஸ்தவ கடமைகளை நிறைவேற்றுவர்.

**தேர்ச்சி மட்டம் 8.1 :** திருச்சபையின் கல்விப் பணியை ஆராய்ந்து தமது அறிவை விருத்தி செய்வர்.

**பாடவேளைகள் :** 16

**கற்றல் பேறுகள் :**

- கல்விச் செயற்பாடுகளுக்கு திருச்சபை காட்டும் அக்கறையை அறிந்து அதைப் பற்றிப் பேசுவர்.
- பல்கலைக்கழகங்களின் தோற்றத்திற்கு திருச்சபை வழங்கிய ஒத்துழைப்பைப் பற்றி எழுதுவர்.
- விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு ஒத்துழைத்த கிறிஸ்தவ விஞ்ஞானிகளைப் போல், தாம் வாழும் சமூகத்திற்கு நற்பணி புரிய முன்வருவர்.

## விடய உள்ளடக்க வழிகாட்டி

### 8.1.1 கல்விச் செயற்பாடுகளுக்கு திருச்சபையின் அர்ப்பணிப்பு

- உரோமப் பேரரசின் வீழ்ச்சியின் பின்னர் ஐரோப்பிய அறிவுத்துறையானது மிக மோசமான வகையிலே வீழ்ச்சிக்கண்டது. அதன் பின்னர் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களினாலும், படையெடுப்புகளினாலும் அமைதியற்ற ஒரு காலம் உருவாகியது. இப்பின்னணியில் அறிவுத்துறையில் ஈடுபாடு என்பது நடைமுறையில் காணப்படாதிருந்தது.
- ஆனால் கிறிஸ்தவ மறைக் குருக்கள் தமது மறை சம்பந்தப்பட்ட கல்வியை ஓரளவு மேற்கொண்டு வந்தனர். அதிலும் கிறிஸ்தவ மறைக் கோட்பாடுகளுக்கு முரணாகாத வகையில் இக்கல்வி அவர்களிடையே வளர்க்கப்பட்டது. ஏனைய நாகரிகங்களைப் போலவே இங்கும் மத குருக்கள் கல்வித்துறையில் ஈடுபட்டவர்களாகக் காணப்பட்டனர். இக்காலப் பகுதியில் கிறிஸ்தவ மக்களை நாகரிகப்படுத்தும் முயற்சியிலும், அவர்களுக்கு ஆட்சியமைப்புமுறை, ஒழுங்கான மறையைப் போதிப்பதிலும் ஈடுபட்டிருந்தனர்.
- பின் மத்திய காலத்தில் சிறப்பாகப் பதினோராம் நூற்றாண்டில் நிலைமைகள் மாற்றமடைந்ததைத் தொடர்ந்து சில முக்கிய அபிவிருத்திகள் ஏற்பட்டன. அவ்வகையில் எழுத்தறிவும், ஆரம்பக் கல்வியின் பரவலும், பல்கலைக்கழகங்களின் தோற்றமும், பரவலும், பண்டைய கிரேக்க உரோம அறிவும், இஸ்லாமிய அறிவும் ஐரோப்பாவுக்குள் கொண்டுவரப்பட்டமை, மேலைத்தேய அறிஞர்களால் சிந்தனைத்துறையில் ஏற்படுத்திய முன்னேற்றம் என்பன குறிப்பிடத்தக்கவை. இக்காலத்திற்குள்ளேயே உயர் இடைக்காலம் (High Middle Ages 1050 - 1300) என்று அழைக்கப்படும் காலம் இதுவாகும்.
- மன்னர் சாளிமேனின் ஆணையின்படி கி.பி. 800 அளவில் ஆரம்பக் கல்வித்துறை மட்டில் ஓர் அபிவிருத்தி ஏற்பட்டது. அவரது கட்டளைப்படி ஒவ்வொரு ஆலய, மடாலயப் பிரிவுக்குள் ஆரம்பப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். இவ்வகையில் மேற்கு ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளிலும் பாடசாலைகளும் நூல் நிலையங்களும் பல்வேறு மடாலயப் பிரிவுகளினால் அமைக்கப்பட்டன. ஆனால் வைகிங்குகளின் (Viking) படையெடுப்புக்களினால் ஆரம்பக்கல்வி மட்டில் ஏற்பட்ட வளர்ச்சி பெருமளவு தடைப்பட்டது. எனினும் ஆரம்பக் கல்வியானது சில மடாலயங்களிலும் கதீட்ரல் நகரங்களிலும் (பேராலய பகுதிகளில்) ஓரளவு வளர்ந்தது. ஆனால் கி.பி. 1050 வரை மேற்கு ஐரோப்பாவில் ஆரம்பக் கல்வியின் தரமும் வளர்ச்சியும் மிகக் குறைவாகவே காணப்பட்டது.

- இவ்வகையில் வளர்ச்சியடைந்து வந்த நகரங்களில் அமைந்திருந்த கதிட்ரல் பாடசாலைகள் ஐரோப்பியக் கல்வியின் தலைமைத்தளங்களாகின. இதற்கு திருத்தந்தை ஆதரவு வழங்கியதுடன் ஏழைகளும் செல்வந்தரும் பணம் செலுத்தாமல் இக் கல்வியைக் கற்க வாய்ப்பை அளித்தது. மாற்றமடைந்த பொருளாதார, நிர்வாகத் தேவைகளுக்கேற்ப நன்கு பயிற்றப்பட்ட எழுதுவினைஞர்களையும், நிர்வாகிகளையும் இக்கல்வி முறை வழங்கும் என்று திருத்தந்தை சரியாகவே தீர்மானித்திருந்தார்.
- ஆரம்பத்தில் கதீட்ரஸ் பாடசாலைகள் குருக்களுக்கு வேண்டிய அடிப்படைப் பயிற்சியை வழங்கும் நோக்கத்துடனே ஆரம்பிக்கப்பட்டன. அதற்கேற்பவே திருச்சபையின் கடமைகளை மேற்கொள்ளும் வகையில் பயிற்சியை அளிக்கும் ஒரு பாடத்திட்டமே இங்கு நடைமுறைப்படுத்தப்பட்டது.
- ஆனால் கி.பி. 1100இன் பின் மத நிறுவனங்களிலும், உலகியல் அரசாங்கங்களிலும் ஏற்பட்ட அபிவிருத்தியின் படி இங்கு பயன்படுத்தப்பட்ட பாடத்திட்டங்களில் பற்றாக்குறை காணப்பட்டது. முற் கூறப்பட்ட அபிவிருத்தியின் விளைவாக வெறுமனே சில செபங்களையும் நூல்களையும் வாசிப்பதிலும் பார்க்கக் கூடியளவு அறிவு கொண்ட பயிற்றப்பட்டவர்களுக்கான பாடத்திட்டத்தின் தேவை அதிகரித்துக் காணப்பட்டது.
- ஆட்சி முறை வலுபெறுவற்குச் சட்டம் முக்கியமான இடத்தைப் பெற்றமையால் அதனை நன்கு படிப்பதற்கு வேண்டிய சூழ்நிலை உருவாகியது. இதனால் ஆரம்பக் கல்வியின் தரத்திலும் முன்னேற்றம் ஏற்படலாயிற்று. அத்துடன் இலத்தின் மொழி அறிவிலும் இலக்கன அறிவிலும் சிசரோ (Cicero), வோ்ஜில் (Vergil) போன்றோரின் உரோம இலக்கியங்களைப் படிப்பதில் ஆர்வத்தை ஏற்படுத்தியது.
- இந்த அபிவிருத்தியின் விளைவாகத்தான் சில அறிஞர் ''பன்னிரண்டாம் நூற்றாண்டில் மறுமலர்ச்சி'' என இக்காலப்பகுதியை அழைப்பர்.
- மேற்கு ஐரோப்பாவில் இருந்த நகரப் பாடசாலைகள் கி.பி. 1200 வரை குருக்களுக்குப் பயிற்சி வளங்கும் அமைப்புக்களாகவே விளங்கின. அதன் பின்னர் அனேக மாணவர்கள் இப் பாடசாலைகளில் சமூக அந்தஸ்து நோக்கில் கல்வி கற்க ஆரம்பித்தனர். முக்கியமாகச் செல்வந்த வகுப்பினரின் பிள்ளைகள் இப் பாடசாலைகளில் கல்வி கற்கலாயினர். அத்துடன் வர்த்தக வகுப்பினர், அரசாங்கப் பத்திரங்களை எழுதுபவர், தத்தம் தொழில் முயற்சிகளில் முன்னேறும் நோக்கம் கொண்டோரும் கல்வி கற்பதில் ஆர்வம் காட்டினர்.
- காலப் போக்கில் மதத்துறையின் கட்டுப்பாட்டில் இருந்து விலகிப் பூரண சுதந்திரத்துடன் புதிய தேவைகளை முதன்மைப்படுத்தும் வகையில் பாடசாலைகள் தோற்றம் பெற்றன. இப் புதிய பாடசாலைகளில் மாணவர்கள் மட்டுமல்ல, ஆசியர்களும் மதத்துறை சாராதவர்களாக விளங்கினர். இங்கு இலத்தின் மொழியிலான போதனை குறைவடைந்து அவ்வப் பிராந்திய மொழிகளிலான போதனை இடம்பெறலாயிற்று.
- மேற்கு ஐரோப்பிய வரலாற்றில் பொது மக்களுக்கான கல்வியின் தோற்றம் அதிமுக்கிய அபிவிருத்தியை இரண்டு விடயங்கள் மட்டில் ஏற்படுத்தியது.
- **முதலாவது,** ஏறக்குறை ஆயிரம் ஆண்டுகளாகக் கல்வியில் திருச்சபை கொண்டிருந்த தனியுரிமை முதல் தடவையாக இழக்கப்படுகின்றது. கல்வியும், அதனால் ஏற்பட்ட மனப்பாங்கும் இப்போது கூடியளவிற்கு உலகியற் பண்புள்ளவையாக மாற்றப்பட்டன. பொது மக்கள் குருக்களைப் பற்றிக் கொண்டிருந்த கருத்துக்களை விமர்சனம் செய்ததுடன் மதிப்பிடவும் தொடங்கினர்.
- இவ்வகையில் கிறீஸ்தவ மதத்தின் கட்டுப்பாட்டுக்குள் அடக்கப்பட்டிருந்த மேலைத்தேயக் கலாசாரம் இப்பொழுது விடுதலை அடையலாயிற்று. அதனால் சுதந்திரமான சிந்தனைப் போக்குகள் வளர்ச்சியடைய வாய்ப்பு ஏற்பட்டது.
- **இரண்டாவது,** பொது மக்களுக்கான பாடசாலைகளின் தோற்றமும், பொது மக்களுக்குக் கல்வி வழங்கிய திருச்சபைப் பாடசாலைகளின் செயற்பாடும் பொது மக்களின் கல்வியைப் பாரிய அளவில் வளர்ச்சியடையச் செய்தன. கி.பி. 1340இல் புளோரன்ஸ் நகரக்

குடிமக்களுள் 40 வீதமானோர் வாசிக்கத் தெரிந்திருந்தனர் என்பதிலிருந்து இதன் வளர்ச்சியை ஓரளவுக்கு விளங்கிக்கொள்ளலாம். அவ்வாறே 15ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்கிலாந்து நாட்டின் மொத்தக் குடித்தொகையில் ஏறக்குறைய 40 வீதத்தினர் கல்வியறிவுள்ளவர்களாக விளங்கினர். கி.பி.1050 அளவில் கல்வியறிவு என்பது அனேகமாக முழுவதுமாக ஆலயத்திற்குள்ளே அடங்கிருந்தது. இது மேற்கு ஐரோப்பியா குடித்தொகையில் ஒரு வீதத்திற்கும் குறைவானதாகவே இருந்தது. இப்பின்னணியில் கல்வித்துறையில் ஏற்பட்ட புரட்சி ஐரோப்பாவின் ஏனைய துறைகளிலும் அபிவிருத்திக்கு வழி வகுத்தது.

### 8.1.2 பல்கலைக்கழகங்களின் ஆரம்பம்

- ஐரேப்பிய வரலாற்றில் உயர் இடைக்காலத்தில் ஏற்பட்ட கல்வி அபிவிருத்தியின் ஒரு விளைவாகத்தான் ஐரோப்பியப் பல்கலைக்கழகங்களின் தோற்றம் விளங்குகின்றது. ஆரம்பத்தில் சாதாரண கதீட்ரல் பாடசாலைகளினால் வழங்க முடியாதிருந்த உயர்கல்வியின் சிறப்புப் போதனைகளை வழங்கும் நிறுவனங்களாகவே பல்கலைக்கழகங்கள் காணப்பட்டன.
- ஆங்கிலத்தில் “University” என்று நாம் அழைப்பது “Universitas” என்ற இலத்தீன் மொழிச் சொல்லிருந்து பெறப்பட்டதாகும். அதன் கருத்தானது Corporation அல்லது Guild எனக் கூறப்படும் ஒரு சங்கம் அல்லது கூட்டு நிறுவனம் என்பதைக் குறிப்பதாகும். அநேகமான இடைக்காலப் பல்கலைக்கழகங்கள் தொழிற் சங்கங்களை ஒத்தனவாக, ஆசிரியர்களுக்குப் கற்பித்தல் சம்பந்தமான பயிற்சியை அளிக்கும் நோக்குக் கொண்டவையாகக் காணப்பட்டன. பொதுவாக இந்த நிறுவனங்கள் தாராளக் கலைகள் (A School of Liberal Arts) என்பனவற்றைப் போதிப்பனவாக, ஒன்று அல்லது பல பீடங்களைக் கொண்டவையாக, சிறப்பாகச் சட்டம், மருத்துவம், இறையியல் போன்ற பீடங்களை கொண்டவையாக அமைக்கப்பட்டிருந்தன.
- ஐரோப்பாவில் மிகப் பழமை வாய்ந்த கல்வி நிலையங்களாக இஸ்லாமியர் ஆட்சியில் ஸ்பானியாவில் ரொலிடோ, கோர்டோவா ஆகிய நகரங்களில் அமைக்கப்பட்ட நிறுவனங்கள் விளங்கின.
- இத்தாலியில் மிகப் பழைய பல்கலைக்கழகங்கள் பதினோராம், பன்னிரெண்டாம் நூற்றாண்டுகளில் வடிவம் பெற்றன. இவ்வகையில் மருத்துவக் கல்விக்கு முதன்மை இடம் கொடுத்த சலேர்னோவும் (Salerno) சட்டக் கல்விக்கு முதன்மை இடம் கொடுத்த பொலஞ்ஞாவும் (Bologna) சிறப்பைப் பெறுகின்றன.

### பொலஞ்ஞா பல்கலைக்கழகம்

- மேற்கு ஐரோப்பா நாடுகளின் முதல் பல்கலைக்கழகமாக இது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பதினோராம் நூற்றாண்டின் இறுதியில் இந்த பல்கலைக்கழகம் உருவாகத் தொடங்கியது. சட்டவியல், மொழி ஆற்றல் கொண்ட பட்டதாரிகள் உரோம சட்டத்திற்கு தம்மை அர்ப்பணிக்கத் தொடங்கிய காலம் இதன் ஆரம்ப கட்டமாகும்.
- பத்தொன்பதாம் நூற்றாண்டில் “Giosue Caducci” அவர்களின் தலைமையின் கீழ் இருந்த வரலாற்று ஆசிரியர்கள் இப் பல்கலைக்கழகம் 1088ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதாக கூறுகின்றனர்.
- 1364ல் இறையியலைக் கற்பித்தல் ஆரம்பமானது. 15ஆம் நூற்றாண்டளவில் கிரேக்க, எபிரேய மொழிகள் கற்பிக்க தொடங்கினர். 16ம் நூற்றாண்டில் இயற்கை விஞ்ஞானம் கற்பித்தனர்.
- மெய்யியலாளர் “Pietro Pompanazzi” என்பவர் இப்பல்கலைக்கழகத்தில் ‘‘இயற்கைச் சட்டத்தினை’’ கற்பிக்க ஊக்குவித்தார். இது மெய்யியலுக்கும் இறையியயல் பாரம்பரியத்துக்கும் தடையாக அமைந்தது.

- 18ம் நூற்றாண்டில் ஏற்பட்ட புரட்சியுடன் விஞ்ஞான, தொழில் நுட்ப அபிவிருத்திக்கு உரிய விடயங்களை இப் பல்கலைக்கழகம் அறிமுகப்படுத்தியது.
- உரோம திருச்சபை சட்டம், கிறிஸ்தவ துறவற மடங்களின் செயற்பாடுகள், சமூகப் பணிகள் ஆகியவற்றில் இப் பல்கலைக்கழகம் முன்னணி வகுத்தது. இறையியல் கற்பிப்பதில் ஆர்வம் காட்ட வில்லை.

**பரிஸ் பல்கலைக்கழகம்**

- அல்ப்ஸ் மலைக்கு வடக்கே மிகப் பழமைவாய்ந்ததும், மிக நீண்ட காலமாகத் தனித்துவம் பெற்ற பல்கலைக்கழகமாக விளங்குவது பரிஸ் (Paris) பல்கலைக்கழகமாகும்.
- இது நோட்றே டேம் (Notre Dame) பேராலயத்தைச் சேர்ந்த பல கதீட்ரல் பாடசாலைகளை இணைத்து தோற்றம் பெற்றது. பரிஸ் ஆயர் இதனைப் பல்கலைக்கழகமாகப் பிரகடனப்படுத்தியதுடன் அங்கு பல நிலையங்களும், பீடங்களும் உருவாக்கப்பட்டன.
- 13ஆம் நூற்றாண்டில் இப் பல்கலைக்கழகம் நான்கு பீடங்களாகப் பிரிக்கப்பட்டது. அவை, இறையியல் பீடம், மருத்துவ பீடம், சட்டப் பீடம், கலைப் பீடம் ஆகியன. கலைப்பீடத்தை மாணவர்களினதும் ஆசியர்களினதும் இனத்தை அடிப்படையாக கொண்டு மீண்டும் இரு பிரிவிகளாக பிரித்தனர். 13ஆம் நூற்றாண்டில் பரிஸ் பல்கலைக்கழகம் மெய்யியல், இறையியல் ஆகியவற்றில் முன்னணி வகுத்தது. இவ்விரண்டு விடயங்களையும் ஒன்றுக்கொன்று முரண்படாமல் இணைப்பது எப்படி என்பதை கண்டறிவது இதன் பொறுப்பாக இருந்தது. கிறீஸ்தவ இறையியல், கிரேக்க, இஸ்லாம் மெய்யியல் ஆகியன இங்கு கற்பிக்கப்பட்டதனால் மெய்யியல் உலகில் பெரிய புரட்சியை உருவாக்கியது.
- 13ஆம் நூற்றாண்டில் இப் பல்கழைக்கழகத்திற்கு 40 தனியார் பாடசாலைகள் இணைந்திருந்தன. இவை உலகியல், ஆன்மீக பாடசாலைகளாகும்.
- இக் கல்லூரகளில் (College) சோர்போன் (Sorbonne) கல்லூரி 1257ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த இறையியலாளரான றொபட் டீ சோர்போன் (Robert de Sorbonne) அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டது. இது இறையியல் கற்பிக்கும் மத்திய நிலையமாக பிரசித்தி பெற்றது. இறையியல் கற்கும் மாணவர்களுக்கு ஓர் விடுதியாகவே இதை நிர்வகித்தனர். இது ‘‘இறையியல் கற்கும் வறிய மாணவர்களின் குழுமம்’’ எனப் பெயரிடப்பட்டது (The Community of needy Theology Students).
- 13ஆம் நூற்றாண்டின் இறுதியில் இது ‘‘லா சோர்போன்’’ (La Sorbonne) என அழைக்கப்பட்டது. அடுத்த மூன்று வருடங்களுள் அது ஐரோப்பாவில் மறை சார்ந்த படிப்பினைகளைக் கற்பிப்பதற்கு உள்ள ஓர் இடமாக அறிமுகப்படுத்தப்பட்டது. விசேடமாக மறைக்கோட்பாடுகள் (Dogma) திருச்சபைச் சட்டம் (Canon Law) ஆகியவை முதலிடம் வகுத்தன.
- இலக்கிய பீடம், சட்டப் பீடம், மருத்துவ பீடம், விஞ்ஞானப் பீடம் ஆகியவற்றுடன் பிற்காலத்தில் இரத்துச் செய்யப்பட்ட இறையியல் பீடம் ஆகியன பின்னர் சோர்போனில் ஸ்தாபிக்கப்பட்டது. அதன் நிர்வாகிகள் பரிஸ் அகடமியினால் நியமிக்கப்பட்டனர். (சோர்போன் தற்போது பிரான்ஸில் பிரிக்கப்பட்ட 17 கல்வி மாவட்டங்களில் ஒன்றாகும்).

**ஒக்ஸ்பர்ட் பல்கலைக்கழகம்**

- ஒக்ஸ்பர்ட் பல்கழைக்கழகம் 872ஆம் ஆண்டு பெரிய அல்பட்டினால் உருவாக்கப்பட்டது. அல்பட் சந்தித்த துறவிகளுடனான கலந்துரையாடலின் பயனாக இப் பல்கலைக்கழகம் உருவானது. ஆனால் 12ஆம் நூற்றாண்டளவிலேயே இப் பல்கலைக்கழகம் வளர்ச்சியடையத் தொடங்கியது.

- பிரான்ஸில் வசித்த சகல மாணவர்களும் மீண்டும் வருமாறு ஆங்கிலேய அரசர் வழங்கிய கட்டளைக்கிணங்க அவர்கள் ஒக்ஸ்பர்ட் பல்கலைக் கழகத்திற்கு வந்தனர். Robert Grossetete (1175 - 1253) 1214ஆம் ஆண்டில் முதலாவது பல்கழைக்கழக வேந்தராக நியமிக்கப்பட்டார். அவ்வாறே 13ஆம் நூற்றாண்டளவில் முதலாவது கல்லூரி (கோலேஜ்) உருவாக்கப்பட்டது. இம் முதலாவது கல்லூரி (University College) 1249இல் ''டுர்ஹம் வில்லியம்'' (William of Durham) என்பவரால் உருவாக்கப்பட்டது.
- 1377இல் ஜோன் வயிக்லிப் (John Wycliffe) திருச்சபையின் படிப்பினைகளை விமர்சனம் செய்ததனால் அவரை ஒக்ஸ்பர்ட் பல்கழைக்கழகத்தை விட்டு வெளியேற்றினர்.
- 1264இல் ஜோன் டி பாலிஒல் (John de Balliol) என்பவரால் பாலிஒல் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது. அவர் டுர்ஹம் பிரதேச ஆயரை விமர்சித்ததால் அதற்கு பரிகாரச் செயலாக இக் கல்லூரியை கட்டியெழுப்பினார்.
- 1427ஆம் ஆண்டு லின்கன் ஆயரினால் (Bishop of Lincoln) கல்லூரி நிறுவப்பட்டது. அது ஆண்களுக்கு பயிற்சி வழங்குவதற்காக நிறுவப்பட்ட ஒன்றாகும். 1630ஆம் ஆண்டில் செப அறை நிறுவப்பட்டது.
- 1437இல் சகல ஆத்துமாக்கள் கல்லூரி நிறுவப்பட்டது. (All Souls College). அது சர்சில் பேராயரினால் ஸ்தாபிக்கப்பட்ட ஒன்றாகும். அது 5ஆம் ஹென்றி அரசனுக்கும், அஜின்கோட்டில் (Agin Court) இறந்த சகல ஆன்மாக்களுக்கும் அர்ப்பணிக்கப்பட்டது.
- 1448ஆம் ஆண்டு மெக்டலின் (Magdalen) கல்லூரி வின்செஸ்டர் நகர ஆயர் வாயின் ப்லேட் (waynflet) அவர்களால் நிறுவப்பட்டது. 1509இல் மணிக்கூட்டுக் கோபுரம் கட்டப்பட்டது.
- இடைக்காலத்தில் மாணவர்கள் விரிவுரைகள் மூலம் கல்வி கற்றதுடன், 1476இல் Caxton அச்சகம் இங்லாந்தில் அறிமுகப்படுத்திய பின் இந் நிலைமை மாறியது.
- ''கோப்பஸ் கிறிஸ்டி'' (Corpus Christi) கல்லூரி 1516இல் நிறுவப்பட்டதுடன் 1525இல் ''கிறயிஸ்ட் சர்ச்'' (Christ Church) கல்லூரி நிறுவப்பட்டது. கருதினால் வோல்சே (Cardinal Wolsey) அவர்களால் 1542இல் இக் கல்லூரியில் செப அறையானது ஒக்ஸ்பர்ட் பேராலயம் ஆனது (OXford Cathedral).
- 1444இல் ஐந்தாவது ஹென்றி அரசனின் இளைய சகோதரரான டியுக் அம்பிறே (Duke Humphrey) ஒக்ஸ்பாட்டில் நூலகம் ஒன்றினை நிறுவினார். பின்னர் சீர்திருத்தவாதிகளால் இந் நூலகம் உடைக்கப்பட்டு நூல் அனைத்தும் விற்கப்பட்டன. ஆனால் 1598இல் சேர் தோமஸ் போட்லி அவர்கள் (Sir Thomas Bodley) அதனை புனரைமைத்து 1603ஆம் ஆண்டில் திறந்து வைத்தார். போட்லி நூலகத்தை விஸ்தரிக்க நினைத்த போதிலும் 1613இல் அவர் இறந்து விட்டார். ஆனால் அவரது பணி தொடரப்பட்டு ''போட்லியன் நூலகம்'' என்னும் பெயரில் 1624இல் திறந்து வைக்கப்பட்டது.

## கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம்

- ஒக்ஸ்பர்ட் பல்கலைக்கழகத்தில் இருந்த "Town and Gown" பிரச்சினை கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தியது. 1209இல் நகர மக்களுக்கும் பல்கலைக் கழகத்திற்கும் இடையே ஏற்பட்ட பிரச்சினை மத்தியில் தப்பிய புலமைப் பரிசு பெற்றவர்களும் பட்டதாரிகளும் கேம்பிரிட்ஜிற்கு வந்தனர். 1226இல் கூட்டாகச் சேர்ந்த புலமைப்பரிசு பெற்றவர்கள் சாதாரண பாட நெறிகளைக் கற்க ஆரம்பித்ததுடன் தமக்குத் தலைமை வகுக்க ஓர் வேந்தரைத் தேர்ந்தெடுத்தனர். பல்கலைக்கழகத்தைக் கட்டியெழுப்ப முதலாவது ஹென்றி அரசனின் ஒத்துழைப்புக் கிடைத்தது. பிரபல ஆசிரியர் ஒருவரின் கீழ் கல்வி கற்கும் மாணவர் மாத்திரம் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் இருக்கலாம் என மூன்றாவது ஹென்றி அரசன் கட்டளையிட்டார். தர்க்கம், கணிதம், சங்கீதம், கேத்திர கணிதம், வானியல் போன்ற பாடங்கள் உட்பட பல பாட நெறிகள் நடாத்தப்பட்டதுடன் பல ஆசிரியர்கள் துறவிகளாக இருந்தனர்.

- பல மடாலயங்கள் பகிஷ்கரிக்கப்பட்டதன் விளைவாக, புகழ் பெற்ற கல்லூரிகள் உருவாகின. இம்மானுவெல் கல்லூரி டொமினிகன் துறவிகளால் பராமரிக்கப்பட்ட, அரசாங்க மயப்படுத்தப்பட்டு கட்டியெழுப்பப்பட்ட ஓர் கட்டிடமாகும்.
  - ஆன்மீகத்தில் இருந்து லௌகீகத்தை நோக்கிச் செல்வதை அவதானித்தது.
  - எட்டாம் ஹென்றி அரசன் கிரேக்க மொழி, எபிரேய மொழி, சிவில் சட்டம், இறைமை, பௌதீக விஞ்ஞானம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஓர் பேராசிரியராவர்.
- 1534ஆம் ஆண்டு நூல்களை அச்சிட அரசாங்கம் இப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி வழங்கியது. ஆனால் 17ஆம் நூற்றாண்டு வரை ஒழுங்காக இதன் பயனை அடையவில்லை. 1690ஆம் ஆண்டு வரை திருவிவிலியத்தை அச்சிடும் அதிகாரம் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சார்ந்து இருந்ததுடன் அங்கு அச்சிடப்பட்ட திருவிவிலியங்கள் ஒக்ஸ்பர்ட் பல்கலைக்கழகங்களுக்கும் வழங்கப்பட்டது.

**சலமன்கா பல்கலைக்கழகம்**
- சலமன்கா பல்கலைக்கழகம் ஸ்பானியா நாட்டில் உள்ள பழமையான பல்கலைக்கழகமாகும். இதை 1218இல் ஒன்பதாம் அல்பொன்ஸ் அரசன் ஸ்தாபித்தார். 1254இல் நான்காம் அலெக்சான்டர் திருத்தந்தையினால் உலகில் உள்ள பிரபல்யமான நான்கு பல்கலைக்கழகங்களுள் ஒன்றாக இப் பல்கலைக்கழகத்தை பிரகடனப்படுத்தினார். (ஒக்ஸ்பர்ட், பாரிஸ், பொலஞ்ஞா பல்கலைக்கழகங்களுடன்).
- 1254இல் அரசன் பல்கலைக்கழகத்தின் உரிமைகளை அதற்குப் பெற்றுக் கொடுத்தார். பாதுகாப்பாளர்களை நியமிப்பது, நிர்வாகம் ஆயரின் கீழ் இருப்பது, பீடாதிபதிகள், வேந்தர்களை நியமித்தல், பல்கலைக்கழகத்தை சீவில் நிர்வாகத்தில் இருந்து விடுவித்தல், பேராசிரியர்களுக்கு வேதனம் நிர்ணயித்தல் ஆகிய உரிமைகள் வழங்கப்பட்டன.
- 1830ஆம் ஆண்டு வரையுமே பீடத்தின் பெயர் கதீட்ரலில் இருந்த ஆயரின் பெயராகவே இருந்தது. 1584இல் 6,778 மாணவர்கள் இருந்ததோடு 1822 ஆகும் போது 412 ஆக் குறைந்தது.
- இடைக்காலம், நவீன காலம் ஆகிய காலங்களில் பல்கலைக்கழகத்திற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்வதற்கு திருத்தந்தையினதும் அரசினதும் அனுமதி தேவைப்பட்டது. இவ்வருமானம் மற்றும் ஏனைய நன்கொடைகளினால் பெற்ற வருமானங்களினால் ஐந்து பீடங்கள் மாத்திரமே இயங்க முடிந்தது. 1869-1904 காலத்தில் மருத்துவ பீடத்துக்கு அரச நிதி ஒதுக்கீடு கிடைத்தது.
- இன்று இப் பல்கழைக்கழகத்தில் 30000க்கும் அதிகமான மாணவர்கள் 250 பல பாட நெறிகளைக் கற்கின்றனர்.

## 8.1.3 விஞ்ஞான, தொழில் நுட்ப வளர்ச்சிக்கு கிறிஸ்தவ விஞ்ஞானிகளின் பங்களிப்பு

**முன்னுரை**
- நவீன உலகில் விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சிக்காக பல கிறிஸ்தவ விஞ்ஞானிகள் பங்களிப்பு வழங்கியுள்ளனர். அவ் விஞ்ஞானிகளின் திறமைகளுடாக இறைவனின் கரம் செயலாற்றியுள்ளதைக் காணலாம். திருச்சபையினூடாக உலகத்திற்கு விசேட பணிபுரிந்த சிலரைப் பற்றி ஆராய்வோம்.

### 8.1.3.1 அருட்பணி ரெயார்ட் டே சார்டேன் (Pierre Teilhard de Chardin) - 1881 - 1955
- உலகில் வாழும் மனிதனின் பரினாமத்தைப் பற்றிய வரலாற்றின் முழுமையான தத்துவத்தை விளக்கிய சிந்தனையாளர்களுள் அருட்தந்தை ரெயியாட் டே சர்டேன் முக்கிய இடத்தை வகுக்கின்றார்.

- உயிரற்ற (Inanimate) பொருட்களினால் ஆரம்பித்து உயிர் பெறுதலை கடந்து தற்போதைய மனித வளர்ச்சி மட்டுமல்ல எதிர் காலத்தை நோக்கிச் செல்லும் மானிட வளர்ச்சி பற்றி (Projection) எடுத்துக் காட்டும் பாரிய தத்துவத்தை அவர் உலகிற்கு அளித்தார்.

**அருட்பணி. சார்டேன்**

- இவர் இயேசு (Jesuit) சபையைச் சேர்ந்தவர். அருட் தந்தை சார்டேன் பூமியின் அமைப்பியல் (Geology) பற்றியும், புதைத்து கிடக்கும் புராதன காலத்து மிருகம் அல்லது தாவரம், இவற்றின் மிஞ்சிய பகுதிகள் பற்றிய ஆராய்ச்சிகளைச் செய்யும் ஓர் விஞ்ஞானியும், தத்துவ ஞானியும், கவிஞரும் ஆவார்.
- கி.பி. 1881 மே மாதம் 01ம் திகதி பிறந்த இவர், ''நோத்திர டாம்'' எனும் இயேசு சபையின் முன் பள்ளியில் கல்விக் கற்று 19ஆவது வயதில் இயேசு சபையில் சேர்ந்தார்.
- கி.பி. 1911இல் குருத்துவம் பெறுவதற்கு முன்னரே இவர் கல்லினுள் படிந்த படிவங்கள் பற்றியும் மானிட விஞ்ஞானம் பற்றியும் கற்பதற்காக தமது நேரத்தைச் செலவிட்டார்.
- மனிதனின் முற்கால அமைப்பை ஆராயும் ஒருவராக சீனா, ஆபிரிக்கா போன்ற நாடுகளின் அகழ்வாராய்ச்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினார். மிக முக்கியமான மானிட விஞ்ஞான கண்டு பிடிப்புகளின் ஒன்றான ''சினன்திரோபுஸ் பெகின்னேன்ஸிஸ்'' (Sinanthropus Pekinnensis) எனும் ''பீகிங்'' மனித வர்க்கத்தின் மண்டையோட்டைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் இவர் ஈடுப்பட்டுள்ளார்.

**அருட்பணி. சார்டேனின் தத்துவம்**

- அகழ்வாராய்ச்சிகளினால் கண்டெடுக்கப்பட்ட எலும்புகளை ஆராய்ச்சி செய்த பின் மனிதன் கீழ் மட்டத்தில் இருந்து மேல் மட்டத்திற்கு பரிணாமமாகும் ஒருவன் எனும் டார்வினின் கருத்தை ஏற்றுக்கொண்டார். ஆனால் டார்வினைப் போல் பரிணாமம் உள்ளது எனும் இறுதி முடிவிலே மாத்திரம் நிற்காமல், பரிணாமம் எவ்வாற நடக்கின்றது, உயிரற்ற பொருட்களின் பரிணாமத்தின் நோக்கமென்ன, அதன் முடிவு எங்கே எனும் கேள்விகளையும் அவர் எழுப்பினார்.
- சார்டேன் கண்டறிந்தவாறு மனித குலத்தின் பரிணாமத்திற்கு விஷேட திட்டமொன்றும், நோக்கமும் உள்ளதோடு அப் பரிணாமம் உயிர் பெறுவது, வல்லமை ஒன்றினாலேயே. அவ் வல்லமை அன்பு (Love) எனும் ''அகபே அன்பு'' ஆகும். அன்பின் வல்லமைக்கு முழு உலகத்தின் சகல வல்லமையையும் ஒன்றிணைக்கும் திறன் உள்ளது. மனிதனை மனிதனுடன் இணைப்பதும் மனிதனை புவியுடன் இணைப்பதும் அவை எல்லாம் இணைவதனூடாக இறைவன் அல்லது தெய்வீக வல்லமையுடன் சேர்கின்றன என்றும் அவர் நம்பினார்.
- இப் பரிணாமத்தின் உச்சக் கட்டத்தை அவர் கண்டார். கிரேக்க எழுத்துச் சுவடியின் இறுதி எழுத்தை உபயோகித்து ''ஓமேகா'' கட்டமாக (Omega Point) அதனை எடுத்துக்காட்டினார். ''ஓமேகா'' கட்டத்தில் மனிதனுக்கு கிடைப்பது மனித குலத்தின் மிகவும் நிறைவு பெற்றவரான (பூரணத்துவம்) இயேசுகிறிஸ்துவின் இயல்பு. முழு மனிதக்குலமும் பரிணாமம் பெற்று அக்கட்டத்தை அடையவே செல்கின்றது என்று அவர் கூறினார். இறைவனால் ஆரம்பிக்கப்பட்ட பிரபஞ்சம் (Cosmos) அதனுடன் மனிதனான இறை - மனித இயேசுக்கிறிஸ்துவினுள் முழுமை பெற்று மீண்டும் அவரிடம் வந்து சேரும். பிரபஞ்சத்தின் ஒரு துளிக்கு சமமாக்கும் அளவிற்கு இறைவன் அதனுள் இயங்குவதால் அவர் அவ்வுலக ஒருமைப்பாட்டுக்கும் பூரணத்துவத்துக்கும் இட்டுச் செல்வதாக அருட்பணி சார்டேன் முன்மொழிகிறார்.
- சார்டேனின் சிந்தனை மிக முக்கியமானது. ஏனெனின் அவர் ஓர் கிறிஸ்தவனும், மிக உயர்ந்த நிலையில் இருந்த ஓர் விஞ்ஞானியும் ஆவார். சமயமும், விஞ்ஞானமும்

வேறுபட்டதாக அவர் ஒருபோதும் நினைக்கவில்லை. பழமை வாய்ந்த உயிரினங்களின் எலும்புகள் பற்றிய ஆராய்ச்சியானது நிறைவு பெறுவது உயிருள்ள இயேசுக்கிறிஸ்துவை அவற்றினூடாக அனுபவிக்க முடியுமென்பதால் என்று அவர் எப்பொழுதும் கூறுவார்.

- அருட்பணி சார்டேன் 1938 - 1940 ஆம் ஆண்டுகளுக்கு இடையே எழுதிய ‘‘மனிதனின் தோற்றம்’’ (Phenomenon of Man) எனும் நூலை இரண்டாம் உலக யுத்தத்தின் முதற் காலக் கட்டத்திவேயே எழுதி உள்ளார். ‘‘பீகிங்’ நகரில் வைத்தே எழுதினார்.
- தேசீய விஞ்ஞான ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளராக நியமிக்கப்படுதல், பிரபல்யமான பிரான்ஸ் விஞ்ஞான நிலையத்தின் அங்கத்துவத்தை அவருக்கு வழங்குதல் ஆகியவை அவர் பெற்ற கௌரவ விருதுகளுள் இரண்டாகும். இவர் முன்மொழிந்த இறையியல் கருத்துக்களுக்கு அப்போது பரிஸிலும் உரோமாபுரியிலும் இருந்த திருச்சபைத் தலைவர்களின் எதிர்ப்பு வந்தது.
- 1955 சித்திரை மாதம் 30 ஆம் திகதி பாஸ்கா ஞாயிறன்று அவர் இறைபதமடைந்தார்.

### 8.1.3.2 அலெக்சாண்டர் கிறஹம் பெல் (1847-1922)

- அலெக்சாண்டர் கிறஹம் பெல் கி.பி.1847இல் ஸ்கொட்லாந்தில் எடின்பரோ நகரில் கிறீஸ்தவனாகப் பிறந்தார்.
- முற்பள்ளிக் கல்வியின் பின் எடின்பரோ பல்கலைக்கழகத்திலும். இலண்டன் பல்கலைக்கழகத்திலும் பட்டம் பெற்ற இவர் கி.பி. 1876 பங்குனி 10ஆம் திகதி தொலைபேசியினால் முதல் செய்தியை வழங்கி தொலைபேசியை இவ்வுலகிற்கு வழங்கி பெரும் சேவையாற்றிய ஓர் விஞ்ஞானியாவார்.
- அது மட்டுமல்ல இவர் காது கேளாத, கண் பார்வையற்ற பிள்ளைகளின் நிலைமையை உயர்த்தக்கூடிய ஆவணங்களைத் தயாரித்தார். அவ்வாறான பிள்ளைகளுக்கு கற்பிக்க ஆசிரியர்களை பயிற்றுவிக்கவும் அதற்காக விசேட பாடநெறிகளை தயாரிக்கவும் அவர் முன்னோடியாகத் திகழ்ந்தார். பொஸ்டனில் செவிப்புலன் அற்றோருக்காக ஓர் பாடசாலையை நிறுவினார்.
- பெரும் மனித நேயம் கொண்டவரான கிறஹம் பெல் வரலாற்றை மாற்றிய கீர்த்தி, கௌவரம், பரிசுகள், சின்னங்கள் பெற்ற பிரபல்யமான ஓர் பேராசியரானதுடன் கிறீஸ்தவனாக ஏழை, அங்கவீன, துன்பப்படும் மக்களைக் கருணையுடன் நோக்கியதுடன் அவர்களின் நன்மைக்காக எப்போதும் உண்மையாகவே முயற்சி செய்த ஓர் பெரும் தலைவராவார்.
- கி.பி. 1922 ஆவணி மாதம் 02ஆம் திகதி இறைபதமடைந்தார்.

### 8.1.3.3 சேர் ஐசக் நியுட்டன் (1643 - 1727)

- இங்கிலாந்தில் வுல்ஸ்தொப் எனும் கிராமத்தில் பிறந்த ஐசக் நியுட்டன் ஓர் பௌதீக விஞ்ஞானியாவார். கணித வல்லுநராவார், வான சாஸ்திரியும், நவீன யுகத்தின் தத்துவ ஞானியும், இறையியலாளரும் ஆவார். உலோக வகைகள் பற்றி நல்லறிவு பெற்ற அவர் ஓர் விஞ்ஞானியாக உலகப் புகழ் பெற்றார்.
- திருவிவிலியம், விஞ்ஞானம் பற்றிய கற்கை நெறிகளை இவர் விரும்பினார். அவற்றைப் பற்றி பல நூல்களை இவர் எழுதி உள்ளார்.
- விஞ்ஞானத்திற்கு புறம்பான ஓர் இறைவனைப் பற்றி இவர் நம்பியதுடன் ஈர்ப்பு விசை பற்றி இவரால் கண்டுபிடிக்கப்பட்டது. அவ்வாறே சலனம் (Motion) பற்றிய மூன்று நியமங்களை இவர் முன் வைத்தார்.
- நிறங்களை அறிதல், சூரிய மண்டலத்தைப் பற்றிய தகவல் வெளியிடல், பிரதிபிம்பம் காட்டும் தொலைநோக்குக் கருவி ஒன்றை நிறுவுதல், கடலில் ஏற்படும் ஏற்றம் இறக்கம் பற்றி பல தகவல்களை இவர் அறிந்து உலகிற்கு வெளிப்படுத்தினார்.
- கிறிஸ்தவ விசுவாசத்தினுள் இங்கிலாந்து சபை அங்கத்துவராக பிறந்த இவர் 30

வருடங்கள் ஆகும் போது விசுவாசத்தைப் பற்றிய பிரச்சினைக்கு முகங்கொடுத்தார். திருவிவிலியத்தில் மறைந்துள்ள கருத்துக்களை அறிய முயற்சித்தார்.

- 1690 ற்கு பின் இவர் திருவிவிலியத்தைப் பற்றி சிறு விளக்கம் எழுதினார். திருவிவிலியத்தில் உள்ளவற்றை விஞ்ஞான தரவுகளுடாக தேட முயற்சித்தார்.

### 8.1.3.4 அல்பர்ட் அயின்ஸ்டயின் (1879-1955)

- ஜெர்மனியில் உல்ம் (Ulm) நகரில் பிறந்த அயின்ஸ்டயின் யூத இனத்தைச் சார்ந்த ஓர் கத்தோலிக்கன்.
- சிறு வயதில் திறமையற்ற மாணவனாக இருந்த அயின்ஸ்டயின் உலகில் பிரசித்திப்பெற்ற பேராசிரியரானது இறைவன் அவருக்களித்த வல்லமையினாலாகும்.
- அயின்ஸ்டயின் என்ற விஞ்ஞானி கண்டறிந்த காலம், இடம், பொதுத் தொடர்பு தத்துவத்தை முன் வைத்ததுடன் மிக பிரசித்தி பெற்ற இவர் ஆகாயம், பூமி, உலகம் பற்றி இன்னும் பலவற்றை அறிய முற்பட்டார். மின்சாரம், காந்த சக்தி, ஈர்ப்புச் சக்தி ஆகியன ஒரே மூலகாரணத்தினால் உருவாகுகின்றன என்று கூறினார்.
- கி.பி. 1922இல் அவருக்கு பௌதீக விஞ்ஞானம் பற்றிய நோபல் பரிசு கிடைத்தது. சகல சக்திகளுக்கும் எதிர்ச் சக்தி உள்ளதென்று இவர் கூறினாலும் அதனை கண்டறிய ஓர் தரவு தேட முடியாமல் விவாதித்தார்.

### 8.1.3.5 அலெக்சான்டர் பிலெமின் (1881-1955)

- 1881 ஆவணி 6ஆம் திகதி ஸ்கொட்லாந்தில் அயேஷர் நகரில் லொஜ்பீல்ட் எனும் ஊரில் ஏழை குடும்பத்தில் பிறந்த பிலேமின் ஓர் கிறிஸ்தவராவார்.
- பொருளாதார பிரச்சினைகளால் துன்பப்பட்ட இவர் சிறு வயதில் இலண்டனுக்குச் சென்று அங்கு எழுதுனர் பதவியைப் பெற்றுச் சேமித்த பணத்தினால் இலண்டனில் புனித மேரி வைத்தியசாலையுடன் இணைந்த மருத்துவ பல்கலைக்கழகத்தில் இணைந்து 28வது வயதில் சத்திர சிகிச்சை வைத்திய நிபுணரானார்.
- பென்சிலீன் மருந்தை கண்டுபிடித்த இவர் 1945ல் அதற்கான நோபள் பரிசினைப் பெற்றார்.

**உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

1. பேராலயப் பாடசாலைகள் பற்றிக் கலந்துரையாடுங்கள். துறவற சபைகளின் கல்வி முறை பற்றிய விடயங்களை ஆராய்வதற்கு மாணவர்களை ஈடுபடுத்துங்கள்.
2. பொலஞ்ஞு, பரீஸ், ஒக்ஸ்பட், கேம்ரிஜ், சலமன்கா ஆகிய பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக்கப்பட்ட விதத்தினை மாணவர்களோடு கலந்துரையாடுங்கள்.
3. அருட்பணி ரெயார்ட் டே சார்டேன் குறிப்பிட்ட ''ஓமேகா'' கூற்றைப் பற்றி கலந்துரையாடுக.
4. மின்சார விளக்கில் இருந்து விண்வெளி வரை கண்டு பிடிப்புகளுக்கு ஒத்துழைத்த விஞ்ஞானிகள் பலர் கிறிஸ்தவர்களாவர். அவர்களுடாக இறைவனின் மகிமை பறைசாற்றப்படுகின்றது என்பதை உமது நண்பனுக்கு புரிய வைக்க நீங்கள் முன்வைக்கும் ஐந்து கருத்துக்களை தருக. இவர்கள் நாகரிக வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்கினர் என்பதை ஆராய்க.

**உசாத்துணை நூல்கள் :**


- www. salamanca - university.org/salamanca-university.html
- www. liv.ac.uk/history
- uk.eucarta. msn.com/encyclopedia 761572850 /paris - universites of . html.
- www.eug.unibo.it/Portale Eu/university Our History / default. html.

**தேர்ச்சி** **8.0 :** உலக சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக திருச்சபையின் சமுதாய கலாசாரப் பங்கினை அறிந்து கிறிஸ்தவ கடமைகளை நிறைவேற்றுவர்.

**தேர்ச்சி மட்டம்** **8.2 :** புதிய சிந்தனைக்கு வழிவகுத்த சிந்தனையாளர்களை அறிந்து கொள்வர்.

**பாடவேளைகள்** **:** 08

**கற்றல் பேறுகள்** **:**

- புனித அகுஸ்தீனின் இறையியல் சிந்தனைகளை கற்றறிவர்.
- புனித அகுஸ்தீன் எழுதிய வாழ்க்கை அறிக்கை அல்லது தன்னிலை ஏற்பு(Confessions) எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள அவரது வாழ்க்கைக் குறிப்புகளின் அடிப்படையில் தமது வாழ்வை அமைக்க முன்வருவர்.
- 13ஆம் நூற்றாண்டின் சிந்தனைகளை புனித தோமஸ் அக்குவினாஸ் தமது இறையியல் சிந்தனைக்குப் பயன்படுத்திய முறையைக் ஆராய்வர்.
- புனித அகுஸ்தீன், புனித தோமஸ் அக்குவினாஸ் என்பவர்களின் சிந்தனையை ஒப்புநோக்குவதற்கு செயற்படுவர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

## 8.2.1 புனித அகுஸ்தீன் (St. Augustine of Hippo) - 354 - 430

- இலத்தீன் திருச்சபைத் தந்தையர்களில் புனித அகுஸ்தீன் மிகச் சிறப்பானவர்.
- பற்றீஷியன், புனித மொனிக்கா தம்பதியினருக்கு வட ஆபிரிக்காவின் தகாஸ்தே (Tagaste) எனும் ஊரில் 354 ஆம் ஆண்டு கார்த்திகை 13ஆம் திகதி பிறந்தார்.
- உரோமைப் பேரரசனின் ஆட்சிக் காலத்தில் அகுஸ்தீன் வாழ்ந்தார். இக்காலத்தில் கோத், விசிகோத், வன்டல் எனும் கோத்திரங்கள் உரோமையை தாக்கினர்.
- கி.பி. 410 ஆகஸ்ட் 24ஆம் திகதி விசிகோத் எனும் கோத்திரத்தின் தலைவனாகிய அலறிக் என்பவன் உரோமையைக் கைப்பற்றி தனது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தான்.
- புனித அகுஸ்தீன் தமது ஆரம்பக் கல்வியை தகாஸ்தே எனும் கிராமத்தில் பயின்று தமது இரண்டாம் கட்டப் படிப்பை மதவுறா எனும் நகரில் முடித்தார். அவரது தந்தையின் பொருளாதார வறுமையால் கார்த்தேஜ் பல்கலைக்கழகத்திற்குச் செல்ல முடியவில்லை. உரோமைப் பேரரசில் ஆபிரிக்காவின் ஒரேயொரு பல்கலைக்கழகமாக இருந்தது கார்த்தேஜ் பல்கழைக்கழகமாகும்.
- தமது 16ஆவது வயது வரை தகாஸ்தேயில் தமது வாழ்க்கையை வீணாகச் செலவழித்தார்.
- கி.பி. 370ஆம் ஆண்டில், கார்த்தேஜ் பல்கலைக்கழகத்தில் இணைந்து சட்டப் பட்டப்படிப்பை மேற்கொண்டார். இக்காலத்தில் உலகியல் ஆசாபாசங்களுக்கு அடிமையானார். இரு ஆண்டுகளின் பின் ஒரு பெண்ணுடன் கொண்டிருந்த முறையற்ற உறவினால் ஒரு மகனுக்குத் தந்தையானார்.
- இவ்வுறவு ஏறக்குறைய 14 ஆண்டுகள் நீடித்தது. மகனின் பெயர் : அடெயோடாரஸ். அதன் அர்த்தம் இறைவனால் கொடுக்கப்பட்டவர் என்பதாகும்.
- இக்கால கட்டத்தில் சிசேறோ எழுதிய ‘‘ஹொரேன்சியுஸ்’’ எனும் நூலைப் படித்தார். மெய்யியல் அறிவினால் பெறப்படும் மகிழ்ச்சியைப் பற்றி இந்நூல் விளக்குகிறது. இந்நூலின் விளக்கங்களினாலும், ஞானத்தின் அழியாத் தன்மையாலும் கவரப்பட்டவராக

உண்மை ஞானத்தைப் பெற்று தாம் அடிமையாகவிருந்த சுகபோக, ஆசாபாச வாழ்விலிருந்து விடுதலை அடைய விரும்பினார். இதுவே இவரது மனமாற்றத்தின் முதல் படியாகும்.

- ஆனால் அவரது மனமாற்றம் மிகத் தொலைவில் இருந்தது. ஏனெனில், கிறிஸ்து போதித்த உண்மைகளை விட மானேஸ் என்பவர் போதித்த உண்மைகள் மேலானவை என நம்பி மனிக்கேய வாதத்தைப் பின்பற்றி உண்மை ஞானத்தை அடைய முயற்சி செய்தார். மனிதனுக்குள் இருக்கும் இருண்ட சக்தியே அவனைப் பாவம் செய்யத் தூண்டுகிறது எனவும், மனிதன் தனது பாவத்திற்குப் பொறுப்பானவன் அல்ல எனவும் இவ்வாதம் கற்பித்தது. புனித அகுஸ்தீன் தனது பாவ வாழ்க்கைக்குத் தகுந்த விளக்கத்தை மனிக்கேய வாதத்தில் பெற முடியும் எனக் கருதி அதைப் பின்பற்றினார்.
- (மனிக்கேய பேதகம் பற்றிய குறிப்பு தேர்ச்சி மட்டம் 1:1இல் காணப்படுகின்றது.)
- புனித அகுஸ்தீன் ஒன்பது ஆண்டுகள் இக்கொள்கையைப் பின்பற்றினார்.
- கார்தேஜில் தமது கல்வியை முடித்தபின் மிக ஒளிமயமான காலத்தை ஆரம்பித்தார். முதலில் தகாஸ்தேயில் இலக்கியம் கற்பிப்பவராகவும், பின்னர் கார்த்தேஜிஸ் இளம் வழக்கறிஞர்களின் பயிற்சியில் தர்க்கவாதத்தைக் கற்பிப்பவராகவும் நியமனம் பெற்றார்.
- எனினும் அவரது தேடலில் முழுமையான விடையைக் கண்டுபிடிக்கவில்லை. தாம் ஏற்றுக்கொண்ட மணிக்கேய வாதத்தில் தாம் தேடிய உண்மையை அடைய முடியாதவராகவும், தமது தேடல்களுக்கு தகுந்த பதிலைக் காண முடியதவராகவும் மிகவும் குழம்பிய நிலையில் மனிக்கேய வாதத்தைக் கைவிடத் தீர்மானித்தார்.
- இந்நிலையில் 383 ஆம் ஆண்டு கார்த்தேஜிலிருந்து இரகசியமாக உரோமைக்குச் சென்று வாழத் தொடங்கினார். ஆரம்பத்தில் தகுந்த வருமானத்தைப் பெறமுடியாத நிலையில் பதித மத உரோமை அதிகாரியான சிம்மாக்குஸ் என்பவரால் மிலானில் உள்ள பாடசாலையில் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார்.
- இங்கு தமது சிந்தனையில், வாழ்க்கையில் மிக இருண்ட காலத்தை அனுபவிக்கும் வேளையில் உண்மையை அடைய முடியாத நிலையில் இருந்தார். மனிக்கேய வாதம் அவரைக் கைவிட்டது; திருவிவிலியம் அவருக்கு மூடப்பட்ட நூலாக இருந்தது; கத்தோலிக்க திருச்சபையின் அதிகாரத்திற்குப் பணிய அவரது ஆணவம் இடமளிக்கவில்லை.
- குழம்பிய நிலையில் இருந்த புனித அகுஸ்தீன் பிளேட்டோவின் மெய்யியல் சிந்தனையை அறியத் தொடங்கினார். இறைவனைப் பற்றியும் மனிதனின் இறைத் தேடலைப் பற்றியும் அறிந்தார். உண்மையாகவும், நன்மைத்தனமாகவும், அனைத்தையும் படைத்தவராகவும், இருப்பவராகவும் இறைவனை அறிந்து, அவரைப் பிரதிபலித்து, அவரில் மகிழ்வு காண்பதே மெய்யியலின் நோக்கமென்ற உண்மையைத் தெளிவாக அறிந்தார். உண்மை அனைத்தும் பரம்பொருளே என நம்பினார்.
- பிளேட்டோவின் மெய்யிலறிவானது புனித அகுஸ்தீனை மேலுமொரு நிலைக்கு இட்டுச் சென்றது. முன்மாதிரிகையான ஆள்தன்மையும் ஆன்மீக அதிகாரமும் மெய்யியலில் குறைவாயுள்ளதை உணர்ந்து அவற்றை கிறிஸ்துவிலும், கத்தோலிக்க திருச்சபையிலும் முறையே கண்டுகொண்டார்.
- மிலானில் ஆயராக இருந்த புனித அம்புரோசை அணுகி திருச்சபையின் மறைக்கோட்பாடுகளையும் திருவிவிலிய விளக்கங்களையும் தெளிவாக கற்றார். இதனால் பிளேட்டோனிசத்தைப் கைவிட்டு தூய பவுலின் திருமுகங்களைப் படித்து கத்தோலிக்க திருச்சபையில் திருமுழுக்குப் பெறுவதற்கான ஆயத்தங்களைச் செய்தார். 387ஆம் ஆண்டு பாஸ்காப் பெருவிழாவின் போது புனித அம்புரோசினால் திருமுழுக்குப் பெற்றார்.
- புனித அகுஸ்தீனுடைய மனமாற்றத்திற்காக அவரது தாயார், புனித மொனிக்கா, அயராது அழுது மன்றாடி வந்தார். அவரது மன்றாட்டின் பலன் புனித அகுஸ்தீனுடைய திருமுழுக்கில் நிறைவுகண்டது.
- 388ஆம் ஆண்டில் புனித அகுஸ்தீன் தகாஸ்தேக்குத் திரும்பினார். அங்கு தமது

நண்பர்கள் சிலருடன் மடவாச வாழ்வை ஆரம்பித்து சொத்துக்களைப் பொதுவாகக் கொண்டு, தேவையிலிருப்பவர்களுடன் பகிர்ந்து கொண்டனர். உபவாசத்திலும், செபத்திலும், திருவிவிலியத்தைக் கற்பதிலும் தமது வாழ்வை அமைத்துக் கொண்டனர்.

- 391ஆம் ஆண்டில் உரோமைக்குச் சென்றபோது குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். தகாஸ்தேயின் ஆயராகிய வலேரியுஸ் வழங்கிய தோட்டத்தில் ஒரு கல்வியகத்தை, அதாவது குருமடத்தை அமைக்குமாறு புனித அகுஸ்தீனைக் கேட்டுக் கொண்டார்.
- இக்காலத்தில் பேதகங்களுக்கு எதிராக, குறிப்பாக மனிக்கேய பேதகத்திற்கு எதிராக புனித அகுஸ்தீன் கத்தோலிக்க விசுவாசத்தைப் பாதுகாக்க, பரப்ப தமது போதனையாலும், எழுத்தாக்கங்களாலும் தம்மை அர்ப்பணித்தார்.
- 395 ஆம் ஆண்டில் ஹிப்போ நகரின் ஆயரானார். தமது 35ஆண்டு ஆயத்துவப் பணிக்காலத்தில் புனித அகுஸ்தீன் ஆபிரிக்கத் திருச்சபையின் பணிகளில் முன்னிலை வகித்தது மட்டுமல்ல, முழுத் திருச்சபையிலும் முக்கியமானவராகத் திகழ்ந்தார்.
- இவரது ஆயத்துவப் பணியின் எழுத்தாக்கங்கள் எல்லாம் அக்காலத்தில் நிலவிய பேதகங்களுக்கும், பிரிவினைவாதங்களுக்கும், எதிரானவையாக அமைந்தன. இவற்றில் மூன்று பேதகங்கள் சிறப்பிடத்தைப் பெறுகின்றன.
  1. மனிக்கேயப் பேதகம்
  2. தொனாத்தேய பேதகம்
  3. பெலாஜேயப் பேதகம்
- இறையருளின் வல்லமையைப் பற்றி அவரது படிப்பினைகளாலும், கட்டுரைகளாலும் அவர் ''இறையருளின் மறைவல்லுநர்'' (Doctor of Grace) என அழைக்கப்படுகிறார்.

**புனித அகுஸ்தீனின் ஆக்கங்கள்**

- புனித அகுஸ்தீன் 113 நூல்களையும் 500 மறையுரைகளையும், 218 திருமுகங்களையும் எழுதியுள்ளார்.

**இவற்றில் சிறப்பானவை**

1. **Confessions of St. Augustine** (வாழ்க்கை அறிக்கை / தன்னிலை ஏற்பு)

- தம் முன்னைய பாவ வாழ்க்கையையும், அத்தீய வாழ்விலிருந்து தாம் மனந்திரும்பி தூய வாழ்வை மேற்கொண்ட பல்வேறு நிலைகளையும் பாங்குடன் எடுத்துக்கூறி தம்மில் அரும்பெரும் செயல் பல புரிந்த இறைவனுக்கு நன்றி கூறுகின்றார்.
- இந்நூலை எழுதுவதற்கு ஏறக்குறைய நான்கு ஆண்டுகளை இவர் செலவழித்துள்ளார் (397 - 401)

## 2. The City of God (இறைவனின் நகரம்)

- இந்நூல் இன்றும் உயர்ந்த கிறிஸ்தவ இலக்கியமாகக் கருதப்பட்டு, மேல்நிலைக் கற்கைப் பாடநூலாகத் திகழ்கின்றது. இதில் அகுஸ்தினுடைய தத்துவ, இறையியல் அரசியல் சிந்தனைகளின் சாரம்சம் காணப்படுகின்றது.
- கி.பி. 410 ஆம் ஆண்டில் வண்டல் கோத்திரத்தினரால் உரோமை நகர் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது. இவ்வழிவுக்கு கிறிஸ்தவர்களே காரணம் என்ற பழி கிறிஸ்தவர்கள் மீது சுமத்தப்பட்டது. தாம் பல தெய்வங்களை வணங்கிய போது அழிவுகளிலிருந்து காப்பற்றப்பட்டதாகவும் கொன்ஸ்ரன்டயின் பேரரசன் கிறிஸ்தவ மறையை உரோமைப் பேரரசின் மறையாகப் பிரகடணப்படுத்தி ஒரு தெய்வ வழிபாட்டை அறிமுப்படுத்தியதுதான் இவ்வழிவுக்குக் காரணம் எனக் கூறப்பட்டது.

- அவற்றுக்கான பதிலை அவர் தமது ‘‘இறைவனின் நகரம்” எனும் நூலில் முன்வைத்தார். உரோமைப் பேரரசின் அழிவு ஆரம்பமானது கிறிஸ்தவ மறையை உரோமையர் தழுவுவதற்கு முன் என்பதும், அதன் அழிவுக்குக் காரணமாயிருந்த தவறான கருத்துகளும் உரோமைய சமூகத்தின் ஊழல்களும், அநீதிகளும் என்பதும், கிறிஸ்தவ மறை நீதி, நேர்மை, சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய பண்புகளின் அடிப்படையில் உருவானதெனவும் அகுஸ்தீன் எடுத்துக் காட்டினார். இவ்வாறு இம்மாதிரியான பாவங்களினால் நிறைந்த சமூகத்தில் கூட நல்ல பண்புகள் நிறைந்த தூய இறைவனின் நகரத்தைக் கட்டியெழுப்புவதற்கு முயற்சி செய்தல் கிறிஸ்தவர்களின் விருப்பம் என மேலும் அவர் குறிப்பிட்டுள்ளார். கிறிஸ்தவர்கள் தியாகமுள்ளவர்களெனவும், கிறிஸ்தவ பண்புகள் பிரசைகளின் முன்னேற்றத்துக்குத் தூண்டுதல் ஆகுமே தவிர இடையூறு விளைவிக்காதெனவும் கூறியுள்ளார்.

### 3. De Trinitate (மூவொரு இறைவன்)

- புனித அகுஸ்தீன் எழுதிய மிகவும் சிறப்பான நூல்களுள் ‘மூவொரு இறைவன்’ எனும் நூல் முக்கியமானதொன்றாகும். இந்நூலை எழுதுவதற்கு அவர் ஏறக்குறைய 15 அல்லது 16 ஆண்டுகள் செலவிட்டார். (400 - 416). தமது நண்பனாகிய கார்த்தேஜ் நகர ஆயருக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். ‘‘இளம் வயதில் ஆரம்பித்த இந்நூலை முதிர் வயதில் நிறைவு செய்கிறேன்”.
- திருச்சபை வரலாற்றின் முதல் நூற்றாண்டுகளில் மூவொரு இறைவனைப் பற்றிய பேதகங்களும், விவாதங்களும் உருவாகின.
- இக்காலகட்டத்தில் புனித அகுஸ்தீன் மூவொரு இறைவனைப் பற்றிய உண்மைகளை பேதகங்கள், சிந்தனைவேறுபாடுகள் மத்தியில் உறுதியாகவும் தெளிவாகவும் விளக்குவதற்கு முயற்சிகள் எடுத்தார். இறைவன், இறைத்தன்மை, இறைவல்லமை, இறை ஆள்தன்மை, பிறப்பு, என்பவற்றை தெளிவாக விளக்கியுள்ளார்.
- 15 பாகங்களைக் கொண்ட இந்நூல், மூவொரு இறைவனின் இயல்பு, செயற்பாடு, உறவு என்பவற்றை விபரிக்கின்றது. இறைவனின் ஒருமையையும், மூன்று ஆட்களினதும் சமத்துவத்தைப் பற்றியும் (Equality) திருவிவிலிய ஆதாரங்களுடன் இந்நூலின் முதலாவது பாகத்திலே கூறப்படுகிறது. அடுத்துவரும் மூன்று பாகங்களில் இவ்விடயத்தை வேறு கோணங்களில் விளக்கியுள்ளார். ஏனைய பகுதிகளில் தத்துவ இறையியல், உளவியல் ரீதியில் மூவொரு இறைவனைப் பற்றிய உண்மைகள் விளக்கப்பட்டுள்ளன. உளவியல் ரீதியில், புனித அகுஸ்தீன் மூவொரு இறைவனுக்கும் தமக்குமிடையே உருவாகிய நெருங்கிய உறவையும், இறைவனுக்கும் சமூகத்திற்கும் இடையே உள்ள ஒற்றுமையையும் தியானத்திற்கு வழிவகுக்கும் வகையில் முன்வைக்கிறார்.

### இறையியல் சிந்தனைக்குப் பங்களிப்பு :

- மேற்கத்தேய இறையியல் சிந்தனைகள், பக்தி முயற்சிகள் பற்றி அகுஸ்தீன் கூறியுள்ளார். கீழைத்தேய திருச்சபையால் விலக்கப்பட்ட இலத்தீன் திருச்சபைத் தந்தையர்களுள் ஒருவராவார். கிறிஸ்தவ விசுவாசத்தையும் இறைவனைப் பற்றிய திருவிவிலிய அறிவையும் நவீன பிளேடோனிசக் கொள்கையுடன் தொடர்புபடுத்தி விளக்குவதற்கு எடுத்த முயற்சிகள் அகுஸ்தீனின் மிகவும் முக்கியமானதாக அமைந்தது. இவர் முறைமையான சிந்தனை ஆற்றலினால் (Reflection) கிறிஸ்தவ விசுவாசம் பற்றிய இறையியலைக் கற்றார். இதில் விசுவாசத்திற்கும் அறிவுக்கும் இடையே உள்ள தொடர்பை வெளிப்படுத்தினார்.

### 8.2.2 தோமஸ் அக்குவினாஸ்

- திருச்சபை வரலாற்றில் மத்திய கால கிறிஸ்தவ சிந்தனையாளர்கள் தமக்கே உரிய இறையியல் தனித்துவத்தைக் கொண்டிருந்தார்கள். இவர்களது தனித்துவமான இறையியல் சிந்தனையின் முறையானது ''ஸ்கொலாஸ்டிசிசம்'' (Scholasticism) என அழைக்கப்பட்டது.
- மனித அறிவுத் திறனால் மெய்யியல், இறையியல் உண்மைகளைக் கண்டுபிடித்து, அவற்றைப் பாதுகாத்து விளக்கும் ஒரு படிமுறையே ஸ்கொலாஸ்டிசிசமாகும். ''ஸ்கோலா'' (Schola) எனும் இலத்தின் மொழிச் சொல்லைத் தழுவி உருவாக்கப்பட்டது. ஸ்கோலா என்றால் பாடசாலை (School) என பொருள்படும். பல்கலைக்கழகங்களுக்கு வழிவகுத்த, மத்திய காலப் பேராலய துறவற மடப்பாடசாலைகளில் இறையியல் கற்பிக்கப்பட்டது.
- ''ஸ்கொலாஸ்டிக்'' முறை மூன்று அடிப்படைப் பகுதிகளைக் கொண்டுள்ளது.
  1. வினாவை முன்வைத்தல்.
  2. சார்பான, எதிரான விவாதங்களைக் கொணருதல்.
  3. அறிவு பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய முடிவை வழங்குதல்.
- ''ஸ்கொலாஸ்டிக்'' முறை இறையியல் இறைவெளிப்பாட்டையும், திருச்சபையின் கற்பிக்கும் பாரம்பரியத்தையும் வரையறைகளாகக் கொண்டுள்ளது.
- இறைவனைப் பற்றியும் கிறிஸ்தவ மறையுண்மைகளைப் பற்றியும் ஆராய்வதற்காக மனித அறிவையும் அறிஸ்டோட்டிலின் மெய்யியலையும் துணிவுடன் பயன்படுத்தினர்.
- மத்திய கால இறையியல் சிந்தனையாளர்களில் கன்டபெறி அன்செல்ம், தோமஸ் அக்குவினாஸ், பொனவெஞ்சர் ஆகியோர் சிறப்பானவர்களாகக் கருதப்படுகின்றனர்.

### அழைப்பு

- இத்தாலி நாட்டில் மொன்ரே கசினோ (Monte Cassino) எனும் நகருக்கு அருகாமையில் உள்ள றொக்கசெக்கா எனும் ஊரில் 1224 அல்லது 1225 ஆம் ஆண்டு பிறந்தார். இவரது பெற்றோர் உயரிய குலத்தைச் சேர்ந்தவர்கள்.
- தோமஸ் அக்குவினாஸ் ஐந்து வயது நிரம்பியவராக இருக்கும்போதே இவரது பெற்றோர் இவரை மொன்ரே கசினோவில் அமைந்திருந்த ஆசீர்வாதப்பர் துறவற மடத்தில் சேர்த்தனர். ஆசீர்வாதப்பர் துறவற மடவாழ்க்கையைப் பின்பற்றி தோமஸ் இம்மடத்தின் தலைவராக வேண்டுமென்பதே இவரது பெற்றோரின் முக்கிய நோக்கமாக இருந்தது.
- ஆரம்பக் கல்வியை இங்கு பயின்ற பின் தோமஸ் நேப்பிள்ஸ் பல்கலைக்கழகத்தில் இணைந்து கொண்டார். இங்குதான் இவர் அரிஸ்டோட்டிலின் மெய்யியலைக் கற்றார்.
- நாளடைவில் தோமஸ் டொமினிக்கன் துறவற சபையினரின் வாழ்க்கை முறையால் கவரப்பட்டார்.
- கல்வி, ஏழ்மை, பதவி ஆசைகளைக் கடந்த பணி வாழ்வு என்பவை டொமினிக்கன் துறவற வாழ்வின் சிறப்புப் பண்புகளாக இருந்தன. தோமஸின் இந்த எண்ணத்தை அறிந்த அவரது பெற்றோர் பலவந்தமாக அவரை அழைத்து வந்து தந்தையின் மாளிகையில் ஒரு வருடமாக சிறைவைத்தனர். இதனால் தோமஸ் தமது விருப்பத்தை ஏற்றுக்கொள்வார் என பெற்றோர் எதிர்பார்த்தனர். தோமஸ் தமது நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பதை உணர்ந்த பெற்றோர் அவரை டொமினிக்கன் துறவற சபையில் சேர அனுமதித்தனர்.
- லியோன்ஸ் பொதுச் சங்கத்திற்குச் செல்லும் வழியில் 1274 ஆம் ஆண்டு இறந்தார்.

**கல்விப்பணி**

- பாரிஸ் நகரிலிருந்த டொமினிக்கன் துறவற சபையில் இணைந்த தொமஸ், பெரிய அல்பர்ட் என்பவரின் வழிகாட்டலில் தமது கல்வியைத் தொடர்ந்து குருவானார். இவரது அறிவுக் கூர்மையையும், அறிவுத்தெளிவையும் அறிந்த அல்பர்ட்டின் பரிந்துரையால் தோமஸ் பாரிஸ் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். தோமஸ் உரோமை, நேபிள்ஸ் பல்கலைக்கழகங்களிலும் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

**ஆக்கங்கள்**

**திருவழிபாட்டு ஆக்கங்கள்:**

- 1261 - 1264 வரை உரோமையில் ஆறாம் ஊர்பன் திருத்தந்தையின் ஆலோசகராகவும் பணியாற்றினார். இக்காலப் பகுதியில் தோமஸ் கிறிஸ்துவின் திரு உடல் திரு இரத்தப் பெருவிழாவுக்கான (நற்கருணைப் பெருவிழா) திருப்பலியையும் புகழ்மாலையையும் எழுதினார். அத்தோடு ''லவுடா சியோன்'', ''பாஞ்ஞே லிங்குவா'', ''வேர்பும் சுப்பேர்னும்'', ''சாக்றிஸ் சொலெம்னியிஸ்'', ''அடோறோ தே'' எனும் நற்கருணைப் பாடல்களையும் எழுதினார்.

**அறிவியல் ஆக்கங்கள்:**

- 1269 - 1272 வரை பாரிஸ் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் போது பெரிய அல்பர்ட் என்பவருடன் இணைந்து இரசாயணவியல் பற்றிய நூலை எழுதினார்.

**இறையியல் ஆக்கங்கள்:**

- நேபிள்ஸ் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் போது டொமினிக்கன் துறவற சபையினரின் உரோமை மாகாணத்திற்கான இறையியல் பாடத்திட்டத்தைத் தயாரித்தார்.
- இவரது பல நூல்களில் மிகச் சிறப்பான இரண்டு நூல்களை இங்கு குறிப்பிடலாம். அவை :

  அ) **''Summa Contra Gentiles''** (சும்மா கொன்த்ரா ஜென்திலேஸ்)

  - அரேபிய மெய்யியலாளர்களுக்கு எதிராக கிறிஸ்தவ விசுவாச உண்மைகளைப் பற்றி எழுதப்பட்டது. ஸ்பெயினில் பணியாற்றிய டொமினிக்கன் துறவற சபை மறைப் பணியாளர்களுக்காக எழுதப்பட்டது. கிறிஸ்தவரல்லாத மக்களுக்கு இறைவனைப் பற்றிய விளக்கம் வழங்கப்பட்டது. மனித அறிவுச் சிந்தனையின் உதவியுடன் படைப்பைப் பற்றியும், முடிவில்லா வாழ்வைப் பற்றியும் விளக்கியுள்ளார்.

  ஆ) **''Summa Theologiae''** (சும்மா தியலோஜிஏ)

  - பல நூற்றாண்டுகளாக இறையியல் மாணவர்களின் பாடநூலாக இந்நூல் சிறப்புப் பெற்றது. விசுவாசம், அறநெறி பற்றிய திருச்சபையின் படிப்பினைகளை மூன்று பாகங்களாகக் கொண்டுள்ளது.

- **திருவிவிலிய விளக்கவுரைகளையும் எழுதியுள்ளார்.**

**மெய்யியல் ஆக்கம்:**

- மெய்யியலாளர் அரிஸ்ரோட்டிலின் ஆக்கங்களுக்கான விளக்கவுரைத் தொடர்

**தோமஸ் அக்குவினாசின் சிந்தனைச் சிறப்பு :**

- அரிஸ்ரோட்டிலின் மெய்யியல் சிந்தனைகளைப் பயன்படுத்தி கிறிஸ்தவ விசுவாச உண்மைகளை விளக்கும் இறையியல் முறை.
- மானிட அறிவுச் சிந்தனையும் விசுவாசமும் ஒன்றுக்கொன்று முரனானவை அல்ல.

- மெய்யியல், இறையியல் பற்றிய அறிவுக்கூர்மையையும் சிந்தனை ஆற்றலையும் சிலுவையடியில் செப தியானத்தாலும், நற்கருணைப் பக்தியாலும் பெற்றுக்கொண்டார்.
- இன்று தோமஸ் அக்குவினாஸ் திருச்சபையின் மறைவல்லுனராகவும் (Doctor of the Church) கத்தோலிக்க பாடசாலைகளுக்கும் அறிவியலாளர்களுக்கும் பாதுகாவலராகவும் உள்ளார்.

## கற்றல் கற்பித்தல் செயற்பாடு

1. திருச்சபை வரலாற்றில் புதிய சிந்தனையை உருவாக்கிய கிறிஸ்தவ சிந்தனையாளர்களைப் பற்றி தேடிக்கண்டுபிடிக்க மாணவர்களுக்கு அறிவுரை வழங்குங்கள்.
2. புனித அகுஸ்தீனின் வாழ்க்கைச் சுருக்கத்தை ஆண்டுக் கிரமத்தின்படி தொகுப்பதற்கு இடமளியுங்கள்.
3. புனித தோமஸ் அகுவினாசின் வாழ்க்கைச் சுருக்கத்தை ஆண்டுக் கிரமத்தின்படி தொகுப்பதற்கு இடமளியுங்கள்.
4. இவ் இரண்டு சிந்தனையாளர்களது இறையியல் சிந்தனைகளை வெவ்வேறாக கலந்துரையாடுங்கள்.
5. புனித அகுஸ்தினுடைய வாழ்க்கையைப் பற்றி மாணவர்களுடன் ஆராயுங்கள்.
6. தோமஸ் அகுவினாஸ் சிலுவையடியில் செபத்தாலும், நற்கருணை மட்டில் கொண்டிருந்த விசேட பக்தியாலும் தமது இறையியல் சிந்தனையை உருவாக்கியமை பற்றி கலந்துரையாடுங்கள்.

## உசாத்துணை நூல் :


- சே.ச. இருதயம் இஞ்ஞாசியார், கிறிஸ்தவ இந்திய ஞான வாழ்வு, ஐக்கிய ஆலய வெளியீடு, சென்னை 1982.
- Fr. John Laux, Church History, Tan Book and Publishers. Illinois. 1989
- Rev. George Johnson, The Story of the Church. Tan Book and Publishers, Illinois 1982.
- ஞா. பிலேந்திரன், கிறிஸ்தவமும் நாகரிகங்களும், நல்லாயன் நிலையம், திருநெல்வேலி, 2008.
- பிலிப்ஸ் இ. யேசுதாசன், அ.ம.தி. கிறிஸ்தவ வாழ்வு, கொழும்புத்துறை.
- பேரருட்திரு இரா. அருளப்பர், திருச்சபையை வளர்த்த புனிதர்கள், பாகம் 3, சென்னை.
- பேரருட்திரு இரா. அருளப்பர், திருச்சபையை வளர்த்த புனிதர்கள், பாகம் 4, சென்னை.

**தேர்ச்சி 8.0 :** உலக சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக திருச்சபையின் சமுதாய கலாச்சாரப் பங்கினை அறிந்து கிறிஸ்தவக் கடமைகளை நிறைவேற்றுவர்.

**தேர்ச்சி மட்டம் 8.3 :** சிற்ப கலைகளின் மேம்பாட்டிற்காக திருச்சபையின் பங்களிப்பை அறிந்து உணர்ந்து ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபடுவர்.

**பாடவேளைகள் :** 15

**கற்றல் பேறுகள் :**

- கொண்ஸ்டன்டைன் பேரரசர் கொடுத்த சுதந்திரத்துடன் ஆலய கட்டிடங்கள் படிப்படியாக ஆரம்பிக்கப்பட்டன என கூறுவர்.
- ஆரம்ப கிறிஸ்தவர்கள் நன்றி வழிபாட்டிற்காகப் பயன்படுத்திய கிறிஸ்தவ அடையாளங்கள் கிறிஸ்தவ சித்திரக்கலையின் ஆரம்ப சித்திரங்களென ஏற்றுக்கொள்வர்.
- இன்றைய கிறிஸ்தவ சங்கீதத்திற்கு அடிப்படையாக உள்ளது கிரகோரியாரின் இசை எனக் கூறுவர்.

## விடய உள்ளடக்க வழிகாட்டி:

## 8.3.1 கலை மேம்பாட்டிற்காக திருச்சபையின் பங்களிப்பு

### அறிமுகம்

- கிறிஸ்தவ மறை உலகத்திற்கு அறிமுகமாகியதுடன் ஐரோப்பிய சிந்தனையிலும் மக்களின் வாழ்க்கை முறையிலும் ஏற்பட்ட மாற்றங்களின் பிரதிபலிப்பாக கிறிஸ்தவ கலையை அறிமுகப்படுத்தலாம். கிறிஸ்தவ மறை மேலைத்தேய நாடுகளின் சிந்தனையில் மட்டுமல்ல மனித வாழ்க்கையிலும் பெரியதொரு மாற்றத்தை ஏற்படுத்தியதென்பது வரலாற்று உண்மையாகும். கிறிஸ்தவ மறை வளர்ச்சியடைதலுடன் உரோமை பேரரசில் நடைமுறையில் இருந்த சித்திர, சிற்ப, உலோக கலை புதிய மறைக்கு பொருத்தமற்றதாக இருந்தது. ஆதலால் கிறிஸ்தவ மறையின் விருப்பு வெறுப்புக்கு ஏற்றவண்ணம் புதிய கலைத் தோற்றமொன்றின் உருவாக்கம் தேவையாக இருந்தது. ''கிறிஸ்தவக் கலை'' என்ற பெயரில் அறிமுகமாகும் இந்த கலையின் மேன்மைக்காக கிறிஸ்தவ மறை பற்பல முறையில் தன் பங்களிப்பை வழங்கியுள்ளது. கிறிஸ்தவ மறையின் வரலாற்றிலே பற்பல காலகட்டத்தில் கிறிஸ்தவக் கலை வளர்ச்சியடைந்துள்ளது. கிறிஸ்தவ எழுத்தாளர்கள், கிறிஸ்தவ சங்கீதங்கள், கட்டிடகலை, சித்திரம், வேலைப்பாடு, சிற்பம் போன்றவற்றின் வளர்ச்சிக்காக பல்வேறு குழுக்கள், நபர்கள் ஒத்துழைப்பை வழங்கியுள்ளார்கள். மேலே குறிப்பிட்ட எல்லா அம்சங்களும் கலைக்கு உரிமையாவதுடன் கிறிஸ்தவ கலாசாரத்தில் கலைக்கு முக்கிய இடமுண்டு என்பது குறிப்பிடத்தக்கது. இக்கலை வளர்ச்சியடைந்த விதம் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

## 8.3.2 நூல்கள், எழுத்தாளர், சங்கீதம் (இசை)

### 8.3.2.1 நூல்களும், எழுத்தாளர்களும்

**டான்டே அலிகியேரி (1265 - 1321)**

- இத்தாலியில் புளோரன்ஸ் நகரில் பிறந்த டான்டே அலிகியேரி மத்திய கால கிறிஸ்தவத்திற்கு சேவையாற்றிய முக்கிய நபராவார்.
- மத்திய யுகம் வரை இலக்கிய நூல்கள் இலத்தீன் மொழியில் எழுதப்பட்டன. ஆனால் இவர் இப்பாரம்பரியத்தை முறையடித்து இத்தாலி மக்களின் தாய்மொழியான இத்தாலி மொழியில் எழுதினார். இவர் எழுதிய "The Divine Comedy" எனும் நூல் இவரது இலக்கிய நூல்களின் துணை இலக்கிய நூலாக கருதப்படுகிறது.
- இவர் எழுதிய முதன்மையான பெரிய இலக்கிய நூல் இதுவாகும்.
- டான்டே பிரசித்திவாய்ந்த கவிஞரான வோர்ஜில் உடன் இணைந்து நரகம், உத்தரிப்பு ஸ்தலம், மோட்சம் போன்ற இடங்களுக்குப் பயணம் செய்த அனுபவத்தைப் பின்னணியாகக் கொண்டு இந்த பெரிய இலக்கிய நூல் எழுதப்பட்டது.

**தோமஸ் ஆ கெம்பே**

- மத்திய கால யுகத்தில் கிறிஸ்தவ மறை தளர்ச்சியடைந்த போது அருட்பணி தோமஸ் ஆ கெம்பே எழுதிய ''கிறிஸ்து வழி வாழ்வு'' (The Imitation of Christ) என்ற நூல் மிக முக்கியமானது. இந்நூலானது திருவிவிலியத்தைத் தவிர பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. தினந்தோறும் திவ்விய நற்கருணையை பெற்றுக்கொள்ளத் தகுதியான முறையில் அனைவரும் வாழ வேண்டும் என்பதே அவர் இந்நூலில் தரும் செய்தியாகும்.

**புனித அவிலா திரேசா**

- அவிலாவிலுள்ள கார்மேல் துறவறசபையில் புனித திரேசா ஆரம்பத்தில் உலகியல் சுகபோக வாழ்வு வாழ்ந்தாள். இவர் புனித அகுஸ்தினின் தன்னிலை ஏற்பு (Confessions) எனும் நூலை வாசித்து ஆன்மீக வாழ்வைப் புதுப்பித்து கார்மேல் சபையின் மறுமலர்ச்சியை ஆரம்பித்தார்.
- இவர் சாதாரண செபத்தை கீழே விழுந்த குருவிக் குஞ்சு சிறகடித்து சுயமாக எழுந்து தனது கூட்டுக்குச் செல்ல எடுக்கும் முயற்சிக்குச் சமப்படுத்துகிறாள்.
- ஆழ் தியானம் அந்த குருவி தன்னை தூக்கி வைப்பதற்கு இன்னொருவருக்கு வழங்கும் சந்தர்ப்பமென கூறுகிறாள்.
- அடிப்படைகள் (Foundations) உள்ளக அரண்மணை (Interor Castle) எனும் இலக்கிய நூல்களை எழுதினார். அவர் தனது வாழ்க்கை வரலாற்றும், செப புத்தகங்கள் இரண்டும் தாம் பெற்ற அனுபவத்தின் மூலம் எழுதியுள்ளார்.

**புனித சிலுவை அருளப்பர்**

- ஆழ் தியான அனுபவத்தின் மூலம் கி.பி. 1567இல் புனித சிலுவை அருளப்பர் புனித அவிலா திரேசாவின் முன்மாதிரிகையினால் ஆண்களுக்கான கார்மேல் துறவற சபையை ஏற்படுத்த திட்டமிட்டார்.
- இதனால் இவர் துறவிகளின் எதிர்ப்புக்கு ஆளானார். ஆழ்ந்த தியானத்தின் அனுபவத்தினால் இவர் பின்வரும் இலக்கிய நூல்களை இயற்றினார்.
  i) ''கார்மேல் மலை ஏற்றம்'' (The Ascent of Mount Carmel)
  ii) ''ஆன்மாவின் இருள் அடர் இரவு'' (The Dark Night of the Soul)
  iii)''ஆன்மீகக் கீதம்'' (Spiritual Canticle)
  iv)''தெய்வீக அன்பின் உயிருள்ள சுவாளை'' (The Living Flame of Divine Love)

- பரம தந்தைக்கும் மகனுக்குமிடையே உள்ள அன்புப் பிணைப்பு போன்றதொரு அன்புப் பிணைப்பு ஆன்மாவுக்கும் இறைவனுக்குமிடையே நிலவ வேண்டும். அதற்காகச் சந்திக்க வேண்டிய துன்பச் சூழ்நிலைகள், இயல்பாக உள்ள ஆசாபாசங்களை அடக்கியாளும் வகை, அதற்காக எப்படி முயன்று கொண்டேயிருக்க வேண்டும் என்ற கருத்துகளை இறையியல் வல்லுநர் என்ற முறையில் எழுதுகிறார்.

### 8.3.2.2 சங்கீதம் (திரு இசை)

#### கிரகொரியாரின் கால முறை

- முதன் முதலாக கிறிஸ்தவ இசை முறையாக ஆரம்பிக்கப்பட்டது கி.பி. 500 - 1000 இடைப்பட்ட காலப்பகுதியிலாகும். இருண்டயுகமென அறிமுகமாகும் இக்காலத்தில் திருவழிபாட்டு முறை ஒழுங்குசெய்யப்பட்டது. புனித ஆசீர்வாதப்பர் துறவற சபையால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த திருவழிபாட்டு முறையை கிறிஸ்தவ மறைக்குப் பொருத்தமான முறையில் முதலாம் கிரகோரி திருத்தந்தை (கி.பி. 540 - 604) ஒழுங்கு செய்தார். தனி இசை முறையான (Plain Chant) இவ்விசை முறை ''கிரகொரியாரின் காலத்தின் முறை'' (Gregorian Chant) என பிரசித்திப் பெற்றது.

#### பொலிபோனி இசை முறை

- 11ஆம் 12ஆம் நூற்றாண்டுகளில் கிரகொரியாரின் தனி இசை முறையை விட வேறுபட்ட கலப்பு இசைமுறை பாரிஸ் நோதிரடாம் மேற்றிராசன ஆலயத்தில் (பேராலயத்தில்) ஆரம்பமானது.
- கி.பி. 1200 ஆண்டளவில் அப்பாடற் குழுவின் தலைவரான பெரொடின் (Perotin) என்பவர் நான்கு சுரங்களிலானான ''சேர்ந்திசை'' முறையை நிர்மானித்தார். பொலிபோனி (Polyphony) என்ற கிரேக்கச் சொல்லினால் அது மிக பிரசித்திப் பெற்றது. இவ்விசை முறையின் இனிமையினால் சாதாரண மக்களின் மனம் செபத்தைவிட இசையின் பக்கம் திரும்பியது.
- திருப்பலியில் பாடப்பட வேண்டிய ஆறு பகுதிகள் சேர்ந்திசை முறையில் பாடப்படவேண்டும் என தீர்மானிக்கப்பட்டிருந்தது. தற்காலத்திலும் இப்பகுதிகள் திருப்பலியில் பாடப்படுகின்றன.
  i) கீரியே (ஆண்டவரே இரக்கமாயிரும்)
  ii) குளொரியா (உன்னதங்களிலே இறைவனுக்கு மகிமை உண்டாகுக)
  iii) கிறேடோ (நான் விசுவசிக்கிறேன்)
  iv) சாந்துஸ் (தூயவர்)
  v) பெனடிக்துஸ் (ஆண்டவர் பெயரால் வருபவர் ஆசி பெற்றவர்)
  vi) ஆஞ்ஞூஸ் டேயி (உலகின் பாவங்களைப் போக்கும்)

#### திரிதெந்து பொதுச்சங்கத்தின் பின் தோன்றிய இசை முறைகள்

- சீர்த்திருத்த சபைகளின் புரட்சிக்கு முன் பயன்படுத்திய இசை முறைகள் சாதாரண மக்களால் பங்கு பற்ற முடியாமல் இருந்தது. ஆதலால் திருப்பலி மிக நீண்டுவிட்டது என்று சிலர் குறை கூறினர். பொதுச்சங்கத்தின் பின் விசேட சேர்ந்திசை முறையொன்று தோன்றியது.
- மார்செலஸ் திருத்தந்தையின் இசை திருப்பலி (Missa Papae Marcelli) இப் பொது சங்கத்தில் பாடப்பட்டுள்ளது.
- இத்தாலி இனத்தைச் சேர்ந்த கியோவன்னி பியர்துவிஜிடா பலேஸ்றினா (Giovanni Pierthuviga Da Plestrina) புத்துயிர் கொடுத்தார்.
- நெதர்லாந்து இனத்தைச் சேர்ந்த ஒர்லேன்டுஸ் லெஸ்சுஸ் குழுவினர் பக்தி முயற்சிகளுக்கு இச்சேர்ந்திசை முறையை பயன்படுத்தினர். இசைக்கருவிகளைப் பயன்படுத்தாமல்

குரல்வளத்தை மாத்திரம் பயன்படுத்தி அமைக்கப்பட்ட முறை மிகவும் திறமையானது.

### ஒரதோரியோ இசை

- ஜோர்ச் பிரடெரிக் வென்டல் என்பவர் இவ் இசை முறைக்கு முக்கியமானவர்.
- சமய கருத்துக்களுக்கு ஏற்றவாறு இசை அமைக்கப்பட்டது.
- இசைக்கருவிகள் குரலொலி இவைகள் ஒன்றிணைக்கப்பட்டு ஒரதொரியோ இசை அமைக்கப்பட்டது.

### பாடல் திருப்பலி

- பாடல் திருப்பலிகளின் ஒருங்கமைப்பாளர்களுள் லுட்விக் வேன் பிதோவன் (Ludwig van Beethoven) முதன்மையானவரும் முக்கியமானவரும் ஆவார்.
- 19ஆம் நூற்றாண்டில் பாடல் திருப்பலியும் துக்க பாடல் திருப்பலியும் அமைப்புப் பெற்றது. பிரான்சு இனத்தவரான ஹெக்ட பர்லியொஸ், கபிரியேல் போரே, இத்தாலி இனத்தவரான குயிசெப்பே வர்டி போன்ற இசையமைப்பாளர்கள் இசைக்கு பாரிய சேவையாற்றியுள்ளனர்.

## 8.3.3 கட்டிடக்கலை, கற்சிற்பங்கள், சித்திரங்கள், சிலைகள்

### 8.3.3.1 கட்டிடக்கலை

- கி.பி. 313இல் கொன்ஸ்டன்டைன் பேரரசரால் கிறிஸ்தவ மறைக்கு சுதந்திரம் கிடைத்த பின் கிறிஸ்தவ கட்டிடக்கலை ஆரம்பமானது. இக்காலகட்டத்தில் ஆலய அமைப்பில் இரண்டு முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.
  - i) உரோமைய ஆலய முறை
  - ii) பைசென்தியன் அமைப்பிலான ஆலய முறை

### i) உரோமைய ஆலய முறை

- அக்காலத்தில் உரோமையரின் ஆலயம் போல் அல்லாது உரோமையரின் பெசிலிகா என்றழைக்கப்படும் மக்கள் ஒன்றுகூடும் சாலையைப் போல ஆலயங்கள் அமைக்கப்பட்டன. உரோமைப் பேரரசின் மேற்குப் பகுதியில் இம்முறை பிரசித்திப் பெற்றது.
- இவ்வாலயங்களில் பிரதான அம்சங்கள் சில உள்ளன.
  - i) அகலத்தைவிட நீளம் கூடிய செவ்வக வடிவான கட்டிடங்கள்.
  - ii) ஆலயத்திற்கு நுழைந்தவுடன் கண்ணுக்குத் தெரிவது எதிர்பக்கத்தில் அரைவட்ட வடிவான குகையில் அமைந்திருக்கும் பலிப்பீடமாகும்.
  - iii) இரண்டு வரிசைகளில் அமைந்துள்ள உயரமான தூண்கள் கூரையைத் தாங்கியுள்ளன. ஆதலால் ஆலய நிலப்பகுதி மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. இதன்படி பிரதான நடுப்பகுதியில் மண்டபமும் குறுகிய ஒடுங்கிய இரண்டு பகுதிகள் இரு பக்கங்களிலும் அமைக்கப்பட்டன, ஆங்கிலத்தில் அந்த நடுப்பகுதி கப்பல் என அர்த்தத்தைத் தரும் ''நேவ்'' (Nave) என்றும், குறுகிய இரண்டும் குருவி சிறகு என்ற அர்த்தத்தை தரும் ''அயில்'' (Aisle) என்றும் அறிமுகமானது.
  - iv) நடுப்பகுதியின் கூரை குறுகிய பகுதியை விட உயரமானது. அதனால் வெளியே இருந்து பார்க்கும் போது இரண்டு மாடி கட்டிடம் போல் இருந்தது.
  - v) சிறகுப் பகுதிக்கும் நடுப்பகுதிக்குமிடையிலுள்ள தூண்களில் செய்யப்பட்ட சுவர்களிலுள்ள ஜன்னல்கள் வழியாக வெளிச்சம் உள்ளே வந்தது.
  - vi) சதுர வடிவான ஆலயங்களும், வட்டமான சுவர்களைக் கொண்ட வட்ட வடிவமான ஆலயங்களும், சிலுவை வடிவான ஆலயங்களும் உரோமைப் பேரரசின் மேற்கு பகுதியில் அமைக்கப்பட்டன.

vii) நான்காம் நூற்றாண்டில் உரோமை நகரில் அமைக்கப்பட்ட யோவான் லாத்தரன், புனித மரியா போன்ற ஆலயங்கள் பெசிலிகா வடிவில் அமைக்கப்பட்ட பிரதான ஆலயங்களாகும்.

## ii) பைசென்தியன் ஆலய முறை

- கிரேக்க மொழி பேசிய விசுவாசிகளிடையே, அதாவது, உரோமை பேரரசின் கிழக்கு பகுதியில் கட்டப்பட்ட ஆலயங்களின் அமைப்பு சமய மறைபொருள்களை வெளிப்படுத்தும் வகையிலேயே கட்டப்பட்டன.

**பைசென்தியன் ஆலயங்களில் காணப்படும் பிரதான அம்சங்கள்:**

i) நேரான அமைப்பைவிட வலைந்த உறுதியான அமைப்பைக் கொண்டது.

ii) தட்டையான கூரையைவிட அரைவட்ட முகப்பு அமைக்கப்பட்டது.

iii) பூரண ஒளியை விட மங்கலான ஒளியை பயன்படுத்தினர்.

iv) ஆலயத்தின் மத்திய பகுதி முழுவதிலும் தூணோ அல்லது சாய்தளமோ இல்லை.

v) வில்லு வடிவான முகப்பும் அரை வட்டவடிவான கூரையும் நீர்த்துளி போன்ற கூரையும் அதாவது டோம் (dome) அமைக்கப்பட்டிருந்தது.

vi) பைசென்தியன் ஆலய அமைப்பிற்கு உதாரணம் கொன்ஸ்தாந்திநோபிளில் அமைக்கப்பட்ட புனித சொபியா ஆலயமாகும். பைசென்தியன் கட்டிட கலைக்கு சிறப்பான அம்சமாக இவ் ஆலயத்தை அறிமுகம் செய்யலாம்.

## கோதிக் ஆலயம்

- கோதிக் (Gothic) ஆலய அமைப்பு பிரான்ஸில் ஆரம்பமாகிறது. கோதிக் என்ற பெயர் அக் கலையை மறுதலிப்பதை காட்டுவதற்காக கூறப்பட்டதாகும். அதன் கருத்து மிலேச அல்லது பொருத்தமற்றது என்பதாகும். ஐரோப்பா முழுவதும் பரவிச் சென்ற இக்கலை கோதிக் கலையென்ற பெயரால் அழைக்கப்பட்டது.

## கோதிக் ஆலயங்களின் பண்புகள் :

- அரைவட்ட முகப்புகளுக்குப் பதிலாக கூரான முகப்பு பாவிக்கப்பட்டது. ஆதலால் பாரத்தை குறைத்துக் கொள்ள முடிந்தது.
- கட்டிடம் அமைக்கும் கோதிக் கலைஞர்கள் முதலில் தட்டை அமைப்பதற்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். முதலில் தேவையான அளவிற்கு தூண்களை அமைத்தனர். பின்பு கூரையை தாங்குவதற்கு அதன் மேல் நடுவில் கூரான வட்டமான முகப்பைப் பொருத்தினர்.
- கோதிக் ஆலய உட்பகுதி உரோமைய ஆலயத்தைப் போன்று இரண்டு வரிசை தூண்களால் ஆனது. ஆதலால் ஆலயத்தின் நிலப்பகுதி அகலமான மத்திய மண்டபமாகவும் ஒடுங்கிய இரண்டு பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டன.
- கூரான முகப்பும் பூ வடிவான ஜன்னலும் (Rose window) இவ்வாலயங்களின் விசேட அம்சமாகும்.
- நிறக் கண்ணாடி பாவனையும், சமநிலையை பாதுகாக்க மூலைகளை பொருத்துவதும், சிற்பக் அலங்காரங்களை செய்வதும், கோதிக் அலயத்தின் இன்னுமோர் அம்சமாகும்.
- முழுமையான கோதிக் ஆலயத்திற்கு உதாரணம் : பரீஸிலுள்ள நோதிர டாம் (Notre Dame)

### 8.3.3.2 சிற்பக் கலை

- கிறிஸ்தவ சிற்பக் கலை மத்திய காலத்தில் ஆரம்பமாகியது. ஐரோப்பாவில் மேற்றிராசன ஆலயம் (Cathedral) கட்டப்பட்டபோதே சிற்பக் கலை ஆரம்பமாகியது. இவ் யுகத்தில் ஆரம்பமாகினாலும் சுயாதீன கலையாக இது இருக்கவில்லை. சிற்பக் கலையை கட்டிடங்களை அலங்கரிக்கும் கலையாகவே பயன்படுத்தினர். கட்டிடக் கலையின் ஒரு பகுதியாகவே இது இருந்தது.
  - i) கோதிக் ஆலயங்களின் கோபுர உச்சியை அலங்கரிப்பதற்கு வான தூதர்கள், புனிதரின் உருவங்கள், மிருக உருவங்கள் அமைக்கப்பட்டன.
  - ii) மழை நீரை வெளியேற்றும் பீலியாக மனிதன் அல்லது மிருகங்களின் வாய்களைப் பயன்படுத்தினர்.
  - iii) இயேசுவினதும் புனிதரினதும் உருவங்கள் கதவுகளைக் காவல் செய்யும் நோக்கத்துடன் செதுக்கப்பட்டிருந்தன.
  - iv) செபக்கூடங்களில் பழைய, புதிய ஏற்பாடுகளின் கதைகளை வெளிப்படுத்தும் உருவங்கள் இருந்தன. ஆனால் இவ்வுருவங்கள் சிலைகள் அல்ல. இவைகளின் ஒரு பகுதி சுவருடன் பதியப்பட்டிருந்தன.

#### சிற்பக் கலை சுயாதீனம் அடைதல்

- கிறிஸ்தவ சிற்பக் கலை சுயாதீனமுள்ள கலையாக உலகம் அறிந்து கொண்டது கிரேக்க, உரோம மறுமலர்ச்சியின் பயனாகவேயாகும். கிறிஸ்தவ வரலாற்றில் சிற்பக் கலையை சுயாதீன கலையாக அறிமுகம் செய்தவர் மைக்கல் ஆஞ்சலோ ஆவார். கீழே குறிப்பிடப்பட்டுள்ளது அவரின் மிக திறமையான சிற்பங்களில் ஒன்றாகும்.

#### பியற்றா (Pieta)

- மரித்த இயேசுவை அவருடைய தாயார் மடியில் தாங்கிய வண்ணமுள்ள காட்சியைப் பிரதிபலிப்பதாக அமைந்திருக்கிறது. பளிங்கு கற்களால் செதுக்கப்பட்ட அச்சிற்பம் பார்ப்போரின் உள்ளத்தை உருகச் செய்வதாக அமைகின்றது.

#### ஜியான்லோரென்சோ பர்னினி (Gianlorenzo Bernini 1598 - 1680)

- பரொக் பாரம்பரியத்தில் உருவாகிய பர்னினியின் படைப்புக்களில் மிகப் பிரசித்தி வாய்ந்த படைப்புக்களாக பின்வருவனவற்றை அறிமுகப்படுத்தலாம்.
  - i) உரோமையில் புனித பேதுருவின் பெசிலிகாவின் பலிபீடத்திற்கு மேல் அமைக்கப்பட்ட வெண்கல மேடை.
  - ii) புனித பேதுருவின் பெசிலிகா சதுரங்கத்தைச் சுற்றி அமைக்கப்பட்ட இரண்டு வரிசை பெரிய தூண்களும் சதுரங்கமும்.
  - iii) ''தியானத்தின் புனித திரேசா'' என அழைக்கப்படும் சிற்பம் விசேட கலைப் படைப்பாகவும் ஆன்மீக தன்மையும் உடையதாகவும் உள்ளது.

### 8.3.3.3 சித்திரக்கலை

- கிறிஸ்தவ மறை பரம்பியபோது ஏனைய மறைகளினால் கிறிஸ்தவர்களுக்கு படிப்படியாக துன்பங்கள் வரத்தொடங்கியது. இரண்டு நூற்றாண்டுகள் வரை இவர்கள் துன்பங்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்தது. இதனால் கிறிஸ்தவர்கள் நிலச்சுரங்களில் (Catacomb) அமைக்கப்பட்டிருந்த கல்லறைகளில் ''நன்றி வழிபாடு'' என்ற ''யுகறஸ்திய'' நடாத்தினார்கள். அங்கே கிறிஸ்தவர்கள் மாத்திரம் விளங்கிக்கொள்ளக்கூடிய இரகசியமான கிறிஸ்தவ அடையாளங்களைப் பயன்படுத்தினர். கிறிஸ்தவர்களின் முதல் சித்திரமென அறிமுகப்படுத்தப்படும் இச் சுரங்கக் கல்லறைச் சுவர்களில் வரையப்பட்ட சித்திரங்கள் நிலச்சுரங்கச் சித்திரங்கள் என அழைக்கப்படுகிறன.

- முதல் கிறிஸ்தவர்கள் பயன்படுத்திய அடையாளங்கள் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.
  i) மீன் - கிறிஸ்து
  ii) புறா - ஆன்மா
  iii) மயில் - நித்தியகாலம்
  iv) கழுத்தில் ஆட்டை வைத்திருக்கும் இளைஞன் - நல்ல ஆயன்.
  v) கை உயர்த்திய வண்ணம் இருக்கும் பெண் - ஆண் அல்லது செபத்தில் இறைவனோடு உறவு கொள்வது.
- கி.பி. 1931இல் அகழ்வாராச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்ட டுரா யுரோபஸ் வீடொன்றில் உரோமையில் அமைக்கப்பட்ட டொமிறில்லாவின் கல்லறையில் கிறிஸ்தவர்களின் சுவர் ஓவியங்கள் அநேகமானவை கண்டெடுக்கப்பட்டன. அவ் ஓவியங்களில் திருவிவிலியத்தின் கதைகள் அடங்கியுள்ளன.
  - ஆதாம், ஏவாள்
  - மோசே கற்பாறையிலிருந்து நீரை வரச் செய்தல்
  - யோனா திமிங்கிலத்திடமிருந்து காப்பாற்றப்பட்டமை.
  - சிங்கத்திடமிருந்து தானியேல் பாதுகாக்கப்பட்டது.
  - இயேசுவும் அவருடைய சீடர்களும், போன்றவை
- இவற்றை நோக்கும் போது இவை ஆரம்ப அம்சங்களைக் கொண்டிருந்தாலும் இரகசியமாக, விரைவாக, பலவீனமான உபகரணங்களினால் கலை நிபுணத்துவமில்லாத கைகளால் நிர்மாணிக்கப்பட்ட ஆரம்ப கால ஓவியங்களாகும். இவை ஆரம்ப கிறிஸ்தவர்கள் வாழ்ந்த துன்பகரமான வாழ்க்கை முறையை பிரதிபலிக்கின்றன.

## மொசேயிக் என்ற கண்ணாடி ஓவியக்கலை

- மொசேயிக் ஓவியக் கலை பையிசென்தியன் கலையின் புதிய அம்சமாகும். கண்ணாடி கலை என்றும் அழைக்கப்படுகிறது. வீடுகள், ஆலயங்கள், கூரை, சுவர், நிலம் போன்றவற்றை அலங்கரிக்க இம்முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

## மொசேயிக் ஓவியக்கலையின் பண்புகள்

  i) சித்திரம் அழகாகவும் ஒளியூட்டுவதாகவும் இருக்கும்.
  ii) மனிதனின் பெலவீனத்தை இதில் காணமுடியாது. ஆதலால் கலைஞர்கள் சித்திரத்தின் இயற்கைத் தன்மையைவிட கம்பீரதன்மைக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர்.
  iii) கண்ணாடித் துண்டுகளால் செய்யப்பட்டதால் இச் சித்திரங்கள் வன்மையானது.
  iv) அணியப்பட்டுள்ள ஆடையில் சுருக்கங்கள் இல்லை.
  v) அவைகளைப் பக்தியுடன் பார்ப்பவருக்கு அச்சித்திரங்கள் நித்திய காலத்தையும் உலக முடிவையும் தெளிவாகக் காட்டுகிறது.
- பன்டொகிராடோர் (Pantocrator) என்னும் எல்லாவற்றிக்கும் அதிபதியாக மொசேயிக் கலைஞர்கள் இயேசுவை வடிவமைத்துள்ளனர்.

## ஐகோன் உருவம்

- மொசேயிக் சித்திரமுறையைப் பின்பற்றி மையினால் சித்திரம் வரையும் முறை தோன்றியது. ஆலயத்தில் காணப்பட்ட மொசேயிக் முறையான சித்திரத்தின் அமைப்பைக் கொண்ட கிறிஸ்துவின், மரியாவின், புனிதர்களின் உருவங்களை சிறிய மரப்பலகையில் பிரதிசெய்யும் மரபு தோன்றியது. எல்லா இடங்களுக்கும் கொண்டு செல்லக்கூடிய அந்த உருவச் சித்திரங்கள் கிரேக்க மொழியில் ''ஐகோன்'' என அழைக்கப்பட்டது. ஐகோன் உருவங்கள் பைசென்தியன் கலையில் ஒரு அங்கமாகும்.

**ஐகோன் உருவங்களின் பண்புகள் சில**

i) சிறிய மரப்பலகையில் மையினால் உருவ சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன.
ii) எப்போதும் பின்னணி பொன் நிறத்தால் ஆனது. மொசேயிக் சித்திரத்தைப் போன்று இதன் முகமும் பயம் நிறைந்ததாகக் காணப்படும்.
iii) ஆன்மீகத் தன்மையுடன் கம்பீரமானது.

- ஐகொன் சித்திரத்திற்கு முக்கிய உதாரணமாக இருப்பது இலங்கையில் மிக பிரசித்தி பெற்ற சதா சகாய அன்னையின் சித்திரமாகும்.

**வர்ணக் கண்ணாடிக் கலை (Stained Glass)**

- வர்ணக் கண்ணாடிச் சித்திரக் கலை கோதிக் கலைக்கு சார்பான கலைப் பாரம்பரியமாகும். கோதிக் ஆலயங்களில் பெரிய ஜன்னங்கள் அதிகம் இருப்பதனால் அந்த ஜன்னல்களில் இருக்கும் கண்ணாடிகளில் இச் சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன. ஜன்னல்கள் வட்டமான, மலரைப்போன்ற அமைப்பை உடையன.
- இச் சித்திரங்களின் விசேட தன்மையாவது கண்ணடிக்குள் சாயம் விட்டு இச்சித்திரங்களை செய்வதாகும். அச் செயல்முறை மொசேயிக் அமைப்பைவிட கடினமானது. கண்ணாடிக்குள் வர்ணம் இடும் முறையை கோதிக் கலைஞர்கள் இரகசியமாக வைத்திருந்ததினால் பழைய முறைகள் மறைந்து விட்டன. நிகழ்காலத்தில் வர்ண கண்ணாடி கலை இருந்தாலும் பழைய முறைக்கு சமப்படுத்த முடியாது.

**மத்திய கால சித்திரக்கலை**

**i) கியோற்றோ டீ பொர்டோனே (Giotto di Bordone) (கி.பி.1266 - 1337)**

- பிரெஸ்கோ (Fresco) சித்திரம் அல்லது புதிய சுவர்களில் பூச்சு காய்வதற்கு முன்னர் ஓவியம் வரைதல் முறையைக் கண்டு பிடித்தார்.
- இத்தாலியில் கோதிக் முறையிலான ஆலயங்கள் இருக்கவில்லை. ஆதலால் ரோமனஸ்க என்ற மத்தியகால உரோமன் ஆலயங்களின் கனமான சுவர்களில் இவர் ஓவியம் வரைந்தார். இவரின் பிரஸ்கோ ஓவியங்களுள் பிரசித்திப்பெற்ற ஓவியமாவது புளோரன்ஸ் நகரத்திலுள்ள புனித பிரான்சிஸ் அசீசியாரின் ஆலயத்தின் சுவர்களில் வரையப்பட்ட ஓவியங்களாகும். அவ் ஓவியங்களில் பின்வரும் பண்புகள் காணப்படுகின்றன.
    - உயிரூட்டமுள்ள மனிதர்
    - மரங்கள், மலைகள், இவைகளினால் பின்னணி அலங்கரிக்கப்பட்டுள்ளது.
    - பல வர்ண சிறகுகளுடைய பறவைகளை வரைந்து இயற்கை இரசணையை ஏற்படுத்தியுள்ளார்.
- பாதுவா ஆலயம் ஒன்றில் கியோற்றோவினால் வரையப்பட்ட கிறிஸ்துவின் வரலாற்றுக் கதைகளின் காட்சிகள் மிக இயற்கையாகவும் தத்ரூபமாகவும் உள்ளன. நிகழ்கால சித்திரக் கலையின் தந்தையென கியோற்றோலைப் போற்றுகின்றனர்.

**மறுமலர்ச்சிக் கால சித்திரக் கலை**

i) **லியோனாடோ டா வின்சி**

- மிலான் நகரில் உணவுச் சாலையின் சுவரில் இவர் வரைந்த இறுதி இராவுணவு ஓவியம் முக்கியமான ஓவியமாகும். ஒருமைப்பாடு சமநிலை என்பவற்றை கவனத்தில் கொண்டு வரையப்பட்டதாகும்.
- லியோனாடோ டா வின்சி வரைந்த மொனாலிசா ஓவியம் கிறிஸ்தவ நோக்கத்தை கொண்டிராவிடினும் அச் சித்திரம் உலக புகழ்பெற்ற சித்திரமாகும்.

ii) **மைக்கல் ஆஞ்சலோ**

- இவரின் உலக புகழ் பெற்ற சித்திரங்கள் இன்றும் காணக்கூடியதாக உள்ளன.
- கி.பி. 1508 சிஸ்ரையின் சிற்றாலயத்தில் (Sistine Chapel), அதாவது திருத்தந்தையின் பிரத்தியோக சிற்றாலயத்தில், மைக்கல் ஆஞ்சலோ வரைந்த ஓவியங்கள் மிகவும் முக்கியமானவை. இங்கு வரையப்பட்ட சித்திரங்கள்:
    - உலகப் படைப்பு
    - நடுத்தீர்வை
- உலக படைப்பு சித்திரத்தில் இறைவன் தமது நீட்டிய கரத்தினால் ஆதாமின் நீட்டிய கரத்திற்கு உயிர் கொடுக்கும் காட்சி மிகவும் உயிரோட்டமுள்ளது.
- இறுதித்தீர்ப்பு ஓவியத்தைப் பார்ப்போரின் மனதை சஞ்சலப்படுத்துவதோடு அங்கே வரையப்பட்ட மனிதர்களின் தோற்றத்தையும் அமைதியற்ற நிலையில் வரைந்துள்ளார்.

iii) **இறபாயல் சன்சியோ**

- இவரின் மிகச் சிறந்த சித்திரமாவது திருத்தந்தையின் உத்தியோக இல்லத்தில் வரையப்பட்ட ‘‘பிரெஸ்கோ” எனப்பட்ட சிமேந்து பூசப்பட்ட புதிய சுவரில் வரைந்த சித்திரமாகும்.
- இத்தாலி மக்களிடையே புகழ்பெற்ற மெடோனா (Madonnaa) என்ற இறை அன்னையின் சித்திரத்தை வரைந்தவராக இறபாயல் திகழ்கின்றார்.
- இறபாயலின் சித்திரங்களுள் மிகவும் அதிசயமானதும் பிரபல்யமானதுமான சித்திரமாக ‘‘கதிரைமாதா (Modonna of the Chair) சித்திரம் குறிப்பிடத்தக்கது.

## உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு

1. ஆரம்ப கிறிஸ்தவர்கள் அடையாளச் சித்திரங்களை பயன்படுத்தி நன்றி வழிபாடு செய்த முறையை மூல ஏடுகளிலிருந்து சேகரிக்க மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கவும்.
2. நிகழ்கால திருப்பலியில் கிரகோரியாரின் இசையை பயன்படுத்தும் முறையை கண்டறிய மாணவரை செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
3. லியோனாடோ டா வின்சி, மைக்கல் ஆஞ்சலோ, றபாயேல் சென்சியோ போன்ற கலைஞர்கள் கிறிஸ்தவ ஓவியங்களுக்கு உதவிமுறைமை மூலகங்களிலிருந்து தேடிக் கண்டு பிடிக்க மாணவரை உற்சாகப்படுத்தவும்.
4. கட்டிடக்கலை, சிற்பக்கலை, சித்திரக்கலை ஆகியவை பற்றி மாணவரோடு கலந்துரையாடுங்கள்.

## உசாத்துணை நூல்கள்


- ஞானமுத்து பிலேந்திரன், கிறிஸ்தவமும் நாகரிகங்களும், கத்தோலிக்க மாணவர் ஒன்றியம், யாழ்ப்பாணம், 2008.
- Lozzi Roma S.A.S. The Vatican, Via Filippo Nicolai, Roma, 1997.
- எஸ். ஏ. ஐ. மத்தியு, உலகக் கலைகள் ஒரு பார்வை, 2009.

**தேர்ச்சி 9.0 :** இலங்கை சமுதாயத்தின் நலன்கருதி கிறிஸ்தவ சபையின் பங்கெடுப்பை விளக்கி சமூக மேப்பாட்டிற்காக கிறிஸ்தவராக அர்ப்பணிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 9.1 :** கல்வியின் முன்னேற்றத்திற்காக திருச்சபை வழங்கிய ஒத்துழைப்பை விளங்கித் தமது கல்வி ஆற்றல்களை வளர்த்துக்கொள்வர்.

**பாடவேளைகள் :** 28

**கற்றல் பேறுகள் :**

- இலங்கை சுதந்திரம் அடைவதற்குமுன் வெளிநாட்டோரின் ஆட்சிக்காலத்தில் நாட்டில் நிலவி வந்த கல்வி முறையை ஆராய்வர்.

- இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின் கல்வித்துறையின் வளர்ச்சி, கத்தோலிக்க கல்வி முறைக்கு ஏற்பட்ட தாக்கங்கள், இக்கட்டு இடைஞ்சல்கள் மத்தியிலும் அதன் வளர்ச்சிக்காக ஆர்வத்தோடு உழைத்த பல கல்விமான்களைப்பற்றியும் அறிந்து கொள்வர்.

## விடய உள்ளடக்க வழிகாட்டி

### 9.1.1 வெளிநாட்டோர் ஆட்சிக்காலத்தில் கிறிஸ்தவ கல்விப்பணி

#### போர்த்துக்கேயர் காலத்திற்கு முன் கல்விப்பணி

- இலங்கையில் ஐரோப்பியரது ஆதிக்கமானது 1505 - 1948 வரையும் நடைபெறலாயிற்று.
- ஆரம்பத்தில் இலங்கை வந்த ஐரோப்பிய ஆட்சியாளர்களான போர்த்துக்கேயர் இலங்கையை 1505 தொடக்கம் 1658 வரையும் ஆதிக்கம் செலுத்திவரலாயினர். ஆரம்பத்தில் இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயர் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவர்கள்.
- போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும்முன் இலங்கையில் நிலவி வந்த பௌத்த, இந்து பாடசாலைகள், திண்ணைப்பள்ளிக் கூடங்கள், கோயில் மடப்பள்ளிக்கூடங்கள், மரநிழற்பள்ளிக்கூடங்கள் எனப் பல்வேறு விதமாக அழைக்கப்படலாயின. அத்தோடு இராப்பள்ளிக்கூடங்கள், நிலப்பள்ளிக்கூடங்கள் எனவும் பெயர் கொண்டு விளங்கின.
- பெரும்பாலும் இப்பள்ளிக்கூடங்கள் உயர்சாதியினருக்கு அல்லது சமூகத்திலே உயர் நிலையில் இருந்தவர்களுக்கே கல்வி புகட்டின.
- ஆரம்பகாலத்திலே போதிய வசதிகள் அற்ற நிலையின் காரணமாக, மாணவர்கள் எழுதிப்படிக்கும் நிலையற்று மனனம் செய்யும் முறையே இப்பாடசாலைகளின் கல்வி முறையாக கணிக்கப்பட்டு வந்தது.
- இக்காலக்கட்டத்தில் பெண்களுக்கான அறிவுமுறை முக்கியத்துவம் பெறவில்லை. அவர்களுக்கு அனுபவக்கல்வியே முக்கிய கல்வி முறையாக கணிக்கப்பட்டு வரலாயிற்று.
- இக் கல்விக்கூடங்களில் ''கூத்து'' என அழைக்கப்பெற்ற இசையும் நடனமும் ஒன்றிணைக்கப்பட்ட இசை - நடனக்கல்விமுறை மேலோங்கி வளர்ந்திருந்தது.
- இப்படியாக ஐரோப்பியரின் வருகைக்குமுன் இலங்கையில் கல்வி முறையானது மிகவும் பின் தங்கிய நிலையிலேயே தென்படலாயிற்று.

### 9.1.1.1 போர்த்துக்கேயர் காலக் கல்விப்பணி

- போர்த்துக்கேயரின் வருகையைத் தொடர்ந்து கல்வித்துறையில் அனுபவம் வாய்ந்த துறவறச் சபைகளான, பிரான்சிஸ்கன் சபையினர், இயேசு சபையினர், டொமினிக்கன் சபையினர், அகுஸ்தீன் சபையினரும் இலங்கை மண்ணில் காலடி எடுத்துவைத்ததோடு, போதனைகள், வழிபாடுகள், பாடசாலைக்கல்வி இலக்கியங்கள், நாடகங்கள் மனித நேயப்பணிகள் ஆகியவற்றிலும் அக்கறைகாட்டலாயினர்.
- இவர்களின் காலத்தில் பல்வேறு துறவறச்சபைகளைச் சார்ந்த குருக்கள் ஆசிரியர்களாக செயல்பட்டதின் காரணமாக கல்விக்கூடங்கள், சமய அறிவையும் வழிகாட்டல்களையும் வழங்கின.
- இக்காலத்தில் இலங்கையில் மேற்கத்திய கல்விமுறை அறிமுகம் செய்யப்பட்டமை கல்வித்துறையில் ஏற்பட்டதோர் புதிய திருப்பம் எனலாம்.

**இலங்கையின் கல்வி வளர்ச்சியில் பிரான்சிஸ்கன் சபையினர்**

- 1543ஆம் ஆண்டுதான் பிரான்சிஸ்கன் சபையினர் முதல்முறையாக அதிகாரப்பூவமாக இலங்கையில் மறைபரப்புப்பணியில் ஈடுபடுகின்றனர்.
- பிரான்சிஸ்கன் சபையினர் சுதேச மக்களது மொழியைக் கற்பதில் பெருமையும், ஆர்வமும் விடாமுயற்சியும் கொண்டதின் காரணமாக கோட்டேயிலும், யாழ்ப்பாணத்திலும் பல பாடசாலைகளை நிறுவலாயினர்.
- **முதலாவதாக *கோயில்பற்று பாடசாலைகள்*** எனப்பெயர்கொண்டு ஒரு பங்கிற்கு ஒரு பாடசாலை என்ற நிலையில் அமைக்கப்பட்டன. இவையே போர்த்துக்கேயர் காலத்தில் பிரான்சிஸ்கன் சபையினரால் அமைக்கப்பெற்ற முதல் முறைபாடசாலையாகும். இப்படியான கோயில்பற்றுப் பாடசாலைகள் யாழ்ப்பாணத்தில் 25உம், கோட்டேயில் 50மாக செயல்பட்டன. இவை தொடர்ந்து ஒல்லாந்த, பிரித்தானிய காலத்திலே கோல்புறுக் குழுவின் சீர்த்ருத்தம் வரை செயல்பட்டுவரலாயிற்று. இவை சிறிய பாடசாலைகளாக இயங்கிவந்தாலும், இங்கு செபம் செய்தல், மறை அறிவு பற்றிய வினாவிடை முறை ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து, சுதேச மொழிகளிலே நடத்தப்பட்டன. கிறிஸ்தவ சமய கீதங்கள் (கீர்த்தனைகள்), ஸ்தோத்திரப்பாடல்கள் என்பனவும் சுதேச மொழிகளிலேயே பாடப்பட்டன. அதனால் பிள்ளைகள் நாளாந்தம் இதய சுத்தியுடன் வழிபடக் கற்றுக்கொண்டனர்.
- எனினும் இப்பாடசாலைகளில் எழுத்து, வாசிப்பு போன்ற விடயங்களை எழுத்தறிவூட்டும் நோக்குடன் போர்த்துக்கேய முறையும் இப்பாடசாலைகளில் கையாளப்பட்டது.
- **இரண்டாவதாக** போர்த்துக்கேயர் காலத்தில் பிரான்சிஸ்கன் சபையினர், ***கல்லூரி முறைகளையும்*** அதாவது உயர் நிலைக்கல்வியையும், கடைப்பிடித்து வந்தனர். இக்கல்லூரிகள் ஐரோப்பியக் குருத்துவக் கல்லூரிகளுக்கு ஒத்ததாக அமைந்திருந்தன. இக்கல்வி முறையானது மதகுருவாக வரவிரும்பியவர்கட்கு அளிக்கப்படலாயிற்று.இவை போர்த்துக்கேய மொழியிலேயே இயங்கி வந்தன. இக்கல்லூரிகளில், சமயம், வேதசட்டம், வாசிப்பு, எழுத்து, எண்கணிதம், சங்கீதம், இலத்தீன், நற்பழக்கவழக்கங்கள் ஆகியன போதிக்கப்பட்டன. இப்பேர்ப்பட்ட கல்லூரிகள், கொழும்பில் புனித அந்தோனியார் கல்லூரியும், யாழ்ப்பாணத்தில் ஒன்றும், நவகமுவவில் ஒன்றுமாக மூன்று கல்லூரிகள் மாத்திரமே காணப்பட்டன.
- **மூன்றாவது** முறைக்கல்விக்கூடமாக ***அரசர்களுக்கான கல்விக்கூடங்களும்*** அமைக்கப்படலாயிற்று. போர்த்துக்கேயரால் சிறைபிடிக்கப்பட்ட, அல்லது அவர்களிடம் அடைக்கலம்புகுந்த, அல்லது கல்வி பயிலுவதற்காக அரசர்களால் அவர்களிடம் ஒப்புவிக்கப்பட்ட அரசர்கள், இளவரசர்களுக்கு இக்கல்விக்கூடங்களிலே கல்வி புகட்டப்பட்டது. இக்கல்வி முறையானது ஐரோப்பிய அரச கல்விக் கூடங்களை ஒத்ததாக அமைந்திருந்தன. இம்முறைக்கல்விக்கூடங்கள் கொழும்பிலும், கோவாவிலும், போர்த்துக்கல்லிலும் காணப்பட்டன.

- இவையும் போர்த்துக்கேய மொழியிலே இயங்கிவந்தன. இதன் பாடத்திட்டத்தில், எழுத்து, வாசிப்பு, இலத்தீன், அரசர்களுக்கான கலை உள்ளடக்கப்பட்டிருந்தன. இராஜசிங்க மன்னன், கோட்டே மன்னனாகிய டொண் ஜுவான் போன்றோர் இத்தகைய கல்வியைக் கற்றனர்.

**பிரான்சிஸ்கன் சபையினரால் நடத்தப்பட்ட கல்வி முறையின் குறைகளாவன**

1. கத்தோலிக்கரின் விகிதாசாரத்திற்கேற்ப, பாடசாலைகள் அதிகரிக்கப்படவில்லை.
2. உயர் கல்லூரிகள் மூன்றே மூன்று மாத்திரமே இருந்தன.
3. பாடசாலைகள் எல்லாம் சமயக்கலையை மையமாக்கிகொண்டே இயங்கின.
4. கீழ்மட்டத்தாருக்கும் உயர் மட்டத்தாருக்கும் பாடசாலைகள் இருந்தன. ஆனால் இடைநிலையினருக்கான பாடசாலைகள் இருக்கவில்லை.

**போர்த்துக்கேயர் காலத்தில் இயேசு சபையினரின் கல்விப்பணி**

- கல்வித்துறையில் நிறைந்த நிர்வாக ஆற்றலும் அனுபவமும் கொண்ட இயேசு சபையினர் 1602இல் இலங்கைக்கு வந்தனர்.
- இவர்கள் கொழும்பில் உள்ள இடை நிலைப்பிள்ளைகளுக்கு இடை நிலைப் பாடசாலைகளை அமைக்கும் நோக்குடன் அழைக்கப்பட்டனர்.
- இவர்கள் **ஆரம்ப நிலை, இடைநிலை, உயர்கல்வி** என்ற மூன்று வகையான கல்வி நிலையங்களை ஆரம்பிக்கலாயினர்.
- ஆரம்பத்திலே இவர்கள் கோட்டேயில் தம்பணியைத் தொடங்கி, 1622இல் யாழ்ப்பாணத்திற்கு இதனை விரிவுபடுத்தலாயினர்.
- இயேசு சபையினர் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்தமையால் ஏற்கெனவே தமிழ் மொழியில் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தனர்.
- இவர்கள் பெரும்பாலான இடங்களில் ஆரம்பப் பாடசாலைகளைத் தொடங்கி நடாத்தினர். இவ்வாறான பாடசாலைகள் கொழும்பிற்கு வெளியே மாத்திரம் 12 காணப்பட்டன. இப்பாடசாலைகளில், நெடுங்கணக்கு, வாசிப்பு, எழுத்து, பாட்டு, நற்பழக்க வழக்கங்கள், கிறிஸ்தவ கோட்பாடுகள் என்பனவும் கற்பிக்கப்பட்டன. இவ் ஆரம்பக் கல்விமுறையிலும் இலத்தீன், போர்த்துக்கேய மொழிகள் பயன்படுத்தப்பட்டன. இலத்தீன் மொழியில் ஆராதனையும் தமிழ், சிங்கள மொழியில் சமய போதனைகளும் நடாத்தப்பட்டன. எழுத்தறிவு போர்த்துக்கேய மொழியில் நடாத்தப்பட்டது.
- இவர்கள் சமயகோட்பாடுகளைப் பரப்ப சிறந்த ஊடகமாக நாடகம், இசை என்பவற்றைப் பயன்படுத்தி வேதாகமக் கதைகள், திருச்சபையின் வரலாற்றுச் சம்பவங்கள் என்பன நாடகங்களாக சித்திரிக்கப்பட்டன. இவை சுதேச மொழிகளில் எழுதப்பட்டு நடிக்கப்பட்டன. இயேசு சபையினரே இலங்கையில் நாடகத்தின் வழியாக கல்வி கற்பிக்கும் முறையை (Role Play) அறிமுகப்படுத்தினர்.
- இவற்றைவிட இயேசு சபையினர் இலங்கையில் **கல்லூரி முறைக்கல்வியையும்** ஆரம்பிக்கலாயினர். இக் கல்லூரிக்கல்வி முறையானது கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் நிறுவப்பட்டன. கொழும்பில் 150 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி காலப்போக்கில் பெரிதும் வளர்ச்சியுறலாயிற்று, யாழ்ப்பாணக்கல்லூரியில் கீழ்ப்பிரிவில் 80 மாணவர்களும், மேல்ப்பிரிவில் 22 மாணவர்களும் கல்விகற்கலாயினர்.
- இக் கல்லூரிகளில் ஆரம்ப நிலை, இடைநிலை, உயர் நிலை என மூன்று பிரிவுகள் காணப்பட்டன. இதன் ஆரம்பநிலை இளம் வயதினருக்கே உரியதாக இருந்தமையால் இங்கு எழுத்து, வாசிப்பு போர்த்துக்கேய மொழியில் கற்பிக்கப்படலாயிற்று. நல்லொழுக்கம் ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட்டதுடன், இலத்தீன் மொழியும் இங்கு கற்பிக்கப்படலாயிற்று.
- இம்முறையே கல்லூரிக்கல்வியின் இடைநிலைப்பிரிவிலும் காணப்பட்டது.

- இக் கல்லூரிக் கல்வியின் உயர்நிலைப்பிரிவு இறையியல் கற்பிக்கும் பிரிவாகக் காணப்பட்டது. இதில் முதிர்ச்சி பெற்ற மாணவர்கள், மதகுருக்களாக வரவிரும்பிய மாணவர்கள் இலத்தீன் மொழியில் கல்வி கற்றனர். இங்கு போர்த்துக்கேய அதிகாரிகளின் பிள்ளைகள், சிங்கள பிரமுகர்களின் பிள்ளைகள் பொதுவாகக் கல்வி கற்றாலும், சாதாரண குடும்பத்துப் பிள்ளைகளுக்கும் இடமளிக்கப்பட்டது.

**இவர்களது கல்விமுறையில் காணப்பட்ட சிறப்பம்சங்களாவன**

- மீண்டும் மீண்டும் சொல்லிக் கொடுத்தல், ஞானகீத இசைப்பின் மூலம் யாவற்றையும் அறிவுறுத்தல், நாடகங்கள், கற்புலன் செவிப்புலன் ஆகிய முறைகளும் கையாளப்பட்டன. அத்தோடு வினாவிடை முறையும் கையாளப்பட்டன.
- இவ்வாறு இக்காலத்தில் பிரான்சிஸ்கன், இயேசு சபையினரோடு சேர்ந்து டொமினிக்கன், அகுஸ்தீனார் சபையினரும் பல்வேறுபட்ட கல்விப்பணிகளில் ஈடுபடலாயினர். இப்படியாக போர்த்துக்கேயர் கல்விமுறை திருச்சபையின் அதிகாரிகள் கையில் விடப்பட்டமையால் அவர்கள் சுதந்திரமாக செயல்பட்டது மாத்திரமல்ல, போர்த்துக்கேய அரச உதவியும் பெருந்தொகையாக அவர்களுக்குக் கிடைத்தது.
- மேலும் இலங்கையிலே அவர்கள் மக்களை மதமாற்றம் செய்வதற்கு கல்வி சிறந்ததோர் ஊடகம் என்பதை உணர்த்தியது மாத்திரமல்ல அம்முறையைத் தொடர்ந்து ஒல்லாந்தரும் பிரித்தானியரும் பின்பற்றினர். போர்த்துக்கேயர் காலத்தில் மதம்சார்ந்த கல்விமுறையே முதலிடம் வகுத்தது, மதச்சார்பற்ற கல்விமுறை இரண்டாம் நிலையிலேயே இருக்கலாயிற்று. இவர்கள் காலத்து கல்விமுறையின் பிரதான அம்சமாக கிறிஸ்தவத்தை அறிமுகம் செய்வதே முதலிடத்தைப் பெறுகின்றது.
- அத்தோடு போர்த்துக்கேயர் காலத்தில் சுதேச மொழி, சுதேச மரபுகள் என்பன பயனப்படுத்தப்பட்டு ஏராளமான கிறிஸ்தவ சொற்பதங்களும் அக்காலத்தில் உருவாக்கப்பட்டிருந்தன.
- இன்று பல்கலைக்கழகங்களில் ‘‘நாடகமும் அரங்கியலும்’’ ஒரு பாடமாக வளர்ச்சிபெற போர்த்துக்கேய கல்வி முறையே அதற்கு வித்திட்டதென்றால் அதனை எவரும் மறுக்க முடியாது.
- போர்த்துக்கேயரின் இக்கல்விமுறை, மறைப்பரப்புப் பணி பல இக்கட்டு இடைஞ்சல்கள் மத்தியில் நடைபெற்றது. கோட்டே அரசில் விதிய பண்டார ஏற்படுத்திய கலகம், யாழ்ப்பாண அரசனாகிய சங்கிலி மன்னாரில் ஏற்படுத்திய மனித படுகொலை இதன் வளர்ச்சியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தலாயிற்று.

### 9.1.1.2 ஒல்லாந்தர் காலக் கல்விப்பணி

- இலங்கையில் ஒல்லாந்தரின் கிழக்கிந்திய கொம்பனி 1658 - 1796 வரை நிர்வாகத்தில் இருந்தது.
- இவர்களது கல்விமுறையும் போர்த்துக்கேயர் கால கல்வி முறையைப் போன்று சுதேசிகளை கிறிஸ்தவர்களோடு ஒன்றிணைக்கும் முறையாக கையாளப்பட்டது.
- ஒல்லாந்தர் போர்த்துக்கேயரைப்போன்று மத நிறுவனங்களில் கல்வியை முற்று முழுதாகவிட்டுவிடாது, அரச கட்டுப்பாட்டின்கீழ் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட கல்வி முறையை வழங்க முற்பட்டனர். மேலும் குறைந்த செலவில் சிறந்த கல்வியை வழங்கக்கூடிய முறைகளையே கையாண்டனர்.

**இவர்கள் காலத்திலே நான்குவிதமான பாடசாலைகள் நடைமுறையில் இருந்தன.**

i) கோயில்பற்று பாடசாலைகள்
ii) செமினேரிகள்
iii) ஒல்லாந்த பாடசாலைகள்
iv) அனாதை இல்லங்கள்

## i) கோயில்பற்று பாடசாலைகள்

- போர்த்துக்கேயர் நிருவகித்து வந்த **கோயில்பற்று பாடசாலைகளையே** தொடர்ந்து ஒல்லாந்தரும் நிருவகித்து வந்தனர். அரச பிரமானங்கள் வழியாக, பாடசாலையில் பணிபுரிந்த ஆசிரியர்களுக்குரிய வேலைநேரம், பயிற்சி, அவர்களின் கடமைகள் ஆகியனவற்றை அடிக்கடி தெளிவு படுத்தலாயினர்.
- பாடசாலைகளில் பணிபுரிந்த ஆசிரிய குழுவில் கிறிஸ்தவ, வயது முதிர்ந்த, பிரபல குடும்பத்தைச் சார்ந்த ஒருவர் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இந்த தலைமை ஆசிரியரே ''தோம்பு'' பொறுப்பையும் நடாத்திவந்தார். (வட்டாரப் பதிவுப் பொறுப்பு) பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவு, திருமுழுக்குப் பதிவு ஆகியவற்றையும் இவர் மேற்கொண்டார். சிலவேளைகளில் காணிகளுக்கான உறுதிகளையும் இவர் பதிவு செய்தார். இதனால் தலைமை ஆசிரியரின் மதிப்பும் மரியாதையும் சமூகத்திலே உயர்ந்து விளங்கியது.
- ஒல்லாந்தர் கல்வித்துறையில் தம் செலவைக் கட்டுப்படுத்த ஒல்லாந்தில் இருந்து ஆசிரியர்களை வரவழைப்பதற்குப் பதிலாக, சுதேசிகளை ஆசிரியர்களாகப் பயிற்றுவித்து பாடசாலைகளில் தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளைக் கையாண்டனர். கற்பித்தல் முறையில் வினா விடை முறை, வாசிப்பு, எழுத்து, கிறிஸ்தவ கோட்பாடுகள் ஆகியவற்றைப் புகட்டினர்.
- ஒல்லாந்தர் தம் சொந்தச் செலவில், நன்கொடை வழங்கி பாடசாலைகளை நிர்வகிக்கவில்லை, மாறாகத் தண்டப் பணம் பெற்று அப்பணத்தைக்கொண்டே பாடசாலைகளை நிர்வகித்து வந்தனர். அப்பணத்தின் மூலமாகத்தான் ஆசிரியர்களின் ஊதியத்தையும் வழங்கிவந்தனர். இத்தண்டப்பணம் பாரபட்சமின்றி எல்லோரிடமும் அறவிடப்படலாயிற்று.
- 8-15 வயதுவரை உள்ள பிள்ளைகள் எல்லோரும் பாடசாலை செல்லவேண்டும் என வற்புறுத்தப்பட்டனர். அதன்பின்னும் மூன்று அல்லது நான்கு வருடங்கள் வாரம் இரு தடவை சமயப் பாடசாலைக்குச் செல்ல வற்புறுத்தப்பட்டனர். இப்டியான கட்டாயக்கல்விமுறை மக்களின் மதமாற்றத்திற்கு பெரிதும் உதவலாயிற்று.
- ஒல்லாந்தர் பாடசாலைகளை கிழக்கிந்திய கொம்பனியின் கட்டுப்பாட்டின் கீழ் வைத்ததோடு, அரச நிர்வாகத்தை சீர்படுத்துவதற்கென 1663இல் இலங்கையில் அரச ஆணைக்குழுவொன்றையும் நியமித்தனர்.
- இவ்வாணைக்குழுவில் ஒல்லாந்த குரவர்கள் முதன்மை இடத்தை வகித்ததோடு, இக்குழுவே ஆசிரியர்களை நியமித்தல், பரீட்சித்தல், மேற்பார்வை செய்தல் ஆகிய விடயங்களுக்குக் பொறுப்பாய் இருந்தது. இக்குழுவினர் மக்கள் மத்தியில் நிலவிய பிணக்குகளைத் தீர்ப்பதிலும் அக்கறைகாட்டினர்.
- ஒல்லாந்த பாடசாலை முறையில் ''மேற்பார்வை'' முக்கிய இடத்தைப் பெற்றது. வருடத்திற்கு ஒருமுறை அறிவித்தலோடு நடைபெறப்படும். முன்கூட்டிய அறிவித்தலுக்கிணங்க அன்றைய தினம் விதானை ஆசிரியர்கள், மாணவர்கள் யாவரும் பாடசாலைக்கு சமூகமளித்திருப்பர். அவ்வேளை மாணவர்கள் வாசிப்பு, எழுத்து, சமய வினாவிடை, பத்துக்கட்டளைகள், விசுவாச விதிகள், இயேசு கற்பித்த செபம் போன்றவற்றில் மேற்பார்வைக் குழுவினால் பரீட்சிக்கப்பட்டனர். இவை வினாவிடை முறையில் நடாத்தப்பட்டன. அத்தோடு பரிசில்களும் வழங்கப்பட்டன. அவ்வேளை, பாடசாலை, தேவாலய மரபு பதிவேடுகளும், பாடசாலைகள் எல்லாம் பரீட்சிக்கப்பட்டு திறமையற்ற ஆசிரியர்கள், அவர்களின் ஒழுங்கீனம் ஆகியனவும் விசாரிக்கப்பட்டன.

## ii) செமினரி முறைப்பாடசாலைகள்

- கோயில்பற்று பாடசாலைகளை விட, ***செமினரி முறைப்பாடசாலைகளும்*** ஒல்லாந்தர் காலத்தில் தென்பட்டன. இங்கு மேற்கத்திய நாடுகளின் கல்வி முறையே கையாளப்பட்டன. இங்கு உயர் வகுப்புக்களில் டச்சு மொழி புகட்டப்பட்டது. அத்தோடு தேவைக்கேற்ப இலத்தீன், கிரேக்கம் ஆகிய மொழிகளும் புகட்டப்பட்டன. கிறிஸ்தவம், தர்க்கவியல் ஆகியனவும் உயர்மட்டத்தில் கற்பிக்கப்பட்டன. இங்கிருந்து மாணவர்கள் ஒல்லாந்து தேசத்தில் உள்ள Leyden பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.
- செமினரி கல்வி முறையானது ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டில் இருக்கவில்லை, இவ்வாறான செமினரி பாடசாலை முறைகள் கொழும்பிலும், யாழ்ப்பாணத்தில் நல்லூரிலும் காணப்பட்டன. இக்கல்வி நிலையங்களில் மாணவர்கள் குருக்களாக, எழுதுவினைஞர்களாக , மொழிபெயர்பாளர்களாக, உபதேசிகளாக, பயிற்றுவிக்கப்பட்டனர், வருடத்திற்கு இரு முறை மாணவர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.
- தகுந்ததோர் தலைமை ஆசிரியர் இல்லாமையால் 1690இல் யாழ்ப்பாணத்தில் தொடங்கப்பெற்ற செமினரி கல்விமுறையானது 1732இல் முடப்பட்டு அம்மாணவர்கள் கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.
- இந்நிறுவனங்களில் டச்சுமொழி, இலக்கணம் ஆகியன அதிகமாகக் கற்பிக்கப்பட்டன.
- இப்பாடசாலைகளில் தமிழ், சிங்கள மாணவர்கட்கு அனுமதி சட்டத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இங்கு கல்வி பயின்ற மாணவர்கள் சுதேச பாடசாலை ஆசிரியர்களாக நியமனம் பெற்றனர். இங்கு கல்வி பயின்றோர், அரச பதவிகளை மட்டுமல்ல, கிழக்கிந்திய ஒல்லாந்த கொம்பனிகளிலும் பதவிகளைப் பொறுப்பேற்றனர்.
- அத்தோடு இப்பாடசாலைகளில், சமூகத்தின் உயர் குடும்பங்களைச் சார்ந்தோர், முதலியார், கிராமத்தலைவர், வியாக்கியானம் அளிப்போர், எனப்பல உயர் பதவிகளையும் பெற்றனர்.
- எனினும் இப்பாடசாலைக் கல்வித்திட்டத்தில் சமன் அற்ற நிலை தென்படலாயிற்று, அதாவது உயர்கல்வி முறையில் சுதேச மொழிகளுக்கு இடம்மில்லாது, இலத்தீன், கிரேக்கம், எபிரேயம் போன்ற மொழிகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது.
- உயர்சாதிக் குடும்பத்தில் தோன்றிய உயர்சாதி மாணவர்கள் அரச செலவில் ஒல்லாந்த பல்கலைக்கழகங்கட்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.
- காலப்போக்கில் இச்செமினரி பாடசாலைகளின் அமைப்பு முறை ஒன்றுக்கொன்று ஒவ்வாத முறையில் செயல்பட்டதின் காரணமாக தோல்வியில் முடிவுற்றதாக அறிய வருகின்றோம்.

## iii) ஒல்லாந்த பாடசாலைகள்

- ஒல்லாந்தர் காலத்தில் ***ஒல்லாந்த பாடசாலைகள்*** சிலவும் இலங்கையில் நிலவிவந்தன. இங்கு ஒல்லாந்த பரங்கிப் பிள்ளைகள் கல்வி கற்றனர். குருமாரும், உபதேசிமாரும் இங்கு கல்வி கற்பித்தனர். எழுத்து, கணிதம், வாசிப்பு போன்றவை இங்கு கற்பிக்கப்பட்டன.
- இவ்வகையான பாடசாலைகள் 1737இல் கொழும்பில் நான்கிருந்தன. அத்தோடு மாத்தறை, காலி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் இப்பேர்ப்பட்ட ஒல்லாந்த பாடசாலைகள் காணப்பட்டன. இங்கு கல்வி கற்ற இலங்கையர் ஒல்லாந்த பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

## iv) அனாதை இல்லப் பாடசாலை

- ஒல்லாந்தர் காலத்தில், கோயில்பற்று பாடசாலைகள், செமினரி பாடசாலைகள், ஒல்லாந்த பாடசாலைகளைவிட, ***அனாதை இல்லப் பாடசாலைகளும்*** நிலவிவரலாயிற்று. இங்கு ஆண், பெண் இருபாலரும் கல்வி கற்றனர். எழுத்து, வாசிப்பு, எண்கணிதம், சமயம்

என்பன இங்கு புகட்டப்பட்டன.

- அத்தோடு ஆண்பிள்ளைகளுக்கு, வர்த்தமும், பெண்பிள்ளைகளுக்கு வீட்டு வேலை, தையல், பின்னல், நூல்நூற்றல் என்பனவும் கற்பிக்கப்பட்டன. இவை அரச உதவியில் நடாத்தப்பட்டு வந்தன. எல்லா பயிற்சி பெற்ற பிள்ளைகளும் 18-20 வயதில் அங்கிருந்து அகற்றப்பட்டனர்.
- இப்படியாக ஒல்லாந்தர் கால கல்விமுறையை நாம் ஆராயும் போது, செமினரிகளில் சுதேசிகளுக்கும் இடமளிக்கப்பட்டன. அனாதை இல்லப்பாடசாலை, கட்டாயக்கல்வி 8-15 வயதுவரை, 1737இல் அச்சுக்கூடம் அமைத்து அதன்வழி, துண்டுப்பிரசுரம், இலக்கிய நூல்கள் ஆகியன கல்விக்காக அச்சிட்டமை, பாடசாலைகளை ஊடகமாகக் கொண்டு மக்களுடன் சமூக உறவை ஏற்படுத்தல் ஆகியன சிறப்பம்சங்களாகும்.

### 9.1.1.3 ஆங்கிலோயர் காலக் கல்வி முறை

- ஒல்லாந்தரைத் தொடர்ந்து ஆங்கிலேயர் இலங்கையை 1796-1948 வரையும் ஆட்சிபுரிந்தனர்.
- இக்காலத்தில் ஆங்கில மொழி உலகமட்டத்திலே முக்கியம் வாய்ந்ததோர் மொழியாகக் கணிக்கப்பட்டது. இலங்கையிலும் அதிகமானோர் ஆங்கிலத்தைக் கற்கத் தொடங்கினர்.
- 1798ல் ஆங்கிலேயர் பாடசாலைகளைப் பொறுப்பேற்றபோது அவற்றை அங்கிலிக்கன், பப்டிஸ்ட், வெஸ்லியன், அமெரிக்க மிஷன் குருக்களைக் கொண்ட குழுவினரிடம் ஒப்படைத்தனர்.
- ஆங்கிலேய காலத்தில் மூன்றுவிதமான பாடசாலைகள் காணப்பட்டன:
    i) **அரசாங்கப் பாடசாலைகள் :** இவை பெரும்பாலும் தமிழ், சிங்கள மொழிகளில் இயங்கிவரலாயிற்று.
- இவை பெரும்பாலும் அங்கிலிக்கன் திருச்சபையைச் சார்ந்த குருக்களினால் நடாத்தப்பட்டு வந்தன.
    ii) **மிஷன் பாடசாலைகள் :** இவை புரட்டஸ்தாந்து மிஷனரிமாரால் நடாத்தப்பட்டு வந்தன.
    iii) **பிரிவெனப் பாடசாலைகள் :** இவை பௌத்தபிக்குகளால் நடாத்தப்பட்டு வந்த பாடசாலைகள்.
- 1829 - 1832க்கும் இடைப்பட்ட காலத்தில் இயங்கிவந்த கோல்புறூக் - கெமரோன் கொமிஷன் கொழும்பில் ஒரு பாடசாலை ஆணைக்குழுவையும், ஏனைய மாகாணங்களில் பாடசாலைச் சபைகளையும் அமைக்கலாயிற்று.
- கொழும்பில் அமைக்கப்பட்ட பாடசாலை ஆணைக்குழுவில், அங்கிலிக்கன் திருச்சபைக் குருக்களும் அங்கம் வகித்தனர். இக்குழு பல ஆங்கிலப் பாடசாலைகளை நடாத்தியது. (உ+ம்) கொழும்பு றோயல் கல்லூரி.
- இப்பாடசாலைகள் எல்லாம் திறம்படச் செயல்பட்டமையால் பலர் இங்கு ஈர்க்கப்பட்டனர். ஆங்கிலேயர் காலத்திலும் பாடசாலைக்கல்வி முறையானது மறையறிவைப் பரப்பும் ஊடகங்களாகச் செயல்பட்டன.
- 1841ஆம் ஆண்டு ஆங்கிலேயரின் இலங்கை ஆளுனராக ஸ்டுவட் மக்கன்சி என்பவர் இம்முறையை மாற்றி அனைத்து திருச்சபைக் குரவர்களும் அங்கம் வகிக்கக்கூடிய முறையிலே மத்திய பாடசாலை ஆணைக்குழுவொன்றையும் அமைக்கலானார். ஆனால் இதில் பௌத்த, இந்து குருக்களுக்கு இடமளிக்கப்படவில்லை.
- 1869ஆம் ஆண்டு மத்திய பாடசாலைக்குழு அகற்றப்பட்டு கல்விப் பொதுத்திணைக்களம் அமைக்கப்பட்டதின் காரணமாக, சுதேச பாடசாலைகளை அமைக்கும் முறை எல்லா மதத்தவர்க்கும் அளிக்கப்படலாயிற்று.
- இவ்வாறக ஆங்கிலேயர் காலத்திலே பல கிறிஸ்தவக் குருக்கள் கல்விப் பணியிலே ஈடுபடலாயினர்.

i) 1801இல் கிறிஸ்டியன் டேவிட் என்பவர் கிறிஸ்தவ அறிவை வளர்ப்பதற்கென அமைக்கப்பட்ட கிறிஸ்தவ சபையின் சார்பாக இலங்கை வந்து யாழ்ப்பாணத்தில் தம் கல்விப் பணியைத் தொடங்கலானார். (SPCK) - Society for Promoting Christian Knowledge)

ii) 1912இல் ஜேம்ஸ் சேபர் என்பவர் தலைமையில் பப்டிஷட் மிஷனரி சபையினர் இலங்கைவந்து கல்விப்பணியிலே ஈடுபடலாயினர். இவர்கள்தான் கொழும்பு றோயல் கல்விக்கூடத்தை ஆரம்பித்தவர்கள்.

iii) 1815ஆம் ஆண்டு வெஸ்லியன் மிஷனரிஸ் என்றழைக்கப்பட்ட சபையினர் இலங்கையில் பல இடங்களில் கல்வி நிலையங்களை ஆரம்பிக்கலாயினர். கொழும்பில் வெஸ்லி மெதஷ்ட் கல்லூரி, கண்டியில் கிங்ஸ்வூட் கல்லூரி, காலியில் றிச்மொன்ட் கல்லூரி என்பன இவர்களால் ஆரம்பிக்கப்பட்டவையாகும்.

iv) அமெரிக்கன் மிஷனரி சபையினர் யாழ்ப்பாணத்தில் வட்டுக்கோட்டையில் உயர்தரப்பாடசாலைகள், யாழ் நகரில் மத்திய கல்லூரி, உடுவில் மகளிர் பாடசாலை ஆகியன இவர்களால் தொடங்கப்பெற்ற பாடசாலைகளாகும்.

v) இவ்வாங்கிலேயர் காலத்தில்தான் 1845ஆம் ஆண்டில் இலங்கைக்கு வரத்தொடங்கிய கத்தோலிக்க திருச்சபைக் குருக்கள், பல்வேறு துறவறச்சபைகளைச் சார்ந்த அருட்தந்தையர்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் பல்வேறுபட்ட பாடசாலைகளை இலங்கையில் அமைக்கலாயினர். இவற்றுள் கொழும்பு புனித ஆசீர்வாதப்பர் கல்லூரி, யாழ்நகர் புனித பத்தரிசியார் கல்லூரி ஆகியன குறிப்பிடத் தக்கன. காலப்போக்கில் கத்தோலிக்கர் வசம் 750க்கும் மேற்பட்ட பாடசாலைகள் இருந்தன.

- இப்படியாக நாடு சுதந்திரமடைவதற்கு முன் ஆங்கிலேயர் 235க்கும் மேற்பட்ட பாடசாலைகளை அமைத்து நாடுமுழுவதிலும் 10,000க்கும் மேற்பட்ட மாணவ மாணவியருக்கு கல்வியளித்து வரலாயினர்.
- ஆங்கிலேயர் காலக்கல்வி விசேடமாக சாதி, சமயம் என்ற வேறுபாடின்றி அனைவரும் ஒன்றாகக் கல்வி கற்கவும், பெண்கள் கல்வியின் வளர்ச்சியிலும் மிக்க அக்கறையும் காட்டலாயினர்.
- 1824ஆம் ஆண்டு பெண்களுக்கென உடுவிலில் தொடங்கப்பெற்ற பெண்கள் பாடசாலையே ஆசியாவிலே முதல்முதலாகத் தொடங்கப்பெற்ற பெண் விடுதிப் பாடசாலையாகும்.
- ஆங்கிலேயர் காலத்திலேதான் தமிழ் - தமிழ் சொல் அகராதி, தமிழ் - ஆங்கில சொல் அகராதிகளும் ஆரம்பிக்கப்பட்டன. அருட்திரு மைரன் உயின்விலே என்பவர்தான் தமிழ் ஆங்கில அகராதியை முதல் முதலாகப் பதிப்பித்தார்.
- இக்காலத்தில் இவர்கள் அச்சியந்திர ஆலைகளை அமைத்து துண்டுப்பிரசுரங்கள், மருத்துவ நூல்கள் போன்ற பல்வேறுபட்ட நூல்களைப் பதிப்பித்து மக்களின் அறிவை வளர்க்க முற்பட்டனர்.
- ஆங்கிலேயர் இக்காலத்திலே மாணவ மாணவியருக்கு விஞ்ஞான மருத்துவக் கல்வியைப் புகட்டியது மாத்திரமல்ல, முதன்முதலாக மானிப்பாயில் மருத்துவக் கல்லூரியையும் நிறுவலாயினர்.
- இக்காலகட்டத்தில்தான் யாழ் திருத்தூதரக மறைவட்டத்தில் (விக்காரியேட்டில்) பணி புரிந்துகொண்டிருந்த **அருட்தந்தை கிறிஸ்தோபர் ஏர்னஸ்ட் பொஞ்சீன்,** இலங்கையின் கல்வித்திட்டத்தையிட்டு ஆழமானதோர் ஆய்வை மேற்கொண்டு அம்முறை எவ்வாறு அங்கிலிக்கன், புரட்டஸ்தாந்து மதத்தைச் சாராதவர்களைப் பாதிக்கின்றதென மூன்று முக்கிய ஆய்வுக்கட்டுரைகளை பிரசுரிக்கலானார். அவையாவன:

i) இலங்கையில் கத்தோலிக்க கல்வியையிட்ட ஒரு சில வார்த்தைகள். இதனை 1860ம் ஆண்டு பிரசுரித்தார்.

ii) பல்வேறு மதமும் பொதுவான கலவன் பாடசாலையும் என்ற தலைப்பில் இன்னுமொரு கட்டுரையை 1861ம் ஆண்டு பிரசுரித்தார்.

iii) கத்தோலிக்க திருச்சபையும் நாகரீகமும் என்ற தலைப்பில் மூன்றாவது கட்டுரையை 1867ம் ஆண்டு பிரசுரித்தார்.

- இவரது ஆய்வுக்கட்டுரைகளின் வழியாக இலங்கையின் கல்வி நிலையை நன்குணர்ந்த ஆங்கிலேய அரசானது 1869ம் ஆண்டு கல்வித்திணைக்களத்தை அமைக்கலாயிற்று. அது இன்றும் நடைமுறையில் இருந்து வருகின்றது.
- இதன் வழியாக கத்தோலிக்க திருச்சபை மட்டுமல்ல இலங்கையிலுள்ள எல்லா மதத்தவர்களும் பௌத்தர், இந்துக்கள், முஸ்லீம்கள் எல்லோரும் தங்கள் பாடசாலைகளை நிறுவலாம், தாய்மொழியிலே கல்விகற்பிக்கலாம் என்ற ஆணையும் பிறப்பிக்கப்பட லாயிற்று.
- இப்படியாக பலமதப்பாடசாலை முறைக்கு இலங்கையிலே வித்திட்டவர் அருட்தந்தை பொஞ்சீன் அடிகளார் எனக்கூறின் அதனை மறுப்பர் யாருமிலர். அத்தோடு பல பாடசாலைகள், கல்லூரிகளையும் இலங்கையில் ஆரம்பித்து வைத்தவரும் இவரேயாவார். கொழும்பு புனித வளனார் கல்லூரியும் இவரது அயராத முயற்சியினாலேயே ஆரம்பிக்கப்பட்டது.
- 1868ஆம் ஆண்டு ஆடி மாதம் 24ஆம் நாள் ஆயராகத்திரு நிலைப்படுத்தப்பட்டு, யாழ் மறைமாவட்டத்தைப் பொறுப்பேற்றார்.
- 1883ஆம் ஆண்டு கொழும்பு திருத்தூதரக மறைவட்டத்தின் (விக்காரியேட்டின்) ஆயராகப் பொறுப்பேற்று, 1887ஆம் ஆண்டு தைத்திங்கள் 6ஆம் நாள் கொழும்பு திருத்தூதரக மறைவட்டம் (விக்காரியேட்), கொழும்பு மறை மாவட்டமாக உயர்த்தப்பட்போது, அதன் முதல் பேராயராக நியமனமும் பெற்றார்.

## 9.1.2 சுதந்திரத்தின் பிற்காலம்

### 9.1.2.1 கல்வித்துறையில் முன்னேற்றம்

- 1969ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட புதிய கல்வித்துறை மசோதாவின் காரணமாக கல்விப்பொது திணைக்களம் அமைக்கப்பட்டது மாத்திரமல்ல, கிறிஸ்தவ பாடசாலைகள், குறிப்பாக, கத்தோலிக்க பாடசாலைகள் தொடர்ந்தும் வளர்ச்சியுற்றன.
- நகர்ப்புறங்களில் உயர்தரக்கல்லூரிகள் சகல வசதிகளுடனும் அமைக்கப்பட்டன. அவை அரசாங்கத்தின் மேற்பார்வையில், பல்வேறுபட்ட திருச்சபை நிர்வாகங்களின் கீழ் இயங்கின.
- கத்தோலிக்க பாடசாலைகளைக் கண்காணிப்பதற்கென ஒவ்வொரு மாவட்டத்திலும் பொது முகாமையாளர் நியமிக்கப்பட்டதோடு ஒவ்வொரு பங்குத்தந்தையும் பொது முகாமையாளரின் பிரதி நிதியாக செயல்படலானார்.
- கத்தோலிக்க ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்கென ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைகள் மக்கோனா, போலவலானை, கொழும்புத்துறை போன்ற இடங்களில் அமைக்கப்படலாயின.
- கத்தோலிக்க திருச்சபையின் கல்வி நிறுவனங்களைக் கண்காணிக்க பல ஆண், பெண் துறவற சபைகள் முன்வந்தன. அவையாவன :

| | |
|---|---|
| i) ஆசீர்வாதப்பர் சபையினர் (OSB) | ii) அமல மரித்தியாகிகள் (OMI) |
| iii) இயேசு சபையினர் | iv) டி லா சால் சகோதரர்கள் |
| v) மாறிஸ்ட் சகோதரர் | vi) திருக்குடும்பக் கன்னியர் |
| vii) நல்லாயன் கன்னியர் | viii) பிரான்சிஸ்கன் கன்னியர் |
| ix) அப்போஸ்தலிக்க கார்மேல் கன்னியர் | x) அன்புக் கன்னியர் சபை |

- அத்தோடு தேசிய மொழிகளில் கல்வித்துறையை வளர்ச்சியடையச் செய்வதற்காக மக்கோனாவிலும், மாத்தளையிலும் புனித பிரான்சிஸ்கு சபைச்சகோதரர், யாழ் கொழும்புத்துறையில் புனித வளனார் சகோதரர், புனித சவேரியார் அருட்சகோதரிகள் போன்ற சபைகளும் இலங்கையிலே நிறுவப்பட்டன.
- இப்படியாக சுதந்திர இலங்கையிலே, பல்வேறுபட்ட கிறிஸ்தவ திருச்சபைகளினால் கல்வித்துறையில் ஒரு பெரும் மறுமலர்ச்சி ஏற்படலாயிற்று.

- கிறிஸ்தவ பாடசாலைகளின் வளர்ச்சி கிறிஸ்தவர்களை நாட்டின் உயர் பிரஜைகளாக உருவாக்கியது மாத்திரமல்ல ஏனைய மதத்தினருக்கு இது ஒரு பெரும் சவாலாகவே இருந்தது.

### 9.1.2.2 பாடசாலைகள் அரசமயமாக்கப்படல்

- இக்காலகட்டத்திலே பௌத்தர் - இந்துக்கள் மத்தியிலும் ஒரு மறுமலர்ச்சி ஏற்படலாயிற்று.
- குறிப்பாக பௌத்தர்கள், 1954ஆம் ஆண்டு சித்திரை மாதம் 2ஆம் நாள் பௌத்த கொங்கிரசின் 33வது மகாநாட்டிலே எவ்விதமாக தம் மறை, கலை கலாச்சாரத்தை வளர்க்க முடியுமெனப் பல வழிவகைகளை ஆராயலாயினர். அத்தோடு அதனை நடைமுறைப்படுத்தவென இம்மாநாட்டிலே ஒரு பௌத்த ஆணைக்குழுவொன்றும் அமைக்கப்படலாயிற்று.
- இவர்கள் கத்தோலிக்க, கிறிஸ்தவ பாடசாலைகளின் வளர்ச்சி பௌத்த மதத்தினரின் வளர்ச்சிக்கு ஒருபெரும் இடையூறாக அமையலாம் என்றதோர் பிழையான கருத்தையும் கொண்டிருந்தனர்.
- பௌத்த ஆணைக்குழுவின் ஆலோசனையின் பேரில் 1960ஆம் ஆண்டு சிறீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வந்ததும் 750க்கும் மேற்பட்ட கத்தோலிக்க பாடசாலைகள் அரசமயமாக்கப்பட்டன. கட்டிடங்கள், காணிகள், தளபாடங்கள் எதுவிதமான நஷ்ட ஈடுகளும் இன்றி சுவீகரிக்கப்படலாயின.
- பாடசாலைகள் மாத்திரமல்ல, ஆசிரிய பயிற்சிக்கலாசாலைகளும் அரச மயமாக்கப்பட்டன. 40 கத்தோலிக்க பாடசாலைகள் மட்டுமே, அரச உதவியின்றி மாணவ மாணவியரிடமிருந்து எதுவிதமான உதவியையும் எதிர்பார்க்காமல் நடாத்தலாம் என அனுமதி வழங்கப்பட்டாலும், காலப்போக்கில் நிதிபற்றாக்குறை காரணமாக அவற்றுள் பல படிப்படியாக அரசிடம் ஒப்படைக்கப்பட்டன.
- இந்நிலை கத்தோலிக்க திருச்சபையை பெரிதும் பாதிக்கலாயிற்று. பாடசாலைகளில் மதச்சூழலற்ற நிலை உருவாகியது மாத்திரமல்ல, கத்தோலிக்க பாடசாலைகளிலே, கத்தோலிக்க மாணவ மாணவியருக்கு மறையறிவு மறுக்கப்பட்டதுடன் எத்தனையோ கத்தோலிக்க பாடசாலைகளில் கத்தோலிக்க ஆசிரியர், கத்தோலிக்க அதிபர் இல்லாத நிலை உருவாகலாயிற்று.
- ஆனால் இத்தகைய நிலை இறைவன் தீமையிலிருந்தும் நன்மையைச் செய்பவர் என்ற நிலைக்கேற்ப, கத்தோலிக்க திருச்சபை, கத்தோலிக்க பெற்றோர் மட்டிலே ஒரு விழிப்புணர்வை உண்டுபண்ணலாயிற்று.
- காலாகாலமாக பிள்ளைகளின் கல்விவளர்ச்சி, மறையறிவு வளர்ச்சி என்பவற்றை குருக்கள், துறவியரிடம் ஒப்படைத்திருந்த பெற்றோர் விழிப்புணர்வோடே தம் பிள்ளைகளின் கல்வி அறிவு மட்டிலே அக்கறைகாட்டத் தொடங்கினர்.
- பாடசாலைகளில் மறைக்கல்வியின் இடம் குன்றிப்போகவே கத்தோலிக்க திருச்சபையானர், தேசிய மறைக்கல்வி நடுநிலையம், மறைமாவட்ட மறைக்கல்வி நடு நிலையம் போன்றவற்றை நிறுவி, மறை ஆசிரியர்களைப் பயிற்றுவித்தது மாத்திரமல்ல, தேசிய, மறைமாவட்ட ரீதியாகப் பல மறை அறிவுப் போட்டிகளை நடாத்தி, மாணவ மாணவியர் மத்தியில் மறை அறிவை வளர்க்க முற்படலாயிற்று. அத்தோடு இந்நடுநிலையங்கள் வழியாக தேசிய ரீதியாகவும், மறைமாவட்ட ரீதியாகவும் விவிலிய வகுப்புக்கள், கருத்தரங்குகள், பயிற்சிப்பாசறைகள் ஆகியவற்றை நடாத்தலாயிற்று.
- பங்கு மட்டத்திலே மறைப்பாடசாலைகள் பெரிதும் வளர்ச்சியடையலாயிற்று.
- கத்தோலிக்க திருச்சபையில் பொது நிலையினரின் விழிப்புணர்வு வளர்ச்சியடைந்தது மாத்திரமல்ல, பங்குத்தந்தை பெற்றோர் மாணவர்களுக்கிடையே நெருங்கிய உறவு ஏற்படலாயிற்று.

### 9.1.3 கிறிஸ்தவ கல்விமாண்கள்

### 9.1.3.3 மேதகு எட்மன்ட் பீரிஸ் ஆண்டகை

- இவர் சிலாபத்திலே மார்கழித்திங்கள் 27ஆம் நாள், 1987ஆம் ஆண்டு பிறந்தார். 1924 மாசித்திங்கள் 25ஆம் நாள் அமலமரித்தியாகிகள் சபையிலே குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். தனது 42வயதிலே 1940ஆம் ஆண்டு சித்திரைத்திங்கள் 23ஆம் நாள், சிலாப மறைமாவட்டத்தின் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இவரே இலங்கையின் முதலாவது சிங்கள ஆயர். 1972ஆம் ஆண்டு, மார்கழித்திங்கள் 27ஆம் நாள் ஓய்வு பெற்று 1989ஆம் ஆண்டு புரட்டாசித்திங்கள் 4ஆம் நாள் இறைபதமடைந்தார்.
- இவர் இலங்கைத் திருச்சபையை அந்நிய கலை, கலாசாரங்களில் இருந்து விடுவித்து, இலங்கையின் கலை, கலாச்சாரங்களுக்கு ஏற்ப அதனை வளர்க்க அரும்பாடுபட்டு உழைத்தவர்.
- இவர் யாக்கோமே கொன்சால்வேஸ் என்ற ஓரட்டோரியன் குரு எழுதிய பல செபங்கள், தமிழ், சிங்கள மொழிக் காவியங்களை நாட்டின் கருநாடகத்தாளம், நாட்டுக்கூத்துத்தாளம் போன்றவற்றிற்கேற்ப திருப்பி எழுதலானார்.
- இவர் லண்டன் பல்கலைக்கழகத்திலே கீழைத்தேய மொழிகளிலே பாண்டியத்தியம் பெற்றவர்.
- இவர் 16 நூல்களையும் 250க்கு மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய நூல்களுள் பெரும்பாலானவை போர்த்துக்கேய, ஒல்லாந்த மொழிகளில் இருந்து மொழி பெயர்க்கப்பட்டவையாகும்.
- 1960ல் இவர் மத்தேயு நற்செய்தியை சிங்கள மொழிக்கு மொழிபெயர்க்கலானார். இது இற்றைவரை சிறந்த மொழிபெயர்ப்பாகத் திகழ்கின்றது.
- இவர் அரச தொல்பொருள் ஆலோசகர் குழு - Government Archives Advisory Board, கொழும்பு பல்கலைக்கழக கீழைத்தேய கல்விக் குழு - The Board of Oriental Studies in the Unviversity of Colombo, கல்வி வெளியீட்டுச் சபை - The Educational Pubeication Board, சிரித் - விரித்குழு Customs Tradition and Commission ஆகியவற்றில் அங்கத்தவருமாவார்.
- இவர் றோயல் ஆசியாடிக் குழுவில் (Royal Asiatic Society) அங்கத்தவராகவும் பணிபுரிந்தது மட்டுமல்ல இவர் இலங்கையின் கலை, கலாச்சாரத்தைப்பற்றி எழுதிய ஆய்வுக்கட்டுரைகள் இவர்களது சஞ்சிகைகளிலே பிரசுரிக்கப்பட்டன.
- கத்தோலிக்க திருச்சபையின் வழிபாட்டுச் சங்கீதத்திலே மிகுந்த அக்கறைகாட்டிய இவர் பல வழிபாட்டுப் பாடல்களையும் இயற்றியுள்ளார்.
- 1927 - 1930 மட்டும் அமல மரித் தியாகிகளினால் தொடங்கி நடாத்தப்படும் சிங்கள சஞ்சிகையாகிய ‘‘பக்தி பிரபோதன’’ என்றதின் ஆசிரியராகவும் விளங்கினார். இதுவே இலங்கையில் வெளியிடப்படும் நீண்டகால சஞ்சிகையாகும்.
- இவர் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் முன்பே நம் கலை கலாச்சாரத்திற்கிணங்க வழிபாடு அமையவேண்டுமெனக் கூறியவர்.

### 9.1.3.2 மேதகு சிறில் அபேநாயக்க

- 1911 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி அடிங்டன், சோனியா அபேநாயக்க தம்பதிகளின் மகனாகப் பிறந்த சிறில் லிங்டன் அபேநாயக்க தனது கல்வியினை றோயல் கல்லூரியில் பெற்றார். இங்கு மிகவும் நன்றாகத் தனது கல்வியை நிறைவு செய்த இவர் பல்கலைக்கழக புலமைப் பரிசிலைப் பெற்று பல்கலைக்கழகம் சென்றார். இவர் பல்கலைக்கழகத்தில் சிறப்புப் பட்டத்தாரிப் பட்டத்தினைப் பெற்று வெளியேறினார். இங்கு இவர் வரலாறு பாடத்தினை முதன்மையாகக் கொண்டார்.

- இவரை இலங்கை நிர்வாக சேவையில் இணையும்படி பெரும்பாலானோர் கேட்டுக் கொண்டபோதும் அது நிறைவேறவில்லை. இவர் பல்கலைக்கழக விரிவுரையாளராகவும் செல்லவில்லை. இதற்குப் பதிலாக தனக்குக் கிடைக்கப் பெற்ற இறை அழைப்பிற்குச் சிரம் தாழ்த்தியதோடு, இதற்கான மேலதிகக் கற்றலுக்காக இலண்டன் பல்கலைக்கழகத்துக்குச் சென்றார். இங்கு சிறப்புப்பட்டதாரிப் பட்டத்தினை பெற்ற இவர் இறையியலை வளர்த்துக் கொள்வதற்காக பரிசுத்த பொனிபஸ் இறையியல் கல்லூரியில் இணைந்து கொண்டார்.
- மீண்டும் இலங்கைக்கு வருகை தந்த இவர் 1936 ஆம் ஆண்டு திருத்தொண்டராக ஹொநிஸ்லி ஆயர் அவர்களினால் அபிசேகம் செய்யப்பட்டார். இதன் பின்னர் கல்கிசையிலுள்ள பரிசுத்த தோமஸ் கல்லூரியின் துணைத்தலைவராகவும், ஆசிரியராகவும் நியமிக்கப்பட்டு அங்கு பணியாற்றினார். பின்னர் அக்காலத்தில் இலங்கைத் திருச்சபையின் பாடசாலையான உவா மத்திய மகா வித்தியாலயத்திலும் வத்தேகம கிறிஸ்து தேவ வித்தியாலயத்திலும் முறையே பிரதி அதிபராகவும், அதிபராகவும் பணியாற்றினார். இங்கு கல்விக்காக அவர் ஆற்றிய பணி அளப்பரியது. விளையாட்டிலும் காலத்துக்கேற்ற செயற்பாடுகளிலும் முன்னின்று உழைத்து நிறைவான கல்வியை மாணவர்கள் பெறச் செய்ததோடு சிறந்த மேய்ப்பனாகவும் வழிகாட்டினார்.
- சுயவிருப்பத்தோடு பத்து வருடங்ஙள் திருத் தொண்டராகப் பணியாற்றிய இவர் 1946 இல் குருவாக அபிஷேகம் பெற்றார். மிகவும் தாழ்மையான, பண்புள்ளவராக வாழ்ந்த இவர் பல்வேறு ஆற்றல்களால் நிறைந்தவராகவும் இருந்தார். பல்வேறு இடங்களிலுள்ள தேவாலயங்களில் பணியாற்றிய இவர் சிலோன் சர்ச்மன் எனும் இலங்கைத் திருச்சபையின் வெளியீட்டின் எழுத்தாளராகவும் இருந்தார். இத்தோடு இலங்கைத் திருச்சபையின் பாடசாலை நிர்வாக சபையின் முகாமையாளராகப் பணியாற்றிய இவர் 1964இல் கொழும்பு பேராயத்தின் துணைத் தலைவராகவும் நியமிக்கப்பட்டார். அக்காலத்திலேயே இவர் பிலிமத்தலாவையிலுள்ள இறையியல் கல்லூரியின் அதிபராகவும் இருந்தார். 1971இல் மேதகுவாக அபிஷேகம் செய்யப்பட்டு 1977 வரை கொழும்பில் பத்தாவது பேராயராகப் பணியாற்றினார். 1991 ஆம் ஆண்டு மே மாதம் 8ஆம் திகதி இவர் இறைபதமடைந்தார்.
- குருவாகவும் பேராயராகவும் விசேடமாக கிறிஸ்தவ கல்வியில் அதிக முயற்சியினை காட்டியுள்ளார். இவர் கல்விக்காற்றிய பணியின் மகத்தும் சொல்லி முடிக்க இயலாத ஒன்றாகும்.

### 9.1.3.3 அருட்பணி. S.G. பெரேரா அடிகள்

- சைமன் கிறகரி பெரேரா அடிகள் 1882ஆம் ஆண்டு, ஆனித்திங்கள் 18ஆம் நாள் களுத்துறையில் பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியை களுத்துறை திருச்சிலுவைக் கல்லூரியிலும், அதனைத் தொடர்ந்து கொழும்பு புனித வளனார் கல்லூரி, வெஸ்லி கல்லூரி என்பவற்றிலும் தன் கல்வியைத் தொடரலானார்.
- பாடசாலைக்கல்வி நிறைவுபெற்றதும், இரத்தினபுரி காணிப் பதிவு அலுவலகத்தில் எழுதுவினைஞராகப் பணியாற்றிக்கொண்டிருக்கும் போதுதான், தனது 23வது வயதிலே இயேசு சபையில் சேர்ந்து தன்குருத்துவக் கல்வியைத் தொடர இந்தியா செல்லலானார்.
- 1917ஆம் ஆண்டு, கார்த்திகைத்திங்கள் 21ஆம் நாள், குருவாகத் திரு நிலைப்படுத்தப்பட்டது மாத்திரமல்ல, இவரே இயேசுசபையில் திருநிலைப்படுத்தப்பட்ட முதலாவது சிங்களக் குருவருமாவார்.
- இந்தியாவில் இருந்து உரோமாபுரி சென்று கிறகோரியன் பல்கலைக்கழகத்திலே தனது கல்வியைத் தொடர்நதார். பின்னர் அதே பல்கலைக்கழகத்திலே விரிவுரையாளராகவும் பணிபுரியலானார்.
- 1939ஆம் ஆண்டு உரோமாபுரியிலிருந்து இலங்கைக்குத் திரும்பி காலி

மறைமாவட்டத்தின் முதலாவது சிங்களக் குருமுதல்வராகப் பணியாற்றியதோடு காலி புனித அலோசியஸ் கல்லூரி ஆசிரியர், மாத்தறை புனித சேவாசியுஸ் கல்லூரி அதிபர் போன்ற பதவிகளையும் வகிக்கலானார்.

- இக்காலத்திலேதான் இலங்கை வரலாற்றிலே மிக்க ஆர்வம் கொண்டு 1505 - 1948 இடைப்பட்ட போர்த்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கிலேய கால இலங்கை வரலாறு, அதற்குமுன் நிலவிய கோட்டே, கண்டி, நல்லூர் போன்ற இராசதானிகளையும் நன்கு கற்றறிந்தார்.
- இவர் சிங்களம், ஆங்கிலம், ஐரோப்பிய சில மொழிகள் ஆகியவற்றை நன்கு கற்றறிந்திருந்தார். இவர் மொழிபெயர்த்த நூல்களுள் சிறப்பானவை : பேர்மா டீ குஎரோஸ் - (Ferma De Queros) என்பவரால் போத்துக்கேய மொழியில் எழுதப்பட்ட நூலை ''இலங்கையை லௌகீக ஆன்மீக வழியில் ஆட்கொள்ளல்'' (The Temporal and Spiritual Conquest of Ceylon) என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தமை.
- இவற்றைவிட இவர் பல சிங்கள நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, சிங்கள கலை, கலாச்சாரம், வரலாறு என்பவற்றை உலகறியச் செய்துள்ளார். இவற்றுள் தலைசிறந்தது. ''சுபசித்த வமனவ'' என்ற நூலை ஆங்கிலத்திற்கு மொழிபெயர்ப்புச் செய்ததாகும்.
- இவர் 15க்கும் குறையாத நூல்களையும் 300க்கும் அதிகமான ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய இலங்கை வரலாறு (Ceylon History) என்ற ஆங்கில நூல், நீண்ட காலமாக இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரலாற்றுப் பாட நூலாகத் திகழ்ந்தது.
- அருட்தந்தை S.G. பெரேரா, இலங்கை இலக்கிய பதிவேட்டின் (Ceylon Literary Registry) ஆசிரியராகவும், இலங்கை வரலாற்றுக் குழு (Ceylon History Board), றோயல் ஆசியேட்டிக் சொசாயட்டி - (Royal Asiatic Society) ஆகியனவற்றில் அங்கத்தவராகவும் பணிபுரியலானார்.
- இவர் இலங்கை வராலாற்றில் புரிந்த சேவையைப் பாராட்டி 1983ஆம் ஆண்டு, கார்த்திகை மாதம் 22ஆம் நாள் இலங்கை அரசு இவரது உருவம் தாங்கிய தபால் முத்திரையையும் வெளியிடலாயிற்று.
- இவர் 1950ஆம் ஆண்டு, மாசித்திங்கள் 19ஆம் நாள் இறைபதமடையலானார்.

### 9.1.3.4 அருட்பணி. பீட்டர்பிள்ளை அடிகள்

- பீட்டர்பிள்ளை அடிகளார் 1904ஆம் ஆண்டு ஐப்பசித்திங்கள் 19ஆம் நாள் வென்னப்புவாவில், யாழ் நகரைச் சார்ந்த இவரது பெற்றோராகிய, ஜேக்கப், ஆனாபிள்ளை என்பவர்களின் அரும்புதல்வராகப் பிறந்தார்.
- இவர் தனது ஆரம்பக்கல்வியை கொழும்பு புனித ஆசீர்வாதப்பர் கல்லூரியில் 1914ஆம் ஆண்டு சேர்ந்து பெறலானார். 1920ஆம் ஆண்டு லண்டன் கேம்பிறிட்ஜ் பரீட்சையில் எல்லாப் பாடங்களிலும் விசேட சித்தியடைந்தார். 1923இல் BA பரீட்சையில் தேறி கலைப்பிரிவின் பட்டதாரியாகவும் விளங்கலானார். அதன்பின் MSc, MA பரீட்சையிலும் சித்தியடைந்தார்.
- 1927ஆம் ஆண்டு அமல மரித்தியாகிகள் சபையில் சேர்ந்து, தனது நவத்துறவை முடித்து 1929ஆம் ஆண்டு உரோமாபுரி சென்று, ''அஞ்சலிக்கும்'' பல்கலைக்கழகத்தில் கற்று 1931ஆம் ஆண்டு அதே பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டமும் பெற்றார்.
- 1934ஆம் ஆண்டு அமல மரித்தியாகிகள் சபையில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு, 1936ஆம் ஆண்டு உரோமாபுரியில் இறையியல் கலாநிதிப் பட்டமும் பெற்று ஒரு பாரிய கல்விமானாக இலங்கைக்கு திரும்பினார்.
- இவர் இலங்கையில் தனது முதற்பணியாக கொழும்பு பம்பலப்பிட்டி புனித இராயப்பர் கல்லூரியில் ஆசிரிய பணியை மேற்கொண்டார். அக்காலத்தில்தான், 1936ஆம் ஆண்டு

ஐப்பசித்திங்கள் 14ஆம் நாள் கத்தோலிக்க சமூகப்பணிக்கழகத்தையும் தோற்றுவிக்கலானார். இவர் சமூகப்பணிகளிலே மிகவும் அக்கறை கொண்டதோர் குருவாகப் பணிபுரிந்தார்.

- 1940ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் 8ஆம்நாள் கொழும்பு புனித வளனார் கல்லூரியின் 5வது அதிபராக நியமனம் பெறலானார்.
- இவரது நீண்டகால ஆசையாக இருந்ததென்னவேனில் தகமையுடைய எல்லா உயர்தரமாணவர்கட்கும் உயர் கல்விபெறும் வாய்ப்பு அமையவேண்டும் என்பதாகும். ஆனால் இலங்கை அரசு போதிய பல்கலைக்கழக வசதியின்மையால் அதனை எல்லோர்க்கும் வழங்கமுடியாத, க.பொ.தராதரப் பரீட்சையில் உயர்புள்ளிகளைப் பெற்ற மாணவருக்கு மாத்திரமே வழங்களாயிற்று. இக்காலகட்டத்திலேதான் இலங்கையில் ஓர் பிரத்தியேக பல்கலைக்கழகம் அவசியம் என்பதை இவர் உணரலானார்.
- எனவே 1954ஆம் ஆண்டு அக்குவைனஸ் உயர்தரக் கல்லூரியை கொழும்பு பொரளையில் நிறுவி அரச பல்கலைக்கழகம் செல்ல முடியாத மாணவ மாணவியர்கள் அக்குவைனஸ் பல்கலைகழகம் வழியாக, உயர்கல்வி பெற வழியமைத்தார். அத்தோடு அதன் முதல் அதிபராகவும் பணியாற்றினார்.
- அதே வேளையில் கல்விமானாகத்திகழ்ந்த அருட்தந்தையவர்கள், அதே ஆண்டிலே, கொழும்பிலுள்ள கல்விமான்கள் எல்லோரையும் ஒன்றுதிரட்டி ‘‘சவேரியன்ஸ்’’ என்றழைக்கப்பட்ட, கல்விமான்களுக்கானதோர் அமைப்பையும் உருவாக்கலானார்.
- இவர் சமூக நீதியை மையமாக வைத்து 14க்கும் குறையாத நூல்களையும் ‘‘நான் விசுவசியாதது என்ன?’’ என்ற தலைப்பில் இன்னுமொரு சிறந்த நூலையும் எழுதி பலரின் நன்மதிப்பையும் பெற்றார்.
- இவர் ஒரு சிறந்த கல்விமான் மட்டுமல்ல, சிறந்த கட்டிடக் கலையாளரும், சமூகப்பணியாளரும், சிந்தனையாளருமாவார்.
- இவர் பிரித்தானிய இராசதானியிலே சிறந்துவிளங்கிய ஏழு கல்விமான்களுள்ளே தலைசிறந்தவர் என்ற மதிப்பையும் பெற்றார்.

### 9.1.3.5 அருட்பணி. டப்ளியூ டொன் பீற்றர் அடிகள்

- வெல்கம லேகம் அப்புகாமிலாகே டொன் பீற்றர் அடிகளார் 1916ஆம் ஆண்டு, புரட்டாசிதிங்கள் 25ஆம் நாள் நீர்கொழும்பிலிருந்து 5மைல் தொலைவில் உள்ள கொண்தகமுல்ல என்ற இடத்தில் பிறந்தார்.
- தனது ஆரம்பக்கல்வியை தான் பிறந்த கிராமத்திலும், அதன்பின் நீர்கொழும்பு மாரிஸ்டெலா கல்லூரியிலும் கற்கலானார்.
- 1935ம் ஆண்டு கொழும்பு புனித அலோசியஸ் சிறிய குருமடத்தில் சேர்ந்து அதன்பின் புனித பேனாட் பெரிய குருத்துவக் கல்லூரியில் தன் மெய்யியல், இறையியல், படிப்பைத் தொடர்ந்து, 1941ஆம் ஆண்டு பங்குனித்திங்கள் 15ஆம் நாள் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.
- தனது குருத்துவத்தின் பின் 1941 - 1946 வரை நீர்கொழும்பு பெரியதெரு புனித மரியாள் ஆலய உதவிப் பங்குத்தந்தையாக சில ஆண்டுகளும் பின் கோட்டே புனித தோமையார் ஆலய பங்குத்தந்தையாகவும் பணி புரியலானார்.
- 1946ஆம் ஆண்டு கொழும்பு புனித வளனார் கல்லூரியில் ஆசியராகப் பணிபுரியத் தொடங்கினார். இக்காலத்திலே இவர் பாளி மொழியை நன்குகற்றது மாத்திரமல்ல, இக்காலகட்டத்திலே இலங்கையிலே வளர்ச்சி அடைந்துவந்த தேசிய உணர்வை திருச்சபையிலும் வளர்க்க அரும்பாடுபட்டு உழைத்தவராவார்.
- இவ்வுணர்வை நாட்டிலும், சமூகத்திலும், திருச்சபையிலும் வளர்ப்பதில் மேதகு எட்மன்ட் பீரிஸ் ஆண்டகை, அருட்திரு மர்சலின் ஜயக்கொடி, அருட்திரு D.J. அன்டனி, அருட்திரு மோசேஸ் பெரேரா போன்றோரோடு கரம்கோர்த்து உழைத்தார்.

- 1950ஆம் ஆண்டு உயர்கல்வி கற்பதற்காக உரோமை ‘‘ஊர்பான்’’ பல்கலைக்கழகத்திற்கும் பின் லண்டன் பல்கழைக்கழகத்திற்கும் சென்று, லண்டன் பல்கழைக்கழகத்தில் கலாநிதி பட்டமும் பெற்றார்.
- இவர் தன்னுடைய சில தலைசிறந்த நூல்களாகிய ‘‘பௌத்த - ஆசீர்வாதப்பர் சபை துறவு இல்லக்கல்வி” (Buddhist and Benedictine Monastic Education), ‘‘புனித பிரான்சிஸ்குவும் புத்தரும் (St. Francis and Buddha), பௌத்த கிறிஸ்தவ துறவு வாழ்வு (Religions Life : Buddhist and Christian), போன்ற நூல்களிலே, பௌத்தத்திற்கும் கிறிஸ்துவத்திற்கும் இடையிலுள்ள உறவுகளை மிக அழகாக விளக்கியுள்ளார்.
- 1961ஆம் ஆண்டு கொழும்பு புனித வளனார் கல்லூரியின் அதிபராக நியமனம் பெற்றார். இப்பாடசாலையின் வரலாற்றிலே முதலாவது பழைய மாணவர் முதல் சிங்கள மறைமாவட்டக் குரு என்ற ரீதியில் இப்பதவியை வகித்து அதற்கு பெருமையும் தேடிக்கொடுத்தார்.
- 1971 - 1976 வரையும் அதன்பின் 1979 - 1989 வரையும் அக்குவைனஸ் உயர் கல்விக் கல்லூரியின் அதிபராகவும் பணிபுரிந்தார். இவர் இலங்கையில் கிறிஸ்தவக்கல்வி என்ற கருப்பொருள் அமைய பல நூல்களையும் எழுதியுள்ளார். அவற்றுள் தலை சிறந்தது ‘‘இலங்கையில் போர்த்துக்கேயக் கல்வி” - “Education in Sri Lanka under the Portuguese” என்ற நூல்.
- 1963ம் ஆண்டு ‘‘இலங்கைத் திருச்சபை வரலாற்றைப் பற்றிய கல்வி” (Studies in Ceylon Church Histroy) என்ற நூலை வரைந்தார். இது இவர் இலங்கைத் திருச்சபையின் வரலாற்றைப் பற்றி எழுதிய பல நூல்களுள் ஒன்றாகும். இவருடைய சிறந்த வரலாற்று ஆய்வின் காரணமாக 1965ஆம் ஆண்டு, ‘‘பிரித்தானிய அரச வரலாற்றுச் சபையின்” “Royal Historical Society of Great Britain” அங்கத்தவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இவர் நாட்டிற்காகவும் திருச்சபைக்காகவும் பல பணிகளைப் புரிந்துள்ளார். கொழும்பு மறைமாவட்டக் குருமுதல்வராக, அரச கல்வி வெளியீட்டுக் கழகத்தின் அங்கத்தவராக (Govrenment Educational Publication Board), தலைமை ஆசிரியர் அவையின் தலைவராக, இலங்கை தேசிய UNESO குழுவில் அங்கத்தவராக பல பணிகளை இலங்கை நாட்டிற்குப் புரிந்துள்ளார்.
- இவர் பல நூல்களையும் 400க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும், சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் சிறார்களுக்கென பல சிறுகதைகளையும் எழுதியுள்ளார். அவற்றுள் சில, ‘‘வன கதோ லமா”, ‘‘தேக்கவத்த கதாவ” ஆகியன குறிப்பிடத்தக்கவை. 1998இல் இவர் எழுதிய தேக்க வத்த கதாவ என்ற சிறுகதை ஜனாதிபதி விருதையும் பெற்றது.
- இவர் தனது சொந்த முயற்சியால் ‘‘தகம் சரண” என்ற நிலையத்தையும் உருவாக்கி அதன் இயக்குனராக 1990 - 1995 இடையில் செயல்பட்டார். இக்காலத்திலே இவ்வமைப்பின் வழியாக 35க்கும் மேற்பட்ட நூல்களை ‘‘கிறிஸ்தவ மறைக் கோட்பாடு” (Christian Doctrine), கத்தோலிக்க ஒழுக்கம் (Catholic Discipline), ‘‘புனிதர்களின் வரலாறு” (Lives of Saints), ‘‘இலங்கைத் திருச்சபை வரலாறு” (Church History in Sri Lanka), என்ற சில தலைப்புக்களிலும் வெளியிடலானார்.
- இவர் 2008ஆம் ஆண்டு சித்திரைத்திங்கள் 24ஆம் நாள் தனது 93வயதிலே இறைபதமடையலானார்.

### 9.1.3.6 அருட்பணி. நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அடிகள் :

- நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அடிகளார், 1875ஆம் ஆண்டு ஆவணித்திங்கள் 30ஆம் நாள் ராஜசிங்கம் சுவாமிநாதன், தங்கமுத்து என்போரின் தவப்புதல்வனாக யாழ் மானிப்பாயில் அவதரிக்கலானார்.
- ஆரம்பத்தில் இவர் வைத்திலிங்கம் என்றழைக்கப்பட்டு சிறுவயதிலேயே இவருடைய தந்தையை இழந்தார். அதன்பின் இவருடைய தாய் யாழ் அச்சுவேலியைச் சேர்ந்த தம்பிமுத்துப்பிள்ளை என்ற கத்தோலிக்கரை மணந்து கொண்டார். இக்காலத்தில்

வைத்திலிங்கம் கத்தோலிக்க மறையில் சேர்க்கப்பட்டு ஞானப்பிரகாசம் என்ற பெயரையும் பெற்றார்.

- இவர் தன் பாடசாலைக்கல்வியை முடித்துக்கொண்டதும் இலங்கைப் புகையிர திணைக்களத்தில் அரச அலுவலராக பணிபுரிந்தார். இக்காலத்திலே யாழ் நகரில் பணிபுரிந்து வந்த அருட்தந்தை சாள்ஸ் என்பவரைச் சந்தித்ததின் வழியாக தம்பணியைத் துறந்து, 1885ஆம் ஆண்டு அமலமரித்தியாகிகள் சபையில் அங்கத்தவராகச் சேர்ந்தார்.
- 1901ஆம் ஆண்டு மார்கழித்திங்கள் முதல் நாள் அமலமரித் தியாகிக் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். 1904ஆம் ஆண்டு யாழ் நகரிலே நல்லூர் சென்று 3,000க்கும் மேற்பட்ட மக்களை கத்தோலிக்க மறையிலே சேர்ந்தார்.
- இவர் ஓர் தலைசிறந்த கல்விமான் மட்டுமல்ல, வட மொழியிலும் இந்து மெய்யியலிலும் நன்கு அறிவுள்ளவராகத் தென்பட்டார். யாழ் வரலாற்றுக்கல்வியை இவர் மிகவும் விருப்பமாகக் கற்றார்.
- இவர் தமிழ் மொழியைப் பற்றியும் பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டு தமிழ் மொழி ஒரு பழமை வாய்ந்த மொழி, இதுவே ஆரம்பத்திலே பேசப்பட்டுவந்த மொழி, இதிலிருந்து ஏனைய சகோதர மொழிகள் பல பிறந்துள்ளன என நிரூபிக்கலானார். இப்படியாக இந்து, ஐரோப்பிய மொழிகள் எல்லாம் தமிழ்த்தாயின் பிள்ளைகள் என்ற கருத்தையும் கொண்டவர்.
- இவர் பழமைவாய்ந்த கையோடுகள், சில்லறைக்காசுகள் போன்றவற்றை தொகையாகச் சேகரித்து, தமிழ்மொழியின் தொல்மையை நன்கு ஆய்வு செய்து அதனை உலகிற்கு பரப்பியவராவார்.
- இவர் பல நூல்களை சிங்கள, ஆங்கில மொழியிலே எழுதியுள்ளார். இவர் எழுதிய தமிழ் நூல்களில் பின்வருவன ஒரு சில :
  - i) யாழ்ப்பாண வைபமாலை ஊற்றுக்கள் (Sources of the Yalpana Vaipava Malai)
  - ii) யாழ் அரசனின் மறந்த காசுகள் (Forgotten Coinage of the Jaffna King)
  - iii) போர்த்துக்கேய கால அரசர்கள் (The Kings of Jaffna During Potugese Period)
  - iv) தமிழ்மொழியில் எழுதப்பட்ட ‘‘யாழ்ப்பாண வைபவ விமோசனம்’’
  - v) தமிழரும் இலங்கையும் - “Tamil and Ceylon”
  - vi) யாழ் வரலாற்றுக்கல்வி ஊற்றுக்கள்-Sources for the Study of the History of Jaffna
  - vii) தமிழ்ப் பண்பாடு - Tamil Culture
- இவ்வாறாக இவர் தமிழ் கலை கலாசாரத்திற்கு பல பணிகள் புரிந்த பின் 1947ஆம் ஆண்டு இறைபதமடையலானார்.

### 9.1.3.7 அருட்பணி எஸ். எச் தாவீது அடிகள்

- இவர் யாழ் மறைமாவட்டக் குரவர். ஒரு சிறந்த கல்விமான். பல பட்டங்களைப் பெற்றுள்ளார்.
- அருட்தந்தை ஞானப்பிரசாசர் இறந்தபின் அவர் தொடங்கிவைத்த, அகராதிப்பணியை தொடர்ந்து புரிந்தவர்.
- இவர் 1950ஆம் ஆண்டுகளில் இங்கிலாந்தில் பணிபுரிந்து பலரின் நன்மதிப்பைப் பெற்ற ஒருவர்.
- தமிழ்த்தாயின் ஆய்வுகளிலே தனிநாயகம், ஞானப்பிரகாசர் போன்ற பெரியயோரைப் போன்று பல ஆய்வுகளை நடாத்தியுள்ளார்.
- இவர் முதுமையெய்திய பொழுது தான் தொடங்கிய பணியை தமிழ்ச்சமூகம் தொடர்ந்து நடாத்த வேண்டும் என்ற எண்ணத்தோடே தன்வசம் இருந்த ஆயிரக்கணக்கான நூல்களை யாழ் நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்தவர்.

### 9.1.3.8 அருட்பணி சேவியர் S. தனிநாயகம் அடிகள்

- சேவியர் S. தனிநாயகம் அடிகளார் 1913ஆம் ஆண்டு ஆவணி மாதம் 2ஆம் திகதி யாழ் நெடுந்தீவு ஹென்றிக் ஸ்தனிஸ்லாஸ் கணபதிப்பிள்ளை, செழில் இராசம்மா வஸ்பதியாம்பிள்ளை என்பவர்களின் தவப்புதல்வராக கரம்பொன் என்னுமிடத்தில் பிறந்தார்.
- இவர் தன் ஆரம்பக்கல்வியை 1920 - 1922 வரை யாழ் காரைநகர் புனித அந்தோனியார் கல்லூரியிலும் அதனைத் தொடர்ந்து 1923 - 1930 வரை யாழ்நகர் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் தனது பட்டப்படிப்பை 1931 - 1934வரை கொழும்பு புனித பேனாட் கல்லூரியிலும் கற்று, மெய்யியலில் கலைமாணிப் பட்டமும் பெறலானார்.
- அதன்பிற்பாடு உயர்கல்விக்காக இந்தியாவில் தமிழ்நாட்டில் அமைந்திருக்கும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்று இலக்கியத்துறையில் முதுமாணிப் பட்டமும் பெற்றார்.
- இவர் 1938ஆம் ஆண்டு உரோமையில் கத்தோலிக்க குருவாகத் திருநிலைப்படுத்தப் பட்டதின் பின் தூத்துக்குடி மறைமாவட்டத்தில் பணிசெய்யத் தொடங்கினார். அப்போது அம்மறைமாவட்டத்தில் வட்டக்கன்குளம் பகுதியில் அமைந்துள்ள புனித தெரேசாள் உயர்பள்ளியில் ஆசிரியராகவும், அதனைத் தொடர்ந்து உப அதிபராகவும் பணிபுரிந்து ஆங்கிலம், தமிழ், வரலாறு, சமயம் ஆகிய பாடங்களை சிறந்த முறையில் கற்பித்தார்.
- இவர் உலகின் பலநாடுகளுக்குச் சென்று அவரவர் மொழியிலே, தமிழ்மொழியின் தமிழ்பண்பாட்டின், தமிழ் இலக்கியத்தின் மேன்மையை எடுத்துச் சொல்லலானார். அவரின் விரிவுரைகளைக் கேட்டவர்கள் தமிழ் பற்றி அறிய அதிக ஆர்வம் கொள்ளலாயினர். 1948 - 1950 க்கும் இடையில் உலகெங்கும் பயணம் செய்து தமிழ் முழக்கம் செய்யலானார்.
- இவர்தான் தமிழ்த்தாயின் பெருமையை உலகெங்கும் பரப்புவதற்காக "Tamil Culture" என்ற சஞ்சிகையை ஆரம்பித்து 1951 - 1959 வரை அதன் ஆசிரியராகவும் விளங்கினார். இவரே அகில உலக தமிழ் ஆராய்ச்சி கழகத்தை I.A.T.R. (International Assocication of Tamil Research) ஆரம்பித்து, அதன் பொதுச் செயலாளராகவும் பணிபுரிந்தார்.
- இவர் தம் வாழ்நாட்களில் மறைந்துகிடந்த எத்தனையோ தமிழ் நூல்களை தமிழ் உலகிற்கு அறிமுகம் செய்து வைத்தார். அவற்றுள் சில, ஹென்றிக் ஹென்றிக்கஸ் எழுதிய தமிழ்மொழி இலக்கணம், தமிழ்மொழி அகராதி என்ற நூல்களை இவர் லிஸ்பன் நூலகத்தில் 1954ஆம் ஆண்டு கண்டுபிடித்தார். இயேசு சபை துறவிகள் இயற்றிய போர்த்துக்கேய அகராதியை பரிசில் உள்ள தேசிய நூலகத்தில் கண்டார். தம்பிரான் வணக்கம் என்னும் நூலை அமெரிக்க ஐக்கிய நாட்டு ஹர்பட் பல்கலைக்கழகத்தில் இருந்து எடுத்து அதனை ஆராய்ச்சி செய்தார். ''கிறிஸ்தியானி வணக்கம்'' என்ற நூலை ஒளிப்படம் பிடித்து அது உலகிற்கு கிட்ட வழிசெய்தார்.
- இவர் பல மொழிகளை எழுத, பேச கற்றுக்கொண்ட ஒருவர். பிராஞ்சு மொழி, ஜெர்மானிய மொழி, இத்தாலிய மொழி, ஸ்பானிய மொழி, போர்த்துகேய மொழி ஆகியவற்றை நன்கு கற்றிருந்தார்.
- இவர் தான் செய்த தமிழ்த் தூதுப்பயணங்கள் எல்லாவற்றையும் ஒன்றிணைத்து, ''தமிழ்த்தூது'' என்னும் நூலாக வெளியிட்டார்.
- தனது உயர்கல்வியின் பிற்பாடு மலேசியாவில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் இந்தியக் கல்வித்துறையின் விரிவுரையாளராக 1961 - 1969ஆம் ஆண்டு வரை பணியாற்றியதோடு, இவர் லண்டன் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டமும் உரோமாபுரிப் பல்கலைக்கழகத்தில் இறையியல் துறையில் கலாநிதிப் பட்டமும் பெறலானார்.
- 1966ஆம் ஆண்டு அதன் முதலாவது கருத்தரங்கை மலேசியாவின் கோலாலம்பூர் பல்கலைக்கழகத்திலும், இரண்டாவது கருத்தரங்கை சென்னையிலும் மூன்றாவது

கருத்தரங்கை யாழ் நகரிலும் நடாத்தலானார்.

இவர் இப்பேர்ப்பட்ட தமிழ்த்தாய் ஆராய்ச்சிகளை செய்ய உதவியாக இருந்தது, இவர் 14வது நிரம்பிய சிறுவனாக இருந்தபோது, லியோ டால்ஸ்டாய் எழுதிய ''புத்துயிர்ப்பு'' என்ற நூலைக் கற்றதினாலேயாகும் என தனது வரலாற்றிலே கூறுகின்றார். ''அந்நூலைப் படித்தனால் என் வாழ்க்கை சமய சேவையிலும் கல்விச் சேவையிலும் உருவாகியது என்று நம்புகின்றேன்'' என்று கூறுகின்றார்.

- இவர் பரந்த அறிவுப் பிறமதங்களைப் புறக்கணியாத பண்பும் கொண்டவர். கிறிஸ்தவ மதத்தின்மீது ஆழமான பற்றும், தமிழ் மொழிமீது அளவற்ற மதிப்பும் கொண்டவர்.
- இவரது அறிவாற்றல், தெளிந்த சிந்தனைகள், வளமானகுரல், இவரது அறிவுப் பணிக்கு மிகவும் உதவலாயிற்று.
- ''கடவுளுக்குப் பணிந்து தன் பண்பாட்டிற்காகவும் தன் நாட்டிற்காகவும் ஒருவன் தன் ஆற்றலை நேர்ந்தளித்து செலவிடுவது தன்னலமற்றதும், உன்னதமானதுமாகும்'' என்று 1995ஆம் ஆண்டு தான் கொழும்பில் ஆற்றிய உரையொன்றில் குறிப்பிடலானார்.
- இவர் ஓர் அறிவாளி, ஆன்மீகவாதி, சொல்வீரன், அனைத்துலக தமிழ் அறிஞர்களை ஒன்றிணைத்த செயல்வீரன், இவர் தமிழ்த்தாய்க்கு செய்த சேவையைப் பாராட்டி, தமிழ் நாட்டிலே மூன்றாவது தமிழ்சங்கம் நடைபெற்ற இடம் என்று சொல்லப்படும் மதுரையில் இவருக்கு சிலையும் எழுப்பியுள்ளனர்.
- தமிழ்த்தாய்க்கு பலவழிகளிலே பல்வேறு பணிகளைப்புரிந்து 1980ஆம் ஆண்டு, புரட்டசித்திங்கள் முதல் நாள் இறைபதம் சேரலானார்.

### 9.1.3.10 அருட்பணி. வில்லி விக்கிரமசிங்க

- மிக உயர்கல்வியைப் பெற்றுள்ள இவர் கல்விக்காக ஆற்றியுள்ள பணி மகத்தானதாகும்.
- இந்தியாவில் சேரெம்பூர் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக மிகப் பாரிய பணியினை ஆற்றியுள்ளார்.
- பிலிமத்தலாவையிலுள்ள இறையியல் கல்லூரியில் வெளிவாரி விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளார்.
- கேரி கல்லூரியில் அதிபராக 15 வருடங்கள் கடமையாற்றிய இவர், பிள்ளைகளுக்கு முழுமையான கல்வியின் மதிப்பீடுகளை விளக்குவதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டார். நிறைவான ஒரு பிள்ளையை உருவாக்குவதற்கு கல்வியைப் போன்று விளையாட்டும் தேவையென்பதை உணர்ந்த இவர் அதற்காக அயராது உழைத்தார்.
- ஓய்வு பெற்ற பின்பும் கேரி கல்லூரியின் நிர்வாக முகாமைத்துவ சபையில் அங்கத்துவம் (Board of Groverners) வகித்து கல்விக்காக பாரிய பணியினை நிறைவேற்றியுள்ளார்.

### 9.1.3.11 அருட்பணி. ஆர். எஸ். டி. சேரம்

- அருட்பணி ஆர். எஸ். டி. சேரம் கல்கிசையிலுள்ள பரிசுத்த தோமஸ் கல்லூரியின் பழைய மாணவராவார். 1918இல் இங்கிலாந்துக்குச் சென்ற இவர் ஒக்ஸ்பாட் பல்கலைக் கழகத்தின் சிறப்புப் பட்டதாரி ஆனதோடு பின்பு குருவாக அபிஷேகம் செய்யப்பட்டார். பல்வேறு பகுதிகளிலுள்ள ஆலயங்களில் பணியாற்றிய இவர் கல்விக்காக ஆற்றிய பணி அளப்பரியது.
- கல்கிசையிலுள்ள பரிசுத்த தோமஸ் கல்லூரியின் 1925இல் ஆசிரியராகவும், பின் 1925இல் பிரதி அதிபராகவும், பின்பு 1932இல் இக் கல்லூரியின் அதிபராகவும் பதவியேற்றதோடு, அவரது பணி விசாலமானது.
- இவர் பரிசுத்த தோமஸ் கல்லூரியில் புதிய கட்டிடங்களைக் கட்டியதோடு, மாணவர்களுக்கான விடுதியையும் திறந்து வைத்தார்.
- கல்வியின் அனைத்துப் பிரிவுகளுக்கும் கைகொடுத்தார்.

- பல்வேறு விளையாட்டுகள், நீச்சல், விளையாட்டுப் போட்டிகள், குத்துச்சண்டை (Boxing) டெனிஸ், அகியவற்றைக் கட்டியெழுப்பவதில் உதவினார்.
- பல்வேறு கழகங்கள், சங்கங்களை ஆரம்பித்ததோடு, பேச்சாற்றலைக் கட்டியெழுப்பு வதிலும் செயலாற்றினார்.
- எப்பொழுதும் சமநிலையான கல்வியினை மாணவர் பெற்றுக்கொள்ள இவர் பாடுபட்டார்.
- பாடசாலையின் சூழலை மிகவும் விருப்பத்துக்குரிய இடமாக வைத்திருப்பதன் வழியாக மாணவருடைய கல்வியை விருப்பமுள்ள ஒன்றாக நிலைநாட்டுவதற்கு இவர் இடைவிடாது முயற்சி செய்துள்ளார்.

**உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

1. இலங்கைக் கல்வி வளர்ச்சியில் வெளிநாட்டவரின் பங்களிப்பு எனும் தலைப்பில் கட்டுரை வரைவர்.
2. இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் கல்வித்துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் பற்றி அறிக்கை ஒன்றை தயாரிப்பர்.
3. கிறிஸ்தவ கல்வியாளர்களையும் அவர்தம் பணிகளையும் அறிந்து கொள்வதன் மூலம் தம் வாழ்வின் நிலைகளுக்கேற்ப கல்விப் பணிகளில் ஈடுபடுவர்.
4. கிறிஸ்தவ கல்வியானது இலங்கையின் கல்வி வளர்ச்சிக்கு வழங்கிய பங்களிப்பை வெவ்வேறாக கலந்துரையாடுங்கள்.

**உசாத்துணை நூல்**


- Barcatta,B.A, History of the Southern Vicariate of Ceylon, 2 Vol. Ampitiya, Kandy, Sri Lanka, 1991
- Boundens R, Catholic Missionaries in British Colony, 1796 - 1893, Immensee, 1979.
- Boudens, R., The Catholic Church in Ceylon Under Dutch Rule, Rome Catholic Book Agency, 1957
- Chelliah, J.V., A Century of English Education, A.C.M. Press, Tellipalai, 1951
- Don Peter, W.L.A.View Points on Education in Sri Lanka, Colombo, 1987.
- Don Peter, W.L.A. A Comparative Study of the Influence of Buddhism and Christianity of Ceylon Education, London University 1962
- Gnanamuthu Pilendran, A Brief History of the Catholic Church in Sri Lanka, Jaffna, 2007
- Gratian, L.J., The Story of Our Schools, The First School Commission, 1832 - 1841, Colombo, 1927
- Kuruppu, D.J.B, The New Education Policy in the Ceylon Government, Colombo, 1923.
- Sumathipala, K., History of Education in Ceylon, 1796 - 1965, Dehiwala, 1968.
- பிலிப்ஸ் இ. யேசுதாசன், கிறிஸ்தவ வாழ்வு, அ.ம.தி. குருமடம் அம்பிட்டியா, 2002
- ஞானமுத்து பிலேந்திரன், கிறிஸ்தவமும் நாகரிகங்களும், யாழ்ப்பாணம், 2008

**தேர்ச்சி** **9.0 :** இலங்கை சமுதாயத்தின் நலன்கருதி கிறிஸ்தவ சபையின் பங்கெடுப்பை விளக்கி சமூக மேப்பாட்டிற்காக கிறிஸ்தவராக அர்ப்பணிப்பர்.

**தேர்ச்சி மட்டம்** **9.2 :** இலங்கைச் சமுதாயத்தின் மனிதநேய செயல்கள், மனித உரிமை ஆகியவற்றில் திருச்சபை கொள்ளும் பங்கினை உணர்ந்து, நாட்டுப் பிரஜைக்குரிய கடமைகளை நிறை வேற்றுவர்.

**பாடவேளைகள்** **:** 15

**கற்றல் பேறுகள் :**

- திருவிவிலிய சிந்தனை, கிறிஸ்துவின் போதனை ஆகியவற்றிற்கேற்ப கிறிஸ்தவ அன்பை பிழையின்றி விளங்கி அவ்வன்பை சமூகத்தின் நவன் கருதி பங்களிப்புச் செய்வர்.ஷ
- இலங்கைச் சமூகத்தின் நலன் கருதி திருச்சபையின் பங்களிப்பினைக் கற்று கிறிஸ்தவ அழைப்புக்குள் இந் நலனுக்காக செயலாற்ற இதயபூர்வமாக முன்வருவர்.
- படைப்புகள் அனைத்திலும் மனிதனின் உன்னத நிலையை விளங்கிக்கொண்டு மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நேரடியாகப் பங்களிப்புச் செய்வர்.
- சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றும் போது நலன்புரிச் செயல்கள் நற்பணிகளின் முக்கியத்துவத்தை விளங்கிக் கிறிஸ்தவ அன்பை முதன்மையாகக் கொண்டு அதற்காகப் பங்களிக்க முன்வருவர்.
- மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், சமூக நலனுக்காக சமூக நீதியை நிலைநாட்ட உயிர்த்தியாகம் செய்த உத்தமர்களின் வாழ்வின் ஒளியினைப் பெற்று அதற்காக தனது, பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு தூண்டப்படுவர்.

## விடய உள்ளடக்க வழிகாட்டி

### 9.2.1 கிறிஸ்தவ அன்பும் சமுதாய நலனும்

### திருவிவிலிய சிந்தனை

### பழைய ஏற்பாடு

- அனைத்துப் படைப்புகளிலும் உயர்ந்த படைப்பு மனிதன் என்பதும், மனிதன் தனியே இருப்பது இறைவனது விருப்பம் இல்லை என்பதும் தொடக்க நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது (தொடக்கநூல் 2/18). எனவே மனிதன் ஒரு சமூகப் பிராணியாவான். இறைவன் மனிதனை குடும்ப வாழ்வுக்கு அல்லது சமூக வாழ்வுக்கு அழைக்கிறார் என்பது இதிலிருந்து தெளிவாகிறது. சமூக வாழ்வின் வெற்றிக்காக சுயநலத்தை உடைத்தெறிந்து அர்ப்பணத்தோடு வாழ்தல் முக்கியமாகும். இதற்காக இறையன்பிலும், இறை இரக்கத்திலும் வாழ்வைக் கட்டியெழுப்புதல் முக்கியமாகும். அன்பை முதன்மைப்படுத்திக் கொண்டு நீதியாக செயற்படுவதனால் சமூகத்தின் பொது நலனையும் உண்மையான அமைதியையும் கட்டியெழுப்பலாமென திருவிவிலிய சிந்தனை எமக்குக் கூறுகிறது.
- மோசேயின் தலைமைத்துவத்தின் கீழ் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்ட இஸ்ரயேல் மக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கிச் செல்லும் பயணத்தில், இறைவன் அவர்களுக்குக் கொடுத்த சட்ட திட்டங்களினதும் படிப்பினைகளினதும் கருத்தாயமைவது சகோதர அன்பில் ஒருவருக்கொருவர் நியாயத்தையும் நீதியையும் நிறைவேற்றுவதாகும். விசேடமாக அந்த சமூகத்தில் வாழ்ந்த ஏழை எளியவர்களுக்கும்,

கைவிடப்பட்டவர்களுக்கும், விதவைகளுக்கும், பிள்ளைகளுக்கும் அன்பு காட்டுதலும், உதவுதலும், இந்தக் கட்டளைகளினாலும், ஆணையினாலும் இவற்றை மேலும் அறிந்து கொள்ளலாம்.

- லேவியர் 19/9, 10, 13, 15, 17 - 19/18
- லேவியர் 25/35 - 38
- விடுதலைப் பயணம் 22/21 - 27

- ''கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்'' (விடுதலைப் பயணம் 21.:.24) எனும் சட்டத்தினால் சமூக நீதி எடுத்துக்காட்டப்படுகிறது. இதனைப் பார்க்கும் போது பழிவாங்குதல் போலத் தோன்றினாலும், அக்கால சமூக கலாசாரத்தின்படி தனக்கு ஏற்பட்ட கேட்டுக்கு மேலாக கேடு செய்வதற்கு அனுமதியை ஒரு போதும் அளிக்காத நியாயம் அங்கு வெளிப்படுகிறது.

## புதிய ஏற்பாடு

- ''கண்ணுக்கு கண், பல்லுக்குப் பல்'' எனும் பழைய ஏற்பாட்டின் சட்டத்துக்கு அப்பால் சென்று கிறிஸ்துவின் போதனைகளும் வாழ்க்கையின் முன்மாதிரிகைகளினதும் வழியாக முழுமையாக மாற்றியமைத்து உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள்; உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்'' (மத்தேயு 5/43) என்பதனால் சகோதர அன்பின் புதிய கண்ணோட்டத்தில் வெளிக்கொணரப்பட்ட விதத்தினை கிறிஸ்துவின் மலைப்பொழிவில் காணக்கூடியதாகவுள்ளது.
- அவரது படிப்பினைகளினதும் போதனைகளினதும் வழியாக வெளிப்படுத்தப்பட்ட இந்த அன்பு புதிய உயரிய தர்மமான சிலுவையில் பலியானதன் மூலம் உறுதியாக்கப்பட்டு பகைவர்களையும் மன்னிக்கின்ற எல்லை மீறிய அன்பை அவரது வாழ்வில் நாம் காணக்கூடியதாயுள்ளது.
- மக்களினத்தாரின் தீர்ப்பு நாளிலே ஆயன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிப்பது போல் இறைவன் மக்களை இரு பக்கமாகப் பிரித்து ''நான் பசியாய் இருந்தேன்; என் தாகத்தைத் தணித்தீர்கள் ... (மத்தேயு 25/31-46) எனும் படிப்பினையில் அவர் மிகத் தெளிவாகக் கூறுகிறார். அன்பு வாழ்வையும் இரக்கம் காட்டுதலையும் கிறிஸ்துவின் சீடர்களின் உரிமையும், பிரிக்கமுடியாத, புறக்கணிக்கமுடியாத பொறுப்பும் கடமையுமாகும்.
- சமுகத்தில் துன்பப்படுவோர் யாராக இருப்பினும் அவர்களுக்கு நன்மை செய்யும் போது கிறிஸ்துவுக்கே இதனைச் செய்தோம் என்பது தெளிவாகும். ''மிகச் சிறியோராகிய என் சகோரரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்'' (மத்தேயு 25:40). நீங்கள் எதையெல்லாம் செய்யவில்லையோ அதை எனக்குச் செய்யவில்லை (மத்தேயு 25:45).
- எனவே, கிறிஸ்தவ அன்பு என்பது கிறிஸ்தவ சீடத்துவத்தின் இன்றியமையாத கடமையாகும். தாம் வாழ்கின்ற சூழலில், தொழில் செய்யும் இடத்தில், சமூக நலன் கருதி பொது நன்மைக்காக இரக்கச் செயலில் அர்ப்பணத்துடன் ஈடுபட கிறிஸ்துவால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவன் இதை புறக்கணிக்க முடியாது. எவரும் இதைத் தடைசெய்ய முடியாது.
- திருவிவிலிய கண்ணோட்டத்துக்கு அமைய ககட்டியெழுப்பப்பட்ட கிறிஸ்தவ சிந்தனையானது அயலானை அன்பு செய்ய வேண்டிய கடமையை எமக்கு நினைவூட்டுகின்றது. மேலும் தன்னைப்போல் அயலானை அன்பு செய்தல் இறையன்பினாலே நிகழ்வதாகும் (1பேதுரு 4/7-19). கிறிஸ்தவ அன்பின் நோக்கமானது அயலானை அன்பு செய்வதன் வழியாக இறைவனையே அன்பு செய்தவதென்பது இதிலிருந்து தெளிவாகும்.

- சகல தருமங்களிலும் அன்பே முதன்மையானதாகும். அன்பு இல்லாத இடத்தில் வெறுமையே உள்ளது; ஒலிக்கும் வெண்கலமேயாகும் (1கொரிந்தியர் 13/1-13). ஆகையால் அன்பும், இரக்கமும் இல்லாதவர்கள் உண்மையான கிறிஸ்தவர்களாக வாழ முடியாதென்பது தெளிவாகும்.
- இறைவனையும் அயலானனையும் அன்பு செய்வதைத் தவிர முதன்மையான கட்டளை எதுவுமில்லை (மாற்கு 12/29-31). ''நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்'' என்பது இயேசு தனது திருத்தூதர்களுக்குக் கொடுத்த புதிய கட்டளையாகும் (யோவான் 13/34). நாம் கிறிஸ்துவுடைய சீடர்களென்பதை இவ்வாறு அன்பு செய்வதாலேயே அனைவரும் அறிந்து கொள்கின்றனரென கிறிஸ்து கூறியுள்ளார்.

**கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி -** இல. 1889, 2196

### 9.2.2 இலங்கைச் சமுதாயத்தில் நலன்புரிச் செயல்கள்

- கிறிஸ்தவ அன்பை முதன்மையாகக் கொண்டு சமூகத்தின் பொது நன்மைக்காக செயலாற்றுவதும் சமூக நலனுக்காக பங்களிப்புச் செய்வதும் கிறிஸ்தவ பொறுப்பாகும். சமூக நலனென்பது பௌதீக அபிவிருத்தி மட்டும் முக்கிய இடத்தைப் பெறுவதல்ல. மனிதன் முழுமையான மனிதனாக சமூகத்தில் வாழ்வதற்குத் தேவையான பின்னணியை ஒழுங்கமைத்துக் கொடுப்பதாகும். இறைச் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதனின் இந்த கௌரவத்தை மேலோங்கச் செய்வதற்காகச் செயலாற்ற உதவுவதாகும்.
- இலங்கையின் வரலாற்றிலே, விசேடமாக இன்று இந்தக் கண்ணோட்டத்திற்கேற்ப கிறிஸ்தவ அன்பை முதன்மையாகக் கொண்டு இன, சமய, சாதி ஆகிய பேதங்களைக் கடந்து சமூக நலனுக்கும் மனித அபிவிருத்திக்குமான செயல்களில் ஒரு சபையாகவும் பல்வேறு இயக்கங்களாகவும் அமைப்புக்களாவும் தனிப்பட்ட ரீதியாகவும் கிறிஸ்தவர்கள் ஈடுபட்டுள்ளனர்.
- 16வது நூற்றாண்டில் இந்நாட்டுக்கு வருகை தந்த கிறிஸ்தவ மறைபரப்பு சபைகளின் பணிகள் பற்றிக் கூறுகையில் இவர்களுடைய தூதுப்பணியின் நோக்கமாக 'ஆன்மாக்களை மீட்பதே'' இருந்தது என்பது வரலாற்று ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- எனினும் மனிதன் ஆன்மாவை மட்டும் கொண்டவனல்ல உடலையும் கொண்டவனாவான். எனவே ஆன்மீகத் தேவைகளைப் போன்றே உடல் சார்ந்த தேவைகளும் உள்ளன. மனிதத்துவத்துக்கு கௌரமற்ற நிலை ஏற்படாதவாறு வாழ்க்கையை நடாத்திச் செல்வதற்குத் தேவையான அடிப்படை வசதிகளையும் கருத்திற் கொண்டு செயற்பட்டனரென்பது தெளிவாகத் தெரிகிறது.
- ஆரம்பத்திலிருந்தே திருச்சபை மனித தேவைகளை நிறைவேற்றுவதற்காக இரக்கச் செயல்களில் ஈடுபடும் பணி புரிந்ததென்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. இன்று வெவ்வேறு உடல், பௌதீக எனும் மனித தேவைகளுக்காக கிறிஸ்தவ ஆலயங்கள், நிறுவனங்கள், அமைப்புகள் ஆகியவை அவ்வாறான கிறிஸ்தவ இரக்கப் பணிகள் பற்றிய சமூகமயமான மனப்பாங்குகளைக் காரணமாகக் கொண்டுள்ளதென்பது தெளிவாகும்.
- போர்த்துக்கேயரின் வருகையிலிருந்து இன்று வரை எந்தவொரு கிறிஸ்தவ இரக்கப் பணிபற்றி நோக்குகையில் பெண் துறவற சபைகளின் வருகை அல்லது அருட் சகோதரிகளின் தூதுப்பணியானது முக்கிய காரணியாக உள்ளதென்பதை அறியக் கூடியதாகவுள்ளது. இது இலங்கை வரலாற்றிலே அடிமைப்படுத்தப்பட்ட காலத்தில் நிகழ்ந்த முக்கிய மீட்பு ரீதியான சம்பவமென்று கூறினாலும் தவறில்லை.
- பின்னர் வருகை தந்த ஆண் துறவற சபைகளினால் முன்னெடுக்கப்பட்ட பணிகளையும் இவற்றோடு இணைக்கலாம். இச்சபைகள் ஆற்றிய பணிகளையும் வரலாற்று பற்றியும் தனிக் கற்கையில் ஈடுபடுதல் மிகவும் பொருத்தமாகும்.

- மேற்கூறப்பட்ட வெளிநாடுகளிலிருந்து வருகை தந்த துறவற சபைகளைப் போன்றே இதற்கு இணையாக இந்நாட்டில் ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டு வருகின்ற துறவற சபைகள் தமக்குப் பரம்பரையாக வருகின்ற தனிவரத்தைப் பின்பற்றி பணிகளில் ஈடுபட்டபோதிலும் இந்த அனைத்துப் பணிகளும் கிறிஸ்துவின் போதனைகளின் அடிப்படையான கிறிஸ்தவ இரக்கத்தையே வெளிப்படுத்துகின்றன.
- இந்த துறவற சபைகளில் ஆற்றிய, இன்றும் தொடர்ந்து ஆற்றும் பணிகளில் நோயாளிகள் நலம் பேணல், அனாதை பிள்ளைகள், தவறு செய்து திருமணம் செய்யாத அன்னையர்களைப் பாதுகாத்தல், பார்வையற்ற, பேசமுடியாத, செவிப்புலனற்ற மற்றும் வேறு குறைபாடுகளுக்குள்ளான பிள்ளைகளைப் பாதுகாத்தலும் அவர்களுக்குப் பொருத்தமான கல்வியையும், தொழிற் பயிற்சியையும் பெற்றுக் கொடுத்தல், வயோதிபர்களையும் விசேட இல்லங்களில் பாதுகாத்தல், முறைசார் பாடசாலைக் கல்வி, வீதிவாழ் பிள்ளைகளுக்கான முறைசாராக் கல்வி, சிறையிலுள்ளோர், உளவியல் ரீதியாக குறைபாடுகளுக்குள்ளானவர்களுக்கான அபயம், ஆலோசனைப் பணிகள், மருத்துவப் பணிகள், மந்த புத்தியுள்ள பிள்ளைகளைப் பராமரித்தல், குடும்ப அப்போஸ்தலிக்கப் பணி, போர்களினால் இடம்பெயர்ந்த பிள்ளைகள், அகதி முகாம்களில் உள்ளோருக்கான பணி போன்றவற்றைக் குறிப்பிட முடியும். இப்பணிகள் பல்வேறு இடங்களில் பரவி இருப்பினும் இவற்றின் நோக்கமும் அடிப்படையும் கிறிஸ்தவ அன்பைத் தவிர வேறு ஒன்றுமில்லையென்பது தெளிவாகின்றது.
- இன்றைய திருச்சபையில் பங்கு மற்றும் கிறிஸ்தவ ஆலய மட்டங்களிலும் துறவற சபைகள், குருக்கள், ஆயர்கள் ஆகியோரின் உதவியோடு இவ்வாறான அனேக இரக்கப் பணிகள் நடைமுறையிலுள்ளன. இவை பல்வேறு நிறுவனங்கள், அமைப்புக்கள் வழியாக செயற்படுகின்றன.

## கிறிஸ்தவ சமூக நலன்புரி, இரக்கப்பணி நிறுவனங்கள்

### கரிதாஸ் இலங்கை - செடேக் (SEDEC)

- அண்மைக்கால வரலாற்றிலே இந்நாட்டின் கத்தோலிக்க அன்புப் பணிகள், சமூக அபிவிருத்தி, நலன்புரிச் செயல்கள் என்பவற்றை அவதானிக்கும் போது இலங்கை ஆயர் பேரவையின் கீழ் செயற்படுகின்ற, கத்தோலிக்க திருச்சபையின் சமூகப்பணிப் பிரிவான கரிதாஸ் (இலங்கை) செடக் நிறுவனம் முக்கிய இடத்தை வகிக்கின்றது.
- 1968இல் நிறுவப்பட்டு இன்று இலங்கையின் சகல மறைமாவட்டங்களிலும் பல்வேறு பெயர்களால் இரக்கப் பணிகளிலும் சமூக நலன்புரிப் பணிகளிலும் ஈடுபட்டுள்ள கரிதாஸ் (இலங்கை) செடக் நிறுவனம் விசேடமாக மனித அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல், சமூகத் தேவைகளை நிறைவுசெய்தல் மானிட அபிவிருத்தி, நீதியுள்ள சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கான பல்வேறு செயற்திட்டங்கள், செயற்பாடுகள் வழியாக பங்களிப்புச் செய்கிறது.

### புனித வின்சட் டீ பவுல் இரக்கப்பணி

- சர்வதேச மட்டத்தில் செயற்படும் இந்த இரக்கப் பணி இலங்கையில் பல்வேறு மறைமாவட்டங்களில் நிறுவப்பட்டுள்ள மத்திய சபையை முதன்மையாகக் கொண்டு பங்கு மட்டத்தில் செயற்படுகின்றது. ஆலய மட்டத்தில் பொதுநிலையினர் ஒன்றிணைந்து அர்ப்பணமுள்ளோரின் உதவிகளின் வழியாக இரக்கச் செயல்களில் ஈடுபட்டுள்ளதைக் காணலாம்.

**கிறிஸ்தவ இளைஞர் கழகம் (YMCA)**

- பல்வேறு கிறிஸ்தவ சபைகளின் அங்கத்தவர்கள் சேர்ந்து ஏற்படுத்தியுள்ள தேசிய கிறிஸ்தவ சங்கத்தோடு இணைந்ததான சமூகப்பணிகளிலும் இரக்கப் பணிகளிலும் ஈடுபட்டுள்ள நிறுவனமாகும்.

**கிறிஸ்தவ மகளிர் கழகம் (YWCA)**

- பல்வேறு சமூகப் பணிகளிலும் இரக்கப் பணிகளிலும் ஈடுபட்டுள்ள, பல்வேறு கிறிஸ்தவ சபைகளின் அங்கத்தவர்கள் (பெண்கள்) தேசிய கிறிஸ்தவ சங்கத்துடன் இணைந்து செயற்படும் ஒரு நிறுவனமாகும்.

### 9.2.3 மனித உரிமையும் சமுதாய முன்னேற்றமும்

- எந்தவொரு சமூகத்தினதும் முன்னேற்றமும் அபிவிருத்தியும் அச் சமூகத்தில் கட்டியெழுப்பப்படும் அமைதியிலும், புரிந்துணர்விலும் தங்கியுள்ளது. இவ்வமைதியும் புரிந்துணர்வும் ஏற்படுவதற்கான விசேட காரணமாயமைவது பிரசைகளினது மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதனாலாகும். சகல மனிதர்களதும் மனிதத்துவத்துக்கு உரித்தான கௌரவத்தைப் பாதுகாப்பது நீதியானதாகக் கருதப்படும்.
- மனித வரலாறு முழுவதிலும் காண்பதைப் போன்று தற்காலத்திலும் மனித உரிமைகளைக் களங்கப்படுத்தல், மீறப்படுதல், மனித கௌரவத்துக்கு பொருத்தமற்ற சம்பவங்கள் ஆகியன ஊடகங்கள் வழியாக வெளிப்படுத்தப்பட்டன.
- எவ்வாறாயினும், மனித உரிமைகள் மீறப்பட்ட இருண்ட கடந்த காலத்தோடு, உருவாகிய ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பிரகடனமானது மனித குடும்பத்தைச் சேர்ந்த சகலருக்கும் உரித்தாக வேண்டிய மற்றவர்களால் உரிமை பாராட்ட முடியாத மீறமுடியாத மனித உரிமைகள் பற்றிய 30 விடயங்களை அறிக்கையிட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளால் கடைப்பிடிக்க கடமைப்பட்டுள்ள இப் பிரகடனத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள விடயங்களுள் மனித மாண்பு தொடர்பான திருவிவிலிய சிந்தனை, கிறிஸ்தவக் கண்ணோட்டம், அண்மைக்கால வரலாற்றிலே திருச்சபை போதனைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது.
- திருவிவிலிய சிந்தனைக்கேற்ப மனிதனாகப் பிறத்தல் விசேட கொடையாகும். மனிதன் இறைவனது சாயலாகவும் உருவாகவும் படைக்கப்பட்ட ஒரு படைப்பாகும் (தொடக்கநூல் 1/26). படைப்பனைத்திலும் முதலிடத்தை வகிப்பது மனிதனாவான் (திருப்பாடல் 8/4-6).
- இந்தக் கிறிஸ்தவ சிந்தனைக்கு ஏற்ப இன, மத, குல ஆகிய பேதங்களில்லாமல் இலங்கை மக்கள் சமூகத்தில் மனிதத்தன்மையின் கௌரவத்தைப் பாதுகாப்பதற்கும், மனித உரிமைகளைப் பேணுவதற்கும் பல்வேறு காலங்களிலும், விசேடமாகத் தற்காலத்திலும் திருச்சபை பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.
- இலங்கையைப் போன்று பல்வேறு இனத்தவர், பல்வேறு மதத்தவர் வாழ்கின்ற சமூகச் சூழலில், மனித உரிமைகள் மட்டில் ஒருவரை உயர்வாகவும், இன்னொருவரைத் தாழ்வாகவும் கருதுவதும் பிரிப்பதும் ஒரு போதும் நீதியாகாதெனவும், அது உண்மையான, அமைதியான சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கும் சமூக அபிவிருத்திக்கும் பாரிய தடையாக அமையும் என்பதையும் திருச்சபை விளக்கமாக எடுத்துக் காட்டியுள்ளது.
- அண்மைக்கால வரலாற்றிலே இலங்கையில் மனித மாண்பு மாசுபடுத்தப்பட்டு, மனித உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் அதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து அமைதிக்காகவும் சமத்துவத்துக்காகவும் திருச்சபை சகல இனத்தவருக்கும் அறிவுரை கூறிய சந்தர்ப்பங்கள் பலவாகும். இவற்றில் சிலவற்றை மட்டும் இங்கு காணலாம்.

**பல்வேறு இன, சமய, சமூகக் குழுக்களின் சம உரிமை களுக்கும், நீதிக்கும் குரல் கொடுத்தல்**

- 1983 யூலை மாதத்தில் நிகழ்ந்த இனவாத பிரச்சினைகளின் பின்பு இலங்கைச் சமூகத்தில் ஏற்பட்ட பேதங்கள், பிளவுகள், துன்புறுத்தல்கள், மோதல்களையும் எதிர்கொண்டு அமைதிக்கான சவால்கள் தொடர்பாக 1984ஆம் ஆண்டு யூன் மாதம் 10 திகதி இலங்கையின் கத்தோலிக்க ஆயர் பேரவை வெளியிட்ட ''இலங்கை மக்களை மீண்டும் கட்டியெழுப்புவதை நோக்கி'' எனும் அறிவுரை.
- 1983 யூலை மாதத்தில் நிகழ்ந்த வன்முறைகள் பற்றி ஆராய்ந்து ''கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்'' என்று இனப்பழிவாங்களைவிட தாழ் மட்டத்திலான ஒழுக்கத்தில் நாம் உட்பட்டுள்ளோம் என்பதைக் கூறுவதோடு, அப்பாவித் தமிழ் மக்களுக்கு இலக்கு வைத்த தாக்குதல்கள் பற்றிக் கவலைப்பட்டு, கிறிஸ்தவ அன்பின் கண்ணோட்டத்தில் சமூக நீதிக்காக செயற்படுவதற்கு அழைத்ததோடு திருச்சபையின் உறுப்பினர்களுக்கும் இலங்கை மக்களுக்கும் குருணாகலை மாவட்டத்தில் மேன்மை தாங்கிய இலஷ்மண் விக்கரமசிங்க ஆயர் அவர்களால் வெளியிடப்பட்ட அவரது இறுதிச் செய்தி.
- முப்பது ஆண்டுகளாக தொடர்ந்த போர், நாளுக்கு நாள் ஏற்பட்ட வன்செயல்கள் ஆகியவற்றுக்கு கடுமையாக எதிர்ப்பு தெரிவித்து, கலந்துரையாடல் வழியாக அமைதியான தீர்வொன்றுக்கு வரும்படி உரிய பகுதியினருக்கு வலியுறுத்திய திருச்சபையின் பரிந்துரைப்புகளும், அறிவுரைகளும் அடங்கிய கோரிக்கைகள்.
- போரில் ஏற்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு எதிராக குரலெழுப்புதல், அநியாயமாகக் கைது செய்யப்படல், தடுத்துவைத்தல் ஆகியவற்றுக்கு எதிராகக் குரலொழுப்புதல்
- தொழில்சார் உரிமைகளுக்காக வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதன் காரணமாக வேலை இழந்தோர், 1980 யூலை வேலை நிறுத்தம் செய்தோரின் வேலைகளை மீண்டும் பெற்றுக் கொடுப்பதற்காக குரலெழுப்பல், திருச்சபை அவர்களின் புகலிடமாகுதல்.
- 1988 - 1989 ஊழல்கள் நிலவிய காலத்தில் ஆட்கடத்தல்கள், கொலைகள், சட்டரீதியற்ற முறையில் கைது செய்தல், தடுத்து வைத்தல், மறைத்து வைத்தல், துன்புறுத்தல், வதை முகாம்கள் ஆகியவற்றை எதிர்த்து, இவ்வாறாகத் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் உதவி செய்தல்.
- சுதந்திர வர்த்தக வலையத்தில் தொழில் புரிபவர்களின் முக்கியத்துவத்தை மிகத் தெளிவுபடுத்தி தொழிலாளரின் உரிமைகளை ஆட்சியாளரின் கவனத்துக்குக் கொண்டு வரல், தொழிலாளர் உரிமைக்காக முன் நிற்றல்.
- சூழலுக்கும் மக்களுக்கும் கேடு விளைவிக்கும் மிகப் பெரிய அபிவிருத்திச் செயற்திட்டங்களினால் ஏற்பட்டுள்ள தீய விளைவுகள் பற்றி அறிவுறுத்தி, அகிம்சைக்கு எதிரானவைகளை, கலந்துரையாடலின் வழியாக அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வந்து மக்களின் நன்மைக்காகக் குரலெழுப்புதல்.

### 9.2.4 மருத்துவப் பணி

- மருத்துவத் துறையையும் மருத்துவசாலைப் பணிகளையும் பற்றி அவதானிக்கும் போது போர்த்துக்கேயரின் காலத்தில் இந்நாட்டில் மருத்துவமனைகள் இருந்ததாக வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. போர்த்துக்கேய படைவீரர்களுக்கு சிசிச்சை அளிப்பதற்காக மருத்துவமனையொன்று கொழும்பு கோட்டேயில் ஆரம்பிக்கப்பட்டது.
- இது பிரன்சிஸ்கன் மிஷனரிகளால் நடாத்தப்பட்டு வந்தது. சிலாபத்திலும் யாழ்ப்பாணத்திலுமாக இரு மருத்துவமனைகள் இருந்தன. ஒன்று படைவீரர்களுக்கும், மற்றது கத்தோலிக்கருக்கும்.
- கத்தோலிக்கரல்லாத அனைவருக்குமாக மருத்துவமனைகள் இரண்டு மன்னார் தீவில் அமைக்கப்பட்டன. ஜெரம்யோ அடிகளாரால் அதிகாரிகளுக்கான மருத்துவமனையொன்று மன்னார் கோட்டையில் ஆரம்பிக்கப்பட்டது. கிறிஸ்தவர்கள் அங்கு சுய விருப்போடு பணி புரிந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

- அம்மை நோய், கொலரா, மலேரியா ஆகிய தொற்று நோய்கள் பரவியபோது கிராமங்களையும், வீடுகளையும் விட்டு வெளியேறுவதைத் தவிர வேறு மாற்று வழியும், சுகாதாரப் பணிகளும் அக்காலத்தில் முன்னேற்றமடையாமலும் இருந்தன.
- 1612 இல் அனுப்பப்பட்ட கடிதத்தின் படி இயேசு சபை மறைதூதுப் பணியாளர்களும் அம்மை நோய்க்கு இலக்காயினரெனக் கூறப்படுகிறது.
- றொபர்ட் நொக்ஸ்சும் தனது ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளபடி பெற்றோரும், நோயினால் பீடிக்கப்பட்ட பிள்ளைகளும், கணவன் மனைவியரும் தகுந்த சுகாதாரப் பணி இல்லாமையால் பயந்து ஊர்களை விட்டு ஓடினர்.
- எனினும் கிறிஸ்தவ மறைதூதுப்பணியாளர் நோயாளிகளைக் கைவிட்டுப் பயந்து ஓடவில்லை. அனைவரும் அவர்களது இந்த நற்செயலையும் அர்ப்பணத்தையும் பாராட்டியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 1609இல் மொரட்டுவ, கம்வல பிரதேசங்களில் அம்மைநோய் பரவியதாகவும் கம்வலயில் 70 கிறிஸ்தவர்கள் மட்டில் இறந்தனரெனவும் கூறப்படுகிறது.
- ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தில் 1697இன் இறுதியில் கண்டியில் அம்மைநோய் பரவிய சந்தர்ப்பத்தில் முத்திப்பேறுபெற்ற ஜோசப் வாஸ் அடிகளார் நோயாளிகளைப் பராமரிக்கும் இரக்கப் பணிகளை ஆரம்பித்தமை வரலாற்றிலே குறிப்பிடப்பட்டுள்ளது. அக்காலத்தில் தொற்று நோயின் காரணமாக உறவுகளையும் ஊர்களையும் நோயாளரின் இறந்த உடல்களையும் விட்டுவிட்டு பயந்து மக்கள் ஓடினர். இரண்டாம் விமலதர்ம சூரிய அரசனும் கண்டியை விட்டு பயந்து ஓடினான். எனினும் ஜோசப் வாஸ் அடிகளார் தனக்கு நோய் ஏற்படும் என்பதைக் கவனியாது உதவியாளரான ஜோசப் கர்வால்லோ அடிகளுடன் ஒவ்வொரு வீடாகச் சென்று நோயாளரைப் பராமரிப்பதையும், இறந்த உடல்களை அடக்கம் செய்வதையும் கத்தோலிக்கர், கத்தோலிக்கரல்லாதோர் என்ற பாகுப்பாடின்றிச் செய்தனர்.
- அரசனும் மக்களும் இந்த அன்பு, இரக்கப் பணிகள் தொடர்பாக ஆச்சரியமடைந்தனரெனக் குறிப்பிடப்படுகிறது. மனிதன் ஆன்மாவோடு மட்டுமல்லாது உடலும் உள்ளவன் என்பதால் உடல் நலனுக்காக ஜோசப் வாஸ் அடிகளாரினால் ஆற்றப்பட்ட இந்த இரக்கப் பணிகளையும் இந்நாட்டின் மருத்துவப் பணியையும் உடல் நலனுக்காக வழங்கப்பட்ட கிறிஸ்தவப் பங்களிப்பையும் மறக்க முடியாது.
- ஆங்கிலேயர் காலத்திலும் இந்த நோயாளரைப் பராமரிக்கும் இரக்கப்பணி நடைமுறையிலிருந்தது. அமல மரித் தியாகிகளின் சபை அருட்தந்தையர்கள் இலங்கைக்கு வருகை தந்து மூன்று ஆண்டுகளில் 1850 இல் கொடிய கொலரா நோய் பிரதேசங்கள் முழுவதிலும் பரவியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மறைதூதுப்பணியாளர் மிகக் கடின உழைப்பினால் நோயாளரைப் பராமரித்தனர். இச் சபையின் பிலிக்ஸ் அலெக்சாண்டர், விக்டர் ஆகிய அருட்தந்தையர்கள் தமது தூதுப்பணியின் ஆரம்பத்திலேயே நோயினால் பீடிக்கப்பட்டு மரணமடைந்தனரென குறிப்பிடப்பட்டுள்ளது. ‘‘கொடிய தொற்று நோய் நிலவிய போதும் எமது மறைதூதுப்பணியாளர் இரக்கத்தின் அருஞ்செயல்களைச் செய்தனர்’’ என மசனட் ஆயர் இச்சபைக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளார்.
- **பிரான்சிஸ்கன் அருட்சகோதரிகள்** 1886இல் அரசின் கோரிக்கைக்கிணங்க தாதியார் பயிற்சிப் பாடசாலையொன்றை கொழும்பில் ஆரம்பித்த பின்னர் இப்பணி மன்னாருக்கும் பரவியது. ஹெந்தலையிலும் மாந்தையிலும் தொழுநோய் வைத்தியசாலைகள் இரண்டை ஆரம்பித்த இச்சபையினர், அங்கு நோயாளர்களுக்காக அர்ப்பணத்துடன் பணியாற்றினார். இச்சபையின் அருட்சகோதரிகள் சிறிது காலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் தாதியராகப் பணியாற்றினர்.

- **மென்சிங்கன் திருச்சிலுவைக் கன்னியர்** யாழ் மறைமாவட்ட ஆயர் அல்பிரட் கியோமார், அமதி, அவர்களின் அழைப்பை ஏற்று மென்சிங்கன் திருச்சிலுவை கன்னியர் இந்தியா கேரளாவிலிருந்து 1930ஆம் ஆண்டு ஆடி மாதம் யாழ் ஊர்காவற்றுறையில் (Kayts) அமைந்திருந்த அரசினர் வைத்தியசாலையில் பணியாற்ற வந்தனர். இதைத் தொடர்ந்து யாழ் போதனா வைத்திசாலையிலும் மருத்துவப் பணியாற்றினர். 1960 - 1961 ஆண்டுகளில் வெளிநாட்டு மறைப்பணியாளர் வைத்தியசாலைகளில் பணியாற்றுவது அரசினால் தடை செய்யப்பட்டதைத் தொடர்ந்து சுதேச திருச்சிலுவைக் கன்னியர் மருத்துவப் பணியை இலங்கையில் தொடர்ந்து ஆற்றுகின்றனர்.

### அமெரிக்க மிஷன் ஊழியரின் மருத்துவப்பணி

### கிறீன் மருத்துவமனை (Green Hospital)

- சமயத்துறையிலும் கல்வித்துறையிலும் ஈடுபட்டு ஆலயங்களையும் பாடசாலைகளையும் நிறுவிய அமெரிக்கன் மிஷன் ஊழியர்கள் 1819ஆம் ஆண்டில் மருத்துவப் பணியையும் ஆரம்பிப்பதென தீர்மானித்தனர். அவர்களின் முதலாவது மருத்துவமனை 1820 இல் பண்டத்தரிப்பில் நிறுவப்பட்பட்டது.
- 1847ஆம் ஆண்டு ஒக்டோபர் 06ஆம் திகதி வைத்தியர் கிறீன் அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு வந்து தமது பணியை ஆரம்பித்தார். விரைவிலே சமய வேறுபாடுகளின்றி அநேகர் கிறீன் வைத்தியரிடம் வரத் தொடங்கினர்.
- 1848 ஆம் ஆண்டில் மருத்துவமனை மானிப்பாயில் நிறுவப்பட்டு அமெரிக்க மிஷனின் மத்திய மருத்துவமனையாகத் திகழ்கின்றது. இது இன்று கிறீன் ஞாபகார்த்த மருத்துவமனை என்று அழைக்கப்படுகின்றது.

### மக்லொயிட் மருத்துவமனை

- 1898ஆம் ஆண்டு செம்டம்பர் 24ஆம் திகதி இனுவிலில் இன்னுமொரு மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டது. மறைப் போதகர் மக்லொயிட்டினதும் அவரது மனைவியினதும் நினைவாக மக்லொயிட் மருத்துவமனை எனப் பெயரிடப்பட்டது.

## 9.2.5 மனித உரிமை, சமூகப் பணிகளுக்குப் பங்களித்தோர்

- கிறிஸ்தவ அன்பை முதன்மையாகக் கொண்டு ‘‘மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்” (மத்தேயு 25/40) என்ற கிறிஸ்துவின் வார்த்தைகளில் ஊக்கம் பெற்று தமது சகோதர மக்களின் நலனுக்காகவும், நற்பணிக்காகவும் தம் உயிரையும் பொருட்படுத்தாமல் அர்ப்பணத்தோடு பல பொது நிலையினரும், துறவறத்தோரும் இந்நாட்டு கிறிஸ்தவ வரலாற்றில் பணியாற்றியுள்ளனர்.
- அத்தோடு இந்நாட்டு மனித உரிமைகளுக்காகவும் சமூக நலனுக்காகவும் அர்ப்பணத்துடன் ஈடுபட்டவர்கள் சிலரைப் பற்றிக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

### 9.2.5.1 மேதகு ஆயர் லியோ நாணயக்கார (1917 - 1982)

- கண்டி மறைமாவட்டதினதும், பின்னர் பதுளை மறைமாவட்டத்தின் முதலாவது ஆயராகவும் பணியாற்றிய இவர் இளம் குருவாக பாடசாலையொன்றின் ஆசிரியராக இருந்தபோது இளைஞர்கள், மாணவர்கள் தொடர்பான வாழ்க்கைத் தேவைகள் பற்றிய நடைமுறை அனுபவங்களைப் பெற்றிருந்தார்.
- இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்திலும் பங்குபற்றும் சந்தர்ப்பத்தைக் பெற்ற இவர் அதன் கொள்கைகளின் படி தனது வாழ்க்கை இலட்சியங்களையும்

கொள்கைகளையும் மாற்றிக் கொண்டு மக்களுக்கான பயணத்தை ஆரம்பித்தார்.

- 1970 இல் பதுளை மறைமாவட்டதிலே முதலாவது மேதகு ஆயராக பிரதேச மக்களின் பிரச்சினைகளையும், இதயத்துடிப்பையும் அறிந்து கொள்ளும் குருத்துவ பரம்பரையை உருவாக்குவதற்கு அப்பிரதேசத்தில் முறையான குருத்துவப் பயிற்சியைப் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- இன, மத, குல பேதங்களின்றி அனைவருக்கும் நல்ல ஆயனாக இவர் பிரதேசத்தின் சிங்கள தமிழ் இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வைக் கட்டியெழுப்புவதற்கும் தோட்டத் தொழிலாளரின் பணியுடன் தொடர்புடைய பிரச்சினைகள், முரண்பாடுகள், தொழில்சார் சவால்கள் மத்தியில் அவர்களுக்கு அடைக்கலமுமானார்.
- இளைஞர்களின் நலன் கருதியும், தோட்டத் தொழிலாளரை எழுச்சியுறச் செய்தல், மதங்களுக்கிடையிலான புரிந்துணர்வு, மனித உரிமைகளைப் பாதுகாத்தல், குறைந்த வசதிகளோடு வாழ்வோரின் கல்வி, சுகாதார வசதிகளுக்காக உழைத்தல் ஆகிய பல்வேறு துறைகளுக்குப் பங்களிப்புச் செய்தார்.
- இவர் 1982ஆம் ஆண்டு மே மாதம் 28ஆம் திகதி இறைபதமடைந்தார்.

### 9.2.5.2 மேதகு ஆயர் பிராங்க் மாக்கஸ் பர்னாந்து (1931 - 2009)

- கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் துணை ஆயராகவும், மேதகு ஆயர் எட்மன் பீரிஸ் ஆண்டகையின் மறைவின் பின் 1972ஆம் ஆண்டில் சிலாப மறை மாவட்ட ஆயராகவும் பணியாற்றிய இவர் 2009 இல் இறைபதம் அடையும் வரை தமது ஆயத்துவப் பணியில் மனித உரிமைக்காகக் குரல் கொடுத்தார்.
- இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்தில் பங்குபற்றிய இவர் இலங்கை ஆயர் எனும் வகையில் தமது ஆயத்துவப் பணியை விசேஷ தூரநோக்குடன் செயற்படுத்தினார்.
- இரணவிலவில் நிறுவப்பட்ட வொயிஸ் ஒப் அமெரிக்கா வானொலி நிலையம், சுற்றுலா விடுதிகள் மற்றும் நொறச்சோலையில் அனல்மின் நிலையம் நிறுவப்படல் என்பவற்றுக்கு எதிராக துணிவுடன் குரலெழுப்பி மனித உரிமைகள், சூழல் பாதுகாப்பு பற்றிய கிறிஸ்தவ பொறுப்பை வெளிப்படுத்தினார்.
- 2004ஆம் ஆண்டு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட பலாத்கார மதமாற்றுச் சட்டமானது நம் நாட்டின் சமய ஒற்றுமைக்கும் கிறிஸ்தவ சமய உரிமைக்கும் விளைவிக்கும் தீங்குகள் பற்றி துணிவுடன் தமது கருத்துக்களை முன்வைத்தார். அத்துடன் இவ்விடயம் தொடர்பான உயர் நீதிமன்றம் வரை சென்று நீதியை நிலை நாட்டினார்.
- 2009ஆம் ஆண்டு ஓகஸ்டு 24ஆம் திகதி இறைபதம் அடைந்தார்.

### 9.2.5.3 மேதகு ஆயர் இலஷ்மன் விக்கிரமசிங்க (1927 - 1983)

- இந்நாட்டின் மனித உரிமைகளுக்காகவும், சமூக நீதிக்காகவும் பயமின்றி குரலெழுப்பியவராக இவரது பணி மிளிர்கின்றது. இலங்கைத் திருச்சபையின் குருணகலை மாவட்டதின் ஆயராக 1962 இல் நியமிக்கப்பட்டு 1983 இல் மரிக்கும் வரை மக்களின் நல்லாயனாக இருந்தார்.
- சமூகத்திலே பல்வேறு தரங்களில், வாழ்க்கை நிலைகளில் இருந்த சகலரோடும் உறவைக் கட்டியெழுப்பிய இவர் அனைத்து சமயங்களோடு சமயங்களுக்கிடையிலான புரிந்துணர்வோடும் உரையாடலோடும் வாழ்ந்து வந்தார்.
- சமூக பிரச்சினைகளுக்கும், குழப்பமான சந்தர்ப்பங்களிலும் துன்புறுத்தல்களுக்குள்ளான வர்களின் உரிமைகளுக்காக முன்நின்றார்.
- 1980 யூலை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டோரின் இழந்த தொழிலை மீண்டும் பெற்றுக் கொடுப்பதற்காக வலியுறுத்தல், அவர்களின் கூட்டங்கள், எதிர்ப்புகளிலும் பங்குபற்றி பல்வேறு சங்கங்கள், அரசியல் கட்சிகள், சமயத் தலைவர்களோடு பொது நோக்கத்துக்காக செயற்பட்டார்.

- விவசாயிகள் அனுபவித்த துன்பங்களுக்காகவும் குரலெழுப்பினார்.
- 1983 இல் யூலை இனவாத பிரச்சினைகளின் காரணமாக துன்புறுத்தல்களுக்குள்ளான தமிழ் மக்களுக்காக மிகுந்த வேதனையுடன் அவர்களின் நியாயமான உரிமைகள் தொடர்பாக தெளிவான நிலைப்பாட்டிலிருந்து கொண்டு நியாயத்தைக் கேட்டு குரலெழுப்பினார்; துன்புறுத்தல்களுக்குள்ளானவர்களை தனிப்பட்ட முறையில் சந்தித்து ஊக்கப்படுத்தினார்.
- இறையாட்சியின் மதிப்பீடுகளை சமூகத்தில் கட்டியெழுப்புவதற்கு துணை நின்ற தூதுப் பணிக்கான உண்மையான கிறிஸ்தவ சாட்சியாவார். 1983ஆம் ஆண்டு ஒக்டோபர் 23ஆம் திகதி இவர் இறைபதமடைந்தார்.

### 9.2.5.4 அருட்பணி. மைக்கல் றொட்ரிகோ, அ.ம.தி (1927 - 1987)

- இலங்கைச் சமூகத்தில் நிலவிய சமய, சமூக தொடர்பான பாரம்பரியக் கண்ணோட்டத்திலும் மேலாகச் சென்று இதனைப்பற்றிய புதிய கண்ணோட்டத்தை கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்த உத்தமரான இவரது பணிகள் சிறப்பாக மிளிர்வதை நாம் காணலாம்.
- சமூகத்திலே கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்குரிய அர்த்தத்தினை ஆராயும் போது வாழ்க்கை முன்மாதிரிகையினால் அதற்குப் பதிலளிப்பதற்கு முற்பட்டார். ஏழைகளோடு வாழ்வதோடு அவர்களின் மனிதத்துவத்தைத் தேடி பயணம் செய்தார்.
- 1981இல் வெல்லஸ்ஸ பிரதேசத்தின் புத்தல எனும் கிராமத்தில் ''சுப செத் கெதர'' குடிசையில் வாழ்ந்து அப்பிரதேசத்தில் வாழ்ந்த பௌத்த - கத்தோலிக்க மக்களோடு உரையாடும் மிகப் பாரிய பணியில் ஈடுபட்டார்.
- பிரதேச மக்களை வாட்டுகின்ற வறுமை, ஆதரவற்ற வாழ்க்கை முறை, குறைந்த வசிதிகளோடான கல்வி, சுகாதாரம், உழைப்பைச் சுரண்டுகின்ற பெரும்பான்மை இனம், தேசிய சங்கங்களுக்கு எதிராக இறைவாக்கினரைப் போன்று குரலெழுப்பியதன் விளைவாக 1987ஆம் ஆண்டு நவம்பர் 10ஆம் திகதி துப்பாக்கிச் சூட்டுக்குள்ளாகித் தமது உயிரைத் தியாகம் செய்து இறைபதமடைந்தார்.

### 9.2.5.5 இவிளின் காணி அம்மையார் (1869 - 1953)

- இங்கிலாந்து சபையின் செனானா மிஷனரி சங்கத்தின் அங்கத்துவரான இவர் மறைதூதுப்பணிக்காக மிகுந்த விருப்பத்தோடு இருந்த ஒருவராவார். ஆழமான கிறிஸ்தவ விசுவாசத்தோடும் தெளிவான கொள்கையோடும் ஆதரவற்றவர்களுக்கு அன்போடு புகலிடமளிக்கும் ஆசையோடு 1896இல் இவர் இலங்கைக்கு வருகை தந்தார்.
- வடமத்திய மாகாணத்தின் தலாவ பிரதேசத்தை மையமாகக் கொண்டு ஆதரவற்ற, துன்புறும் மக்களுக்கு ஆதரவளிப்பதற்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்தார். பிரதேச மக்களின் தேவைகளுக்கும் விசேடமாக மலேரியாவினால் பீடிக்கப்பட்ட நோயாளரின் இறப்பு, பெண்கள், குழந்தைகள் இறக்கும் எண்ணிக்கை உயர்வடையும் நிலை தொடர்பாகவும் கவனம் செலுத்தி, சுகாதார வசதிகளை இயன்றளவில் திட்டமிட நடவடிக்கை எடுத்தார்.
- ''எனது இறைவன் எனக்குத் தேவையான அனைத்தையும் தருகிறார்'' என்ற விருதுவாக்கில் அதிக நம்பிக்கை வைத்து பிரதேசத்தில் உள்ள நோயாளரைப் பராமரித்தார். இந்நோயளருக்காக ஆரம்பத்தில் கட்டியெழுப்பப்பட்ட குடிசைகள் படிப்படியாக மருத்துவமனைகளாக மாற்றப்பட்டன. மருத்துவப் பணி ஆய்வு நிலையமொன்றும், பெண்களுக்கான மருத்துவமனையொன்றும் கட்டியெழுப்பப்பட்டது.
- பிரதேசத்திலுள்ள அனாதை சிறுவர்கள் மகிழ்ச்சியாக வாழ சிறுவர் இல்லம் ஒன்றையும் கட்டியதோடு, வயோதிபர்களின் வாழ்க்கைச் செலவுக்காக மாதந்தோறும் உலர் உணவுப்பொதியொன்றை வழங்கவும் நடவடிக்கை எடுத்தார்.

- 1953ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23ஆம் திகதி இறைபதமடைந்த அவர் உருவாக்கிய அடைக்கலப் பணிகளும் மருத்துவமனைக் கட்டங்களும் தலாவ பிரதேசத்தில் இன்றும் அவரது பணிக்குச் சான்று பகர்கின்றன.

## உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு

1. எமக்குக் கிடைத்துள்ள கிறிஸ்தவ அழைப்பிற்கேற்ப இலங்கைச் சமூகத்தின் நலன் கருதி, திருச்சபை இதுவரை வழங்கிய பங்களிப்பினைக் கருத்திற்கொண்டு நீங்கள் செய்யக்கூடிய செயல்பாடுகளைப் பற்றி கலந்துரையாடுங்கள்
2. படைப்புக்களில் மனித மாண்பின் சிறப்பை உணர்ந்து மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு செய்யக்கூடிய செயற்பாடுகளை முன்வையுங்கள்.
3. கிறிஸ்தவ அன்பை முன் உதாரணமாகக் கொண்டு சமூகத்தில் நீர் செய்யக்கூடிய நலன்புரிச் செயல்களை வெளிப்படுத்துங்கள்.
4. சமூக நீதியை நிலைநாட்டவும் மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் தம்மை அர்ப்பணித்த உத்தமர்கள் பற்றிய விபரங்களைத் தேடி, அவர்களைப் போன்று நாமும் செயற்படவேண்டும் என்பதை உணர்ந்து கொள்வர்.

## உசாத்துணை நூல்கள்


- வி. அமீர்தீன், மனித உரிமைகள், ஓர் அறிமுகம், தகவல் - நலன்புரி அமைப்பு, பேராதனை, 2003.
- ச.தே. செல்வராசு, புத்துலகம் படைக்கவே, திருச்சபையின் சமுதாயப் படிப்பினை, வைகறை பதிப்பகம், 2006.
- விசுவாசத்தின் புதிய விடியல், தேசிய மேய்ப்புப் பணி மகாநாடு, 1995.
- புத்தாயிரமாம் புது யுகத்தினுள் இலங்கைத் திருச்சபையின் பயணம், இலங்கை கத்தோலிக்க ஆயர்களின் மில்லேனிய மேய்ப்புப்பணி நிருபம், 2001.
- The Voice of our Pastors : Pastoral Letters of the Catholic Bishops of Sri Lanka 1984 - 1994, Lanka Publishing House, Colombo, 1995.
- Statements of the Catholic Church in Sri Lanka - 1988, Quest, No. 100, 1989.
- Acts of The Second Provincial Synod of Colombo in Ceylon : 1968 - 1969, Quest No. 135, 1995.
- Holy Father Speaks in Sri Lanka, 1995.
- Bishop Lakshman Wickremasinghe: His Life and Work, Devasarana Development Centre, 1983.

**தேர்ச்சி** **9.0 :** இலங்கை சமுதாயத்தின் நலன்கருதி கிறிஸ்தவ சபையின் பங்கெடுப்பை விளக்கி சமூக மேப்பாட்டிற்காக கிறிஸ்தவராக அர்ப்பணிப்பர்.

**தேர்ச்சி மட்டம்** **9.3 :** இலங்கைச் சமுதாயத்தில் கலையின் மேன்மைக்காக, கிறிஸ்தவ ஒத்துழைப்பை உணர்ந்து தமது ஆற்றல்களை சமுதாயத்திற்கு அளிப்பர்.

**பாடவேளைகள்** **:** 15

**கற்றல் பேறுகள்** **:**

- இலங்கைச் சமுதாயத்தில் கிறிஸ்தவ மேன்மைக்காக கிறிஸ்தவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட திறன்களை, ஆற்றல்களை மதித்தல்.
- யாக்கோமே கொன்சால்வேஸ், மேதகு ஆயர் எட்மன் பீரிஸ், அருட்பணி. மர்சலீன் ஜயக்கொடி போன்ற கலைஞர்களின் ஆக்கங்கள் எப்பொழுதும் அழியாதவை என்பதை கற்று ஏற்றுக்கொள்வர்.
- ஆரம்பகால மறைத்தூதுப் பணியாளர்களின் அழியாத அர்ப்பணிப்பினூடாக கிறிஸ்தவ கலைக்கு அத்திவாரம் இடப்பட்டதென்பதை ஏற்றுக்கொள்வர்.
- இன்றைய கிறிஸ்தவர்களும் தமது ஆற்றல்கள், திறன்களினூடாக கிறிஸ்தவ சபைக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் எனக் கூறுவர்.

## விடய உள்ளடக்க வழிகாட்டி

## 9.3.1 இலங்கையில் கலைக்கு கிறிஸ்தவப் பங்களிப்பு

- கலை என்பது அழகோடு தொடர்புடையது கலைக்கு குறிப்பிட்டு ஒரு வரைவிலக்கணத்தைக் கொடுக்க முடியாது. காரணம், கலை வெளிப்பாட்டு அம்சங்களுக்கு ஏற்ப அது வேறுபடும்.
- எனினும் மனித உணர்வுகளால் வெளிப்படுத்தப்படுவது, படைக்கப்படுவது கலை எனப்படுகின்றது.
- கலையின் உருவாக்கத்திலும், வளர்ச்சியிலும் சமயங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அந்த வகையில் கிறிஸ்தவ சமயமும் கலை வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்புச் செய்துள்ளது எனலாம். குறிப்பாக இலங்கையில் கலை வளர்ச்சியடைவதற்கு கிறிஸ்தவ சமயம் பங்களிப்பு செய்துள்ளது.
- இலங்கையில் பௌத்த, வைச சமயங்களினால் பௌத்த, இந்து கலை வெளிப்பாட்டு அம்சங்கள் வளர்க்கப்பட்டுள்ளன.
- மேலைத் தேசத்தவர்கள் இலங்கைக்கு வருகை தந்தமையினால் மேலைத்தேச கலை வெளிப்பாட்டு அம்சங்களான,

  1. இலக்கியக்கலை 2. சித்திரக்கலை 3. சிற்பக்கலை
  4. கட்டிடக்கலை 5. நாடகக்கலை 6. சங்கீதக்கலை

  என்பன இங்கு அறிமுகம் செய்யப்பட்டதோடு, இங்கிருந்த பல கலை வெளிப்பாட்டு அம்சங்களும் வளர்த்தெடுக்கப்பட்டன.

## 9.3.2 கலைப் பிரிவுகள்
### 9.3.2.1 இலக்கியக்கலை

**அறிமுகம்**

- இலங்கையில் தொடக்ககால கிறிஸ்தவ இலக்கியம் மறையையும், திருவழிபாட்டு நோக்கத்தையும் உடையதாகவிருந்தது. நாட்டு மக்களுக்குப் பணிபுரிவதாயின்

இலங்கையின் தாய்மொழியைக் கற்றல் மிகவும் அத்தியாவசியமாகும். தேசிய மக்கள் தம் மொழியில் கலாசாரத்தில் கொண்டிருந்த பற்றை போர்த்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கிலேய யுகங்களிலிருந்த பிறநாட்டு கத்தோலிக்க இலக்கிய எழுத்தாளர்கள் அறிந்திருந்தார்கள். தேசிய மக்களுக்கு மறைப்போதகம், மறைக்கருத்துக்கள் வழங்குவதற்கு தேசிய மொழியை அறிந்திருக்க வேண்டுமென அவர்கள் அறிந்து கொண்டனர்.

- இலங்கையில் பணியாற்றிய சில மறைபோதகர்கள் தேசிய மொழியைப் பற்றிய பதம், வாக்கியம், அகராதி போன்ற நூல்களை எழுதுவதற்கும் முயற்சி செய்தனர். புனித பிரான்சிஸ் சவேரியார் (கி.பி. 1542 - 1552) மறைப் போதகர்கள் மொழியை நன்றாகத் கற்றலின் முக்கியத்துவத்தை அறிந்திருந்தார்.

### 9.3.2.1.1 சிங்கள கிறிஸ்தவ இலக்கியங்கள்

#### 9.3.2.1.1.1 போர்த்துக்கேயர் கால கிறிஸ்தவ இலக்கியம்

- கி.பி. 1545இல், பண்டைய கிறிஸ்தவ நூல்களில் கோவா புனித பேதுரு வித்தியாலயத்தில் இயேசு சபையைச் சார்ந்த அருட்தந்தையர்களின் சிங்கள நூல்கள் விசேட இடத்தை வகித்தன.
- இந்நாட்டில் பிறந்த போர்த்துக்கேய இனத்தவரான இயேசு சபையைச் சேர்ந்த அருட்பணி எம்மானுவேல் கொஸ்தா தமது சொந்த மொழியில் சிங்கள இலக்கண நூலை எழுதியுள்ளார். Ars Chingalensis Linguae எனும் சிங்கள மொழிச் சித்தார்த்தம் அச்சிடப்படவில்லை. அவரது சகோதர மறைபோதகர்கள் இதைப் பாவித்துள்ளனர்.
- கி.பி. 1645 இல் இயேசு சபையைச் சார்ந்த அருட்பணி பியரேபோர்குவின் மூன்று பகுதிகளைக் கொண்ட சிங்கள இலக்கண நூலை எழுதியுள்ளார். (Artu E Grammatica de Linguwa Chingala)
- மல்வானை அருட்பணி பேதோ பிரான்சிஸ்கோ, எனும் பெயருடைய இயேசு சபையைச் சார்ந்த அருட்பணியாளர் எழுதியுள்ள 26 புனிதர்களின் வாழ்க்கை வரலாறு, மறைக்கல்வி நூல், கிறிஸ்துவின் பாடுகளைப் பற்றிய நூல் ஆகியவை இவற்றுள் பிரதான நூல்களாகக் கருதலாம்.
- பிரான்சிஸ்கன் சபையின் மறைபோதகரான அருட்பணி அந்தோனியோ பெக்ஷோவோ ஆக்கியுள்ள கவிதை, நாடகம், பாடல்கள் மக்களைக் கவர்ந்த நூலாக உள்ளன.
- 1612இல் கிறிஸ்தவ மறையைத் தழுவிக்கொண்ட அழிகிய வண்ணன், தொன் ஜெரோனி மோ எனும் பெயரில் திருமுழுக்குப் பெற்றார். நற்செய்தி, சவுலின் திருமுகம் போன்ற பிரசித்தி பெற்ற கவிதை நூலாக வெளியிட்டார். ‘‘குஸ்தன்னீனு ஹட்டன’’ எனும் பெயரில் முதலாவது சிங்கள கிறிஸ்தவ கவிதையை கி.பி. 1620இல் எழுதியுள்ளார். கொன்ஸ்டைன்ந்தின் த சா எனும் போர்த்துக்கேய போர்வீரன் அந்தோனியோ பரேத்து அல்லது குருவிட்டரால என்பவரை வென்றது பற்றி எழுதப்பட்ட இக்கவிதை பழைய சிங்கள இலக்கிய பாரம்பரியத்தின் இறுதி இலக்கியமாகும்.

#### 9.3.2.1.1.2 ஒல்லாந்த கால கிறிஸ்தவ இலக்கியம்

- ஒல்லாந்தரின் இலக்கண நூல், வாக்கிய நூல், அகராதி போன்றவை டச்சு, சிங்கள மொழிகளில் ஆக்கப்பட்டுள்ளன.
- திருப்பாடல்கள், பக்திப்பாடல்கள், திருவழிபாட்டு நூல், ஒல்லாந்த மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
- கி.பி. 1737இல் முதலாவது பதிப்புரிமைப்பெற்ற சிங்கள நூல் வெளியிடப்பட்டது. இந்நூலில் கர்த்தர் கற்பித்த செபம், காலை மாலை செபம், உணவுக்கு முன், பின் செபம், விசுவாசப் பிரமாணம், பத்துக் கற்பனைகள் என்பன அடங்கியுள்ளன.
- கி.பி. 1755இல் கொழும்பு குருமடத்தின் கலாநிதி மன்டலசே அன்ரனி பெரேரா, லுவி

த சேரம் என்பவர்களால் இயற்றப்பட்ட பாடல் புத்தகம் உருவாக்கப்பெற்றது. இதற்கான பாடற் குறிப்பு ஐரோப்பிய முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

- ஒல்லாந்து அரசும் கிறிஸ்தவ இலக்கியத்திற்கு அளித்துள்ள முக்கியமான பங்களிப்பானது திருவிவிலியத்தின் புதிய ஏற்பாடு முழுவதும், பழைய ஏற்பாட்டின் சில பகுதிகளும் சிங்கள மொழியில் மொழிபெயர்க்கப்பட்டமையேயாகும்.
- கி.பி. 1705 மே மாதம் 09ஆம் திகதி இலங்கைக்கு வந்த யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளார் சிங்கள, தமிழ் கிறிஸ்தவ இலக்கியத்திற்கு மாபெரும் பணியாற்றினார் என்பதை வார்த்தைகளினால் விவரிக்கமுடியாது.

## அருட்பணி. யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார்.

- கோவா நகரில் திவாரி எனும் கிராமத்தில் கொங்கனி எனும் குலத்தில் தோமஸ் கொன்சால்வெஸ், மரியா த அப்ரூ எனும் பெற்றோருக்கு 1676 ஜூன் மாதம் 8ஆம் திகதி பிறந்தார்.
- கி.பி. 1696 இல் கோவா புனித தோமஸ் அக்குவினாஸ் நிறுவனத்தில் ஐந்து வருடங்கள் இறையியலைக் கற்றார்.
- கி.பி. 1700 நவம்பர் 02ஆம் திகதி கோவா ஒறற்றோரியன் சபையின் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.
- முத்திப்பேறுபெற்ற யோசப்வாஸ் அடிகளாரின் வேண்டுகோளுக்கிணங்க கி.பி. 1705 ஆகஸ்ட் மாதம் 30ஆம் திகதி இந்நாட்டில் காலடி எடுத்துவைத்தார்.
- அவரின் தாய்மொழியான கொங்கனி மொழியைத் தவிர போர்த்துக்கேயம், இலத்தீன், கிரேக்கம், ஸ்பானியா மொழி நன்றாகத் தெரிந்திருந்ததுடன் ஆங்கில மொழியையும் கற்றுக்கொண்டார்.
- மல்வத்த நாயக்க பௌத்த பிக்குவிடமிருந்தும் பண்டிதர் தஸ்கோன அதிகாரம் என்பவரிடமிருந்தும் சிங்கள மொழியை நன்றாகக் கற்றுக் கொண்டார்.
- ‘‘சிங்கள கிறிஸ்தவ இலக்கியத்தின் தந்தை”யான இவர் 42 நூல்களை எழுதியுள்ளார். 22 சிங்கள மொழியிலும், 15 புத்தகங்கள் தமிழ் மொழியிலும், 4 புத்தகங்கள் போர்த்துக்கேய மொழியிலும், 01 புத்தகம் ஒல்லாந்த மொழியிலும் எழுதப்பட்டுள்ளது. இதைத்தவிர போர்த்துக்கேயம் - தமிழ் - சிங்கள மொழியிலும் அகராதி எழுதியுள்ளார்.
- கி.பி. 1708 இல் சந்தியாகு எனும் கவிஞன் புனித அலெக்சிஸ் என்பவரின் வாழ்க்கையை அடித்தளமாகக்கொண்டு கவிதை நூல் ஆக்கியுள்ளார்.

## தமிழிலும் சிங்களத்திலும் எழுதிய நூல்கள்

- **கிறிஸ்தியானி ஆலயம்**
  தற்காலத்துச் செபப் புத்தகங்கள் எல்லாவற்றுக்கும் தோற்றுவாயாயுள்ள பல செபங்கள் பிரார்த்தனைகளின் களஞ்சியம் சின்ன உத்தரம் பெரிய உத்தரம் முதலிய அறிவுறுத்தும் பாகங்களும், பூசைத்தியானங்களும் சேர்ந்தது. அச்சிடப்படவில்லை. சிங்களத்தில் இது **கிறீஸ் தியானிபள்ளிய** என்ற பெயர் கொண்டு அச்சிடப்பட்டது.
- **தேவ அருள் வேத புராணம் அல்லது புராந்திம பச்சிம காண்டம்**
  இது பழைய, புதிய ஏற்பாட்டு சரித்திரம். சிங்களத்தில் **தேவ வேத புராணய.**
- **சத்திய வேதாகம சங்ஷேபம்**
  வினா, விடை வடிவமான பழைய, புதிய ஏற்பாட்டு சரித்திரம் இது சிங்களத்தில் **தேவ வேத சாங்ஷேபய.**

**சுவிசேஷ விரித்துரை**

இன்றைக்கும் ஞாயிறு கடன்திருநாட்களிலும் வாசிக்கப்படுவது. சிங்களத்தில் இதற்கு **சுவிசேஷ விசர்ஜனய** என்று பெயர்.

**வியாகுல பிரசங்கம்**

இது பசாம் என்றும் சொல்லப்படும். சிங்களத்தில் **துக் ப்றாப்தி ப்றஸங்கய**

**தர்ம உத்தியானம்**

பல புனிதர்களுடைய சரித்திரம். கையெழுத்தில் மாத்திரம் உள்ளது. சிங்களத்தில் **தர்மோத்யானய**

**அற்புத வரலாறு**

சத்திய வேத உண்மைகளை அத்தாட்சிப்படுத்திய பல சம்பவங்கள் உள்ளன. சிங்களம் **ப்றதிஆர்யவல்ய**

**ஞான உணர்ச்சி**

மனிதனுடைய கதி, பாவத்தின் அவலட்சணம் முதலிய ஞான விஷயங்களைப் பல உவமைகளினால் வற்புறுத்திக் காட்டுவது. இதை வீரமாமுனிவருடைய நூல் என்று தவறாக எண்ணி ஞான உணர்த்துதல் எனும் பெயரோடு இந்தியாவில் பல பதிப்புகள் வெளியிட்டார்கள் என அழைக்கப்படுகிறது. தெலுங்கு பாஷையிலும் மொழிபெயர்க்கப்பட்டது. சிங்களத்தில் இது **ஞானுஞ்ஜனய.**

**சுகிர்த தர்ப்பணம்**

பரலோகம் தொடர்பான ஐம்பது மொழிகளும் பூலோகம் தொடர்பான ஐம்பது மொழிகளும் சிறுச் சிறுச் சுலோகம் போல வசன நடையில் உள்ளது. சிங்களத்தில் **தர்ம ஸஞ்ஞாவ.**

**தமிழில் மாத்திரம் எழுதியவை**

- வாத்தியரும் குடியானவனும் தர்க்கித்துக் கொண்ட தர்க்கம். இது கல்வீன் மதப் புறொட்டஸ்தாந்தருடைய தவறுகளைக் கண்டிப்பது.
- நவதர்க்கம்
- முசல்மன் வேதம்
- கடவுள் நிர்ணயம்
- நாலு வேதம்
- சிந்துப் பிரார்த்தனை

**சிங்களத்தில் மாத்திரம் எழுதியவை**

- **தேவ நீதி விஸர்ஜனய:** தனித்தீர்வையைப் பற்றி நாடக உருவமாய் வசனத்திலெழுதியது.

  **அஞ்ஞான அவுஷதய :** பிற சமத்தவர்களுடைய தவறுகளைக் காட்டும் நூல். இதை செபஸ்தியாம் பெறேயிறா என்னும் தியான சம்பிரதாயக் குரவர் சுவாமியார் தமிழில் அஞ்ஞான அவுஷதம் எனும் பெயரோடு மொழிபெயர்த்தார். இதன் ஓர் பாகம் **''சத்தியவேத பாதுகாவலனில்''** வெளிவந்துள்ளது.
- **புத்த பண ப்ரத்யக்ஷய**
- ***புத்துமுல :* இது கண்டியரசுரிமையாளனுக்காக எழுதப்பட்டது.**
- **பேதகாறயங்கே தர்க்கய**
- **வேதகாவ்ய :** இது தேவ வேத புராணய எனும் பெரும் சரித்திரத்தை கீர்த்தனரூபமாக்கியது.
- **மங்கள கீத :** இது தமிழில் அடிகளார் செய்த கீர்த்தனையைப் போன்றது.
- **ஆனந்தக் களிப்புவ :** இது தாமஸஞ்ஞாவவோடு சேர்த்து அச்சிடப்பட்டது.

**அகராதிகள்**

- மிஷனறிமார் தமிழும் சிங்களமும் படித்துக்கொள்வதற்கு உதவியாக **போர்த்துக்கேய - தமிழ் - சிங்கள அகராதி** ஒன்றை இயற்றினார். மேலும் **சிங்கள் - போர்த்துக்கேய அகராதியும், போர்த்துக்கேய - சிங்கள அகராதியும், தமிழ்சொற்றொடர்கள் அகராதியும்** எழுதினார்.

**குறிப்பு :**

**வியாகுலப் பிரசங்கம்**

- யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளால் இயற்றப்பட்ட இலக்கியங்களில் இன்றும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற ஓர் இலக்கியமாகும். இது கிறிஸ்துவின் பாடுகள், மரணம் என்பவற்றை மையப்பொருளாகக் கொண்டு அமைக்கப்பட்டது. தவக்காலத்தில் மனமாற்றத்தை ஏற்படுத்தத் தூண்டுவதை நோக்காகக் கொண்டு இவ் இலக்கியம் படைக்கப்பட்டுள்ளது.

### 9.3.2.1.1.3 ஆங்கிலேய கால இலக்கியங்கள்

- இந்நூற்றாண்டில் கிறிஸ்தவ எழுத்தாளர்கள் பலர் இலக்கியத்திற்கு பங்களிப்பைப் வழங்கியுள்ளனர். கிறிஸ்தவ குருக்களைப் போன்று, கிறிஸ்தவப் பொதுநிலையினரும் இப்பணிக்கு தமது பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

**ஞானார்த்த பிரதீபய**

- கி.பி. 1866 ஜுன் மாதம் 7ஆம் திகதியிலிருந்து இன்று வரைக்கும் இலங்கையின் பழமைவாய்ந்த சிங்கள பத்திரிகையான ''ஞானார்த்த பிரதீபய'' ஊடாக பல எழுத்தாளர்கள் உருவாகியுள்ளனர். இப்பத்திரிகையின் முதலாவது பதிப்பாசிரியர் எனும் கௌரவம், முகத்துவாரம் ''மாலுகந்தே'' யில் வாழ்ந்த **ஜி. யுவாம் பெர்ணாண்டோ** என்பவர் இப் பத்திரிகையின் முதலாவது பதிப்பாசிரியராவார்.
- கி.பி. 1912 இல் பிரபலியம் வாய்ந்த மொழிப் பண்டிதரான **அருட்பணி ஜோன் பஹமுன** என்பவரே இப்பத்திரிகையின் முதலாவது ஆசிரியராவார். அதுகல்புர பௌத்த குடும்பத்தில் பிறந்த இவர் தேசிய இலக்கிய மறுமலர்ச்சிக்காக இப்பத்திரிகையைப் பயன்படுத்தினார்.

**பக்தி பிரபோதன சஞ்சிகை**

- 1889ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ''பக்தி பிரபோதன'' சஞ்சிகை இலங்கையின் மிகப்பழைமை வாய்ந்ததும் தொடர்ந்தும் வெளிவருகின்ற சஞ்சிகையாகும். இது அமல மரி சபையின் வெளியீடாகும்.
- 1899ஆம் ஆண்டு ஜனவரி மாத ஆரம்பத்திலேயே சஞ்சிகையின் ஆரம்ப தொகுப்பாளராகிய அன்தோனியஸ் ஜயவர்தன அவர்கள் இச் சஞ்சிகையை ஆரம்பிப்பதற்கான நோக்கத்தினைப் பின்வருமாறு விளக்குகிறார்.
- ''இலங்கையில் கத்தோலிக்க திருச்சபையானது கத்தோலிக்க மிக முன்னேற்றமான காலகட்டத்தில் உள்ளதென்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மையாகும்.''
- ''எமது கத்தோலிக்க திருச்சபையின் முன்னேற்றம் இவ்வளவாக இருந்த போதும், சிங்கள கத்தோலிக்கரின் பயன்பாட்டிற்காக கத்தோலிக்க சஞ்சிகை ஒன்று ஒருவராலும் ஆரம்பிக்கப்படவில்லை''.
- ''தப்பறையான நூல்களும், பேதகங்களும் காணக்கூடிதாயுள்ளது. ஆசைகள், பொருளற்ற கவிகள், பாடல்கள் ஆகிய நூல்கள் எல்லா இடங்களிலும் பரந்து

காணக்கூடியதாயுள்ளமை மிகக்கொடியதாகும்.

- ''பக்தி பிரபோதன'' எனும் ஆழமான சொற்களினால் அழைக்கப்படுகிற இந்த சஞ்சிகையில் கடந்தகால, எதிர்கால, முழுக் கதைகளும் உள்ளடக்கப்பட்ட வாக்கியங்களினால் கோவைப்படுத்தப்பட்டுள்ளது.
- பிரமச்சாரியும் துறவியுமான மர்சலின் பேர்டினன்தஸ் இன் சமய எண்ணக்கருக்களின் மீது பக்தி பிரபோதன ஆரம்பிக்கப்பட்டது. பொது நிலை இறைவாக்கினரை பிரசித்தப்படுத்திய அழகான அடையாளமென பிரபோதனவை அழைக்கலாம்.
- 1899 - 1930 வரை அன்தோனியஸ் ஜயவர்தன அவர்களும், 1930 - 1944 வரை எம். அகஸ்டின் சில்வா அவர்களும் இதழாசிரியர்களாகச் செயற்பட்டுள்ளனர்.
- 1944 - 1948 வரை அருட்திரு எட்மன்ட் பீரிஸ் அ.ம.தி. (சிலாபம் ஆயர்) முதலாவது அருட்தந்தை இதழாசிரியராக பணியாற்றினார். இவ்விதழாசிரியப் பதவி இன்றுவரை அமல மரித் தியாகிகளால் அருட்தந்தையர்களால் நடாத்தப்படுகின்றது.

### 9.3.2.1.2 தமிழ் கிறிஸ்தவ இலக்கியங்கள்

- மேலைத்தேச மறைபரப்பாளர்கள் இலங்கைக்கு வந்து மறைபரப்புப் பணியை மேற்கொண்ட போது கிறிஸ்தவ மத கொள்கைகள், கோட்பாடுகள், விவிலியச் சிந்தனைகள், புனிதர்கள் வரலாறு என்பவற்றை இலகுவாக மக்கள் மத்தியில் எடுத்துரைப்பதற்காக தமிழ் இலக்கியங்களை ஒரு ஊடகமாகப் பயன்படுத்தினர்.
- அந்த வகையில் படைக்கப்பட்ட இலக்கியங்களே தமிழ் கிறிஸ்தவ இலக்கியங்கள் எனப்படுகின்றன. அந்த வகையில் போர்த்துக்கேயர் காலத்திலும், ஒல்லாந்தர் காலத்திலும் பல தமிழ் கிறிஸ்தவ இலக்கியங்கள் படைக்கப்பட்டதோடு அதனைப் பின்பற்றி தொடர்ந்தும் பல தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியங்கள் படைக்கப்பட்டு வருகின்றன.

#### 9.3.2.1.2.1 போர்த்துக்கேயர் காலம்

- போர்த்துக்கேயர் இலங்கையை ஆட்சி செய்த காலப்பகுதியில் கத்தோலிக்க மறையைப் பரப்பும் நோக்குடன் இங்கு வந்த பிரான்சிஸ்கன் சபை, இயேசு சபையைச் சேர்ந்த மறைபணியாளர்கள் பல தமிழ் கிறிஸ்தவ இலக்கியங்களை உருவாக்கியதோடு சுதேசிகள் பலரையும் தமிழ் கிறிஸ்தவ இலக்கியங்களை உருவாக்க ஊக்குவித்தனர்.
- ''தமிழ் கிறிஸ்தவ இலக்கியத்தின் தந்தை'' எனப் போற்றப்படுகின்ற ஹென்றி ஹென்றிக்கஸ் தென்னிந்தியாவில் பணியாற்றுகின்ற போது பல தமிழ் கிறிஸ்தவ மொழிபெயர்ப்பு இலக்கியங்களை உருவாக்கியுள்ளார். இவர் மன்னாரில் மூன்று வருடங்கள் பணியாற்றியிருக்கின்றார். அவ்வேளையில் இங்கும் பல தமிழ் கிறிஸ்தவ இலக்கியங்களை மொழி பெயர்த்திருக்கலாம் எனக் கூறப்படுகின்றது. எனினும் இவை கிடைக்கப் பெறவில்லை.
- மேலும் தென்னிந்தியாவில் மறைபோதகப் பணியில் ஈடுபட்ட டி நொபிலி அடிகளாரும் பல தமிழ் கிறிஸ்தவ இலக்கியங்களை உருவாக்கியிருக்கின்றார். இவர் தமது முதிர் வயதில் ஓய்வுக்காக யாழ்ப்பாணம் தெல்லிப்பளையில் இரண்டு வருடங்கள் தங்கியிருந்த போது கிறிஸ்தவ இலக்கியங்களை உருவாக்கியருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.
- போர்த்துக்கேய மறைபரப்பாளர்கள் இலங்கைக்கு வந்து ஆரம்பத்தில் கரையோரப் பகுதிகளிலும், நாட்டுப்புற மக்கள் மத்தியிலுமே மறை பணியை மேற்கொண்டார்கள். அவ்வேளையில் அம்மக்களுக்கு இலகுவாக கத்தோலிக்க சமயச் சிந்தனைகளை கொடுப்பதற்காக அம்மக்கள் மத்தியில் பயன்பாட்டில் இருந்த ''நாட்டார்'' இலக்கிய வடிவங்களைப் பயன்படுத்தி பல ''தமிழ் கிறிஸ்தவ நாட்டார் இலக்கியங்களை'' உருவாக்கினார்கள்.

**சந்தியோகு மாயோர் அம்மானை**

- தமிழ் கிறிஸ்தவ நாட்டார் இலக்கியங்களில் முதன் முதலில் எழுதப்பட்டதும் இன்று கிடைக்கக்கூடியதுமாக இருப்பது சந்தியோகு மாயோர் அம்மானை இலக்கியமாகும்.
- இது யாழ்ப்பாணம் தெல்லிப்பளையில் பணியாற்றிய இயேசு சபையைச் சேர்ந்த சுவாங் கருவாரு அடிகளாரின் உதவியோடு தெல்லிப்பளையைச் சேர்ந்த மனந்திரும்பிய பேதுருப் புலவர் என்பவரால் உருவாக்கப்பட்டது.
- இயேசு சபையைச் சேர்ந்த குருக்களால் கிளாலி பச்சிலைப்பள்ளி என்னுமிடத்தில் அமைக்கப்பட்ட புனித யாகப்பரின் ஆலயத்திற்கு விழாக் கொண்டாடுவதற்காக பல இடங்களிலும் இருந்து சென்ற விசுவாசிகளுக்கு புனிதரின் வரலாற்றை எடுத்துக்கூறி அவரின் வாழ்வில் வெளிப்பட்ட பண்புகளை பின்பற்றி விசுவாசிகளை வாழச் செய்ய ஊக்குவிக்கும் நோக்கோடு இவ்வம்மானை அமைக்கப்பட்டது.

**ஞானப்பள்ளு**

- 96 வகையான தமிழ் சிற்றிலக்கியங்களில் ஒன்றாக ''பள்ளு'' இலக்கியம் காணப்படுகின்றது.
- அதன் அமைப்பைப் தழுவி அமைக்கப்பட்ட கிறிஸ்தவ இலக்கியமே ''ஞானப்பள்ளு'' ஆகும்.
- இந்துக்களாக இருந்து மனந்திரும்பிய வயல் சார்ந்த வேலையில் ஈடுபடும் மக்களுக்கு கிறிஸ்துவைப்பற்றி எடுத்துரைப்பதற்காக படைக்கப்பட்ட இலக்கியமே ஞானப்பள்ளு ஆகும்.
- இவ்விலக்கியம் பண்ணைக்காரன் (கடவுள்), பள்ளன் (கிறிஸ்து), மூத்தபள்ளி (எருசலேம்), இளைய பள்ளி (உரோமை) ஆகிய நான்கு பாத்திரங்களைக் கொண்டு அமைக்கப்பட்டது. இவ்விலக்கியத்தையும் தெல்லிப்பளையைச் சேர்ந்த பேதுருப் புலவர் என்பவரே 1645 - 1650க்கும் இடைப்பட்ட காலத்தில் படைத்திருக்கலாம் என முன்னால் மறைந்த யாழ் மறைமாவட்ட ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை தம் ஆய்வில் குறிப்பிட்டிருக்கின்றார்.

## 9.3.2.1.2.2 ஒல்லாந்தர் காலம்

- ஒல்லாந்தர் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் அவர்கள் பின்பற்றிய கல்வியின் சீர்திருத்தக் கொள்கைகள் இங்கு பரப்பப்பட்டன. இம்மதத்தைப் பரப்பும் வகையில் முன்னின்று செயற்பட்டவர் பிலிப் பல்தேயுஸ் என்பவராவார்.
- இவர் மத்தேயு நற்செய்தி நூலை தமிழ் மொழியில் மொழிபெயர்த்ததோடு வேறு பல இலக்கியங்களையும் உருவாக்கி அவற்றை ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் படிப்பதற்குரிய ஒழுங்குகளைச் செய்திருந்ததாகவும் கூறப்படுகின்றது.
- மேலும் பேர்சிவல் ஐயர் என்பவர் ஆறுமுகநாவலரின் உதவியுடன் வேதாகமத்தினை தமிழில் மொழி பெயர்ப்புச் செய்திருக்கின்றார்.
- ஒல்லாந்தருடைய காலத்தில் கத்தோலிக்க மக்கள் மத்தியில் மறைபணியாற்றிய யோசேவாஸ் அடிகளார் விசுவாசிகளுக்குத் தேவையான செபங்களையும், மறைக்கல்வி நூல்களையும், சிலுவைப்பாதை, பிரார்த்தனை போன்ற நூல்களையும் தமிழில் எழுதியிருந்தார்.
- ஒல்லாந்தர் காலத்தில் தமிழ் கத்தோலிக்க இலக்கியங்கள் உருவாகுவதற்கு முக்கிய பங்களிப்புச் செய்தவராக யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளார் காணப்படுகின்றார். அந்த வகையிலேயே இவர் ''தமிழ் கிறிஸ்தவ இலக்கியத்தின் தந்தை'' என அழைக்கப்படுகின்றார். ஆரம்பத்தில் யோசப்வாஸ் அடிகளாரால் எழுதப்பட்ட செப நூல்களை நல்ல தமிழ் மொழியில் மொழிபெயர்த்த அடிகளார் பின்னர் பல நூல்களை எழுதியுள்ளார்.

### 9.3.2.1.2.3 ஆங்கிலேயர் காலக் கிறிஸ்தவ இலக்கியங்கள்

**உதயதாரகை**

- இலங்கையில் இருந்து வெளிவரும் முதலாவது கிறிஸ்தவப் பத்திரிகை உதயதாரகை ஆகும். இதனை 1841ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய அமெரிக்கன் மிசனறிமார் ஆரம்பித்தனர். இது மாதம் இருமுறை வெளியிடப்பட்டது. ‘‘நேர்மையுள்ள நாடு மேன்மை அடையும் - பாவம் நிறைந்த எந்த நாடும் இழிவடையும்’’ (நீதிமொழிகள் 14:34) என்பதுவே இப்பத்திரிகையின் மகுடவாக்கியமாகும். இப்பத்திரிகை இரண்டு பக்கங்கள் ஆங்கிலத்திலும், இரண்டு பக்கங்கள் தமிழிலும் வெளியிடப்பட்டது. முதலாவது ஆங்கிலப் பத்திராதிபதியாக (சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகக் கொண்ட) ஹென்றி மாட்டீனும், தமிழ்ப் பத்திராதிபதியாக (உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட) செத் பெய்சன் அவர்களும் பணியாற்றினர். கிறிஸ்தவ மதத்தைப் பிரசாரம் செய்வதே இதன் பிரதான நோக்கமாகும்.

**சத்திய வேத பாதுகாவலன்**

- இலங்கையில் இருந்து வெளிவரும் முதலாவது தமிழ் கத்தோலிக்க பத்திரிகையாக யாழ். மறைமாவட்டத்தில் இருந்து வெளிவரும் ‘‘சத்திய வேத பாதுகாவலன்’’ பத்திரிகை விளங்குகின்றது. இது 1876ஆம் ஆண்டு ‘‘கத்தோலிக்க பாதுகாவலன்’’ என்னும் பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. கத்தோலிக்க மக்களின் விசுவாசத்தை வளர்க்கும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட இப்பத்திரிகை 135 வருடங்களைக் கடந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது.
- இதன் முதல் ஆசிரியராக M.A. மர்பி (M.A. Murphey) யும் உதவி ஆசிரியராக புனித பத்திரிசியார் கல்லூரியின் ஆசிரியர் ஜேம்ஸ் மாட்டீன் அவர்களும் பணியாற்றினார்கள்.
- ஆரம்பத்தில் வார ஏடாக வெளிவந்த இப்பத்திரிகை நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக மாதம் ஒரு முறை எனவும், இப்போது மாதம் இருமுறை எனவும் வெளிவருகின்றது.

### 9.3.2.2 சித்திரக்கலை

- கல்விக்கேற்ற விதமாக போர்த்துக்கேயயுர், ஒல்லாந்தர், பிரித்தானிய காலங்களிலும், சுதந்திரத்திற்குப் பின்னரும் கண்டுபிடிக்கப்பட்ட கிறிஸ்தவ அடையாதளங்கள் சித்திரத்திரங்கள் மட்டில் அவதானத்தைச் செலுத்துவது முக்கிமானதாகும்.

### 9.3.2.2.2 போர்த்துக்கேயருக்கு முன் காலம்

**i) அநுராதபுரச் சிலுவை**

- கி.பி. 1912இல் இ. ஆர் அயர்ட்டன் எனும் அகழ்வாய்வாளரால் அநுராதபுரத்தின் மத்தியநகரில் இருந்த கல்லினால் செதுக்கப்பட்ட விசேட உருவமைப்புக்கொண்ட சிலுவை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. ‘‘அநுராதபுர சிலுவை’’ எனும் பெயரில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள இச்சிலுவை கருங்கல்லினால் ஒரு தூனில் செதுக்கப்பட்டிருப்பதுடன் இச்சிலுவை அடையாளம் ஆலயத்தின் தூணில் அமைக்கப்பட்டிருந்தது என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிதொன்றாகும்.
- இச்சிலுவை அடையாளத்தை கி.பி. 2000இல் ஏற்றுக்கொள்ளப்பட்டு, இன்று பாவிக்கப்படும் இலங்கைக் கத்தோலிக்க கொடியில் இச்சிலுவைப் பொறிக்கப்பட்டுள்ளது.

- அக்காலத்தில் காணப்பட்ட விபரங்களுக்கு அமைய இது அக்காலத்தின் கீழைத்தேய கத்தோலிக்க மக்களிடையே பிரபலியம் வாய்ந்த சிலுவை அடையாளம் என அறிந்து கொள்ளப்பட்டுள்ளது. அது புனித தோமஸ் திருத்தூதரினால் உருவாக்கப்பட்ட சிலுவையை ஒத்ததாக இருந்தது. என இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இவ் உருவமைப்புக்கேற்ப செதுக்கப்பட்ட திருச்சிலுவை சில இந்தியா, பாகிஸ்தான், குர்கிஸ்தான், அப்கானிஸ்தான் எனும் நாடுகளில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

### ii) திருமுழுக்குத் தடாகம்

- வவுனியா தொள்பொருள் நிலையத்தில் கல்லினால் ஆக்கப்பட்டிருக்கும் திருமுழுக்கு நீர்ப்பாத்திரம் உள்ளது. இப்பாத்திரத்தில் புராதன விஞ்ஞான அமைச்சின் அலவலகர் அறிவித்திருந்தபடி முதன் முதலாக மாதொட வீரணியத்தில் இருந்த பொழுது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- இதன் சுற்றளவு 300 செ. மீற்றராகும். உயரம் 118 செ. மீற்றராகும். ஆழம் 325 செ. மீட்டராகும். கணம் 7 செ.மீட்டராகும். இப்பாத்திரம் ஒரே கல்லினால் நிறைவுறச் செய்யப்பட்டிருக்கின்றது. தென் இந்தியாவிலும் இத்தகைய தொட்டி கண்டெடுக்கப்பட்டுள்ளது. இப்பாத்திரத்தினை பார்க்கும்போது அநேக மக்கள் திருமுழுக்கு பெற்றிருக்கிறார்கள் என உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

### iii)

- களனி கங்கைக் அருகாமையில் புனித தோமாவின் ஞாபகார்தமாக சிலுவையுடனான கோபுரம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்து சபையின் கட்டிடமான ஜிந்துப்பிட்டி புனித தோமஸ் ஆலயம் அவ்விடத்தில் அமைக்கப்பட்டிருக்கலாம் என வரலாறு சந்தேகிக்கின்றது.

### 9.3.2.2.2 போர்த்துக்கேயர் காலம்

- கல்லினால் ஆன **போர்த்துக்கேயரின் இலாஞ்சனை (Emblem)** : ஜனாதிபதி மாளிகைக்கு கீழ் உள்ள பிரதேசத்தில் ''ஹோர்டன் தோட்டம்'' அமைக்கப்பட்டுள்ளது.
- **புனித அன்னாள் திரை** : 1666ஆம் ஆண்டைச் சேர்ந்த நவகமுவ புனித அன்னம்மாள் ஆலயத்திரையில் உள்ள இச்சித்திரம் இன்று தேவத்தை காட்சிசாலையில் வைக்கப்பட்டிருக்கின்றது.
- யாழ் சங்கானையில் (Chanakani) உடைந்த **கிறிஸ்தவ ஆலயம்** கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

### 9.3.2.2.3 ஒல்லாந்தர் காலம்

- குருணாகல வெள்ளி விகாரையின் தலைமை ஆசனத்தில் கிறிஸ்தவ சித்திரம் வரையப்பட்டிருக்கும் ஓடுகள் புராதன விஞ்ஞான அமைச்சினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கீழ்க்காணப்படும் விடயங்கள் அதில் காணப்படுகின்றன.
- கிறிஸ்துவின் விண்ணேற்பு, இயேசுவை சிறுவயதில் ஆலயத்தில் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தல், இயேசு கடல் மீது நடத்தல், இயேசுவின் உருமாற்றம், மார்த்தாளும் மரியாளும் போன்ற புதிய ஏற்பாட்டு நிகழ்வுகள் இச்சித்திரங்களில் காணப்படுகின்றன. இயேசுக்கிறிஸ்து ஒல்லாந்தரது ஆடை அணிந்திருப்பது இச் சித்திரங்களின் விசேஷ தன்மையாகும். அவரது தலையைச்சுற்றி ஒளிக்கதிர் அமைக்கப்பட்டிருந்தது.
- பாஸ்கா நாடகம், பசான் கீதம் ஆரம்பமாவதுடன் திருச்சுருப கலை கிறிஸ்தவர்களிடையே பிரபலியம் அடைந்தது.

### 9.3.2.2.4 ஆங்கிலேயர் காலம்

- Bezalel Navaratne, பெசலேல் நவரத்ன, அல்லது முகாந்திரம் முதியன்சே நவரத்ன எனும் சிறந்த ஓவியர் புத்த விகாரைகளில் சித்திரம் வரைபவராவார். அவர் திருமுழுக:குப் பெற்று பெசலேல் நவரத்தின எனும் பெயரை மாற்றிக்கொண்டார்.

- இவர் பேராதேனியாவில் உள்ள ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் மரச் சிற்பங்கள் அடங்கிய ஆலயத்தை மிகவும் சிறப்பான முறையில் அமைத்துள்ளார். இதற்காக அம்பக்கே பௌத்த விகாரையில் காணப்பட்ட கண்டிச் சிற்பக்கலை அம்சங்களை குறிப்பாக மரச்சிற்ப வடிவங்களை உள்வாங்கியுள்ளார். இந்த ஆலயத்தின் கூரை சுவர்கள் இல்லாத மரச்சிற்பங்களைக் கொண்ட மரக்கோபுரங்களால் அமைக்கப்பட்டிருந்தது. பேராதனை ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் 1936ஆம் ஆண்டு கட்டப்பட்ட இவ் ஆலயம் அக்காலத்தில் இங்கிலாந்து சபைக்குச் சொந்தமானது.
- இவ் ஆலயத்தூண்களில் கிறிஸ்தவ அடையாளங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அண்மைக்காலங்களில் பார்க்கும்பொழுது சிங்கள கலாச்சாரத்திற்குச் சொந்தமான கலை வடிவங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- இவ் ஓவியங்களில் கிறிஸ்தவ அனுபவங்களும் சிங்களக் கலையும் மிக நெருக்கமாக இணைந்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.
- இக்காலத்தில் இடங்களைவிட, ஓவியர்களும் முக்கிய இடத்தை வகிக்கின்றனர். சித்திரக்கலைத் தொடர்பான முக்கியமான சிலரைப்பற்றி இதில் கண்டறிவோம்.
- **போல் நவரத்ன** - 1939 - 1940 ஆண்டுகளில் கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றிய சித்திரத்தை வரைந்துள்ளார். குடிலில் உள்ள சூசை, மரியா, ஞானிகள் அன்றைய காலத்தில் இருந்த மேலைத்தேய பராம்பரியத்திற்குரிய ஆடை அணிந்தவர்களாகக் காணப்பட்டனர். ஆட்டு மந்தைகளுக்குப் பதிலாக யானை, தூதர்களுக்குப் பதிலாக தேவதைகள், சைப்பிரஸ் மரத்திற்குப் பதிலாக, நா மரம், ஆசிய வீட்டுப் பாவணைப் பொருட்களும் இச்சித்திரத்தில் காணப்படுகின்றன. இது விவாதங்களை ஏற்படுத்திய சித்திரமாகும். பெசலெலின் மூத்த மகனான இவர் மிகத்திறமையான ஓவியரும், சிற்பியுமாவார்.
- **ஹென்றிக்கஸ் :** இவர் கிறிஸ்தவ கருப்பொருளை இலக்காகக் கொண்ட சித்திரக்கலைஞர். முகத்துவாரம் புனித யாகப்பர் ஆலயத்தின் சித்திரங்களை வரைந்தவர் இவரேயாவார். அவர் வரைந்துள்ள இறுதி இராவுணவு சித்திரத்தில் தம்மையே சீடனாக நினைத்து வரைந்துள்ளார். இவரது சித்திரக் கலை மேலைத்தேய பாரம்பரியக் கலையை ஒத்ததாக உள்ளது.
- **என். எஸ். கொடமான்ன:** 1941ம் ஆண்டு அருட்தந்தை செபஸ்தியான் பெர்னாண்டோ நீர்கொழும்பு, பெரிய தெருவில் அமைந்துள்ள புனித மரியாள் ஆலயத்திற்கு, அடிக்கூரையை அமைப்பதற்கு அருட்தந்தை அசவ் (Assaw) வின் வடிவமைப்பைப் பின்பற்றினார். இவ்வடிவமைப்பின் சித்திரங்கள் 36 வயதுடைய பௌத்த சித்திரக்கலைஞனான கொடமான்ன என்பவரால் வரையப்பட்டன.
- அவர் திருவிவிலியத்தில் உள்ள சில நிகழ்வுகளை சித்திரமாக வரைந்துள்ளார். பல ஆண்டுகளுக்கு முன் மைக்கல் ஆஞ்சலோ எனும் இத்தாலி இன ஓவியரைப் போல 72 அடி உயரத்தில் அமைக்கப்பட்ட (பலஞ்சி) மேடையின் மேல் இருந்து இதை வரைந்துள்ளார். 1 ½ வருடங்களில் 12 சித்திரங்களைப் பூர்த்தி செய்துள்ளார்.
- Lake House நிறுவனம் வெளியிடும் ‘‘சிங்கள ஜாதிய’’ எனும் பத்திரிகையின் ஞாயிறு சித்திரம் பிறசேர்க்கைக்கும் தமது பங்களிப்பை வழங்கியுள்ளார்.

### 9.3.2.3 சங்கீதம்

- திருச்சபையின் இசைத்துறையானது இலங்கையின் இசைத்துறையில் மிகவும் முக்கியமான ஒரு பகுதியாகும். கத்தோலிக்க இசை மரபானது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தேசிய இசைக்கு பெரும் பங்காற்றியுள்ளது.

**சிங்கள இசைக்கு கத்தோலிக்க இசையின் பங்களிப்பு**

- அதிவணக்கத்துக்குரிய யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளாரின் பழைய ஆக்கங்களினுடாக.
- வஹாகோட்டை, நீர்கொழும்பு, தூவ, போலவத்த மக்களின் பாடல்களான ஒப்பாரி, பசான் கீதம், புலம்பள்களினூடாக.
- நத்தார் கெரோல் பாரம்பரியங்கள் வழியாக

**தேசிய கத்தோலிக்க இசையை ஊக்குவித்தவர்கள்**

**1. அதிவண. யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளார்**

''ஆகி வின பிந்த ஹரின - ஆகி இன பிந்த ஹரின
லெச பவர மனு வெசின்
குருசே மத வெட இன்ன - தெத தேவாஜ பாலனே
நிரயெ அப சதுரன்கென் - நிரயே அப சதுரன்கென்
ஜய கன்ன சாந்த குருசியே அடயாலமே
பின் புத் ஸ்பிரூத்து சாந்துகென் நாமென் ஆமென் - ஜேசு.

- இது தேசிய கத்தோலிக்க இலக்கிய பாடல்களின் ஆரம்பமாகும். ''மூவொரு கடவுள்'', ''அருள் நிறைந்த மரியே'' ''வானமும் பூமியும் படைத்தவராம்'' ஆரம்பத்திற்கு முன் மக்களே, கடவுள் பிறந்துள்ளார்'' என்ற பழைய பாடல்கள் இன்றும் எம்மத்தியில் பயன்படுத்தப்படுகின்றது.
- பக்தி பாடல்களுக்கு மட்டுமல்லாது நாடக பாடல்களுக்கும் பழைமையிலிருந்து அருட்தந்தை யாக்கோமெ கொன்சால்வெஸ் அடிகளின் ஆக்கங்கள் பயன்படுத்தப்பட்டன. மனமே நாடகத்தில் வருகின்ற ''பிரேமயின் மனரஞ்ஜிதவே'' (அன்பில் மனம் மகிழ்ச்சியடைகிறது) எனும் பாடல் கத்தோலிக்க பாடலின் மெட்டைத் தழுவி பின்பற்றப்பட்டது. (''ஆரம்பென் பெர நிர்மித்த மனுலொவ'' எனும் சிங்களப் பாடல்; ''மாமரியே'' எனும் தமிழ் பாடல். ஆதாரம்: பேராசிரியர் சுனில் ஆரியரட்ன ''பாசன் காந்தாறு காயன''எனும் ஆய்வுக் கட்டுரை- ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்)
- அருட்தந்தை தமது பாடல்களுக்கு தாளம், இசை என்பவற்றைத் தேடி மலைநாடு, தென்னிலங்கை, சம்பிரகமுவ மாகாணங்களுக்கு சென்றார். தப்பு, தம்பட்டம், மேளம், நாதசுரம், கைத்தாளம், ஆகிய ஐந்து இசைக் கருவிகளை தேடிச் சென்றார். தேசிய மக்களின் பாடல் தாளத்தை தனது இசைக்கு எடுத்துக்கொண்ட இவர் தேசிய நாடகம், நடனம் என்பவற்றுடன் தனது பிறந்த நாட்டில் பெற்றுக்கொண்ட நாடகக் கலை அனுபவங்களின் அடிப்படையில் கத்தோலிக்க இசைக்கு உயிர் கொடுத்தார்.
- அருத்தந்தை ஐந்து விசேட பாடல்களை எழுதியுள்ளார்.

  i) வேத காவிய (வேத காவியம்) ii) பசன் பொத (பசன் புத்தகம்)
  iii)ஆனந்த கழிப்புவ (ஆனந்த கழிப்பு) iv) மங்கள கீதய (மங்கள கீதம்)
  v) லதோனி பொத (ஒப்பாரி புத்தகம்)

**2. மேதகு எட்மன் பீரீஸ் ஆண்டகை (அ.ம.தி)**

- 1897 மார்கழி 27 இல் சிலாபம் கிராமத்திலே பிறந்த இவர் தேசிய கத்தோலிக்க இசைக்கு சேவையாற்றிய முன்னோடியாக விளங்குகிறார்.
- தேசிய கத்தோலிக்க இலக்கியத்தின் ஆரம்ப நூலை தேடிச் செல்கையில் அருட் தந்தை யாக்கோமெ கொன்சால்வெஸ் அடிகளாரின் நூல்களில் உள்ள தேசிய நாடக கலையை சார்ந்த நாடகத்தையும், பாடல்களையும் வெளிக்கொணர்ந்தார்.
- ''ஜயவே ஜேசுனி - ஜயவே கிறிஸ்துனி'' என்ற பாடல்
  - வடினு நெவ்மெசியா - பதா சி மெலோ தனா
  - கீ கெடின் துதி தெவ - சந்தோஷின் சியோனெனி

- சுமிஹிரு யேசு அசிரி தெவா - வதன் ஓபே
- சன்தானா மெனியனி - தெவ் மவ்கே மாத்துரினி.......

என்ற பாடல்கள் ஆயர்களால் தனது குருத்தவப் பணிக் காலத்திலே கத்தோலிக்க இசை இலக்கியத்திற்கு பரிசாக வழங்கப்பட்ட பாடல்களாகும்.

### 3. அருத்தந்தை மர்சிலின் ஜயகொடி (அ.ம.தி.)

- தேசிய கத்தோலிக்க இசைக்கு வித்திட்ட ஒருவராக இவரை அறிமுகப்படுத்தமுடியும்.
- ''மஹா கிவிசுரானன்'' (மகா கவியரசன்) என்ற பெயரில் அழைக்கப்பட தகுதியுடைய ஒருவராக விளங்குகிறார்.
- இவருடைய பாடல்களில் பின்வருபவை மிகவும் பிரசித்திப்பெற்றவைகளாகும்.
  - சுபிரி செம ஆசிரி யோம .......
  - ஸ்ரீ லங்கா ராணி மெனியே ....
  - சுவந்த செவந்தன ........
  - ரொனட வடின பிந்து ஒபய் ......
  - ரே தரு பபலனவா .......
  - சீனு ஹன்டின் லொவ பிபிதெனவா .........
- அருட்தந்தை மர்சலின் ஜயக்கொடியினால் வெளியிடப்பட்ட பக்திப்பாடல் புத்தகங்கள்:
  - குகுலு கினினிமல்; குமாரி மங்களி; துன்கெகுளு - கெரோலினா
  - ரோசதித; யாகிகா
  - யாஹினி i, ii, iii - ஜன சிரித
  - வன மல - சுவந்த லாட்டு
- திருவிவிலியத்தில் திருப்பாடல்களைத் தழுவி சுதேச மொழியில் முழுமையான பாடல் புத்தகமாக ''கீதாவளிய'' (திருப்பாடல்) என்ற பெயரில் வெளியிடப்பட்டது.
- கத்தோலிக்க பாடல் இலக்கியத்தை ஆராய்கின்றபொழுது அருட்தந்தை மர்சலின் ஜெயகொடியின் பாடல் இலக்கியம், மேலும் விசேட வகையாக நத்தார் பாடல்கள் எடுக்க முடியும். ''ரே தரு பபளனவா, சீனு ஹன்டின் லொவ பிபிதெனவா'' என்ற நத்தார் கீதங்கள் எமது ஆலயங்களில் பாடுகின்ற பொழுது அருத்தந்தை நினைவு கூறப்படுகிறார்.
- ''தூய பாஸ்கா காட்சிக்கு'' அருட்தந்தை புதிய வாழ்வை வழங்கியுள்ளார். அதிலே பாவிக்கப்படுகின்ற உயிரற்ற உருவங்களுக்குப் பதிலாக உயிருள்ள மனித பாத்திரங்களைப் பாவித்து பாஸ்கா காட்சிக்கு உயிரூட்டம் கொடுத்தவர். பாஸ்கு காட்சிகளோடு பாடல் இலக்கியத்திற்கும் இவரின் பாடல்களும் ஒருங்கிணைக்கின்றன. வாதனவே துர, செவனெளி மத, சந்தபானே பிபிறந் மல் வாகே, குரிசியே நெக அத் விஹிதா.
- 1956 இல் திரையிடப்பட்ட ''ரேகாவ'' திரைப்படத்தின் பாடல்களை உருவாக்கியவர் அருத்தந்தையாவார். இலங்கை முழுவதும் சிங்கள கவி சம்மேளனத்தினால் வெளியிடப்பட்ட ''கவிய'' என்ற நூலுக்கு கவிதை எழுதியதனூடாக தேசிய கவிஞர்களோடு சேர்ந்துக் கொண்டார். முழு இலங்கை கவி சம்மேளனத்தின் தலைவராக செயற்பட்ட அருத்தந்தை இசையிலே பல விருதுகளை பெற்றுக்கொண்டார்.
  - 1975 இல் ''ரன் பியுமக்'' என்ற பரிசைப் பெற்றுக்கொண்டார்.
  - 1980 இல் ''முத்து'' கவிதைக்கு அரச விருதை பெற்றுக்கொண்டார்.
  - 1982 இல் ''கலா சூரி'' என்ற கௌரவ விருதை பெற்றுக்கொண்டார்.
  - 1983 ஆவணி மாதம் 31இல் பிலிப்பையின்ஸ் அரசினால் மனிலாவில் றமோன் மெச்சய்சய் என்ற ஆசிய நோபல் பரிசை பெற்றுக்கொண்டார்.
- இவர் கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்ட திறமைகளை கத்தோலிக்க சபைக்கும், நாட்டிற்கும் அர்ப்பணித்து 1998 தை 15 இல் இறைவனடி சேர்ந்தார்.

### 9.3.2.4 அரங்கியற்கலை (நாட்டிய நாடகக் கலை)

- திருச்சபையானது கத்தோலிக்க ஒழுக்க நெறியிற்கு எதிராக இல்லாத வகையில் நாடகங்களை மேடையேற்றுவதற்கு அனுமதி அளிக்கிறது. இதற்காக வரலாற்று ஆதாரங்களும் பல உள்ளன. முக்கிய ஆலயங்களின் பெருவிழாக்களின் போது அப்பெருவிழாவிற்கான மூலக்காரணத்தை வெளிப்படுத்தும் நாடகங்கள் அரங்கேற்றப்படுவது வழக்கமாக இருந்தது. எனவே மறைப்பணிப்பாளர்கள் தமது சமய படிப்பினையைப் போதிப்பதற்காக நாடகத்துறையைப் பயன்படுத்தினார்கள். நாடகங்களை அரங்கேற்றுவதற்காகவே பல ஆலயங்களுக்கு அருகில் நாடக மேடைகளை அமைத்தார்கள். பல்தெவுஸ் எனப்படும் ஒல்லாந்த 1656 - 1665 காலப்பகுதியில் செய்த அவதானிப்பின் படி தொன்னமையான கத்தோலிக்க தேவாலயங்கள் பற்றி பின்வருமாறு கூறுகிறார்:
- இங்கே பல ஆலயங்களுக்கு அருகாமையில் மேடைகள் அமைக்கப்பட்டன. அந்த மேடைகளில் இயேசு சபையினைச் சார்ந்த போர்த்துக்கேய குருக்கள் பெருவிழா நாட்களின் போது திருவிவிலியத்தை மேடையேற்றினார்கள்.

### 9.3.2.4.1 போத்துக்கேய கால மறைப்பணியாளர்கள் கிறிஸ்த நாடகங்களை மேடையேற்றிய சந்தர்ப்பங்கள்.

**இயேசு சபையினர்**

- கி.பி. 1604 ஆம் ஆண்டில் கொழும்பில் இயேசு சபைக்கு சொந்தமான ஆலயத்தின் பெருவிழாவின்போது உடன்படிக்கையும் அன்னை மரியாளும் என்ற தலைப்பில் நாடகம் மேடையேற்றப்பட்டது.
- கி.பி. 1613 ஆம் ஆண்டில் கம்மள என்ற ஊரிலே சாதாரண மக்கள் பலர் கிறிஸ்தவத்தை தழுவிய போது ‘‘கிறிஸ்து பிறப்பு (கயமவிம) என்ற தலைப்பிலே நாடகம் மேடையேற்றப்பட்டது.
- கி.பி. 1617 ஆம் ஆண்டில் சிலாபத்தில் புதிதாக கட்டப்பட்ட ஆலயமொன்று ஆசீர்வதிக்கப்பட்ட போது ‘‘பேரரசன் கொன்ஸ்ரன்னானின் மனமாற்றம்’’ மேடையேற்றப்பட்டது.

**பிரான்சிஸ்கன் சபையினர்**

- மாத்தறையில் இறைபணியாற்றிய அந்தோனியோ பெஷோரோ என்பவர் இக்காலத்தில் முக்கியமான ஒருவர். கி.பி. 1636 ஆம் ஆண்டிலே எழுதப்பட்ட புத்தகமொன்றில் இயேசு, ஆதாம், ஏவாள் ஆகியோரின் வாழ்க்கை வரலாறு மேடையேற்றப்பட்டதாக எழுதப்பட்டுள்ளது.

### 9.3.2.4.2 பாஸ்கா நாடக பாரம்பரியம் (ஒல்லாந்தர் காலம்)

- இயேசுவின் பாடுகள் சம்பந்தமான நாடகங்கள் தவக்காலத்திலும். புனித வாரத்திலும் மேடையேற்றப்படுவது பொதுவான வழக்கமாக இருந்தது.
- ஒல்லாந்தர் காலத்தில் வன்னி பிரதேசசங்களில் மறைப்பணியாளர்களுக்கு பூரண சுதந்திம் இருந்தது. இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திய முத்திபேறுபெற்ற யோசப்வாஸ் அடிகளும் அவரது ஒறரோறியன் சபைக் குருக்களும் இணைந்து வளர்ந்து வரும் விசுவாசிகளின் உதவியுடன் பெருவிழாக்களைப் பவணியுடன் ஒழுங்கு செய்தார்கள்.
- இவ்வாறன சூழலிலே கி.பி. 1706 ஆம் ஆண்டில் கோவா ஒறரோறியன் சபையிலிருந்து கொண்டுவரப்பட்ட உடை அலங்காரத்தை பயன்படுத்தி பாஸ்கா நாடகம் ஒன்று மேடையேற்றப்பட்டதாக ஒறரோறியன் அறிக்கை ஒன்றில் காணப்படுகிறது.

- 16ஆம் நூற்றாண்டிலிருந்து இவ்வாறான நாடகக் காட்சிகளானது கோவாவில் மிகவும் பிரபல்யமான கலையாக இருந்தது. அதேபோல இலங்கைக்கு வந்த மறைப் பணியாளர்கள் நாடகத்துறையில் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தார்கள். அதே போல கோவாவில் பாஸ்கா நாடகத்துறையில் முத்திப்பேறுபெற்ற ஜோசப்வாஸ், அருட்தந்தை யாக்கோமே கொன்சால்லேஸ் மிகவும் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தார்கள்.
- சம்பிரதாய சிங்கள நாடகத்துறைக்கான வரலாற்று சான்றுகள் இல்லாத நிலையில் போர்த்துக்கேய ஸ்பானிய சமய நாடகக் கலையைப் பின்பற்றி உருவாக்கப்பட்ட பாஸ்கா நாடகங்களே இலங்கையில் தேசிய நாடகத்துறை உருவாகக் காரணமாக இருந்தன. இயேசுவின் பாடுகளை சுருபங்களினூடாக வெளிப்படுத்துவதுதான் 'பாஸ்சோ" (Passo) எனப்படும் போர்த்துக்கேய சொல்லின் அர்த்தமாகும்.

**பாஸ்கா நாடகக் கலையின் வளர்ச்சி**

- 400 வருடங்களுக்கு முன்பே பேசாலையில் சுருவங்கள் வழியாக காண்பிக்க ஆரம்பிக்கப்பட்ட பாஸ்கா நாடகங்கள் இன்றும் தொடர்ந்து காண்பிக்கப்படுகிறது.
- பேசாலையில் ஆரம்பமான பாஸ்கா நாடகங்களை அடிப்படையாகக் கொண்டு தூவ, பிரிப்பன, பமுனுகம ஆகிய இடங்களில் நாடகங்கள் காண்பிக்கப்பட்டது.
- தூவவில் காணப்படும் இயேசுவின் சுருவமானது, தூவவில் காண்பிக்கப்படும் பாஸ்கு நாடகத்துடன் மிகவும் சம்பந்தமானது. அதே வேளை அச்சுருவமானது கொச்சின் நகருடன் தொடர்புடையது. இச்சுருவமானது கி.பி. 1838 ஆம் ஆண்டு ஜொகீனு மேஸ்திரி எனப்படும் சிற்பியினால் உருவாக்கப்பட்டது. அதன் பிற்பாடு கி.பி. 1839 இல் அச்சுருவத்தைப் பாவித்து பெரிய வெள்ளிக்கிழமை பாஸ்கா நாடகம் காண்பிக்கப்பட்டது. தூவ பாஸ்கு நாடகத்தில் நடிக்கும் பாணியானது மத்திய ஐரோப்பிய கால இறை வழிபாட்டு நாடகத்தை பின்பற்றியதால் அதில் தென் இந்திய நாடக மரபு குறைவாகவே உள்ளது.
- இலங்கை பாஸ்கா நாடக சம்பிரதாயத்தைப் பற்றிப் பார்க்கையில் மேதகு எட்மன்ட் பிரிஸ் ஆண்டகை பொறலஸ்ஸ பாஸ்கா நாடகம் பற்றி கூறியது குறிப்பிடத்தக்கது: ''பொரலஸ்ஸ பாஸ்கு நாடகமானது மிகவும் துல்லியமான உயிரோட்டமுள்ள நாடகக் கலைஞர்களால் மேடையேற்றப்பட்டுள்ளது."
- இந்நாடகத்தில் சங்கீதம், நடிப்பு, தொழில்நுட்பம் ஆகியவை மிகச் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டன.
- இந்திய இராக தாளங்களை மருவியுள்ள பாடல்களைக் கொண்ட பாஸ்கா நாடகப் பாரம்பரியமானது தேசிய நாடகப் பாரம்பரியத்தின் வெளிப்பாடாக உள்ளது என பேராசிரியர் எதிரிசிங்க சரத்சந்திர தமது ''சிங்கள கம நாடகம" எனும் நூலில் குறிப்பிடுகிறார்.

### 9.3.2.4.3 சிங்கள அரங்கியற் கலையின் பங்களிப்பு

- கத்தோலிக்கர் நாடகங்கள் மூலம் தமது சமயத்தை வெளிப்படுத்துவதில் மிகவும் ஆர்வம்கொண்டிருந்தனர். இலங்கைக்கே உரித்தான நாடகக்கலை இல்லாதபடியினால் இந்தியாவில் கிராமிய நாடகங்களைத் தழுவி இலங்கையில் நாடகக் கலை உருவாகியது. இந்நாடகக் கலையானது மேற்கு கரையோரப் பகுதிகளாகிய சிலாபம் முதல் தங்காளை வரை மிகவும் பிரபல்யமாக இருந்தது.
- மேதகு எட்மன்ட் பீரிஸ் ஆண்டகை கூறவதற்கு இணங்க முதலாவது சிங்கள நாடகம் ''றஜதுன் கட்டுவ" எனப்படும் நாடகமாகும். இது சிலாபத்தைச் சேர்ந்த மிகுந்து குலசூரிய கபிரியேல் பர்னாந்து என்பவரால் எழுதப்பட்டதாகும். இது கத்தோலிக்க பண்டிதரான லொறன்சுப்பிள்ளை புலவரால் எழுதப்பட்ட ''மூவிராசாக்கள்" எனப்படும் தமிழ் மொழி நாடகப் பாணியிலே தயாரிக்கப்பட்டுள்ளது.

- கல்விமானும் தலைசிறந்த கவிஞருமான ஆரிய பிலிப்பு சிஞ்ஞோ என்பவர் 13 நாடகங்களை எழுதியுள்ளார். அவற்றுள் பல கிறிஸ்தவ கருப்பொருள்களை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் சில பின்வருமாறு :
  குல முதல்வர் யோசேப்பு, ஹெலனா, புனித நிக்கலஸ், றஜுதுன்கட்டுவ, வேதசாட்சி எயுஸ்தாக்கியுஸ், அதே போல் அவரால் எழுதப்பட்ட தேபொல, சிங்கவல்லி ஆகிய நாடகங்களில் கத்தோலிக்க செல்வாக்கு காணப்படுகிறது.
- கத்தோலிக்கர் இறை வழிபாட்டின் செல்வாக்கினால் உருவாக்கப்பட்ட நாடகத்தின் முக்கிய குறிக்கோளானது வெறுமனே நாடக ஆர்வத்தை மக்களுக்கு வழங்குவது மட்டுமல்ல கத்தோலிக்கரிடையே மிகவும் இலகுவான முறையில் கத்தோலிக்க படிப்பினையை வழங்குவதும் புதிய கத்தோலிக்கர்களை ஊக்குவிப்பதுமே கத்தோலிக்க இறை வழிபாட்டை மருவி உருவாகிய நாடகங்களின் நோக்கமாகவிருந்தது.

**வண. யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளும் சிங்கள நாடகக் கலையும்**

- வண. யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளுடைய இலக்கியமே இலங்கை இலக்கியத்தில் நாடகம் உருவாகுவதற்கு காரணமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.
- ‘‘தேவ நீதி விசர்ஜனய’’ என்பது நாடக பாவங்களால் நிறைந்ததாகப் காணப்படுகிறது. இது சிலரால் ‘‘நடு பொத’’ எனவும் கூறப்பட்டது.
- இயேசுவின் பாடுகள், மரணம் ஆகியவை சுருபம் வழியாக மேடையேற்றப்பட்டது. அதன்போது பாஸ்கு நாடகங்களின் அம்சங்கள் உள்ள ‘‘துக் பிராப்தி பிரசங்கய’’ எனப்படும் புத்தகத்தின் சில பகுதிகளும் வாசிக்கப்பட்டது. இதற்கிடையில் சோகத்தை வெளிப்படுத்த ‘‘தேஷனா நவயே பசன்’’ எனும் நூல் பயன்படுத்தப்பட்டது.
- வண. கொன்சால்வேஸ் அடிகளின் ஆக்கங்கள் இலங்கை சிங்கள நாடகக் கலை எழுத்தாளர்களுக்கு முன்னோடியாகவும் அவற்றிற்கு மையக் கருப்பொருளாகவும் இருந்தது.
- சிங்கள நாடக எழுத்தாளர்கள் வண. கொன்சால்லேஸ் அடிகளின் ‘‘மங்கள கீத’’ ‘‘பசான் பொத’’ என்பவற்றிலிருந்து மேற்கோள் காட்டியுள்ளனர் என பேராசிரியர் எம். எச். குணதிலக தமது கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வு நூலில் குறிப்பிடுகிறார்.
- பழைய ரஜதுன் கட்டுவ நாடகத்தை எழுதியவர் அருட்தந்தை கொன்சால்வேசின் தேவ வேத புராணய எனும் நூலைச் சார்ந்துள்ளார்.
- அதே போல பௌத்த எழுத்தாளர்களால் எழுதப்பட்ட நாடகங்களும் ‘‘சுவிசேஷ விசர்ஜனய’ என்பவற்றைப் பின்பற்றியதாக மிகவும் தெளிவாகக் காணப்படுகிறது.

### 9.3.2.4.4 தமிழ் அரங்கியற் கலையின் பங்களிப்பு

**நாட்டார் நாடகக்கலை**

- இலங்கையில் தமிழ் மக்கள் செறிந்து வாழ்ந்த பகுதிகளான யாழ்ப்பாணக் குடாநாடு, மட்டக்களப்பு, மன்னார் - மாதோட்டம், வன்னி, புத்தளம், சிலாபம் போன்ற பகுதிகளிலேயே ஆரம்ப காலங்களில் நாடகங்கள் ஆடப்பட்டன. தமிழ் நாடகங்கள் இந்து சமய புராண, இதிகாசங்களையே கதைப் பொருளாகக் கொண்டு பக்தி, காதல், வீரம், போர் ஆகிய விடயங்களைக் கருப்பொருளாகக் கொண்டு ஆக்கப்பட்டவை.
- கத்தோலிக்க மதத்தின் கொள்கைகளையும், விழுமியங்களையும் பரப்பும் நோக்குடன் இலங்கைக்கு வருகை தந்த போர்த்துக்கேய மறைபரப்பாளர்களான பிரான்சிஸ்கன் சபைக்குருமாரும் இயேசு சபைக் குருமாரும் நாட்டுக் கூத்தை ஒரு ஊடகமாகப் பயன்படுத்தினர்.

- கத்தோலிக்க நாட்டுக்கூத்துக்கள் புனிதர்களின் வரலாறுகளையும், ஐரோப்பிய புனைக்கதைகளையும் கதைப் பொருளாக கொண்டிருந்தன. கத்தோலிக்க நாட்டுக் கூத்துக்கள் தோற்றம் பெற்ற காலத்தில் கத்தோலிக்கர் ஒல்லாந்தரினால் மிகவும் துன்புறுத்தப்பட்டார்கள். எனவே இக்காலத்தில் தோன்றிய நாட்டுக்கூத்துக்கள் துன்பியலை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டன.
- கிறிஸ்துவில் கொண்ட விசுவாசத்திற்கும், நற்செய்தியின் விழுமியங்களுக்கும் சான்று பகர்ந்து துன்பங்களை எதிர் கொண்ட புனிதர்கள் தம் தியாகத்திற்கு கைமாறு பெற்றது போன்று கிறிஸ்தவர்களும் தாம் எதிர்கொள்ளும் துன்பங்களுக்கு கைமாறு பெறுவர் என்னும் படிப்பினை கத்தோலிக்க நாட்டுக்கூத்துக்கள் வாயிலாக எடுத்தியம்பப்பட்டது.
- கத்தோலிக்க நாட்டுக்கூத்துக்கள் வாயிலாக அதிகமாக புனிதர்களின் வரலாறுகளே எடுத்துரைக்கப்பட்டன. புனிதர்கள் மட்டில் பக்தியையும் மரியாதையையும் ஏற்படுத்துவது இதன் நோக்கமாகும். எனவே புனிதர்கள் ஆடுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. இதனால் பாடல்கள் வாயிலாகவே அதிகமான கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டன.

## போர்த்துக்கேயர் காலம்

- போர்த்துக்கேய மறைபரப்பாளர் குறிப்பாக இயேசு சபைக் குருக்கள் மேலைநாட்டுப் பாணியிலான நாடகங்களைக் கொண்டு மறைபரப்பும் முறைகளை மேற்கொண்டார்கள் என்பதனை அவர்களால் தயாரிக்கப்பட்ட அவர்கள் பணிகள் பற்றிய விபரங்கள் அடங்கிய ஆண்டறிக்கைகள் சுட்டி நிற்கின்றன. மத்திய காலத்தில் திருச்சபையினால் உருவாக்கப்பட்ட மறைஞான நாடகங்கள், அற்புத நாடகங்கள், ஒழுக்கப் பண்பு நாடகங்கள் போன்றவற்ற தாம் அறிந்த ஸ்பானிய, போர்த்துக்கேய நாடக மரபுகளுடன் இங்கு பயன்படுத்தியுள்ளனர்.
- இயேசு சபைக் குருமார் தாம் நிர்வகித்த ஒவ்வொரு ஆலயத்திலம், கல்லூரியிலும் கிறிஸ்தவமறையின் முக்கிய திருநாட்கள், திருவிழாக் காலங்களில் இவற்றின் பொருளை விளக்கும் நாடகங்களை மேடையேற்றியமைக்கான வராலாற்றுச் சான்றுகள் காணப்படுகின்றன. உதாரணமாக 1633இல் தெல்லிப்பளையிலுள்ள புனித பிரான்சிஸ் சேவியர் ஆலயத்தின் திறப்பு விழாவின் போது பல நாடகங்கள் மேடையேற்றப்பட்டதாகக் கூறப்படுகின்றது. எனினும் கீழைநாட்டு மரபு ரீதியான முறைகளை அவர்கள் கையாண்டார்கள் என்பதற்கு போர்த்துக்கேயர் கால வரலாறு பற்றிக் கூறும் ஏடுகளில் சான்றுகள் ஏதும் கிடைக்கவில்லை.

## மரபு ரீதியான கத்தோலிக்க நாடகத்தின் தோற்றம்

- மரபு ரீதியான கத்தோலிக்க நாட்டுக்கூத்துக்கள் மன்னார், யாழ்ப்பாணம் பகுதிகளிலேயே ஆரம்பமாகி வளர்ச்சியடைந்துள்ளன. மன்னார் மாதோட்டப் பகுதியில் தோன்றி வளர்ச்சியடைந்த நாட்டுக்கூத்துக்கள் பற்றி நாம் அறிவதற்கு நானாட்டானைச் சேர்ந்த பெஞ்சமின் செல்வம் என்பவர் எழுதிய ''மன்னார் மாதோட்ட தமிழ்ப் புலவர்கள் சரித்திரம்'' என்னும் நூல் பெரும் துணையாக விளங்குகின்றது.
- இந்நூலின்படி மன்னார் மாதோட்டப் பகுதியைச் சேர்ந்த லோறன்சுப்பிள்ளைப் புலவர் என்பவரே முதன் முதலில் ''மூவிராசாக்கள் வாசாப்பு'' என்னும் நாடகத்தைப் பாடியுள்ளார். இது தென்பாங்கில் பாடப்பட்டுள்ளது.
- மேலும் இவரது மாணவரான குருகுல நாட்டுத் தேவர் என்பவர் 1780இல் என்றிக் எம்பரதோர் சரிதையை தென்பாங்கில் மூன்று இராக்கதை நாடகமாகப் பாடியுள்ளார்.
- லோறன்சுப்பிள்ளைப் புலவரின் பேரன் கீத்தாம்பிள்ளை எருமை நொண்டி, என்றிக் எம்பரதோர், புரிசீன கன்னி ஆகிய நாடகங்களைப் பாடியுள்ளார். இவர் யாழ்ப்பாணப் பாங்கில் (வட பாங்கு) நாடகங்களைப் பாடியுள்ளார்.

## ஆங்கிலேயர் காலத்தில் நாட்டுக்கூத்து

- ஆங்கிலேயர் காலத்தில் கத்தோலிக்க நாட்டுக்கூத்துக்களை மேடையேற்றுவதற்கு மிசனறிமாரிடமிருந்து பலத்து எதிர்ப்புக்கள் எழுந்ததாகக் கூறப்படுகின்றது. நாடகங்களின் போது மது பாவிப்பது, ஆண்கள் பெண்கள் ஒன்றாக கூடுவதும் ஒழுக்க வாழ்வுக்கு கேடாக அமையும் எனக் கருதப்பட்டு நாடகங்களை மேடையேற்றுவது தடைசெய்யப்பட்டிருந்தது. எனினும் இக்காலத்தில் நாடகங்கள் மேடையேற்றப்பட்டுள்ளன என்பதற்கு சான்றுகளும் காணப்படுகின்றன.

## சிங்கள நாடகத்தில் ஏற்படுத்திய தாக்கம்

- சிங்கள நாட்டுக்கூத்துப் பாரம்பரியம் தோன்றி வளர்ச்சியடைவதற்கு தமிழ் நாட்டுக்கூத்துக்கள் காரணமாக அமைந்துள்ளன. குறிப்பாக சில சிங்கள நாட்டுக்கூத்துக்கள் தமிழ் நாட்டுக்கூத்துக்களில் இருந்து நேரடியாக மொழிபெயர்க்கப்பட்டவையாகப் காணப்படுகின்றன. உதாரணமாக எஸ்த்தாக்கி, யோசபாத், சன்நீக்கிளார், ஞானசவுந்தரி போன்ற நாடகங்களைக் குறிப்பிடலாம்.
- மூவிராசாக்கள் நாடகமே தமிழிலிருந்து முதன் முதலாக மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட நாடகமாகும். இதனை சிலாபத்தைச் சேர்ந்த கபிரியேல் பெனான்டோ என்பவர் செய்திருந்தார். சிங்கள நாட்டுக்கூத்துப் பாரம்பரியம் தமிழ் நாடகங்களில் இருந்தே தோன்றியவை என்பதை சிங்கள நாடக ஆசிரியர் கலாநிதி நு.சு. சரச்சந்திரா என்பவரும், சிலாப மறைமாவட்ட முன்னால் மறைந்த ஆயர் மேதகு எட்மன்ட பீரிஸ் ஆண்டகையும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

## உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு

1. கிறிஸ்தவ இலக்கியக் கலைக்கு பங்களிப்புச் செய்தோரையும் அவர்களது எழுத்தாக்கத்தையும் பற்றிக் கற்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்கவும்.
2. இவ் இலக்கியக்கலை கிறிஸ்தவ மறையை அறிமுகம் செய்வதற்கு உதவியாக இருந்த சந்தர்ப்பங்களை பட்டியற்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள். இலக்கியக் கலை, சித்திரக்கலை, இசை, அரங்கியற்கலை பற்றி கலந்துரையாடுங்கள்.

## உசாத்துணை நூல்கள் :


- ஞா பிலேந்திரன், தமிழ் கிறிஸ்தவ இலக்கியங்கள், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம், 2009.
- பெஞ்சமின் செல்வம், மன்னார் மாதோட்டத் தமிழ்ப்புலவர் சரித்திரம், யாழ்ப்பாணம், 1978.

**தேர்ச்சி 10.0 :** புதிய உலக நாகரீகமொன்றை உருவாக்கும் திருச்சபையின் முயற்சியில் ஈடுபட்டு ஆசியாவினதும் இலங்கையினதும் சமுதாயத்திற்காக திருச்சபையின் கடமைகளில் பங்கு கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 10.1 :** இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் பண்பாடு, சமுதாய முன்னேற்றம் தொடர்பான படிப்பினைகளைச் செயற்படுத்த முற்படுவர்.

**பாடவேளைகள் :** 20

**கற்றல் பேறுகள் :**

- இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் கூடுவதற்கான அடிப்படை விடயங்களத் தேடுவர்.
- பொதுச்சங்கத்தின் சமூக முன்னேற்றத்துக்காக முன்வைக்கப்பட்ட கருத்தினை விமர்சிப்பர்.
- குடும்பவாழ்வு, பண்பாடு என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பங்களை முன்வைப்பர்.
- சமாதானம் ஒருமைப்பாடு என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்காக சந்தர்ப்பங்களை முன்வைப்பர்.
- திருச்சபையின் புதிய உதயத்துக்கு பொதுச்சங்கத்தின் பங்களிப்பு பற்றிய தகவல்களைச் சேகரிப்பர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

### 10.1.1 இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம்

- நீர் அறிந்துள்ள சங்கங்கள் எவை?
- நீர் அறிந்த கத்தோலிக்க பொதுச்சங்கங்கள் எவை?
- இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூடுவதற்கு காரணிகள் பல உள்ளன.
- உலகமும் திருச்சபையும் தனித்தனியே பயணித்த வேளையில், உலகம், திருச்சபை ஆகியவை பற்றி ஆழமாகச் சிந்தித்து, இவ்விரண்டிற்குமிடையே நீடித்த உரையாடலை ஏற்படுத்துவதற்கான ஒரு வெளிப்பாடாக அமைந்துள்ளது.
- பிரமிட் வடிவில் உருவகப்படுத்தப்பட்டுள்ள திருச்சபையினுள் புதுப்பித்தல், புத்துணர்ச்சி உருவாகுவதற்குரிய சாதகமான பின்னணி இல்லை என்பதை உணர்ந்தனர்.




- இப்பிரமிட் அமைப்பு முறை குருக்களை மையப்படுத்திய திருச்சபையின் தன்மையை வெளிப்படுத்துகிறது.

- இதனால் இறைமக்களை மையப்படுத்திய திருச்சபையின் தேவை முன்வைக்கப்பட்டது.



- தலைமைத்துவம் மக்கள் மத்தியிலிருந்து உருவாகும் தன்மையுடையதாக இருக்கவேண்டும்.
- திருச்சபை தன்னைப் பற்றி வெளிப்படுத்திய இவ்வுருவக மாற்றம் (Paradigm Shift) கொப்பர்னிக்கன் புரட்சித் தன்மை கொண்டது எனக் கருதப்பட்டது.
- இம்மாற்றத்தை ஏற்படுத்துவதற்குரிய சூழல் இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்தில் நிலவியது.
- கார்ல் றானர், கருதினால் பெயா, கான்ஸ் கொங்கார் போன்ற இறையியலாளர்கள் இப்புதிய மாற்றுக் கண்ணோட்டத்தை ஏற்படுத்துவதில் முன்னிலை வகித்தனர். பொது நிலையினரின் சிறப்பைப் பற்றி எடுத்துரைத்தவர்களில் கான்ஸ் கொங்கார் முக்கியமானவராக உள்ளார்.
- மேலும், வெவ்வேறு பொதுநிலை அமைப்புக்களின் அழுத்தங்களும், பணிகளும் இம் மாற்றத்தை ஏற்படுத்துவதில் பெரும் பங்கு வகித்துள்ளனர்.
- முதலாம் வத்திக்கான் பொதுச்சங்கம் முதல் உலக யுத்தம் காரணமாக முழுமையாக நடத்த முடியாமல் இடைநிறுத்தப்பட்டது. முதலாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தில் கலந்துரையாடப்பட முடியாத விடயங்கள் பல இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தில் கலந்துரையாடப்பட்டன. 23ஆம் அருளப்பர் திருத்தந்தை இப் பொதுச்சங்கத்தின் வழியாக திருச்சபையை புதுப்பிக்க விரும்பினார்.
- எந்தவொரு குறிப்பிட்ட மறைக்கோட்பாட்டு உண்மையை வரையறுக்கவோ, தப்பறைகளை கண்டனம் செய்யவோ இப்பொதுச்சங்கம் கூட்டப்படவில்லை.
- இன்றைய உலகோடு உரையாடலில் ஈடுபட்டு திறந்த மனத்தோடு பிற மறைகளையும் பண்பாடுகளையும் அணுகி நீதிக்காக உழைக்கும் மனநிலையை உருவாக்குவதில் இப்பொதுச் சங்கம் திருச்சபைக்கு வழிகாட்டியாக அமைந்தது.
- பிற கிறிஸ்தவ சபைகளோடு உறவு ஏற்படுத்துதல், உலக சமயங்களோடும், எல்லா மக்களோடும், இன்றைய உலகோடும், உரையாடலில் ஈடுபடுதல் போன்ற நோக்கை அடிப்படையாகக் கொண்டது.
- இச்சங்கத்தின் செயற்திட்டம் திருச்சபையின் உள்வாழ்வு பற்றியும் உலகோடு திருச்சபைக்குள்ள உறவு பற்றியும் அமைந்தது.
- திருச்சபையில் குருக்கள், பொதுநிலையினர் நிலைகளுக்கிடையே இருந்த இடைவெளி குறைவடைய நடைமுறைகளை முன்வைக்கின்றது.
- திருச்சபை உலகுக்குப் புறம்பானது எனும் கண்ணோட்டம் மாற்றமடைந்து இறையரசிற்காக திருச்சபை உலகில் பணியாற்றுகிறது எனவும், திருச்சபை மனிதனின் சமூக. பொருளாதார, அரசியல், கலாச்சார மட்டங்களில் அக்கறை கொண்டுள்ளது எனவும் முன்வைத்து திருச்சபைக்கும் உலகுக்கும் இடையே உரையாடல் வலியுறுத்தப்படுகிறது.
- இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் தீர்மானங்களை நான்கு கருப்பொருள்களின் அடிப்படையில் வகுக்கலாம்.
    - கடவுள் : அன்பு நிறை தந்தை (யோவா. 15:13; லூக்கா 5:20; மத். 6:9)
    - மனிதன் : இறைசாயலாகப் படைக்கப்பட்டுள்ளான். (தொ.நூ. 1:26)

- திருச்சபை : உலகில் உயிர்த்த கிறிஸ்துவின் பிரசன்னம் (மத். 28:16-20)
- உலகம் : மனுக்குலம் முழுவதும் ஒரே குடும்பமாக வாழ்தல்.

- (மனித மாண்பு, கிறிஸ்தவ மாண்பு என்ற வேறுபாடு இன்றி, இன்றைய உலகில் நீதி, உண்மை, அபிவிருத்தி என்பன இறைபடைப்பில் காணப்படுகின்றன தொ.நூ.1:31
- இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தைப் பற்றி மக்களின் கருத்துக்களும் வரவேற்பும் ஒரே மாதிரியானதான இருக்கவில்லை.
- எனினும் பலர் திருச்சபையின் ஆசிரியத்துவ அதிகாரத்திற்கு மதிப்பளித்து, கீழ்படிவுடன் ஏற்றுக்கொண்டனர்.
- இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் 16 ஏடுகளை வெளியிட்டுள்ளது. அவற்றை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.
  1. கோட்பாடுகள்
  2. விதித் தொகுப்புகள்
  3. அறிக்கைகள்

**கோட்பாடுகள்**
1. திருவழிபாடு பற்றிய கொள்கை விளக்கம்.
2. திருச்சபை பற்றிய கோட்பாட்டு விளக்கம்.
3. இறை வெளிப்பாடு பற்றிய கோட்பாட்டு விளக்கம்.
4. இன்றைய உலகில் திருச்சபை பற்றிய அருள்பணிக் கோட்பாட்டு விளக்கம்.

**விதித் தொகுப்புகள்**
1. சமூகத் தொடர்புக் கருவிகள் பற்றிய விதித்தொகுப்பு.
2. கத்தோலிக்க கீழைச் சபைகள் ப்ற்றிய விதித்தொகுப்பு.
3. கிறிஸ்தவ ஒன்றிப்புப் பற்றிய விதித் தொகுப்பு.
4. திருச்சபை ஆயர்களின் அருள்பணி பற்றிய விதித் தொகுப்பு.
5. துறவற வாழ்வைப் புதுப்பித்தல் பற்றிய விதித் தொகுப்பு.
6. திருப்பணிப் பயிற்சி பற்றிய விதித் தொகுப்பு.
7. பொதுநிலையினரின் திருத்தூதுப்பணி பறிய விதித்தொகுப்பு.
8. திருச்சபையின் நற்செய்திப்பணி பற்றிய விதித்தொகுப்பு.
9. திருப்பணியாளர்களின் பணியும் வாழ்வும் பற்றிய விதித்தொகுப்பு.

**அறிக்கைகள்**
1. கிறிஸ்தவக் கல்வி பற்றிய அறிக்கை.
2. கிறிஸ்தவமல்லாச் சமயங்களோடு திருச்சபைக்குள்ள உறவு பற்றிய அறிக்கை.
3. சமயச் சுதந்திரம் பற்றிய அறிக்கை.

- சமூக முன்னேற்றம், பண்பாட்டு முன்னேற்றம், குடும்ப வாழ்வு, சமாதானம், ஒருமைப்பாடு போன்ற விடயங்கள் பற்றிய இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்தின் முக்கிய படிப்பிணைகள் ‘‘இன்றைய உலகில் திருச்சபை’’ எனும் தீர்மானத் தொகுப்பில் காணப்படுகின்றன.

**இன்றைய உலகில் திருச்சபை எனும் கோட்பாட்டு விளக்கத்தின் பின்னணியை அறியவேண்டும்.**

- 2ஆம் வத்திக்கான் சங்கம் வெளியிட்ட 16 ஏடுகளிலும் இவ்வேடு பெரியது. பிரேசில் நாட்டைச் சார்ந்த ரியோ டி ஜெனேரோ மறைமாவட்ட துணை ஆயர் ஹெல்டர் கமரா இந்நிலையில் ஓர் முற்போக்கு கருத்தை முன்வைத்தார். பரந்த உலகை வாட்டி

வதைக்கும் முக்கிய பிரச்சினைகளாகிய வறுமை, சமனற்ற பொருட்பங்கீடு போன்றவற்றை ஆராய்ந்து தீர்வு காண்பது திருச்சபையின் இன்றைய தேவையென வலியுத்தினார். நீண்ட பல விவாதங்களுக்குப் பிறகு, பல அமர்களுக்குப் பிறகு இவ்வெளியீடு உருவாக்கப்பட்டது.

- **புதிய அணுகு முறை** இன்றைய உலகில் திருச்சபை என்ற இக்கொள்கைத் திரட்டானது சமூக வாழ்க்கை பற்றிய திருச்சபையின் புதிய அணுகுமுறையை அறிமுகப்படுத்துகின்றது. மனித குலத்தின் எல்லா பிரிவினரையும் அழைத்துப் பேசுவதும் அவர்களோடு உரையாடலில் ஈடுபட்டு ஒத்துழைப்பை வளர்ப்பதும் முக்கியம் என்பதை வலியுறுத்துகின்றது.
- இங்கே உலக நிலமையை அலசிப் பார்க்கின்றது. மனித மாண்புக்கும் மனிதனை ஆட்டிப் படைக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் வேதாகமத்தின் அடிப்படையில் தீர்வு காண முற்படுகின்றது. கிறிஸ்துவை மையமாகக் கொண்டு மனிதனை வாட்டும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயல்கிறது.

## 10.1.2 சமூக முன்னேற்றம்

- சமூக முன்னேற்றம் பற்றிய படிப்பினைகள் அடங்கிய இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் வெளியீடு எது எனக் கேட்டு ''இன்றைய உலகில் திருச்சபை'' என்ற கொள்கை விளக்கத்தைப் பற்றி சுருக்கமாக விளக்குதல்.
- இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்க ஏட்டில் சமூக முன்னேற்றத்திற்கான படிப்பினை பற்றிய கருத்துக்களை வெளிகொணர்தல்.
- மனிதன் சமூக பெருளாதார வாழ்வின் மையமும் குறிக்கோளுமாயிருக்கிறான்.
- தொழில் துறை, கைத்தொழில் முன்னேற்றம் அனைத்தும் மனித இனத்தின் நன்மைக்காக பயன்படுத்த வேண்டும்.
- இங்கு மனிதனில் உடல், உள, ஆன்மீக தேவைகளைக் கருத்திற் கொள்ள வேண்டும்.
- ஒவ்வொருவரும் தமக்கு உரிமைகள், கடமைகள் உண்டு தாம் எனவும், அதனை நாட்டை ஆள்வோர் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும், அதனை பொது ஒன்றிய வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் நினைவிற்கொள்ள வேண்டும்.
- தொழிலாளரின் வேதனம், வேலை செய்வதற்கான நிபந்தனை பற்றி நேர்மையான தீர்மானம் எடுக்கின்ற அதே வேளை அவகளுக்கு நட்டம் ஏற்படும் வகையில் மாற்றங்கள் ஏற்படக்கூடாது.
- மனித வேலை, கைத்தொழில் ஆகியவற்றை மதிப்பான, மேன்மையான நிலைக்கு உயர்த்தியவர் இயேசு ஆவார்.
- தொழிலாளர் அவரது மீட்பு பணியில் இணைகின்றனர் என்பதை நாம் விசுவசிக்க வேண்டும்.
- தொழிலாளர் தாம் புரியும் தொழிலின் மூலம் தமது திறமை, தமது பிரத்தியோக முன்னேற்றத்தை வளர்த்துக்கொள்ள சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்.
- அனைத்து தொழிலாளரும் தமது பணித்தளத்தின் நிர்வாக பணிகளில் செயற்பாட்டுடன் பங்கு கொள்ள வேண்டும்.
- அந்த பங்கு கொள்ளல் தனிப்பட்ட ரீதியில் அல்லது தமது சுய விருப்பத்தின் அடிப்படையில் நடைபெற வேண்டும்.
- தொழிலாளர் சங்கங்களை நிறுவும் உரிமை அனைத்து மனிதரினதும் அடிப்படை உரிமைகளில் ஒன்று என்பதை கருத்திற்கொள்ள வேண்டும்.
- இன்றைய உலகில் தொழிலாளர் தமது உரிமைகளையும் தேவைகளையும் பெற்றுக்கொள்வதற்கு வேலை நிறுத்தம் செய்வதை இறுதி ஆயுதமாக கருத்திற் கொள்ள வேண்டும்.
- ஆயினும் அந்த தீர்மானம் எடுக்கு முன் இருசாராரும் நேர்மையான உள்ளத்துடன் முதலில் கலந்துரையாட வேண்டும் எனவும் சமாதானமாக ஒரு தீர்மானத்திகு வர முடியாத பட்சத்தில் அந்த தீர்மானத்தை எடுக்கலாம்.

- தமக்கும் தமது குடும்பத்திற்கும் தேவையான அளவிற்கு இவ்வுலக உடைமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உரிமை உண்டு.
- இறைவனின் சித்தப்படி இவ்வுலகின் அனைத்து பொருட்களும் அனைத்து மனிதரினதும் தேவைகளுக்காகப் படைக்கப்பட்டுள்ளன.
- உடைமைகளைப் பங்கிடும் தற்போது வாழ்வோருக்கும் எதிர்காலத்தில் வாழ இருப்போருக்குமாக அவை பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.
- உரிமையும் பௌதீக பொருட்களும் ஒருவருக்குச் சொந்தமான எதுவும் ஒருவரின் சுதந்திரத்தை வெளிப்படுத்தும் சந்தர்ப்பம்.
- கிறிஸ்தவர்கள் இன்றைய சமூக பொருளாதார அபிவிருத்திப் பணிகளில் செயற்பாட்டுடன் பங்கு கொண்டு நீதிக்காகவும் அன்புக்காகவும் போராடி மனித அபிவிருத்திக்கும் உலக அமைதிக்கும் துணை புரிகிறார்கள்.
- உண்மையான மனித அரசியல் வாழ்வைக் கட்டியெழுப்புவதாயின் நீதி, இரக்கம், பொது நன்மைக்காக பணிபுரியும் உணர்வு இருக்க வேண்டும்.
- தமது ஆட்சியாளர்களை நியமிப்பதற்கும் எத்தகைய ஆட்சி முறை தமது நாட்டில் இருக்க வேண்டும் எனவும் தீர்மானிப்பதற்கும் நாட்டு மக்கள் அனைவருக்கும் முழு சுதந்திரம் உண்டு.
- அனைத்து கிறிஸ்தவர்களும் தமது கடமைகளை நிறைவேற்றுவதில் உறுதியான முன்மாதிரிகையாகத் திகழ வேண்டும். சமூகத்தின் பொது நன்மைக்காக தமது பணியை நிறைவேற்ற வேண்டும்.
- திருச்சபையானது அரசியல் கட்சிகளுடனோ அல்லது லௌகீக ஒன்றியத்துடனோ தொடர்பற்றது.
- இறைவனின் மகிமைக்காகவும் மனிதரிடையே அமைதியை வலுவடையச் செய்வதற்காகவும் மனித சமூகத்தின் மகிழ்ச்சியையும் நன்மையானவற்றையும் வெளிப்படுத்தவும் பக்தியுடன் பாதுகாத்து மேன்மையான நிலைக்கு உயர்த்துதல் ஆகியன திருச்சபையின் பணிகளாகும்.
- மதம் அரசியலையும் கடந்து செல்வது மட்டுமன்றி இவ்வுலகிற்கு கட்டுப்பட்டதுமல்ல.
- பொருளாதார முன்னேற்றம் மனிதனது சேவை எனவும் பொருளாதார முன்னேற்றம் மனிதனது அதிகாரத்தின் கீழ் நடை பெறுகிறது எனவும் விளக்குவர்.
- படைக்கப்பட்டுள்ள அனைத்தும் எல்லா மனிதருக்காக எனவும் நீதியை அடிப்படையாகக் கொண்டு அவற்றை நேர்மையாக அவர்களிடையே பகிர்ந்தளிக்க வேண்டும் எனவும் வெளிப்படுத்துவர்.
- அனைத்து கிறிஸ்தவர்களும் தமது கடமைகளையும் பொறுப்புகளையும் சரியாக நிறைவேற்ற வேண்டுமெனவும் ஏற்றுக்கொள்வர்.
- அரசியல் சமூகங்களிடையே திருச்சபையின் பணிக்கான உதாரணங்களை முன்வைப்பவர்.
- அரசியல் பற்றி திருச்சபையின் கொள்கைகளை அட்டவணைப்படுத்துவர்.

### 10.1.3 பண்பாட்டை முன்னேற்றுவது தொடர்பான படிப்பினை

- மனிதன் இவ்வுலகில் முழு நிறைவையும் பெறமுடியாது. திருமுழுக்கினால் ஆரம்பிக்கப்படும் அருளடையாள வாழ்வை பண்பாடு இயற்கை வளங்களை பயன்படுத்தி முன்னோக்கி செல்லல் வேண்டும்.
- மனித பண்பாடு, வரலாறு, சமூகம் சார்ந்த அம்சங்களுடன் இணைந்து வளரும் பண்பைத் தன்னிலே கொண்டுள்ளது.
- சமூகம், மக்கள் அமைப்புக்களைப் பற்றி பேசும்போது பல்வேறுபட்ட பண்பாடுகளைப் பற்றியும் பேசலாம்.
- தற்போது மனித வரலாற்றிலே புதிய யுகம் உதயமாக காரணமாய் இருப்பது மனிதன் சிந்திப்பதில், செயற்படுவதில் ஒய்வெடுப்பதில் மாற்றம் ஏற்பட்டதேயாகும்.
- சிறிது சிறிதாக அனைத்துலகத் தன்மை கொண்ட பொதுவான மனித பண்பாடு ஒன்று உருவாகிறது.

- புதிய மனித நலக் கொள்கையின்படி மனிதன் தன் சகோதரர்களிடமும் வரலாற்றுடனும் கொண்டுள்ள பொறுப்பிலிருந்து தான் அறியப்படுவான்.
- பண்பாடு என்ற சொல்லுக்கு பற்பல கருத்துக்களை முன்வைத்தாலும் அதை விளக்குவது மிகவும் கடினமானது.
- கிறிஸ்தவக் கட்டளைப்படி ஒவ்வொருவரும் தனது சகோதர சகோதரிக்களுக்கு உதவ வேண்டும்.
- இறைவன் மனுவுரு எடுத்த தனது மகனின் வழியாகவும் பல்வேறு பண்பாடுகள் வழியாகவும் பல்வேறு காலங்களுடன் தொடர்புள்ள மக்கள் வழியாகவும் பேசினார்.
- நற்பழக்கவழக்கங்கள், பொது நன்மை வழியாக மக்கள் உண்மையைத் தேடவும் தங்கள் கருத்துக்களை வெளியிடவும், அவற்றை பிரசித்திப்படுத்தவும், தாங்கள் விரும்பிய கலையை வளர்க்கவும் அவர்களுக்கு சுதந்திரம் இருக்க வேண்டும்.• எல்லாக் கிறிஸ்தவர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய உண்மையாவது : அனைத்து மக்களினதும் தனிப்பட்ட கௌரவத்திற்கு ஏற்ற மனிதாபிமானமுள்ள மனித பண்பாட்டிற்கு அவர்களுக்கும் உரிமை உண்டு என்பதை ஏற்றுக்கொண்டு அவற்றை செயற்படுத்துவது மூலம் ஆண், பெண், சாதி, சமயம், சமூக ஏற்றத்தாழ்வு போன்றவைகளுக்கேற்ப எவ்வித வேறுபாடும் ஏற்படக்கூடாது.
- உலகைப் படைத்த இறைவனின் திட்டப்படி அறிவு, குறிக்கோள், மனச்சான்று, சகோதரத்துவம் என்பவற்றின் விழுமியங்கள் கிறிஸ்துவில் விசேட விதமாக புதுபிக்கப்பட்டு உயர்நிலைக்கு உயர்த்தப்பட்டது.
- பொதுநிலையினர் துறவறத்தினர் அனைத்து கிறிஸ்தவர்களுக்கு வியக்கவும், உள்ளுர அறியவும், ஆழ்ந்து சிந்திக்கவும் நீதியும் நேர்மையான சுதந்திரமும் விசேடமாக தமது கருத்துக்களை தாழ்மையுடனும் பயமில்லாமலும் முன்வைக்க சுதந்திரம் இருக்க வேண்டும்.

### 10.1.4 குடும்ப வாழ்வு

- நல்ல திருமணம், குடும்ப வாழ்க்கை வழியாக ஒவ்வொருவரும் மனித சமூகத்தில் நன்மையை உருவாக்கலாம்.
- இறைவனே திருமண வாழ்வை நிறுவியவர்.
- திருச்சபையில் திருமணம் எனும் அருளடையாளம் வழியாக கிறிஸ்தவ குடும்பங்கள் உருவாகுகின்றன.
- கிறிஸ்து கிறிஸ்தவ திருமணத்தின் ஒருமையையும் கட்டவிழாமையையும் வலியுறுத்தினார். விவாகரத்தைப் பற்றிய படிப்பினைகளை முன்வைக்கிறார். (மத்.19:1-12)
- இறைவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்க வேண்டும்.
- திருமண அன்பின் வழியாக தமது திருமண உறவை ஊட்டம் பெறச் செய்து வளர்ச்சி பெறச் செய்ய வேண்டும்.
- இந்த அன்பு திருமணத்தில் இணையும் அனைத்து தம்பதிகளினதும் நன்மைக்கு உதவும்.
- திருமணத்தினால் கணவன் மனைவியிடையே ஏற்படும் அனைத்து செயற்பாடுகளும் மேன்மையும் முக்கியமுமானதுமாகும்.
- திருமணத்தில் ஒருமைப்பாடு ஏற்படுவது, சம அளிவிலான தனித்துவமும் மேன்மையும் கணவன் மனைவியில் தங்கியிருக்கிறது.
- திருமண அன்பு இயல்பிலேயே பிள்ளைபேற்றை நோக்காகக் கொண்டுள்ளது.
- திருமணத்தின் உயர்ந்த கொடை பிள்ளைகள். அவர்கள் பெற்றோரின் நன்மைக்கு துணை புரிவார்கள்.
- பெற்றோரின் முக்கிய கடமை இவ்வுலகில் பிள்ளைகளைப் பெறுவதும், அவர்களுக்கு

நல் கல்வியை அளிப்பதுமாகும்.

- திருச்சபையின் இன்றைய படிப்பினையின்படி திருமணத்தில் 3 முக்கிய குறிக்கோள்கள் உள்ளன. அவை மூன்றும் ஒன்றுக்கொன்று சரிசமனாக இறைவன் முன்னிலையில் முக்கியத்துவம் வாய்ந்தவை.

  அவை :

  1. இருவருக்குமிடையே திருமண அன்பு.
  2. பிள்ளைகளைப் பெற்றல்.
  3. அவர்களுக்கு நல் கல்வியளித்தல்.

- மனித வாழ்வும் இவ்வுலகில் பிள்ளைகளைப் பெறுதலுமாகிய உண்மை இவ்வுலகுக்கு மட்டுமன்றி திருமணத்தின் ''தூய்மை நிலை'' யை எப்போதும் காத்துக் கொள்வதற்குத் திருச்சபை கட்டுப்பட்டுள்ளது.
- அதனால் செயற்கை குடும்ப கட்டுப்பாடு முறைகளையும் இயற்கை நியதியின் சட்ட திட்டங்களுக்கு எதிரான அனைத்து செயற்பாடுகளையும் திருச்சபை கண்டிக்கிறது.
- திருமணத்தின், குடும்பத்தின் நன் நிலையை வளர்ச்சியுறச் செய்வதற்கு அனைவரும் முயற்சிக்க வேண்டும்.
- குடும்பம் சமூகத்தின் அடித்தளமாய் அமைவதால் குடும்பத்தில் உள்ளன்பு கிடைக்காத பிள்ளைகளுக்கு தூர நோக்கு சட்டம், வேறு வழிகள் மூலமாக தேவையான பாதுகாப்பும் உதவியும் கிடைக்க வேண்டும்.
- உயிருள்ள இறைவனுக்கு சமமாக படைக்கப்பட்ட மனிதரின் மதிப்பை அனுபவிக்கின்ற கணவன் மனைவி நெருங்கிய அன்பிலும் ஒருமைப்பாட்டிலும் தூய்மையடைய வேண்டிய ஒரே ஆசையினால் ஒன்றுபட வேண்டும்.
- இவ்வாறு அவர்கள் வாழ்வின் ஊற்றாகிய கிறிஸ்துவை பின்பற்றுகின்ற அதே வேளையில் திருமணமானோர் தமது வாழ்வை மகிழ்ச்சியினாலும் தன்னையே தியாகம் செய்வதினாலும் பிரமாணிக்கமுள்ள அன்பினாலும் இயேசு தனது மரணம் உயிர்ப்பு வழியாக உலகுக்கு வெளிப்படுத்திய அன்பின் மறைபொருளுக்கு சான்று பகர்கின்றார்கள்.

### 10.1.5 அமைதியும் ஒற்றுமை வாழ்வும்

- கிறிஸ்தவர்கள் அனைவரும் இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் அழைப்பிற்கேற்ப அமைதியின் உண்மையையும் மேன்மையையும் விளக்கி, யுத்தத்தின் பயங்கரத்தன்மையையும் பிழையையும் எடுத்துரைத்து, நீதியிலும், அன்பிலும் கட்டியெழுப்பப்படும் அமைதிக்காக தமது ஆசிரியர் கிறிஸ்துவின் துணையுடன் முன் செல்லவேண்டும்.
- ஆண்டவராகிய கிறிஸ்துவினால் சமூகத்திற்கு கொடுக்கப்பட்ட நற்போதனைகளை தனியாத தாகத்துடனும் ஒற்றுமையுடனும் மக்கள் நடைமுறைபடுத்தும் போது உண்மையான அமைதி ஏற்படுகிறது.
- இவ்வுலகில் எந்த நாட்டிற்கும் தமது நாட்டைப் பாதுகாப்பதற்காகவும் முறையற்ற ஆக்கிரமிப்பிற்கான யுத்தத்திகும் எதிராக போராட முடியும்.
- போர் என்பது ஆயுதங்களினால் நடைபெறுவது மட்டுமல்ல; அதனால் ஏற்படும் பசி பட்டினி, நோய் போன்ற பலவிதமான விளைவுகளையும் சிந்திக்க வேண்டும்.
- நாடுகளிடையே ஏற்படும் பிணக்குகளை புரிந்துகொள்ள மனிதனின் மேன்மையான நிலையை எண்ணி, கலந்துரையாடலின் மூலம் பிரச்சனைகளை தீர்க்க முடியுமாயின் மனிதரை அடிமைப்படுத்தும் யுத்தத்தை வெற்றி கொள்ள முடியும்.
- சர்வதேச விருப்பத்திற்கேற்ப யுத்தத்தை முழுமையாக தடைசெய்யும் காலத்தை ஆயத்தப்படுத்த உற்சாகத்துடன் செயற்படுத்துவது எமது கடமையாகும்.
- அமைதியும், ஆயுதக்களைவும் தொடர்பான பிரச்சனைகளை ஆழமாக ஆராய்ந்து பரிசீலனை செய்யப்பட்டாலும் சர்வதேச ஒன்றுகூடலின்போது இப்பிரச்சனையால் ஏற்பட்டுள்ள விளைவுகளை முதலில் கலந்துரையாடி எதிர்காலத்தில் பயனுள்ள நல்ல

பெறபெறுகளை பெற்றுக்கொள்ளும் நோக்குடன் முன்னையதை விட இக்கலந்துரையாடலில் சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

- மனிதர் மற்றவர்களின் முயற்சியில் தங்கியிராது இக்காரணம் தொடர்பாக தனது சிந்தனைகளை கருத்திற் கொள்ள வேண்டும் எனவும் தமது நாட்டின் நன்மைக்காக பொறுப்புடனும், பொது நன்மைக்காகவும் சேவை செய்ய கடமைபட்டிருக்கும் அரச அதிகாரிகள் பெரும்பாலும் பொதுமக்களின் சிந்தனைகளுக்கம், உணர்வுகளுக்கும் ஏற்றவகையில் செயற்பட வேண்டும்.
- அமைதியை ஏற்படுத்துவதற்கு முதலில் மனிதரிடையே அமைதியைக் குலைக்கும் காரணிகளை அகற்ற செயற்பட வேண்டும்.
- மனிதரிடையே பொறாமை, ஒருவருக்கொருவர் விசுவாசமின்மை, அகங்காரம் மேலும் சுயநலம், பேராசை ஆகியன இதற்கான காரணங்களாகும்.
- சர்வதேச நிறுவனங்கள் வழியாக இன்றைய காலகட்டத்தின் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளவும், முழு உலகினதும் முன்னேற்றத்திற்காக உழைக்கவும் யுத்தத்தை தவிர்ப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்.
- எந்தவொரு இனத்தினதும் அபிவிருத்தி தங்கியிருப்பது மனிதன், பணம் என்பவற்றின் உதவியுடனும் அதே போன்ற கல்வி, தொழிற்பயிற்சி மூலமாகவும் ஆகும்.
- எல்லா இன பிரஜைகளும் சமூக பொருளாதார ரீதியில் பதவிவகிக்க ஆயத்தம் செய்யப்பட வேண்டிய அதே வேளையில் இந்த உதவியை பெறும் தனித்திறமை பெற்றோர் அகங்காரம் கொள்ளாது உதவி செய்வோருடன் ஒத்துழைப்புடன் செயற்பட முன்வர வேண்டும்.
- இறைவனின் விருப்பப்படி குடும்பக்கட்டுப்பாடு ஒழுக்கநெறிக்கு முரணில்லாதவாறு இருக்க வேண்டும். இன்று அநேகமான நிறுவனங்கள் குடும்பங்களை அழிப்பதற்காகவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- உதவிப்பணம் சேகரித்தல், பகிர்ந்தளித்தல் ஆகியன மாற்றமுறாமல் ஒரே விதமாக நடைபெறாவிட்டாலும் இந்த சேகரித்தலும் பகிர்ந்தலித்தலும் மறைமாவட்டத்தில், நாட்டில், முழு உலகில் முறையாக தயாரிக்கப்பட்ட செய்திட்டத்தினால் நடைமுறைபடுத்த முடியும்.
- மக்களிடையே பெருந்தொகையானோர் பலம்படைத்தவர்களினால் துன்பங்களுக்கு ஆளாக்கப்படுவதனால் ஏழைகளுக்கு நீதியும் கிறிஸ்துவின் அன்பும் கிடைக்க உலக திருச்சபை காலத்திற்கேற்ப விசேட சங்கம் ஒன்றை உருவாக்கி அச்சங்கம் பின்தங்கிய பிரதேசங்களில் அபிவிருத்தியையும் மக்களிடையே சமாதானத்தையும் ஏற்படுத்த செயற்பட வேண்டும்.

## உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு

1. இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் கூடுவதற்கான அடிப்படைக் காரணிகளை மாணவர்களோடு கலந்துரையாடுங்கள்.
2. இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் தீமானங்கள் பற்றி கலந்துரையாடலை நடாத்துங்கள்.
3. இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் வழியாக முன்வைக்கப்பட்ட 16 ஏடுகளைப் பற்றி விளக்குங்கள்.
4. இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் சமூக முன்னேற்றம் தொடர்பான படிப்பினைகளை விளக்குவர்.
5. பண்பாட்டை கட்டியெழுப்புவது பற்றிய படிப்பினைகளை கலந்துரையாடுங்கள்.
6. குடும்ப வாழ்வு பற்றிய படிப்பினைகளை மாணவர்களோடு கலந்துரையாடுங்கள்.

**உசாத்துணை நூல்**

- வ. பவுல் லியோன் (பதி. ஆசி), இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள், தேடல் வெளியீடு திருச்சிராப்பள்ளி, 2001 பப VII - XXII, பப 629 - 637
- ச. தே. செல்வராசு, புத்துலகம் படைக்கவே : திரு அவையின் சமுதாயச் சிந்தனைகள், வைகறை, திண்டுக்கல், 2006, பப 15 - 67
- பிலிப்ஸ் இ. யேசுதாசன், இன்றைய உலகில் திருச்சபை, கிறிஸ்தவம் க.பொ.த உயர்தரம்

**தேர்ச்சி** **10.0 :** புதிய உலக நாகரீகமொன்றை உருவாக்கும் திருச்சபையின் முயற்சியில் ஈடுபட்டு ஆசியாவினதும் இலங்கையினதும் சமுதாயத்திற்காக திருச்சபையின் கடமைகளில் பங்கு கொள்வர்.

**தேர்ச்சி மட்டம்** **10.2 :** கிறிஸ்தவ சபைத் தலைவர்களின் சமுதாய, பண்பாட்டு முன்னேற்றம் தொடர்பான படிப்பினைகளையும் வழிகாட்டல்களையும் கிறிஸ்தவ வாழ்க்கையுடன் இணைத்துக் கொள்வர்.

**பாடவேளைகள்** **:** 14

**கற்றல் பேறுகள்** **:**

- ஆசிய ஆயர் மன்றம், உலக கிறிஸ்தவ சம்மேளனம், ஆசிய கிறிஸ்தவ சம்மேளனம் ஆகியவற்றின் அமைப்பு முறைகளைத் தேடி அறிந்து கொள்வர்.
- ஆசிய ஆயர் மன்றம், உலக கிறிஸ்தவ சம்மேளனம், ஆசிய கிறிஸ்தவ சம்மேளனம் ஆகியவற்றின் வெளியீடுகளைச் சேகரித்து அவற்றின் செய்திகளைப் பகிர்ந்து கொள்வர்.

## விடய உள்ளடக்க வழிகாட்டி

### 10.2.1 ஆசிய ஆயர்கள் மன்றத்தின் தோற்றம்

- 1970 நவம்பர் மாதத்தில் திருத்தந்தை ஆறாம் சின்னப்பரை சந்திக்க மணிலா நகரில் ஒன்று கூடும் வாய்ப்பு ஆசிய ஆயர்களுக்கு கிடைத்தது. இவ்வொன்றுகூடலில் 180 ஆசிய ஆயர்கள் கலந்து கொண்டனர். இவ்வொன்றுகூடலில் ஆசிய ஆயர்கள் மன்றத்தின் கூட்டமைப்பு (ABM) உருவாக்கப்பட்டது. ஆசிய திருச்சபையினை அடையாளப்படுத்தும் ஓர் தோற்றமாக இக்கூட்டமைப்பு அமைந்தது.
- ஆசிய ஆயர்கள் கூட்டமைப்பில் (ABM) ஆசிய ஆயர்கள் தம் மேய்ப்புப்பணி அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். ஆசிய திருச்சபையில் பொதுவாக காணப்படும் பிரச்சினைகளை இனம் கண்டு அடையாளப்படுத்தினர். ஆசிய மக்களை இணைக்கும் மக்கள் மத்தியில் தொடர்பை வளர்க்கவும், பாரம்பரிய இணைப்புக்களையும், கலாசார தாக்கங்கள் பற்றிய விழிப்புணர்வையும் பகிர்ந்து கொண்டனர். **ஆசியத் திருச்சபை ஓர் இறைமக்கள் சமூகமாக,** ஆசிய பல்சமய சமூகங்கள் மத்தியில் உறவை உண்டாக்கி அவ்வுறவு ஏனைய சமூகங்களுடன் உறவைப்பேணும் விதத்தினை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை இவர்கள் உணர்ந்தார்கள்.
- இதன் விளைவாக 1971 மார்ச் மாதத்தில் ஆசிய ஆயர்கள் பேரவை நிறுவுவதற்கான கலந்துரையாடல் Hong Kong இல் இடம் பெற்றது. ஆசிய ஆயர் பேரவையில் இயல்பு நோக்கு செயற்திட்டம், வரையறைகள் பற்றிய ஆலோசனைகள் கலந்துரையாடப்பட்டன. 1972 நவம்பர் மாதத்தில் ஆசிய ஆயர்கள் பேரவை (FABC) அதிகார பூர்வமாக வத்திக்கானில் திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்டு ஏற்கப்பட்டது. ஆசிய ஆயர்களின் கூட்டமைப்பில் (ABM) வளர்ந்த இறைவாக்கினர் தன்மைகள் கொண்ட தூர நோக்கும் ஆயர்களின் ஒருமித்த ஒரே மனப்பாங்கும் ஆசிய ஆயர் பேரவை (FABC) யின் தோற்றத்திற்கு வித்திட்டது எனலாம்.

### 10.2.1.2 ஆசிய ஆயர் பேரவையின் அமைப்பும் செயல்பாங்கும்

- ஆசிய ஆயர் பேரவையின் சட்டக்கோப்பின்படி ஆசிய ஆயர் பேரவையானது ஓர் தன்னார்வ அமைப்பாகும். இவ்வமைப்பில் ஆசியாவின் தெற்கு, தென்கிழக்கு, கிழக்கு, மத்திய ஆசிய நாடுகளின் மறைமாவட்டங்களின் ஆயர் பேரவை உறுப்பினர்கள் அங்கம் வகிக்கிறார்கள். எனவே ஆசியாவின் 15 நாடுகளின் ஆயர்கள் இதில் இடம் பெறுகின்றனர்.

  **தெற்காசிய நாடுகள் :**

  இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களதேஷ்

  **தென்கிழக்காசிய நாடுகள் :**

  மியன்மார், தாய்லாந்து, கம்போடியா - லாவோஸ், வியட்னாம், பிலிப்பின்ஸ், இந்தோனேஷியா, மலேசியா - சிங்கபூர் - புருனாய்.

  **கிழக்காசிய நாடுகள் :**

  ஜப்பான், தென் கொரியா, தாய்வான்.

  **மத்திய ஆசிய நாடுகள் :**

  கசகஸ்தான்

- மேலும் பின்வரும் நாடுகளின் ஆயர் பேரவைகளின் பிரதிநிதிகள் இணை உறுப்பினராக இடம் பெறுகின்றனர். ஹொங்கொங் (Hong Kong) கிறிகிஸ்தான் (Krykstan) மக்காவு (Macau), மொங்கோலியா (Mongolia), நேப்பாள் (Nepal) சைபோரியா (Siberia) தஜிகிஸ்தான் (Thajikistan) டேக்மெனிஸ்தான் (Turkmenistan), உஸ்பெஸ்கிஸ்டான் (Uzbaskistan), கிழக்கு தீமோர் (East Timor) இடம் பெறுகின்றனர்.
- ஆசிய ஆயர் பேரவை பின்வரும் செயற்படி முறைப்பாங்கைக் கொண்டுள்ளது: அதி உயர் நிர்வாக அமைப்பாக ஆசிய ஆயர் பேரவை பொது அமர்வு (Planary Assembly), மத்திய செயற்குழு (Central Commitee), நிர்வாக குழுக்கள் (Standing Commitee) மத்திய செயலாளர் அகம் (Central Secretrariat), ஆயர் பேரவை நிர்வாக அகங்கள் (Offices), துணைசெயற்குழுக்கள் (Commission).

### 10.2.1.3 ஆசிய ஆயர் பேரவை நிர்வாக அமைப்புக்கள் (Officers)

- The Office of Human Development (OHD) மத்திய மேம்பாட்டு வளர்ச்சியகம்
- The Office of Eccumenical & Interrcligious (OEIA) கிறிஸ்தவ ஒன்றிப்பு பல்சமய உரையாடல் அகம்
- The Office of Evange lization (OE) நற்செய்தி அறிவிப்பு பணியகம்.
- The Office of Education & Student Chaplaincy (OSC) கல்வி மாணவர் ஒன்றியம்.
- The Office of Laity (OL) பொதுநிலையினரகம்
- The Office of Priestly Formation (OPF) குருத்துவப் பயிற்சி
- The Office of Cousecrated Life (OCL) அர்ப்பண வாழ்வு பணியகம்.

### 10.2.1.4 ஆசிய ஆயர் பேரவையின் நோக்கம்

- ஆசிய ஆயர் பேரவை ஓர் தன்னார்வ அமைப்பாக தன் உறுப்பினர் மத்தியில் ஒருமைப்பாட்டையும் ஒன்றிப்பையும் பேணிவளர்ப்பதுடன் கூட்டுப் பொறுப்புணர்வை அங்கத்தவரிடம் ஊக்குவித்து ஆசிய திருச்சபையின் ஆசிய சமூகங்களின் மேம்பாட்டிற்காகவும் நலனுக்காகவும் செயல்படும் தனித்துவமான நோக்கைக் கொண்டுள்ளது.
- இந்நோக்கை அடைவதற்கு உறுப்பினரிடையே தொடர்பாடலை ஊக்குவிக்கின்றது. கூட்டுறவு செயற்றிட்டங்களில் ஈடுபாடு கொள்ளச் செய்கின்றது. பொதுவான பிரச்சினைகள் செயல்திட்டங்கள் பற்றி கலந்துரையாடவும், ஆராயவும் அறிவுறுத்துகின்றது. அங்கத்துவ நாடுகளின் ஆயர்கள் பேரவை உறுப்பினர்களிடையேயும் பல்சமய தலைவர்கள்

மத்தியிலும் சமூகத்தின் நலனை நாடும் நல்மனம் கொண்டவர் மத்தியிலும் இச் செயற்பாட்டுப் பாங்கை செயல்படுத்தி தன் நோக்கை அடைய ஆசிய ஆயர் பேரவை முயல்கின்றது.

- ஆசிய ஆயர் பேரவை ஒவ்வொரு ஆயரின் தனித்துவத்தையும் சுதந்திரத்தையும் மதிக்கிறது. அது போல் ஆசிய நாடுகளின் தனித்துவம் சுதந்திரத்தையும் மதித்து செயல்படும் ஓர் தன்னார்வ அமைப்பாகும்.

## 10.2.1.5 ஆசிய ஆயர் பேரவையின் வெளியீடுகள் (2006-2006)

### 10.2.1.5.1 சமூக வாழ்வின் ஊடாக விசுவாசத்தை கட்டியெழுப்புதல்

- உலகமயமாக்குதலும் அதன் விளைவுகளும் இன்று மனிதனை பல்வேறுபட்டவிதத்தில் சிந்திக்கவும் தூண்டவும் செய்கின்றது.
- ஆசிய சூழமைவில் திருச்சபையில் விசுவாசத்தின் வழியாக மக்களின் வாழ்வைக் கட்டியெழுப்பும் பணியில் ஈடுபடவேண்டும். ஆசிய பல்வேறுபட்ட சமயங்களையும் கலாசாரப் பண்பாடுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இதனால் ஆசிய ஆயர் பேரவை ஏனைய மதத்தினருடனான உரையாடலை தொடர்ந்தும் நடத்துவதன் வழியாக மக்களின் சமூக வாழ்வு கட்டியெழுப்பப்படுவதுடன் அவர்களின் விசுவாசமும் கட்டியெழுப்பப்படும் என்பதை நம்புகின்றது.
- இன்றைய உலகில் விரைவாகப் பரவிவரும் உலகமயமாக்குதலால் மக்கள் பிரச்சினைகளுக்கும் போர்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இத்தகைய சூழ்நிலையில் மக்களின் வாழ்க்கை முறையைக்கட்டியெழுப்ப வேண்டியது ஆசிய திருச்சபை இன்று எதிர்நோக்கும் பிரச்சினையாக உள்ளது. மக்களுக்காக திருச்சபை தன்னுடைய பங்களிப்பை செய்ய வேண்டியுள்ளது. அவர்களுக்காக குரல்கொடுக்க வேண்டியுள்ளது.
- இதையே இரண்டாம் அருள் சின்னப்பர் பல்சமய உரையாடலை தொடர்ந்தும் செய்யவும் இது எமக்கு ஒரு சவாலாகவும் உள்ளது என்பதை கூறியிருக்கின்றார்.
- மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதன் வழியாக சமாதானம் நோக்கிய பயணம் பயனுள்ளதாகவும் நீதியும் சமத்துவமும் உள்ள ஒரு சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியும் என்பதை ஆசிய ஆயர் மன்றம் நம்புகின்றது. இறைவனில் நாம் கொண்டுள்ள விசுவாசம் அவர்களை விடுதலை அளிக்கவும். மனிதத்துவத்தை மதித்து நடக்கவும் மக்களை வழிநடத்த வேண்டியதும் கத்தோலிக்க திருச்சபையின் பாரிய கடமையும் பொறுப்புமாக உள்ளது. பல்சமயங்களுடன் உறவை வளர்ப்பதன் வழியாக அனைவரும் ஒற்றுமையாகவும் சகோதர சகோதரிகளாக வாழ்வும் வழி வகுக்கும்.

### 10.2.1.5.2 பண்பாட்டு வளங்கள்

- மக்கள் தொடர்புகள், மக்கள் சமூகங்கள் இயற்கையோடு ஒட்டிய வாழ்க்கை, மக்களின் நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் பண்பாட்டிற்குள் அடங்கும். பண்பாடு என்பது மக்களின் இயல்பாக இருத்தல் பாங்காகும்.
- பண்பாடு மனித வாழ்வில் பல மதிப்பீடுகளை உள்ளடக்கியுள்ளது. மனிதம், மனிதவாழ்வு மனித அடிப்படை உரிமைகள் அடிப்படை விழுமியங்களாகும். ஆசிய சூழமைவிற்கேற்ப பண்பாட்டு வளங்களை பயன்படுத்துதல் முக்கியமானதாகக் காணப்படுகின்றது. இக்கையேட்டில் ஆசிய சூழமைவு ஆராயப்படுகின்றது. கலாசாரப் பண்புகள் மக்களின் வாழ்க்கை முறையோடு பிண்ணிப் பிணைந்த ஒன்றாக இருக்கின்றது. ஆசிய மக்கள் தமது வளங்களைப் பயன்படுத்துவதிலும் அதை ஆசிய சூழலுக்கேற்ப தம் வாழ்க்கை முறையை மாற்றியமைத்துக் கொள்வதும் நிறைவாகக் காணப்படுகின்றது.

- இறைவனின் பிரசன்னமும் இயற்கையினூடாக தம்மை வெளிப்படுத்தும் இறைவனை அவர்கள் இனம்கண்டு தமது வாழ்க்கை முறை இசைவாக்கிக் கொள்கின்றவை ஆசிய மக்களின் வாழ்க்கை இயற்கையோடு ஒத்த ஒன்றாக காணப்படுவதுடன் இயற்கையின் வழி இறை பிரசன்னத்தை உணரும் இறை மக்களாக இவர்கள் காணப்படுகின்றனர். மக்களின் வாழ்வியல் பிரச்சினைகள் ஆராயப்பட்டு அந்தப் பிரச்சினைகளுக்கு விடை காண்பதன் வழியாக கிறிஸ்தவ வாழ்வு எங்ஙனம் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்ற முறை இங்கே தெளிவாக ஆராயப்படுகின்றது.
- பரிசுத்த ஆவியானவர் எம்மை பயனுள்ள உரையாடலுக்கு இட்டுச் செல்கின்றார். ஆசிய மக்களின் பண்பாட்டு சமய விழுமியங்களினூடாக உறவை வளர்த்து இதன் வழியாக கிறிஸ்துவை அடையவும் பண்பாடுகளின் மையமான கிறிஸ்துவை வெளிப்படுத்தல் வேண்டும்.

### 10.2.1.5.3 ஆசிய குடும்பப் பாரம்பரியங்களும் விழுமியங்களும்

- பல்வேறுபட்ட பிரச்சினைகளும் உலகியில் மாற்றங்களும் நடைபெற்றாலும் ஆசிய மக்கள் திருமணத்தின் புனிதத்தன்மையை என்றும் பாதுகாத்து வருகின்றார்கள்.
- பிள்ளைகள் இறைவனால் கொடுக்கப்பட்ட கொடைகள்.
- பிள்ளைகளிடம் தமது அன்பைக் காட்டுவதற்காக தம்முடைய தியாக வாழ்வினாலும் பரித்தியாகத்தினாலும் பிள்ளைகளின் கல்வி, ஆரோக்கிய வாழ்வு மற்றும் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்து வருகின்றனர்.
- கூட்டுக்குடும்பவாழ்வு அவர்களிடையே நெருங்கிய உறவை வளர்த்துள்ளது. முதியவர்கள், பெரியவர்கள், ஓய்வு பெற்றவர்கள் அனைவரும் மரியாதையாக நடாத்தப்பட்டு வருகின்றனர். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்தும், உதவிகள் செய்தும் உறவுகளை வளர்த்து வருவதுடன் தம்முடைய தியாக வாழ்வினால் மற்றவர்கள் வாழ்வு பெறுவதை அவர்கள் விரும்புகிறார்கள். ஆசிய மக்களின் விருந்தோம்பல் கட்டிக்காத்து பேணி வளர்க்கப்பட்டு வருகின்றது.
- பல ஆசிய மக்கள் பின்தங்கிய கிராமங்களில் வாழ்ந்து வந்தாலும் அவர்களின் இறைவனுடனான வாழ்வு உறவுமுறை ஆழமானதாகக் காணப்படுகின்றது. வளர்ந்து வரும் உலகிற்கேற்ப தம்மை இசைவாக்கிக் கொண்டாலும் அவர்கள் தம்முடைய விழுமியங்களைப் பாதுகாத்து வருவது பாராட்டுக்குரிய விடயமாகும்.
- கிறிஸ்தவ விழுமியங்கள் குழந்தைப் பராயத்திலிருந்தே புகட்டப்பட்டுவருவதால் குடும்பங்கள் இறை பண்புள்ள பண்பாடுள்ள குடும்பங்களாக வளர்ந்து வருகின்றன. அனைவரையும் ஏற்று உபசரித்து மரியாதையுடன் வாழும் குடும்பங்களாக இருக்கின்றது. மக்களின் வாழ்க்கை முறை ஏழைகளாக காணப்பட்டாலும் அவர்கள் வாழ்க்கை என்றும் பண்பாடுள்ளதாக இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

### 10.2.1.5.4 இளைஞர்களின் பங்களிப்பு சமாதானத்திற்கான விடியல்

- ஆசியாவின் முதுகொலும்பாகவும் அதன் அச்சாரமுமாக இளைஞர்கள் இருந்து வருகின்றனர். சமாதானம் என்பது போர் அற்ற சூழ்நிலை மட்டுமன்று அனைத்துப் பிரச்சினைகளிலுமிருந்து விடுபட்ட ஒரு நிலையாகும்.
- இறைவன் சமாதானத்தின் இருப்பிடம் என்பதை உணர்கின்றோம். மனிதன் தனக்குள்ளே சமாதானத்தின் விதையைப் கொண்டுள்ளான். உண்மையான சமாதானம் இயேசுக்கிறிஸ்துவில் நாம் வைக்கின்ற நம்பிக்கையில் வளர்ந்து வருகின்றது. இந்த சமாதானம் கிறிஸ்தவர்களின் வழியாக அனைவருடனும் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டியதொன்றாகும்.
- மனித குலத்தின் மனிதம் பாதுகாக்கப்பட அனைவரும் சகோதர சகோதரிகளாக வாழ முற்பட வேண்டும்.

- இளம் தலைமுறையினர் ஆசியாவின் நட்பை வெளிப்படுத்தும் இறை மக்களாகத் திகழ வேண்டும். இன்று பூகோளமயமாக்கள் இளைஞர்களை பல்வேறுபட்ட கோணங்களுக்கு இட்டுச் சென்றாலும் ஆசியாவின் மரபு முறையைக் கட்டியெழுப்புவதில் முக்கிய பங்காற்ற வேண்டியவர்களாக இருக்கின்றனர்.
- சமாதானத்தோடு கூடிய நீதியான சமுதாயத்தை கட்டியெழுப்புவதில் இளைஞர்கள் தமது சக்தியை கொடுக்க வேண்டும் என்பதை திருச்சபை வரவேற்கின்றது.
- இளைஞர்கள் உருவாக்கத்திலும் அவர்களை நற்செய்தியை பறைசாற்றும் தூதுவர்களாக மாற்றவும் ஆசிய ஆயர்கள் பேரவை அவர்களை பயிற்றுவிக்கவும் அதன் வழியாக ஆசிய இளம் திருச்சபையைக் கட்டியெழுப்பவும் செயற்படுகின்றது. இதற்கு இளைஞர்கள் மாநாடு போன்றவற்றை கூட்டுவதன் மூலம் ஆசிய இளைஞர்களின் ஒத்துழைப்பைப் பெற வேண்டும் என்று திருச்சபை விரும்புகின்றது.

### 10.2.1.5.5 சமூக வாழ்வின் வழி சமாதானமுள்ள சமூகத்தை கட்டியெழுப்புதல்

- 2000ஆம் ஆண்டு ஜூபிலி வருடம் தொடங்கும் இப்புதிய மில்லேனியத்தில் புதிய நம்பிக்கை யூட்டும் ஒன்றாக அமைவதோடு திருத்தந்தையின் அழைப்பின்தொனிப் பொருளை அதாவது கிறிஸ்துவே எமது எதிர்நோக்கின் மையமாக அமைய வேண்டும்.
- ‘‘இதோ நான் வருகின்றேன். அனைத்தையும் புதுப்படைப்பாய் மாற்றுவேன்’’ ஆசிய ஆயர்கள் மன்றம் யூபிலிவருடத்திற்கு வழிகாட்டியாக அமைந்தது.
- இங்கே சிறப்பாக பூகோளமயப்படுத்தப்பட்டுள்ள உலகில் மக்களின் வாழ்வை உலகளாவிய ரீதியிலும் திருச்சபையின் வழியிலும் கண்ணோக்குகின்றது.
- இதுவே ஆசிய திருச்சபையின் தெட்டத் தெளிவான இலக்காகவும் தூரநோக்காகவும் அமைந்தது. இக்கட்டத்தில் இரண்டாம் அருள் சின்னப்பர் வழங்கிய அழைப்பாக சேவையின் அன்பும் என்ற அடிப்படையில் அன்பின் சேவையின் அடிப்படையில் மட்டுமே ஆசிய திருச்சபை ஒரு புதிய திருப்பத்தைக் காணமுடியும். (புதுபிக்கப்பட்ட) நீதியின் வழியில் மட்டும் சமாதானத்தை நாம் அடையமுடியும் என்பதை அனைவரும் உணர்ந்துள்ளனர். ஆயர்கள், குருக்கள் துறவிகள், பொதுநிலையினர் அனைவரும் விசுவாசத்தின் அடிப்படையில் ஒன்று சேர்ந்து அனைவரின் பணியை உணர வேண்டும். இந்த ஒன்று சேர்ப்பானது எமது ஒன்றிப்பைக் கட்டியெழுப்புவதுடன் கிறிஸ்துவைப் பின் தொடரும் பணியாளர்களாகவும் எமது கடமைகளையும் பணிகளையும் உணர்ந்து ஆசிய திருச்சபை என்ற குடும்பத்தை உருவாக்க வேண்டும்.

## 10.2.2 உலக கிறிஸ்தவ சம்மேளனத்தின் (World Council of Churches [WCC]) வெளியீடுகள் (2000- 2006)

### 10.2.2.1 உலக கிறிஸ்தவ சம்மேளனத்தின் வரலாறு

**அ. ஆரம்பம்**

- உலக கிறிஸ்தவ சம்மேளனம் உலகம் முழுவதும் பரவியுள்ள திருச்சபைகள் பலவற்றின் கூட்டமைவாகும்.
- 1941இல் ஆரம்பிக்கப்பட இருந்த திருச்சபைகளின் இச்சம்மேளனம் முதலாம் உலக யுத்தத்தினித்தம் பின்போடப்பட்டாலும், 1948 ஓகஸ்ட் 23ஆம் திகதி நெதர்லாந்தில் எம்ஸ்டடர்மின் முதல் கூட்ட அமர்வில் 44 நாடுகளிலுள்ள 147 திருச்சபைகளின் ஒன்றுகூடலில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

**ஆ. நோக்கம்**

- உலக கிறிஸ்தவ சம்மேளனம் என்பது அங்கத்தவ திருச்சபைகளுக்கு மேலான ஒரு திருச்சபையோ, திருச்சபைகள் மீது ஆளுகை அதிகாரம் பெற்றதோ அல்ல. மாறாக இயேசு கிறிஸ்து தனது ஒரே திருச்சபையிடம் எதிர்பார்க்கும் ஒருமைப்பாட்டை செயல்படுத்த முயற்சிக்கும் ஒரு தோழமை அமைப்பாகும்.

**இ. அங்கத்துவம்**

- ‘‘திருவிவிலியத்திற்கு அமைய இயேசு கிறிஸ்துவை இறைவனாகவும் மீட்பராகவும் அறிக்கை செய்யும் திருச்சபைகளின் கூட்டிணைவாக தந்தை, மைந்தன், தூய ஆவி என்னும் மூவொரு கடவுளின் பொது அழைப்பிற்கு இணங்க ஒன்று சேர்ந்து பணியாற்ற நாட்டம் கொள்ளுதல்’’ என்னும் அடிப்படையில் இந்த திருச்சபைகளின் கூட்டிணைவு செயல்படுகிறது.
- தற்பொழுது 110 நாடுகளில் உள்ள 349 திருச்சபைகள் இச் சம்மேளனத்தில் வில் அங்கத்துவம் பெற்றுள்ளன.
- இதில் ஏறக்குறைய 560 மில்லியன் கிறிஸ்தவர்கள் இருப்பதுடன் வைதீக சபை (ஓதடொக்ஸ்) யைச் சேர்ந்தவர்களே பெரும்பான்மையோர்.
- உரோமன் கத்தோலிக்க சபை இதில் அங்கத்துவம் வகிக்காவிட்டாலும் அக்கூட்டங்களில் பங்கேற்க தனது அங்கத்தவர் ஒருவரைத் தெரிவு செய்து இச்சம்மேளத்துடன் நெருங்கி பணியாற்றுகின்றது. இச்சம்மேளனத்தின் விசுவாசம், அமைப்பு (Faith and Order) என்னும் குழுவிற்து உரோமன் கத்தோலிக் ஆயர் பேரவை 12 பிரதிநிதிகளைத் தெரிவு செய்து கிறிஸ்தவ ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் வகையில் ஒன்று இணைந்து செபங்களையும் வேறு திருவிவிலிய விளக்க வளங்களையும் தயாரிக்கின்றது.

### 10.2.2.2 ஒழுங்கமைப்பு

- உலக கிறிஸ்தவ சம்மேளனத்தின் நிறைவேற்றுத் தீர்மாணங்கள் 8 வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் பேரமர்விலும், ஏனைய மத்திய செயற்குழு, நிறைவேற்று செயற்குழு கூட்டங்களில் எடுக்கப்படும்.
- நிலைவாரிய (Presidium) மற்றும் நிறைவேற்று செயற்குழு அங்கத்தவர்களில் இருந்து 6 தலைவர்கள் பேரமர்வின் போது தெரிவு செய்யப்படுவார்கள்.
- அங்கத்தவ திருச்சபைகளின் மக்கள் எண்ணிக்கைக்கும், புவியியல் பரவுகைக்கும், ஏற்பவும் எல்லா அங்கத்துவ திருச்சபைகளும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலும் பேரவைக்கான திருச்சபையின் ஆசனங்கள் மத்திய செயற்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

- 1948இல் 147 திருச்சபைகளில் இருந்து 351 பிரதிநிதிகளைக் கொண்டிருந்த பேரவை 1991இல் 317 திருச்சபைகளில் இருந்து 842 பிரதிநிதிகளைப் பெற்றது. 2006இல் 120 நாடுகளில் இருந்து 347 திருச்சபைகள், திருச்சபை அமைப்புகள் அங்கத்துவம் பெற்றுள்ளன.
- பேரவை அமர்வுகளுக்கிடையில் தீர்மானங்களை மத்திய செயற்குழு வருடமொரு முறை கூடும் கூட்டத்தில் எடுப்பதுடன் பேரவை தீர்மானங்களை நிறைவேற்றும். அத்துடன் நிகழ்சிகளை ஆய்வு செய்து முன்னுரிமைகளையும் தீர்மாணிக்கும். முதலில் சேகரிப்பதும் இக்குழுவின் பொறுப்பாகும். நிறைவேற்று செயற்குழுவுக்கான 14-16 பதவி முறை அங்கத்தவர்களையும் (*ex officio*) தெரிவு செய்வது மத்திய செயற்குழுவேயாகும்.
- மத்திய செயற்குழுவினால் தெரிவு செய்யப்படும் 5 வருட பதவிக்காலம் கொண்ட பொதுச் செயலாளர் எல்லா செயற்பாட்டிற்கும் தலைமை அதிகாரியாவார்; மத்தி செயற்குழுவுக்கு கணக்க கொடுக்க கடமைப்பட்டவர்.
- இதன் நிகழ்சிகள் அங்கத்தவ சபைகளினால் அங்கத்துவம் பெறாத அனைத்து சபைகளுக்கும் நடத்தப்படும்.

### 10.2.2.3 கட்டமைப்பு

- திருச்சபைகள் ஒருமைப்பாட்டில் வளருவதற்கு உதவியாக உலக கிறிஸ்தவ சம்மேளனத்தின் செயற்பாடுகள் 12 திணைக்களங்கள் மூலம் நடத்தப்படுகின்றன.

### 10.2.2.4 2000-2006 வரையான காலப்பகுதியில் உலக கிறிஸ்தவ சம்மேளனம் சமுதாய, பண்பாட்டு முன்னேற்றம் தொடர்பாக தந்துள்ள படிப்பினை, வழிகாட்டி மற்றும் செயல்பாடுகளுக்கு சில உதாரணங்கள்:

**அ. வன்முறையற்ற அமைதி**

- வன்முறைகளை மேற்கொள்ளும் தசாப்தம் (2001-2010) தொடர்பாக; "வன்முறைகளில் வெறும் பார்வையாளராக இருப்பதையோ அல்லது வெறுமனே துக்கப்படுவதையோ திருச்சபை கைவிட்டு, திருச்சபைக்குள்ளும் வெளியிலும் வன்முறைகளை மேற்கொள்வதற்கு செயல்பட வேண்டும்.
- அநீதியான, ஒடுக்குமுறையான கட்டமைப்புகளை பாதுகாத்தலுக்கு - இனவாதம், பெண்கள், சிறுவருக்கு எதிரான வன்முறைப் பிரயோகம், தேசத்தின் அல்லது இனத்தின் பேரில் மேற்கொள்ளப்படும் வன்முறை - எதிராக துணிந்து குரல் எழுப்புதல்.
- திருச்சபைகள் தமக்கிடையே ஒருமைப்பாட்டைத் தேடும் அதே வேளை அமைதிக்கும் ஒப்புரவுக்கும் ஒன்றிணைந்து செயல்படத் தவறினால் உலகில் திருச்சபையின் திருப்பணி தோல்வி கண்டதாக அமையும்.
- பிரிவினைக் கருவிகளை பின்னால் வைத்துவிட்டு வன்முறைப் பிரயோகமின்றி சவால்களை ஒன்றிணைந்து எதிர்நோக்குதல், முரன்பாடுகளின் தீர்வுக்கு செயல்பாட்டுடன் கூடிய அணுகுமுறையாகும்.
- உலகில் புதிய ஆரம்பத்திற்கும், மாற்றத்திற்கும் நற்செய்தி காண்பிக்கும் அமைதிவழி நம்பிக்கைக்கு ஊற்றாகும்.
- தோழமையைக் கட்டுதல் (community-building) வன்முறைகளை மேற்கொள்வதற்கான திறவுகோளாகும். தோழமை சமூகத் தேவை மாத்திரமல்ல அது நிச்சயமாக இறையியல் யதார்த்தமுமாகும். திருச்சபை உடன்படிக்கையின் மக்களாவர். மக்களை தோழமை உறவுக்குள் கொண்டுவந்து கிறிஸ்துவில் புது வாழ்வைக் கொடுப்பதற்கே உலகிற்கு திருச்சபை அனுப்பப்பட்டுள்ளது.

- நீதிக்கான இறைவாக்கினராகிய புதிய சந்ததியை உருவாக்குவதே நமது பணி; அன்பின் சீடராகவும், விடுதலையின் திருத்தொண்டராகவும், அகிம்சை வழிப் போதகர்களாகவும், ஒப்புரவின் தூதுவர்களாகவும் நாம் இருக்க வேண்டும்.
- சமயத்தின் பெயரில் மேற்கொண்ட வன்முறைகளை இனம்காணவோ, பாவ அறிக்கை செய்யவோ மன்னிப்பை வேண்டவோ நாம் தவறிவிடுகின்றோம்.
- ''ஏன் வன்முறை? ஏன் அமைதி அல்ல?'' என்ற தலைப்பில் பல மொழிகளில் 2002இல் நூல் வெளியிடப்பட்டது.
- ஐக்கிய நாடுகள் தாபனத்துடன் இணைந்து சர்வதேச அமைதி தினத்தை 2004 செப்டெம்பர் 21ஆம் திகதி நினைவுகூருமுகமாக திருச்சபைகள் அனைத்தையும் உலக சமாதானத்துக்காக மன்றாடும் படி உலக கிறிஸ்தவ சம்மேளனம் கேட்டுக்கொண்டது.

### ஆ. திருச்சபை ஒருமைப்பாடு

- உலக கிறிஸ்தவ சம்மேளனத்தில் அங்கத்துவம் பெறவேண்டுமெனின் தேசிய மற்றும் திருச்சபை எல்லைகளைக் கடக்கக் கூடியதாக இருக்க வேண்டும்
- அங்கத்துவ சபைகள் பிற சபைகளின் திருமுழுக்கின் தகுதியை அங்கிகரிக்க வேண்டும்.
- திருச்சபைகள் மாற்று வலு உள்ளவர்களும் சம உரிமைகளைப் பெறும் ஒரு இடமாக இருக்க வேண்டும்; அவர்களும் இறைவனின் சாயலில் படைக்கப்பட்வர்களே.

### இ. திருப்பணி

- சுகாதாரம் திருப்பணியின் பிரதான அம்சமாக இருப்பதால் மாத்திரமல்ல எச்.ஐ.வி-எயிட்ஸ் எமது காலத்தின் ஆபத்து நிறைந்த விடயமாக இருப்பதால் திருச்சபை சுகாதார நற்பணியில் ஈடுபடவேண்டும்; இந்நிலைகளை எதிர்நோக்க கற்றுக்கொள்ள வேண்டும்.
- 2004இல் Transfomative Justice: Being Church and Overcoming Racism ''மாற்றம் ஏற்படுத்தும் நீதி: திருச்சபையாக இருந்து இனவாதத்தை மேற்கொள்ளல்'' என்னும் தலைப்பில் அறிவுரை நூல் ஒன்றை தயாரித்து உலக திருச்சபைகளின் பயன்பாட்டுக்காக வெளியிட்டுள்ளது.

### ஈ. பல்சமய சூழல்

- ''அந்நியரைக் குறித்த பயத்திலிருந்து நேசத்திற்கு'' ("xenophobia to philoxenia" – from fear and hatered of strangers to love of strangers) என்ற பொருளில் சமயங்களுக்கிடையேயான உரையாடலை நடத்தி வெவ்வேறு சமயத்தவர் பயமும் வெறுப்பும் இன்றி நட்புறுவுடன் வாழ வழிவகுத்தனர்.
- 2005இல் வத்திகான் உலக கிறிஸ்தவ சம்மேளனத்துடன் இணைந்து நடத்திய நிகழ்சித் திட்டம் மதமாற்றத்தை விட பல்வேறு சமயத்தவர் தமது கருத்துக்களைப் பகிரவும் சமயச் சுதந்திரத்திற்கும் சமய பன்மைக்கும் மதிப்பளிக்கவும் ஊக்குவித்துள்ளது.
- சமயங்களுக்கிடையேயான உரையாடலை பலப்படுத்த "Currrent Dialogue" ''தற்கால உரையாடல்'' என்னும் சஞ்சிகையை பிரசுரித்தல்.

### உ. சமுகப் பணி

- ஒருமைப்பாட்டுக்குள் வரும் திருச்சபையானது கிறிஸ்துவில் வெளிப்படும் இறை அன்பிற்கு ஏற்ப உலகின் துன்பம், தேவை என்பன குறித்து ஒன்றிணைந்து செயல்பட முன்வர வேண்டும்.

- வாழ்வைக் குறித்து அக்கறை கொள்ளுதல் என்பது உலகில் சேவையாற்றுவது; திருச்சபை ஒருமைப்பாட்டைப் போல் சமுகப்பணியும் அத்தியாவசியமானது.
- அகதிகள் மற்றும் புலம் பெயர்ந்தோர் சார்பாக ஒவ்வொரு அரசாங்கமும் ஏற்புடைய தகுந்த மனப்பாங்குடன் செயல்பட வேண்டும் என்பதில் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளது.
- 2006ஆம் வருடக் கணிப்பின் படி உலகில் உள்ள 14 மில்லியன் அகதிகள் உள்ளிட்ட 175 மில்லியன் புலம் பெயர்ந்தோர் சார்பாகவும், 20-25 மில்லியன் உள்நாடுகளில் புலம் பெயர்ந்தோர் சார்பாகவும், அநாதைச் சிறுவர்கள் மற்றும் எச்.ஐ.வி - எயிட்ஸ் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் சார்பாகவும் குரல் கொடுப்பதுடன் அவர்களின் தரத்தை மாற்றுவதற்கு தேசிய கிறிஸ்தவ மன்றங்கள் மூலம் அவ்வவ் நாடுகளில் செயல்படுகிறது.

**ஊ. கல்வி**

- தம்முடைய சொந்த பாரம்பரியத்திலும், சொந்த பாரம்பரியத்தைப் பற்றியும் மாத்திரம் கற்றல், உலகில் மனித சமுகத்தின் பல்வேறுபட்ட தன்மைகளை அறிந்து கொள்வதையும் அனுபவிப்பதையும் தடுக்கிறது. நாம் யார் மத்தியில் வாழ்கிறோமோ, அவர்களின் சமய வாழ்வைக்குறித்த அறிவும் அனுபவமும் நமக்கு கிடைக்கும் போது பரந்த மனித சமுகத்தில் பங்குவகிப்பது என்ன என்பதை உணர்ந்துகொள்ள முடியும்.

## 10.2.3 ஆசிய கிறிஸ்தவ சம்மேளனத்தின்(Christian Conference of Asia [CCA]) வெளியீடுகள் (2000 - 2006)

### 10.2.3.1 ஆசிய கிறிஸ்தவ சம்மேளனத்தின் (CCA) வரலாறு

**அ. நோக்கமும் இலக்கும்**

ஆசிய கிறிஸ்தவ சம்மேளனம், உலக கிறிஸ்தவ சம்மேளனத்தின் வரைதிட்டத்துக்கு அமைய, ஆசியாவில் உள்ள திருச்சபைகளினதும் தேசிய கிறிஸ்தவ மன்றங்களினதும் ஒருமைப்பாட்டை வலியுறுத்தி, ஒருமைப்பாட்டுடன் இயங்குவதற்கு ஊக்கப்படுத்துதல்.

**ஆ. ஆரம்பம்**

1957 மார்ச் மாதம் 26ஆம் திகதி இந்தோநேசியாவில் ஆசிய திருச்சபைகள், திருச்சபைகளின் தேசிய மன்றம், தேசிய கிறிஸ்தவ மன்றங்கள் ஆகியவற்றின் ஒன்றுகூடலின் போது “கிழக்காசிய கிறிஸ்தவ சம்மேளனம்“ (East Asia Christian Conference [EACC]) என்ற பெயரில் ஆரம்பித்தது. 1959ஆம் வருடம் மே மாதம் மலேசியாவில் கோலாலம்பூரில் முதல் கூட்டத்தொடரில் வைபவ ரீதியாக ஆரம்பித்துவைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1964ஆம் வருடம் பேங்கொக்கில் நடந்த பொதுக்கூட்டத்திலும், 1971, 1973, பொதுக்கூட்டத்திலும், 1995 ஜுன் 9-10 ஆகிய தினங்களில் கொழும்பிலும், 2000 ஜுன் 1ஆம் திகதி 2000 இந்தோனேசியாவிலும் நடந்த சிறப்புப் பொதுக்கூட்டத்திலும், சட்ட யாப்பில் மேலும் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன.
1973ஆம் வருட பொதுக்கூட்டத்தில் “ஆசிய கிறிஸ்தவ சம்மேளனம்“ என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

**இ. அங்கத்துவம்**

- நியுசிலாந்து, அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், கம்போடியா, கிழக்குத் தீமொர், ஹொங்கொங், சீனா, இந்தியா, இந்தோனேசியா, லாவோஸ், யப்பான், கொரியா, மலேசியா, மியன்மார், பாக்கிஸ்தான், பிலிப்பீன் தீவுகள், இலங்கை, தாய்வான், தாய்லாந்து ஆகிய நாடுகளில் உள்ள நூற்றுக்கு அதிகமான திருச்சபைகளும் 15 தேசிய கிறிஸ்தவ மன்றங்களும் அங்கத்துவம் வகிக்கின்றன.

- ஆசிய கிறிஸ்தவ சம்மேளனத்தில் (CCA) அங்கத்தவம் பெறும் திருச்சபைகள், திருவிவிலிய சான்றுகளின் அடிப்படையில் இயேசு கிறிஸ்துவை கடவுளாகவும் மீட்பராகவும் அறிக்கை செய்வதுடன் பிதா, குமாரன், தூய ஆவியாகிய திரியேக கடவுளின் அழைப்பிற்கு இணங்க வாழ முயற்சிக்க உடன்படவேண்டும்.

### 10.2.3.2 செயற்றிட்டங்கள்

- ஆசியாவின் பன்மைச் சூழலில் ஆன்மீகத்தினதும் இறையியலினதும் அடிப்டையில் ஆசிய மக்கள் எதிர்நோக்கும் பொதுவான பிரச்சினைகளின் போது உரையாடலுக்கும் செயற்பாட்டுக்கும் ஊக்கியாக செயல்படும் அதே வேளை ஆசிய மக்களிடையே நல் உறவைத் தடுக்கும் காரணிகளை இனம் கண்டு, அவற்றை உணர்த்தி மக்களை ஒன்றினைக்க உதவுவது. தற்போதைய செயற்றிட்டங்கள் பின்வருவனவற்றை வலியுறுத்துகின்றன:
  - i. ஆசிய திருச்சபைகளினதும் கிறிஸ்தவ சமுகங்களினதும் ஐக்கியத்தை வளர்த்தல், வலுப்படுத்துதல், யதார்த்தமாக்குதல்;
  - ii. திருச்சபை ஒருமைப்பாட்டின் ஐக்கியத்தின் “உள்ளடக்கும் தன்மையை“ (inclusive) மேலும் மெய்ப்பித்தல்;
  - iii. கடந்த கால அரசியல், கோட்பாட்டு காரணிகளினால் துரதிஷ்டவசமாக பிரிவுற்றுள்ள ஆசிய திருச்சபைகளையும் கிறிஸ்தவ சமுகங்களையும் ஒப்புரவாக்க முயற்சித்தல்;
  - iv. ஆசிய கிறிஸ்தவ சமுகத்திற்கு திருச்சபை ஒருமைப்பாடு யதார்த்தமாகும் விதத்தில் திருச்சபை ஒருமைப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்;
  - v. உரோமன் கத்தோலிக்க திருச்சபைக்கும், இவாஞ்சலிக்கல் சபைகளுக்கும் உள்வாங்கப்படும் விதத்தில் திருச்சபை ஒருமைப்பாடு வளர்ச்சி காண உந்துதலைக் கொடுத்தல்;
  - vi. ஆசிய வாழ்வும், உலகில் ஆசியா பெறும் இடத்துக்கும் தோன்றிவரும் சவால்கள் சார்பாக திருச்சபை ஒருமைப்பாட்டு தரிசனம், சிந்தனை, மற்றும் செயற்பாடுகளை வலுப்படுத்துதல்.

### 10.2.3.3 ஆசிய கிறிஸ்தவ சம்மேளனத்தின் பொதுவான வேலைத் திட்டங்கள்

- இவை நான்கு பிரதான பிரிவுக்குள் அடங்கும்.
- நம்பிக்கை, திருப்பணி, ஐக்கியம் (Faith, Mission and Unity)
- நீதி, சர்வதேச விடயங்கள், அபிவிருத்தியும் பணியும் (Justice, International Affairs, Development and Service)
- ஒருமைப்பாடு, பாலியல் நீதி, வாலிபர் வலுவூட்டல் (Ecumenical Formation, Gender Justice and Youth Empowerment)
- பொது செயலாளர் செயலகம் (General Secretriat)

- இவை தவிர சில சிறப்பு வேலைத்திட்டங்களையும் ஆசிய கிறிஸ்தவ சம்மேளனம் மேற்கொள்வதுண்டு. அவற்றுள் சில,
  - ஆசிய திருச்சபை ஒருமைப்பாட்டு கல்விப் பரிமாற்றம் (Asian Ecumenical Educational Exchange [AEEE])
  - ஆசிய தூதுரைப்புப் பணி உதவித் திட்டம் (Asian Missionary Support Program [AMSP])
  - அபிவிருத்தி நிதியம் (Development Fund)

- வாலிபர் நிதியம் (Youth Fund)
- பெண்கள் தலைமைத்துவ நிதியம் (Women's Leadership Fund)
- நீதிக்கும் ஒப்புரவுக்குமான அடிமட்ட செயற்பாடுகளுக்கான கூட்டொருமை நிதியம் (Solidarity Fund for Grassroots Action for Justice and Reconciliation)

**10.2.3.4 2000 -2006 வரையான காலப்பகுதியில் ஆசிய கிறிஸ்தவ சம்மேளனம் பல்வேறு அங்கத்தவ நாடுகளில் உள்ள தேசிய கிறிஸ்தவ மன்றங்களுக் கூடாக (தே.கி.ம) சமுதாய பண்பாட்டு முன்னேற்றம் தொடர்பாக செயற்படுத்திய வேலைத்திட்டங்கள் மூலம் தந்துள்ள படிப்பினைக்கும் வழிகாட்டிக்கும் சில உதாரணங்கள்:**

- “நமது ஒரே இரட்சகரை பொதுவான சான்று பகர்தலில் வலியுறுத்துதல்“ ('Affirming our one Saviour in Common Wittness') என்னும் பொருளில் “உலக கிறிஸ்தவ கருத்தரங்கு“ ('Global Christian Forum' [GFC]) ஒன்றை 2006இல் “ஆசிய ஆயர்கள் மன்றம்’’ (Federation of Asian Bishops' conference' [FABC]) என்னும் உரோமன் கத்தோலிக்க அமைப்புடன் இணைந்து நடத்தினர். இதில் பெந்தேகொஸ்தே, இவாஞ்சலிகல் சபையினரும் கலந்து கொண்டனர். 2004இல் “ஆசிய திருச்சபை ஒருமைப்பாட்டு செயற்குழு“ ('Asian Ecumenical Committee') (இது ஆசிய ஆயர் மன்றமும் ஆசிய கிறிஸ்தவ சம்மேளனமும் இணைந்து உருவாக்கிய குழு) நடத்திய மாநாட்டில் முதல் முறையாக பெந்தேகொஸ்தே, இவாஞ்சலிகல் சபையினர் கலந்துகொண்டதை அடுத்து “உலக கிறிஸ்தவ கருத்தரங்கு“ கூட்டப்பட்டது. 1993இல் ஆரம்பிக்கப்பட்ட ஆசிய ஆயர் மன்றமும் ஆசிய திருச்சபை ஒருமைப்பாட்டு செயற்குழு “ஒன்றிணைந்து செய்யக்கூடிய அனைத்தையும் தனித்தனியே செயற்படுத்தாதிருப்போமாக“ என்ற முகப்பு வாக்கைக் கொண்டுள்ளது.
- ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் சமுக, பொருளாதார பின்னடைவு நிலைமைகளினால் உள, உடல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள வாலிபர்களுக்கு வாழ்வுத் திறன் பயிற்சி வழங்கல். HIV/ AIDS, பாலியல் துஷ்பிரயோகம் போன்றவற்றிகு அடிமையாவதை இப்பயிற்சி குறைக்கிறது. இவ்வாறான பயிற்சிகளை சில நாடுகளில் ஆசிய கிறிஸ்தவ சம்மேளனம் (CCA) ஐக்கிய நாடுகளின் ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான சமுக பொருளாதார அமைப்புடன் UNESCAP (United Nations Economic and Social Commision for Asia Pacific) இணைந்து செயல்படுத்தகின்றது. 2005-2008 வரையான நான்காண்டுத் திட்டம் கம்போடியா, சீனா, பிலிப்பைன் தீவுகள், இலங்கை ஆகிய நாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**வன்முறைப் பிரயோகமின்றி வன்முறைகளை மேற்கொள்வதில் சமயங்களின் பங்களிப்பு பற்றி வன்முறைகளை மேற்கொள்வதற்கான தசாப்பதத்தை முன்னிட்டு சர்வமத, சர்வதேச மாநாடு ஒன்றை இந்தோனேசியாவில் 2005 இல் ஆசிய கிறிஸ்தவ சம்மேளனம் ஆசிய நாடுகளின் பங்கேற்பில் கூட்டி எடுத்த தீர்மாணங்கள் சில:**

- அமைதிக்கான சமயங்களின் செயற்பாடுகளை திரட்டுதல்;
- நிராகரிக்கப்படும், துன்புறுத்தப்படும் குழுக்கள் பற்றிய தகவல்களை சேகரித்தல்;
- சர்வமத வாலிபர் அமைப்புகள், விடுமுறைப் பாசறைகள் மூலம் பூகோளமயமாக்கல், வறுமை, கல்வி, சுகாதாரம் போன்ற விடயங்கள் மூலம் பெறும் சவால்களை சந்திக்க வாலிபர்களை வழிநடத்துதல்;
- வன்முறையற்ற எதிர்ப்புக்கும், ஆதரிப்பு வாதாட்டத்துக்குமான நடவடிக்கைகளை வகுத்தல்.
- சாபாவிலுள்ள (மலேசியா) 10000 ற்கும் மேற்பட்ட நாடற்ற, பிறப்பு பதிவுகள் அற்ற குழந்தைகளுக்கு விமோசனம் வழங்குமுகமாக 2005இல் கொட்ட கின்னபாலுவில் (மலேசியா) கூட்டம் கூடி முன்வைத்த சில ஆலோசனைகளும் பரிந்துரைகளும்:
- மலேசியாவில் பிறந்த அனைவருக்கும் பிறப்பு சான்றிதழ் வழங்கப்பட வேண்டும்;

- இலவசக் கல்விக்கான வாய்ப்பு அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும்;
- வேலைக்கு அமர்த்தப்படும், விற்கப்படும் சிறுவர் பற்றிய தகவல்களை சேகரிக்க பலம்வாய்ந்த அமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

**பிளவுற்ற கொரியா தேசத்தை ஒன்றிணைக்க ஆசிய கிறிஸ்தவ சம்மேளனம் முன்வைத்த ஆலோசனைகளுள் சில:**

- சமாதானம் (அமைதி) வாழ்வோடு இணைந்தது; நீதியின்றி அமைதி ஏற்படாது; அமைதி இன்றி வாழ்வு இல்லை.
- முழு உலகிலும் உள்ள அணு ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டும், கட்டுப்படுத்தப்பட வேண்டும், அழிக்கப்பட வேண்டும்.
- இரு தேசங்களும் அமைதி வழியில் ஒன்றிணைய முயற்சிக்க வேண்டும்.
- இயற்கை அனர்த்தம், காலநிலை, சூழல் மாற்றம் சார்பாக ஆய்வு செய்து ஆலோசனைகளை முன்வைப்பர். உதாரணமாக 2005 ஜனவரி 26-31 இல் 14 நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கையில் கூடி, சுனாமிக்குப் பின்னான மீள் கட்டுமானப் பணிக்கான ஆலோசனைகளை முன்வைத்தனர்.
- மேற்குலக நாடுகளிடம் இருந்து பெற்ற கடனை மீள செலுத்த முடியாதுள்ள நாடுகள் பற்றியும் கொடுக்கப்பட்ட கடனின் தன்மை பற்றியும் ஆராய்ந்து கடன் சுமையை அகற்ற குரல் கொடுத்தனர்.
- நாடுகளில் மனித உரிமை மீறல்களை ஆராய்ந்து அதற்கெதிராக குரல் கொடுப்பதுடன் விழிப்புணர்வையும் ஏற்படுத்துதல். உதாரணமாக மனித விற்பனை, சுரண்டல் நடைபெறும் நாடுகளில் பாதிக்கப்பட்டோருடன் தொடர்புகளை ஏற்படுத்துதல், சுரண்டப்பட்ட நிலையிலிருந்து மீண்டோருக்கு புது வாழ்வை ஆரம்பிக்க உதவுதல், மனித விற்பனையில் ஈடுபடுவோரை இனம் காணவும் சட்டத்தின் முன் நிறுத்தவும் ஒத்துழைத்தல், அரசாங்கத்துக்கு தகுந்த அழுத்தத்தைக் கொடுத்தல், திருச்சபை, அரசாங்கம் என்பன எடுக்கும் மாற்று நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்தல், தகுந்த தகவல் பரிமாற்றத்தின் மூலம் சர்வதேச திருச்சபைகளையும் அரச சார்பற்ற நிறுவனங்களையும் பெலப்படுத்த முயற்சித்தல்.

**உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

1. ஆசிய ஆயர் மன்றம், உலக கிறிஸ்தவ சம்மேளனம், ஆசிய கிறிஸ்தவ சம்மேளனம் ஆகியவை தொடர்பான அமைப்பு முறைகள் அவற்றின் செயற்பாடுகள் பற்றிய தகவல்களைச் சேகரித்துக் கற்றுக்கொள்ளுவர்.
2. ஆசிய ஆயர் மன்றம், உலக கிறிஸ்தவ சம்மேளனம், ஆசிய கிறிஸ்தவ சம்மேளனம் ஆகிய அமைப்புக்களின் வெளியீடுகளை ஒன்று திரட்டி அவற்றின் செய்திகளைப் பற்றி ஆய்வு செய்து முன்வைப்புச் செய்வர்.

**உசாத்துணை நூல்கள்**


- Gaudencio B. Rosales, D D and C.G. Arevalo, SJ. For All the Peoples of Asia, Vol. 1, Claretian Publications, 1987.
- Franz - Josef Eliers, SVD (ed.), For All The Peoples of Asia, Vol. 3, Claretian Publications, 2002
- Franz - Josef Eliers, SVD (ed.) For All The Peoples of Asia, Vol. 4, Claretian Publications, 2007.
- Erwin Fahlbush et al (eds). The Encyclopedia of Christianity.vol 1. Grand Rapids: Eerdmans, 1999, pp. 440-441.
- CCA NEWS 2000- 2006 வெளியீடுகள்
- இணைய தளம் : www.cca.org.hk

**தேர்ச்சி** **10.0 :** புதிய உலக நாகரீகமொன்றை உருவாக்கும் திருச்சபையின் முயற்சியில் ஈடுபட்டு ஆசியாவினதும் இலங்கையினதும் சமுதாயத்திற்காக திருச்சபையின் கடமைகளில் பங்கு கொள்வர்.

**தேர்ச்சி மட்டம்** **10.3 :** வெவ்வேறு கிறிஸ்தவ சபைகளோடும் ஒன்றித்து வாழ்வர்.

**பாடவேளைகள்** **:** 10

**கற்றல் பேறுகள்** **:**
- கிறிஸ்தவ ஒன்றிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படுவர்.
- வெவ்வேறு கிறிஸ்தவ சபைகளோடு இணைந்து வாழ முற்படுவர்.
- கிறிஸ்தவ ஒன்றிப்புக்காக உழைத்தவர்கள் தொடர்பான விபரங்களைச் சேகரித்து வெளியிடுவர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி**

## 10.3.1 கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான விழிப்புணர்வு, கிறிஸ்தவ சபைகளின் ஒன்றிப்பு

### 10.3.1.1 கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான விழிப்புணர்வு
- கிறிஸ்தவ ஒன்றிப்பு எனும் கருப்பொருளின் கிரேக்க மூலம் Oikumene. புவியில் வாழும் மனுக்குலத்தின் ஒன்றிப்பை இக்கிரேக்கச் சொல் குறிக்கின்றது.
- ஒற்றுமை திருச்சபையின் இன்றியமையாத ஓர் இயல்புக்கூறு. கடவுள் ஒருவரே; அவர் மகன் இயேசுக்கிறிஸ்துவும் ஒருவரே; திருச்சபை ஒன்றே; அதன் நம்பிக்கையும் ஒன்றே.
- ஆனால் இன்று கிறிஸ்தவம் பிளவுபட்டு நிற்கின்றது. அதிலுள்ள பல்வேறு சபைகள் கோட்பாடுகள், வழிபாட்டு முறைகள், ஆட்சி அமைப்புக்கள், செயற்பாடுகள் என்பவற்றில் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டு நிற்பன மட்டுமன்று; பலவேளைகளில் அவை ஒன்றிற்கு ஒன்று முரணாகவும் எதிராகவும் கூடச் செயற்படுகின்றன.
- கிறிஸ்தவச் சமூகத்தில் பிளவுகள் இன்றோ நேற்றோ தீடீரென ஏற்பட்டவை அல்ல. புதிய ஏற்பாட்டுக் காலத்திலிருந்தே திருச்சபையில் பிளவுகள் தோன்றியுள்ளன (1கொரி, 1:10 தொ.). காலப் போக்கில் ஆரியுசு, நெஸ்தோரியுசு போன்ற சிலருடைய திரிபுக் கொள்ளைகள் காரணமாகவும் பல பிளவுகள் ஏற்பட்டன. 11ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவத்தில் ஏற்பட்ட கிரேக்க சபை, உரோமை சபை எனும் பிளவு மிகப் பெரியது. மட்டும் அன்று; நிரந்தரமாக இன்றுவரை நிலைப்பதும் கூட. அதுபோல் 16ஆம் நூற்றாண்டில் சமயச் சீர்திருத்தம் காரணமாக ஐரோப்பாவில் நிகழ்ந்த சீர்திருத்த சபைகளின் பிரிவும், இங்கிலாந்தில் ஆங்கிலிக்கச் சபையின் பிரிவும் இன்றுவரை தொடருபவை. (இவை பற்றிய விரிவான விளக்கம் ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ளன.)
- எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக (யோவான் 17:21) எனும் இயேசுவின் ஒற்றுமைக் கனவு கிறிஸ்தவத்தில் ஒருபோதும் மறைந்துவிடவில்லை. அனைத்தையும் ஒருங்கிணைக்கும் அவருடைய ஆவியாரின் செயற்பாடு அதில் புதுப்புது ஒற்றுமை முயற்சிகளை எப்போதுமே பிறப்பித்துள்ளது.
- கொரிந்துத் திருச்சபையில் நிலவிய பிளவுகளுக்கு எதிராக ‘‘கிறிஸ்து இவ்வாறு பிளவுபட்டுள்ளாரா?” (1கொரி. 1:13) என ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தூய பவுல் சவால் விடுக்கிறார். அதைத் தொடர்ந்து திரிபுக் கொள்கையினரை ஒரே திருச்சபையின் ஒன்றிப்பிற்குக் கொணரும் முயற்சிகள் எப்போதுமே முக்கியத்துவம் பெற்றுள்ளன. ‘‘பெரும் பிளவு” எனப் பெயர் பெறும் கீழைத் திருச்சபையின் பிரிவை

நீக்க எடுக்கப்பட்ட முயற்சிகளும் மிகப்பெரியன. ஆனால் சீர்திருத்த சபைகளின் பிரிவுக்குப் பின்பு கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான முயற்சிகள் பல மேற்கொள்ளப்பட்டாலும் கிறிஸ்தவ சபைகளிடையே நான்கு நூற்றாண்டுகளாகப் பெரிதும் நிலவியது தங்களைப் பற்றிய பாதுகாப்புணர்வும் பிற சபைகள்பால் பகையுணர்வுமே.

- இருபதாம் நூற்றாண்டின் தொடக்க முதல் சபைகளுக்கிடையே நிலவிய எதிர்வாதப் போக்குகள் குறையத் தொடங்கின. இதற்கான காரணிகள் பல.
  - திருச்சபை என்பது ''இறைமக்கள் சமூகம்'' என்பதை அடித்தளமாகக் கொண்டுள்ளது. இறைமக்கள் சமூகம் எனும் அடித்தளத்தில் படியாட்சி அமைப்பு (Hierarchical), அதிகார அழுத்தம் போன்றவை விடுபட்டு திருமுழுக்கு எனும் அருளடையாளத்தால் இயேசுவின் ஒன்றிணைக்கப்பட்ட ஒரு விசுவாசிகளின் சமூகத்தின் இறைமை, ஒருமை, பொதுமை, கத்தோலிக்கம் என்பவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.
  - கிறிஸ்தவ ஒன்றிப்பு மூவொரு இறைவனோடு உள்ள நெருங்கிய ஒன்றிப்பிற்கும், மனுக்குலம் முழுவதுமான ஒன்றிப்பிற்கும் அருளடையாளமாக உள்ளது என்பதை வெளிப்படுத்துகிறது.
  - மேலும் இறைமக்கள் சமூகமான திருச்சபையின் பணி ஒன்றே என்பதாலும், திருச் சபையின் உள்வாழ்வில் ஒற்றுமை என்பது அதன் இயல்புக்கூறு என்பதாலும் திருச்சபையின் உள்வாழ்வில் குழப்பத்தை ஏற்படுத்துவதுடன் திருச்சபையின் நற் செய்திப் பணிக்கு அத்தகைய பிளவுபட்ட உள்வாழ்வு தடையாகும் என்பதாலும் கிறிஸ்தவ ஒன்றிப்பு வலியுறுத்தப்படுகின்றது.
  - கிறிஸ்தவ ஒன்றிப்புக்கு கிறிஸ்துவே மையமாகவும் சிகரமாகவும் இருக்கிறார். திருச்சபை கிறிஸ்துவை மையமாகக் கொண்ட உறவுச் சமூகம் (Communion) என்பதாலும், திருச்சபையின் இறையாட்சிக் கண்ணோட்டத்தின் அடிப்படையிலும் கிறிஸ்தவ ஒன்றிப்பு முக்கியமானதாகும்.

### 10.3.1.2 கிறிஸ்தவ சபைகளின் ஒன்றிப்பு

- கிறிஸ்தவ ஒன்றிப்பு கத்தோலிக்க திருச்சபை, சீர்திருத்த சபைகள், கிரேக்க சபை ஆகியவற்றுக்கிடையே முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.
- **கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றிய வெவ்வேறு கண்ணோட்டங்கள் :**
  - திருத்தந்தையின் அதிகாரத்திற்குப் பணிந்து எல்லாக் கிறிஸ்தவர்களும் அல்லது எல்லாச் சபைகளும் திரும்பி கத்தோலிக்க திருச்சபையுடன் இணைதல் (Return)
  - ஒரு சபையை இன்னொரு சபையினுள் உள்வாங்குதல் (Absorbtion). இது கிறிஸ்தவ ஒன்றிப்பின் உள்ளயிருக்குப் (Spirit) புறம்பானது.
  - ஒன்றிப்பை மீளப்பெறுதல் (Restore Unity) உண்மையில் நிலை நிறுத்தப்படாத கற்பனைக்குரிய பழைய ஒன்றிப்பைப் பெறுதல் (an imagined ancient unity which in reality was never fully realized)
  - பன்மைத் தன்மையைப் பரஸ்பரமாக அங்கீகரித்தலும் நற்கருணையில் பரஸ்பர பங்கேற்றலும்.(Mutual Recognition of Diversity and Mutual Sharing in the Eucharist)
  - இயைந்த ஒருமைப்பாட்டை (Organic unit) ஏற்படுத்தல். பல சபைகள் விசுவாசம் அருளடையாளங்கள், பணிகள் ஆகியவற்றில் ஒன்றுபட்டு ஒரு அமைப்பு முறையைத் தழுவுதல்.
  - நட்புறவு அல்லது உறவுச் சமூகத்தை உருவாக்குதல். இச் சமூக ஒன்றிப்பு பல்வேறு சபைகளினதும் ஆன்மீகப் பாரம்பரியங்களதும் பின்வரும் நான்கு உட்கூறுகளைக் கொண்டதாக அமையும் : விசுவாச கருப்பொருள், திருமுழுக்கினால் ஆரம்பமாகும் அருளடையாள வாழ்வு, நற்கருணைக் கொண்டாட்டப் பகிர்வு, பணிகளின் பரஸ்பர அங்கீகாரம்.

- சபை ரீதியான அல்லது அமைப்பு ரீதியான ஒன்றிப்பு (Conciliar Fellowship) வெவ்வேறு சபைகளின் பிரதிநிதிகள், ஆயர்கள், பொதுநிலையினர் ஒன்றாகக் கூடும் சம்மேளனங்களில் வெளிவரும் ஒன்றிப்பு. உதாரணமாக, உலக கிறிஸ்தவ சம்மேளனம், உரோமன் கத்தோலிக்க ஆயர்கள் பேரவை, கீழைத்தேச சபைகளின் (Eastern Orthodox Churches) பொதுச் சங்கங்கள் விளக்கும் ''கத்தோலிக்கம்'' எனும் பாரம்பரியத்தின் அடிப்படையிலான ஆன்மீக ஒன்றிப்பும் உருவாக்கும் உறவுச் சமூகத் தன்மையை இக் கண்ணோட்டம் வெளிப்படுத்துகின்றது. ஏனெனில், கிறிஸ்தவ ஒன்றிப்பு எதிர்நோக்கின் அடிப்படையில் (Hope) எழும் ஒரு கொடையும் அழைப்பு மாகும்.
- ஒற்றுமை திருச்சபை எனும் மறைபொருளின் முக்கிய பண்பு இது வரலாற்றில் நிறைவு காணப்படவேண்டிய ஒன்று.
- இன்று கிறிஸ்தவ ஒன்றிப்புக்காக செபிக்க, பணியாற்ற, துன்புற, சாட்சிபகர கிறிஸ்தவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான செபம் குறிப்பிடுவது போல கிறிஸ்து விரும்பும், கிறிஸ்து எதிர்பார்க்கும் கிறிஸ்தவ ஒன்றிப்புக்காக செயற்படவேண்டும்.
- பிளவுகள் கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கு இடையூறாக உள்ளன. உரையாடல், புரிந்துணர்வு இல்லாமையே இதற்கான காரணமாகும். கிறிஸ்தவ மறைபொருளின் பக்க சார்பான விளக்கங்கள், இறையியல் பதங்களின் தெளிவின்மை போன்றவையும் பிளவுக்குப் பங்களித்துள்ளன.
- உண்மையான கருத்தாழமிக்க உரையாடல் வழியாக ஒருவர் ஒருவரைப் புரிந்து கொள்ளல், இறையியல் கருத்துக்கள், வரலாறு, ஆன்மீகம், பணிவாழ்வு, பண்பாடு போன்றவை பற்றிய கருத்துக்கள் பகிரப்படல்.
- கிறிஸ்துவோடு ஒன்றிணைந்து பொதுப்பணிகளில் ஆர்வத்தோடு ஈடுபடுதல்.
- இவற்றை வலியுறுத்தி இரண்டாம் வத்திக்கான் சங்கம் கிறிஸ்தவ ஒன்றிப்பு எனும் விதித்தொகுப்பை வெளியிட்டுள்ளது.
- உலக முழுவதும் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான புதிய பல முயற்சிகளுக்குத் தெளிவும் ஊக்கமும் வழங்கப்படுகின்றன. பல்வேறு கிறிஸ்தவ சபைகளுக்கிடையே நிலவிய பகை, வெறுப்பு, சந்தேகம், போட்டி மனப்பான்மை என்பன மறையத்தொடங்கி, நல்லெண்ணமும் நல்லுறவும் சிறிது சிறிதாக வளரத் தொடங்குகின்றன.
- இந் நல்லுறவின் வெளிப்படாகப் பல துறைகளில் பல்வேறு சபைகளின் ஒத்துழைப்பும் கூட்டு முயற்சியும் மலரத்தொடங்கியுள்ளன.
- கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம் (ஜனவரி 18-25) கிறிஸ்தவ ஒன்றிப்புக்காக செபிக்கும் கூட்டு இறைவேண்டல்கள் நடாத்தும் சந்தர்ப்பமாகும்.
- கூட்டு இறைவேண்டல்கள், திருவிழாக் கொண்டாட்டங்கள் என்பன நடைமுறைக்கு வந்துள்ளன.
- அண்மையில் புதிய சிங்களம், தமிழ் ஆகிய மொழிபெயர்ப்புக்களாக பொதுத் திருவிவிலியம் வெளியிடப்பட்டுள்ளது. இது கிறிஸ்தவ ஒன்றிப்புக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.
- கல்விப் பொது தராதரப்பத்திர உயர் தரப் பரீட்சைக்காக கிறிஸ்தவம், கிறிஸ்தவ நாகரிகம் என்பன பொதுப் பாடத்திட்டமாக அமைந்துள்ளது.
- திருவிவிலிய நூல்களுக்குப் பொது விளக்கவுரைகள் எழுதும் முயற்சி கிறிஸ்தவ ஒன்றிப்புக்கு சிறந்த வெளிப்பாடாக அமையும் வாய்ப்புள்ளது.

**கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான கிறிஸ்துவின் கனவை நிறைவேற்ற எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் கடமையுண்டு. எல்லாக் கிறிஸ்தவர்களும் கிறிஸ்தவ ஒன்றிப்பின் பணியாளர்களே :**

- பல்வேறு சபை இறையியலார்களை ஒன்றிணைத்து நம்பிக்கை அறிக்கையிலும், இறை வேண்டல், சடங்குமுறைகள், கோட்பாட்டு விளக்கங்கள், விவிலிய விளக்கங்கள் என்பவற்றிலும் ஒற்றுமையை உருவாக்க முனையலாம்.
- கூட்டு வழிபாடுகளிலும், கூட்டு இறைவேண்டல்களிலும் எந்தளவு பங்கேற்கலாம் என்றும், பிறசபைகளின் வழிபாடுகளில் எந்தளவு பங்கேற்கலாம் என்றும் பிற சபையினரைத் தமது வழிபாடுகளில் எந்தளவு பங்கேற்க அழைக்கலாம் என்றும் ''வழிகாட்டி நூல்'' அமைத்து கிறிஸ்தவ ஒன்றிப்புக்கு வழிகாட்டலாம்.
- ஏனைய சபையினரைப் பற்றி அதிகம் தெரிந்து கொள்ளுதல், அவர்களுடன் நல்லுறவுடன் பழகுதல், அவர்களது நம்பிக்கைகள் நடைமுறைகளைப்பற்றி அவர்கள் மனதைப் புண்படுத்தும் விமர்சனங்களைத் தவிர்த்தல், அவர்களுடன் நட்புறவை வளர்த்தல், அவர்கள் குடும்ப சமூக நிகழ்வுகளில் கலந்து கொள்ளுதல், சமயக் சடங்குகளிலும் விழாக்களிலும் அனுமதிக்கப்படும் அளவு பங்கேற்றல் என்பன எல்லாக் கிறிஸ்தவர்களும் ஒற்றுமைக்காகச் செய்யக்கூடிய சாதாரண முயற்சிகளாகும்.
- **எனினும் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான பயணத்தில் சில சவல்களும் எழுகின்றன.** நம்பிக்கை அறிக்கைகள், அருளடையாளங்கள், நற்கருணை ஆகிய கோட்பாட்டு விளக்கங்களில் இன்னும் ஒருமைப்பாடு காணப்படவேண்டும்.
- இறையியலார்களின் சிந்தனையில் பெண்ணியல் கொள்கைகள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. சிறப்பாக பெண்களின் பணிக் குருத்துவம் பற்றிய கொள்கையும் நடைமுறையும் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கு முக்கிய தடையாக உள்ளது.
- அனைத்து கிறிஸ்தவ சபைகளும் ஒன்றிணையும் பட்சத்தில் அதன் தலைமைத்துவத்தை எந்தச் சபைக்கு வழங்குவது என்பதும் தற்போதுள்ள தடைகளில் ஒன்றாகும்.

### 10.3.2 கிறிஸ்தவ ஒன்றிப்புக்காக உழைத்தவர்கள்

- மத்திய கால திருச்சபையில் பிளவுகளைத் தீர்ப்பதற்காக பொதுச்சங்கங்கள் கூட்டப்பட்டன.
- திருச்சபையில் பிளவுகள் ஏற்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒற்றுமைக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.
- 19ஆம் நூற்றாண்டுகளில்தான் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.
- 1844ஆம் ஆண்டில் **கிறிஸ்தவ இளைஞர் ஆண்கள் சங்கம்** (YMCA) இலண்டனில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் குறிக்கோள் : திருவிவிலியத்தின்படி இயேசுக்கிறிஸ்துவைத் தமது இறைவனாகவும் மீட்பராகவும் ஏற்று, தமது விசுவாசத்திலும் வாழ்விலும் அவரது சீடராகி, இளைய சமுதாயத்தினர் மத்தியில் அவரது அரசைப்பரப்ப இளைஞர்களை ஒருங்கிணைப்பதாகும்.
- 1846ஆம் ஆண்டில் ஏறக்குறைய 800 ஐரோப்பிய, வட அமெரிக்க சீர்திருத்த சபையினர் தமது மறைத்தூதுப் பணிகள், அச்சுப்பணி, சமூக சீர்திருத்தம் ஆகியவற்றை ஒருங்கிணைப்பதற்காக ''எவஞ்சேலிக்கள் அலையன்ஸ்'' (Evangelical Alliance) எனும் அமைப்பை ஆரம்பித்தனர்.
- 1855ஆம் ஆண்டில் கிறிஸ்தவ இளைஞர் பெண்கள் சங்கம் (YMCA) லண்டனில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1875ஆம் ஆண்டில் ''சீர்திருத்த சபைகளின் உலக ஒன்றியம் (World Alliance of Reformed Churches - WARC) ஆரம்பிக்கப்பட்டது.
- 1908ஆம் ஆண்டில் அங்கிளிக்கச் சபைப் பணியாளர் பவுல் வாட்சன் என்பவர் ''கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம்'' (ஜனவரி 18 - 25) என அழைக்கப்படும் நாட்களில் கிறிஸ்தவ ஒன்றிப்புக்காக இறைவேண்டல் செய்யத் தூண்டினார்.

- கிறிஸ்தவ ஒன்றிப்புக்காகக் கிறிஸ்தவர்கள் எட்டு நாட்கள் சிறப்பாகக் கடவுளை வேண்டும் இவ்வழக்கம் 1916ஆம் ஆண்டு திருத்தந்தை 15ஆம் பெனடிக்துவால் ஏற்கப்பட்டு கத்தோலிக்க திருச்சபை முழுவதற்கும் உலகெங்கும் விரிவாக்கப்பட்டது.
- 1910ஆம் ஆண்டில் அங்கிளிக்க, சீர்திருத்த சபைகள் இணைந்து எடின்பர்க் நகரில் அனைத்துலக நற்செய்தி அறிவிப்பு மாநாட்டைக் (International Missionary Conference) கூட்டினர். இம்மாநாட்டிலிருந்து கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கம் பிறப்பெடுத்தது எனலாம்.
- கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கத்தின் அடுத்த சிறப்பான வளர்ச்சி இந்த நூற்றாண்டின் இடைப்பகுதியில் நிகழ்ந்தது. இதில் குறிப்பிடத்தக்கவை பின்வரும் முப்பெரும் நிகழ்ச்சிகள்:
  - 1947ஆம் ஆண்டு தென்னிந்தியாவில் உள்ள அங்கிலிக்கச் சபையும் பல சீர்திருத்தச் சபைகளும் சேர்ந்து தென்னிந்தியத் திருச்சபையாக ஒன்றிணைந்தது. உலகெங்கும் கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கு ஒரு பெரும் தூண்டுதலாகவும் மாதிரியாகவும் அமைந்தது.
  - 1948ஆம் ஆண்டு உலக கிறிஸ்தவ பேரவை (World Council Of Churches) உருவாக்கப்பட்டது. (கத்தோலிக்க திருச்சபை இதில் உறுப்பினர் ஆகவில்லை.)
  - 1949இல் உரோமையிலுள்ள நம்பிக்கைக் கோட்பாட்டுப் பேராயம் ''ஒற்றுமை இயக்கம் பற்றிய அறிவுரையை'' வெளியிட்டுச் சபைகளுடன் உறவுக்கும் உரையாடலுக்கும் வித்திட்டது.
- கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான புதிய ஆர்வத்தையும் ஆழமான ஈடுபாட்டையும் கத்தோலிக்க திருச்சபையில் ஏற்படுத்தியவர் ''கிறிஸ்தவ ஒன்றிப்பின் திருத்தந்தை'' எனப் பெயர்பெற்ற 23ஆம் யோவான் ஆவார். ஒன்றிப்புப் பணிகளை ஊக்குவித்து நெறிப்படுத்த உரோமையில் அவர் ''கிறிஸ்தவ ஒன்றிப்புச் செயலகத்தை'' நிறுவினார். தமது எளிமை, இனிமை, மனத்தாழ்மை எனும் பண்புகளால் 'எதிர்ப்பாளர்கள்' எனக் கருதப்பட்ட ஏனைய சபைக் கிறிஸ்தவர்களையும் ''ஆண்டவரில் சகோதர சகோதரிகளாக'' அணைத்துக் கொண்டார். அவர் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தைக் கூட்டியபோது அதன் முக்கிய ஒரு நோக்கமாகக் கொண்டிருந்தது கிறிஸ்தவ ஒன்றிப்பேயாகும்.
- அவருக்குப் பின்பு திருத்தந்தை 6ஆம் பவுல் கிறிஸ்தவ ஒன்றிப்பிற்காகப் பெரும் முயற்சிகளை மேற்கொண்டார். தமது ஆட்சியின் துவக்கத்திலேயே கீழைச்சபை மறைத்தந்தை அத்தனாகோரசைச் சந்தித்தார். சங்கத்தின் இரண்டாவது அமர்வின் தொடக்கவுரையில் ''எவ்வகையிலேனும் நாங்கள் (கத்தோலிக்கர்) இப்பிரிவினைகளுக்குக் காரணமாக இருந்திருந்தால் தாழ்மையுடன் கடவுளிடம் மன்னிப்பைக் கேட்பதுடன் எங்களால் புண்பட்டவர்களாகத் தங்களைக் கருதும் சகோதரரின் பொறுத்ததலையும் வேண்டுகிறோம்'' என்றார்.
- கத்தோலிக்க திருச்சபையின் இத்தகைய ஒன்றிப்பு முயற்சிகள் அனைத்திலும் முக்கியமானதாக அமைவது இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் தந்த கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றிய விதித்தொகுப்பு. இந்த விதித்தொகுப்பு கிறிஸ்தவச் சபைகளுக்கு இடையே ஒன்றிப்பின் ஒளிமயமான ஒரு புதுக் காலத்தின் துவக்கமாக அமைந்தது எனலாம். பொதுச்சங்கம் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கு ஏற்ற ஒரு சூழலை உருவாக்கும், புதிய ஒரு பாதையைக் காட்டும் என எல்லாக் கிறிஸ்தவர்களின் மனதிலும் அரும்பியிருந்த எதிர்பார்ப்புக்களை இந்த ஏடு மிகச் சிறப்பாக நிறைவேற்றியது. ஒஸ்கார் கூல்மான் எனும் சீர்திருத்த சபை அறிஞர் கூறுவது போல் ''இது ஒற்றுமைக்கு வழி திறந்துவைக்கும் ஓர் ஏடு மட்டும் அல்ல; இது ஒரு புதிய சாதனை. கத்தோலிக்கர் அல்லாதாரைப் பற்றி இதுவரை வேறு எந்த ஏடுமே இதுபோல் பேசியதில்லை''.
- உலக கிறிஸ்தவ சம்மேளனம் (WCC) நம்பிக்கைக் கோட்பாடு, திருமுழுக்கு, நற்கருணை, கிறிஸ்தவ வாழ்வு பற்றிய அதன் வெளியீடுகள் மூலமாக கிறிஸ்தவ ஒன்றிப்பை ஊக்குவிக்கின்றது.

- இவற்றின் அடிப்படையில் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் (Catholic Bishops' Conference in Sri Lanka) வழி நடத்துதலில் இயங்கும் ''கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான ஆணைக்குழு'' தமது செயற்பாடுகளை முன்னெடுக்கின்றது. அதேபோல் இலங்கைத் தேசிய கிறிஸ்தவ சங்கமும் (National Christain Council of Sri Lanka) கிறிஸ்தவ ஒன்றிப்பிற்காகச் செயல்படுகின்றது.
- உலக கிறிஸ்தவ சம்மேளனமும் (WCC) கத்தோலிக்க திருச்சபையும் நம்பிக்கைக் கோட்பாடுகள் பற்றிய உரையாடலை தொடர்ந்து முன்னெடுக்கின்றன.

## உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு

1. கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான பின்னணியைப் பற்றி கலந்துரையாடுங்கள்.
2. இன்று மாணவர்கள் வாழுகின்ற சமூகத்திலே கிறிஸ்தவ ஒன்றிப்புக்குச் சவாலானவை பற்றிய அட்டவணை தயாரிப்பதற்கு அறிவுரை வழங்கல். மாணவர் தேடியறிந்த விடயங்கள் பற்றிய தொடர் கலந்துரையாடலை கட்டியெழுப்புங்கள்.
3. கிறிஸ்தவ ஒன்றிப்பு மற்றும் கிறிஸ்தவ சபைகளின் ஒற்றுமை பற்றிய விடயங்களை கலந்துரையாடுங்கள்.
4. கிறிஸ்தவ சபையின் ஒற்றுமைக்கு பங்களிப்புச் செய்தவர்களை வரிசைப்படுத்தி அவர்களின் பணிகளைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

## உசாத்துணை நூல்கள்


- வ. பவுல் லியோன் (பதி), இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள், தூய பவுல் இறையியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி, 2001.
- D. Kanagasabai Wilson, Christian Church in Sri Lanka, 1975.

# பாடசாலை மட்டக் கணிப்பீடு - அறிமுகம்

கற்றல் - கற்பித்தல் மதிப்பீடு ஆகியன கல்விச் செயன்முறைகளின் முக்கிய மூன்று கூறுகளாகும் என்பதும், கற்றல் கற்பித்தலின் முன்னேற்றத்தை அறிய கணிப்பீடு மதிப்பீட்டை பயன்படுத்த வேண்டும் என்பதும் எல்லா ஆசிரியர்களும் தெளிவாக அறிந்திருக்க வேண்டிய ஒரு விடயமாகும். அவை ஒன்றன் மீது ஒன்று செல்வாக்குச் செலுத்தும் அதேவேளை ஒவ்வொன்றும் மற்றையவற்றின் முன்னேற்றத்திலும் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது ஆசிரியர்கள் யாவரும் அறிந்த உண்மையாகும். தொடர் (நிதமும் நிகழும்) மதிப்பீட்டு கோட்பாடுகளுக்கிணங்க கற்றல் நடைபெறும் போதே மதிப்பீடும் இடம்பெற வேண்டும். இது கற்றல் கற்பித்தல் செயன்முறையின் ஆரம்பப்பகுதி, இடைப்பகுதி, இறுதிப்பகுதி ஆகிய எந்த ஒரு சமயத்திலும் இடம் பெறலாம் என்பதை ஆசிரியர்கள் விளங்கிக் கொள்வது அவசியமாகும். தமது மாணவரை மதிப்பிட எதிர்பார்க்கும் ஓர் ஆசிரியர் கற்றல் கற்பித்தல் மதிப்பீடு ஆகியன தொடர்பான ஒழுங்கான திட்டமொன்றைப் பயன்படுத்தல் அவசியம்.

பாடசாலையை அடிப்படையாக கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டமானது ஒரு பரீட்சை முறையோ, சோதனை நடாத்துவதோ அல்ல. அது மாணவர்களது கற்றலையும், ஆசிரியர்களது கற்பித்தலையும் மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு முறையாகும். அதனால் மாணவர்களுக்கு அருகில் இருந்து அவர்களுடைய பலங்களையும் பலவீனங்களையும் இனங்கண்டு மாணவர்களை அவர்களது உச்ச வளர்ச்சி மட்டத்தை அடையச் செய்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய ஒரு வேலைத் திட்டமாகும்.

கற்றல் - கற்பித்தல் செயல் மூலம் தேடல் செயன்முறையின்பால் மாணவர்கள் வழிப்படுத்தப்படுகின்றனர். பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டத்தை செயற்படுத்தும்போது மாணவர்களிடையே ஆசிரியர் சென்று அவர்களது செயற்பாடுகளை அவதானித்து வழிகாட்டலை வழங்கிச் செயற்படல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இங்கு மாணவர்கள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்படுவதோடு மாணவர் ஆற்றல் அபிவிருத்தி எதிர்பார்த்தவாறு நடைபெறுகின்றதா என்பதை ஆசிரியர் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

மாணவருக்குத் தகுந்த அனுபவங்களைப் பெற்றுக்கொடுத்து அவற்றை மாணவர்கள் சரியாகப் பெற்றுக்கொண்டார்களா என உறுதிப்படுத்தல் கற்றல்-கற்பித்தல் ஊடாகத் நிகழ வேண்டும். அத்தோடு அதற்கு தக்க வழிகாட்டல் வழங்கப்பட வேண்டும். மதிப்பீட்டில் (கணிப்பீட்டில்) ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்கு இரண்டு வகையான வழிகாட்டல்களை வழங்க முடியும். அவை பொதுவாக பின்னூட்டல், முன்னூட்டல் எனப்படும்.

மாணவர்களின் பலவீனங்களையும் இயலாமைகளையும் கண்டறிந்தபோது அவர்களது கற்றல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பின்னூட்டலையும், மாணவர்களின் திறமைகளையும் ஆற்றல்களையும் இனம்காணும்போது அவற்றை மேன்படுத்த முன்னூட்டலையும் வழங்குவது ஆசிரியரின் கடமையாகும்.

கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் வெற்றிக்காக பாடநெறியின் நோக்கங்களுள் எந்த நோக்கத்தை எந்த மட்டத்தில் நிறைவேற்ற முடிந்தது என்பதை இனங்காணல், மாணவர்களுக்கு அவசியமாகின்றது. மதிப்பீடுகள் மூலம் மாணவர்கள் அடைந்துள்ள தேர்ச்சி மட்டங்களைத் தீர்மானித்தல் சம்பந்தப்பட்ட ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்கள், ஆசிரியர்கள், வேறு பிரிவினர்களுக்கு மாணவர்களின் முன்னேற்றம் பற்றிய தகவல்களை அறிவிப்பதற்கு ஆசிரியர் முனைய வேண்டும். இதற்குப் பயன்படுத்தக்கூடிய மிகவும் பொருத்தமான முறை, தொடர்ச்சியாக மாணவரை மதிப்பீட்டுக்கு உட்படுத்த வாய்ப்பளிக்கும் பாடசாலை மட்ட மதிப்பீட்டு முறையாகும்.

மேற்படி நோக்கத்துடன் செயற்படும் ஆசிரியர்கள் தமது கற்பித்தல் செயன்முறையையும் மாணவர்களின் கற்றல் செயன்முறையையும் மேலும் வினைத்திறன் மிக்கதாக்குவதற்கு வினைத்திறன் மிக்க கற்றல் -கற்பித்தல் மதிப்பிடல் முறைகளைப் பயன்படுத்த வேண்டும். இது தொடர்பாக ஆசிரியர்களும் மாணவர்களும் பயன்படுத்தத் தக்க அணுகுமுறை வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன. இவை நீண்டகாலமாக ஆசிரியர்களுக்கு தேசிய கல்வி நிறுவனத்தினாலும், பரீட்சை திணைக்களத்தினாலும் விளக்கமளிக்கப்பட்ட முறைகளாகும். எனவே அவை தொடர்பாக பாடசாலைத் தொகுதியைச் சேர்ந்த ஆசிரியர்கள் போதிய அறிவூட்டம் பெற்றிருப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**அந்த அணுகுமுறை வகைகள்:**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஒப்படைகள் | 2. | செயற்றிட்டங்கள் |
| 3. | அளவாய்வுகள் | 4. | தேடியாய்வுகள். |
| 5. | அவதானிப்புக்கள் | 6. | கண்காட்சி / முன்வைத்தல்கள் |
| 7. | களச் சுற்றுலாக்கள் | 8. | குறுகிய எழுத்துப் பரீட்சைகள் |
| 9. | அமைப்புக் கட்டுரைகள் | 10. | திறந்த நூல் சோதனைகள் |
| 11. | ஆக்கச் செயற்பாடுகள் | 12. | செவிமடுத்தல் சோதனைகள் |
| 13. | செய்முறைச் செயற்பாடுகள் | 14. | பேச்சுக்கள் |
| 15. | சுய ஆக்கங்கள் | 16. | குழுச் செயற்பாடுகள் |
| 17. | எண்ணக்கருப் படங்கள் | 18. | இரட்டைப் பதிவு - ஜேர்னல் |
| 19. | சுவர்ப் பத்திரிகைகள் | 20. | வினா - விடை நிகழ்ச்சிகள் |
| 21. | வினா - விடைப் புத்தகங்கள் | 22. | விவாதங்கள் |
| 23. | குழுக் கலந்துரையாடல்கள் | 24. | கருத்தரங்குகள். |
| 25. | உடனடிச் சொற்பொழிவு | 26. | பாத்திரமேற்று நடித்தல் |

அறிமுகம் செய்யப்பட்டுள்ள மேற்படி கற்றல் கற்பித்தல் மதிப்பீட்டு முறைகள் அனைத்தையும், எல்லாப் பாடங்களினதும் எல்லா அலகுகளுக்காகவும் பயன்படுத்த முடியும் என எதிர்பார்கப்படவில்லை. தமது பாடத்திற்கும் குறித்த பாட அலகிற்கும் பொருத்தமான வகைகளைத் தெரிவுசெய்து கொள்வதற்கு அறிவூட்டம் பெற வேண்டும். அதற்கமைய அவற்றைத் தெரிவு செய்து கொள்ளவும் வேண்டும்.

மேற்படி ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் தமது மாணவர்களின் கற்றல் முன்னேற்றத்தை கணிப்பிடப் பயன்படுத்தக்கூடிய கற்றல் - கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டு வகைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் தமது மாணவர்களின் முன்னேற்றத்திற்காக அவற்றைத் தக்கவாறு பயன்படுத்தல் வேண்டும். இவற்றைப் பயன்படுத்தாது தவிர்த்தல் மாணவர் தமது அறிவாற்றல் மற்றும் உள எழுச்சி, உள இயக்கத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கும் அவற்றை வெளிப்படுத்துவதற்கும் தடையாக அமையும்.

## கற்றல் கற்பித்தல் பாவனை உபகரணங்கள்

1. **பாடசாலைத் தவணையும் உபகரண இலக்கமும்** : முதலாம் தவணை - 01, இல. 01

2. **உள்ளடக்க வேண்டிய தேர்ச்சி மட்டம்** : 6.2

3. **உள்ளடக்க வேண்டிய பாட விதானம்** : கிறிஸ்தவ நாகரிகத்திற்கு அடிப்படையாக அமையும் நாகரிகங்கள் தொடர்பாக முறையாக ஆராய்வர்.

4. **கணிப்பீட்டு வகையும் இலக்கமும்** : குறுவினாவிடை 8, I

- ✪ மேலைத்தேய, ஆசிய, யூத நாகரிகங்கள் பற்றி அறிந்து கொள்ள வழிகாட்டுவர்.
- ✪ விவிலிய புவியியல் பின்னணிகள் பற்றிய தகவல்களைத் திரட்ட உதவுவர்.
- ✪ விடுதலைப் பயணம், அடிமைத்தனம், அரசர்கள், நீதித்தலைவர்கள் பற்றிய வரலாற்றுப் பின்னணியை நன்கு விளங்கிக் கொள்ள உதவுவர்.

| | **நியதிகள்** | **புள்ளிகள்** |
|---|---|---|
| 1. | வினாக்களை நன்கு விளங்கிக் கொள்ளல். | 04 |
| 2. | தகவல்களை ஒன்று திரட்டுதல். | 04 |
| 3. | மிகச் சரியான பதில் வழங்குதல். | 04 |
| 4. | கொடுக்கப்பட்ட காலத்திற்குள் சமர்ப்பித்தல். | 04 |
| 5. | தெளிவும் விளக்கமும் | 04 |
| | மொத்தப் புள்ளி | 20 |
| | இறுதிப்புள்ளி 20/2 | 10 |

## கற்றல் கற்பித்தல் பாவனை உபகரணங்கள்

**1. பாடசாலைத் தவணையும் உபகரண இலக்கமும்** : முதலாம் தவணை இல. 02

**2. உள்ளடக்க வேண்டிய தேர்ச்சி மட்டம்** : 6.3

**3. உள்ளடக்க வேண்டிய பாட விதானம் :** கிறிஸ்தவ மறை உருவாகிய சமூகத்தின் பின்னணியை ஆராய்வர்.

**4. கணிப்பீட்டு வகையும் இலக்கமும்** சுவர்ச் செய்திப் பத்திரிகை 18

- ✪ பலஸ்தீன நாட்டின் அரசியல், சமயப் பின்னணிகளை அறிந்துக் கொள்வர்.
- ✪ கிறிஸ்தவ மறை உருவாகுவதற்கு ஆதாரமாக இருந்த நிர்வாக முறையைத் தேடி அறிவர்.
- ✪ கிறிஸ்துவின் கால யூத சமுதாயத்தின் சமூக அரசியல் கலாசார மரபு முறைகளையும் சமுதாயப் பிரிவுகளையும் யூத மதப் பழக்க வழக்கங்களையும் தெரிந்து கொள்வர்.

| | நியதிகள் | புள்ளிகள் |
|---|---|---|
| 1. | கற்றல் கற்பித்தல் செயல்முறையும் காட்டும் தொடர்பு பொருத்தப்பாடு | 04 |
| 2. | ஒழுங்கமைவும் பொதுவானதாக இருத்தலும் | 04 |
| 3. | அழகுப்படுத்துவதற்காக கையாளப்பட்டுள்ள உத்திகளும் அவற்றின் பொருத்தப்பாடும் | 04 |
| 4. | உள்ளடக்கத்தின் ஆக்கபூர்வமான தன்மையும் தர்க்கரீதியான தன்மையும். | 04 |
| 5. | சுவர்ச் செய்திப் பத்திரிகை என்ற வகையில் ஆக்கத்திறன் வெற்றிகரமான தன்மை. | 04 |
| | மொத்தப் புள்ளி | 20 |
| | இறுதிப்புள்ளி 20/2 | 10 |

## கற்றல் கற்பித்தல் பாவனை உபகரணங்கள்

**1. பாடசாலைத் தவணையும் உபகரண இலக்கமும்** : முதலாம் தவணை இல. 03

**2. உள்ளடக்க வேண்டிய தேர்ச்சி மட்டம்** : 7.1

**3. உள்ளடக்க வேண்டிய பாட விதானம்** : கிறிஸ்தவ மத அறக்கோட்பாட்டின் ஆரம்பத்தை உய்த்துணர்ந்து இன்றைய திருச்சபையின் வளர்ச்சிக்கு அவற்றைப் பயன்படுத்திக் கொள்வர்.

**4. கணிப்பீட்டு வகையும் இலக்கமும்** ஒப்படை 01

- ✪ கிறிஸ்துவே கிறிஸ்தவ நாகரிகத்தின் அடிப்படையாவார் என்பதை விளக்கிக் கூறுவர்.
- ✪ மத். 5 - 7 வரையான போதனையின் படி இயேசுவே தலை சிறந்த போதகர் என்பதை உணர்ந்து கொள்வர்.
- ✪ தொடக்கால கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறை பற்றி நன்கு அறிந்து கொள்வர்.

| | நியதிகள் | புள்ளிகள் |
|---|---|---|
| 1. | ஒப்படையின் குறிக்கோளை விளக்குவதற்கும் குறிக்கோளுக்கும் தலைப்புக்கும் இடையிலான தொடர்பை வெளியிடல். | 04 |
| 2. | தரவு தகவல்கள் சேகரிப்பதற்காக கையாண்ட முறைகளின் பொருத்தப்பாடு | 04 |
| 3. | தரவு தகவல் சேகரித்தலும் அவற்றைப் பதிவு செய்தலும் | 04 |
| 4. | பயன்படுத்தும் உத்திகளின் பொருத்தப்பாடும் தர்க்க ரீதியான தன்மையும் | 04 |
| 5. | முடிவுக்கு வருதலும் அவற்றுக்கு காரணங் காட்டலும் அத்தகைய ஆக்கத்தை முன்வைத்தலும் | 04 |
| | மொத்தப் புள்ளி | 20 |
| | இறுதிப்புள்ளி 20/2 | 10 |

## கற்றல் கற்பித்தல் பாவனை உபகரணங்கள்

**1. பாடசாலைத் தவணையும் உபகரண இலக்கமும்** : இரண்டாம் தவணை
இல. 04

**2. உள்ளடக்க வேண்டிய தேர்ச்சி மட்டம்** : 7.2

**3. உள்ளடக்க வேண்டிய பாட விதானம்** : ஆரம்பகால கீழைத்தேய மேலைத்துேய திருச்சபையில் விளங்கிக் கலாசாரப் பண்புகளை விமர்சனம் செய்வர்.

**4. கணிப்பீட்டு வகையும் இலக்கமும்** : கட்டமைப்பு கட்டுரை வினாக்கள் 8. II

- ✪ கிறிஸ்தவ விசுவாசத்திற்கு எதிராக திருச்சபைக்கு உள்ளேயும் வெளியேயும் ஏற்பட்ட குற்றச்சாட்டுகளுக்கும் பேதகங்களுக்கும் திருச்சபை, துலங்கலைக் காட்டிய விதத்தினை விளங்கிக் கொள்வர்.
- ✪ திருச்சபையின் ஆரம்ப காலத்தில் இறையியல் கல்லூரிகள் உருவாகியமை பற்றி கற்றுக்கொள்வர்.
- ✪ ஆரம்ப கால கிறிஸ்தவ சிந்தனையாளர், இறையியலாளர் பற்றி ஆழமாகக் கற்பர்.

| | நியதிகள் | புள்ளிகள் |
|---|---|---|
| 1. | தலைப்பை அறிமுகஞ் செய்தல் | 04 |
| 2. | பாடங்களின் முக்கியத்துவம் தலைப்புக்கு பொருத்தமானதாக இருத்தல் | 04 |
| 3. | தரவு தகவல் சேகரித்தலும் அவற்றைப் பதிவு செய்தலும் | 04 |
| 4. | மொழிசார்ந்த பிரயோகங்களின் ஆக்க பூர்வத்தன்மை | 04 |
| 5. | முடிவெடுத்தல் நியாயப்படுத்தல் விடயங்களைத் தர்க்க ரீதியில் முன்வைத்தல் | 04 |
| | மொத்தப் புள்ளி | 20 |
| | இறுதிப்புள்ளி 20/2 | 10 |

## கற்றல் கற்பித்தல் பாவனை உபகரணங்கள்

| | | | |
|---|---|---|---|
| **1.** | **பாடசாலைத் தவணையும் உபகரண இலக்கமும்** | : | இரண்டாம் தவணை<br>இல. 05 |
| **2.** | **உள்ளடக்க வேண்டிய தேர்ச்சி மட்டம்** | : | 8.3 |
| **3.** | **உள்ளடக்க வேண்டிய பாட விதானம்** | : | சிற்பக்கலைகளின் மேம்பாட்டிற்காக திருச்சபையின் பங்களிப்பை அறிந்து உணர்ந்து ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபடுவர். |
| **4.** | **கணிப்பீட்டு வகையும் இலக்கமும்** | : | கண்டறிக்கை 04 |

- ✪ கொன்ஸ்டன்டைன் பேரரசர் கொடுத்த சுதந்திரத்துடன் ஆலய கட்டடங்கள் படிப்படியாக ஆரம்பிக்கப்பட்டன எனக் கூறுவர்.
- ✪ ஆரம்ப கிறிஸ்தவர்கள் நன்றி வழிபாட்டிற்காக பயன்படுத்திய கிறிஸ்தவ அடையாளங்கள் கிறிஸ்தவ சித்திரக் கலையின் ஆரம்ப சித்திரங்களென ஏற்றக்கொள்வர்.
- ✪ இன்றைய கிறிஸ்தவ சங்கீதத்திற்கு அடிப்படையாக உள்ளது கிறகோரியாரின் இசை எனக் கூறுவர்.

| | **நியதிகள்** | **புள்ளிகள்** |
|---|---|---|
| 1. | பிரச்சினைகள் பாடத்தலைப்பினை விளங்கிக் கொள்ளலும் குறிக்கோள்களைக் கட்டி எழுப்புதலும் பாடத்துக்குரிய தொடர்புகள் பற்றிய அறிவு | 04 |
| 2. | செயற்பாடுகளைத் திட்டமிடலும் ஒருங்கமைத்தலும் தரவுகளைச் சேகரிக்க எடுத்த முறையும் | 04 |
| 3. | தரவு சேகரித்தலும் அவற்றின் வரவுகளும் | 04 |
| 4. | தரவு பகுப்பாய்வும் அட்டவணை வரவுகளும் | 04 |
| 5. | முடிவுகளைத் தீர்மானித்தல் சமர்ப்பித்தல் | 04 |
| | மொத்தப் புள்ளி | 20 |
| | இறுதிப்புள்ளி 20/2 | 10 |

## கற்றல் கற்பித்தல் பாவனை உபகரணங்கள்

**1. பாடசாலைத் தவணையும் உபகரண இலக்கமும்** : இரண்டாம் தவணை
இல. 06

**2. உள்ளடக்க வேண்டிய தேர்ச்சி மட்டம்** : 9.1

**3. உள்ளடக்க வேண்டிய பாட விதானம்** : கல்வியின் முன்னேற்றத்திற்காக திருச்சபை வழங்கிய ஒத்துழைப்பை அறிந்து தமது கல்வி ஆற்றல்களை வளர்த்துக் கொள்வர்.

**4. கணிப்பீட்டு வகையும் இலக்கமும்** : குழுச் செயற்பாடு 15

- ✪ இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன் வெளிநாட்டவரின் ஆட்சிக் காலத்தில் நாட்டில் நிலவி வந்த கல்வி முறையை ஆராய்வர்
- ✪ இலங்கை சுதந்திரம் அடைந்த பின் கல்வித்துறையின் வளர்ச்சி, கத்தோலிக்க கல்வி முறைக்கு ஏற்பட்ட தாக்கம் என்பவற்றையும், அதன் வளர்ச்சிக்காக ஆர்வத்தோடு உழைத்த கல்விமான்களையும் அறிந்து கொள்வர்.

| | நியதிகள் | புள்ளிகள் |
|---|---|---|
| 1. | செயற்பாட்டின் குறிக்கோளை தெளிவாகக் காட்டல், பாடத்துடன் உரிய தொடர்பைக் காட்டல். | 04 |
| 2. | செயற்பாட்டுக்கென வழங்கப்பட்ட தலைப்பு தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக குழு வேலையை ஒழுங்கு செய்து பணிகளைப் பட்டியற்படுத்தல், தொடர்பாடுகள், திட்டத்தை உருவாக்கல் | 04 |
| 3. | செயற்பாட்டில் ஈடுபடுத்துதல் ஒத்துழைப்பு பொறுப்பேற்றல் நேர்வரையறையுள்ள செயற்பாட்டில் நிறைவு செய்தல் | 04 |
| 4. | தர்க்க ரீதியாக முன்வைத்தல், ஆக்கபூர்வத்தன்மை, பொருத்தப்பாடு பயன்படுத்தப்பட்ட உத்தி தலைமைத்துவம். | 04 |
| 5. | முடிவெடுத்தல் காரணங்காட்டல் செம்மை அறிக்கை தயாரித்தல். | 04 |
| | மொத்தப் புள்ளி | 20 |
| | இறுதிப்புள்ளி 20/2 | 10 |

## கற்றல் கற்பித்தல் பாவனை உபகரணங்கள்

1. **பாடசாலைத் தவணையும் உபகரண இலக்கமும்** : மூன்றாம் தவணை இல. 07

2. **உள்ளடக்க வேண்டிய தேர்ச்சி மட்டம்** : 9.2

3. **உள்ளடக்க வேண்டிய பாட விதானம்** : இலங்கைச் சமுதாயத்தில் மனித நேயச் செயல்கள், மனித உரிமை ஆகிவற்றில் திருச்சபை கொள்ளும் பங்கினை உணர்ந்து நாட்டுப் பிரஜைகளுக்குரிய கடமைகளை நிறைவேற்றுவர்.

4. **கணிப்பீட்டு வகையும் இலக்கமும்** : செயன்முறைச் செயற்பாடு 12

- ✪ மனித நேயச் செயல்களின் அவசியத்தை விளங்கிக் கொள்வர்.
- ✪ மனித நேயச் செயல்களை மேற்கொள்ளும் அமைப்புகள், அவற்றின் பணிகளைத் தேடி அறிந்து கொள்வர்.
- ✪ மனித உரிமை வளர்ச்சி, சமுதாய முன்னேற்றம் பற்றித் தெரிந்து செயற்படுவர்.
- ✪ மனித உரிமைகள், சமூகப் பணிகளுக்குப் பங்களித்தோர் பற்றி தேடிப் பெற்றுக்கொள்வர்.

| | **நியதிகள்** | **புள்ளிகள்** |
|---|---|---|
| 1. | மனித நேயச் செயல்கள் தொடர்பான தகவல்களையும் பணிகளையும் ஒன்று திரட்டுதல் | 04 |
| 2. | நலன்புரிச் செயல்கள், தேவைப்படும் ஆட்கள், இடங்கள் என்பவற்றை இனங்கண்டு வகைப்படுத்தல் | 04 |
| 3. | பொருத்தமான நலன்புரிப் பணிகளை தெரிவு செய்து ஒழுங்கமைத்தல் | 04 |
| 4. | பணிகளை முறையாக மேற்கொள்ளல் | 04 |
| 5. | பணிகளைப் பெற்றுக் கொண்டவர்களிடமிருந்து மதிப்பீடுகளைப் பெற்றுக்கொள்ளல். | 04 |
| | மொத்தப் புள்ளி | 20 |
| | இறுதிப்புள்ளி 20/2 | 10 |

## கற்றல் கற்பித்தல் பாவனை உபகரணங்கள்

**1. பாடசாலைத் தவணையும் உபகரண இலக்கமும்** : மூன்றாம் தவணை இல. 08

**2. உள்ளடக்க வேண்டிய தேர்ச்சி மட்டம்** : 9.3

**3. உள்ளடக்க வேண்டிய பாட விதானம்** : இலங்கைச் சமுதாயத்தில் கலையின் மேம்பாட்டிற்காக கிறிஸ்தவ ஒத்துழைப்பை உணர்ந்து தமது ஆற்றல்களை சமுதாயத்திற்கு அளிப்பர்.

**4. கணிப்பீட்டு வகையும் இலக்கமும்** : ஆக்கச் செயற்பாடு 10, II

- ✪ இலங்கைச் சமுதாயத்தில் கிறிஸ்தவ மேன்மைக்காக கிறிஸ்தவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட திறமைகள் ஆற்றல்களை மதிப்பர்.
- ✪ ஆரம்பகால மறைத்தூதப் பணியாளர்களின் அழியாத அர்ப்பணிப்புடனான கிறிஸ்தவ கலைக்கு அத்திவாரம் இடப்பட்ட தென்பதை ஏற்றுக்கொள்வர்..
- ✪ இன்றைய கிறிஸ்தவர்களுக்கு தமது ஆற்றல்கள் திறன்களினூடாக கிறிஸ்தவ சபைக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் எனக் கூறுவர்.

| | நியதிகள் | புள்ளிகள் |
|---|---|---|
| 1. | கற்றல் செயன்முறைக்கும் குறிக்கோளுக்கும் அமைவாக ஓர் ஆக்கமளித்தல். | 04 |
| 2. | அந்தப் பிரதேசத்துக்கான வளங்களைப் பயன்படுத்துதல் | 04 |
| 3. | ஆக்க பூர்வமான செய்தியை வெளிப்படுத்தல் | 04 |
| 4. | முன்வைப்பு நடனம், நாடகம், பாடல், சித்திரங்கள் வாத்திய இசை போன்றவற்றின் ஒழுங்கமைப்பு. | 04 |
| 5. | ஒட்டு மொத்த ஆக்கம் கற்றல் பேறுகள் எடுத்துக்காட்டுதல், கற்றல் குறிக்கோளுடன் தொடர்பு படுத்தல், முக்கியத்துவமும் பெறுமானமும் | 04 |
| | மொத்தப் புள்ளி | 20 |
| | இறுதிப்புள்ளி 20/2 | 10 |

## கற்றல் கற்பித்தல் பாவனை உபகரணங்கள்

1. **பாடசாலைத் தவணையும் உபகரண இலக்கமும்** : மூன்றாம் தவணை இல. 09

2. **உள்ளடக்க வேண்டிய தேர்ச்சி மட்டம்** : 10.1 & 10.2

3. **உள்ளடக்க வேண்டிய பாட விதானம்** : இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்தின் பண்பாடு, சமுதாய முன்னேற்றம் தொடர்பான படிப்பினை களைச் செயற்படுத்துவதற்கு, கிறிஸ்தவ சபைத் தலைவர்களின் சமுதாய, பண்பாட்டு முன்னேற்றம் தொடர்பான படிப்பினைகளையும் வழிகாட்டல் களையும் கிறிஸ்தவ வாழ்க்கையுடன் இணைத்துக் கொள்வர்.

4. **கணிப்பீட்டு வகையும் இலக்கமும்** : ஒப்படை 01

- ✪ இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் கூடுவதற்கான அடிப்படை விடயங்களைத் தேடுவர்.
- ✪ பொதுச் சங்கத்தின் சமூக முன்னேற்றத்துக்காக முன்வைக்கப்பட்ட கருத்தினை விமர்சிப்பர்.
- ✪ குடும்பவாழ்வு, பண்பாடு, சமாதானம், ஒருமைப்பாடு என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பங்களை முன்வைப்பர்.
- ✪ திருச்சபையின் புதிய உதயத்துக்கு வத்திக்கான் பொதுச்சங்கத்தின் பங்களிப்பு பற்றிய தகவல்களைச் சேகரிப்பர்.
- ✪ ஆசிய ஆயர் மன்றம், உலக கிறிஸ்தவ சம்மேளனம், ஆசிய கிறிஸ்தவ சம்மேளனம் ஆகியவற்றின் அமைப்பு முறைகளைத் தேடி அறிந்து கொள்வர்.

| | நியதிகள் | புள்ளிகள் |
|---|---|---|
| 1. | ஒப்படையின் குறிக்கோளை விளக்குவதற்கும் குறிக்கோளுக்கும் தலைப்பும் இடையிலான தொடர்பை வெளியிடல் | 04 |
| 2. | தரவு / தகவல்களைச் சேகரிப்பதற்காக கையாண்ட முறைகளின் பொருத்தப்பாடு | 04 |
| 3. | தரவு / தகவல் சேகரித்தலும் அவற்றைப் பதிவு செய்தலும் | 04 |
| 4. | பயன்படுத்தும் உத்திகளின் பொருத்தப்பாடும் தர்க்க ரீதியான தன்மையும் | 04 |
| 5. | முடிவுக்கு வருதலும் அவற்றுக்கு காரணங்காட்டலும் அத்தகைய ஆக்கத்தை முன் வைத்தலும் | 04 |
| | மொத்தப் புள்ளி | 20 |
| | இறுதிப்புள்ளி 20/2 | 10 |